வில்லிபுத்தூராழ்வார்

இயற்றிய

மகாபாரதம்

விராடபருவம்

உரையுடன்

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யரால்

ஆர். ஜீ. அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1940

விலை. 1—8—0.

பொருளடக்கம்.

விஷயம்	பக்கம்
முகவுரை	i
விராடபருவம்:	
(1) நாடுகாண்துறைச்சருக்கம்	க
(2) மற்போர்ச்சருக்கம்	உ-ஙா
(3) கீசகன்வதைச்சருக்கம்	ஙஉ-ச
(4) நிரைமீட்சிச்சருக்கம்	10
(5) வெளிப்பாட்டுச்சருக்கம்	117
அபிதானசூசிகையகராதி	133
அருஞ்பதவகராதிமுதலியன	135
பிழைத்திருத்தம்	143

Checked 1969

முகவுரை.

அருந்தமிழறிஞர்காள்!

ஸ்ரீராமாயணத்திற் சுந்தரகாண்டம்போல ஸ்ரீமகாபாரதத்தில் மேம்படப்பாராட்டப்படுவது, விராடபருவமே யாகுப்; வானம் மழைபெய்யாது வறந்தகாலத்தில் இதனைப் பக்திசிரத்தைகொண்டு நியமத்துடன் ஒரோநாளிற் பாராயணஞ்செய்வா ராயின், நாடு மழை பெய்து வளஞ்சிறக்கு மென்பது, பெரியோர்துணிபு.

இத்தனைப்பெருமைவாய்ந்த விராடபருவத்தில் நிரைமீட்சிச் சருக்கந் தவிர, மற்றைப்பகுதிகள் சென்னையூனிவர்சிடியாராற் பாடமாக வைக்கப்படாமையால், எனக்கு ஆசிரியன்மாரான ஸ்ரீமாந் வை. மு. சடகோபராமாநுஜாசார்யஸ்வாமிகளாலும், ஸ்ரீமாந் சே. க்ருஷ்ணமாசார்யஸ்வாமிகளாலும் அந்த மற்றைச் சருக்கங்கட்கு உரை காண வாய்க்கவில்லை.

விராடபருவந் தவிர, மற்றைப்பருவங்களெல்லாம் உரையுடன் முற்றுப்பெற்றபிறகு இதனொன்றுமாத்திரம் உரையில்லாதிருக்குங் குறையைப் போக்கவேணுமென்ற எண்ணம் கடவுள்செயலால் என் மனத்தி லுதிக்க, இந்தப்பருவத்திலுள்ள மற்றைச்சருக்கங்கட் கெல்லாம் உரைகண்டு இந்தவிராடபருவத்தையும் முற்றுவித்தேன்: நிற்க.

இந்தவில்லிபாரதத்துக்கு முதனூலாகிய ஸ்ரீவியாசபாரதத் தில் இந்தவிராடபருவத்தில் (1) பாண்டவப்ரவேசபர்வம், (2) ஸமய பாலநபர்வம், (3) கீசகவதபர்வம், (4) கோக்ரஹணபர்வம், (5) வைவாஹிகபர்வம் என்று ஐந்து உபபர்வங்களே யுள்ளன: அவை களே, வில்லிபாரதத்தில் (1) நாடுகாந்துறைசருக்கம், (2) மற் போர்ச்சருக்கம், (3) கீசகன்வதைச்சருக்கம், (4) நிரைமீட்சிச் சருக்கம், (5) வெளிப்பாட்டுச்சருக்கம் என்ற பெயர்கொண்டு நிற் கின்றன: பெயர்மாத்திரத்தைக் கருதுமிடத்து ஐபண்டற்குஞ்

சிறிதுவேறுபாடு தோன்றினும், உள்ளுறையைக் கருதுமிடத்து இரண்டிலும் கூறப்படும் முக்கியமான சரிதை, ஒற்றுமைப்பட்டே யுள்ளது. ஈதுஒன்றும் வில்லிபாரதத்துக்கு முதனூல் வியாசபாரத மென்பதை வற்புறுத்தும்.

சிலர்கருதுவதுபோல அகஸ்த்யபட்டர்எழுதிய பாலபாரதமே இந்தவில்லிபாரதத்துக்கு முதனூல் என்னலாகாதோவெனில்,— அந்தப்பாலபாரதத்தில் மாமல்லனே வீமன் வென்ற செய்தியே கூறப்பட்டிலது. மற்றும், திரௌபதியைக் கீசகன் பற்றும்போது சூரியனை லேவப்பெற்ற ஒருகிங்கரன் கீசகனை அப்பாற்றள்ளி அவனை மீட்ட அற்புதச்செய்தியும் காணப்பட்டிலது: இவ்வாறுஎவ்வளவோ வேறுபாடுகள் இதற்கும் அதற்கும் உள்ளன; வில்லிபாரதத்துக்கும் வியாசபாரதத்துக்கும் உள்ள சிறுசிறு வேறுபாடுகள் உரையினுள் ஆங்காங்குக் காட்டப்படும்.

இந்தஉரையிலுள்ள குற்றங்குறைகளைக் கண்டறியும் பெரி யோர், தமது இயற்கைநற்குணத்தாற் பொறுப்பதன்றி எனக்கும் அறிவுறுத்துவராயின், அப்பிழைகளைத் திருத்திக்கொண்டு சமயம் வாய்க்கும்போது பலர்க்கும் அறிவிப்பேன்.

இந்தவிராடபருவத்தில் நிரைமீட்சிச்சருக்கத்துக்கு என்னுசிரி யன்மார் கண்ட உரை முன்னமே என்னால் அச்சிடப்பட்டு உள்ள தனால், மற்றைப்பகுதிகளே உரையெழுதி இப்போது அச்சிடப் பட்டனஃ இந்தப்பணியை நான் செய்யுமிடத்து உடனிருந்து உத வியவர், யான் அச்சிட்ட வேறுபருவங்கட்கு உடனிருந்து உதவியவ ரான தூசி. கோ. ஜகந்நாதாசார்யர், M. A. என்பவர் ஆவர்: அன் னர்க்குத் திருமகள்கொழுநன் பலநலங்களையும் பல்குவிப்பானாக.

வில்லிபாரதம் முழுவதுக்கும் உரைகண்டுவெளியிடுதலாகிய இந்தப்பணியில் சிற்றறிவினனான எனக்குத் தோன்றுத் துணை யாய்நின்றுஉதவி இடையூறின்றி இனிது முற்றுப்பெறத் திரு வருள்புரிந்த திருமாலின் திருவடிகளைத் திரிகரணங்களாலும் எஞ் ஞான்றும் போற்றுவேன்.

ப்ரமாதி ஸ
ணதமீ 3உ

இவண்
வை. மு கோபாலக்ருஷ்ணமாசார்யன்.

நான்காவது

விராட பருவம்.

விராடபர்வம் என்ற வடமொழித்தொடர், விகாரப்பட்டது. விராடனது சம்பந்தமான பருவ மென்று ஆறும்வேற்றுமைத்தொகை யாகக் கொள்க. விராடராஜனதுநாடாகியமச்சதேசத்தின் இராசதானியிலே அவ்விராடராஜனைச்சார்ந்து பாண்டவர்கள் அஜ்ஞாதவாசஞ்செய்த வரலாற்றைக் கூறுகின்ற பாகம், இது. பர்வம் - கணு: கரும்பு மூங்கில் முதலியவற்றிற்கு ஏகதேசமாகிய [ஏகதேசம் - ஒருபகுதி] கணுப் போல நூலுக்கு ஏகதேசமாகிய உறுப்பைப் பருவமென்பது, உவமவாகுபெயர். "இணைத்தியல் காலே" [நன் - பத-உ2] என்ற சூத்திர விதியால், பர்வம் - பருவம் என வகரத்திற்குமுன் உகரம் வந்தது.

இப்பருவம் - நாடுகரந்துறைசருக்கம், மற்போர்ச்சருக்கம், கீசகன்வதைச்சருக்கம், நிரைமீட்சிச்சருக்கம், வெளிப்பாட்டுச்சருக்கம் என்ற ஐந்து சருக்கங்கள் அடங்கியது. அவற்றில்,

முதலாவது

நாடுகரந்துறைசருக்கம்.

(பாண்டவர் விராடனுடைய மச்ச) நாட்டிலே (தம்முருவம்) மறைந்து உறைதலைப்பற்றிக் கூறும் சருக்க மென்க.

1. கடவுள்வாழ்த்து.

அங்கையி னேமி சங்குவா டண்டோ டடற்சரா சனந்தரித் தருள்வோன், சங்கையின் மறைக ளாயிரங் களுக்குஞ் சாற்றுதற் கரியதத் துவத்தோன், கங்கையி னறலுங் காளியன் முடியுங் காளிந் திக்கரை யுமே கமழும், பங்கய மலர்க ளிரவுநன் பகலும் பணிந்துபா டுதுமன்பு புகழே.

(இதன்பொருள்.) அம் கையில் - (தம்முடைய) அழகிய கைகளிலே, நேமி - சக்கரத்தையும், சங்கு - சங்கத்தையும், வாள்-வாட்படையையும், தண்டோடு - தண்டாயுதத்தையும், அடல் - வலிமைபொருந்திய, சராசனம் - வில்லையும், தரித்தருள்வோன் - பூண்டிருப்பவனும்,—சங்கை இல் - கணக்கு இல்லாத, மறைகள் ஆயிரங்களுக்குமும் - மிகப்பலவான வேதங்களுக்கும், சாற்றுதற்கு அரிய - சொல்லுதற்குமுடியாத, தத்துவத்தோன் - உண்மைப் பொருளாயிருப்பவனுமான திருமாலினுடைய, கங்கையின் அறல் உம் - கங்காநதியின் நீரும், காளியன் முடிஉம் - காளியனென்றநாகத்தின் சிரசும், காளிந்தி கரை உம் ஏ - யமுனையின்கரையுமே, கமழும் - மணக்கப்பெற்ற, பங்கயம் மலர்கள் - திருவடித்தாமரைகளை, நல் இரவுஉம் (நல்) பகல்உம் -

நல்ல இரவிலும் நல்லபகலிலும், பணிந்து - வணங்கி, அவன் புகழ் பாடுதும்- அப்பரமனுடைய திருப்புகழைப் பாடுவோம்; (என்றவாறு.)

'பணிந்து பாடுதும்' என்று காயத்தினாலும் வாக்கினாலுஞ் செய்தற்கு உரிய செயலைக் கூறியதனால், மனத்தினால்தியானித்தலும் பெறப்படும்: ஆகவே, திரிகரணங்களும் பயன்பெறுஞ்செயலைச் செய்வோமெனக் கூறியவாறாயிற்று. அவன்புகழ்பாடுதுமென்றதனால், இது வாழ்த்தாயிற்று. திருமாலின் திருவடியினின்று கங்கை தோன்றிய தாதலால், அந்தக்கங்கைநீரின்மணம் அப்பிரான்திருவடியி லுள்ளதாகும். திருமால் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் காளிய னென்ற கொடியநாகத்தின் தீண்முடியைத்திலும தனதுபாதங்களினா லின்று நடஞ்செய்தானாதலால் அந்தக்காளியன்முடியின்மணம் அவன்திரு வடிகளிற் கமழுமென்றது. கிருஷ்ணன் தன்னுடையஇளமையில யமுனை க்கரையில் திருவிளையாடல்கள் புரிந்ததனால் அப்பிரான்திருவடியில் அக் கரையின் மணலும் கமழுமென்க.

இதுமுதல் இருபத்தெட்டுக்கவிகள் - பெரும்பாலும் இரண்டு நான்கு எழுசீர்கள் மாச்சீர்களும், மற்றவை விளச்சீர்களுமாகிவந்த எழுசீராசிரிய விருத்தங்கள். (4)

2.—பாண்டவர் பன்னிரண்டியாண்டு வனவாசம் கழித்தமை.

அரவமெங்கொடியோனேவலின்படியேயைவருமாறிரண்டாண்டு
திருவுதனனித்தபாலையுந்தாழ்ஞ்சுருதிமாமுனிகணம்பலவும்
பரிவுடன்மலருப்பலங்களுங்கிழங்குப்பாசடைகளுமினிதருந்தி
பொருபகல்போலக்கழித்தனரறிவுமயங்கியபுலன்களுடையோர்.

(இ - ள்.) வெம் அரவம் கொடியோன் ஏவலின் படி ஏ - வெவ்விய பாம்புக்கொடியை யுடையவனாகிய துரியோதனனுடைய கட்டளையின் படியே, ஆறு இரண்டு ஆண்டு - பன்னிரண்டுவருஷகாலம், ஐவர்உம் - பஞ்ச பாண்டவர்களும்,—திருபதன் அளித்த பாலைஉம் - திருபதன் (வேள்வி யின் மூலமாகப்) பெற்ற பிரகிருதியாகிய திரௌபதியும், சாம் உம் - தாங்களும், சுருதி மா முனி கணம் பலஉம் - வேதங்களில்வல்ல சிறந்த இருடியர்கூட்டம்பலவுமாக, (இருந்து);— பரிவுடன் - மனத்தினால் போது, மலர்உம் - புஷ்பங்களும், பலங்கள் உம் - பழங்களும், கிழங்கு உம்—, பசு (மை) அடைகள் உம் - பசிய இலைகளும், இனிது அருந்தி - இனிமையாக உண்டு,—அறிவுஉம் - விவேகமும், ஒடுங்கிய புலன்கள்உம் உடையோர் - அடங்கிய ஐம்பொறிகளையுமுடையவராய், ஒருபகல்போல கழித்தனர் - ஒருபகலைப்போலப் போக்கினார்கள்; (எ - று.)

பாண்டவர்கள் அறிவையும் அடங்கிய பொறிகளையுமுடையவராதலால், காட்டிற்கிடைத்த மலாமுதலிய உணவுகளை மனத்திருத்தியோடு உண்டு ஒரு வருத்தமு மின்றி, பன்னிரண்டுவருஷங்களை ஒருநாளைக் கழிப்பதுபோலத் திரௌபதியுடனே எளிதிற்கழிதனரென்பதாம். காட்டில் வசித்தபோது இருடியர் கணமும் இவருடனுறைவதாயிற் றென்க. (உ)

3.—அஜ்ஞாதவாசத்தை எங்ஙஞ்செய்யலா மென்று தருமன் வினவ, அருச்சுனன் கூறலுறுதல்.

தொல்லறக்கடவுளருளுடனளித்தான்றறன் துணைவரைநோக்கிக்
கல்லமர்கிரியுங்கானமுமிடமாக்கழித்தனமொழிந்தனகால
மெல்லையோராண்டுமிபாவருமுணராதிருப்பதற்காமிடம்யாதோ
சொல்லுமினென்றுனென்றலுந்தொழுதுசுரபதிமகனிவைசொல்வான்.

(இ - ள்.) தொல் அறம் கடவுள் அருளுடன் அளித்த தோன்றல் - பழமையான தருமத்திற்கு உரிய கடவுளாகிய யமன் அருளோடு உண்டாக்கிய குமாரனாகிய யுதிட்டிரன், தன் துணைவரை நோக்கி - தன் தமபிமாரைப் பார்த்து,— 'கல் அமர் கிரியும் கானமும் இடம்ஆ கழித்தனம் - கற்கள் பொருந்திய மலைகளையும் காட்டையும் இடமாகக்கொண்டு காலங்கழித்தோம்: காலம் - (காட்டிற்கழிக்கவேண்டிய காலவெல்லையான) பன்னிரண்டியாண்டுகளும், ஒழிந்தன - கழிந்திட்டன: எல்லை - (இனிக்கழிக்கவேண்டிய) காலவெல்லையான, ஓர் ஆண்டும் - ஒருவருஷகாலமும், யாவர்உம் உணராது இருப்பதற்கு - எவராலும் அறியப்படாமல் வாசஞ்செய்வதற்கு, ஆம் - ஏற்றதான, இடம்—, யாது ஓ - எதுவோ? சொல்லுமின் - (நீங்கள்) சொல்லுங்கள்,' என்றான்—; என்றலும் - என்று (யுதிட்டிரன்) விளம்பியவுடனே, தொழுது - வணங்கி, சுரபதி மகன் - தேவேந்திரனருளாற்பிறந்த குமாரனாகிய அருச்சுனன், இவை சொல்வான் - இவ்வாதனைகளைச் சொல்பவனானான்; (எ - று.)—அருச்சுனன் கூறுவதை மேலிரண்டுகவிகளிற் காண்க.

'யாவருமுணராதிருப்பதற்காமிடம்' என்றதனால், அஜ்ஞாதவாசத்திற்கு ஏற்ற இடமென்றவாறாயிற்று. தேவாகட்கெல்லாம் தலைவனென இந்திரனுடைய அருளாற் குந்தீதேவியினிடமுதோன்றியவனாதலால், அருச்சுனன் 'சுரபதிமகன்' எனப்பட்டான். 'தோன்றல் தன்துணைவரைநோக்கி' என்றமையால், அஜ்ஞாதவாசஞ்செய்வதற்காகத் தருமன் ஆலோசனைபுரிந்தது துணைவரைதவிர வேறு எவராகிலும் தெரியாமலே யெனபது பெறப்படும். முதனூலில், 'பன்னிரண்டுவருஷம் வனவாசஞ்செய்து கழிததோம்: இனி, ஓரியாண்டு ஒருவருக்கும் தெரியாது கழிகவேண்டுமாதலால், நும்மிடதது விடைபெற்றுக காளருகிற்போம்' என்று யுதிஷ்டிரன், உடனிருந்த முனிவர் முதலியோரிடதது விடைபெற்றுக்கொண்டு, தாம் வசிததிருந்த ஆச்சிரமததுக்குக் குடிராசதானம அப்பாற்சென்று தமபிமாருடனும் திரௌபதியுடனும் தௌமியமுனிவருடனும இருந்து ஆலோசிததனனென்று உள்ளது. ()

4.—இரண்டுகவிகள் - ஒருதொடர்: விராடநகரமே அஜ்ஞாதவாசஞ் செய்பதற்த ஏற்றதென்று அருச்சுனன் தெரிவித்தமை கூறும்.

நீதியும்விளவுந்தருமமுறைறந்துரிதிகண்மற்றியாவையுநெருங்கி
யாதியின்மனுநூலவழியினிற்புரப்பானவனியைமனுகுலத்தரசன்
மாதிரமுழுதுமவனபெரும்புகழ்வழங்குவதமாருமம்வள்வி
மேதிபர்பலருமுறைவதுமவ்ணவிராடமீகான்மச்சராடையா.

(இ - ள்.) நீதிஉம் - முறைமையும், விளைவுஉம்—, தருமம் உம் - தானமும், நிறைந்து—, நிதிகள் - செல்வங்களும், மற்றுயாவையும் - மற்றுமுள்ள தானியம் முதலானவைகளும், நெருங்கி—, அமரர்உம் - தேவர்களும், வேள்வி வேதியர் பலர் உம் - யாகஞ்செய்கின்ற பிராமணர்கள் பலரும், உறைவதுஉம்-வசிப்பதும், அவண்ஏ - அவ்விடத்திலேயே: (அது), - ஐயா—! விராடர்கோன் மச்சநாடு - விராடராஜனுடைய மச்சதேசமாகும்; அவனியை- அந்தப்பூமியை, ஆதியின் மனுநூல் வழியினில் - முற்காலத்தினின்று வருகின்ற மனுநூலின் வழியிலல், புரப்பான் - பாதுகாப்பவன், மனுகுலத்து அரசன் - மனுகுலத்துத்தோன்றிய அரசன்: அவன் பெரும் புகழ்ஏ - அந்த விராடராசனுடைய பெருங்கீர்த்தியே, மாநிரம் முழுவது வழங்குவது - திக்குக்களில் எங்குஞ் சொல்லப்படுவதாகும்; (எ - று.)

நெருங்கிஉறைவது என இயையும்: இனி, நெருங்கியென்பதை எசசத் திரிபு ஆகக்கொண்டு, நீதிமுதலியன நிறைந்து நிதிகண்மற்றுயாவையும் நெருங்க மனுநூல் வழியினிற் புரப்பான் என்று இயைப்பினுமாம்: மனுநூல் தவறுமற் புரப்பதனல் அவ்வரசனிடத்து நீதிமுதலியன நிறைந்து நிதிகண்மற்றுயாவும் நெருங்குமென்க. நீலனத்தால் மசசம் இடையருது இருத்தல்பற்றி, அந்நாடு, மசசநாடு எனப் படுவதாயிற்று. (சு)

5. ஆங்கவனகரியெய்திமற்றின்றேறையவருமணியுருக்கரந்து
தீங்கறவுறைவதல்லதுவேறோர்சேர்விடமிலதெனச்செப்பத்
தேங்கியவருளுக்கிருப்பிடமானசிந்தையான்சிந்தையாற்றுணிந்து
பாங்குறையரசர்யாரையுந்தத்தம்பதிகளேசெல்கெனப்பகர்ந்தான்.

(இ - ள்.) இன்றுஏ - இன்றைத்தினமே, அவன் நகரி எய்தி - அந்த விராடமன்னவனுடைய நகரியை யடைந்து, ஐவர்உம் - நாம் ஐந்துபேரும், அணி உரு கரந்து - அழகிய (நம்) வடிவத்தை மறைத்துக்கொண்டு, தீங்கு அற - (யாதொரு) தீமையுமில்லாமல், உறைவது - வசிப்பதுவே (செய்யத்தக்கது): அல்லது - இதுவல்லாமல், வேறு ஓர் சேர்வு இடம் - சேர்தற்கு ஏற்ற வேறோரிடம், இலது - இல்லை, என - என்று, செப்ப - (அருச்சுனன்) கூற,—தேங்கிய அருளுக்கு இருப்பு இடம் ஆன சிந்தையான் - அருளுக்குத் தேங்கியிருக்கும் இடமான மனத்தையுடைய தருமபுத்திரன், சிந்தையால் துணிந்து - (தன்) மனத்தினுல் (அவ்வாறே செய்வதாக) நிச்சயித்து,—பாங்குஉறை அரசர் யாரைஉம் - (தன்) பக்கத்திலேயே வசிப்பவரான அரசர்களெல்லாரையும் பார்த்து, தம்தம்பதிகள்ஏ செல்க என - 'தங்கள் தங்களுடைய ஊருக்குச் செல்வீர்களாக' என்று, பகர்ந்தான்-சொன்னன்; (எ-று.)

அருச்சுனன் சொன்ன ஆலோசனை தன்மனத்திற்கு ஏற்றிருந்ததனல், தருமபுத்திரன், அவ்வாறே செய்வதாக நிச்சயித்துப் பிறகு ஆலோசனையிடத்தை விட்டுச்சென்று வனத்தில் தன்னேடிருந்தவர்களையெல்லாம் இனிதாம் அஜ்ஞாதவாசஞ் செய்யவேண்டியிருப்பதனல் தங்கள் தங்களுடைய உறைவிடத்துச் செல்லுமாறு விடைகொடுத்தனுப்பின னென்பதாம். அரசா

யாரையும் என்பதற்கு - அரசரையும் மற்றுமுள்ளாரையும் என்று உரைக்கலாம். மந்தணஞ் செய்யுமிடத்தில், யுதிஷ்டிரன், 'பன்னிரண்டுவருடம் வனவாசம் கழித்தோம். இனி, அஜ்ஞாதவாசம் எங்கு எப்படிச் செய்வது?' என்று கவலைகொண்டு கூற, அப்போது அருச்சுனன், 'தருமக்கடவுளின் வரத்தால் அஜ்ஞாதவாசஞ் செய்வது நமக்கு இனிது இயலும்: உறைப்பற்றிக் கலை வேண்டா: பாஞ்சாலம் மச்சம் சால்வம் முதலிய பலநாடுகள் இருக்கின்றன: இவற்றில் மனத்திற்குப் பிடித்த ஒருதேசத்தில் வசிக்குமாறு நிச்சயித்துக் கொள்க' என்ன, யுதிஷ்டிரன் மச்சதேசமே வாசத்துக்கு ஏற்ற இடம் என்று நிசயித்து, 'அங்கு நான்வேறுதொழிலின்றிக கங்கன் என்ற பேருடனே யதிவேஷம்பூண்டு அரசசபையில் வசிப்பேன்: விரிஞ்சதத்திற்குச சூதாட்டம் ஆடுவேன்: மற்றும் ஜ்யோதிஷம் சகுனம் நீதி வேதாந்தம் முதலியன சொல்லிக் கொண்டு மன்னவனுக்குஉத்ஸாஹமூட்டிக் காலங்கழிப்பேன்'என்று தன்செயலையும் கூறினன். பிறகு வீமசேனன் முதலிய ஒவ்வொருவரையும் நோக்கித் தனித்தனியே 'அங்கு நீர் என்னதொழிலச செய்துகொண்டு ஓராண்டு கழிப்பீர்?' என்று வினவ, ஒவ்வொருவரும் இன்னஇன்ன தொழிலச் செய்துகொண்டு இருப்போம் என்று பதில்கூறினர் என்று முதலாலிலுள்ளது. (ரு)

6 —இருடியருகித்துத் தருமபுத்திரன் விடை கொடுத்தனுப்புதல்.

முனிவாயுள்ளதபோவனத்தவரை முடியுறத்தனித்தனிவணங்கிக்
கனிவுறுமன்பாலென்றரநாணுமமைக்காண்பதென்றவர்மனங்களிப்ப
வினியனவுரைகள்பயிற்றியாவரையுமேமுகுளித்திற்றைநாளிரவிற்
றினகரனெழுமுன்செல்வமுடச்செல்வந்திகழ்தருநகர்க்கெனச்செப்பா.

இதுவும் அடுத்தகவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) முனிவர் ஆய் உள்ள - இருடியரான, தபோவனத்தவரை - தபோவனத்தில் வசிப்பவரை, முடி உற - (தனது) கிரீடம் (அவர்கள்பாதங்களிலே) பொருந்தும்படி, தனித்தனி வணங்கி - தனித்தனியே வணக்கஞ் செய்து,— கனிவு உறும் அன்பால் - மனக்கசிவு பொருந்திய அன்போடு, 'நான் உம்மை காண்பது—, என்று - (மீண்டும்) எப்போதோ?' என்று—, அவர் மனம் களிப்ப - அம்முனிவர்களுடைய மனம் மகிழ்ச்சியடையும்படி, இனியன உரைகள் பயிற்றி - இனிமையான வார்த்தைகளைச் சொல்லி,— யாவரையும் எகுவித்து - எல்லோரையும் (தங்கள் தங்களுடைய வாழிடத்திற்குச் செல்லுமாறு விடைகொடுத்து) அனுப்பிவிட்டு, 'இற்றை நாள் இரவில் - இன்றைதினம் இராத்திரிப்போதில், தினகரன் எழும் முன் - சூரியன் உதிப்பதற்குமுன்னே, அ செல்வம் திகழ்தரு நகர்க்கு-செல்வம் விளங்குகின்ற அந்த அழகிய பட்டணத்திற்கு, செல்வம் - போவோம்,' என செப்பா - என்றுசொல்லி,—(எ - று.)—"வளநாடனடைந்தனன் பாண்டவர் தலைவன்" என அடுத்த செய்யுளோடு முடியும்.

தினகரன் - தன்னுதயத்தாற் பகலையுண்டாக்குபவன் எனக் காரணக்குறி. செல்வமச செல்வம்-பிராகம். தபோதனத்தவரை யென்றும் பாடம். (சு)

7.—தருமன் தம்பியரோடும் திரௌபதியோடும் மச்சநாட்டை யடைதல்.

கல்கெழுகுறும்புஞ்சாலங்கிரியுங்கடிகமழ்முல்லையும்புறவு
மல்குநீர்ப்பண்ணைமருதமுங்கடந்துவன்னியிற்பிறந்தமாமயிலும்
விலகெழுதடக்கையிளைஞருந்தாலும்விராடர்கோன்றனிக்குடைநிழலிற்
பல்குலமாக்கள்வாழ்வுகூர்வளநாடடைடந்தனன்பாண்டவர்தலைவன்.

(இ - ள்.) பாண்டவர் தலைவன் - பாண்டவர்கட்குள் முதல்வனான தருமபுத்திரன்,— வன்னியில் பிறந்த மா மயில் உம் - அக்கினியில் தோன்றிப் பிறந்தமயில்போன்ற திரௌபதியும், வில் கெழு தட கை இளைஞர் உம் - வில்லைப்பொருந்திய பெரியகைகளையுடைய தம்பிமாரும், தான் உம்—, கல் கெழு குறும்புஉம் - கல்லைலாடுவிளைகுகின்ற காடும, சாரல் அம் கிரிஉம் - தாழ்வரையோடு கூடிய அழகிய மலையும், கடி கமழ் முல்லைஉம் - மணம்வீசுகின்ற முல்லைநிலமும், புறவுஉம் - கொல்லைகளும், மல்குநீர பண்ணை மருதம் உம் - மிக்க நீர்வளமபொருந்திய வயல்நிலத்தோடுகூடிய மருதநிலமும், கடந்து—, விராடர்கோன் தனி குடை நிழலில் - விராடராசனுடைய ஒப்பற்ற குடைநிழலிலே, பல் குலம் மாக்கள் வாழ்வுகூர் வளம் நாடு - பலகுலத்தவரான மனிதரும் வாழ்ச்சிபெருகுகின்ற மச்சநாட்டை, அடைந்தனன்—.

குறிஞ்சியும் முல்லையும நிரிந்தது பாலையாகு மாதலின் இவ்வகுப்பாலை நிலத்தை 'கல்கெழுகுறுமபு' என்றுரைன்னலாம். புறவு-முலலையைச் சார்ந்த நிலம. முதலிரண்டடிகளில நெயதல தவிர, மற்றைநான்கு நிலங்களும் கூறப்பட்டன. துரோணசாரியரால் தன்மாணவனைக்கொணடு வென்று கட்டி அவமதித்து விடப்பட்ட பாஞ்சாலராசனை யாகசேனன் தன்னைவென்ற துரோணன்மாணவகனென அருசசுனனுககு விவாகஞ்செய்து தரும்படி ஒரு புதநிரிணையும், துரோணசாரியரைக் கொலலும்படி. ஒருபுத்திரனையும் பெறுமாறு யாசஉபயாசனைக் கொணடு யாகஞ்செய்விக்க, அந்தவேள்வித தீயினின்றும் திருஷ்டதயும்நனும் திரௌபதியும தோன்றின என்ற சரித்திரம்பற்றி, திரௌபதியை 'வன்னிபிற் பிறந்த மாமயில்' என்றார். பாண்டவர் தலைவன் மயிலும் இளைஞரும தானும் மச்சநாடடைடநதான்—சிறப்பினால் பல பால்விரவி ஒருமுடிபு ஆயின: [நன் பொது. உஎ] முல்லையமபுறவும என்று பாடமிருக்கலாம். (எ)

8.—பிறது பாண்டவர் விராடனது நகரியினெல்லையிற் புகீத மயான பூமியடைச் சேரீதல்.

தராதலமுழுதுமுடையமீகாமகனுந்தம்பியர்நால்வருந்திருவு [ப்பக்
பிராவிடைவிரைவிறுமிடக்கடம்தாரெண்ணமுமிருக்கையும்வாய்
காராமுலாவருபைந்தடமும்வண்காவுங்கனகவான்புரிசையுஞ்சூழ்ந்த
விராடன்மாநகரியெலலைபுக்கொருபான்மயான பூமியினிடைவரவா.

மூன்றுகவிகள் - ஒருதொடர.

(இ - ள்.) தராதலம் முழுதுஉம் பூமிமுழுவதையும், உடைய-உடைமையாகக் கொண்டு ஆளத்தக்க, கோ மகன்உம - இராசகுமாரனாகிய தருமபுத்திர

னும்,தம்பியர் நால்வர்உம்-அவனுடைய தம்பிமார்நான்குபேரும், திருஉம்-திருப்போன்றவளான திரௌபதியும், இராவிடை - இராத்திரிப்போதில், விரைவின் - விரைவாக, இடை ஆறு - (மற்றும் விராடன்நகரத்தையடையச் செல்லவேண்டிய) இடைவழியை, கடந்து—,—கராம் உலாவரு பைந் தடம்உம்-முதலை உலாவுகின்ற பதநீருள்ளதடாகமும், வண்காஉம்-வளப்பம்பொருந்திய சோலையும், கனகம் வான்புரிசைஉம்-பொன்மயமான பெரியமதிலும், சூழ்ந்த-சூழ்ந்திருக்கப்பெற்ற, விராடன் மா நகரி - விராடனுடைய பெரிய நகரியின், எல்லை எல்லையிலே, ஓர் எண்ணம் உம் இருக்கைஉம் வாய்ப்ப - தம்முடைய ஒப்பற்ற எண்ணமும் இருப்பும் நேர்படுமாறு, புக்கு—, ஒருபால்-(அந்நகரியின்) ஒரு பகுதியான, மயானபூமியினிடை - மயானபூமியினிடத்தை, விரவா - பொருந்தி,—(எ - று.)—'நண்ணு' என அடுத்த கவியோடு தொடரும்.

தம்முடைய ஓரெண்ணமும் என்றது - அவர்கள் இன்னின்னதொழிலினராய் இவ்வாறு அவ்யாண்டைப் போக்கவேணுமென்று கொண்ட ஆலோசனையை. இருக்கை - தாம் மேற்கொள்ளுந் தொழிலுக்கு ஏற்ற இருப்பிடம். கராம் - க்ராஹம் என்ற வடசொல்லின் திரிபு. (அ)

9.—இரண்டுகவிகள் - அங்ஙது ஒருகாளிக்கோயிலுஞ் சார்ந்திருந்த வன்னிமரத்தில் பாண்டவர் தம்முடைய படைக்கலம் முதலியவைகளை வைத்தமை தெரிவிக்கும்.

யாமளமறையால்யாவரும்பணிவாளெழுவகைத்தாயரிலொருத்தி
சாமளவடிவோடந்நகர்வாழ்வாள்சங்குதண்டங்கையிற்றரிப்பாள்
கோமளவல்லிக்கொடிநிகர்காளிகோயிலின்முன்னரோர்வன்னி
நாமளவிடுதற்கரியபல்கிளையானலம்பெறுபாதவநண்ணு.

(இ - ள்.) யாமளம் மறையால் - யாமளமென்று சொல்லப்படுகிற வேதமந்திரப்பகுதியைக் கொண்டு, யாவர்உம் பணிவாள் - எல்லாராலும் வணங்கப்படுபவளும், எழு வகை தாயரில் ஒருத்தி - ஸப்தமாதாக்களில் ஒருத்தியும், சாமளம் வடிவோடு அ நகர் வாழ்வாள் - கருநிறவடிவத்தோடு அந்நகரில் வசிப்பவளும், சங்கு தண்டு அம் கையில் தரிப்பாள் - சங்கத்தையும் தண்டாயுதத்தையும் அழகிய கையில் தரிப்பவளுமான, கோமளம் வல்லி கொடி நிகர் காளி - அழகிய வல்லி யென்று பேர்பூண்ட கொடியை யொத்திருப்பவளான காளியென்பவளின், கோயிலின் - கோயிலுக்கு, முன்னர் - முன்புறத்திலே, நாம் அளவிடுதற்கு அரிய பல் கிளையால்-நம்மால் அளவிடமுடியாத[மிக்க]பல கிளையோடு(பொருந்தி), நலம் பெறு-அழகுபொருந்திய, ஓர் வன்னி பாதவம்-ஒரு வன்னிமரமானது, (இருப்பதை), நண்ணு - கிட்டி,—(எ - று.)—"ஒளித்து ஒரு விரகால் வைத்தனராகி" என அடுத்த கவியோடு தொடரும்.

யாமளம் என்பது - அதர்வணவேதத்தின் ஒருபகுதியென்றும், அது - காளிஸ்தோத்ரம் முதலியவற்றைக் கொண்ட தென்றுங் கூறுவர். எழுவகைத்தாயர்-ப்ராஹ்மீ மாஹேஸ்வரீ கௌமாரீ வைஷ்ணவீ மாஹேந்த்ரீ வாராஹீ

மஹாகாளீ எனப்படுவர். சாமளம்—ஸ்யாமளம்: வடசொல். வன்னி—வஹ்நி. பாதவம்=பாதபம்: அடியாற் பருகுவதெனக் காரணப்பொருள் படும் வடசொல். வாழ்வாள் பலபடை தனது கைத்தரிப்பாள் என்றும்பாடம்

10. கத்தமபடையுங்கவசமுமனைத்துந்தனித்தனியைவருந்தரிக்க, மெய்த்திறலுடையயாவுமத்தருவின்கோடரத்தெதாளித்தெருவிரகால், வைத்தனராகியாவருமுணராவகையருமறைகளும்பயிற்றி, முத்தலைவடிவேற்காளியையவணங்கிமுன்னிஞர்புரிதாழின்முற்றும்.

(இ - ள்.) தனித்தனி - தனித்தனியே, ஐவர்உம் - பஞ்ச பாண்டவர்களும், தரித்த - பூண்டிருந்த, தம் தம படைஉம் - தங்கள் தங்களுடைய ஆயுதங்களையும், கவசம்உம்-கவசங்களையும், அனைத்துஉம்-ஆடைமுதலியவற்றையும், மெய்ம் திறல்உடைய யாஉம் - உண்மையான வலிமையையுடைய மற்றுமுள்ளவற்றையும், அ தருவின் கோடரத்து-அந்தவன்னிமரத்தின்பொந்திலே, ஒரு விரகால்-ஒப்பற்ற உபாயத்தினால், ஒளித்து வைத்தனர் ஆகி - ஒளித்துவைத்தவராய்,— யாவர்உம் உணராவகை - எவரும் அறியாதபடி, அரு மறைகள் உம் பயிற்றி-அருமையானமந்திரங்களையுஞ் சொல்லி, வடி முத்தலை வேல் காளியை வணங்கி - கூரிய திரிசூலத்தையேந்திய காளிகாதேவியை வணங்கிவிட்டு, புரி தொழில் முற்றுஉம் முன்னினர் - (தாம்) செய்யவேண்டிய தொழில்முழுவதையும் ஆலோசித்தார்கள்; (எ - று.)

கீழ் உருக்காத்துறையவேணு மென்று தீர்மானித்த பாண்டவர், இப்போது இன்னர்இன்னர் இன்னஇன்ன உருக்கொண்டு இன்னின்ன தொழில் புரியவேணு மென்று மேல்நிகழ்த்தவேண்டிய யாவற்றையும் ஆராய்ந்து தீர்மானித்தன ரென்க. வெற்றிதரக்கூடிய மங்கை யாதலால், காளியை வணங்கினர். மெய்த்திறலுடையயாவும் என்றது - அட்சயபாண்டம் போன்றவற்றைக் காட்டுமென்னலாம். ஒருவிரகால் ஒளித்துவைத்தனரென்றது - அஜ்ஞாதவாசஞ் செய்யுங்காலம் முற்றுமளவும் தாம் வைத்த பொருள்களில் எதுவும்கெடாதவாறு இருக்கும்படி வத்தமையைத் தெரிவிக்கும். தமக்குரிய படைக்கலங்களோடு நகரிற்சென்றால் தம்மை நாட்டவரஞ்சுவதோடு மறைந்துறைதற்கு இடையூறுமா மென்ற காரணத்தால், ஆயுதங்களையெல்லாம் வன்னிமரத்தின்மீது மறையவைத்து மந்திரத்தாற் பிறர் கவராதபடி ரட்சையுமியற்றினர்பாண்டவ ரென்க. நாணியைக்கழற்றிவிட்டு நீட்டிய காண்டீவம்போன்ற அவ்வவர்களுக்குரிய விற்களையும் மற்றுமுள்ளவற்றையும் வெயில் மழை முதலியவற்றால் நலிவுநேரிடாதபடியும் மானுடர் அண்டாதபடியும் தோலுக்கொண்டு சுற்றச்செய்து பொதிந்து யுதிஷ்டிரன் நகுலன்மூலமாக மரத்தின்மீது அவற்றை வைத்தன ரென்றும், ஒருவருஷம் முற்றுமளவும் அவற்றைப் பாதுகாக்குமாறும், அருச்சுனனுக்காவது தனக்காவது மீண்டும் பெறநினைக்கையில் பெறமுடியுமாறும் தேவர்களைக் குறித்து அபிமந்திரித்தும் வைத்தனரென்றும், காளிஸ்தோத்ரம் கூறப்பட்டதென்றும் விவரங் காண்க.

11. — தருமன் துறவியுருக்கொண்டு நிற்க, அவனை வணங்கி விராடன் ஆசிபெறுதல்.

தம்பியர் வணங்கித்தன தடிதாளிணையிற்றங்கவோர்தாபதவடிவு
மும்பருமவியப்பக்கங்கனென்றுணைக்குமொருதிருநாமமுந்தரித்து
வெம்பரிதியினுஞ்செம்மைகூர்வடிவம்வெண்புரிநூலொடுவிளங்க
வைம்புலன்மகிழ்ச்சென்றுகண்டிறைவற்கடிதொழுவாசியுமுரைத்தான்.

(இ - ள்.) தம்பியர் வணங்கி தனது தாள் இணையில் தங்க - தம்பிமார்கள் வணங்கித் தன்னுடைய திருவடித்தாமரைகளில் தங்கவும், உம்பர்உம்பியப்ப - தேவர்களும் அதிசயிக்கவும், ஓர் தாபதம் வடிவுஉம் - ஒப்பற்ற துறவிவேஷத்தையும், கங்கன் என்று உரைக்கும் ஒரு திருநாமம்உம் - கங்கனென்று சொல்லும் ஒருபெயரையும், தரித்து-தாங்கிக்கொண்டு, (யுதிஷ்டிரன் வேத்தவை சார்ந்தாரை),—வெம் பரிதியின்உம் செம்மை கூர் வடிவம் - வெம்மை பொருந்திய சூரியனைக்காட்டிலும்செந்நிறம்மிக்க(அவ்யுதிஷ்டிரனது)வடிவம், வெண் புரி நூலொடு விளங்க - வெண்மைபொருந்திய மூப்புரிநூலுடனே விளங்காநிற்க, ஐம்புலன் மகிழ கண்டு - (தன்னுடைய) பஞ்சேந்திரியங்களும் மகிழ்ச்சிகொள்ளுமாறு அம்முனிவனை(ச் சேய்மையிற்) கண்டு, வந்து - (தன்னிடத்தினின்று புறப்பட்டு)வந்து, இறை - விராடராசன், சென்று - (துறவியிருக்குமிடத்துப்) போய், அடிதொழ - (அத்துறவியை) வணங்க, ஆசிஉம் உரைத்தான் - (அம்மன்னவனுக்கு அத்தத்துறவியும்) வாழ்த்துங் கூறினான்.

தருமன் விராடநகரத்தில் வேத்தவையிற்புகுமுன் தாபதவடிவுகொள்ள, அவனைத் தம்பியர் வணங்கினர்: பின்னர் விராடனவைக்கு அவ்யுதிஷ்டிரன் சென்றானென்க. அங்ஙன் உம்பரும் வியப்பத் தருமன் தாபதவுருக்கொண்டபோது கங்கனென்ற பெயரைச் சூடினமை, இரண்டாமடியிற் பெறப்படும். இனி, நால்வர் சூழவிருந்து வணங்காவிடின் மதிப்பு உண்டாகாதாதலால், தருமன் தாபதவுருக்கொண்டு வேத்தவைக்குச் சென்றபோது தம்பியர் வணங்கிச் சூழஇருந்தன ரென்பாரு முளர்: அது, தனித்தனியே சபைக்குத் தம்பியர் செல்வதாகக் கூறுவதோடு முரணும். புலன் - பொறிக்கு இலக்கணை. வந்து - அசையுமாம். ஆசி=ஆசிஸ்: வடசொல். (கக)

12. —தாபதவுருக்கொண்ட தருமனை வணங்கிய விராடனது வினவும், அதற்கு அத்தருமன் இறுத்த விடையும்.

யாரையாநீவிரெங்குநின்றிவண்மற்றெழுந்தருளியதெனவினவப்
பாரையாளுடையவுதிட்டிரன்பாங்காய்ப்பயின்றனனவன்பெருவனத்திற்
சேருநாளுடன்போய்த்திரிந்தனனின்பாற்சில்பகல்வைகுமாறெண்ணி
வீரவார்கழலாய்வந்தனனென்றுண்வேள்வியாற்கேள்வியான்மிக்கோன்.

(இ - ள்.) 'ஐயா—! நீவிர் யார்—? எங்குநின்று இவண் எழுந்தருளியது - எவ்விடத்தினின்று இங்கு வந்தது?' என வினவ - என்று (தாபதவுருக்கொண்டிருந்த தருமபுத்திரனை விராடராசன்) விசாரிக்க,— வேள்வியால் கேள்வியால் மிக்கோன் - யாகஞ்செய்தலிலும் சிறந்தநூற்கேள்வியைப்

பெரியோரையடுத்துக்கேட்டலிலும் மிக்கவனென அந்தத் தருமபுத்திரன்,— (விராடனைநோக்கி),— 'வீரம் வார் கழலாய் - வீரத்திற்கு அறிகுறியாகத் தரித்த நீண்ட கழலைப் பூண்டவனே! பாரை ஆள் உடைய - பூமியையாளுந் தலை யுடைய, உதிட்டிரன் - தருமபுத்திரனுக்கு, பாங்குஆய் - தோழனாய், பயின்றனன் - பழகியிருந்தேன்: அவன் பெரு வனத்தில் சேரும் நாள் - அவன் பெரியகாட்டிலே சேரும்நாளிலே, உடன் போய் திரிந்தனன் - அவனுடன்கூடவே போய்த் திரிந்தேன்: நின்பால் சில் பகல் வைகும் ஆறு எண்ணி வந்தனன் - உன்னிடத்துச் சிலநாள் தங்கும்படி யெண்ணி இப்போது வந்துள்ளேன்,' என்றான் - என்று விடைகூறினான்; (எ - று.)

பாங்கு - அருகில் எனினுமாம். இதனுத் தருமபுத்திரன் விராடனிடத் துக் கூறுவதில் மெய்ம்மைப் பொருள் தோன்றுமாறும் அமைத்திருத்தல் காண்க: அதுவருமாறு:—உதிட்டிரன் அவன் - யுதிஷ்டிரனுகிய அன்னன், பாங்குஆய் - சௌக்கியமாக, பயின்றனன் - (நாட்டில்) தங்கியிருந்தவன்.— பெருவனத்தில் சேரும்நாள், உடன் - தன்துணைவரோடு, போய் - (நாட்டை விட்டுச்) சென்று, திரிந்தனன்: (அவன்) நின்பால் சில்பகல் வைகுமாறு எண்ணி, வந்தனன் - வந்துள்ளா னென்பது. மற்று - அசை. (உ)

13.—மன்னவன் மனமுவந்து அந்தழினிவினை யாதேற்றல்.

மன்முனிமொழிந்தவாய்மைகேட்டந்தமனுகுலமன்னனுமகிழ்ந்து தன்மனநெகிழ்ந்தநெகிழ்ச்சியுமுணர்வுந்தகைமையுமுவகையிறவோன்ற வென்டினைவயினின்றெய்தியபயன்யானேழுழுபிறப்பினுப்புரிந்த நன்மையின்விளைவேவேண்டுநாளீண்டுநண்ணுதிரெனநனிநவின்றான்.

(இ - ள்.) மன் முனி - அரசனுய்ப்பிறந்து துறவிவேடத்தைக்கொண் டுள்ள யுதிஷ்டிரன், மொழிந்த - சொன்ன, வாய்மை - உண்மையான சொல்லை, கேட்டு—, அந்த மனுகுலம மன்னன்உம-மனுகுலதத்துத தோன்றிய அரசனுகிய அந்த விராடமன்னவனும்,—மகிழ்ந்து—, தன் மனம் நெகிழ்ந்த நெகிழ்ச்சிஉம் - (அந்தமுனிக்கோலத்தையுடைய தருமபுத்திரன்விஷயத்தில்) தன்மனம் இளகியிருக்கும் நிலைமையும், உணர்வுஉம் - (அவனைப் பற்றிய) நல்லுணர்ச்சியும், தகைமை உம் - பாராட்டும், உவகையில் - (அந்தவிராட ராசன் வெளிக்காட்டிய)மகிழ்ச்சியில்தானே, தோன்ற - வெளிக்குத் தெரியா நிற்க,—'இன்று - இன்றைறத்தினம், என் மனைவயின் - என்வீட்டிலே, எய் திய - (நீர்) வந்து சேரப்பெற்றதனுலான, பயன் - நல்விளவு,—யான்—, ஏழ் எழுபிறப்பின்உம் - எழுவகைப்பட்ட எழுபிறப்பிலும், புரிந்த - செய் தள்ள, நன்மையின் - நல்வினையின், விளைவுஎ - பயனேயாம: வேண்டும் நாள் - (நீர இங்கே) வசிக்கவேண்டும் என்று நினைக்கிற நாள், ஈண்டு நண்ணு திர் - இங்குத்தானே வாசஞ்செய்மின்,' என - என்று, நனி நவின்றான் - இனிதாகக் கூறினான்; (எ - று.)

விராடராசனதுமுகதத்தில் தோன்றிய குறிப்பு, அந்தமன்னவனுடைய மனமகிழ்ச்சி முதலியவற்றை வெளித்தோற்றுவித்தனென்க; "அகத்தினழகு

முகத்தில் தெரியும்" என்ற பழமொழி இங்குக் கருதத்தக்கது. எழுபிறப்பு - விலங்கு புள் ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் ஏழுபிரிவினையுடையனவும், ஒருபிராணிசெய்த புண்ணியபாவங்கள் தொடர்தற்கு உரியனவுமான ஏழுபிறப்புக்கள். (கூ)

14.—வீமன், சமையற்காரனென்று சொல்லிக்கொண்டு விராடனைவயைச் சேர்தல்.

தண்டினுக்கொருவன்புயவலிக்கொருவன்றனுவினுக்கொருவனென்றுரைக்குந், திண்டிறற்பவனகுமரனுஞ்சின்னாள்சென்றபின் றெள்ளமுதனைய, வுண்டியைக்குறித்துக்கற்றதன்கல்வியுரிமையைக் குறித்தடுதொழிற்கு, மண்டலத்தரசெயொருவன்யான்வீமன்மடையனென்றரசனைவவந்தான்.

(இ - ள்.) 'தண்டினுக்கு ஒருவன் - தண்டாயுதத்தையேந்திப் பொருவதில் ஒப்பற்றவன்: புயம் வலிக்கு ஒருவன் - தோள்வலியில் ஒப்பற்றவன்: தனுவினுக்கு ஒருவன் - தநுர்வித்தையிலும் ஒப்பற்றவன்,' என்று—, உரைக்கும் - (உலகத்தாரால்) சொல்லப்படுகின்ற, திண் திறல் - மிக்கவலிமையையுடைய, பவனகுமரன்உம் - வாயுபுத்திரனாகிய வீமசேனனும்,—சில் நாள் சென்ற பின் - (தருமபுத்திரன் விராடனையடைந்து) சிலநாள் கழிந்தபிறகு, தெள் அமுது அனைய உண்டியை குறித்து கற்ற - தெள்ளிய அமிருதம் போன்ற இனிய உணவைச்சமைத்தலைக் குறித்து(க் தான்) கற்றுள்ள, தன் கல்வி உரிமையை குறித்து - தன்னுடைய பாகசாஸ்திரத்திலேயுள்ள வல்லமையைச் சொல்லிக்கொண்டு, 'மண்டலத்து அரசே - பூமண்டலத்துக்குத் தலைவனே! அடு தொழிற்கு - சமைக்குந்தொழிலில், ஒருவன் யான் - ஒப்பற்றதிறமைபடைத்தவன் நான்: வீமன் மடையன்—,' என்று - என்று சொல்லிக்கொண்டு, அரசு அவை - ராஜசபையை, வந்தான்-வந்துசேர்ந்தான்.

தண்டாயுதப்போர் முதலியவற்றில் ஒப்பற்ற வீமன் 'பாக [சமையல்] சாஸ்திரத்தில் தான் நிகரற்றவன்: வீமன்மடையன்' என்று தன்னைத் தெரிவித்தான் என்க. வீமன்மடையன் என்ற தொடர் - வீமனுடைய மடையனென்று பொருள் படுதலோடு, வீமனாகிய மடைய னென்றும் பொருள்படுவது காண்க. (கூ)

15.—சேர்ந்த வீமன் தன்திறமையை விளங்கக் கூறுதல்.

வந்துதன்றம்முன்மலரடிமுன்னிமலர்க்கையான்முடியின்மேல் வணங்கி, யைந்துபல்வகையிற்கறிகளும்வெவ்வேறறுசுவைமாறுமாறமைப்பேன், வெந்திறன்மல்லும்புரிதொழிலுடையேன்விருத்துடைப்பலாயனனென்பே, ரிந்திரனுலகுதன்னிலுமெண்ணிலென்றெழிற்கெதிரிலையென்றான்.

(இ - ள்.) வந்து—,தன் தம்முன் - தனது தமையனுடைய, மலர் அடி - தாமரைமலர் போன்ற திருவடிகளை, முன்னி - தியானித்தபடியே, மலர்

கையால்-தாமரைமலர்போன்ற கைகளினால், முடியின்மேல்வணங்கி-சிரசின் மீது வைத்து வணங்கி[சிரசின்மேல் இருகையும் வைத்துக் குவித்து வணங்கி], பல் கறிகள்உம் - பலவகைப்பட்ட கறிகளையும், ஐந்து வகையின் - ஐந்து வகைக்குன், வெவ்வேறு அறுசுவை மாறும்ஆறு-ஆறுசுவைகளும் வெவ்வேறாக மாறிமாறி வரும்படி, அமைப்பேன்—;வெந் திறல் - கொடியதிறமையோடு, மல்உம் - மற்போரும், புரி - செய்கின்ற, தொழில்-தொழிலை, உடையேன் - விருதுஉடை - புகழ்பெற்ற, பலாயனன் என் பேர் - பலாயனனென்பது என்னுடைய பேராகும்: எண்ணில் - ஆலோசிக்கு மிடத்து, இந்திரன் உலகு தன்னில்உம் - இந்திரலோகத்திலும், என் தொழிற்கு - என் தொழிலைச் செய்வதற்கு, எதிர் - ஒப்பானவர், இலை—,' என்றான்—; (எ - று.)

ஐந்து வகையாகக் கறிகளையமைத்தல் - உண்பன கடித்துத்தின்பன பருகுவன மெல்லுவன நக்குவன ஆகப் பக்குவஞ்செய்தல். அறுசுவை - கைப்பு புளிப்பு கார்ப்பு உவர்ப்பு துவர்ப்பு தித்திப்பு என்பன. மேலுலகத்திலிருப்பவை சிறந்தனவாயிருக்கு மென்ற கொள்கைபற்றி, இந்திரனுலகு தன்னிலு மென்தொழிற் கெதிரிலை யென்கின்றான்: தன்னுடையாற்றலை யுணராரிடத்துத் தன்னைப் புகழ்தல் தக்கதே யாதலால், இங்ஙனம் புகழ்ந்து கூறினை னென்க. வலலன் என்று முதனூலிற் பேர் கூறப்பட்டுள்ளது. வீமன்வணங்கியது தருமனையேயென்பார் 'தம்முன் மலரடி முன்னிவணங்கி' என்றார். (கரு)

16.--அவ்வீமனையும்விராடராசனும்வெதுபதிசெய்துதன்னிடத்துக்கொள்ளல்.

என்றபோதவனைவிராடனுமகிழ்வுற்றிருகையுஞ்சென்னிமேலிருத்திப் பொன்றிகழ்மணிப்பூண்மென்றுகில்பலவும்புரவிபோதகங்களும்வழங்கி யின்றுதொட்டெமக்குமெய்ப்பெருஞ்சுற்றதொருவனீயென்றடுதொழிற்கு நின்றவரெவர்க்குந்தலைவனுமுரிமைநிலைபெறவழங்கினன்மாதோ.

(இ - ள்.) என்ற போது - என்று (வீமசேனன்) சொன்னபோது,— அவனை - அந்தப்பலாயனனென்றவீமனை, விராடன்உம் - விராடராசனும், மகிழ்வுஉற்று - மகிழ்ச்சிபொருந்தி, இரு கைஉம் - (தன்) இரண்டுகைகளையும், சென்னிமேல்இருத்தி - (அந்தவீமசேனனுடைய) சிரசின்மேலிருக்க வைத்து,—பொன் திகழ் மணி பூண் (பலஉம்) - பொன்னினாலும் இரத்தினங்களினாலும்விளங்குகின்ற ஆபரணங்கள் பலவற்றையும், மெல் துகில் பலஉம் - பலவகைப்பட்ட மெல்லிய ஆடைகளையும், புரவி போதகங்கள்உம் - குதிரைகளையும் யானைக்கன்றுகளையும், வழங்கி - கொடுத்து,— 'இன்று தொட்டு - இன்றுமுதல், எமக்கு—, நீ—, மெய் பெருஞ் சுற்றத்து ஒருவன் - உண்மையான பெருஞ் சுற்றத்தாரிலொருத்தனுவாய்', என்று - என்று (முகமன்) கூறி,— அடு தொழிற்கு நின்றவர் எவர்க்குஉம் - (தன்னிடத்துச்) சமையல்தொழிலில் அமர்ந்து நிற்பவரெல்லார்க்கும், தலைவன் ஆம் - தலைவனாகின்ற, உரிமை - உத்தியோக முறைமையையும், நிலைபெற - நிலையாக, வழங்கினன் - (அந்தப் பலாயனனுக்குக்) கொடுத்தான்; (எ - று.)

பலவும் என்பது பூண்என்பதனோடும் கூட்டப்பட்டது. இருகையும் சென்னிமேலிருத்தியது - நீ என்னிடத்து ஒதுங்கிவாழுலா மென்பதைக் குறிப்பிக்கும். இனி, தன்தலையின்மேல் தன்இருகைகளையும் வைத்து விராடன் வீமனை அஞ்சலிசெய்தா னென்றல், இந்நிலையில் எலாதென்க. போதகம் - யானைக்கன்று: வடசொல். ஒருவன் நீ - முன்னிலையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி. மாதோ - ஈற்றசை. ஐம்பெருஞ்சுற்றத்து என்ற பாடத்துக்கு, ஐம்பெருஞ்சுற்றங்களாவார்-மந்திரியர் புரோகிதர் சேனை பதியர் தூதர் சாரணர்என்ற இவர். (கசு)

17.—அருச்சுனன் உருப்பசி தந்த சாபத்தால் ஒருவருடம் தாங்கவேண்டிய பேடிவடிவத்தைக் கொள்ளுதல்.

நீடியசிலைக்கைத்தேவர்கோன்மதலை நிருத்தசல்லரங்கினின்முன் னுள், வாடியமருங்குல்பணைத்தபூண்கொங்கை வாட்டடங்கண்கள் வார்குழைமேல், ஓடியவதனத்துருப்பசிபணியா லுறுவதற்கேகாரி யாண்டமைந்த, பேடியின்வடிவந்தரித்தனனண்மைக் கிணையவரெ வரினும்பெரியோன்.

(இ - ள்.) நீடிய சிலை கை - நீண்ட வில்லையேந்திய கையையுடைய, தேவர்கோன் மதலை - தேவேந்திரனுடைய புதல்வனை அருச்சுனனுடைய, ஆண்மைக்கு இணையவர் எவரின்உம் பெரியோன் - வீரத்தன்மையில் தேவர்கள் யாவரினும் மேம்பட்டவன்,—நிருத்தம் நல் அரங்கினில்-நாட்டியம் ஆடுதற்கு அமைத்த சிறந்த நாடகசாலையில், முன் நாள்-முற்காலத்தில், வாடிய மருங்குல் பணைத்த பூண் கொங்கை வாள் தடம் கண்கள் வார் குழைமேல் ஓடிய வதனத்து உருப்பசி - துவளுகிற [மெல்லிய] இடையையும் பருத்த ஆபரணங்களையணிந்த தனங்களையும் வாள்போன்ற விசாலமான கண்கள் நீண்டகாதணிமே லோடப்பெற்ற முகத்தையுமுடையளாயிருந்த உருப்பசி யென்ற தேவமாதின், பணியால் - ஏவலினால் [சாபத்தினால்], ஓர் யாண்டு உறுவதற்கு அமைந்த - ஒருவருஷகாலம் தங்கும்படி பொருந்திய, பேடியின் வடிவம் - பேடிவடிவத்தை, தரித்தனன்—; (எ - று.)

ஆண்மைக்கு எவரினும் பெரியோன் பேடியாயினனே: இது என்ன வியப்பு! என அதிசயத்தோன்றக் கூறியவாறு. அருச்சுனன் சிவபிரானை நோக்கித் தவம்புரிந்து பாசுபதம் பெற்றுப் பகைவென்றபின், தேவேந்திரன் அவ் வருச்சுனனைத் தன்னுலகத்திற்கு இட்டுக்கொண்டுபோய்ப் பெருஞ்சிறப்புச் செய்து தனிவிடுதி யளித்திருந்தானாக, உருப்பசி நடித்த புதுநாடகத்தைக் கண்டு அவ்வருசுனன் புகழ்ந்து தன்விடுதியிலிருக்கையில் சூரியாஸ்தமன மாகி நிலாத்தோன்றிய போது தனிப்பட்ட அவ்விடுதிக்கு உருப்பசி வந்தாள்: அவளைக் கண்ட அருச்சுனன், "நீ ஆயுவின் பாரியையாயிருந்தவளாதலால், எனக்கு மாதாவின் வருக்கத்தைச் சேர்ந்தவளன்றே" என்று அவளைப் பணிந்தான்: உடனே அவள் வெகுண்டு "இரவிடையாடவர்புகலா மொழி புகன்றாய்: நீ பேடியாயல் பாகுக" என்றுகூறித் தன்கோயிலிற் புகுந்தாள்:

மறுநாள் பொழுது விடிந்ததும், செய்தியுணர்ந்த தேவேந்திரன் தேவர் புடைசூழ அவளிருக்குமிடம் சேர, அவளும் தேவேந்திரனைப் பதம்பணிந்தாளாக, தேவர்கள் "இந்தப்பேடி உருவம் இந்த அருச்சுனனுக்கு வேண்டும்போது ஒருவருடம் வந்திருக்குமாறு அருள்புரிக" என்று அவளிடத்து வேண்ட, அங்ஙனமே அன்னாள் வரந்தந்தனளென்பது, அருச்சுனன் றவநிலச்சருக் கத்துக் கூறிய சரிதை யாகும். (கஎ)

18.—பேடிவடிவம் படைத்த அருச்சுனன் விராடராஜசபை சென்று அருச்சுனன் கோயிலிலிருந்த பேடி யென்று தன்னைத் தெரிவித்தல்.

வாயுவின்மதலைசென்றுகண்டதற்பின் மற்றைநாளொற்றைவெண்கவிகைச், சேயொளிமகுடச்சென்னியானிருந்த பேரவைசிறப்புறச்சென்று, தூயவெண்புரிநூன்முனிதிருக்கழலி லொருபுடைதோய்தரத்தலைசாய்த், தேயவெஞ்சிலைக்கையருச்சுனன்கோயிலிருப்பதார்பேடிநானென்றான்.

(இ - ள்.) வாயுவின் மதலை - வாயுபுத்திரனென வீமசேனன், சென்று - போய், கண்டதன் பின் - (விராடனைப்) பார்த்து (அவசு) அமர்ந்தபின்பு, மற்றைநாள்—,—ஒற்றை வெள் கவிகை-ஒற்றை வெண்கொற்றக் குடையையும், சேய் ஒளி மகுடம் - செந்நிற வொளியையுடைய கிரீடத்தையுந் தரித்த, சென்னியான் - முடியையுடையவனாகிய விராடன், இருந்த - தவசியுள்ள, பேர் அவை - பெருஞ்சபை, சிறப்புஉற - சிறப்படையும்படி, சென்று—, தூய வெள் புரி நூல் முனி திரு கழலில் - பரிசுத்தமான வெண்மையையுடைய முப்புரிநூலையணிந்த துறவியாகிய தருமபுத்திரனுடைய சிறந்த பாதங்களில், ஒரு புடை - ஒருபகுதியில், தோய்தர-படியும்படி, தலை சாய்த்து - தலையவணங்கி, (அருச்சுனன் பிறகு மன்னவனைநோக்கி),—'எய வெம் சிலை கை - எவர்தன்மையுள்ள கொடிய வில்லைத்தரித்த கைகளையுடைய, அருச்சுனன் கோயில் - அருச்சுனனுடைய அரண்மனையிலே, இருப்பது - இருத்தலையுடைய, ஓர் பேடி நான் ஒருபேடியாவேன் யான்,' என்றான் - என்று (தன்னைத்) தெரிவித்தான்; (எ - று.)

நான் அருச்சுனன்; இப்போது கோயிலில் [ராஜகிருகத்தில்] வசித்தற்குரிய பேடிவடிவம் படைத்துள்ளேன் என்று ஒருபொருளும் இதில் தோன்றுதல் காண்க. பேடி - பெண்ணுறுப்புமிக்கு ஆணுறுப்புக் குறைந்த நபுஞ்ஸகம். (கஅ)

19.—இதுவும் அது.

நாதமுமியலுமேதகுநடனவிறருமரங்கினுக்குரியேன்
பேதையர்தமக்குநடம்பயிற்றுவிப்பேன்பெயர்பிருகந்நளையென்ப
வாதிபங்கனதுசெல்வமாநகரிலிருப்பதற்கெண்ணிவந்தடைந்தேன்
வேதமுமுலகுமுள்ளநாளளவும்விளங்குகங்கைமாபென்றான்.

(இ - ள்.) நாதம்உம் - இன்னிசையான சங்கீதமும், இயல்உம் - (பாடுதற்குரிய) பாடலும், மேதகு - மேம்படுகின்ற, நடம் நல் - நடனசாஸ்திர

த்தில், நவில்தரும் - கூறியபடி யமைத்துள்ள, அரங்கினுக்கு - கர்த்தன சாலையிலாடுதற்கு, உரியேன் - உரியவள்: (அன்றியும்), பேதையர்தமக்கு - மகளிர்க்கு, நடம் - கர்த்தனத்தை, பயிற்றுவிப்பேன் - பழக்குவித்தற்கு வல்லேன்: பெயர் - (என்னுடைய) பெயர், பிருகன்நளை என்ப - பிருகன்நளை யென்று சொல்வார்கள்: ஆதிப - தலைவனே! நினது செல்வம் மா நகரில் - உன்னுடைய வளப்பமுள்ள நகரத்தில், இருப்பதற்கு - வசிப்பதை, எண்ணி-நினைத்து, வந்து அடைந்தேன்—; வேதமும்—, உலகும்—, உள்ள நாள் அளவுஉம் - இருக்கும்நாள் வரையிலும், நின் மரபு - உனதுகுலம், விளங்குக—, என்றான்—; (எ - று.)

நர்த்தனஞ்செய்யும்போது சங்கீதமும் பாடலும் உடன்வேண்டியிருத்தலால், 'நாதமுமியலு மேதகுநடம்' எனப்பட்டது. (கக)

20.—விராடன் பிருகந்நளையைக் கொண்டாடி, உத்தரையென்ற தன்மகளுக்குத்தப் பாங்கியாக அவளிடத்து விடுத்தல்.

வித்தகமெனவெக்கலைகளுமபயின்றவிராடனும்பேடிதன்பொழிகேட்டிதிறமுடையார்வேலைசூழுலகினில்லையென்றினிதுரைத்தருளியத்தகவுடையாண்மகிழ்வுறக்கலனுமாடையும்வேண்டுவவழங்கியுத்தரைதனக்குப்பாங்கிநீயென்றுங்குரியதன்மகளுரைழவிடுத்தான்.

(இ - ள்.) வித்தகன் என - வல்லவனென்று, எ கலைகள் உம் பயின்ற - எந்தக்கலைகளிலும் கற்றுவல்லவனென, விராடனும்—, பேடிதன் மொழி கேட்டு - அந்தப் பேடியின் பேச்சைக் கேட்டு, 'இ திறம் உடையார்-(நடன நூலில்) இவ்வளவு வல்லமைபெற்றவர், வேலை சூழ் உலகினில் - கடலினாற் சூழப்பட்ட இந்தப்பூலோகத்தில், இல்லை—,'என்று—, இனிது-இனிமையாக, உரைத்தருளி - சொல்லி,—அ தகவு உடையான்-அப்படிப்பட்ட திறமுடையளான அந்தப்பேடி, மகிழ்வுஉற - மகிழ்ச்சியடையும்படி, வேண்டுவ - (அவன்) விரும்பக்கூடிய, கலன் உம் - ஆபரணங்களையும், ஆடை உம் - வஸ்திரங்களையும், வழங்கி - கொடுத்து, 'உத்தரைதனக்கு - உத்தரை யென்கிற (என்) மகளுக்கு; நீ—,பாங்கி - உயிர்த்தோழியாவாய்', என்று - என்று சொல்லி, உரிய தன் மகளுரை - (தனக்கு)உரியமகளான அவளிடத்தில், ஆங்கு - அப்போது, விடுத்தான் - (அந்தப்பிருகந்நளையை) அனுப்பினான்; (எ - று.)

உரியதன்மகள் என்றது - தான் பெற்ற பெண்ணென்றபடி. இத்திறமுடையார் வேலைசூழுலகினில்லை யென்றதனால், அன்னாள மன்னவன் பரீட்சித்தறிந்தமை பெறப்படும். (உ0)

21.—சின்னாள் கழித்து நந்தலன் புரவியோட்டுவோனுநக்கொண்டு விராடன் ததிரையேறும் முன்றிலிற் சென்றிருத்தல்.

பின்னருஞ்சின்னாளகன்றபினகுலன்போழுகினுக்குவேளாளையான் மின்னுடைவடிவேல்வேந்தர்கோன்விராடன்வெம்பரியேறமுன்றிலின்வாய் மன்னியதொழில்கூர்கம்பியுங்கயிறுமத்திகையுடன்கரத்தேந்தியுன்னயமுதலாம்புரவிநூலறிவோனுளநிகழ்தருக்கொடுசென்றான்.

செலுத்துந்தொழிலில், வல்லேன்—: திண் திறல் - மிக்கவலிமையையுடைய, தட தேர் - பெரிய தேர்களிலே, பூண்பதற்கு - கட்டிச் செலுத்துவதற்கு, உரிய—, செயல்உடை - செய்கையைக் கொண்ட, பரிகள் உம் - குதிரைகளையும, தெரிவேன் - ஆராய்ந்தறியவல்லேன்: வண்டு இமிர் அலங்கல் மாலையாய் - வண்டுகளொலிக்கின்ற அழகையுந்தன்மையுள்ள வெற்றிமாலை பூண்டுள்ள அரசனே! பாண்டு மைந்தர் - பாண்டவர், போய் - (நகரத்தை)விட்டுச் சென்று, வனம் புகுந்ததன் பின் - காட்டைச் சேர்ந்த பிறகு, [பாண்டவர் வனவாசத்திற் சென்றபின் என்றபடி], உண்டியும் இழந்தேன் - உண்ணும் உணவையும் இழந்தேன்: உறுதியும் இழந்தேன் - மனவுறுதியையும் இழந்திட்டேன்: உன் புகழ் கேட்டு—, வந்துஉற்றேன் - (இங்கே) வந்து சேர்ந்தேன்; எ - று.)

சிலகுதிரைகள் ஏறிச்செலுத்துதற்கு உரியனவாக, சிலகுதிரைகள் தேரிற் கட்டியோட்டுதற்கு உரியனவா மென்பது அறிக. (உச)

25.—விராடன் நகுலனைச் சன்மானித்து அவனுக்குத் குதிரைகட்ட அதிபதியாதும் பதவியையு மளித்தல்.

என்னவப்புரவியேற்றுநாயகன்வந்தியம்பியவின்மொழிகேட்டு, மன்னவர்க்கெல்லாமொதுங்குநீணிழலாய்வயங்குமாமதிக்குடைமன்னன், முன்னவர்க்குள்ளவரிசைகள்யாவுமும்மடங்காகமேவவழங்கி, யங்ஙகர்த்தாங்கடமையனைத்தினுக்குமதிபதியெம்பதங்கொடுத்தான்.

(இ - ள்.) என்ன - என்று, அ புரவி ஏறு நாயகன் வந்து இயம்பிய - அத்தசசிறந்த குதிரைகட்குத் தலைவனானவன் வந்துசொன்ன, இன் மொழி- இனியவார்த்தையை, கேட்டு - செவியேற்று,— மன்னவர்க்கு எல்லாம் ஒதுங்கும் நீள் நிழல் ஆய் வயங்கும் - அரசர்கட்கெல்லாம் வந்து ஒதுங்குதற்கு உரிய நீண்ட நிழலையுடையதாய் விளங்குகின்ற, மாமதி குடை - சிறந்த சந்திரன்போன்ற வெண்கொற்றக் குடையையுடைய, மன்னன் - விராடராசன்,—(வந்த அந்த நகுலனுக்கு), முன்னவர்க்கு - முன்னமே (தன்னிடத்துக்) குதிரைத்தலைவராயமர்ந்திருப்பவர்க்கு, உள்ள—, வரிசைகள் யாவும் - சிறப்புக்களெல்லாம், மும்மடங்கு ஆக - மூன்றுமடங்கு மிகுதியாக அமையும்படி, வழங்கி - கொடுத்து,—அ நகர் தாங்கும் அவை அனைத்தினுக்குமும் - அந்த அரண்மனையிலுள்ள குதிரைகள் எல்லாவற்றுக்கும், அதிபதி-தலைவன், எனும் - என்கின்ற, பதம்-பதவியையும், கொடுத்தான்—.

தாரங்கம் - வேகமாகச் செல்வதென்று பொருள்படும் வடசொல். புரவியேறுநாயகன் என்று பிரதிபேதம். (உந)

26.—சகதேவன் இடையர்கோலத்தோடு விராடனது சபையைச் சேர்தல்.

கிளைபடுபுரவிபுரந்திடுந்தாமக்கிரந்திபாம்பெயர்புனைநகுலற்
கிளையவனந்தகோபன்மைந்தனைப்போலிடையர்தங்கோலமெய்தித்

துளைபடுகுழையிலொருகுழையணிந்துதோளிலோர்தொடித்தடிதழுவி விளைபுகழ்விராடன்வேந்தனையதனை வலெறுருநாளையினடைந்தான்.

(இ - ள்.) இளை படு - பல பகுப்புப்பொருந்திய, புரவி - குதிரையை, புரந்திடும் - காக்குந்தொழிலைத் தெரிந்த, தாமக்கிரந்தி ஆம் பெயர் புனை - தாமக்கிரந்தி யென்கிற பெயர்பூண்ட, நகுலற்கு—, இளையவன் - தம்பியாகிய சகதேவன், நந்தகோபன் மைந்தனை போல் - நந்தகோபனுடைய மகனைப் வளர்ந்த ஸ்ரீக்ருஷ்ணனைப்போல், இடையர்தம் கோலம் அது எய்தி-இடைக் கோலத்தைப் பூண்டு, துளை படு குழையில் - துளைபொருந்திய ஒரு காதிலே மாத்திரம், ஒரு குழை அணிந்து-ஒப்பற்றகுனழையென்னுங் காதணியை யணிந்து, தோளில்—, ஓர் தொடி தடி தழுவி-ஒரு வளைவான தடியைத் தாங்கிக் கொண்டு, விளை புகழ் விராடன் வேந்து அவை அதனை - முதிர்ந்த புகழையுடைய விராடமன்னனுடைய இராசசபையை, வேறு ஒரு நாளையின் - வேறொருதினத்திலே, அடைந்தான் - வந்து சேர்ந்தான்; (எ - று.)

க்ருஷ்ணனைச் சகதேவனுக்கு உவமை கூறியதனால், கூத்திரியனென்பான் இடைகோலத்தைக் கொண்டமையும் விளங்கும். குழையணிந்து - தனிரை யணிந்தென்றலும் உண்டு. குதிரையின் வகைகளைப் பற்றி "மங்காளன் சாரங் கன் கதகாமீலன்மௌவழகன் கொங்காளன் கன்னசம்பான், குங்குமச்சீரான் காரியான்நீலன் சாரன் குலவுமள்ளான் உரஞ்சிவந்தான் நல்லான் பொல்லான், தங்குருகுகாற்சம்பான் என்று கூறுந்தன்மையுள" என்று திருவாதவூர்புராணத்தும், "உயர்கனவட்டம் போரா னுரனுளான் கொங்கான் கங்கான், மயில்வரி நீலான் பொல்லான் மகிழ்விதை மௌவான் சேயான், நயன வெஞ் சனம் பொன் மாரி பாடல நளினி பச்சை, பயமிலாமரீசி கோரம் பட்டவர்த் தனங்கள்பாரே" என்று திருவாலவாயுடையார்திருவிளையாடற்புராணத் திலும், மற்றும் கல்லாடம் முதலியவற்றிலும் கூறியிருப்பது காண்க. (உசு)

27.—சகதேவன் தான் கொண்ட கோலத்திற்தகவற்ப, வினவிய விராடனுக்குத் தன்னைத் தெரிவித்தல்.

ஆர்கொனீயென்னவறன்மகனுடனேறராசனத்திருந்தபூபதியைச் சீருறவேறேர்விரகினல்வணங்கிச்செப்பினனன்னசாதேவன் பார்கொளநினைந்துசுயோதனன்விடுப்பப்படர்வனம்புகுந்தபாண்டவரிற் றூர்கொள்வேலிளையோன்றனதுகோபாலன்றந்திரிபாலன்யானென்றான்.

(இ - ள்.) (வந்த அவனை விராடராசன் பார்த்து), 'நீ ஆர் கொல்' என்ன - 'நீ யாவனோ?' என்றுவினவ,— அன்ன சாதேவன் - அந்தச்சகதேவன், அறன்மகனுடன் ஓர் ஆசனத்து இருந்த பூபதியை - தருமபுத்திரனுடனே ஓரேயாசனத்திலே வீற்றிருந்த அந்தவிராடராசனை, வேறு ஓர் விரகினல் வணகி - வேறொருதந்திரத்தினால் வணங்கிவிட்டு, சீர் உற - சிறப்புப் பொருந்த, செப்பினன் - (பின்வருமாறு) கூறினன்: 'சுயோதனன் - துரியோதனன், பார் கொள - (பாண்டவருடைய) இராச்சியத்தைக் கவரும் பொருட்டு, நினைந்து—, விடுப்ப - (காட்டிற்குச்செல்லுமாறு) ஏவியனுப்ப,—

படர் வணம் புகுந்த பாண்டவரில் - விசாலமான காட்டிலே சேர்ந்த பாண்ட வருக்குள், தார் கொள் வேல் இளையோன் தனது-வெற்றிமாலையையணிந்து வேல்தாங்கிய இளைய தம்பியாகிய சகதேவனுடைய, கோபாலன் - பசுக்களைக் காப்பவன், யான்—: தந்திரிபாலன் - தந்திரிபாலனென்னும் பெயருடை யேன்,' என்றான் - என்று விடைகூறினான்; (எ - று.)

விராடன் தன்னைவணங்கினனென்று நினையாநிற்கத் தருமனை வணங் கினனென்பார் 'பூபதியைச் சிறை கேள்ரோர்விரகினல் வணங்கி' என்றார். ()

28.—விராடன் வந்தவனை யுபசரித்து நிரைக்காவல னுக்க, அவன் கோபாலரீக்கெல்லாந் தலைவனுதல்.

ஆங்கவனிவ்வா றுரைத்தலுமவனையருகுறவருகெனவழைத்துப், பாங்குறத்தக்கவழக்கமும்வழங்கிப்பல்வகைநிரைகளுநீயே, யீங்குமப் படியேபுரத்தியென்றுரைத்தானிவனுமவ்வரசனைவலிஞற், நீங்கறக் கைக்கொண்டவ்வவர்க்கெல்லாந்தகைபெறுஞ்செம்மலாயினனே.

(இ - ள்.) ஆங்கு - அப்போது, அவன் - அந்தச்சகதேவன், இ ஆறு உரைத்தலும் - இப்படிச்சொன்னவுடனே, அவனை—, வருக என - வருவா யாக என்றுசொல்லி, அருகு உற அழைத்து - சமீபத்திலேபொருந்தக் கூப்பிட்டு, பாங்கு உற தக்க - இனிமைபொருந்தத் தகுதியான, வழக்கம் உம் - வரிசைகளையும், வழங்கி-கொடுத்து, (அவனைநோக்கி),— 'அப்படி ஏ-சகதேவனிடத்துப்போலவே, ஈங்குஉம்-இங்கேயும், பல்வகை நிரைகள் உம்-பலவகைப்பட்ட பசுக்கூட்டங்களையும், நீயே—,புரத்தி-பாதுகாப்பாய்,' என் று—,உரைத்தான் - (விராடராசன்)சொன்னான்:இவன்உம் - இந்தத் தந்திரி பாலனும், அ அரசன் ஏவலினல் - அந்தவிராடராசனுடைய கட்டளை யினல், தீங்கு அற - துன்பமில்லாமல், கைக்கொண்டு - (நிரைகளைத் தன்) வசத்திற்கொண்டு, அ அவர்க்கு எல்லாம்-ஏற்கவேயிருந்த இடையர்கட்கெல் லாம், தகை பெறும் - பெருமைபெற்ற, செம்மல் ஆயினன் - தலைவ னாயினன்; (எ - று.)

வழக்கம் - கௌரவமாக வழங்கப்படுவது: வரிசை: செயப்படுபொருள் விகுதி பெற்ற பெயர். (உ-அ)

வே று.

29.—திரௌபதி வண்ணமகளாகி, விராடமன்னவனுடைய தேவியின் கோயிலை நாடி யடைதல்.

ஓமமக வாரழலி னூடருவு யிர்க்கு
மாமயிறி ரௌபதியும் வண்ணமக ளாகித்
தேமருவு தார்முடிவி ராடனிரு தோள்சேர்
கோமகளை நாடியவள் கோயிலிடை புக்காள்.

(இ - ள்.) ஓமம் மகம் ஆர் அழலினூடு - ஓமஞ்செய்த யாகத்தின் நிரம் பிய நெருப்பினிடையிலே, உரு உயிர்க்கும் - உருவம்கொண்டு வெளிப்

பட்ட, மா மயில் - சிறந்த மயில்போன்ற, திரௌபதிஉம்—, வண்ணம் மகள் ஆகி - மகளிர்க்கு அலங்காரஞ்செய்யும் பணிப்பெண் வடிவுகொண்டு, தேன் மருவு தார் முடி விராடன் இரு தோள் சேர் - தேன் பொருந்திய மாலைசூடிய முடியையுடைய விராடனுடைய இரண்டுதோளையுஞ் சேர்ந்த, கோமகளை - இராணியை, நாடி - அடையவிரும்பி, அவள் கோயிலிடை அந்தஇராணியின் அரண்மனையிலே, புக்காள் - புகுந்தாள்; (எ - று.)—விராடன் தேவியின் பெயர் - சுதேஷ்ணை யென்பது.

இதுமுதற் பத்துக்கவிகள் - பெரும்பாலும் முதல்மூன்றுசீர்கள் விளங்காய்ச்சீர்களும் ஈற்றுச்சீரொன்று மாச்சீருமாகிவந்த அளவடிநான்குகொண்ட கலிவிருத்தங்கள். (உக)

30.—வண்ணமகள் வந்திருத்தலை வாயில்காவலர் தெரிவிக்க, விராடன்மனைவி உள்ளே யழைத்தமாறு கூறுதல்.

மதுமலரின்வாழ்திருவும்வந்துதொழுவுரியா
ளெதுபடினளாகியொருநுண்ணிடைநடந்தாள்
பதுமவிழியாயெனலும்வாயிலவர்பால்போன்
மதுரமொழியாளழைமின்வாணுதலெனன்றாள்.

(இ - ள்.) வாயிலவர் - வாயிலிலேயிருந்து பாதுகாவல் புரிபவர், (சுதேஷ்ணையைக்கிட்டி அவளைநோக்கி),— 'பதுமம் விழியாய் - தாமரைமலர் போன்ற கண்களையுடையவளே! மது மலரின் வாழ் திருவும் வந்து தொழ உரியாள் - தேனைக்கொண்ட தாமரைமலரில் வாழ்பவளாகிய இலக்குமியும் வந்துதொழுதற்குரிய கட்டழகுடையவளான, ஒரு நுண் இடை - நுண்ணிய இடையையுடையாளொருத்தி, எதுபடினள் ஆகி - சாதாரண மானுடப்பெண் போன்று, நடந்தாள் - வந்துள்ளாள்,' எனலும் - என்று தெரிவித்தவுடனே,— பால்போல் மதுரம் மொழியாள் - பால்போல்இனிய பேசசையுடையவளான அந்த விராடன் மனைவி, (அங்ஙனம் சொன்ன வாயில்காவலரை நோக்கி),— 'வாள்நுதலை - ஒளியுள்ள நெற்றியையுடைய வளான அந்தப் பெண்ணை, அழைமின் - (உள்ளே) அழைத்துவாருங்கள்,' என்றாள் - என்று கூறினாள்; (எ - று.)

வந்தவளின் கட்டழகைக் காணும்போது பெருஞ்சிறப்பினளாயிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றதாயினும், சாதாரணமான வறுமையுள்ள பணிப்பெண்கோலத்தைப் பூண்டுள்ளா ளென்பார், 'மதுமலரின்வாழ்திருவும் வந்து தொழுரியாள் எதுபடினளாகி நடந்தாள்' என்றார். நுண்ணிடை - பண்புத்தொகை யன்மொழி. வாணுதல்-அடையடுத்த சினையாகுபெயர். (உ0)

31.—அரசன்மனைவி வந்தவளையுபசரித்துட்புகுவித்தல்.

வந்தவளிருந்தவண்மருங்கணையும்வேலை
யந்தணுபசாரமுடனருகுறவிருத்திச்
சந்தொடைகில்பூவிலைகடகவுடன்வழங்கி
யெந்தைகருணாமின்யாமுணர்வெனன்றாள்.

(இ - ள்.) வந்தவள் - (வண்ணமகளின் வடிவுகொண்டு) வந்தவளான அவள், இருந்தவள் மருங்கு - அரண்மனையிலேயிருந்த அரசமனைவியின் பக்கத்திலே, அணையும் வேலை - வந்துசேர்ந்தபோது, (அரசன்தேவி),—அந்தண் உபசாரமுடன் - அழகிய குளிர்ந்த உபசாரத்துடனே, அருகுஉற இருத்தி - (தன்) சமீபத்திலே தகுதியிருக்குமாறு இருப்பிடந்தந்து,—சந்தொடு - சந்தனமும், அகில் - அகில்தூபமும், பூ - புஷ்பமும், இலைகள் - வெற்றிலைகளும், தகவுடன் - சிறப்பாக, வழங்கி - தந்து, '(நீ), எந்த நகரீர் - எந்தநகரத்தீர்? யாம் உணர உரைமின் - நாங்கள் அறியும்படி சொல்லுங்கள்', என்றாள் - என்று வினவினாள்; (எ - று.)

எளியவள்போன்று வந்தவளையும் விராடன்மனைவி உபசரித்தனளென்றமையால், அவளது தருக்கின்மைமுதலிய நற்பண்புகள் வெளியாம். (உக)

32.—முன்றுகவிகள் - ஒருதொடர்: வந்தவள் தன்னையின்னாளென்று தெரிவித்து, தான் வந்த நோக்கத்தையும் தெரிவித்தல்.

தான்விரதமாயைபுரிசகுனிபொருசூதாற்
கான்விரதமாகவுறைகாவலர்கள்கோயின்
மான்விரதநோக்கியர்மருங்குறவிருந்தேன்
யான்விரதசாரிணியெனும்பெயரினாளே.

(இ - ள்.) தான் - சுயமாக, விரதம் மாயை புரி - விரஸமான [திருப்தி விளக்காது வெறுப்பைவிளக்கிற] வஞ்சனையைச் செய்கின்ற, சகுனி - சகுனியென்பான், பொரு - ஆடின, சூதால் - சூதாட்டத்தால், கான் விரதம் ஆக உறை - காட்டில்வசித்தலே விரதமாகக் கொண்டு வாழ்ந்த, காவலர்கள் - அரசர்களாகிய பாண்டவர்களின், கோயில் - அரண்மனையிலே, மான் விரதம் நோக்கியர் - மான்கள் (தோற்று) ஒழிவதற்குக்காரணமான கண்ணழகையுடைய (அப்பாண்டவரின்) இராணிமாரின், மருங்கு - சமீபத்திலே, உற - பொருந்த, இருந்தேன்—: யான் —,—விரதசாரிணி எனும் பெயரினாள் - விரதசாரிணியென்ற பேரையுடையேன்: (எ - று.)—விரதசாரணியென்று பிரதிபேதம்.

இந்தச்செய்யுளில் திரிபு என்னும் சொல்லணி காண்க. விரதம் என்பது முதலடியில் விரஸமென்ற வடசொல்லின் திரிபும், இரண்டாமடியில் வ்ரதமென்ற வடசொல்லின் திரிபும் ஆம்: மூன்றுமடியில் விரதம் என்பது - ஒழிந்திடுகை யென்ற பொருளுள்ள வடசொல். யான் விரதசாரிணி யெனும் பெயரினாள் - தன்மையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி. வ்ரதசாரிணீ என்ற வடசொல் - வ்ரதத்துடன் நடப்பவள் என்று பொருள் படும். (உஉ)

33. தூசுவனசுற்றுவனதூண்பனமுடிப்ப
தேசொடுவணப்புரனிதிகழும்வகையணிமேவன்
வாசவனெனாடொத்தமனுகுலவரசன்மனைவி
யேசறவுனக்கெலுமையபாகுவதெனெண்ணம்.

(இ - ள்.) பூசுவன - (உடம்பிற்) பூசுதற்கு உரிய கலவைச்சாந்து முதலியனவும், சுற்றுவன - சுற்றிக்கட்டவேண்டிய மாலை முதலியனவும், பூண்பன - பூணுதற்கு உரிய ஆடையணிகலன்களும், முடிப்ப - முடிக்கவேண்டிய கூந்தல்தார் முதலியனவும், தேசொடு வனப்பு நனி திகழும் வகை-ஒளியோடு அழகும் மிகவும்விளங்கும்படி, அணிமேன் - அலங்காரமுறச் செய்வேன்; வாசவனொடு ஒத்த மனுகுலம் அரசன் மனைவி - இந்திரனோடொத்தவனும் மனுகுலத்துத் தோன்றியவனுமான விராடராசனுடைய மனைவியே! உனக்கு—, எசுஅற - குற்றமில்லாமல், எலுவை ஆகுவது - தோழியாக அமைய வேண்டுமென்பது, என் எண்ணம் - என்கருத்தாம்; (எ - று.) (நந)

34. எந்தைமனையிற்பயிலிளம்பருவநாளிற்
கந்தருவர்காவல்புரிகற்புடையளானே
னிந்துநுதலாய்மனிதர்யார்முகமுநோக்கேன்
வந்தனெனின்மாளிகையின்வைகும்வகையென்றாள்.

(இ - ள்.) எந்தை மனையில் - என்தந்தையினுடைய வீட்டில், பயில் - வாழ்ந்த, இளம்பருவம் நாளில்-இளம்பருவத்தினத்தில்(தொடங்கி), கந்தருவர் காவல் புரி - கந்தருவர் (யாதொருதீங்குஞ் வராமற்) காவல்செய்கின்ற, கற்பு உடையள் ஆனேன் - கற்பையுடையவளானேன்: இந்து நுதலாய் - சந்திரன் போன்ற முகத்தையுடையவளே! மனிதர் யார் முகம்உம் நோக்கேன் - எந்த மனிதருடைய முகத்தையும் கண்ணெடுத்துப் பாரேன்: நின் மாளிகையின் வைகும் வகை - உன்வீட்டிலே தங்கிவாழும்படி, வந்தனென் - (இப்போது) வந்துள்ளேன், என்றாள் - என்று கூறினாள், (அந்த வண்ணமகள்); (எ - று.)

கீழ்ரண்டுகவிகளால், தான் இன்னாளென்பதையும், தனக்குத்தெரிந்த தொழிலையும், தான் அங்குவந்ததன் நோக்கத்தையும் தெரிவித்தவள், இந்தச் செய்யுளினால், தான் வலியோராற் பாதுகாக்கப்படும் கற்புடையளென்பதைக் கூறுகின்றாள். 'உனக்குஎலுவையாகுவதெனெண்ணம்' என்று கீழ்க்கவியிற் கூறியதனால், 'நின்மாளிகையின் வைகும்வகை வந்தனன்' என்று இங்குக்கூறியது-அனுவாதமென்க: நான் உன்மாளிகையில் வண்ணமகளாக வாழ்வேனென்றாலும், என்கற்பிற்கு இழுக்குமுண்டாக்க எவராலும் ஆகாதென்று கூறியவாறு. (நச)

35.—வண்ணமகள்கூறியதுகேட்டுச் சுதேஷ்ணை தன்னிடத்து வண்ணமகளாக இருக்குமாறு பணித்தல்.

வண்ணமகள்கூறியவைபகிழ்விலெனுங்கேட்டுத்
தண்ணெனவெரீஇயிளம்சுதேட்டிணைவிரும்பி
விண்ணவர்கள்பாலையரின்மேவுதியெனக்குக்
கண்ணிணையுநீயுனதுகாவலெனதுயிரும்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) தண்ணென வெரீஇயினள் - (வந்தவளைக்கண்டதும்) திடுக்கிட்டு அஞ்சினவளான, சுதேட்டிணை—,—வண்ணமகள்—, கூறியவை -

சொன்னவற்றை, மகிழ்வினொடு கேட்டு - மகிழ்ச்சியோடு செவியேற்று, விரும்பி-(அவளிடத்து) அன்புபாராட்டி, (அவளைநோக்கி), 'நீ, விண்ணவர் கள் பாவையரின் - தேவமாதர்போல், மேவுதி - இனிதுதங்கியிருப்பாய்: எனக்கு கண் இணை உம் நீ-நீ எனக்கு இரண்டுகண்களையும் போல்வாய்: எனது உயிர்உம் - என்பிராணனும், உனது காவல் - உன்காவற்கு (உட்பட்டது).

பேரழகினையாகிய திரௌபதியைக் கண்டதும் ஒருகால் அரசன் நம் மையுபேட்சித்து இவளை மணந்துகொண்டுவிடுவானே என்று சங்கைகொண் டானென்று முதனூலிற் கூறியிருப்பதற்கு ஏற்ப, 'நுண்ணென வெரீஇ யினள்' என்றது. இனி, 'கந்தருவர் காவல்புரிகற்புடையளானேன்' என்று கூறியதைக் கேட்கவே, நம்மிடத்து இவள்வசிக்கும்போது, இவள்கற்புக் குக் கீசகன் முதலியோர் தீங்கிழைக்க முயலாமலிருக்கவேணுமே என்று கருதித் நுண்ணென வெரீஇயினளென்றதெனவுமாம். கந்தருவர்காவல்புரி கற்புடையேனென்று கீழ்க்கூறியதனால், தெய்வமகளோ எனக் கருதி வெரீ இயினள் என்பாரு முளர். (நடு)

36.—வண்ணமகளாகிய திரௌபதி சுதேஷ்ணையினிடம் அன்னேட்ட வேண்டியவற்றைச் செய்துகொண்டிருத்தல்.

அன்னெயெனுமாறுநெறியானமுறைகூறி
மின்னனைய நுண்ணிடைவிராடபதிதேவிக்
கெந்நலமுநாடொறுமியற்றினளிருந்தாள்.

(இ - ள்.) அன்னை எனும் ஆறு - தாய்என்று கருதுமாறு, (மிக்க அன்போடு), நெறி ஆன முறை - நீதிக்குஏற்ற முறையுள்ள வார்த்தைகளை, கூறி - சொல்லி, 'என் அருகு இருத்தி - என்னுடைய சமீபத்தில்தானே இருப்பாய்,'என - என்று (அந்தச்சுதேஷ்ணை)கூற,—எரியின் வரு மின்உம்-அக்கினியினின்றுதோன்றிய மின்னல்போன்றவளான அந்தத்திரௌபதியும், மின் அனைய நுண்இடை விராடபதி தேவிக்கு-மின்னல்போன்ற நுண்ணிய இடையையுடைய விராடராசாவின் மனைவிக்கு, எ நலம் உம்-எப்படிப்பட்ட [மிகச்சிறந்த] அழகிய கோலத்தையும், நாடொறுஉம் - தினந்தோறும், இயற் றினள் - செய்தவளாய், இருந்தாள் - வசித்துவந்தாள்; (எ - று.)

திரௌபதியாகிய வண்ணமகள், சுதேட்டிஷ்ணைக்கு ஆடை அணிகலன் கூந்தல்முதலியவற்றை இனியவாகப்புனைந்துகொண்டு வசித்துவந்தனளென் பதாம். இயற்றினள் - முற்றெச்சம். (நசு)

37.—பாண்டவரீ மச்சநாட்டில் மறைந்துதங்கியிருந்தபோது அந்நாடு மிகவுஞ் செழித்திருத்தல்.

மைவருகடங்கண்மடமாதுமதிமாபோ
ரைவருமறைந்தனர்களாயுறையுநாளின்

மெய்வருவழாமொழிவிராடபதிதிருநா
டெய்வருபெருந்திருவொடோங்கியதையன்றே.

(இ - ள்.) மை வரு தடங் கண் மடம் மான் உம் - கருநிறம்பொருந்திய பெரியகண்களையும்மடப்பத்தையுமுடைய மான்போன்றபார்வையையுடைய திரௌபதியும், மதி மரபோர் ஐவர்உம் - சந்திரகுலத்தவரான பாண்டவ ரைவரும், மறைந்தனர்கள் ஆய்—, உறையும் - வசித்துவந்த, காளில் - அக் காலத்திலே,— மெய் வரு - உண்மையே வருகின்ற, வழா - (ஒருபோதும்) தவறுத, மொழி - பேச்சையுடைய, விராடபதி திருநாடு-விராடராசனுடைய சிறந்த மச்சநாடானது, உய்வு அரு - நீங்குதலில்லாத, பெருந் திருவொடு - மிக்கசெல்வத்தோடு, ஓங்கியது - மேன்மையுற்றிருந்தது; (எ-று.)

உத்தமோத்தமரான பாண்டவர் வசித்தலால், அந்நாடு எந்நாட்டினும் மேம்பட்டிருந்த தென்பதாம். மறைந்தனர்களாயுறைதல் - அஜ்ஞாதவாசஞ் செய்தல். அன்றே - ஈற்றசை. ஓங்கியதை என்பதில், ஐ - சாரியை. (உஎ)

38.—இதுவும் அது.

குருக்களவனூரினிடைகுருநிலமெனடொப்புற்
றிருக்கும்வழிமாமழையுமெவ்விளவும்விஞ்சித்
தருக்கினுடன்யானைமுதறூணைகளும்விஞ்சிச்
செருக்குமுடன்விஞ்சியதுசெப்பவரிதம்மா.

(இ - ள்.) குருக்கள் - குருவம்சத்தவரான பாண்டவர்கள், அவன் னூரினிடை-அந்தவிராடனுடைய நகரத்திலே, குருநிலமெனடு ஒப்புஉற்று-குரு நிலத்தில் வசிப்பதுபோன்று [தமக்குஉரியஊரில் வாழ்வதுபோன்று], இருக் கும் வழி-(இனிது)வசிக்கும்போது,—மா மழைஉம்-மிக்க மழையும்,எ விளவு உம் - எப்படிப்பட்ட [பலவகையான] விளைவும், விஞ்சி - மிகுந்து,— யானை முதல் தானைகள்உம் தருக்கினுடன் விஞ்சி - (நாட்டின்செழிப்பினல் நன்கு போற்றப்படுவதனல்) யானைமுதலிய சேனைகளும் தருக்கு மிக்கு, (ஊர்முழு வதும்), செருக்குஉம் - வளமும், உடன் விஞ்சியது - ஒருசேர [எங்கும்] மிக் கிருந்தது: (அதனல் அந்தஊரின்தன்மை), செப்ப அரிது - (இன்னபடி யிருந்ததென்று) சொல்லுதற்கு முடியாது; (எ - று.)

அம்மா - வியப்பிடைச் சொல்: பாண்டவர்கள் அஜ்ஞாதவாசஞ் செய் வதனல், அவ்வூர் வாய்கொண்டு சொல்ல முடியாதபடி அவ்வளவு செழிப்பு விஞ்சியது குறித்து வியந்தவாறு. (உஅ)

நாடுகாந்துறை சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது

மற்போர்ச்சருக்கம்.

மற்போரைப்பற்றிய சருக்கமென்று விரியும். வேற்றுநாட்டினின்று வந்து 'மற்போரில் என்னினும் மிக்கார் இல்லை' என்று தருக்கிய மகாமல்லனுடன் வீமன் மற்போர்புரிந்து வென்றதைக் கூறுவது, இந்தச்சருக்கம்.

1.—மல்லனெருவன் மற்போரில் ஒப்பற்றவன் என்று சொல்லிக்கொண்டு அந்தவிராடநகரிற்கு வருதல்.

அல்லினுக் கிந்து வென்ன வாங்கவ ருறையு நாளில்
வில்லினுக் கிராம னென்ன வேலினுக் கிளையோ னென்னச்
சொல்லினுக் குததி தோய்கைத் தொன்முனி யென்ன வென்போர்
மல்லினுக் கொருவன் யானே வாசவ னென்று வந்தான்.

(இ - ள்.) அல்லினுக்கு - இராப்போதில், இந்து என்ன - சந்திரன் சிறப்புற்றிருப்பதுபோல, (மிக்கசிறப்புற), ஆங்கு - அந்தவிராடநகரிலே, அவர் - அந்தப்பாண்டவர், உறையும் - வசித்துவருகின்ற, நாளில் - காலத்தில்,—'வில்லினுக்கு இராமன் என்ன - வில்வித்தையில் ஸ்ரீராமன்போலவும், வேலினுக்கு - வேற்படையில், இளையோன் என்ன-(சிவபிராணுடைய) இளையகுமாரனாகிய முருகக்கடவுள்போலவும், சொல்லினுக்கு - தமிழ்மொழிக்கு, உததி தோய் கை - சமுத்திரம்படிந்த கைகளையுடைய, தொல் முனி என்ன - பழமையான அகத்தியமுனிவன்போலவும், வல் மல் போரினுக்கு - உடல் வலிமைகொண்டுசெய்யப்படுகிற மல்லயுத்தத்திற்கு, வாசவன் - வாசவனாக, யான்ற - யாதனை, ஒருவன் - ஒப்பற்றவன்,' என்று - என்று சொல்லிக்கொண்டு, (ஒருமல்லவீரன்), வந்தான் - (அந்தவிராடநகரில்) வந்துசேர்ந்தான்; (எ - று.)

சொல் - பாஷா என்றவடசொல்லின் மொழிபெயர்ப்பு. உததிதோய் கைத்தொன்முனி யென்று வருவதனால், சொல் - தமிழ்ச்சொல்லைக் காட்டிற்று. சூரபத்மாவென்ற அசுரன் கடலிற் புகுந்துகொண்டானாக, அப்போது அகத்தியமுனிவன் தேவர்களின் வேண்டுகோளினால் கடனீரைத் தன்கைச் சுளுகத்தி லடக்கி, ஆசமனஞ் செய்தா னென்ற வரலாறுபற்றி, 'உததி தோய்கைத் தொன்முனி' என்றது. முதனூலில், வந்தமல்லன்பெயர் ஜீமூத னென்று இருப்பதனாலும், மல்லேந்திரனென்று அன்னன் கூறப்படுவதனாலும், வாசவன் என்பதைப் பேராகக் கொள்ளாமல், 'மல்லினுக்கு வாசவன் யான் ஒருவனே'என்று கூட்டியுரைக்கப்பட்டது. பாண்டவர் வந்து நான்குமாதம் கழிந்ததும், விராடநகரத்தில் சங்கராவுத்ஸவம் வந்ததாக, அப்போது பலமல்லர்களும் ஆங்கு வந்தனர்: அங்ஙனம் வந்தவர்களுள் ஒருவன் என்னில் மிக்காரில்லையென்று தன்னைப் பாராட்டிக்கூறிக்கொண்டு வந்தா னென்ற விவரத்தை முதனூலா லறிக. அல்லினுக்கு இந்துஎன்ன என்பதற்கு - இரவில் வானத்துத் தோன்றும் பல சோதிகளுள் சந்திரன்

போல என்றுஉரைத்து, இத்தொடரையும் போர்மல்லினுக்கு ஒருவன்யானே என்பதனோடு கூட்டுவாரு முளர்.

இச்சருக்கத்திலுள்ள பதினொன்குகவிகளும் - பெரும்பாலும் முதற்சிரும் நான்காஞ்சிரும் விளச்சிர்களும், மற்றவை மாச்சிர்களுமாகிவந்த அறுசீர்ச்கழி நெடிலடி யாசிரியவிருத்தங்கள். (க)

2 —அந்த மல்லனது வருணனை.

அண்டமாமுகடோடொத்தசென்னியனவனிமுற்றுங்
கொண்டமாமேருவொத்தகுங்குமக்கடகத்தோளான்
சண்டமாருதத்தோடொத்தவலியினன்றந்தியெட்டின்
கண்டமார்முகத்தினீண்டகையெனத்திரண்டகாலான்.

(இ - ள்.) (அந்தமல்லன்),— அண்டம் மா முகடோடு ஒத்த - அண்டத்தின் பெரிய மேலிடத்தையொத்த [ஓங்கிய], சென்னியன் - தலையையுடையவன்: அவனி முற்றுஉம் - பூமிமுழுவதையும், கொண்ட - தாங்கிக்கொண்டுள்ள, மா மேரு ஒத்த - சிறந்த மேருமலைபோன்ற, குங்குமம் கடகம் தோளான் - குங்குமச்சேறுபூசிய கடகமென்ற தோள்வளையையணிந்த தோளையுடையவன்: சண்டமாருதத்தோடு ஒத்த - கொடுங்காற்றோடு ஒப்பிடத்தக்க, வலியினன் - பலத்தையுடையவன்: தந்தி எட்டின் - அவ்வட திக்கஜங்களின், கண்டம் ஆர் முகத்தின் - கழுத்தையொட்டியுள்ள முகத்தினின்று, நீண்ட - நீண்டுள்ள, கை என - துதிக்கைபோல, திரண்ட - திரண்டுள்ள, காலான் - கால்களையுடையவன்; (எ - று.)

மேருமலை பூமியினிடையேயிருந்து அதனைத் தாங்குவ தென்ற நூற்கொள்கைபற்றி, 'அவனிமுற்றுங கொண்ட மாமேரு' எனப்பட்டது. தந்தி-தந்தத்தையுடையது என யானைக்குக் காரணவிடுகுறி. தந்தி எட்டு - கிழக்கு முதலிய திக்குக்களிலிருக்கும் ஐராவதம் புண்டரீகம் வாமனம் குமுதம் அஞ்ஜநம் புஷ்பதந்தம் ஸார்வபௌமம் ஸுப்ரதீகம் என்ற தெய்வயானைகள். தந்திக்கையை யுவமமாகக் கூறியதனால், இங்கு 'கால்' என்றது - அரைக்குக் கீழ்ப்பட்டுள்ள துடைமுதற்கொண்டுள்ள பகுதியைக் காட்டும்.

3.—அந்தமல்லன் பலமல்லர் தன்னைச் சூழ்ந்துவர,
விராடனவைக்களத்தை யடைதல்.

ஆயிரமல்லர்தன்னையணிநிழலென்னச்சூழப்
பாயிரும்புரவித்திண்டேர்மிசைவரும்பரிதிபோல
மாயிருஞாலந்தன்னின்மற்றிவற்கெதிரின்றென்னச்
சேயிருந்தடக்கைவேந்தன்றிருந்தவையதனைச்சேர்ந்தான்.

(இ - ள்.) ஆயிரம் மல்லர் - பலமல்லர்கள், தன்னை—, அணி நிழல் என்ன - அழகிய நிழலைப்போல, சூழ - சூழ்ந்துவர,—பாய் இரு புரவி திண் தேர்மிசை வரும் பரிதி போல - பாய்ந்துசெல்லும் இயல்புள்ள பெரிய குதிரைகள் பூட்டிய வலிய தேர்மீதுவரும் சூரியன்போல், (பாயிரும் புரவித்

திண் தேர்மிசை வந்து),—மா இரு ஞாலந்தன்னில் இவற்கு எதிர் இன்று என்ன - மிகப்பெரியபூமியிலே இந்தமல்லற்கு ஒப்பானவர் இல்லையென்று (கண்டவர்) சொல்லுமாறு, சேய் இருந் தட கை வேந்தன் - செவ்விய பெரிய நீண்ட கைகளையுடைய விராடராசனது, திருந்து அவை அதனை - நிருத்த முற்ற சபையை, சேர்ந்தான் - வந்தடைந்தான்; (எ - று.)

சூரியனுக்கு எங்ஙனம் ஒப்பான கிரகம் வானத்திலில்லையோ அவ்வாறே இந்தமல்லனுக்கு ஒப்பானவர் இப்பூவுலகிலில்லை யென்று சொல்லுமாறு மிக்கஆடம்பரஞ்செய்துகொண்டு நிழல்போல ஆயிரமல்லர் தன்னைச் சூழ்ந்து நிற்க, விராடனுடைய அவைக்களத்தை அந்தமல்லன் வந்துசேர்ந்தானென்க. கற்றோர்பலர் சேர்ந்திருத்தலால், விராடனுடைய சபை, திருந்தவையெனப் பட்டது. வந்தமல்லன் தேர்மீதூர்ந்துவந்தா னென்று மேல் ஏழாம்பாட்டிற் பெறப்படுவதனால், அவனுக்குத திண்தேர்மிசை வரும் பரிதியை உவமை கூறினார். (ஈ)

4.—வந்தவன் 'மற்போருகந்து என்னைப்போன்றவரில்லை' என்ன, விராடன் அவனுக்குத்தீ சிறப்புரீசெய்து தன்னிடமுள்ள மல்லரை நோக்கியது.

மன்னவனவணங்கின்றுவலியுடைமல்லின்போருக்
கென்னலதில்லையிந்தவெழுகடல்வட்டத்தென்றூன்
கொன்னவில்வேலினனுங்கொடுப்பனகொடுத்துமுன்னந்
தன்னுழையவைகுமல்லர்தங்களைநோக்கினானே.

(இ - ள்.) (வந்த மல்லவீரன்), மன்னவனை - விராடராசனை, வணங்கி நின்று—, 'வலி உடை - தேகபலத்தைக்கொண்டுசெய்கின்ற, மல்லின் போருக்கு - மற்போரிலே, (மிக்கவர்), இந்த எழு கடல் வட்டத்து - எழு கடல்களாற் சூழப்பட்ட இந்தப் பூமண்டலத்தில், என் அலது - என்னையல்லாமல், இல்லை - (வேறொருவரும்) இல்லை,' என்றூன் - என்று (தன்திறமையைத்) தெரிவித்தான்; கொல் நவில் வேலினனும் - கொல்லுந்தற்றொழிலிற் பயின்ற வேற்படையையுடைய விராடராசனும், கொடுப்பன -(அவனுக்குக் கொடுக்கத்தக்க) சிறப்புக்களை, கொடுத்து—, முன்னம் - (அந்த மல்லவீரன் வருதற்கு) முன்னமே, தன்னுழை வைகும - தன்னிடத்துத் தங்கியுள்ள, மல்லர் தங்களை - மல்லர்களை, நோக்கினான்—; (எ - று.)

தன்னுழைவைகும் மல்லர்களை நோக்கியது - 'என்னினும்மிக்க மல்லர் இந்தப்பூமண்டலத்தி லில்லை' என்று கூறுவதனால், இவனுடன் மற்போர் செய்து வெல்லவேண்டு மென்பதைக் குறிப்பிக்க வாகும். (உ)

5.—மற்றொழிலில் வல்லவரீரநேகரீ அந்தமல்லனுடன்தனித்தனிபொருதல்.

அந்தமற்றொழிலின்மிக்கோரநேகர்நீடசனியொப்பார்
வந்தமற்றலைவன்றன்னைவருதிரீயெம்மொடென்று
மூந்தமற்கலைநூல்சொன்னமுறைமையினரசன்காணச்
சந்தமற்சமரஞ்செய்தார்தனித்தனியொருவராக.

(இ - ள்.) அந்த மல் தொழிலில் - (வந்த மல்லவீரன் வல்லமை பெற்று ள்ள) அந்த மற்போர்த் தொழிலிலே, மிக்கோர் - மிகவல்லவரான, ஆசு கர்—, நீடு அசனி ஒப்பார்-பேரிடியை யொப்பவராய் (க்கர்ச்சித்துக்கொண்டு), வந்த—, மல் தலைவன் தன்னை - மல்லர்தலைவனை, 'எம்மொடு - எம்முடனே, நீ—, வருதி-(மற்போர்செய்ய)வருவாய்,' என்று-என்று அறைகூவி,—அரசன் காண - விராடமன்னவன் கண்டுகொண்டிருக்க, மூந்த - விரைவாக, மல் கலை நூல் சொன்ன முறைமையின் - மற்போர்த்தொழிலைப்பற்றிய சாஸ் திரஞ் சொன்ன முறைமையினால், சந்தம் மல் சமரம் - அழகிய மற்போரை, தனித் தனி ஒருவர் ஆக - தனித்தனியே ஒவ்வொருவராக, செய்தார்—.

கலை - சாஸ்த்ரம். போர்க்கு வரும்போது பெருமுழக்கஞ் செய்து கொண்டு வருவதனால், அசனியை யொப்பார் என்றது. (ரு)

6.—இதுவும் அடுத்த கவியும் - தாழிசம்: அரசனிடத்திருந்த மல்லர் வந்தமல்லனோடு தனித்தனிபோருது தோற்க, அரசன் வந்தவனை விசேஷமாகச் சம்மானித்தலைக் கூறும்.

தத்தியுந்தோளுந்தோளுந்தாக்கியுஞ்சென்னிகொண்டு
மொத்தியும்பற்பல்சாரிமுடுகியும்வயிரக்கையாற்
குத்தியுங்காலுங்காலுங்கோத்துமற்கூறுதோன்ற
வொத்தியும்பாறையென்னவுரனுடனுரங்கள்சேர்த்தும்.

(இ-ள்.) தத்தி உம்-தாவியும், தோள்உம் தோள்உம் தாக்கிஉம்-தோளு டன் தோள் பொருந்த மோதியும், சென்னி கொண்டு மொதுதிஉம் - தலை யைக்கொண்டு இடித்தும், பல் பல் சாரி முடுகிஉம் - பலபல சாரிகளால் விரைந்தும், வயிரம் கையால் குத்திஉம் - வயிரம்போலுறுதியான கைம்முஷ் டிகளாற் குத்தியும், கால்உம் கால்உம் கோத்துஉம் - காலுடன் கால் சேரப் பின்னியும், மல் கூறு தோன்ற - மற்போரின் கூறுபாடு புலப்பட, ஒத்திஉம்- சிறுதுபின்னிடைந்தும், பாறை என்ன உரனுடன் உரங்கள் சேர்த்தும் - பாறை ஒன்றோடொன்று சேர்க்கப்படுவதுபோல மார்போடு மார்பைச் சேர்த்தும்,—(எ - று.)—'ஆரமருடற்றி' என அடுத்த கவியோடு இயையும்.

'ஓரொருமல்லராக ஆரமருடற்றி' என மேல் வருவதனால், 'உரனுட னுரத்தைச் சேர்த்தும்' என்று பாடமிருப்பின் நலம். சாரி - வலப்புறமாகவும் இடப்புறமாகவும் சஞ்சரித்தல். ஒத்தியும் - ஒற்றியும் என்றலுமாம். (சு)

7. ஓரொருமல்லராகவொருதனிமல்லன்றன்னை
டாரமருடற்றிமல்லரினவருபழிந்தபின்னர்
வீரரில்வீரனெவன்றிவேல்விராடன்மெச்சித்
தேரிற்மேல்வந்தமல்லன்றனக்கெலாச்சிறப்புஞ்செய்தான்.

(இ - ன்.) ஒரு தனி மல்லன்தன்னோடு - ஒப்பற்ற தனித்த மல்லனை (வந்த அந்த) வீரனோடு, ஓர் ஒரு மல்லர் ஆக - ஒவ்வொரு மல்லவீரராக, ஆர்அமர் - அருமையான மற்போரை, உடற்றி - பொருது, (இங்ஙனம்),

மல்லர் அனைவர்உம் - எல்லாமல்லர்களும், அழிந்த பின்னர் - தோற்ற பிறகு,— வீரரில் வீரன் ஆன வென்றி வேல் விராடன் - வீரர்கட்குட் சிறந்த வீரனென்று மதிப்புப்பெற்ற வெற்றிபொருந்திய வேற்படையையுடைய விராடராசன், மெச்சி - (வந்த மல்லவீரனைப்) பாராட்டி, தேரின் மேல் வந்த மல்லன்தனக்கு - தேரின்மேல்வந்த (அந்த) மல்லனுக்கு, எலாம் சிறப்புஉம் - எல்லாச்சிறப்புக்களையும், செய்தான்—; (எ - று.)

வீரத்தின்சிறப்புப் பெருவீரனைவிராடனுக்குத் தெரியு மாதலால், வந்தமல்லனை மெசசி, பெருமல்லற்குச் செய்யவேண்டிய சிறப்புக்களை அந்த மல்லனுக்கு விராடமன்னன் செய்தா னென்க. (எ)

8.—மற்றைநாள் தருமபுத்திரற் மன்னனிடம் 'இந்தமல்லனைப் பலாயனன் வெல்லத்தக்கான்'என்ன, அரசன் அவனை யழைப்பித்தல்.

அன்றுபோய்மற்றைநாளினரசனேடறத்தின்மைந்தன்
வென்றமாமல்லன்றன்னைவெல்லுதற்குரியமல்ல
னின்றுநின்மடையர்தம்மிற்பலாயனனென்போன்றன்னை
யன்றிவேறில்லையென்றுனரசனுமழைமினென்றான்.

(இ - ள்.) அன்று போய்—, மற்றைநாளின் - மற்றைநாளிலே,—அரசனேடு-விராடராசனுடனே, அறத்தின்மைந்தன் - தருமபுத்திரன், 'வென்ற-(தேற்று) வெற்றிபெற்ற, மா மல்லன்தன்னை - சிறந்த மல்லவீரனை, வெல்லுதற்கு உரிய - ஜயிப்பதற்கு ஏற்ற, மல்லன் - மற்போர்செய்பவன், இன்று - இப்போது, நின் மடையர்தம்மில் - உன்னுடைய சமையற்காரர்க்குள், பலாயனன் என்போன்தன்னை அன்றி - பலாயனனென்பவனை யல்லாமல், வேறு - வேறொருவரை, இல்லை—,'என்றான்—; அரசன்உம்-விராடராசனும், 'அழைமின் - (அந்தப்பலாயனனை)அழைத்துவாருங்கள்,' என்றான் - என்று கூறினான்; (எ - று.)

பலமல்லர்களும் அந்தமஹாமல்லனைக் கண்டு அஞ்சினர்களாகச் சிலர் எதிர்த்துத் தோற்றார்கள்: அந்தமஹாமல்லன் அப்போது விராடனைப் பார்த்து 'நான் மல்லராஜன்: என்னோடு பொரத்தக்கார் எவருமில்லை: சிங்கம் புலி முதலியவற்றுடனும் பொரவல்லேன்' என்று கர்சசித்தான். அப்போது மற்றைமல்லர்களெல்லாம் அஞ்சி நடுங்கி நிற்பதுகண்டு விராடராசன் 'இந்தமல்லனோடு பொரவல்லார் யார்?' என்றுவினவ, அச்சத்தினால் எல்லா மல்லரும் வாய்திறவாது இருந்தனர். விராடராசன் வெகுண்டு 'நான் இந்தமல்லர்களுக்கு விட்டிருக்கும் கிராமங்களையும் சம்பளங்களையும் பறித்துக் கொண்டு விடுகிறேன்' என்றான்: அப்போது அருகேயிருந்த கங்கனென்ற யுதிஷ்டிரன் 'யுதிஷ்டிரனிடத்துக் கண்ட ஒருமல்ல னுண்டு: அவன் நமது அரண்மனையில் மடைப்பள்ளிவேலையி லிருக்கிறான்: அவன் இவனோடு பொரவல்லான்' என்றான்: என்னவும், விராடன் 'இந்தமல்லனோடு பொர அவனை விரைவாக அழைமின்' என்றான் என்று முதனூலி லுள்ளது. (அ)

9.—பலாயனனென்று மறுபேருள்ள வீமன் மற்போர்க்குச்சித்தனாக அங்கு வருதல்.

பைம்பொன்மாமேருவெற்பின்பராசையைச்சோதிநேமி
விம்பமாய்வளர்ந்ததென்னவிளங்குபொற்கச்சைசேர்த்திக்
கும்பமாமென்னத்தக்கதண்டொடுதாணிவீழா
வுப்பராமுதமுண்டவுரவிஞன்விரைவின்வந்தான்.

(இ ள்.) தாணி வீழா உம்பர் ஆர் அமுதம் உண்ட உரவிஞன் - பூமியிற் கிடைக்காத தேவர்களின் அரிய அமிருதத்தை யுண்ட வலிமைபடைத்தவனென வீமன்,—பைம் பொன் மா மேரு வெற்பின் பரு அரையை-பசும் பொன்மயமான பெரியமேருமலையின் பருத்த அரையை, சோதி நேமி - ஒளிமயமான சக்கரம், விம்பம்ஆய் வளர்ந்தது என்ன-வட்டமாக வளர்ந்துகொண்டுள்ளது என்னுமாறு, விளங்கு - விளங்குகின்ற, பொன் கச்சை - பொற்கச்சையை, சேர்த்தி-(இடையிற்) கட்டிக்கொண்டு,— கும்பம் ஆம் என்ன தக்க-கும்பமோ என்று கருதும்படியுள்ள, தண்டொடு - தண்டாயுதத்துடனே, விரைவின் வந்தான்—; (எ - று.)

வீமனது இடையிற் பொற்கச்சை விளங்குவது, மேருவின்பராசையில் நேமி வட்டமாச் சூழ்ந்தது போலும். சோதிநேமி - சூரியனென்பாரு முளர். தாணி வீழா - கங்கைநீர்ப் பெருக்கில் வீழ்ந்து, (பாதளஞ்சென்று), உம்பராரமுதம்உண்ட என்றுகூறலுமாம்: இச்சரித்திரம் வாரணவதச் சருக்கத்திற் கூறப்பட்டுள்ளது. கச்சை - அரையாடை யவிழ்ந்திடாதபடி கெட்டியாக இருப்பதற்கு இடையிற் கட்டுவது. பருமை + அரை = பராரை: பண்புப் பெயர் ஈறுபோய், வருமொழி முதல்நீண்டு நிலைமொழியீறுகெட்டது: "ஈறுபோதல் ..இனையவும் பண்பிற்கியல்பே" [நன். பத. 9.] (கூ)

10.—இரண்டுகவிகள் - பலாயனனும் முன்னரிவெற்றிபெற்றிருந்த மல்லவீரனும் போருதலைத் தெரிவித்தும்.

கதையுடைக்காளைவந்துகடுந்திறன்மல்லன்றன்னே
டுதையமோடத்தமென்னுமோங்கலொ ரிரண்டுசேர்ந்து
துதைதவுறப்பொருவதேபோற்றோள்புடைத்துருமினார்த்துப்
பதயுகத்தாலுந்தத்தம்பாணிகளாலுஞ்சேர்ந்தார்.

(இ - ள்.) கதை உடை - கதாயுதத்தை யுடைய, காளை - இளவீரனை பலாயணன், கடுந்திறல் மல்லன்தன்னோடு-கொடிய திறமையையுடைய மல்லனோடு, வந்து-வந்துசேர்ந்ததனால், (அவ்விருவரும்),உதையமோடு அத்தம் என்னும் ஓங்கல் ஓர் இரண்டு சேர்ந்து-உதையமலையோடு அத்தமலை யெனப்படும் ஓரிரண்டுமலையும் ஒன்றுசேர்ந்து, துதைவு உற - நெருங்குதல்பொருந்த, பொருவதுவே போல் - போர்செய்வதுபோல, தோள் புடைத்து - (தம்) தோள்களைத் தட்டியும், உருமின் ஆர்த்து - இடிபோலக் கர்ச்சித்தும், பதம்

யுகத்தால்உம் - இரண்டுபாதங்களாலும், தததம் பாணிகளால் உம் - தங்கள் தங்களுடைய கைகளாலும், சேர்ந்தார் - நெருங்கிப் பொருதார்கள்.

பொருவதே போற் சேர்ந்தார் என இயையும். (கo)

11. உதைத்தனர்வீசிவன்போடுரங்கொடுகரங்களெற்றிப்
புதைத்தனர்விரல்கண்மெய்யிற்புருவமுமூக்கும்வாயிற்
சிதைத்தனர்புயங்களெண்ணுஞ்சிலம்புகடாக்கத்தாக்கப்
பதைத்தனரோடியோடிப்பற்றினர்மீளமீள.

(இ - ள்.) (ஒருவரை யொருவர்),—வன்போடு - வலிமையோடு, வீசி உதைத்தனர்—: உரம்கொடு - வலிமையோடு, கரங்கள் எற்றி - கைகளால் மோதி, விரல்கள் மெய்யில் புதைத்தனர் - விரலின்வடு உடம்பிலே புதையும் படி செய்தார்கள்; புருவம்உம் மூக்குஉம் - புருவங்களையும் மூக்குக்களையும், வாயில் - வாயோடு, சிதைத்தனர் - பழுதுபடச்செய்தனர்: புயங்கள் என்னும் சிலம்புகள் தாக்க தாக்க - (மாற்றாரதுடைய) தோள்களென்கிற மலைகள் மோதுவதனால், பதைத்தனர் - (வலிதாங்க மாட்டாமல்) துடித்து, ஓடிஓடி-ஓடி யோடிப்போய், மீளமீள பற்றினர் - மீண்டும் மீண்டும் (ஒருவரை யொருவர் மற்போர் புரியுமாறு) பற்றிக் கொண்டார்கள்; (எ - று.)

புருவமும் மூக்கும் வாயிற் சிதைத்தனர் என்பதற்கு - புருவத்தையும் மூக்கையும் வாய்ப்புறத்திலாகும்படி யழித்தன ரெனினுமாம். (கக)

12.—வீமன் வந்த மல்லனை யழித்தல்.

கற்றனகாயமெல்லாங்கண்டுகண்களிக்கக்காட்டி
யுற்றனர்நின்றபோதிலூரனைகயின்புதல்வனூரு
மற்றவன்மருங்குபற்றவன்கரமிடறுபற்றச்
செற்றனனிடிம்பன்றன்னைச்செற்றவெங்கொற்றத்தோளான்.

(இ - ள்.) கற்றன - (தாம்) அறிந்துள்ளனவான, காயம் எல்லாம் - இலக்குக்களை யெல்லாம், கண் கண்டு களிக்க காட்டி - (பார்ப்பவர்) கண்கள் கண்டு களிக்குமாறு தோற்றுவித்து, உற்றனர் - நெருங்கினவராய், நின்ற போதில் - (அவ்விரண்டுமல்லரும்) நின்ற சமயத்தில்,—இடிம்பன்தன்னை செற்ற வெம் கொற்றம் தோளான் - இடிம்பாசுரனை யழித்த கொடிய வெற்றி தங்கிய தோள்களையுடையவனான, ஊதையின் புதல்வன் - காற்றின் குமாரனாகிய வீமசேனன், ஊரு - (தன்னுடைய) தொடை, மற்றவன் மருங்கு பற்ற-மற்றொருவனான மல்லனுடைய இடுப்பைச் சுற்றியவண்ணம் பற்றிநிற்க, வல் கரம் - வலிய கையானது, மிடறு பற்ற - (அவன்) கழுத்தைப் பற்றிநிற்க, செற்றனன் - (வந்த) மல்லனை யழித்திட்டான்; (எ - று.)

காயம் - ஆங்கிலத்தில் 'Feat' எனப்படும். (கஉ)

13.—வந்த மல்லனை வென்றுநின்ற வீமனை மன்னன் பாராட்டுதல்.

தோற்றிசைவந்தமல்லன்சிதைந்தபேருறப்பிறேடும்
பார்த்திசைகிடக்கநின்றபரிணப்புயங்கொட்டியார்த்தான்

சீர்மிகுமல்லன்றன்னைச்சிறப்புறத்தழுவியெல்லாப்
போர்முகங்களுக்குநின்னைப்போல்பவரில்லையென்றான்.

(இ - ள்.) தேர் மிசை வந்த—, மல்லன்—, சிதைந்த - அழித்திட்ட, பேர் உறுப்பிலேடுஉம் (தன்னுடைய) பெரிய உறுப்புக்களுடனே, பார்மிசை கிடக்க - பூமியின்மீது விழுந்துகிடக்க,—நின்று - (வெற்றிபெற்று) நின்று கொண்டு, பிணை புயம் கொட்டி ஆர்த்தான் - (தன்னுடைய) பருத்த தோள் களைக்கொட்டி யாரவாரஞ்செய்பவனை, சீர் மிகு மல்லன் தன்னை - சிறப் புப்பொருந்திய மல்லனை பலாயணனென்றுபேர்பூண்ட வீமசேனனை, சிற ப்புஉற - சிறப்புப் பொருந்த, தழுவி-கட்டிக் கொண்டு, 'எல்லாம் போர்முகங் களுக்குஉம் - முனைமுகங்களிலெல்லாம், நின்னை போல்பவர் - (உன்னை) ஒத்திருப்பவர், இல்லை—,' என்றான்-என்று (விராடமன்னவன்) பாராட்டிக் கூறினன்; (எ - று.)

தன்மல்லன் வெற்றி பெற்றது கண்ட மகிழ்ச்சியினால் தன்தேசத்துக்கே ஒருமேம்பாட்டை யுண்டாக்கிய அந்தமல்லனை மன்னன் தழுவினனென்க.

14.—விராடன் பலாயனனுக்கீதுப் பலவரிசைகளளித்து அவன்றிறமையைப் புகழ்ந்துகூறுதல்.

மன்னவர்க்களிக்கத்தக்கவரிசைகளனைத்துநல்கி
முன்னவனுகிவைகுமுனிமனங்களிக்குமாறு
தன்னருகணுகவைத்தித்தலத்தெதிரில்லையிந்த
வின்னமுதடுவோற்கென்றுனியற்றிறல்விராடன்றானே.

(இ - ள்.) இயல் திறல் விராடன் - பொருந்திய திறமையையுடைய விராடராசன்,— மன்னவர்க்கு - அரசர்களுக்கு, அளிக்கத்தக்க - கொடுத் தற்குஉரிய, வரிசைகள் அனைத்துஉம் - சிறப்புக்களெயெல்லாம், நல்கி-(அந்த வென்ற பலாயனனென்ற மல்லனுக்குக்) கொடுத்து,— முன்னவன் ஆகி வைகும் முனி மனம்களிக்கும் ஆறு-(தன்)முன்னிடத்தி லிருப்பவனுகித் தங்கி யுள்ள கங்கபட்டனென்ற முனிவனுடைய நெஞ்சம் மகிழ்ச்சியடையுமாறு, (அந்தப்பலாயனனை), தன் அருகு அணுகவைத்து - தன்னுடைய சமீபத் திலே சேரவைத்து, 'இந்த இன் அமுது அடுவோற்கு - இனிய சமையலைச் சமைக்கும் இந்தப் பலாயனனுக்கு, எதிர் - ஒப்பானவர், இ தலத்து - இந்தப் பூமியிலே, இல்லை—,' என்றான் - என்று (அந்தப் பலாயனன் திறமையைக் கொண்டாடிக்) கூறினன்; (எ - று.)—மன்னவர் களிக்கத்தக்க என்றும், அருகணைய வைத்துத் தலத்து என்றும் பாடம். (கசு)

மற்போர்ச்சருக்கம் முற்றிற்று.

ழுன்றவது

கீசகன்வதைச் சருக்கம்.

கீசகவதையைத் தெரிவிக்குஞ் சருக்க மென்பது பொருள். விரதசாரிணியென்று பேர்பூண்டு, விராடன்தேவியாகிய சுதேஷ்ணையினிடம் வண்ண மகளாயிருந்த பாண்டவரின்தேவியாகிய திரௌபதியினைக் கண்டு காமுற்ற கீசகன் இரவிலே வீமனற் பொருது கொல்லப்பட்ட செய்தியோடு, கீசக னுடலோடு திரௌபதியையும் ஈமவழலிலிடுமாறு உபகீசகர் பற்றிச்செல்லத் திரௌபதியின் புலம்பலால் அதனையுணர்ந்த வீமன் அவர்களையும கொன்ற செய்தி இதிற் கூறப்படும்.

1.—கீசகன் சுதேஷ்ணையைக் காண வருதல்.

அன்ன நாளினின் மன்னவன் றேவியா மன்ன மென்னடை யாரமு தன்னசொற், சொன்ன சாயற் சுதேட்டிணை தன்றிருத் தூண வர் நூற்றொரு நால்வரிற் றோற்றமு, மன்னு மாண்மையுந் தேசுஞ்சி றந்துளான் வருதி னிக்குத் தலைவன்முன் றோன்றிய, கன்னல் வேள னை யான்றன் றுணைவிணையைக் காண வந்தனன் காண்டகு மேனியான்.

(இ - ள்.) அன்ன நாளினில் - அந்தக் காலத்திலே, மன்னவன் தேவி ஆம் - விராடராசனுடைய மனைவியாகிய, அன்னம் மெல் நடை - அன்னப் பறவைபோன்ற மெல்லிய நடையையும், ஆர் அமுது அன்ன சொல்-நிறைத் தற்கு அரிய தேவாமிருதம் போன்ற[இனிய]சொல்லையும், சொன்னம் சாயல்-ஸ்வர்ணம்போன்ற உடலொளியையுமுடைய, சுதேட்டிணை தன்-சுதேட்டிணை யென்பாளுடைய, திருத்துணைவர் நூற்றொருநால்வரில்-சிறந்த உடன் பிறந் தவர்கள் நூற்றுநால்வருக் குள்ளே,—தோற்றம் உம்-(கம்பீரமாகக் காணப் படுங்) காட்சியும், மன்னும் ஆண்மை உம்-நிலையாகப்பொருந்திய பராக்கிரம மும், தேசுஉம்-ஒளியும், சிறந்துளான்-மிக்குள்ளவனும், வருதினுக்கு தலைவன்-(விராடனுடைய) சேனைக்குத் தலைவனும், முன் தோன்றிய கன்னல் வேள் அனையான் - (சிவபெருமானால் உடலெரித்து போவதற்கு) முன் வடிவத் தோடு காணப்பட்ட கரும்புவில்லேயேந்திய மன்மதனை யொத்தவனும், காண் தகு மேனியான் - காணத்தக்க [மிக அழகிய] உடம்பை யுடையவனுமான கீசகன், தன் துணைவிணை - தன்னுடன்பிறந்தவளான சுதேஷ்ணையை, காண - பார்ப்பதற்கு, வந்தனன்—; (எ - று.)—தேசு - புகழுமாம்.

ஸைதவமிசத்திற்சேர்ந்த கேகயனுக்கு மாளவியென்ற ஒருபாரியையும், அவள்தங்கை மற்றொருபாரியையுமாக இருந்தனர்: மூத்தவளான மாளவியி னிடத்துக் கீசகனும் உபகீசகர் நூற்றைவருமே தோன்றினர்: இவர்கள் காலேய ரென்று பிரசித்தரான அசுரரின் அமிசமானவர்: அவர்களிற் கீசகன் பாணனுடைய அமிசமானவன்: மாளவியின்தங்கையினிடத்துப் பிறந்தவள் சுதேஷ்ணையென்பவள். மத்ஸ்யதேசாதிபதியான விராடன்மனைவி சுரதை யென்பவள் இறந்துவிடவே, அந்த விராடன் இந்தச்சுதேஷ்ணையை மணந்த

னன்: மைத்துனன்மார்களாகிய கீசகர்கள் சிறுதாயின்பெண்ணை சுதேஷ்ணையோடு மச்சநாட்டையடைந்தனர்: கீசகன் விராடனிடம் சேனைபதியாயிருந்து பலநாடுகளையும் அம்மன்னவனுக்கு வென்றுதந்தானென்ற இவ்விவரத்தை முதனூலா லறிக. முதனூலுக்கு ஏற்ப, நாற்றொருகால்வரில் என்றவிடத்து நாற்றொடுமறுவரில் என்றாற்போன்று பாடமிருக்கலா மென்று தோன்றுகின்றது.

முதற் பத்தொன்பதுகவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களும், மற்றையவை விளச்சீர்களுமாகிவந்த கழிநெடிலடிநான்கு கொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (க)

2.—தமக்கையைவணங்கிக் கீசகன் மீள்கையில், விரதசாரிணியென்ற திரௌபதி பூக்கொய்துகொண்டு இவன்முன் முடுகுதல்.

தம்பியப்பெருந்தையலை நூபுரத் தாளின்வீழ்ந்து தகவுடன்மீட லு, மம்பரத்தவர்கற்பகக்காநிக ரந்தவந்தப்புரத்தகன்காவினில், வெம்படுகர்க்களிற்றைவர்தந்தேவியாம் விரதசாரிணி மென்மலர்கொய்தி ளங், கொம்பொடொத்திடைசோரப்பணைத்தபொற் கொங்கையாளி வன்முன்னர்க்குறுகிளுள்.

(இ - ள்.) தம்பி - சுதேஷ்ணையின் தம்பியான கீசகன், அ பெருந் தையலை - பெருமையுள்ள அந்தச்சுதேஷ்ணையை, நூபுரம் தாளில் வீழ்ந்து - நூபுரமணிந்த பாதங்களிலே வணங்கி, தகவுடன்-பெருமையோடு, மீடலும் - மீளாநிற்கையில்,— அம் பரத்தவர் கற்பகம் கா கிகர் அந்த அந்தப்புரத்து அகல் காவினில் - தேவலோகத்தவரின் கற்பகச்சோலையையொத்த அந்த அந்தப்புரத்தைச்சார்ந்த அகன்றுள்ள சோலையிலே, மெல் மலர் கொய்து - மெல்லிய மலர்களைப் பறித்துக்கொண்டு, வெம் டுகர் களிறு ஐவர்தம் தேவி ஆம் விரதசாரிணி - விரும்பத்தக்க முகப்புள்ளிகளையுடைய ஆண் யானை போன்றவ ான பஞ்சபாண்டவரின் மனைவியாகிய விரதசாரிணியென்கிற, இளங்கொம்பொடு ஒத்து இடை சோர பணைத்த - இளங்கொம்புபோன்று இடுப்பானது ஒல்கிநிற்குமாறு பருத்துள்ள, பொன் கொங்கையாள் - அழகிய ஸ்தனங்களையுடையவள், இவன் முன்னர் - இந்தக்கீசகனுடைய முன்னிலையிலே, குறுகிளுள் - நெருங்கினாள்; (எ - று.)

தமக்கையைப்பணிந்துவிட்டுக் கீசகன் மீள்கையில், அந்தப்புரத்துச் சோலையில் பூப்பறித்துக்கொண்டுமீண்டவிரதசாரிணியென்ற திரௌபதிக்கு அவன் முன்னர்வருமாறு நேர்ந்ததென்க. அந்தப்புரம் - ராஜஸ்திரீகள் வசிக்குமிடம். (உ)

3.—கீசகன் திரௌபதியைக் கண்டதும் அவள்மீது மோகங்கொள்ளுதல்.

இயற்கையானகவினுடைப்பாவையை யிறைவன்றேவிக்கினையவ ன்கண்டனன், செயற்கையாதலன்கண்டிலன்யார்கொலித் தெரிவை யென்றுதன்சிந்தையிற்றேக்கினன், மயற்கையாலழிந்தாணம்புலன்

களும் வழக்கொழிந்துமதிமருண்டானிஃனக்,கயற்கையானக்கயற்றட ங்கண்ணினையைக் கண்டகாட்சியிற்காமுகனுகியே.

(இ - ள்.) இணை கயல் கையான் - இரட்டைக்கயல்மீன் இரேகையைக் கையிலே யுடையவனுகிய, இறைவன் தேவிக்கு இளையவன்-விராடராசனு டைய மனைவிக்குத் தம்பியாகிய கீசகன்,—இயற்கை ஆன கவின் உடை பாவனையை - இயற்கையழகையுடையவளான திரௌபதியை, கண்டனன்- கண்டான்: அ கயல் தடங்கண்ணினை - கயல்மீன்போன்ற விசாலமான கண் களே யுடையவளான அத்தவிரதசாரிணியை, கண்ட - (அங்ஙனம்) பார்த்த, காட்சியில்-காட்சிமாத்திரத்திலேயே, காமுகன் ஆகி—,செயற்கை ஆம்நலன்- (ஆடைஆபரணம் முதலியவற்றுல் தோன்றும்) செயற்கையான அழகை, கண்டிலன் - காணுதவனுகி, இ தெரிவை யார்கொல் என்று தன் சிந்தையின் நோக்கினுன் - 'இந்தமாது யாவளோ?' என்று தன்மனத்திலே நாடி,—மயற் கையால் - காமமோகத்தினுல், அழிந்தான் - மனமழிந்து, ஐம்புலன்கள்உம் வழக்கு ஒழிந்து - (ஐம்பொறிகளும்) ஐம்புலன்களின்மேற் செல்லுதல் நீங்கி, மதி மருண்டான் - புத்தியில் மயக்கங்கொண்டான்; (எ - று.)

மகாவீர னுனதால், உத்தமலட்சணமான இணையக்கயலிரேகை கீசகன் கையி லமைந்தது. (கூ)

4.—கீசகன் திரௌபதியின் கட்டழகைக் கண்டு ஐயுறுதல்.

இந்திரன்னகர்ப்பாவைகொலோமட லேந்துபங்கயத்தேவிகொ லோவியற், சந்தமாருந்தடவரைத்தையலோ காரணிக்குள்வருந்தனி த்தெய்வமோ, முந்தராவுறைபாதலந்தன்னில்வாழ் மோகினிக்குயி லோமுரல்கின்றிடு, முந்துநீரமங்கைகொலோவெழி லோவியத்தெ னியோவெனவுன்னினுன்.

(இ - ள்.) இந்திரன் நகர் பாவை கொல் ஓ - தேவலோகத்தில் வாழும் அமரமடந்தையோ? மடல் ஏந்து பங்கயம் தேவி கொல்ஓ-இதழ்கள் பொருந் திய தாமரைமலரில் வாழும் இலக்குமியோ? இயல் சந்தம் ஆரும் தட வரை தையல்ஓ - இயற்கையான அழகுபொருந்திய பெரியமலையின் புத்திரியான பார்வதியோ? காரணிக்குள் வரும் தனி தெய்வம்ஓ-பூமியிலேவந்து மானிடப் பிறவியில்தோன்றிய ஒப்பற்ற பெண்தெய்வமோ? முந்து அரா உறை பாதலந் தன்னில் வாழ்மோகினி குயில்ஓ-முற்பட்ட[சிறந்த]பாம்புகள்வசிக்கும் பாதாள லோகத்திலேவாழ்கின்ற மோகினித்தெய்வத்தினமிசமான பெண்ணே? முரல் கின்றிடு முந்து நீர் அரமங்கைகொல்ஓ-ஒலிசெய்தவண்ணம்பெருகுகின்ற நீரில் வாழும் அரமகளோ? எழில் ஒளி ஓவியம் ஓ-அழகிய ஒளியையுடைய சித்திரப் பதுமையோ?என-என்று(துணிவு பிறவாமல்),உன்னினுன்-(பலபடியாக அர் தத் திரௌபதியைக் குறித்து) எண்ணினுன், (அந்தக்கீசகன்); (எ - று.)

இலக்குமியைக்கூறியபின் 'வரைமகள்' என வந்ததனுல் பார்வதியோ என்று கூறப்பட்டது. கொலோஎன்று வந்தஇடங்களில் இரண்டில் ஒன்று அசையென்க. பாவை, குயில்என்பன- உவமவாகுபெயர். (ச)

5.—கீசகன் அவளை அருகிருந்தாரால் இன்னளென அறிந்து, அவள்காலில்விழுந்து காதலாற் பல கூறுதல்.

அருகுநின்றமகளிரைமற்றிவ ளார்கொலென்னவறியான்வினவி ணன், வரிநெடுங்கண்மகளிருமாதரார் வண்ணமாமகளென்றனர்மைய லா, லுருகுகின்றவக்காளையுநாணமுற் றொடுங்கிநின்றவுயர்தவப்பா ணைத, னிருபதங்களில்வீழ்ந்தெனதாவிநீ யென்றுமீளவுமெத்தினை கூறினன்.

(இ - ள்.) அறியான் -(அந்தத்திரௌபதியை இன்னளென்று) அறியா தவனாக கீசகன், மற்று-பின்பு, அருகுநின்ற - (அங்குச்) சமீபத்திலேயிருந்த, மகளிரை - மாதராரைநோக்கி, 'இவள் ஆர்கொல்—?' என்ன - என்று, வின விணன்-விசாரித்தான்; வரிநெடுங் கண் மகளிர்உம்-செவ்வரிபரந்த நெடியகண் களையுடையரான (விளைவப்பட்ட) மகளிர்களும், மாதரார் வண்ணமாமகள் என்றனர் - (இவள்) மாதரசியான சுதேஷ்ணைக்கு அலங்காரஞ்செய்யும் சிறந்தமகள் என்று தெரிவித்தனர்: மையலால் உருகுகின்ற அ காளையும் - காமமயக்கத்தால் மனமுருகுகின்ற அந்த இளவெருதுபோன்றவனை கீசக னும், நாணம் உற்று ஒடுங்கி நின்ற உயர் தவம் பாவைதன் - நாணமடைந்து (இவனால் என்னதீமை விளையுமோ என்ற அச்சத்தினால்) உடல்குன்றி நின்ற சிறந்த நல்வினையையுடைய அந்தத் திரௌபதியின், இரு பதங் களில் வீழ்ந்து - இரண்டு கால்களிலே (தன் சிரசுபடும்படி) விழுந்து கும் பிட்டு, 'நீ எனது ஆவி - நீ என்னுடைய உயிர்போல்வாய்,' என்று - என்றுசொல்லி,— மீளவும் - பின்னும், எத்தனை கூறினன் - எத்தனையோ வார்த்தைகளைச சொன்னான்; (எ - று.)

காமப்பித்துக்கொண்டு அந்தக்கீசகன் சொன்னவை அனுவதித்தற்கும் தகாதன என்ற காரணத்தால், அவற்றை விவரியாமல், 'எத்தனை கூறினன்' என்று கூறியொழிந்தார். என்று நின்றவகினியன கூறினன் என்றும் பாடம்.

6.—இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்: கீசகனைப் பழித்தும் மருட்டியும் திரௌபதி கூறியவற்றைத் தெரிவிக்கும்.

கூறுகின்றமொழிகளுக்குத்தரங் கொடாதுநின்றதெரிகொப்ப ரின்வாய்மறைந், தேறுகின்றபழிகளுப்பாவமு மிம்மைதானுமறமை யும்பார்த்திலை, மாறுகின்றிலைசொல்லத்தகாதபுன் மாற்றமின்னமு மன்னுயிர்யாவும்வந், தாறுகின்றகுடைநிழல்வேந்தனுக் கழிவுசெய்தி யறிவிலிபோலுநீ.

(இ - ள்.) கூறுகின்ற - (அந்தக்கீசகன்) சொல்லுகிற, மொழிகளுக்கு - வார்த்தைகட்கு, உத்தரம் கொடாது - மறுமொழி தராமல், நின்றது ஓர் கொம்பரின்வாய் மறைந்து - அருகேயிருந்த ஒருமரக்கிளையிலே மறைந்து கொண்டு, (திரௌபதி அந்தக்கீசகனை நோக்கிப் பின்வருமாறு கூறலானாள்):

'பழிகளும் பாவமும்—, ஏறுகின்ற-(உனக்கு)மிகுகின்றன: இம்மை தான் உம்-இவ்வுலகத்தில் விளைவதையும், மறுமை உம் - மறுபிறப்பில் விளையப்போவதையும், பார்த்திலை (நீ) ஆலோசித்தாயில்லை: சொல்ல தகாத புல் மாற்றம்-சொல்லுதற்குத் தகாத அற்பவார்த்தைகளை, இன்னமும்—, மாறுகின்றிலை-(சொல்லுவதினின்றும்) நீங்குகின்றாயில்லை: (நீ இவ்வாறுஇருந்தால்), மன் உயிர் யாஉம் வந்து ஆறுகின்ற குடை நிழல் வேந்தனுக்கு - (உலகத்தில்) நிலைபெற்ற பிராணிகளெல்லாம் வந்து இளைப்பாறுதற்கு இடமான வெண்கொற்றக்குடைநிழலையுடைய விராடனுக்கு, அழிவு - நாசத்தை, செய்தி - செய்கின்றவனுவாய்: நீ—, அறிவிலி போலும் - அறிவுகெட்டவன் போலக் காண்கின்றாய்; (எ - று.)

பிறனில்லாளை விரும்புவதனால் இம்மையிற் பழியும் மறுமையிற் பாவமும் விளையு மாதலால், 'இம்மைதானும் மறுமையும் பார்த்திலை' என்றாள். இவனுடைய அநியாயத்தால், அரசனுக்கே தீங்குவிளையக் கூடுமென்று அஞ்சினாள். ஏறுகின்ற - 'அன்' சாரியைபெறுத முற்று. (சு)

7.—மாரசாயகத்தாலுயிர்மாளினும் வசையிலாதமரபின்வந்தோர்பிறர், தாரமானவர்தம்முகம்பார்ப்பரோ தக்கவர்க்குத்தகவிலை யேகொலாம், சோரனைதலிற்சொற்றாயினித்தவிர் சுரேசனைவர்தங் காவலென்றாளிணை, வீரபோவென்னருகுறிலாவிபோம் விழித்திமைக்குமுன்னென்றுவிளம்பினாள்.

(இ - ள்.) மார(ன்) சாயகத்தால் - மன்மதபாணத்தினால், உயிர் மாளின் உம் - உயிர் போவதாயிருந்தாலும் [இறப்புநேர்வதானாலும்], வசை இலாத மரபின் வந்தோர் - குற்றமற்ற வம்சத்திற் பிறந்தவர், பிறர் தாரம் ஆனவர் தம் முகம் பார்ப்பர்ஓ - அயலாருடைய மனைவியானவளின் முகத்தைக் கண்ணெடுத்துப் பார்த்தலேனுஞ் செய்வரோ? தக்கவர்க்கு-யோக்கியர்கட்கு, தகவு - நற்குணங்கள், இவை கொல் ஏ-இவ்வாறு பிறர்மனையை விரும்புதல் முதலியனவோதாம்? சோரன் ஆதலின்-கள்ளத்தன முடையா யாதலால், சொற்றாய் - (நீ இவ்வாறுன வார்த்தைகளைச்) சொன்னாய்: இனி—, தவிர் - (இவ்வாறுனபேச்சை) ஒழிவாய்: என் தோள் இணை - என்னுடைய இரண்டு தோள்களும், சுரேசர் ஐவர்தம்-சிறந்ததேவர் ஐவர்களின், காவல்-பாது காவலிலுள்ளன: வீர-வீரனே! போ-அப்பாற்போ: என் அருகு உறில் - என்னருகே வந்தாலோ, விழித்து இமைக்கும் முன் - கண்ணை மூடித் திறக்குங் கால வளவைக்குள், ஆவி போம் - உன்னுயிர் ஒழிந்திடும், என்று—, விளம்பினாள் - சொன்னாள்; (எ - று.)—ஆம் - அசை.

விழித்திமைக்குமுன் போ என்று இயைத்தலும் ஒன்று. கந்தருவர் காவல்புரி கற்புடையள் என்று வந்ததற்கு ஏற்ப, சுரேசர் என்பதும் கந்தருவர் என்ற பொருளைத் தருமென்க. (எ)

8.—திரௌபதி கடிந்துகூறவும் கீசகன் காலில் வீழ்ந்துவேண்ட, அவள் சுதேஷ்ணையிடஞ் சேர்தல்.

பேதையிப்படிக்கூறவுங் காதலேனைப் பெருகுசிந்தையன்பின்னையு முன்புறு, வாதரத்தெனதாருயிர்போகினு மமையுமென்றவளம்புயச் சீறடி, மீதுதெற்றிபடத்தொழுதான்வடி வேற்கணைஞரும்வெகுண்டுவி ரைவினிற், றாதுளங்கனிவாய்முத்தவாணகைச் சுதேட்டிணைப்பெய ராளுநைழத்துன்னினாள்.

(இ - ள்.) பேதை - மடவரலான திரௌபதி, இப்படி கூறவும் - இவ் வாறு (கீசகன்செயலைக் கண்டித்துச்) சொல்லவும், காதல் நோய் பெருகு சிந் தையன் - ஆசைநோய் விஞ்சிய மனத்தையுடையவனுய், —(கீசகன்),—பின் னேயும் - பின்னும், முன்பு உறு - அவளுடைய முன்னே வந்து, 'ஆதரத்து எனது ஆர் உயிர் போகின்வும் அமையும் - காதல் காரணமாக எனது அரு மையான உயிர் இறப்பதானுலும் தகும்,'என்று-என்றுசொல்லி, அவள் அம்பு யம் சிறு அடிமீது-அத்தத்திரௌபதியின் தாமரைமலர்போன்ற சிறிய பாதங் களின்மேல், நெற்றி பட தொழுதான்-(தன்) நெற்றிபட வணங்கினுன்: வடி வேல் கணுள் உம்-கூரிய வேற்படைபோன்ற கண்களையுடையளான அந்தத் திரௌபதியும், வெகுண்டு - கோபங்கொண்டு,—தாதுளை கனி வாய் முத்தம் வாள் நகை சுதேட்டிணைப் பெயராளுநைழ - தாதுளம்பழம்போன்ற சிவந்த வாயையும் முத்துப்போன்று ஒளிபொருந்திய பற்களையுமுடையளான சுதே ஷ்ணை யென்பாளிடத்தில், விரைவினில் துன்னினுள்-விரைவாகப் போய்ச் சேர்ந்தாள்; (எ - று.)—முன்புஉறு ஆதரத்து என்று என இயைத்து-இதற்கு முன்பில்லாத காதலோடு என்றுகூறி எனினுமாம். (அ)

9.—சென்ற திரௌபதி தன்வருத்தந் தோன்ற நின்று அவளிடத்து நிகழ்ந்தது சொல்லுதல்.

நடுங்குமெய்யினள்பேதுறுநெஞ்சின ணுணுநீர்மையணுவிணீ ரிலா, தொடுங்குமென்மையடன்மையிற்புன லுகுத்தகண்ணின ளோவியம்போன்றுளாள், கடுங்கண்யானைப்பிடாரிருந்திலங் காக் கும்வெண்குடைக்காவலன்றேவிகே, டொடுங்கழற்கழலானின்றுனை வனைற் சுட்டியாயிரஞ்சொல்லலசொல்லினுன்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஓவியம் போன்றுஉளாள் - சித்திரப்பதுமை போன்றுள்ள வளாகிய அந்தத் திரௌபதி,—நடுங்கும் மெய்யினள் - (அச்சத்தினுல்)நடுக்க மடைந்த உடம்பை யுடையவளும், பேதுறு நெஞ்சினள் - கலங்கிய மனத்தை யுடையவளும், நாணும் நீர்மையள் - நாணுகின்ற தன்மை யுடையவளும், நாவி னுள் நீர் இலாது ஒடுங்கும் மென்மையள் - (தனக்கு நேர்ந்திருக்கின்ற அவ ஸ்தையை எண்ணித் தன்)நாவினிடத்து நீரூறுதலுமில்லாமல்(வறண்டுபோக) ஒடுங்குதற்குக் காரணமான மென்மைத்தன்மை யுடையவளும்,தன்மையினுல்-

(மெல்லியலான) தன்மைக்குஏற்ப, புனல் உகுத்த கண்ணினள்-நீரைச்சிந்து கின்ற கண்களையுடையவளுமாய்,—கடுங்கண் யானை பிடர் இருந்து இ நிலம் காக்கும் வெள் குடை காவலன் தேவி-கொடிய கண்களையுடைய யானையின் பிடரியிலே யிருந்துகொண்டு இந்தப்பூவுலகைக்காக்குந் தன்மையுள்ள வெண் கொற்றக்குடையையுடைய அரசனுடைய மனைவியே! கேள் - (சிகழ்ந்த தைக்) கேட்பாயாக: தொடும் கழல் கழலான் - அணிந்த வீரக்கழலை யுடைய பாதங்களை யுடையனென, நின் துணைவன் - உன்னுடன் பிறந்தவன், என் சுட்டி என்னைக்குறித்து, சொல் அல ஆயிரம் சொல்லினன்-சொல்லத்தகா தனவான பலவார்த்தைகளைச் சொன்னன்; (எ - று.)

மூதலிரண்டடிகள் - அந்தத்திரௌபதிக்கு அச்சத்தினால் தோன்றும் மெய்ப்பாடுகளை விளக்குவன. மூன்றாமடி - நீதிநெறிகடத்தும் மன்ன வனுக்கு நீ மனைவி யாதலால், அநீதிகடவாமல் பார்க்கவேண்டுவது உனக் கும் பொறுப்பே யென்பதைக் குறிப்பிக்கும். (கூ)

10.—இனிச்செய்யவேண்டுவது இன்ன தென்றும், நேரிதவறின் இன்னது விளையுமென்றும் அந்தத்திரௌபதி கூறுதல்.

விரதசாரிணியென்பதுந்தேவரென் மெய்புரக்கும்விரதமுமிங்கு னக், கிரதமாகவாமனைக்கெய்துமு னியம்பினேனெனையாவருமிச்சி யார், சுரதம்ஆடுமகளினைத்தேடிநின் றுணைவன்வேட்கையுஞ்சோகமு மாற்றிநி, சரதமாகநினைபவதொழி லென்றி தப்பிலொருயிர்தப்புமென்றிரு நிளள்.

(இ - ள்.) விரதசாரிணி என்பதுஉம் - (என்பெயர்) விரதசாரிணியென் பதையும், தேவர் என் மெய் புரக்கும் விரதம்உம் - தேவர்கள் என்உடலைக் காக்கின்ற கொள்கையையும், இங்கு - இங்குள்ள, உனக்கு—, இரதம் ஆக - இனிமையாக, வரம் மனைக்கு எய்தும் முன் - (உன்னுடைய) சிறந்த வீட்டில் (வண்ணமகளாய்ச்) சேர்தற்குமுன்னம், இயம்பினேன் - சொல்லி யுள்ளேனே: (இப்படியிருப்பதனால்தான்), எனை - என்னை, யாவர்உம் - எவரும், இச்சியார் - விரும்பமாட்டார்: (ஆகையால்), சுரதம் ஆடும் மகளினை- (விலைப்பொருட்டாகப்) புணர்ச்சியை நிகழ்த்துகின்ற வேசியரை, தேடி—, நின் துணைவன் - உன்தம்பியின், வேட்கைஉம் - ஆசையையும், சோகம் உம் - (மன்மதனால் நிகழ்ந்துள்ள) வருத்தத்தையும், மாற்றிடு - மாறச்செய்: சுரதம் ஆக - நிண்ணமாக, நினையாது ஒழி - (என்னால் அவனுடைய வேட் கையையும் சோகத்தையும் போக்கலா மென்று) நினையாதுதவிர்வாய்: நெறி தப்பில்-முறைமைதவறி (எதேனும்) நிகழுமானால், ஆர் உயிர் தப்பும் - (உன் தம்பியின்) அரியஉயிரே அழிந்திடும், என்று—, ஓதினள்-கூறினள் (அந்தத் திரௌபதி); (எ - று.)

விரதசாரிணி என்பது - நல்லொழுக்கத்துடன் நடப்பவ ளென்று கார ணப் பொருள்படும். என்பெயரினாலேயே யான் எப்படிப்பட்ட தன்மை

யுடையவ ளென்பதை நீ அறிந்திடலாமேயென்பது, குறிப்பு. ஸுரதம் - வடசொல். (கo)

11.—திரௌபதியின்வாசகங்கேட்டுச் சுதேஷ்ணை அவள்கண்ணீர்துடைத்து 'என்வீடணுகாவகைபோ' என்று தம்பியையழைத்தல்.

கேகயங்களெனுமெழிற்சாயலாள் கிளந்தவாசகங்கேட்டிடியேறு
று, நாகமென்னநடுங்கியப்பூங்கொடி நயனநீர்துடைத்துற்ற துரைன்ற
ணு, மேகமுற்றமனத்தினாடுதம்பியை மிகமுனிந்துதன்வீடணுகாவை
கை, யேகுகென்றனளென்றலுஞ்சீசகமோடேகினனென்பாவமென்
றெண்ணலான்.

(இ - ள்.) கேகயங்கள் எனும்-கேகயப்பறவை யென்று சொல்லத்தக்க' எழில்-அழகிய, சாயலாள்-தோற்றத்தை யுடையவளான திரௌபதி, கிளந்த-சென்ன, வாசகம்-வார்த்தையை, கேட்டு—,(சுதேஷ்ணை),—இடிஏறு உறும்-போழ்திலேஞெகிழையைக் கேட்டல்பொருந்திய, நாகம் என்ன - பாம்புபோல, நடுங்கி —, அ பூங் கொடி நயனம் நீர துடைத்து-அந்தப்பூங்கொடி போன்ற திரௌபதியின் கண்ணீரைத் துடைத்து, 'உற்றது-நேர்ந்த கிகழ்ச்சி, என்ற-நன்றாகவுள்ளது', எனை - என்றுசொல்லி, மேகம் உற்ற - கோபாவேசம் மிகுந்த, மனத்தினாடு - மனத்துடனே, தம்பியை - சீசனை, மிக முனிந்து - மிகவுங் கோபித்து, தன் வீடு அணுகா வகை-(இனித்) தன்வீட்டைச்சேராத படி, 'ஏகுக - போய்விடுவாயாக,' என்றனள் - என்று கூறினாள்: என்றலும் - என்று சொன்னவுடனே, அறம் பாவம் என்று எண்ணலான்-(இந்தச்செயல்) புண்ணியம் விளைப்பது (இது) பாவத்தைத் தருவது என்று ஆலோசித்த வில்லாதவனாகிய அந்தக்கீசகன், சோகமோடு - துயரத்தோடு, ஏகினன் - (தன் வீட்டுக்குச்) சென்றான்; (எ - று.)

இடியேற்றைக்கேட்ட நாகம் நடுங்குமென்பது, நூற்கொள்கை. "வரி நிறநாகம் விடருளதேனுவு, முருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்" என்றது, நாலடி. கேகயம் - மயில். அப்பூங்கொடியென்பது சுதேஷ்ணையைச் சுட்டுகிறது. நயனம் - திரௌபதியின் நயனம் என்க. (கக)

12 —அந்நாளிராத்திரி கீசகன் பட்ட மன்மதாவஸ்தை.

சென்றுதன்மனைபுக்கபின்மன்மதன் செருவிலைந்தழிந்தையை
நைப்பலர், மன்றன்மெல்லணைவீழும்வெம்பாலையால் வருத்தமோவிம்
மாரணைதானெனலுந், தென்றறன்னையுந்தீயெனலுந்திங்களைத் தினகரன்
கொலென்றேறங்குஞ்செயலழிந், தன்றவன்கருங்கங்குலிற்பட்டபா டவ
ணையல்லதையார்படுவார்களே.

(இ - ள்.) சென்று-போய், தன் மனை புக்க பின் - தன் வீட்டினுள்ளே சேர்ந்தபிறகு, மன்மதன் செருவில்-மன்மதன் செய்யும் போரிலே, நொந்து - வருந்தி, அழி - அழிந்த, சிந்தையன் ஆய் - மனத்தையுடையவனாய்,— மலர் மன்றல் மெல் அணை வீழும் - மலர்கொண்டு பரப்பிய நறுமணமுள்ள

மெல்லிய படுக்கையிலே விழுவான்: 'இ மலர் அணை தான் - இத்தப் பூம்படுக்கை, வெம்பாலையால் வகுத்தது ஓ-வெப்பமுள்ள பாலைநிலத்தா லியன்றதோ?' எனும்-என்பான்: தென்றல் தன்னையும் - தென்றற் காற்றையும், தீ எனும்-தீயென்று சொல்வான்: திங்களை-சந்திரனைப் பார்த்து, '(இவன்), தினகரன் கொல்-சூரியனேயோ!' என்று-என்றுகருதி, ஏங்கும்-ஏக்கமடைவான்: செயல் அழிந்து - செய்யவேண்டிய தொழில் இன்னதென்றுணராது மனமழிந்து, அன்று-அன்றைத்தினம், அவன்—, கருங் கருங்குவில்-கரிய இராப்போதிலே, பட்ட - அடைந்த, பாடு - வருத்தத்தை, அவனை அல்லது - அவனை யல்லாமல், யார் (வேறு) யாவர், படுவார்கள்ள-அனுபவிப்பார்களோ? (எ று.)

பாலை-மிகவும் வெம்மையை யுடையநில மாதலால், தனக்கு மிக்கவெப்பஞ்செய்யும் மலரணையை, 'வெம்பாலையால் வகுத்ததோ இம்மலரணை தான்' என்னலானான். காமமயக்கம் கொள்பவர்க்கு, குளிர்ந்திருப்பனவான மலரணை திங்கள் தென்றல் முதலியன வெப்பத்தைச் செய்தல், இயற்கை. அல்லதை, ஐ - சாரியை. 'அன்றகன் கருங்கங்குலில்' என்றும் பாடம். (கூ)

13.—கீசகனதரத்தை யாற்ற நினைந்த அவன்தேடியசீ சுதேஷ்ணையிடம் வண்ணமகளைக் கீசகர்க் கண்டாலுன்னை ஆவிநிலைக்குமென்று வேண்டுதல்.

பாவிதன்மனைச்-சேடியரானவர்பலரும்வந்துபடியுடைமன்னவன்
றேவிதன்னைவணங்கியக்காமுகன்சிந்தைதோயுஞ்செயலும்புகன்றெழிற்
காவியங்கண்ணவளைத்தனதுகண்காணினுந்தணியுங்கடுங்காதலு
மாவியும்பெறுமெய்யணுகானினதாணையென்றனராதரமாற்றுவார்.

(இ - ள்.) பாவிதன்-பாபிஷ்டனான கீசகனுடைய, மனை-வீட்டிலுள்ள, சேடியர்ஆனவர் பலரும் - பணிப்பெண்கள் பலரும், வந்து—,—படி உடை மன்னவன் தேவிதன்னை பூமியைப் பாதுகாத்தலுடைய விராடமன்னவனுடைய மனைவியை, வணங்கி—, ஆதரம் ஆற்றுவார்—(அந்தக்கீசகனுடைய) காமவிடாயைத் தணிவிக்க முயல்பவராய்,— அ காமுகன் சிந்தைதோய்வும் செயல்வும் புகன்று - காமநோய் கொண்டவனான அந்தக்கீசகனுடைய மனத்திலுள்ள காமநோயையும் (அதற்கு ஏற்ப அவன் மலரணை முதலியவற்றால் வெப்பம் கொள்ளுஞ்) செய்கையையும் சொல்லி, - 'எழில் காவி அம் கண்ணவளை - அழகிய கருங்குவளைமலர்போலும் அழகிய கண்களையுடைய அந்த வண்ணமகளை, தனது கண் காணினும் - (அந்தக்கீசகன்) தன் கண்களாற் கண்டாலும், கடுங் காதல்வும் தணியும் - (அவன் இப்போதுகொண்டுள்ள) கொடியகாதல் தணியப்பெறுவான்: ஆவிவும் பெறும்-தன்னுயிரும் இறவாதுநிலைத்திருக்கப்பெறுவான்: மெய் அணுகான் - அவளுடம்பைக் கட்டித் தீண்டான்: (இவ்விஷயத்தில்), நினது ஆணை-,' என்றனர் - என்றுகூறினர்கள்.

பிறர்மனைநச்சுதலென்பது பஞ்சமகாபாதகமுகளுளொன்றுதலால், அந்தப்பாதகத்திற்குத் துணிந்த கீசகனை, 'பாவி' என்றார். ஆதரம் மாற்றுவார் என்றும் பிரிக்கலாம். காதலும் ஆவியும் - எச்சவும்மைகள். (கூ)

14.—அந்தச் சேடியரின் சொல்லைக் கேட்டதும், சுதேஷ்ணை கீசகனிடம் செயலுக்கு வருந்திப் புலம்புதல்.

பாசகாரிகளாமைம்புலன்களும் பரிவுகூரப்பரிந்துயர்ந்தோர்புகல், வாசகாதிகள்கற்றுந்தெளிந்திலை மதனவேதத்தின்மார்க்கமும்பார்த்திலை, நாசகாலம்வரும்பொழுதாண்மையு ஞானமுங்கெடுமோகறுந்தார்முடிக், கீசகாவென்றழுதனளம்மொழி கேட்டபோதக்கிளிங்கிகர் மென்சொலாள்.

(இ - ள்.) அ மொழி கேட்ட போது - (சேடியர் சொன்ன) அந்தவார்த்தை செவிப்பட்டபோது,—அ கிளிங்கிகர் மெல் சொலாள் - கிளிபோன்ற மென்மையாகப் பேசுபவளான அந்தசசுதேஷ்ணை,—'பாசகாரிகள் ஆம்-பணப்பிணிப்பை யுண்டாக்குவனவான, ஐம்புலன்களும் - (பஞ்சேந்திரியங்கட்கு உரிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும்) ஐந்துவிஷயங்களும், பரிவு கூர - துன்பத்தை மிகுவிக்க, பரிந்து - (அதனால்) மனம் வருந்தி, உயர்ந்தோர் புகல் வாசக ஆதிகள் கற்றும் - பெரியோர் கூறியுள்ள நீதிவாக்கியங்களை யெல்லாம் படித்திருந்தும் மனத்தெளிவு பெற்றாயில்லை: மதன(ன்)வேதத்தின் மார்க்கம்உம் பார்த்திலை - மன்மதவேதத்தின் முறைமையையும் காணகின்றாயில்லை: நறுந் தார் முடி கீசகா - நறியமாலையை யணிந்த முடியையுடைய கீசகனே! நாசகாலம் வரும் பொழுது—, ஆண்மைஉம் - மனவுறுதியும், ஞானம்உம் - நல்லறிவும், கெடும் ஓ-கெட்டுவிடுமோ?' என்று-எனசசொல்லி, அழுதனள்-புலம்பலானாள்; (எ-று.)

பாசம் - பாஶம்: கயிறு என்ற பொருளுள்ள இவ்வடசொல், மனப்பிணிப்பு என்ற பொருளை இலக்கணைபாற் காட்டும். மதனவேதம் - வாத்ஸ்யாயனம்; அடியோடு தன்மீது விருப்பமில்லாதவரைப் புணரலாகா தென்பது, மதனவேதத்தின் மார்க்கமாம். (கசு)

15.—முன்று கவிகள் - ஒருதொடர்: சுதேட்டிணை நீங்கப்புகத் தூலபாமல் கீசகனுவிகாக்க'இந்தமாலையைக் கொடுத்து மீள்வாயி'என்று ஆதலத்தோடு வண்ணமகளை வேண்டினமையைத் தெரிவிக்கும்.

ஆகுலத்தொடுநெஞ்சந்தளர்ந்துதன் னருகினின்றவருந்துதியினி கர், மீகுலக்கொடிதன்னிருதாள்மிசை வீழ்ந்துநின்றன்விழியருளுண்டெனிற், கோகுலத்திலுயர்ந்தவென்காதலன் கோலுதீதியுங்குன்றுவெனதுரை, நீகுலக்கிலணத்துமின்றேகெடு நேரிழாயிதுநெஞ்சுறக்கேட்டியால்.

(இ - ள்.) (பின்பு அந்தச்சுதேஷ்ணை),—ஆகுலத்தொடு-வருத்தத்தினால், நெஞ்சம் தளர்ந்து - மனம் சோர்ந்து, தன் அருகில் நின்ற—, அருந்துதி னிகர்-அருந்ததியை யொத்த, மீ குலம் கொடிதன்-சிறந்த குடியிற்றோன்றிய கொடிபோன்றவளான திரௌபதியின், இரு தாள்மிசை வீழ்ந்து - இரண்டு பாதங்களின்மேல் வணங்கி,—(அவளைநோக்கிப் பின்வருமாறு கூறலானாள்). நேர் இழாய்-அழகிய ஆபரணங்களை யணிதற்குரியவளே! நின்தன்-உன்னுடைய,

விழி அருள் உண்டு எனில்-கண்ணின் அருள்நோக்கம் உண்டு என்றால், (அப்போது), கோகுலத்தில் - அரசர்திரளில், உயர்ந்த - மேம்பட்ட, என் காதலன் - என் கணவனுடைய, கோல்உம் - செங்கோலும், நீதிஉம் - அரசநீதியும், குன்ற - பழுதுபட: எனது உரை - என்பேச்சை, நீ—,குலைக்கில்- (செய்யாது) தட்டினால், அனைத்துஉம் - (என்காதலனுடைய கோலும் நீதியுமாகிய) எல்லாமும், இன்றுஎ கெடும் - இன்னைறத்தினமே அழியும்: இது - (யான்சொல்லிய) இந்தப்பேச்சை, நெஞ்சு உற - மனம் பொருந்த, கேட்டி - கேட்பாய்: (எ - று.)

நீ கீசகனிடத்துப் போய்வரமே றுது மென்று நேரே சொல்லுதற்குக் கூசிப் பூர்வபீடிகையாக இங்ஙனம் சுதேஷ்ணை கூறுகின்றாள். விழியருள உணடெனில் என்பதன் கருத்து - என்மீது கருணைகொண்டு நான் சொல்வதை யேற்றுப் புரிவாயெயானால் என்பது. இதுஎன்று சுட்டியது-எனதுரை நீ குலைக்கில் அனைதனுமின்றே கெடும் என்பதை. கீசகனது புஜபலத்திலேயே விராடன் தேசத்தை இனிதுஆள்கின்றா னென்பதுகருதி, சுதேஷ்ணை இவ்வாறு கூறினாள். ஆல் - ஈற்றசை. (கக)

16. இளையனதலினெண்ணிளமையான்மனத் தெண்ணமின்றியி
ருண்மதனப்பிணை, யளையுமேமணியனகிரின்பெய்ந்தல மாதரித்தின்றடா
துசெய்நீர்மையால், விளையுமேமகொடுவெம்பழியிப்பழி விளைவுறாமல்
விரகினக்காதலோய், களையுமாறெண்ணினுங்கவலையுங் காத்துநின்
பெருங்கற்பையுங்காக்குமால்.

(இ - ள்.) என் இளையோன் - என்தம்பி, இளையன் ஆதலின் - (அறிவு முதிராத) இளமைப்பருவத்தோ னாதலால், மனத்து—, எண்ணம் இன்றி - ஆலோசனை யில்லாமல், இகல் மதன் அம்பினால் - மாறுபாட்டையுடைய மன்மதனுடைய அம்பினாலே, அளையும் தொளைக்கப்பெற்ற, மேனியன் ஆகி - உடம்பையுடையவனாய், நின் மெய் நலம் - உனது உடலினற்பெறலாகும் இன்பத்தை; ஆதரித்து-விரும்பி, இன்று-இன்னைறத்தினம், அடா(த)து-தகாத செயலை, செய் - செய்யத்தொடங்கிய, நீர்மையால் - தன்மையினால், (முடிவில்), கொடு வெம் பழி - மிகக் கொடிய பழி, விளையும்எ - உண்டாகுமே: இப்பழி விளைவுறாமல் - இந்தப்பழி யுண்டாகாதபடி; விரகின் - தந்திரமாக, அ காதல்நோய் - (அவனுடைய) அந்த ஆசைநோயை, களையும் ஆறு - போக்கும்வகையை, எண்ணின் - எண்ணினால், ஆங்கு - அப்போது, (அச்செயல்), அவன் ஆவிஉம் காத்து - அந்தக்கீசகனுடைய உயிரையும் காத்து, நின் பெருங் கற்பைஉம் காக்கும்—; (எ - று.)—ஆல் - தேற்றம்.

திரௌபதியின் மேனியைத் தீண்டினால் பிறர்கற்பையழித்தா னென்ற பழியும், தீண்டாது உயிரொழிந்தால் பிறர்மனை நயந்து உயிர்வீத்தா னென்ற பழியும் விளையுமென்னலாம். பழி விளையாமல் அந்தக்கீசகன் உயிருய்வதற்கு உபாயம் மேலிற் கவியிற் கூறுகிறாள்: அச்செயலே நீ செய்யவேணு மென்றே பதினைந்தாஞ் செய்யுளில் சுதேஷ்ணை வேண்டியது. (கக)

17. எண்ணுகின்றனன்யாமெனும்நீமறு தெனதுவாய்மையெதிர் கொண்டிளையவ,னண்ணுமில்லிடைச்சென்றிந்தநாண்மலர் கறைகொ ண்மாலையைநல்கிநீமீளுவாய், கண்ணினின்னுருக்காணினுமற்றவன் கன்னமின்புறக்கட்டுரைகேட்பினும், வண்ணமாமகளேயுயிர்நிற்குநீ வாழியேகிவருகெனவாழ்த்தினள்.

(இ - ள்.) யான் ஒன்று எண்ணுகின்றனன் - யான் ஒருவார்த்தையை ஆலோசித்துச் சொல்லுகின்றேன்: நீ—, மறுத்து - மறுத்துச் சொல்லாமல், எனது வாய்மை - எனதுவாயிலிருந்து வருவதை, எதிர்கொண்டு - ஏற்றுக் கொண்டு, இளையவன் நண்ணும் இல்லிடை சென்று - (எனது)தம்பி வசிக் கிற வீட்டினிடத்துப் போய், இந்த நாள் மலர் நறை கொள் மாலையை - இந்தப் புதியமலர்கொண்டுதொடுத்த நறுமணமுள்ள மாலையை, நல்கினை - கொடுத்துவிட்டு, (உடனே), மீளுவாய் - திரும்பிவிடுவாய்: அவன்-அந்த (என்தம்பியான) கீசகன், வண்ணம் மா மகளே - அலங்காரஞ் செய்யுஞ் சிறந்த பணிப்பெண்ணே! நின் உரு - உன்வடிவத்தை, கண்ணின் காணின் உம்—, கன்னம் இன்புஉற - கூது மகிழ்ச்சியடைய, கட்டுரை கேட்பின்உம்- (உன்னுடைய) தொடுத்துச் சொல்லும் பேச்சைக் கேட்டாலும், உயிர் நிற்கும் - (அவனுடைய) உயிர் (உடலில்) தரிக்கும்: ஏகி வருக - போய் வருவாயாக: நீ வாழி - நீ வாழ்வாயாக, என - என்றுசொல்லி, (அந்தத் திரௌபதியை), வாழ்த்தினள்—; (எ - று)—மற்று - அசை.

கீசகனிடத்துச் சென்று வருவதனால், நின்கற்பிற்கு யாதோரிடையூறு மின்றியிருக்கவேணுமென்ற கருத்தினால், 'நீ வாழி' என்று வாழ்த்தினள்.()

18.—திரௌபதி அந்நகரசுதேஷ்ணை கூறிய கொல்லைக் கண்டித்தபடியே வேறு வழியில்லாமையால் அவள்சொற்படி மலர்மாலையைக் கீசகனிடத்துக் கொண்டு போதல்.

மொழியலாதமொழியைச்சுதேட்டிணை மொழிந்தபோதுமுதுக் குறைவுள்ளவப், பழியிலாமொழிப்பாவைவெம்பாதகம் பகர்தியென் றிணைவெறுதொழிபோவைநீ, யழிவிலாதபெருங்கிளைக்கல்லல்கூரழிவு வந்ததறிந்திலையென்றுதன், விழிகளாரருசொரியக்கொடுத்தபூ வேரிமாலைகொண்டேகினண்மின்னனார்.

(இ - ள்.) சுதேட்டிணை—, மொழிஅலாத மொழியை - சொல்லத்தகாத பேச்சாகிய அந்தச் சொல்லை, மொழிந்தபோது—, முதுக்குறைவு உள்ள - பேரறிவு படைத்த, அ - அந்த, பழி இலா மொழி பாவை - குற்றமில்லாத பேச்சுக்களையுடைய பெண்ணான திரௌபதி, (சுதேஷ்ணையை நோக்கி),— 'வெம் பாதகம் பகர்தி - கொடியபாவச் செயலைச் சொல்லுகின்றாய்: பாவை - பிரதிமைபோன்றவளே! (நான் பின்வருமாறு சொல்வது குறித்து), நீ-, என்னை வெறுது ஒழி-என்மீது வெறுப்புக்கொள்ளாமலிருப்பாயாக: அழிவு இலாத - அழிதலில்லாத [நல்வாழ்வு வாழ்கின்ற], பெருங் கிளைக்கு - (உன்னுடைய) பெரிய சுற்றத்துக்கு, அல்லல் கூர் - துன்பம்மிகுதற்குவதுவான, அழிவு—,

வந்தது - வந்ததை, அறிந்திலை - அறிந்தாயில்லை,' என்று-எனசசொல்லி,—தன் விழிகள் - தனது கண்கள், ஆரம் சொரிய - முத்துப்போன்ற நீரை யுகுக்க,—கொடுத்த - (அந்தசசுதேஷ்ணை) கொடுத்திட்ட, பூ வேரி மாலை - மலர் கொண்டு தொடுத்த மணமுள்ள மாலையை, கொண்டு - எடுத்துக்கொண்டு, மின் னுளை - மின்னல்போன்ற பேரொளிபடைத்த உடலையுடைய அந்தத் திரௌபதி, எகினள் - சென்றனள்; (எ - று.)

நீ சொல்லுகிற வார்த்தையைத் தட்டாமற் செய்யவேண்டுவது பணிப் பெண்ணாகிய எனக்குக் கடமை யென்று செய்கின்றேன்: ஆனாலும், இதனால் உன்னுடைய தம்பிமார்க்கு நாசமே விளையும்: இதனை யறிந்திலை யென்று மேல்விளையப் போவதை ஆராய்ந்து திரௌபதி கூறின ளென்க. ஆரம் - கண்ணீருக்கு, உவமவாகுபெயர். சுதேஷ்ணை 'எனக்குத் தாகமாக இருக்கலாற் பருகுமாறு சுரையை இந்தப்பாத்திரத்தில் வாங்கிவருக' என்று வேண்ண மகளை நோக்கிக்கூற, அன்னாள் கடுகதிப்பேச, அந்த இராணி கட்டாயப் படுத்தியனுப்பினை ளென்று மூதனாலி லுள்ளது. (கஅ)

19.—திரௌபதியைக் கீசகனிடத்துச் சென்று வரும்படியேவிய சுதேட்டிமனையைக் குறித்த கவிக்கூற்று.

ஆண்டுவந்ததுருபதன்மாமக ளடைந்தநாட்டொடாட்டமரொரைவரே, தீண்டலன்றியொருவருமென்னைமெய் தீண்டுவாரிலையென்ற ன்றுசெப்பவு, நீண்டசெங்கைத்தாணிபன்காதலி நினைவிலாமனெறிய ற்றதம்பிபான், மீண்டுமெவ்வுரிமையகென்றுரைப்பதே விதியையாவர் விலக்கவல்லார்களே.

(இ-ள்.) ஆண்டு வந்த - அப்போது வந்த, துருபதன் மா மகள் - துரு பதனுடைய சிறந்த மகளாகிய திரௌபதி, அடைந்த நாள் தொட்டு - (தான் விராடன்மனைவியினிடம் வேண்ணமகளாகிச) சேர்ந்த நாள்முதல், 'அமரா ஓர் ஐவர் எ தீண்டல் அன்றி - ஐந்துகந்தருவதேவர்களே (தன்னைத்) தீண்டுவ தன்றி, ஒருவர்உம் - வேறொருவரும், என்னை—,மெய் தீண்டுவார் இலை—,' என்று என்று செப்பவும் - என்று பலமுறை சொல்லியிருக்கவும்,—நீண்ட செம் கை - (முழந்தாளளவும்) நீண்டுள்ள செவ்விய கையையுடைய, தாணி பன் காதலி - விராடமன்னவனுடைய மனைவி, நினைவு இலாமல் - ஆலோ சனையில்லாமல், நெறி அற்ற தம்பிபால் - ஒழுக்கங்கெட்ட தம்பியாகிய கீச கனிடத்து, மீண்டும் - மறுபடியும், அ வழி - அவனுள்ள இடத்து, எகு - எகுவாய், என்றுஉரைப்பதுவ - என்று (திரௌபதியைநோக்கிச்) சொல் வதா? [இது தகுதியன்று என்றபடி]: விதியை யாவர் விலக்க வல் லார்கள்—? (எ - று.)

'விதியை யாவர் விலக்கவல்லார்கள்' என்ற பொதுப் பொருள் கீழ்க் கூறிய சிறப்புப்பொருளோச சமர்த்திக்கதனால், இது-வேற்றுப்பொருள்வைப் பணி. விதி திரௌபதி வியாஜமாகக் கீசகன் இறக்கவேணு மென்பது. (கக)

வேறு

20.—உதயகாலத்தில் திரௌபதி கீசகன் மனையிலேதுதல்.

மாதவள் கீசகன் மனையி லேகவற்
போதக லவுமவன் புலம்பல் போகவும்
பாதமில் வன்றிறற் பாக னூர்ந்ததே
ராதப னுதயவெற் பணுகி னனரோ.

(இ - ள்.) மாது அவள் - பெண்ணை அந்தத்திரௌபதி, கீசகன் மனையில் ஏக - கீசகனுடைய மனையிலே செல்லவும், (அவ்வேளையில்), அல் போது அகல உம் - இராப்போது கழியவும், அவன் - அந்தக்கீசகனுடைய, புலம்பல் - தனிமையினுலாகிய துன்பம், போகவும்—,—பாதம் இல் - காலில்லாதவனுனை [முடவனுனை], வல் திறல் - மிக்க சாமர்த்தியத்தை யுடைய, பாகன் - பாகனுகிய அருணனென்பவனுல். ஊர்ந்த - செலுத்தப் பெற்ற, தேர் - தேரின்மீது, ஆதபன் - சூரியன், உதயவெற்பு - உதய மலையிலே, அணுகினன் - அடைந்தான்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

தான் காலில்லாதிருக்கையில் ஒற்றைச்சக்காத்தையுடைய சூரியனது தேரை ஒருநாளிற் பகலும் இரவும் உண்டாகும்படி வெகுவிரைவாகச் செலுத்துதலால், 'வன்றிறற் பாகனூர்ந்த தேர்' எனப்பட்டது.

இதுமுதல் இருபத்தாறுகவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரான்று மாச்சீரும், மற்றவை விளச்சீர்களுமாகிய அளவடிநான்குகொண்ட கலி விருத்தங்கள். (உ0)

21.—திரௌபதியைக் கண்டதும் கீசகன் தகாதமொழி சொல்ல, அவள் சூரியனை வணங்குதல்.

தருக்கியகா முகன்றகா தசொல்லலே
யுருக்கிளர்சா யலோடுள மழிந்துபோய்
முருக்கிதழ்வல்லிதன் முளரிச்செங்கையா
லருக்கனையிறைஞ்சினளரிவிற்கற்பினுள்.

(இ-ள்.) தருக்கிய-வலிமைசசெருக்கைக் கொண்ட, காமுகன் - காமுக னுகிய கீசகன், தகா (த) து - தகாதவார்த்தைகளை, சொல்லலே—,—அழிவு இல் கற்பினுள் - அழிதலில்லாத கற்பையுடையவளாகிய, முருக்கு - பலாச மலர்போன்ற, இதழ் - உதட்டையுடைய, வல்லி - கொடிபோன்றவளான அந்தத் திரௌபதி,—உரு - (தனது) வடிவத்திலே, கிளர் - விளங்கு கின்ற, சாயலோடு - நிறத்துடனே, உளம - மனமும், அழிந்து - அழிய, போய்—,—தன் - தன்னுடைய, முளரி - தாமரைமலர்போன்ற, செங் கையால் - சிவந்த கையினுல், அருக்கனை - சூரியனை, இறைஞ்சினுள் - வணங்கினுள்; (எ - று.)—சூரியனை வணங்கின படியை அடுத்த செய்யுள் தெரிவிக்கும்.

ஜகத்தில் நடப்பதற் கெல்லாம் ஸாட்சி யாகிய தேவதை யாதலால், சூரியனை யிறைஞ்சிக் கூறினுள். (உக)

22.—சூரியனைத் தன்னிடமைப் போக்குமாறு திரௌபதி வேண்டுதல்.

துரங்கமோரேழுடன்சோதிகூர்மணிக்
கரங்களோராயிரங்கவினத்தோன்றிணைய்
வரங்கொள்வேனின்னியான்மரபுபொன்றுமென்
றிரங்குறுமென்னகத்திடரைநீக்குவாய்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) துரங்கம் ஓர் ஏழ் உடன்-ஏழுகுதிரைகளுடனே, சோதிகூர்-ஒளிமிக்க, ஓர் ஆயிரம் மணி கரங்கள்-அழகிய ஆயிரங் கிரணங்கள், கவின்-விளங்கும்படி, தோன்றிணைய்-உதித்துள்ளவனே! நின்னை யான் வரம் கொள் வேன் - உன்னிடத்துப் பின்வருமாறு நான் வரம்பெறுவேன் [நீ எனக்கு ஒருவரம் தரவேணு மென்றபடி]: 'மரபு-என்குலத்தின் பெருமை [கற்புகெறி கெடாத்தன்மை], பொன்றும் - இந்தக் கீசகனால் அழிவுறுமே!' என்று—, இரங்குறும் - வருந்துகின்ற, என் அகத்து - என்மனத்திலுள்ள, இடரை - துன்பத்தை, நீக்குவாய் - போக்குவாயாக; (எ - று.)

சூரியன் தேர்க்குக் குதிரைகள் ஏழ் என்று சிலவிடத்தும், சூரியன் குதிரைகள் ஏழில் ஒன்று ஏழ் [ஸப்த] என்றபெயரினதுஎன்று சிலவிடத் தும் கூறப்பட்டுள்ளது. (உஉ)

23.—சூரியனை வேண்டிநின்ற திரௌபதி கீசகன்முன்னர்
மலர்மாலையைக் கொடுத்துவிட்டு நிற்றல்.

என்றுகொண்டென்றினைப்பணிந்துமன்றலாற்
கன்றியகீசகக்கலகன்முன்புபோய்
மன்றலந்தொடையலும்வழங்கிமெய்வெரீஇ
நின்றனளானிலைநின்றகற்பினாள்.

(இ - ள்.) என்று கொண்டு - என்றுசொல்லிக்கொண்டு, என்றினை - சூரியனை, பணிந்து - வணங்கி,—(பின்பு), மன்றலால் - புணர்ச்சிவிருப்பி னால், கன்றிய - வாடிய, கீசகன் கலகன் - கீசகனென்ற கலகஞ்செய்வா னது, முன்பு - முன்னிலையில், போய்—,— மன்றல் அம் தொடை யல்உம் வழங்கி - நறுமணமுள்ள அழகிய பூமாலையையுங் கொடுத்துவிட்டு, மெய் வெரீஇ - உடல் நடுக்கங்கொண்டு, நின்றனள்—: (யாவளெனில்),— நிலை நின்ற கற்பினாள் - உறுதியாகவுள்ள கற்பையுடையவளான திரௌபதி.

எத்துணைக்கொடியவனுயிருப்பினும் அவன்முன் நிற்கும் போதும் தன் கற்பைக் கெடாது பாதுகாத்துக்கொள்வது என்ற உறுதியுடன் திரௌபதி நின்றனளென்பார் 'நிலைநின்ற கற்பினாள் நின்றனள்' என்றார். கீசகக் காலன்என்றுபிரதிபேதம். ஆல் - அசை. (உக)

24.—அப்போது கீசகன் படுக்கையிலிருந்த நிலை.

காமருகுளிரிணைபங்கதவிமெல்லணை
காமரைவளையம்வண்டாதறுமல
ராமுறையனைத்துமெல்லமளிமேல்விரித்
தீமலர்லெரியின்மேலென்னவைகினான்.

(இ - ள்.) காமரு குளிரி - அழகிய குளிர்ச்சியையுடைய, பைங் கதலி மெல் அடை - இளைய வாழையின் மெல்லிய தளிரிலையும், தாமரைவளையம் - தாமரைச்சுருளும், வண் தாது அரு மலர் - வளப்பமுள்ள மகரந்தம் நீங் காத தாமரைமலரும், ஆம் - முதலாகிய, முறை அமைத்தும் - முறைமை யாகிய யாவும், மெல் அமளிமேல் விரித்து - மெல்லிய படுக்கையின்மேற் பரப்பி, ஈமம் வல் எரியின் மேல் என்ன - சுடுகாட்டிற் சுடுநெருப்பின் மீது பிணம் இருப்பதுபோல, வைகினன் - தங்கியிருந்தான்; (எ - று.)

தாபத்தைப் பொறுக்கமாட்டாமையாற் கீசகன் குளிர்ச்சியை வேண்ட, ஏவலாளர் சைத்தியோபசாரமாகப் படுக்கையில் வாழைத்தளிர் முதலியவற் றை யிட்டுவைத்தனராக, அதன்மேற் படுத்திருக்கும் கீசகனுக்கு அப்படுக்கை யும் பெருவெப்பத்தைச் செய்வதனால் ஈமவெரியின்மேற் கிடப்பது போலத் தவிப்புற்றுக் கிடந்தன னென்கிறார். இவனுக்கு உண்டாகிய காமதாபம் இவனுயிரையே கொண்டுபோவதற்குக் காரணமா மென்று குறிப்பிக்க, இவனுக்கு உயிருடனிருக்கும் போதே ஈமவெரியிற் கிடந்தாற் போலுந் தன்மை வாய்த்த தென்றது. குளிரி - கல்லாரமலரென்பாரும், பீலிக்குஞ்ச மென்பாரு முளர். (உச)

25. —பலமாதரீ சந்தனம் முதலியவற்றை அவன் தாபந்தணிக்கக்கருதி வீச, அவையும் வெப்பத்தை மிகுவிப்பன வாதல்.

சாந்தொடு தண்பனிநீருந் தாமமு
மேந்தியகரத்தினரேழைமார்பலர்
காந்தியகனன்மிசைக்காட்டுநெய்யென
வேந்தனதுடலகம்வெதும்பவீசினர்.

(இ - ள்.) சாந்தொடு சந்தனமும், தண் பனி நீர்உம்-குளிர்ந்த பனிநீரும், தாமமும்-பூமாலையும், ஏந்திய-தாங்கியுள்ள, கரத்தினர்-கையையுடையவரான, ஏழைமார் பலர்-பலஸ்திரீகள், —(தாம் ஏந்திய அந்தச் சாந்துமுதலியவற்றை), காந்திய பற்றியெரிகின்ற, கனல்மிசை-நெருப்பிலே, காட்டும்-சொரியப் பெறு கின்ற, நெய் என-நெய்யைப்போல, (எறிகனவே காமதாபத்தால் வெப்பங் கொண்டுள்ள), வேந்தனது - கீசகனென்ற அரசகுமாரனது, உடல் அகம் - உடம்பு, வெதும்ப-(பின்னும்) தாபங்கொண்டெரியுமாறு, வீசினர்-எறிந்தார்கள்.

பற்றியெரிகின்ற நெருப்பிற் பெய்யும் நெய் எங்ஙனம்அந்தநெருப்பைப் பின்னும் பற்றியெரியுமாறு செய்யுமோ, அங்ஙனமே ஏழைமார் கீசகன்மீது பெய்த சாந்து முதலியவை அவன்காமதாபத்தை மிகுவிக்கலாயின வென் பதாம். 'வீசினர்' என்ற சொல்லிஞற்றலால், அவனருகே வந்து சந்த னத்தை யப்புதல் முதலியன செய்யவும் இயலாதபடி அவன்மேனி வெப் பம் மிக்கிருந்த தென்பது பெறப்படும். கீசகனுடைய விரகதாபத்தைச் சந் தனம் முதலியன மிகுவித்தன என்று கூறவேண்டிய இடத்தில் 'காட்டும்' என்று பிரயோகித்திருத்தலால், இலக்கணையால், அச்சொற்குச் சொரியப் பெற்ற என்று பொருள் கூறலாயிற்று. (உரு)

26.—கீசகன் தன்முன்னே நிற்கும் திரௌபதியைக் காணுதல்.

தாக்கியகாமநோய்தழைக்கவன்புற
நோக்கியதிசையெலாங்காணுநோக்கினன்
பாக்கியமெஞ்சுறப்பலித்ததென்னவே
நீக்கியமடந்தைமுனிற்றல்கண்டுளான்.

(இ - ள்.) தாக்கிய - (தன்னை) வருத்திய, காமம் நோய் - மன்மதனால் நேர்ந்த வியாதியானது, தழைக்க-கிளையாகிற்க, அன்புஉற-காதல்பொருந்த, நோக்கிய-கண்ணுக்குளட்டிய, திசை எலாம்-திக்குக்கள் முழுவதிலும், காணும்-பார்க்கின்ற, நோக்கினன் - கண்பார்வையை யுடையவனான கீசகன்,—'பாக்கியம் - (தான்செய்துள்ள) புண்ணியப்பேறு, பலித்தது பயனையுண்டாக்கிற்று', என்ன - என்று கருதுமாறு, நீக்கிய மடந்தை - (தன்னை) முன்பு விலக்கிய பெண்ணாகிய திரௌபதி, முன் நிற்றல் - முன்னே நிற்பதை, நெஞ்சுஉற - மனமார, கண்டுளான் - பார்த்தவனானன்; (எ - று.)

காமநோய் மிகமிக கண்ணுக்குத் தெரியுமிடங்களி லெல்லாம் கீசகன் மருளமருள விழிதுப்பார்த்தவனாய், திரௌபதிவந்து முன்னிற்றலைக் கண்டானென்க. அவள் முன்னேநின்றது - தான்செய்த புணணியப்பயனே அவளைத் தன்முன்னே வந்துநிற்குமாறுசெய்தது என்று அந்தக்கீசகன் கருதுதற்கு இடங்கொடுத்தது என்ற கருத்துப்பட, 'பாக்கியம்பலித்ததென்ன நெஞ்சுறமடந்தைமுன்நிற்றல் கண்டுளான்' என்றார். (உசு)

27.—இரண்டுகவிகள் - தன்னுதாரந்தோற்றத் திரௌபதியை வருகஎன்று கீசகனழைத்துரைத்துத் தெரிவித்தும்.

வந்தனளென்னுடைமாதவப்பயன்
வந்தனளென்னுடைவழிபடுந்தெய்வம்
வந்தனளென்னுடையாவிவாழ்வுற
வந்தனளென்னுடைவண்ணமங்கையே.

மூன்றுகவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) என்னுடை மாதவம் பயன் - என்னுடைய பெருந்தவத்தின் பயன் போன்றவள், வந்தனள்—: என்னுடை வழிபடும் தெய்வம் - யான் வழிபடுகின்ற தெய்வம் போன்றவள், வந்தனள்—: என்னுடை ஆவி - என்னுடைய உயிர்போன்றவளான பெண், வந்தனள்—: என்னுடை வண்ணமங்கை - என்னுடைய வண்ணமங்கை, வாழ்வு உற-(யான்) வாழ்ச்சியடைய, வந்தனள்—: (எ - று.)

வழிபடுகிறதெய்வம் தன்விருப்பத்தை யளிக்கவல்லதாதல்போல இந்த வண்ணமங்கை தன்விருப்பமாகிய கலவியின்பத்தை யளிப்பா ளென்னுங கருத்தினால், அவளை 'வழிபடுந்தெய்வம்' என்கின்றான். என்னுடை ஆவி வாழ்வுஉற என்னுடை வண்ணமங்கை வந்தனள் வந்தனள் என்று கூட்டியுரைப்பாருமுளர். (உஎ)

28. வருகநீயருகுறமதுரவாசகந்
தருகநீயிருசெவிதழைக்கவுள்ளநின்
றருகுகநீதழுவுகவுடலங்தேதழுறப்
பருகநீவழங்குகபவளவாயெனை.

(இ - ள்.) நீ—, அருகு உ-ற - சமீபத்திற் பொருந்த, வருக—: நீ—, இரு செவி தழைக்க - (என்னுடைய) இரண்டுகாதுகளும் செழிக்குமாறும், நின்று உள்ளம் உருக - (உன்வாசகங்கள் என்மனத்திலே) நிற்பதனால்(அந்த) மனம் உருகுமாறும், மதுரம் வாசகம் - இனிய வார்த்தைகளை, தருக—. உடலம் தேம் உற - என்னுடம்பு இன்பமடையுமாறு, நீ தழுவுக—: நீ—, பருக - (நான்)நுகருமாறு, பவளம் வாய் - பவழம் போன்ற(உன்)வாயிதழை, வழங்குக - தருவாயாக, எனை - என்று சொல்லி,—(எ - று.)—"கிடந்தவ னெழுந்து" என்று மேற்கவியில் தொடரும். (உஅ)

29.—தன்னைக் கீசகன் பற்றவருகையில் திரௌபதி யோட, கீசகனும் தொடர்ந்து செல்லுதல்.

கிடந்தவனெழுந்தொருகேடுவந்துறு
மடந்தையைத்தழுவுவான்வந்துசார்தலும்
விடந்திகழ்விழியிணைவிளாடமேவட்கையாற்
றொடர்ந்தனனறிவிலாச்சீசாரன்றானுமே.

(இ - ள்.) கிடந்தவன் - படுக்கையிற் படுத்திருந்தவனான கீசகன், எழுந்து—, ஒரு கேடு வந்துறு மடந்தையை - ஒருதீங்கும் வரப்பெறுத பெண்ணாகிய திரௌபதியை, தழுவுவான் - ஆலிங்கனஞ்செய்துகொள்ளுதற் பொருட்டு, வந்து சார்தலும் - வந்துசேர்ந்த வளவில்,—விடம் திகழ் விழியிணை - கொடுமைவிளங்குகின்ற கண்பார்வையை யுடையவளான அந்தத் திரௌபதி, ஓட - ஓடாநிற்கையில்,—அறிவு இலா சோரன் தான்உம் - நல்லறிவு இல்லாத கள்ளநெஞ்சை யுடையனான அந்தக்கீசகனும், வேட்கையால்-காதலால், தொடர்ந்தனன் - (அவளை) தொடர்ந்து சென்றான்; (எ - று.)

'கேடுவந்துறு மடந்தை' என்றது, அவளுடைய பாதிவிரதியத்திற்கு ஒருவராலும் தீங்கு இழைக்க முடியாது என்ற குறிப்பினது. அவள் நோக்கே அந்தக் கீசகனுடைய மரணத்திற்குக் காரணமாவதால், 'விடந்திகழ் விழியிணை' என்ற தென்னலாம்: அன்றியும், கருவிழிக்கு விடத்தை உவமை கூறுதலும் உண்டு. (உக)

30.—கீசகனால் தொடரப்பெற்று ஓடின திரௌபதி அரண்மனையில் அரசர்காண வந்து வீழ்தல்.

ஓடியமடக்கொடியுலகுகாவலன்
சூடியமணிமுடிதலங்குமீகாயிலின்
வாடியகொடியெனவந்துவீழ்ந்தன
ணீடியமேவத்தனைவிருபர்காணமே.

(இ - ள்.) ஓடிய - (அங்ஙனம்) ஓடிப்போன, மடம் கொடி-மடப்பத்தை யுடைய கொடிபோன்றவளான திரௌபதி,—வாடிய கொடி என-வாட்ட முற்ற கொடி போல,—வேந்து அவை நீடிய நிருபர் காண-அரச சபையிலே மிக்குள்ள அரசரெல்லாங் காணுகிற்கையில், உலகு காவலன் - விராடதேசத் திற்குத் தலைவனுகிய விராடராசன், சூடிய - அணிந்துள்ள, மணி முடி - இரத்தினம் பதித்த கிரீடத்தோடு, துலங்கு - விளங்குகின்ற, கோயிலின் - அரண்மனையிலே, வந்து வீழ்ந்தனள்—; (எ - ம.)

தன்முறையீட்டை யுணர்த்துமாறு காவலன்மணிமுடியுடன் தலங்கு கோயிலிற் சென்றன ளென்க. இராசசபையிற் பல அரசர் திரண்டிருப்பா ராதலால், 'நீடிய வேத்தவைநிருபர் காணவீழ்ந்தனள்' என்றார்: இனி, நிருபர் என்றது - விராடனைக் காட்டுமென்றலும், தருமபுத்திரனைக் காட்டு மென்ற லும் உண்டு. நீடிய - பெருமைபெற்ற, வேத்தவை யெனினுமாம். (கூ0)

31.—அந்தக் கீசகன் தன்னிணைகையால் திரௌபதியைத் தீண்டக் கருதுதல்.

தொழுந்தகைமனுகுலத்தோன்றல்கண்ணெதிர்
விழுந்தழுந்தெரிவையைவேட்கைநோயிணை
லழுந்தியகாமுகனச்சமின்றியே
செழுந்துணைக்கைகத்தலந்தீண்டவுன்னினான்.

(இ - ள்.) தொழும் தகை - (யாவராலும்) வணங்குதற்கு உரிய நற்குண முடைய, மனு குலம் தோன்றல்-மனுகுலத்திலே தோன்றியவனுன விராட ராஜனுடைய, கண் எதிர் - கண்ணுக்கு எதிரிலே, விழுந்து—, அழும் - அழு கின்ற, தெரிவையை - பெண்ணுகிய திரௌபதியை, வேட்கை நோயிணை - காதல்நோயிலே, அழுந்திய - ஆழ்ந்துவிட்ட, காமுகன் - காமவிசையை யுடையவனுன கீசகன், அச்சம் இன்றி - (பலருங்காண்கையில் நாம் ஒரு பெண்ணைத் தீண்டலாமோ என்கிற) கூசசமு மில்லாமல், செழுந் துணை கைதலம் - வலிமையுள்ள இரட்டையான (தன)கைகளால், தீண்ட - (அவளைப்) பற்றுவதற்கு, உன்னினான் - நினைத்தான்; (எ - று.)

மனு - வைவஸ்வதமனு. இந்தக்கீசகன் மனுகுலத்தோன்றலின் கண் ணெதிரில் அச்சமின்றித் தெரிவையைத் தீண்ட உன்னிய காரணம் வேட்கை நோயிலழுந்தியதும், அரசன்தன்னை யொன்றுஞ்செய்யமாட்டானென்ற நம்பிக்கையு மாகும். 'ஆசைவெட்கமறியாது' என்பது பழமொழி. (கூக)

32.—சூரியனேவலால் ஒருகிங்கரன் விரைவாகவந்து அந்தத் திரௌபதியைத் தீண்டாதவாறு கீசகனை அப்பால் விசுதல்.

உன்னுமவ்வளவையினுருளையொன்றுடைப்
பொன்னெடுந்தேரவன்புகலமற்றிருரு
வன்னெடுங்கிங்கரன்புனைமமாருத
மென்னவந்தடுத்தயலெடுத்துவீசினான்.

(இ - ள்.) உன்னும் அ அளவையின் - (திரௌபதியை அந்தக்கீசகன் தீண்ட) நினைத்த அவ்வேளையில், உருளை ஒன்று உடை பொன் நெடு தேர

வன் - ஒற்றைச்சக்கரம் பூண்ட அழகிய தேரையுடையவனான சூரிய பகவான், புகல - ஏவ,—மற்று ஒரு வல் நெடு கிங்கரன் - வேறொரு வலிய நெடிய பணியாளன், சூறை மாருதம் என்ன அடுத்து வந்து - சுழல்காற்றுப் போல விரைந்து கிட்டிவந்து, எடுத்து—, அயல் வீசினன்-(அந்தக் கீசகனை திரௌபதியைத் தீண்டாதபடி) அப்பால் எறிந்திட்டான்; (எ - று.)

கீழ் இருபத்திரண்டாஞ் செய்யுளில் "இரங்குறு மென்னைகத் திடரை நீக்குவாய்" என்ற சூரியனைநோக்கி வேண்டிக்கொண்டதற்கு ஏற்ப, அவனு லேவிய கிங்கரன் இந்தத் திரௌபதியைப் பாதுகாத்தன னென்க. தான் இருந்த இடத்திற்குச் சுரேதஷ்ணையின் கட்டளையினால் திரௌபதி சுராபாத்தி ரத்தைக் கொணர்கையில் கீசகன் இவளைக்கண்டு வலியக் கையைப்பற்ற, இவள் உதறிக்கொண்டுசெல்லுகையில் அந்தக்கீசகன் இவளைப்பின்தொடர்ந்து சென்று இராசசபையிலே கூந்தலைப்பற்றிச் சினத்தினால் இவளைக் காலினால் தள்ள, அப்போது சூரியனாலேவப்பட்ட பாகுகதெனுமருவன் வந்து அந்தக் கீசகனைப் பூமியில் தள்ளிநசுக்க, பின்னர் இவள் விராடராசனிடத்து முறையிட்டும் அவன் விசாரியாதுவிட்டன னென்று முதனூல் கூறும். (ரூ)

33.—விராடர் கீசகன்செயலைக் கண்டறிந்தும் அரசத்தினால் வாளாவிருத்தல்.

கண்டனனிருந்தமண்காவல்மீவந்தனு
மென்டகுகெறிமுறையிடறுகீசகன்
றிண்டிறல்வலிமையுஞ்செயலுஞ்சிந்தையிற்
கொண்டொருவாய்மையுங்கூறவஞ்சினனே.

(இ - ள்.) இருந்த - (மீவந்தனையிலில) தாயகியிருந்த, மன்னு காவல் மீவந் தன்உம் - பூமியைப் பாதுகாத்தலில யுடைய விராடவரசனும், கண்டனன் - (கீசகனுடைய அக்கிரமச செயலைக்) கண்ணாரக்கண்டவனையும், எண்தகு நெறிமுறை - (பெரியோரால்) மதிக்கத்தகுந்திய நியாயவழியினின்று, இடறு - தவறிய, கீசகன் - கீசகனுடைய. திண் திறல் வலிமையும் - மிக்க வலிமையையும், செயல்உம்-அக்கிரமச் செய்கையையும்,சிந்தையில் கொண்டு-மனத்திலெணணி, ஒரு வாய்மை கூறஉம் - ஒருவார்த்தை சொல்லவும், அஞ்சினனன்—; (எ - று.)

அரசனுதலால் நீதியிற்பிழைத்த கீசகனைத் தண்டிக்கவேண்டியதே முறையாயிருக்க அதைச் செய்யாவிடினும், 'நீ செய்வது முறையன்று: தகாத செயல்' என்றுவது சொல்லியிருக்கலாமே: அதுவுஞ் செய்திலனென்பதாம். 'வாய்மையும்'என்ற விடத்தினின்று பிரித்துக் கூட்டப்பட்ட உம்மை, எச்சப் பொருளது. (ரூ)

34.—தருமபுத்திரர் திரௌபதி இவர்களைச்செயலைக்கண்ட வீமர், கீசகனை யழித்தயாறு ஒருமாத்தைப் பிடுங்குப்படி வெதுண்டு நோக்குதல்.

அடுதொழிற்பலாயணனழுதமின்னையுங்
கடுமையிற்பின்றொடர்காளைதன்னையும்

படருறக்கண்டுதன்பாங்கர்நின்றதேர்
விடவினையப்பிடுங்குவான்வெகுண்டுநோக்கினான்.

(இ - ள்.) அடு தொழில் - (அரண்மனையிலே) சமையல்வேலையிலமர்ந்திருந்த, பலாயனன் - பலாயனனென்று மாறுபெயர் பூண்ட வீமசேனன்,—அழுத மின்னே உம் - அழுதுகொண்டு முன்னே செல்கின்ற மின்னல் போல் பொன்னான திரௌபதியையும், கடுமையில் - விசையாக, பின் தொடர் - (அந்தத் திரௌபதியைப்) பின்னே தொடர்ந்துசென்ற, காளதன்னை உம் - இளவெருது போல்பவனான கீசகனையும், படர் உற - (தன்மனத்தில்) துன்பமுண்டாக, கண்டு - பார்த்து,—தன் பாகர் நின்றது ஓர் விடவினை - தன்பக்கத்திலிருந்தவொரு பாதகத்தை, பிடுங்குவான் - (அந்தக்கீசகனை மோதி யொழிக்கும்படி) வேரோடு பிடுங்கும்பொருட்டு, வெகுண்டு நோக்கினான் - சினக்குறிப்புக்கொண்டு பார்த்தான்; (எ - று.)

விடவி—விடபீ: கிளைகளையுடையது என மரத்திற்குக் காரணக்குறி. முதலில் மரதனைப் பிடுங்குவான் வெகுண்டு நோக்கியது, தருமன் கருத்தையுணர்தற்பொருட்டென்னலுமாம். (கூசு)

35.—தருமன் அந்தவீமன்செயலைத் தடுத்தல்.

கனிட்டனதெண்ணமக்கங்கனுகிய
முனித்தகையுணர்ந்தவன்முகத்தைநோக்கியித்
தனிப்பெருமராமரந்தழல்கொளுந்திடா
தனைக்கடிமிந்தனமன்றென்றுரைக்கினான்.

(இ-ள்.) கனிட்டனது-(தன்னினுஞ்) சிறியவனுகிய வீமசேனனுடைய, எண்ணம் - கருத்தை, அ கங்கன் ஆகிய முனி தகை - அந்தக் கங்கனென்று மாறு பெயர்பூண்ட துறவியாகிய நற்குணமுள்ள தருமபுத்திரன், உணர்ந்து - தெரிந்துகொண்டு, (அச்செயலைத் தடுக்குமாறு), அவன் முகத்தை நோக்கி - அந்த வீமசேனனுடைய முகத்தைப் பார்த்து, 'இ தனி பெரு மராமரம் - இந்தத்தனித்துள்ள பெரிய மராமரமானது, தழல் கொளுந்திடாது - நெருப்புப்பற்றி யெரிவதற்கு ஏற்றதாகாது: (ஆகையால் இப்போது), உனக்கு அடும் இந்தனம் அன்று - உனது அடுதொழிற்கு ஏற்ற விறகு அன்று,' என்று—, ஓதினான் - (குறிப்பினுற்) சொல்லி (அந்த வீமன் செயலை)த் தடுத்திட்டான்; (எ - று.)

இந்தனத்துக்கு உதவுமாவென்று பலாயனன் பார்ப்பதாகவைத்துக்கொண்டு, 'இது விறகுக்கு உதவா தாதலால், இதனைப் பிடுங்கவேண்டா'என்று தடுப்பவன்போல 'இத்தவேளையில் இதுகொண்டு எதிரியை ஒழிக்க முயல்வது தகாது' என்பதைக் குறிப்பித்தான் தருமபுத்திர னென்க. பலாயனனென்ற வீமனுடையசெயலை இங்குத் தருமபுத்திரன் வேறுகாரணங்கூறி மறைத்ததாக வந்தது அணியியலில் வஞ்சநவிற்சியணியின் பாற்படும்: வடநூலார் வ்யாஜோக்தி யென்பர். முனித்தகை - முனிவர்க்குரிய நற்குணமுடையவனென அன்மொழித்தொகை. (கூடு)

36.—அதுகேட்டு வீமன் வலிமையை யடக்கிக்கொண்டுநின்ற ஞான, திரௌபதி விராடன் முன்னிலையில் அழுதுகொண்டு கூறுதல்.

சீரியகங்கணன் றுரைததசெம்மொழி
பாரியதாமெனப்பலாயனன்கொளா
வீரியமகத்துளேநிறுத்தும்வேலையிற்
கூரியவிழியிணைளழுதுகூறுவாள்.

(இ - ள்) சீரிய - சிறப்புற்ற, கங்கன் - கங்கனென்று மாறுபெயர் பூண்ட தருமபுத்திரன், அன்று - அப்போது, உரைத்த - சொன்ன, செம்மொழி - நேர்மையான வார்த்தைகளை, 'பாரியது ஆம் - (இச்சொல்) சிறப்புற்ற பேச்சாம்,' என - என்று, பலாயனன் - வீமசேனன், கொளா - (மனத்திற்) கொண்டு, வீரியம் - (தன்) வலிமையை, (வெளிக்காட்டாது), அகத்துளே - (தன்)மனத்தினிடத்தில்தானே, நிறுத்தும் - அடக்கிய, வேலையில் - அப்போது,—கூரிய விழியிணை - கூர்மையான கண்களை யுடையவளான திரௌபதி, அழுது கூறுவாள் - அழுதுகொண்டு கூறுபவளானாள்; (எ-று.)—திரௌபதி விராடன்முன்னிலையிலே புலம்பிக் கூறுவதை, மேல் மூன்று கவிகளிற் காண்க. (ருக)

37.—மூன்றுகவிகள் - விராடனிடம் திரௌபதி முறையிடுவதைத் தெரிவிக்கும்.

தீண்டுதறகாதெனச்செம்மையொன்றிலான்
வேண்டியசெய்வதுவேந்துநீதியோ
வாண்டகையிதற்குநீயல்லவாமெனை
வீண்டொருமொழிகொடாதிருப்பதென்கொலோ.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) '(என்னை), தீண்டுதல்—, தகாது—', என - என்றுசொல்லவும்,— செம்மை ஒன்றும் இலான் - நற்குணம் சிறிதுமில்லாதவனுகிய கீசகன், வேண்டிய(து) - (தான்) விரும்பியசெயலை, செய்வது-செய்யவிடுவது, வேந்து நீதிஓ - அரசநீதிக்கு ஏற்குமோ? ஆண் தகை - ஆண்மைக்குணமுடையோனே! நீ—,இதற்கு - இந்தக் கீசகனுடைய செய்கைக்கு, 'அல்ல - (இது) செய்யத்தக்கதல்ல: (அன்றி), ஆம் - (இது) செய்யத்தக்கதே,' எனு - என்று, ஈண்டு - இப்போது, ஒரு மொழி - (இவ்விரண்டில்) ஒரு சொல்லை, கொடாது - தராமல் [வாய்விட்டுச் சொல்லாமல்], இருப்பது—, என் கொல்ஓ - என்னகாரணமோ? (எ - று.)

நான் கீசகன்செயலைக்குறித்து உன்னிடம் முறையிட்டுக்கொள்ளுகிறேனே! இப்போது இக்கீசகன்செயலை மன்னவனுகிய நீ கண்டிக்கவாவது வேண்டும்: அல்லது அது செய்யமுடியாவிட்டால், அவன்செயல் சரியேயென்றுவது பாராட்டவேண்டும்: இவ்விரண்டில் ஒன்றுஞ்செய்யாது இருப்பதும் ஒருமுறையோ! என்கிறாள். அக்கிரமஞ்செய்வதைக் கண்டிப்பது

சபாகோலன்முறை: அக்கிரமத்தைச் சபையென்பது கொடுங்கோலன்முறை: இவ்விரண்டில் ஒன்றிலுஞ் செல்லாதது என்னே! என்கிறான். (கூ)

38 அன்புடைத்தேவிதன்னருகுதோழியாய்
நின்பெருங்கோயிலினீடுவைகினேன
னென்பெருவினையினுலின்றுன்மைத்துனன்
றன்புயவலியினுற்றழுவவுன்னினனன்.

(இ - ள்.) அன்பு உடை-(என்னிடத்து) அன்புள்ள, தேவிதன் அருகு-(உனது) அரசியின் சமீபத்திலே, தோழி ஆய் - தோழியாகி, நின் பெருங் கோயிலின்-உனது பேரரண்மனையில், நீடு-வெகுநாள்கள், வைகினேன்-தங்கினேன்: என் பெரு வினையினுல்-என்னுடைய பெருத்த தீவினையினுலே, இன்று—, உன் மைத்துனன்—, தன் புயம் வலியினுல் - தன்னுடைய புஜ பலத்தைக்கொண்டு, தழுவ-(என்னை) ஆலிங்கனஞ் செய்து கொள்ளுதற்கு, உன்னினனன் - நினைத்தான்; (எ . று.)

புயவலி படைத்திருத்தலால் தான் அக்கிரமச்செயலைச் செய்தாலும் மன்னவன் கண்டிக்கமாட்டா னென்ற கருத்தினுலேயே அந்தக்கீசகன் என்னைத் தழுவநினைத்தது என்று குத்துப்பாடாகத் திரௌபதி எடுத்துக் காட்டுகின்ற ளென்க. மைத்துனன் - மனைவியினுடன் பிறந்தவன். (கூ)

39. பெருந்தகையன்றிதுபேசலன்றிநீ
யிருந்தனையுனக்காசெங்ஙன்செல்வது
வருந்தினர்வருத்தநீமாற்றலாய்யெனி
னருந்திறலரசநின்னாணைபொன்றுமே.

(இ - ள்.) நீ—, பேசல் - (கீசகனைக் கண்டித்துக்) கூறுதலை, அன்றி - செய்யாமல், இருந்தனை—:இது பெருந் தகை அன்று - இது (உனக்குப்) பெருமைக்குணமாகாது: உனக்கு - (அநீதிபுரிபவரைக் கண்டிக்கமாட்டாத) நீனக்கு, அரசு - அரசத்தன்மை, எங்ஙன் செல்வது - எங்ஙனம் நடக்கும்? அரு திறல் - அருமையான திறமையையுடைய, அரச - அரசனே! வருந் தினர் - வருததமடைந்தவரின், வருத்தம் - வருத்தத்தை, நீ—, மாற்றலாய் - மாற்ற வல்லமையற்றவன், எனின் - என்றால், நின் ஆணை பொன்றும் - உன்னுடைய அரசுசெலுததுந்தன்மை அழிந்துவிடும்; (எ-று.)—ஏ-இரக்கம்.

அரசத்தொழிலென்பது நலிவுபட்டோரைக் காத்தலே யாதலால், அது செய்யமாட்டாத அரசும் அரசோ! என்றவாறு. பெருந்தகை-பண்புத்தொகை.

40.—இங்ஙனம் புலம்பிய திரௌபதி அந்தக்கீகோலத்தோடு
மன்னவன்தேவியிடம் வீழ்ந்து எங்தஞலே.

எனவிவள்புலம்பிமெய்சோர்ந்தபூழியுங்
கனதனநினைத்திடுங்கண்ணினீருமாய்
மனமிகமறுகிடமன்னன்மேவிபா
லினைவுடனெய்திவீழ்ந்தேதங்கினிம்மிளுள்.

(இ - ள்.) என - என்று, இவள் - இந்தத்திரௌபதி, புலம்பி-அழுது' மெய் - உடம்பிலே, எய்த்த - படிந்த, பூழிஉம் - புழுதியும், கனம் தனம் நனைந்திடும் - பருத்த தனங்கள் நனையப்பெற்ற, கண்ணின் நீர்உம் ஆய் - கண்ணீரையுங் கொண்டவளாய், மனம் - (தன்) நெஞ்சம், மிக மறுகிட - மிகவுங் கலங்க, மன்னன் தேவி பால் விராடமன்னனுடைய மனைவியாகிய சுதேஷ்ணையினிடம், இனையுடன் - வருத்தத்துடனே, எய்தி - போய்ச் சேர்ந்து, வீழ்ந்து - கீழ்வீழ்ந்து, எங்கி விம்மினள் - எக்கமுற்று அழுதாள்; (எ - று.)

எங்குதல் - அக்கிரமஞ்செய்தவனையொறுத்துத் தன்னைப்பாது காக்க வேண்டியசெயலில் மன்னவன் செய்யாமையால் மனவாட்டங் கொள்ளுதல். ()

41.—ழன்றுகவிகள் - ஒருதோடீர்: கங்கனென்று மாறுபேரீண்டிருந்த யுதிஷ்டிரான் விராடனுக்கு இடித்து மதிகூறுதலைத் தெரிவிக்கும்.

பூதலமாண்மையாற்புரக்குமன்னவர்
தீதொழில்புரிஞரைத்தெண்டியாரெனி
னீதியுஞ்செல்வமுநிலைபெறுங்கொலோ
வேதிலர்தமரெனவிரண்டுபார்ப்பரோ.

(இ - ள்.) பூதலம் - பூமியை, ஆண்மையால் - (தமது) பராக்கிரமத்தால், புரக்கும் - பாதுகாக்கின்ற, மன்னவர் - அரசர், தீ தொழில் புரிஞரை - கொடுஞ்செயலைச் செய்கின்றவரை, தெண்டியார் எனின் - சிட்சிக்காமற் போவாரே யாஞல், (அப்போது மன்னவர்க்கு), நீதியும் - நியாயமென்பதும், செல்வமும் - ஐசுவரியமும், நிலைபெறும் கொல் ஓ நிலைத்துநிற்குமோ?(முறை செலுத்தும் மன்னவர் தாம் செலுத்தவேண்டிய நீதிநெறியில்), 'வேதிலர் - (இவர் நமக்கு) யாதோரினையும் இல்லாதவர்' தமர் - (இவர் நமக்குச்) சுற்றத்தார்', என - என்றுசொல்லப்படுகின்ற, அ இரண்டு - அந்த இரண்டையும், பார்ப்பர் ஓ - கருதுவார்களோ? (எ - று.)

அரசர் முறைசெலுத்தும்போது 'தமர் பிறர்' என்று பார்த்தல் தகாதாகையால், தமரிற் சேர்ந்த கீசகன் தீங்குஇழைத்தனிப்போது அவனையுந் தண்டித்தலே தகுதி யென்றவாறு. 'தீத்தொழில்' என வரற்பாலது, செய்யுளின்பம் நோக்கி 'தீதொழில்' என இயல்பாயிற்று. பெறுங்கொல் ஓ என்றவிடத்து, கொல் - அசை; கொல் - வினாவெனில், ஓ - அசை. (சக)

42. யாருமில்லொருத்திநின்னில்லில்லைகிளை
லார்வமுற்றவள்வயினன்புகூர்வது
வீரமோதருமமோவிருப்பமோவிலை
பூரியரலாதவர்புரிதல்போதுமோ.

(இ - ள்.) யார் உம் இல் - வேறொருருகதியும் அற்றவளான, ஒருத்தி - ஒரு பெண்பிள்ளை, நின் - உன்னுடைய, இல்லில் - மனையிலே, (உன்னையே கதியாகநம்பி), வைகினஞல் - தங்கினளாஞல், (ஒருத்தன்), அவள் வயின் - அவளிடத்து, ஆர்வம் உற்று - ஆசைகொண்டு, அன்பு கூர்வது -

காதல்மிகுவது,—வீரம்ஓ - வீரச்செயலோ? (அன்றி), தருமம்ஓ - நியாயத்துக்கு ஏற்றசெயலோ? விருப்பம்ஓ - காதற்செயலோ? இவை - இவ்வாறான செயல்களோ, பூரியர் அலாதவர் - கீழ்மக்களல்லாதார், புரிதல் செய்வது, போதும்ஓ - தகுமோ? (எ - று.)

அகந்தியான ஒருத்திக்கு ஒருதீங்கும் வராதுபார்ப்பது வீரச்செயலும் தருமச்செயலும் ஆகுமன்றி, அவளை வலாத்காரஞ் செய்வது காதற்செயலுக்கும் தகாது: இவனன் காதலிப்பதுபோன்ற செயல் அற்பர்செய்யுஞ் செய்கையே யாமென்றவாறு. (அ)

43. கீசகனையினுங்கேடுசெய்தன
னைசமோய்மன்பதையனைத்தினுக்குமுண்
டேசிதுநினக்குமென்றிருந்தவேந்தொடும்
வாசகம்பலசொனன்டறைவலானுமே.

(இ - ள்.) கீசகன் ஆயின்உம் - கீசகனையிருந்தாலும், கேடு செய்தனன் - செய்யதகாத காரியத்தைச் செய்தான்: (இதற்குக் காரணம), ஆசை நோய் - காதல்நோயென்பது, மன்பதை அனைத்தினுக்குஉம் - மனிதவர்க்கத்திற்கெல்லாம்,உண்டு-உள்ளதான்றே(என்பது).(ஆதலால்,மன்னவனனவன் தீங்குசெய்தானை ஒறுக்கவேண்டியவன்: அவ்வாறு தீங்குசெய்த கீசகனை ஒறுக்காது வாளாஇருக்கின்ற), இது - இச்செயல், நினக்கு உம் எசு - (மன்னவனன) உனக்கும் குற்றம்விளைப்பதே, என்று - இவ்வாறு, இருந்த - (ராஜசபையிலே) தங்கியிருந்த, வேந்தொடுஉம் - விராடராசனோடும், வாசகம் பல சொனன் - பலவாசகங்களைச் சொன்னான்: (யாவனெனில்),—மறைவலான்உம் - வேதங்களில் வல்லவனன அந்தணவடிவங்கொண்டிருந்த யுதிஷ்டிரனும்: (எ - று.)

இரண்டாவது அடி, முதலடியைச் சமர்த்திக்கின்றது; வேற்றுப் பொருள்வைப்பாணி. கீசனையினும் என்ற இடத்துள்ள சிறப்பும்மை-அவன் வலியுடையவனும் மன்னவனுக்கு நெருங்கிய உறவினனும் என்றபொருளைக் காட்டும். நினக்கும் என்ற எச்சவும்மை - எவ்வாறு கீசகனுக்கு ஏசு உண்டாக்குமோ அதுமேலலவே உனக்கும் ஏசினையுண்டாக்கும் என்ற கருத்தினைது. (அ)

44.—விராடன் மனமழிந்து தருமனையிற் சேர்தல்.

முன்னுறமுனிவரன்மொழிந்தவாய்மையு
மின்னலோடழுதவளிசைத்தவாய்மையுங்
கன்னமூடுறச்சுடக்கருத்தழிந்துபோய்
பன்னலுந்தன்றிருபரினையிலெய்தினன்.

(இ - ள்.) முன் உற - (தன்) எதிராக. முனிவரன் மொழிந்த - முனிச்சிரேஷ்டனன கங்கனென்ற யுதிஷ்டிரன் சொன்ன. வாய்மைஉம்-உண்மையான வார்த்தையும, இன்னலோடு - மனவருத்தத்தோடு, அழுத - புலம்பித்

கொண்டு, அவள் - அந்தக் கிழொளபதியாகிய எண்ணமகள், இசைத்த சொன்னை. காய்மையும் - உண்மைவாத்தையும், கன்னம் ஊடுஉற-காதைத் தொளைதத்தெண்டு சென்றதனால், சுட - (தன்) மனத்தைச் சுடலே, மன்னன்உம்-விராடராசனும், கருத்து அழிந்துபோய் - மனம்அழிந்திட்டு, தன் திருயிலையில் - தன் அழகிய வீட்டிலே, எய்திஞன் - போய்ச் சேர்ந்தான்; (எ - று.)

'மூன்னுற' என்பது-மொழிந்த என்பதனேடு மாத்திர மன்றி, இசைத்த என்பதனேடும் இயையும். 'மன்னனுந் தன் திருமனையி லெய்திஞன்' என்ற இடத்து உம்மை. யேற்செய்யுளில் 'வீமன் மடையி லெய்திஞன்' எனத் தழுவுதலால், எதிரதுதழுவியசச்சமாம்: இனி 'மன்னன் தேவிபால் திரௌ பதி யெய்தி'என்றதைதத தழுவுதலால், இறந்தது தழுவியதுஎனினுமாம்.(சச)

45.—வீமனும் சமையல்செய்யுமிடத்துக்குச் செல்லுதல்.

கண்ணெருப்பெழவிருகைகந்தெருப்பெழ
வுண்ணெருப்பெழத்தனதுடனெருப்பெழ
மண்ணெருப்பெழவெழமடையிலெய்தினன்
றிண்ணெருப்பினுமிகுசினங்கொள்வீமனே.

(இ - ள்.) திண் நெருப்பின்உம் - (எப்படிப்பட்ட பொருளையும் எரிக்கும்) வலிமையுள்ள நெருப்பைக்காட்டிலும், மிகு சினம் கொள் - மிக்க கோபத்தைக்கொண்ட, வீமன்—,—கண் நெருப்பு எழ - (தன்) கண்களிலிருந்து கோபாக்கினியின்பொறி பறக்கவும், (அவ்வாறே), இரு கை நெருப்பு எழ - (மோதிப் பகையழிக்கவல்ல) இரண்டுகைகளினின்றும் நெருப்புத் தோன்றவும், உள் நெருப்பு எழ - மனத்திலும் உக்கிரந் தோன்றவும், தனது உடல் நெருப்பு எழ - (உள்ளிருக்கும் சினத்தீ வெளியேமூள்வதனால்) தன் உடம்பினின்றும் நெருப்புத் தோன்றவும், மண் நெருப்பு எழ எழ - (அந்தச் சினத்தோடு உக்கிரங்கொண்டு நடத்தலால்) நடக்கும் பூமியினின்றுங்கூட நெருப்பு மிகுதியாகத் தோன்றவும், மடையில் - சமையல்செய்யுமிடத்தில், எய்திஞன் - போய்ச்சேர்ந்தான்; (எ - று.)

ஒருபொருளையுடைய 'நெருப்பெழ' என்ற தொடர் பன்முறைவந்தது-சொற்பொருட்பின்வருநிலையணி. கைநெருப்பெழ என்றது - அப்போது பகையைமோதி யொறுப்பதற்குக் கை ஒருபால் விரைவுகொண்டிருந்தமையைக் குறிப்பிக்கும். நெருப்பெழவெழமடையில் என்றும் பாடம். (சரு)

வேறு.

46.—சூரியாஸ்தமன வருணனை.

பன்னிரு வரிஞ நாடொறுங் கனக பருப்பதம் வலம்வருந் தேரோன், மின்னிகர் மருங்குல் விரதசா ரிணிபால் விளைவுறு துயரம துணர்ந்து, தன்னெரு மாபிற் ரூன்றலை வெறுத்துத் தனிப்பெருந் தேர்குட பொருப்பின், சென்னியி னுருள வுருட்டியத் திசையுஞ் சிவப்புறத் தானுமெய் சிவந்தான்.

(இ - ள்.) பன்னிருவரின் உம் - (ஆதித்தர்) பன்னிருவருள்ளே, நான் தொறுஉம் - தினந்தோறும், கனகம் பருப்பதம் - பொன்மலையாகிய மேருமலையை, வலம் வரும் - பிரதட்சிணமாக வருகின்ற, தேரோன் - தேரையுடைய சூரியன்,—மின் நிகர் மருங்குல் விரதசாரிணிபால் - மின்னலையொத்த விளக்கத்துடன் தவண்டு தோன்றுகின்ற இடையையுடைய விரதசாரிணி யென்ற மாறுபேர்பூண்ட திரௌபதியினிடத்தில், விளைவுறு - தோன்றிய, துயரம் அது - மனவருத்தத்தை, உணர்ந்து—,—தன் ஒருமாபில் தோன்றலை - தனது ஒப்பற்ற வம்சத்திற்பிறந்த ஆண்களிற்சிறந்தோனாகிய விராடமன்னவனை, வெறுத்து—, தனி பெரு தேர் - (தனது) தனித்த பெரிய தேரை, குட பொருப்பின் சென்னியின் உருள உருட்டி - மேற்குமலையின் [அஸ்தமய பருவதத்தின்] சிகரத்திலே உருண்டுசெல்லுமாறு செலுத்திவிட்டு, அ திசை உம் சிவப்பு உற - அந்தமேற்குத்திக்குஞ் செந்நிறமடைய, தான் உம் மெய்சிவந்தான்-; (எ - று.)

ஆதித்தியர் [சூரியர்] பன்னிருவராவார் - தாதா சக்கரன் ஆர்யமன் மித்திரன் வருணன் அம்சுமான் ஹிரண்யன் பகவான் விவசுவான் பூஷா சவிதா துவட்டா வன்பவர்; இன்னும் சிறிதுவேறுகவும் கூறப்படுவர். இந்தப் பன்னிரு பெயரைக்கொண்ட சூரியன் ஒவ்வொருமாதத்தில் ஒவ்வொரு பெயர்பூண்டு மேருவை வலம்வந்து பகலையுண்டாக்குவ னென்ப. இந்தச் சூரியன் விரதசாரிணிக்குத் தன்பம் உண்டாகி அன்னாள் முறையிடவும் அதனைச் செவியேற்று அன்னாள்துயரத்தைப் போக்காது வாளாவிருந்த தன்வம்சத்தவனான விராடனை வெறுத்துத் தான் அங்கிருத்தற்கும் விருப்பற்றுத் தன்தேரை மேற்குமலையான அஸ்தமயமலையில் உருண்டு செல்லச் செலுத்தி அம்மனவேறுபாட்டால் தான்செல்லுந் திசையும் சிவப்புறத் தன் மெய்யுஞ் சிவந்தா னென்பதாம். சிவத்தல் - வெகுளிக்குறி; வெகுளி - நீதி நடத்தாமைபற்றி விராடன்மேற் கொண்டது: சிவத்தல் நாணத்தினாலாகியது மாம்.

இதுமுதல் ஒன்பது கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று நான்கு ஐந்தாஞ்சீர்கள் விளச்சீர்களும், மற்றைமூன்றும் மாசீர்களுமாகிவந்த கழிநெடிலடி நான்குகொண்ட எழுசீராசிரிய விருத்தங்களீ. (சசு)

47.—விராடநகரத்தில் யாவரும் ஆதலழுதல்.

குந்திதன் புதல்வரைவருஞ்சேர்க முதிர்ந்திடவிதயமுங்கொதித்தார், வெந்திறல்வடிவேல்விராடனுந்தனது வேத்தியல்பொன்றலின் வெறுத்தான், செந்திருவனையசுதேட்டிணையென்னுந் தெரிவையுந் தெருமரலுழந்தா, ளந்தமாநகரிலனைவருநைந்தா ரார்கொலோவா குலமுறுதார்.

(இ - ள்.) குந்திதன் புதல்வர் ஐவர்உம் - குந்தீபுத்திரர்களான பஞ்சபாண்டவர்கள், சோகம் முதிர்ந்திட - துயரம் மிக, இதயம் உம் கொதித்தார்-மனமும் அழன்றார்கள்: வெந் திறல் வடி வேல் விராடன்உம் - கொடுந்திறலும் சாய்ச்செடிக்கப்பட்ட வேற்படையையு முடைய விராடராசனும், தனது-

தன்னுடைய, லேர்துஇயல் - அரசத்தன்மை, பொன்றலின் - அழிந்திட்ட தனால், வெறுத்தான்—: செந் நிரு அனைய சுதேட்டிணை என்னும் தெரிவை உம் - அழகிய இலக்குமியையொத்த சுதேட்டிணை யென்னும் பெண்ணும், தெருமரல் உழந்தாள் - மனச்சுழற்சி கொள்ளலானாள்: அந்த மா நகரில் - அந்தப் பெரிய நகரத்திலே, (இருவன்), அனைவர்உம் - யாவரும், வைத்தார் - வருந்தினர்கள்: ஆகுலம் உறுதா ஆர்கொல்லோ - (அந்தநகரத்தில்) துன்பமடையாதார் யாவர்தாமோ? [எவருமில்லை என்றபடி]; (எ - று.)

விராடநகரத்தில் யாவரும் வருந்தினரென்பதை வற்புறுத்த, 'அந்த மாநகரிலார்கொலோ வாகுலமுறுதார்? அனைவரும் வைகுந்தார்' என்று வினவும் விடையுமாகக் கூறினர். (எ)

48.—திரௌபதி நள்ளிரவில் வீமனைக் கிட்டிப் பகையையழிக்குமாறு வேண்டுதல்.

அனைவருந்துயின்றுகங்குலும்பாலுளானினைழுதகண்ணீரா
டினைவருதையல்கண்கணீர்மல்கவிறைமகன்மனைப்பணியெய்தி
னினைவருசெற்றமுடித்திடவல்லார்நீயலதில்லையிக்கங்குற்
கனைவருகழலாய்புரிவதியாதென்றுள்காளையுங்கனன்றிவைசொல்வான்.

(இ - ள்.) அனைவர் உம் - மக்களெல்லாம், துயின்று - உறங்கி, கங்குல்உம் - இரவும், பால் நாள் - பாதிராத்திரியாக, ஆன பின்—, அழுத கண்ணீரோடு இனைவரு-பெருகுகின்ற கண்ணீரோடு வருந்துகின்ற, தையல்-பெண்ணாகிய திரௌபதி, கண்கள் நீர் மல்க (தன்னிரண்டு) கண்களிலும் நீர் நிரம்பி நிற்க, இறையகன் - ராஜகுமாரனாகிய வீமசேனனுடைய, மடைப்பளி - சமையல்செய்புமிடத்தை, எய்தி - போய்ச்சேர்ந்து, 'நினைவரு - எண்ணத்தக்க [பெருதக], செற்றம் - பகையை, முடித்திட - ஒழித்திடுதற்கு, வல்லார் - வல்லமையுள்ளவர், நீ அலது - நீயல்லாமல், (வேறொருவர்), இல்லை - இலர்: கனைவரு கழலாய் - ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்தவனே! இ சங்குல் - இச்சஇரவில், புரிவது - (நீ) செய்யப்போவது, யாது-எது?' என்றுள் - என்றவிவளவினுள்: காளைஉம் - இளவெருதுபோன்றவனான வீமனும், கனன்று - மனங்கோபித்து, இவை - இவ்வார்த்தைகளை, சொல்வான் - சொல்பவனானான்; (எ - று.)—வீமன் சொல்வதை, மேலிரண்டு கவிகளிற் காண்க.

கீசகனைற் பரிபவம் சேர்ந்ததுமுதல் கண்ணீர்பெருக வருந்தியவண்ணமிருத்தலால். திரௌபதியை, 'அழுத கண்ணீரோடினைவரு தையல்' என்று குறித்தார். இக்கவருலிலே தான் புரியக் கருதியதை ஐம்பதாம்பாடலில் வீயன் விளம்பிப்பன். புரிவதியாதென்றுள் என்றவிடத்துக் குற்றியலிகரம் அலகு பெறவில்லை. இனைவரு, கனைவரு, வா - துணைவினை. (அ)

49.—இரண்டுகவிகள் - ஒருதொடர்: வீமசேனன் கூறுவன தெரிவிக்கும்.

பொறையெனப்படுவதாடவர்தமக்குப் பூணனைப்புகலினும்
பொருந்தார், முறைபறப்புரிந்தாலக்கணத்தவர்தம் முடித்தலே துணிப்

பதிதமுழுப்பூ, ணைறமலர்க்குழலார்தமக்குமெய்யகலா நாணமே கலஞ்செய்பூவெணினு, நிறையுடைப்பெரும்பூணமளிவாய்நாணநிகழ் வுறுநிகழ்ச்சியேயன்றே.

(இ - ள்.) ஆடவர்தமக்கு—, பொறை எனப்படுவது-பொறுமையென்று சொல்லப்படுவது, பூண் என புகலின்உம்-ஆபரணம்போல் விளக்கந்தருவது என நூல்களிற் கூறப்படினும், பொருந்தார் - பகைவர், முறை அற புரிந் தால் - முறைமைதவறாத தொழில்செய்தால், அ கணைத்து - அந்தநாடியில் தாமரை, அவர் தம்-அப்பகைவருடைய, முடி தலை - கிரீடமணிந்த தலையை, துணிப்பதே—, முழுப்பூண் - போரணிகலம்போல் விளக்கந்தருவதாம்: நறை மலர் குழலாதமங்கு - தேன்மணமலரையணிந்த கூந்தலையுடைய ஸ்திரீகட்கு, மெய் அகலா நாணம்எ - அவருடம்பைவிட்டு நீங்காத லஜ்ஜையென்பதுவே, நலம் செய்-அழகைஉண்டாக்குகின்ற, பூண ஆபரணமாகும்: எனின்உம்-என்றாலும், அமளிவாய் - (புருஷரோடு கலவிநிகழ்த்தும்) படுக்கையில், நாணம் நிகழ்வுஉறு நிகழ்சில - நாணமே நேர்தலில்லாமையாகிய தன்மையே, நிறை உடை பெரும் பூண அன்றே-நிரம்பிய பேராபரணமாகு மல்லவோ?

பொறை ஆடவர்க்கு வேண்டுமென்று எற்புறத்துக் கூறப்பட்டிருப் பினும், அப்பொறைக்குரிய இடமது அதனை மேற்கொள்ளுதல் தக்கதே யன்றி, முறையறப் பொருந்தார் புரிந்தபோது அப்பொறையை மேற்கொள் வது தகுதியன்றென்பதாம். இவ்விஷயத்தைவிளக்கப் பின்னிரண்டடிகளை எடுத்துக்காட்டாகப் பேசுகிறார். (சகு)

50. அரசவைப்புறத்திற்சௌபலன்சூதி லுறிந்தநாளினுமெமை யடக்கி, முரசமெங்கொடியோன்மேறசுறித்தனை லின்றுமம்முறை னையெமொழிந்தான், புரைமெங்களிற்றின்மதத்தகம்பிளக்கும் போ ருகிர்மடங்கல்போலின்னே, துரிசறப்பொருதுகீசகனுடலந் துணிப் பன்யான்றுணைவ்ரோடென்றான்.

(இ - ள்.) சௌபலன் சூதில் அழிந்தநாளின்உம் - சுபலனது புத்திர னெய சகுனியோடு ஆடிய சூதாட்டத்தில் தோற்ற காலத்திலும், அரசு அவைப்புறத்தில் - ராஜசபையிலே, (தீண்டாக்காலத்தில் திரௌபதியாகிய உன்னைத துரியோதனன் துச்சாதனனைக்கொண்டு கொணர்வித்துத் துகி லுரிகையிலும்),எமை-(தன் தம்பியராகிய)எங்களை, அடக்கி-(வெகுண்டு பகை யழிக்காதபடி) தடுத்து, முரசம் வெம் கொடியோன் - முரசமென்ற வெவ் விய கொடியையுடைய யுதிஷ்டிரன், தேசு அழித்தனன் - (எங்களுடைய) பராக்கிரமத்தை வெளியிடவொட்டாது செய்தான்: இன்றுஉம் - இன்னறைக் கும், அ முறைமைவ - அந்தக்கிரமத்தின்படியே, மொழிந்தான் - (உன்னைப் பரிபவப்படுத்திய கீசகனை அங்கிலையிலேயே யழிக்கவொட்டாது குறிப்பு) மொழியால் தடுத்திட்டான்: புரைசை வெம் களிற்றின் மத்தகம் பிளக்கும் போர் உகிர் மடங்கல் போல் கழுத்திடு கயிற்றையுடைய கொடிய மதயானையின் மத் தகங்களைப் பிளக்கும் வல்லமையையுடைய போர்செய்யவல்ல நகாயுதமான

சிங்கத்தைப்போல, இன்னே - இப்போதே, பொருது - போர்செய்து; தரிசு அற - (அன்னன் செய்த) குற்றம் நீங்க, கீசகன் உடலம் - அந்தகீசகனுடைய உடம்பை, யான் —, துணைவரோடு - (அவனுடைய) தம்பிமார்களுடனே, துணிப்பன் - பிளந்திடுவேன், என்றான்; (எ - று)

'இக்கனகுல் புரிவது யாது?' என்று விளவிய திரௌபதிக்கு, வீமன் 'இன்னே கீசகனுடலதனைத் துணைவரோடு தரிசறத் துணிப்பன்' என்று விடைகூறியவாறு. தேசு-தேஜஸ்: ஒளி: வீரர்கட்குள் மிக்குதலேதான்றுதற்குக் காரணமான பராக்கிரமம். ஆல் - தேற்றம்: ஈற்றசையுமாம். (ஙo)

51 — தருமபுத்திரன் தடுத்ததற்குத் திரௌபதி காரணங் கூறுதல்.

மருத்தின் மாமதலைவார்த்தைகேட்டனந்தமருச்சகன்மடக்கொடியுரைப்பா, ரிரைத்தநாளெல்லாஞ்சில்பகலொழியவொழிந்தனவொழிவிலாவுரமேவா, யருத்தியோடொருவரறிவுறுவண்ணமிருந்தரிவுறுமென்னுங், கருத்தினின்றம்முற்குண்டையிற்றடுத்தான்காலமுங்தெயமுணர்வான்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) மருத்தின் மா மதலை வார்த்தை கேட்டு - வாயுதேவனுடைய சிறந்தபுத்திரனாகிய வீமசேனனுடைய வார்த்தையைக் கேட்டு, அந்த மருச்சகன் மடம் கொடி - அந்நிலமகளிடத்தினின்று தோன்றிவளான மடமைக்குணமுடைய கொடிபோன்ற அந்தத்திரௌபதி, உரைப்பாள் - (பின்வருமாறு) சொல்பவளானாள்: ஒழிவு இலா உடலோய் - நீங்குதலில்லாத வலிமையுள்ளவனே! உரைத்த நாள் எல்லாம் - (பன்னிரண்டு வருஷம் எனவாசமும் ஒருவருஷம் அஜ்ஞாதவாசமுஞ் செய்யவேண்டுமென்று) சொல்லிய நாட்களெல்லாம், சில் பகல் ஒழிய ஒழிந்தன - சிலதினங்கள்போல் நீங்கப் பெரும்பாலும் கழிந்திட்டன: அருத்தியோடு - (அஜ்ஞாதவாசகாலம் இனிது கழியவேணுமே என்ற) விருப்பத்தோடு, ஒருவர் அறிவுற வண்ணம் - பிறரெவரும் அறியாதபடி, இருந்த-இருந்திட்ட, சீர்-நிலைமை, அழிவுறாம் குலைந்திடும், என்னும் - என்கின்ற, கருத்து - எண்ணம், நின் தம்முற்கு - உனது தமையனாகிய, உண்மையின் - இருத்தலால், காலமும் உம் தேயமும் உம் உணர்வான் - (எந்தக்காலத்தில் எந்த இடத்தில் அடங்கியிருக்கவேணுமோ, எந்தக்காலத்தில் எந்த இடத்தில் வலிமையை வெளிக்காட்டவேணுமோ அந்தத்) தேச காலங்களை யறிந்தவனான அந்தத்தருமன், தடுத்தான் - (இராசசபையிலேயே கீசகனை அப்போதே மரத்தினால் மோதி யொழிக்க முயல்வதைத) தடுத்திட்டான்; (எ - று.)

இதனால், யுதிஷ்டிரன் மானக்கேடுகிகழ்ச்சையிலும் அதற்குப் பதில் செய்யவொட்டாது என்னை யடக்கிச் சிறுமையை விளைகின்றனென்று அவன்மீது வீமன் குறைகூறியதற்கு, அவன்செயல் தக்கதே யென்று திரௌபதி காரணத்துடன் சமாதானங் கூறுகின்றாள். பாண்டவர் விராட

நகரத்தில் பத்துமாதங்கடத்தியபின்னரே கீசகன் திரௌபதியைக் காமித்த லாகிய இச்செயல் நிகழ்ந்த தென்றும், கிட்டத்தட்ட வருஷம் முற்றுப்பெறுஞ் சமயத்தில்தான் கீசகவதம் நிகழ்ந்த தென்றும் முதனூலால் அறியப்படும்; அக்கருத்தை யுட்கொண்டே, 'உரைத்த நாளெல்லாஞ் சில்பகலொழிய வொழிந்தன'என்று திரௌபதிகூற்றாகக் கூறியது. மருச்சகன் - மருத்ஸகஃ: காற்றை நண்பனாகவுடையவன் என்ற காரணம்பற்றி அக்கினியைக் காட்டும் வடசொல். முன் - முன்னே பிறந்தவனுக்குக் காலவாகுபெயர். (நிக)

52.—திரௌபதி 'இரண்டொருநாள்கழிந்தபின் கந்தருவர்கொன்றுரென்னும் வார்த்தை தோன்றுமாறு கீசகனை இரவிற் கொல்லலாம்' எனல்.

பாயுமெலஞ்சிறகர்க்கலுழன்முன்பட்டபாந்தள்போற்கீசகன்பணைத்தப்பக், காயுமதிந்தக்கங்குலிற்கடனன்றெருபகலிருபகல்கழிந்தா, னேயமோடின்றுவந்துகந்தருவர்கோர்படமலைந்தனரென்னுந், தூயசொல்லிளைப்பொருவாதையுறுதியென்னவத்திரௌபதிசொன்னாள்.

(இ - ள்.) பாயும் வெம் சிறகர் - (வானத்திற்) பாய்ந்து செல்லவல்ல வெவ்விய சிறகுகளையுடைய, கலுழன்முன் - கருடனுக்கு முன்னே, பட்டடங்கப்பட்ட, பாந்தள் போல் - பாம்புபோல, இந்த கங்குலில் - இன்று இரவில் தானே, கீசகன் —, பணைத்த - உயிர்துடிக்க, (அவனை), காயுமது-வெகுண்டுகொல்வது, கடன் அன்று - செய்யத்தக்க செயலன்று: ஒருபகல் இருபகல் கழிந்தால் - இன்னும் இரண்டொருநாள்கள் கடந்திட்டால், 'இன்று - இன்னைறத்தினம், நேயமோடு - அன்போடு, வந்து —, கந்தருவர் —, நேர் பட-எதிராகநின்று, மலைந்தனர் - பொருதுகொன்றார்கள்', என்னும்-என்கின்ற, தூய சொல் - பரிசுத்தமான சொல், விளைய - (ஊரில் எங்கும்) பரவுமாறு, பொருவதுவ - போர்செய்து கொல்வதே, உறுதி - செய்யத்தக்க செயலாகும், என்ன —, அ திரௌபதி - அந்தத் திரௌபதி, சொன்னாள் —; (எ - று.)

'இன்னை கீசகனுடலந் துணிப்பேன்' என்று வீமன் கூறியதனால், 'கீசகன் பணைத்தக் காயுமது இரகக் கங்குலிற் கடனன்று' என்று அவன் கூறியதை மறுத்து, இரண்டொருநாள் பொறுத்தே ஒருவியாஜம்வைத்து அத தொழிலை நிறைவேற்றலே னுமென்றாள் திரௌபதி யென்க. (நிஉ)

53.—வீமன் அப்பேச்சை அங்கீகரித்து, இனிநிகழ்த்தவேண்டிய செயலை உபாயம் பொருந்தச் சொல்லி அவ்விரவை மெல்லக் கழித்தல்.

ஐயனவியனுந்தன்னை முன்பயந்தவாரழலனையகற்புடைய
தையறன்மொழியைத்தானுமுட்கொண்டுதகுசெயல்விரகுடன்சாற்றி
வெய்யதன்சினமுந்தன்புயவலிமீபான்மேலுறமேலுறவளர
நெய்யுறுகனலிற்பொங்கிபக்கங்குனிந்தினன்மேவந்தனுக்கினியோன்.

(இ - ள்.) தன்னை முன் பயந்த ஆர் அழல் அனைய சற்புதையுடைய-தன்னை முன்னேபெற்ற நிரம்பிய நெருப்புப்போலப் பிறராலணுக வொண்ணுத கற்பையுடைய, தையல்தன் மொழியை - பெண்ணை திரௌபதியின்

பேச்சை, இவன்உம் - இந்தவீமசேனனும், ஐஎன - ஐயென்று சொல்லி, தானும்—, உட்கொண்டு - அங்கீகரித்து, (பிறகு), தகு செயல் - (அந்தத் திரௌபதி சொல்லியவாறு நிகழ்த்தத்) தக்கசெயலில், விரகுடன் - தந்திரமாக, சாற்றி - சொல்லிவிட்டு,—வெய்ய தன் சினம்உம் - கொடிய தன்கோபமும், தன் புயம் வலிபோல் - தன்னுடைய தோள்வலிபோல, மேல்உற மேல்உற வளர - மேலாக மேலாக வளர்ந்திற்க, நெய் உறு கனலின் - நெய்வார்க்கப் பெற்ற அக்கினிபோல, பொலிவு—, வேந்தனுக்கு இளையோன் - தருமனுக்குத் தம்பியாகிய அந்தவீமன், அகங்குல் தீந்திலன் - அவ்விரவை மெல்லக் கடத்தினான்; (எ - று.)

இக்கங்குலில் வலுவில் கீசகனிருக்கு மிடத்துச்சென்று அவனைக் கொல்லலாகாது: கொன்றால், அஜ்ஞாதவாசகாலம் முடிவதற்குள் நாம் வெளிப்பட்டு விடுவோமாதலால், முன்னைய ஏற்பாட்டின்படி மீண்டும் வனவாசந்திகள் செய்ய நேரிடும்: ஆகவே, அவ்வாறான தொந்தரைக்கு இடமில்லாமல் 'வண்ணமகளின்கணவன்மாரான கந்தருவர் நேரேவந்து மலைந்து கொன்றார்கள்' என்று யாவரும் கருதுமாறு இரண்டொருபகல் கழித்துக் கருதிய தொழிலை செய்யவேணுமென்று திரௌபதி கூற, வீமனும் அவ்வாறே செய்யலாமென்று உடன்பட்டு அவள்கினவு முற்றுமாறு செய்யப்பட வேண்டிய செயலுக்கு உபாயமும் கூறிவிட்டு, மாற்றானைப் பற்றி கினைக்குந் தோறும் தன்மனத்துச் சினமும் தோள்வலியும் மிகாநிற்க, அன்றையிரவை அரிதிற் கழித்தனனென்பதாம். ஐ - அந்தகாரக்குறிப்பு. விரைவுக்குறிப்பு என்பாரு முளர். (நிகூ)

54.—மற்றைநாளில் பூழி படிந்தகூந்தலும் கண்ணீர்கலந்தகொங்கையுமாய் அரண்மனையிலிருந்தும் வண்ணமகளிரிலையைக் கீசகன் காணுதல்.

அற்றைநாளிரவிற்றன்பரிதாபமாறிபவறிவுடைக்கொடியு
மற்றைநாளந்தச்சுதேட்டிணைகோயின்மன்னவன்மைத்துனன்வரலுங்
கற்றைவார்குழலிற்பூழியுங்கண்ணீர்கலந்தவான்கொங்கையுஞ்சுமந்தாங்
கொற்றைமென்கொடிபோனின்றனளவனுழலகவரவணிலைகண்டான்.

(இ - ள்.) அற்றை நாள் இரவில் - அன்றைத்தினத் திரவில், தன் பரிதாபம் - தன் வருத்தம், ஆறிய - தணிபப்பெற்ற, அறிவுடை - நல்லறிவை யுடைய, கொடிஉம் - கொடிபோன்றவளான திரௌபதியும், மற்றை நாள் - மற்றைநாளிலே, அந்த சுதேட்டிணை கோயில் - அந்தச் சுதேஷ்ணையென்ற மன்னவன்தேவி வசிக்கின்ற அரண்மனையிலே, மன்னவன் மைத்துனன் - விராடமன்னவனுடைய மைத்துனனாகிய கீசகன், வரலும் - வந்தவுடனே,—அகங - அங்கே, கற்றை வார் குழலில் - தொகுதியான நீண்ட கூந்தலிலே படிந்த, பூழிஉம் - புழுதியையும், கண்ணீர் கலந்த வான் கொங்கைஉம் - கண்ணீர் பொருந்திய பெரிய தனங்களையும், சுமந்து - தாங்கிக்கொண்டு, ஒற்றை மெல்கொடி போல் - ஒரு மெல்லியகொடிபோல, நின்றனள்—;

அவன்உம் - அந்தக் கீசகனும், உளம் கவர் - மனத்தைக் கவர்கின்ற அவள்நிலை - அவ்வண்ணமகளின் நிலைமையை, கண்டான்—; (எ - று.)

'பரிதாபமாறிய வெறிவுடைக்கொடி மற்றை நாள் குழலிற் பூழியும் கண்ணீர்கலந்த கொங்கையுஞ் சுமந்து நின்றனள்' என்றதனால், அந்தக் கீசகனுடு சம்பாவித்ததற்காகவே அந்நிலைமையைப் பூண்டா ளென்பது பெறப்படும். கொடி - ஆகுபெயர். (நிச)

வேறு.

55.—கீசகன் அவளைக் கண்டதும் காதல்விஞ்சிச் சொல்லத் தொடங்குதல்.

கலைமதி கண்ட காந்தக் கல்லென வுருகிச் சிந்தை
தலைமக னல்லான் வஞ்சந் தனக்கொரு வடிவ மானே
னிலைபெறு கற்பி னுளை நேருற நோக்கிப் பின்னு
முலைவுறு காதன் மிஞ்ச வுரனழிந் துரைக்க லுற்றான்.

(இ - ள்.) தலைமகன் அல்லான் - சிறந்தகுணமுள்ள மகனல்லாதவனும், வஞ்சம் தனக்கு ஒரு வடிவம் ஆனேன் - வஞ்சமென்பதே ஒருவடிவுபடைத் தாற் போன்றவனுமான கீசகன்,—நிலை பெறு கற்பினுளை - நிலைதலுள்ள கற்பையுடைய திரௌபதியை, நேர் உற நோக்கி - நேராகப்பார்த்து,—கலை மதி கண்ட - (பதினாறு) கலைகளைக்கொண்ட சந்திரன் தோன்றக்கண்ட, காந்தம் கல் எனா - சந்திரகாந்தக்கல்போல, சிந்தை உருகி - மனமுருகி, பின் உம் - மேலும் [முன்னினும் மிகுதியாக], உலைவு உறு காதல் மிஞ்ச - வருந்துதற்குக் காரணமான ஆசைநோய் விஞ்சாநிற்க, உரன் அழிந்து - மன வலிமை குன்றி, உரைக்கல் உற்றான் - சொல்லத் தொடங்கினான்; (எ - று.) —கீசகன் உரைக்கலுற்றதை மேற்கவியிற் காண்க.

'கலைமதிகண்ட' என்று அடைமொழி கொடுத்ததனால், காந்தம் - சந்திரகாந்தம் ஆயிற்று.

இதுமுதற் பதினைருகவிகள் - முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர் களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (நிந)

56.—கீசகன் தன்னை மணக்குமாறு காரணங்காட்டிக் கூறத் திரௌபதி சங்கேதமான இடத்தைக் கூறுதல்.

மன்னவன்வாழ்வுமிந்தவளகர்வாழ்வுமெல்லா
மென்னதுவலிகொண்டென்பதின்றுனக்கேற்பக்கண்டா
யுன்னையெய்காக்குந்தேவருறுதியுமுரணுங்கண்டா
யென்னைகொல்வினியுன்னெண்ணெண்றிருகரங்கூப்பினானே.

(இ - ள்.) மன்னவன் வாழ்வுஉம் - விராடராசனது நல்வாழ்க்கையும், இந்த வளம் நகர் வாழ்வுஉம் - இந்த வளமுள்ள விராடநகரம் (மேம்பட்டு)

வாழ்ச்சி பெற்றிருப்பதுவும், எல்லாம் - ஆகிய யாவும், என்னது வலி கொண்டு - என்னுடைய வலிமையிலேயே, எனபது - என்கின்ற இவ் விஷயத்தை, இன்று - இக்காலத்து, உனக்குஎற்ப - உன்மனத்திற்குத் தெரிய, கண்டாய் - (நீ) அறிந்துள்ளாய்: உன்னை யெய் காக்கும் - உன் னுடலைக் காக்கின்ற, தேவர் - கந்தருவதேவரின், உறுதிஉம் - (காக்குந் தொழிலிற் கொண்டுள்ள) உறுதியையும், உரன்உம் - வலிமையையும், கண்டாய் - கண்டறிந்துள்ளாய்: இனி—, உன் எண் - உன் கருத்து, என்னை கொல் - யாதோ? என்று—, இரு கரம் - (தன்) இரண்டுகை களையும், கூப்பினன் - குவித்து(த் தன்மீது மனமிரங்குமாறு) வேண்டிக் கொண்டான்; (எ - று.)

'விராடமன்னவன் பகைவனென்று மேம்பட்டிருப்பதும், இந்தநகரம் மற்றைநகரினும் பலைத்துன்பம் முதலியன இல்லாமல் இனிதிருப்பதும் எல் லாம் என் வலிமைகொண்டே யென்பது, விராடனிடத்து நீ முறையிடவும் அவன் என்னைக் கேளாமையால் இனிது விளங்கும்: அன்றியும், என்வலி மைக்கு முன்னே அஞ்சியதனால்தான் உன்மெய்காக்குந் தேவரும் உன்னை இப்போது உபேட்சித்திருக்கின்றன ரென்பதும் நீ ஆராய்ந்து தெளியலாம்: இந்நிலையில், இனி உன் எண்ணம் என்னையோ? என்மீது மனமிரங்குவாய் என்று கீசகன் திரௌபதியைக் கைகூப்பித் தொழுதா னென்பதாம். எண் = எண்ணம்: கருவிப்பொருள்விகுதி புணர்ந்துகெட்ட பெயர். (நிசு)

57, 58.—இரண்டுகவிகள் - ஒருதொடர்: திரௌபதி கீசகனிடம் முன்னர் மறுத்ததற்குக் காரணங்கூறி இணங்கினாள்போன்றிருத்தலைத் தெரிக்கிறது.

கருத்தினிமுடியுமென்றுகடுங்கனன்முகத்திற்றோன்றுந்
திருத்தகுபாலையத்தீயவன்றன்னைநோக்கி
வருத்தநீயுறவுமுன்னர்மறுத்தனன்மரபினாலுஞ்
சரித்திரத்தாலுங்கொண்டதவவிரதத்தினாலும்.

கந்தருவருமற்றென்னைக்காப்பதுமறுத்தார்போலு
மிந்திரனினுமாதரெளிமையினிருப்பட்டெய்தார்
புந்தியிலொன்றுங்கொள்ளாரிருட்பொழுதின்று
சந்தனிகுவவுத்தோளாய்தனிக்குநீவருதியென்றாள்.

(இ - ள்.) (57) கடுங் கனல் முகத்தில் தோன்றும் - கொடிய அக்கினி யின் முகத்திலிருந்து தோன்றிய, திரு தகு பாலை - அழகு தக்கிருக்கப் பெற்ற பதினைம்போன்றவளான திரௌபதி, இனி கருத்து முடியும் என்று- 'இனி (தான் எண்ணிய) எண்ணம் [கீசகவதை] (இனிது) நிறைவேறும்' என்று நினைத்து, அந்த தீயவன் தன்னை நோக்கி-(பிறன்தாரத்தை நச்சுதலா கிய) தீயகுணத்தையுடையவனென அந்தக்கீசகனைப் பார்த்து,—'நீ—, வரு தம் உற உம் - (என்னைப் பெறும்பொருட்டு) வருத்தமடையாநிற்கவும், மர பினால் உம் (நான்) பிறந்த குலத்தினாலும், சரித்திரத்தால்உம்-(மேற்கொண்ட)

நல்லொழுக்கத்திலும், கொண்ட தவவிரதத்திலும் - மேற்பூண்ட தவ வொழுக்கத்திலும், முன்னர் - முன்ப, மறுத்தனன் - (உன்கருத்திற்கு இசையாது) மறுத்தேன்: (58) கந்தருவர்உம் - (என்னைக் காவல்புரியும்) கந்தருவர்களும், என்னை—, காப்பது - காத்தற்பொழிலை, மறந்தார்போலும்—: (மேலும்), இந்திரன் எனின்உம் - (தம்மைக் காதலிப்பவன்) தேவேந்திரனேயாலும், மாதர் - மகளிர், எளிமையின் - இலேசில், ஒருப்பட்டு எய்தார் - இசைந்து வந்துவிடமாட்டார்கள்: (நான் முன்பு மறுத்து உன்னை உபேட்சித்தது சொன்னதுகுறித்து), புந்தியில் - (உன்) கருத்திலே, ஒன்றுஉம் கொள்ளேல் - ஒன்றும் வைத்துக்கொள்ளாதே: சந்து அணி குவவு தோளாய்-சந்தனக்குழம்பை யணிந்த திரண்ட தோள்களை யுடையவளே! இன்று - இன்றைத்தினம், ஆர் இருள் பொழுதில் - நிரம்பிய இருளைக்கொண்ட இரவிலே, நீ—, தனித்து—, வருதி - வருவாய்,' என்றாள் - என்று கூறினாள்.

57 - ஆம் பாடலில் முதலில் மறுத்ததற்குத் திரௌபதி காரணங்கூறி, 58 - ஆம் பாடலில் தான் உடம்பட்டிருப்பதைத் தெரிவிக்கின்றாளென்க. தனித்து வருதியென்று கூறியவள் இன்னவிடத்துவருக என்று குறியிடத்தை மேற்செய்யுளிற் கூறுவள். மற்றென்னை, மற்று - வினையாற்ற. சரித்திரம் - கற்புநெறிவழுவாது நடக்கை. (நிஅ)

59.—திரௌபதி கீசகனுக்குக் குறியிடங் கூறுதல்.

அக்கொடியுரைத்தமாற்றமவன்செவிக்கமுதமாகிப்
புக்குயிர்நிறுத்திமெய்யும்புளகெழுவிளகிநெஞ்சு
மிக்கமேதார்வேட்கைகூரவிடுத்தலின்வேந்தன்கோயிற்
கொக்கின்மேற்குயில்கள்கூவுங்குளிர்பொழிற்குறியுஞ்சொன்னாள்.

(இ - ள்.) அ கொடி உரைத்த மாற்றம் - கொடிபோன்றவளான அந்தத் திரௌபதி கூறிய சொல், அவன் செவிக்கு - அந்தக்கீசகனுடைய காதுக்கு, அமுதம் ஆகி புக்கு - அமுதமயமாய் (ச் செவிவழியாக உள்ளே) புகுந்து, உயிர் நிறுத்தி - (தவித்துக்கொண்டிருந்த அவனுடைய) பிராணனை நிலைத்திருக்கச்செய்து, (அதனால்), மெய் புளகு எழஉம் - அவனுடம்பு மயிர்க்கூச்சு எறியவும், நெஞ்சம் இளகி மிக்கது ஓர் வேட்கை கூர(உம்) - மனங்குழைந்து மிகுந்ததான ஒப்பற்ற ஆசை விஞ்சவும், விடுத்தலின் - செய்ததனால்,—(அப்போது வண்ணமகளாகிய திரௌபதி), வேந்தன் கோயில் - அரசனுடைய அரண்மனையைச் சார்ந்துள்ள, கொக்கின்மேல் குயில்கள் கூவும் குளிர் பொழில் - மாமரத்தின்மீது குயில்கள் கூவாநிற்கும் குளிர்ந்த சோலையாகிய, குறிஉம் - குறியிடத்தையும், சொன்னாள்—; (எ - று.)

கர்த்தனசாலையைக் குறியிடமாகக்கூறினளென்று முதனூலி லுள்ளது: பொழிலிடத்துக் கூடுவரென்று தமிழ்நூல்களிற் பயிலுவதால், நூலாசிரியர் குளிர்பொழிற் குறியுஞ்சொன்னாளென்று முதலிற்கூறி, மேற்செய்யுளில்

இன்பமண் டபத்தி வம்மின் என்றனளென்பர். 'மாமயத்தைக் கொக்கு என்பது திரு' என்றனர், நச்சினார்க்கினியர். விடுத்தலின் - தங்குதலால் என்பாரு முளர். (நகூ)

60.—தறியிடமாகிய பொழிலிலுள்ள மண்டபத்தில் வருமாறு கூற, கீசகனும் ஒருப்படுதல்.

குருட்டியன்மதியிலனேக்கோதிலாவறிவின்மிக்காண்
மருட்டினளாகியந்தவளர்தடம்பொழிலிறைசார
நிருட்டிடைநிலவுகாட்டுமின்பமண்டபத்தில்வம்மி
னிருட்டடந்தேரோயென்றுளவனுமம்மெனாருப்பட்டானே.

(இ - ள்.) கோதை இலா அறிவில் மிக்காள் - குற்றமற்ற அறிவினால் மேம்பட்டவளான திரௌபதி,—குருடு இயல் மதியிலனே-குருட்டுத்தன்மை பொருந்திய புத்தியையுடையவனான அக்கீசகனை, மருட்டினள் ஆகி - மதிமயங்கச்செய்தவளாய்;—'அந்த வளர் தடம் பொழிலின் ஓர் சார் - (நான் குறித்த) அந்தவளர்ந்த பெருஞ்சோலையின் ஒருபுறத்திலுள்ள, இருட்டிடை நிலவு காட்டும் - மிக்க இருட்டிலும் நிலாவெளிச்சமபோன்று பளிச்சென்று தோன்றுவதாகிய, இன்பம் மண்டபத்தில் - இனிதான மண்டபத்தில்; உருள் தடந் தேரோய் - (இனிது உருண்டுசெல்லுகின்ற) உருளைகளையுடைய பெருந் தேரையுடையவனே! வம்மின் - வாருங்கள்,' என்றுள் - என்று (கூடுதற்கு உரிய இடத்தைக்) கூறினாள்: அவனும் - அந்தக்கீசகனும், அம்ம - அந்த வண்ணமகளின் பேச்சுக்கு, ஒருப்பட்டான் - சம்மதித்தான்; (எ - று.)

'முன்பு தன்னை வேண்டாமையை அத்துணைகாட்டியவள் இப்போது இசைந்து, இருட்பொழுதில் தனிதுவரு தி என்கிறாளே? இவள் நம்மைக கொல்ல விருது தேடியிருந்தால் என்செய்வது?' என்று ஆராய்ச்சி சிறிதுமின்றி இசைந்ததனால், கீசகனை 'குருட்டியன் மதியிலனென்' என்கின்றார். தேரோய் வம்மின் - ஒருமைப் பன்மைமயக்கம். உருள் என்பது தடந்தேரோய் என்ற விளியோடு இயைந்து, அமைதலைப்பொருளைக் காட்டுவதாகியும் அறிக. வம்மோ என்ற பாடத்துக்கு, வம் - வாரும் என்பதன் மரூஉ: ஓ - அசை: மோ - அசையுமாம். (சுப)

61.—திரௌபதி அச்சேயிதியை வாயிலிடத்துச்சொல்லிவிட்டு அப்பகலைப் போக்கியமை.

குறிபவன்றனக்குரைத்தகொடியவெங்கொலைவேற்கண்ணை
டறிவிலொருகளிற்றினன்னைசடீரணன்மகனெயெய்திச்
செறிவொடடக்காளைபோடுசெப்பியயாவுஞ்செப்பிப்
பிறிதொருகருத்துமின்றிப்பெரும்பகல்போக்கினளே.

(இ - ள்.) அவன்தனக்கு குறி சேர்த்த - அந்தக்கீசகனுக்குக் கூடுமிடத்தை உடன்பட்டுக்கூறிய, கொடிய வெங் கொலை வேல் கண்ணாள் -

மிகக்கொடிய கொலைசெய்யவல்ல வேற்படைபோன்ற கண்களையுடையவளான அந்தத்திரௌபதி, தன் பொருட்டின் - கட்டுத்தறியை மோதி முறிக்கின்ற மதயானையையொத்த, அன்ன சமீரணன் மகனை - அந்தவாயுவின்புத்திரனான வீமசேனனை; எய்தி - அடைந்து,— செறிவொடு - மனவொருக்கத்தோடு, அ காளையோடு செப்பிய - இளவெருதுபோன்ற அந்தக் கீசகனோடு சொல்லிய, யாவும் - எல்லாவற்றையும், செப்பி - சொல்லி, பிறிது ஒரு கருத்தும் இன்றி - (கீசகன் இறப்பதை எப்போது காணப் போகிறோம் என்ற எண்ணத்தைத் தவிர்த்து) வேறொரு எண்ணமுமில்லாமல், பெரும் பகல் - நெடிதாகதமே தான்றும் அந்தப்பகற்காலத்தை, போக்கினாள் - அரிதிற்கழித்தாள்; (எ - று.) (கூக)

62 —நூறியசீகந்தமித்து ரைந்தும் இருள்சூழ, கீசகன் தறியேல்லையை நோக்கிச் சென்றுதல்.

எல்லியெண்டிசையும்போனவி நுளைலாமீண்டுதன்ற
வெல்லியின்றலைவருனைவிரவிபுங்குடைவெற்பெய்த
வெல்லியில்காதலோனுறுமிடையிருளிடைபேயத்த
வெல்லைபோகக்கிச்சென்றுன்யமன்றிசையென்னமன்றே.

(இ - ள்.) எண் திசை எல்லையும் போன - எட்டுத்திக்கினெல்லை வரையிலும் ஒதுங்கிச்சென்ற, இருள் எலாம் - இருட்டுமுழுவதும், மீண்டு வந்து - மீண்டு வந்துசெருங்கவும், எல்லியின் தலைவன் ஆன இரவி - பகற்போதுக்குத் தலைவனான சூரியன், குடை வெற்பு எய்தவும் - மேற்குமலையாகிய அத்தமனபருவதத்தில் போய்ச்சேரவும், எல்லை இல் காதலோன் உம் - (இவ்வளவுஎன்று) அளவிடமுடியாத காதலையுடையவனான அந்தக்கீசகனும், இடையிருளிடைய - அந்தஎள்ளிரவில், யமன் திசை என்ன - யமனிருக்குமிடம் (நாடிச்சென்வது) போல, அந்த எல்லையை நோக்கி - (வண்ணமகள் கூறிய) அந்தஇடத்தை நோக்கி, சென்றுன் —; (எ - று.) —மன்ஓ - ஈற்றசை.

கீசகன் இப்போது செல்லும் பயணம் அவன்மரணத்துக்கே ஏது வாதலால், 'எல்லையைநோக்கிச் சென்றுன் யமன்திசையென்ன' என்றார். இரண்டாமடியில், எல்லைஎன்பதில், ஐ - சாரியை. தீர்புனர்ஞுஞ்சொல்லணி இதிற் காண்க. இருள் - இரவுக்கு இலக்கணை. இடையிருள் - இருளிடை யென் பது முன்பின்னகமாறிவந்தது: இலக்கணைப்போலி. (கூஉ)

63.—வீமன் பெண்கோலங் கொள்ளுதல்.

வடுவுறத்தெவ்வர்போருமன்னவனுணவுங்கையா
லடுதொழிற்குரியசெம்பொன்வரையிரண்டனையதோளா
னுடுமுகத்தின்னைமவானமொளியுறவிருண்டகங்கு
னெடுவுறப்பொழுதிற்செவ்விதவ்வியர்கோலங்கொண்டான்.

(இ - ள.) வடு அற - குற்றம் நீங்க, தெவ்வர் போர்உம் - பகைவர் போரையும், மன்னவன் உணவுஉம் - அரசனுணவையும், கையால் - கையி

ஞல், அடு - அடுகின்ற, தொழிற்கு - செய்கையில், உரிய - உரிமையுண்ட, செம்பொன் வரை இரண்டு அனைய தோளான் - செம்பொன்மயமான மேரு மலை இரண்டையொத்த தோளையுடையவனை வீமன்,—உடு முகத்தின் - நட்சத்திரங்களோத் தன்னிடத்திலே யுடைய, மை வானம் - கருநிறமாகத் தோன்றுகின்ற ஆகாயம், ஒளி அற இருண்ட - ஒளியற்று இருண்டுகிடக்கிற, கங்குல் - இராப்போதானது, நடுஉறு - நடுப்போதான [அர்த்தராத்திரியாய் விட்ட], அ பொழுதில் - அந்த வேளையிலே, செவ்வி கவ்வியர் - அழகிய மான்போன்றகண்களையுடையரான பெண்டிரின், கோலம் - அலங்காரத்தை, [பெண் வேடத்தை], கொண்டான் - மேற்கொண்டான்; (எ - று.)

அடுதொழில் என்பது - இரட்டுறமொழிதலால், சமைத்தல் கொல்லுதல் என்ற இருபொருளைத் தந்தது. உடுமுகத்தது இன்மை - நட்சத்திரங்கள் தமமிடத்து இல்லாமையால் என்று கூறினாரு மூளர்: இது எவ்வாறு பொருத்து மென்பது புலப்பட வில்லை. உடுமுகத்தின் என்று வானத்திற்கு அடைமொழி கொடுத்தமையால், ஒளியையுண்டாக்கும் சந்திரனைப் பெற்றிருக்கவில்லை அக்கங்குற்போது என்பது பெறப்படும். மை, வானத்திற்கு இயற்கை யடைமொழி. நடுவுற பொழுதில் என்றுபிரித்தலும் உண்டு. (கூக)

64.—தூறித்த பொழிலிடையே திரௌபதியுடன் வீமன் பெண்கோலத்தோடுசென்று கீசகன்வருகையை நோக்கியிருத்தல்.

அங்கியிற்சேறன் றுநாளாயணியுடனள்ளிக்கொள்ளப்
பொங்கியபனிருளின்முன்னம்புகன்றவப்பொங்கலருகு
தங்கியதவளமாடத்தன்னிடைப்புகுந்துசான்ற
விங்கிதத்துடனேநோக்கியிருந்தனனிமைப்பிலாதான்.

(இ - ள்.) (அங்கணம் மாதரார்கோலம் பூண்ட வீமன்),—அங்கியில் தோன்றும் நாளாயணியுடன் - கருப்பினின்று தோன்றிய நாளாயணியென்பாளுடனே, அள்ளிக்கொள்ள பொங்கிய - அள்ளிக்கொள்ளலாம் போன்று மிகச்செறிந்த இருட்டிலே, முன்னம் புகன்ற அ பொங்கலருகு - முன்பு கூறிய அந்தச் சோலையிலே, தங்கிய - பொருந்திய, தவளம் மாடத் தன்னிடை - வெண்ணிற மாடத்திலே, புகுந்து - போய்ச்சேர்ந்து, சான்ற இங்கிதத்துடன் - மிக்கசினத்தோடு, இமைப்பு இலாதான் - கண்கொட்டாத வனாய், நோக்கி இருந்தனன் - (கீசகன்வருகையை) எதிர்பார்த்திருந்தான்.

நாளாயணியென்பது - மௌத்கல்யமுனிவரின் பார்யையான இந்திரசேனையின் பெயர்: இவளே பிறகு திரௌபதியாகப் பிறந்தாள். அள்ளிக்கொள்ளப் பொங்கிய விருள் - தூர்வைநீத்தற்றறிப்போற்றும். இங்கிதம் - (பிறன்வருகின்ற) குறிப்பு: மிக்க கவனம் என்றபொருளை இங்கு இலக்கணையால் தந்தது. தங்கிய கனகமாடத்தன்னிடை யென்று பிரதிபேதம். (சுசு)

65.—தீரோபதியை ஒருபுறத்தில் மறைத்துவைத்திட்டு வீமசேனன்இருக்க, கீசகன் அப்பொழிலுடு சேர்தல்.

அணங்கனசாயலாளையப்புறங்காத்துவைத்து
மணங்கமழுங்கன்மார்பன்மண்டபத்திருந்தகாலைப்
பிணங்கலணணிந்தன்னபெரழிற்பெற்றியானைஞ்
சுணங்கநாப்புலரவந்தவ்வுயர்பொழிலுடுசேர்ந்தான்.

(இ - ள்.) அணகு அன-தெய்வப்பெண்போன்ற, சாயலாள-மென்மையான அழகையுடைய திரௌபதியை, அப்புறம் - அதகு ஒருபுறமாக, காத்துவைத்து-மறைத்திருக்குமாறு வைத்திட்டு,—மணம் கமழ் அலகைகல் மாபன்-நறுமணம் வீசுகின்ற மலர்மாலையை யணிந்த மார்பையுடையனை (பெண்வேடம்பூண்டிருந்த)வீமன், மணடபத்து இருந்த காலை - மண்டபத்திலிருந்தபோது,—பிணம் கலன் அணிந்தது அன்ன பேர் எழில் பெற்றியான்-பிணத்துக்கு அணிகல னணிந்தாற்போன்று அலகாரத்தாற் பெரொழில் பணடதக தன்மையுடையனை அத்தக்கீசகன், (காமதாபத்தால்), நெஞ்சு உணைய - இதயம் வாடவும், நா புலர - நாக்குலரவும். வந்து—, அ உயர் பொழிலுடு - ஓங்கிய மரங்களைக்கொண்ட அந்தச்சோலையில், சேர்ந்தான்—.

வேறு.

66.—அம்மாளிகைபிற் பொற்றூணருகே சேர்ந்திருந்த பெண்ணுருவந்தனைக் கண்ட கீசகன் ஆவலோடுகொண்டு கூறலுறுதல்.

சாந்திணன் மெழுகிய தவள மாளிகை
மேய்ந்தபொற் றூணினிடை யிலகுமின் னெனச்
சேர்ந்துறை பெண்ணுருக் கண்டு சிந்தையிற்
கூர்ந்தம்ப ராவலோ டிறைஞ்சிக் கூறுவான்.

(இ - ள்.) சாந்திணல்-(அரைத்த) சுண்ணாம்பிணல், மெழுகிய-பூசப்பெற்றுள்ள, தவளம் மாளிகை-வெணணிறமுள்ள மாளிகையில், ஏய்ந்த-பொருந்திய, பொன் தூண இடை - பொற்கம்பதினிடததை, இலகுகும் மின் என சேர்ந்து-விளகுகின்ற மின்னல்போலச் சாந்து, உறை-வசிககின்ற, பெண் உரு-ஸ்தரீவடிவதனை, கணடு பார்த்து,(கீசகன),சிந்தையில் கூர்ந்த பேர் ஆவலோடு - மனதகில்லை மிகுந்த காதலோடு, இறைஞ்சி - வணகி, கூறுவான் - (பின்வருமாறு) சொல்லலானான்; (எ - று.)—கீசகன் ஆவலோடு கூறுவதை மேற்கவியிற் காணக.

பெண்ணுருவென்றதனால் - இயற்கையிற் பெண்ணல்ல: பெண்ணுருக்கொண்ட ஆடவனென வீமன் எனக் காட்டியவாறு.

இதமுதல் இருபததொருகவிகள் - மூன்றுஞ்சீரொன்று மாச்சிரும், மற்றவை விளச்சீரகளுமாகிவந்த அளவடிநான்குகொண்ட கலிவிருத்தங்கள்.

67.—ஆதரத்தூற் சிலகூறிக் கீசகன் பெண்ணுருவின் தாளிற்பணிந்து வேண்டுதல்.

என்பெருந்தவப்பயனென்றறிந்திலேன்
மின்புரைமருங்குலாய்வேட்கைவிஞ்சலாற்
புன்பிழைசெய்தனன்பொறுத்திநீயென
வன்புடன்சிலம்பணியடியில்வீழ்ந்துமேல்.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) 'மின் புரை மருங்குலாய் - மின்னலையொத்த இடையை யுடையவளே! என் பெருந் தவம் பயன் என்று - என்னுடைய (முற்பிறவி யிற் செய்த) பெருத்த நல்வினைப்பயனாகத் தோன்றியுள்ளாய் நீ என்பதை, அறிந்திலேன் - (முன்னர்) அறியாதவனாய்விட்டேன்: (அதனால்), வேட்கை விஞ்சலால் - காதல் விஞ்சியதனால், புல் பிழை செய்தனன் - (உன்திறத் திற்) சிறிய பிழையைச் செய்திட்டேன்: நீ பொறுத்தி - (யான் உன்திறத் துச் செய்த) சிறுபிழையைப் பொறுப்பாயாக,' என - என்று, அன்புடன் - காதலோடு, சிலம்பு அணி அடியில் - நூபுரமணிந்த பாதத்தில், வீழ்ந்து - விழுந்து பணிந்து, மேல் - பிறகு,—(எ - று.)—"எஞ்ஞ மொழிபல கூறினேன்" என்று எழுபதாங்கவியில் தொடர்ந்து முடியும். (சுஎ)

68.—மூன்றுகவிகள் - பின்னும் காதல்விஞ்சக் கீசகன் பலமொழி கூறினமை தெரிக்கும்.

பைங்குலக்குரும்பையைப்பழித்தகொங்கையாய்
மங்குலப்புழுகளைவைத்தகூந்தலாய்
கங்குலிற்கால்வழிகாட்டவந்ததின்
றிங்குலப்புறுமெனதாவியீயமேவா.

(இ - ள்.) பைங் குலை குரும்பையை பழித்த கொங்கையாய் - பசுமை யாய்க் குலைகுலையாகவுள்ள குரும்பையை ('இவை எமக்குஒப்பாகா என்று') எளனஞ்செய்த கொங்கையையுடையாய்! மங்குல புழுகு அளை வைத்த கூந்தலாய் - இரவைக் கஸ்தூரிப்புழுகெண்ணெய்கொண்டு தடவிவைத்தாற் போன்றுள்ள கூந்தலையுடையவளே! கங்குலில் - இந்தஇள்ளிரவில், கால் வழி காட்ட-பாதமே(நடந்துசெல்லும்)வழியைக் காட்டாநிற்க, இன்று இங்கு வந்தது - இன்றைக்கு இவ்விடத்துக்கு வந்தது, உலப்புஉறும் - அழியும் நிலைமையை யடைந்த, எனது ஆவி - என்னுயிரை, ஈயஓ - கொடுத்தற்குத் தானோ? (எ - று.)

நிலா தீபம் என்றாற்போன்ற ஒளியைத் தருவது யாதொன்றும் இல் லாமையால், செறிந்தஇருளில் கண்ணால் வழியைக் கவனிக்கமுடியாமல் காலாலேயே தடவித்தடவி அன்னாள வந்தா ளென்று குறிக்க 'கால்வழி காட்ட வந்தது' என்கின்றான். கால்வழிகாண என்று பிரதிபேதம். (சுஅ)

69. கிஞ்சுகமலர்ந்துநின்கிள்ளைவாய்மையா
லஞ்சுலென்றேருருரையளித்தல்காண்கிலே
னஞ்சனவிழிக்கடைகயந்தபார்வைகொண்
டெஞ்சுமென்னுயிரினீடெடுப்பதென்றுநீ.

(இ - ள்.) கிஞ்சுகம் மலர்ந்து - பலாசமலர்போன்ற (உன்) வாயைத் திறந்து, நின் கிள்ளை வாய்மையால் - உனது கிளிபோன்ற வாய்வார்த்தை

யால், அஞ்சல் என்று - (காமதேவனுக்குப்) பயப்படாதே என்று, ஓர் உரை - ஒருபேச்சை, அளித்தல் - அன்போடுதர, காண்கிலேன் - பார்க்கின்றிலேன் [கேட்கிலேன் என்றபடி]: அஞ்சனம் - மைதீட்டிய, விழிக்கடை - கடைக் கண்ணால், நயந்த - விரும்பிக் காண்கின்ற, பார்வைகொண்டு - பார்வையி னால், எஞ்சும் - ஒடுங்குகின்ற, என் உயிரினை —, நீ —, எடுப்பது - பாதுகாப் பது, என்று - எப்போது? (எ - று.)

உயிரினையெடுப்பது-உயிரையடியோடு போக்குவது என்ற ஒருவிபரீதப் பொருளைத் தோன்றும். விழிப்பது - விழியெனக் கண்ணுக்குக் காரணக் குறி. பார்வைகொண்டு, கொண்டு - மூன்றாம்வேற்றுமைச்சொல்லுருபு. (கக)

70. வழிபடுதெய்வமும்மற்றுமுற்றுநீ
யிழிபடுபிறர்முகமென்றுநோக்கலேன்
கழிபடருற்றதென்காமமோயெனை
மொழிபலகூறினன்முகப்புகுந்துளான்.

(இ - ள்.) வழிபடு தெய்வம்உம்-(நாடோறும் நான்) கும்பிடுங் கடவுளும், மற்றும் முற்றுஉம் - மற்றுமுள்ள எல்லாமும், நீ - நீயே; (இனி), இழிபடு - (உன்கட்டழகுக்கு முன்னே) இழிவாகததோன்றுகிற, பிறர் முகம் - அயல் மாதராரின் முகத்தை, என்றுஉம் - எப்போதும், நோக்கலேன் - பார்க்கமே மாட்டேன்: என் காமம் நோய் - என்னுடைய காதல்நோயானது, கழி படர் உற்றது - மிகப்பரவுதலைப் பொருந்தியிட்டது, எனை-என்று, முகம் புகுந் துளான் - அவ்விடத்துவந்து பொருந்தியதனை கீசகன், பல மொழி கூறி னன் - பலவார்த்தைகளைப் பேசினன்; (எ - று.)

மாறுவேடம்பூண்டு வீமன் வந்து எதிரில் தூணைத்தில் தொங்கி நிற்கின்ற னென்பதைக் கீசகன் அறியாமல் திரௌபதிதான் வந்துள்ளா ளென்று கருதியதனால், இவ்வாறெல்லாம் கூறலானனென்க. கழிபடருற் றது - மிக்கதுன்பத்திற்குக் காரணமாகப் பொருந்தியது எனினுமாம். எதிர் புகுதல் - நோக்கிற் கெதிர்சென்று புகுதல்என்றனர் ஐங்குறுநூற்றாரைகாரா.

71.—இரண்டுகவிகள் - ஒருதொடர்: பெண்ணைநோக்கொண்டவியர்
கீசகனை நகைத்துநோக்கி இருதைகளாற் பற்றியமை கூறும்.

கீசகனிப்முறைகிளந்தபற்பல
வாசகங்கேட்டலுமலங்கொணெஞ்சுடைப்
பூசகர்பூசைகொள்ளாதபுன்பவ
நாசகக்கடவுள்போனகைத்துநோக்கியே.

(இ - ள்.) கீசகன்—, இ முறை - இப்படியாக, கிளந்த - கூறிய, பல் பல வாசகம் - மிகப்பலவான காதற்குறிப்புள்ள வார்த்தைகளை, கேட்டலும்- கேட்டவுடனே,— மலம் கொள் நெஞ்சுஉடை பூசகர் பூசை கொள்ளாத புல் பவம் நாசகம் கடவுள் போல் - அபரிசுத்நிலைக்கொண்ட நெஞ்சத்தை யுடைய பூசகரின் பூசையை யேற்றுக்கொள்ளாத புல்லியபிறவியை(த் தன் னையடைந்தார்க்கு)ப் போக்கவல்ல கடவுளைப்போல, நகைத்து நோக்கி - சிரித்து (அந்தக்கீசகனைப்) பார்த்தது,—(எ - று.)—"பெற்ற மாமகன் பொறி வந்திட இருதை பற்றினன்" என்று மேற்கவியில் முடியும்.

திரிபுரசங்காரகாலத்திற் சிரித்தது எதிரிகளை யழித்த கடவுள் சிவபி ரானே யாதலால், புன்பவநாசகக் கடவுள் என்பது அக்கடவுளையே காட்

டும். நகைத்துநோக்கி என்பதற்கு, மேற்செய்யுளில்வரும் பெற்றமாமகன் என்பது எழுவாய். மலம்-ஆணவம் மாயை கன்மமென்னும் மும்மலமுமாம். ()

72. பெண்ணுடையுருக்கொளும்பெற்றமாமகன்
சண்ணுடைப்பொறியெழுங்கனலின்வந்திட
மண்ணுடைக்காவலன்மைத்துனன்றனி
யெண்ணுடைக்கைகளாலிருகைபற்றினன்.

(இ - ள்.) பெண்உடை உரு கொளும் - ஸ்திரீயினுடைய உருவத்தைக் கொண்ட, பெற்றம் மாமகன் - வாயுவின் சிறந்த குமாரனான வீமன், கண் உடை - இருகண்களிலும் கொண்டுள்ள, பொறி - (கோபாக்கினியின்) பொறிகள், எழும் கனலின் வந்திட - கொழுந்துவிட்டெரியும் அக்கினியினின்று புறப்படுவனபோல வெளிப்படாநிற்க,— மண் உடை - மச்சநாட்டிற்குரிய, காவலன் - அரசனான விராடனுடைய, மைத்துனன்தனை - மனைவியின் உடன்பிறந்தவனான கீசகனை, எண்உடை கைகளால் - (வலிமையினால்) மதிப்பையமைந்த இரண்டு கைகளால், இரு கை பற்றினன் - (கீசகனுடைய) இரண்டுகைகளையும் பிடித்துக்கொண்டான்; (எ - று.)

ஒருபெண் தன்னைக் கைப்பற்றுகின்றாளென்று அந்தக்கீசகன் குதூகலமாக இருக்க, ஒருகையாற் பற்றுதற்குப்பதில் இருகைகளாலும் இறுகப்பற்றினான் வீமனென்பதாம். எண் ஏண் என்பதன் விகாரமெனின், வலிமையென்று பொருளாம். (எஉ)

73.—வீமன் கீசகன்திறத்துக் கருதிய செயலை முடிக்கத் தொடங்குதல்.

பற்றினன்பற்றியபாணியாலெழுச்
சுற்றினன்கறங்கெனத்தூணமொன்றிரண்
டெற்றினன்சென்னியையெடுத்ததன்வினை
முற்றினனெடும்பெருமூச்சனுகிம்ப.

(இ - ள்.) பற்றினன்-(அந்தக்கீசகனைத் தன்னிருகைகளாலும் வலியப்) பிடித்தான்: பற்றிய பாணியால - (தான்) பிடித்த கைகளினால், கறங்கு என எழு சுற்றினன்-காற்றடிபோல (வானத்தின் மீதே)எழு(அந்தக்கீசகனைக்) கற கற வென்று சுழற்றினன்: தூணம் ஒன்றிரண்டு சென்னியை எற்றினன் - (ஆங்கிருந்ததொரு)தம்பத்தில் அவன் தலையை மோதினன்: நெடும் பெரு மூசசன் ஆகி-மிகப்பெருமூசசுடையனாய், (அவ் வீமன்),எடுத்த தன் வினை முற்றினன் - மேற்கொண்ட தன் செயலை நிறைவேற்றலானான்; (எ - று.)

மேற்கொண்டசெயல் - கீசகவதம். இச்செய்யுளிற் பற்றினனென்றது - கீழ்ச்செய்யுளின் அனுவாதம். (எஊ)

74. — வீமனைக் கீசகன் மாறிமோத வீமன் கீசகனைத் தள்ளிவீழ்த்துதல்.

வீமனைப்பிடித்தகைவிலக்கிமற்றவன்
மாமுகத்திருகையுமாறிமோதினன்
றீமுகத்தவனையச்செம்மன்மீளவுந்
சாமுகத்தவனைனத்தள்ளிவீழ்த்தினன்.

(இ - ள்.) வீமனை—, பிடித்த கை விலக்கி - (தன்னைப்) பற்றியுள்ள கைகளை விலக்கிவிட்டு, மற்று-பின்பு, அவன் - அத்தக்கீசகன், மா முகத்து - பெரிய (வீமனுடைய) முகத்திலே, இரு கைகளும் - (தன்னுடைய) இரண்டு

கைகளையும், மாறி - (முன்னையநிலை) மாறி, மோதினன் - தாக்கினன்: அ செம்மல்-செம்மைக் குணமுடையவனாகிய அந்த வீமசேனன், தீ முகத்தவனை-தீமைக்கு இருப்பிடமான அந்தக்கீசகனை, மீளவும் - மறுபடியும், சா முகத்தவன் என - (கண்டவர் யாவரும்) சாழுஞ்சிபட்டவன் (இவன்) என்று கருதுமாறு, தள்ளி—, வீழ்த்தினன் - விழச்செய்தான்; (எ - று.)

மற்றவன் என்பது வீமனைக்காட்டு மென்று கொண்டு, கீசகன் என்பதை வருவித்தலுமாம். (எச)

75.—ஐந்து கவிகள் - வீம கீசயுத்தம் கூறும்.

ஒவொருகுத்தொருவுருமுவீழ்ந்தென
மேருவோடொத்ததோள்வீமன்குத்தலு
மீரிடத்தினும்விலாவெலும்புநெக்கன
கூருகிர்த்தலங்களாற்குருதிகக்கவே.

(இ - ள்.) கூர் உகிர் தலங்களால் - கூரிய நகத்தோடு கைத்தலங்கள் பட்டதனால், குருதி கக்க - இரத்தத்தை வெளிப்படுத்துமாறு, ஓர் ஒரு குத்து-ஒவ்வொருகுத்தும், ஒரு உருமு வீழ்ந்தென - ஒரு இடி விழுந்தாற்போல வீழ, மேருவோடு ஒத்த தோள் - மேருவோடொத்த தோள்களையுடைய, வீமன்—, குத்தலும் - குத்தவே,—(கீசகனுக்கு), ஈர் இடத்தின்உம் - இரண்டுபுறத்தும், விலாஎலும்பு - விலாப்புறமுள்ள எலும்புகள், நெக்கன - பிளந்து விண்டன; (எ - று.)—குத்தெரியுருமு என்றும் கூருகிர்த்தலைகளால் என்றும் பிரதிபேதம். (எரு)

76. கேளொடுகெடுதருகீசகன்கழற்
றூளொடுதாளுறத்தாக்கிமற்கெழு
தோளொடுதோளுறத்தோய்ந்துகன்னில்வில்
வேளொடுவருநலம்விஞ்சமேவினன்.

(இ - ள்.) கேளொடு - சுற்றத்தாருடனே, கெடுதரு - அழியப்போகின்ற, கீசகன் - கீசகனெனவன்,—கழல் தாளொடு-வீரக்கழலை யணிந்த (வீமன்) பாதங்களுடனே, தாள் உற - (தன்) தாள்கள் பொருந்த, தாக்கி - மோதியும், மல் கெழு - வலிமை விளங்குகின்ற, தோளொடு - (தன்) தோளுடனே, தோள் - (வீமன்) தோள்கள், உற - பொருந்த, தோய்ந்து - படிந்தும், கன்னல் வில் வேளொடு வரு நலம் விஞ்ச-கரும்புவில்லையேந்திய மன்மதனால் வருகிற இன்பநலமும் விஞ்சும்படி, மேவினன் - (மற்போரில்) தழுவினன்; (எ - று.)

காமவின்பம் நுகர்கையில் தாளொடு தாளும் தோளொடு தோளும் தாக்கிப்பொருந்தல் நிகழுமாதலாலும் இந்த மற்போரிலும் அச்செயல் மிகநிகழ்தலாலும், 'வேளொடுவருநலம் விஞ்சமேவினன்'என்றார்: இச்செய்யுளில் 'வேளொடு வருநலம் விஞ்சமேவினன்' என்றது, வீமன் செயலே யென்றலும் ஒன்று. (எசு)

77. தாழ்வரைத்தடக்கையாற்றலையலாவெதிர்
காழ்வரப்பொருதிறற்காளைதன்னையுஞ்
சூழ்வரச்சூறையிற்சுற்றிப்பார்மிசை
வீழ்வரப்புடைத்தனன்மிடலில்விஞ்சினன்.

(இ ள்.) மிடலில் விஞ்சினன்-வலிமையில் விஞ்சினவனாகிய கீசகன்,—வரை தாழ் தட கையால் - வரைபோன்றனவும் தொங்குவனவுமான பெரிய

கைகளால், தையலான் எதிர் - திரௌபதியின் எதிரிலே, காழ்வர - உறுதி பொருந்த, பொரு - போர்செய்கின்ற, திறல்-வல்லமையை யுடைய, காளை தன்னையும் - இளவெருது போன்றவனென வீமனையும், சூறையின் - சுழல் காற்றிலகப்பட்டாற்போல, சூழ்வர சுற்றி - மண்டலமாகப் பொருந்தச் சுற்றி, பார்மிசை வீழ்வர - பூமியில் விழுமாறு, புடைத்தனன் - மோதினான்;(எ-ம.)

காளைதன்னையும், உம்மை - உயர்வுசிறப்பு. இனி, காளை - வீமன், தன்னையும் சூறையிற் சூழ்வருமாறு சுற்றி, மிடலில் விஞ்சினனெனிய கீசகன் பார்மிசை வீழ்வரப் புடைத்தனன் என்றலுமாம். (எஎ)

78. விழுந்தவன் மீளவும்வெய்துயிர்த்தன
னெழுந்துதன்பகைவனதிருண்டகுஞ்சியை
யழுந்தவல்விரல்களாற்சுற்றியாய்மரக்
கழுந்தெனப்புடைத்தன்னகைகள்சேப்பவே.

(இ - ள்) விழுந்தவன் - விழுந்த வீமன், வெய்து உயிர்த்தனன் - வெய்ம்மையாகப் பெருமூச்சு விட்டவனும், மீளவும் எழுந்து—, தன் பகைவனது - தன் பகைவனென கீசகனுடைய, இருண்ட குஞ்சியை - கருநிறமுள்ள கூந்தலை, அழுந்த - உறுதியாக, வல் விரல்களால் சுற்றி—, ஆய்மரம் கழுந்து வன - ஆராயப்பெற்ற மரத்தின் கழுந்தைப் புடைப்பதுபோல, கைகள் சேப்ப - (அவன் கூந்தலைப் பிடித்த தன்) கைகள் செந்நிறத்தை யடையா நிற்க, புடைத்தனன்—; (எ - ம.)

கழுந்து - மரக்கட்டை. (எஅ)

79. புடைத்தனனிவனவன்புடைத்தகைகளை
விடைத்தனனகற்றிமெய்ப்மேவுபூதியுந்
துடைத்தனனெனியதன்றான்றல்வாயினை
யுடைத்தனனொருகையாலொருகைபற்றியே.

(இ - ள்.) புடைத்தனன் இவன் - புடைக்கப் பட்டவனெனிய இவன், புடைதத அவன் கைகளை - புடைத்த அந்தவீமன் கைகளை, விடைத்தனன் - சோபித்தவனெய், அகற்றி - நீக்கி, மெய் மேவு பூதியும் துடைத்தனன் ஆகி - (பார்மிசைப் புடைத்ததனால் தனது) உடம்பிற்பட்ட புழுதியையும் துடைத்தவனெகி, ஒரு கை பற்றி - ஒருகையால் (அவனைப்) பிடித்துக்கொண்டு, ஒரு கையால் - மற்றொருகையினால, அ தோன்றல் வாயினை - அந்தவீரனது வாயை, உடைத்தனன்—; (எ - ம.)

இது, கீசகன் செயலைக் கூறியது. விடைத்தனன் என்பதற்கு - விரைத்தவனெய் என்றும், விடுத்தவனெய் என்றும் தடுத்து என்றும் கூறுவாரு முளர்.

80.—இருவரும் ஒத்துப்போர, இரவில் வேதநோங் கழிதல்.

வீரமும்வலிமையும்விரகுமொத்தவர்
தீரமுந்தெளிவுகாஞ்செப்பற்பாலமீ
நேரமுஞ்சென்றதுநிசையெனுமிகு
சூரமுஞ்செற்றமுமுடையதோன்றலே.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) வீரம் உம் - வீரத்திலும், வலிமை உம் - தேகவலிமையிலும், விரகு உம் - (போர்செய்யுந்) திறத்திலும், ஒத்தவர் - ஒத்தவர்களான அந்தக்

கீசகவீமர்களின், தீரம்உம் - மனோதைரியமும், தெளிவுஉம் - (போரிலுள்ள) உத்ஸாஹமும், நாம் செப்பற்பால ஓ - நம்மாற் சொல்லுந் தரத்தனோ? மிகு சூரமஉம் - மிக்க சூரத்தனமும், செற்றம் உம் - பகைமையும், உடைய—, தோன்றல் - வீரனான வீமன், 'நிசைசோரம்உம் சென்றது - இரவின்சோரமும் வெகுவாகக் கழிந்திட்டது,' எனை - என்று கருதி,—(எ - று.)—"மன்னவன் மைத்துனன் மார்பொடிந்திட, ஒன்றிட, தாக்கி, சுருக்கினன்" என மேலிற் கவியில் முடியும்.

தெளிவு - போரிலுள்ள தெளிவான ஞானமுமாம். நிசை = நிபுர: வட சொல். அரோ - ஈற்றசை. (அ0)

81. — இரண்டுகவிகள் - கீசகனுடலைத் தசையின்மலையைத் தோன்றச்சுருக்கி வீமன் அவனுவியைப் போக்கினமை கூறும்.

மன்னவன்மைத்துனன்மார்பொடிந்திடச்
சென்னியுந்தாள்களுஞ்சோரவொன்றிடத்
தன்னிருசெங்கையாற்றாக்கிவான்றசை
துன்னியமலையெனச்சுருக்கினனரோ.

(இ - ள்.) மன்னவன் மைத்துனன் - விராடமன்னவனுடைய மைத்துனனாகிய கீசகனுடைய, மார்பு—, ஒடிந்திட-ஒடியவும், சென்னி உம் தாள்கள் உம் சோர ஒன்றிட - சிரசும் பாதங்களும் ஒன்றுபடச் சேர்ந்திடவும், (வீமன்), தன் இரு செங் கையால் தாக்கி - தன்னுடைய இரண்டு செவ்விய கைகளாலும் மோதி, வான் தசை துன்னிய மலை என - மிக்கசதை நெருங்கிய குன்று என்று (கண்டவர்) சொல்லும்படி, சுருக்கினன் - (பரவியிருந்த அவனுடலைச்)சுருங்குமாறு பிடித்து வைத்தான்; (எ - று.)

கை கால் சென்னி முதலியவை ஒன்றுந் தெரியாது மாமிசபருவத மென்று ஒன்றுதான் தோன்றும்படி கீசகனுடைய உடலத்தை அடக்கியதனால், சுருக்கினனென்றார். சென்னிதாள்களைக் கூறியது, கைக்கும் உபலட்சணம்: 84 - ஆங் கவியைக் காண்க. அரோ - ஈற்றசை. (அக)

82. மாற்றினனவன்பெருமையலாவினைக்
கூற்றினர்கைக்கொளக்கொடுத்துத்தன்சின
மாற்றினனத்திறலார்கொல்வல்லவர்
காற்றினல்வருதிறற்காளையல்லதே.

(இ - ள்.) அவன் - அந்தக் கீசகனுடைய, பெரு மையல் ஆவினை - மிக்க காமமோகங்கொண்ட உயிரை, மாற்றினன் - (உடம்பினின்று) வேறுபடுத்தினனாய், கூற்றினர் கைக்கொள கொடுத்து - யமன் கையிலுற் பெற்றுக் கொள்ளும்படி கொடுத்து, (வீமன்), தன் சினம் மாற்றினன் தன் கோபத்தைப் போக்கினன்: காற்றினல் வரு திறல் காளை அல்லது - வாயுதேவனால் உண்டாக்கப்பட்டுத் தோன்றிய வலிமையுள்ள இளவெருதுபோன்ற வீமசேனனையல்லாமல், அத் திறல் யார் கொல் வல்லவர்-அந்தப்பராக்கிரமச் செயலைச் செய்யவல்லவர் வேறுயாவருளர்? (எ - று.)—மூன்றுமடியில் ஆற்றினன் என்றும் பிரிக்கலாம். (அஉ)

83.—கீசகனை வீமன் வஞ்சித்ததைப் பற்றிய கவிக்கூற்று.

பண்ணியவினைகளின்பயனலாதுதா
மெண்ணியகருமமற்றியாவரெய்தினர்

திண்ணியகீசகன்செய்ததீங்கிவன்
புண்ணியமானதாற்புகல்வதென்கொலாம்.

(இ - ள்.) பண்ணிய - (அவரவர்)செய்த, வினைகளின் - புண்ணியபாவ ரூபமான செய்கைகளின், பயன் அலாது - பயனை அடைவதல்லாமல், தாம் எண்ணிய கருமம் - தாம் நினைத்த செயலே, மற்று - வினைப்பயனுக்கு மாறாக, எய்திலர் யாவர் - (தாம் நினைத்தபடி) அடைந்தவர் யாவர்? திண்ணிய கீசகன் - வலிமையுள்ள கீசகன், செய்த—, தீங்கு - தீச்செயல், இவன் - இந்த வீமசேனனுக்கு, புண்ணியம் ஆனது - நல்வினைப்பயனைத் தருவதாக ஆயிற்று: புகல்வது என்கொல் - (இதுபற்றி நாம் வேறு) சொல்லுதற்கு யாது? (எ - று.)

கீசகன் திரௌபதியைச் சேரக்கருதிவந்தது தீச்செய லாதலால் அத் தீவினைப்பயன் அவனை யழிக்க, அதுவே வீமனுக்கு வெற்றியைத்தரும் புண்ணியப்பயனை இருந்த தென்று, கவி, உலகோருக்கு ஒருதீதினை இதனாற் கற்பிக்கின்றனரென்க. ஆல் - தேற்றம். ஆம் - அசை. (அக)

84.—கீசகனுடலைக் கால் தலை எஞ்சாது தெரியாதபடி சுருக்கினபீர்டி திரௌபதியை வீமசேனன் அழைத்தல்.

செங்கைகாலுடலொடுசென்னிதுன்றிட
வங்கையாலடக்கிநின்றமேகமாயிரம்
வெங்கையானையின்மிடல்வீமன்வெற்பன
கொங்கையாடன்னையுங்கூவிஞனரோ.

(இ - ள்.) செம் கை - செந்நிறமுள்ள கை, கால்—, உடலொடு - உடல், சென்னி - தலை என்ற இவைகள் யாவும், துன்றிட - ஒன்றுபட்டுச் சேர, வெம் கை அனேகம் ஆயிரம் யானையின் மிடல் வீமன் - விரும்பத்தக்க துதிக்கையையுடைய அனேகவாயிரம் யானைகளின் வலிமையைப்படைத்த வீமசேனன், அம் கையால் அடக்கிநின்று - (தன்னுடைய) அழகிய கையாற் சுருக்கி, வெற்பு அன கொங்கையாள் தன்னை உம் - மலையையொத்த தனங் களையுடையளான திரௌபதியையும், (அதனைக்காட்டும்பொருட்டு), கூவினன் - அழைத்தான்; (எ - று.)—அரோ - ஈற்றசை. (அச)

85.—வீமன் அந்தக் கீசகனுடலைத் திரௌபதியின் பாததலத்தில் வைத்தல்.

பூங்கொடியனையவள்புறவடிப்புறத்
தோங்கியகீசகனுடற்பிழம்பினை
நீங்கியவாய்மைகணிகழ்ந்ததென்னையே
பாங்கினில்வைத்தடற்பவனன்மைந்தனே.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) பூங் கொடி அனையவள் - பூங்கொடி போன்றவளான அந் தத் திரௌபதியின், புறம் அடிப்புறத்து - புறவடியினிடத்து, ஓங்கிய கீசகன் உடல் பிழம்பினை - (குன்றுபோல) உயர்ந்திருந்த கீசகனுடற் பிண்டத்தை, அடல் பவனன் மைந்தன் - வலிமையுடைய வாயுகுமாரனான வீமன், நீங்கிய வாய்மைகள் நிகழ்ந்தது என்ன - ஒழுக்கந்தவறிய வாய்வார்த்தையால் நேர்ந்ததாகும் (இதுதன்மை) என்று (கண்டார்) சொல்லும்படி, பாங்கினில் வைத்து - இனிதாகவைத்து,—(எ - று.)— "துயராறுக, சுவாலைசெய் தனன்" என மேலிற் கவியில் முடியும்.

அவன் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லியதும் நேர்மையற்ற வழியில் ஒழுகியதுமே அந்தக்கீசகன் மாண்டதற்குக் காரண மாதலால், அவற்றை யுணர்ந்தவர்கள் கீசகனுடற் பிழம்பினைக் காண, மேலிய வாய்மைகளால் இது நிகழ்ந்ததென்ப ரென்க. நீங்கிய வாய்மைகள் - தவறிய நேரிய வழிகள் என்றுமாம். (அடு)

86.—வீமன் ஒருமராத்தைப் பிடுங்கிக் கைகளாற் பிசைந்து தீயெழச்சுவாலைசெயீது கீசகனுடலைத் திரௌபதிக்குக் காட்டுதல்.

விடுங்குழைமராமர மொன்றுமேலுடன்
பிடுங்கினன்கைகளாற்பிசைந்துதீயெழச்
சுடுங்கொலென்றஞ்சிலன்சுவாலைசெய்தன
னெடுங்கணுள்கண்டுதன்றுயரநீங்கவே.

(இ - ள்.) விடும்-மேன்மேல் தோன்றுகின்ற, குழை-தளிர்களையுடைய, மராமரம் ஒன்று - ஒருமராமரத்தை, மேலுடன் பிடுங்கினன் - மேலோடு பிடுங்கி, கைகளால் பிசைந்து - (தன்) கைகளால் (நெருப்புதோன்றுமாறு அம்மரத்தைப்) பிசைந்து, தீ எழ சுடும் கொல் என்று அஞ்சிலன் - (அங்ஙன் பிசைந்தபோது அதினின்று) அக்கினிதோன்றவும் சுடுமோ என்று சிறிதும் அஞ்சாதவனாய், நெடுங் கணுள் கண்டு தன் துயரம் நீங்க - நீண்ட கண்களையுடையவளான திரௌபதி கண்டு தன்துயரம் நீங்குமாறு, சுவாலை செய்தனன் - (தோன்றிய நெருப்பைக்) கொழுந்துவிட்டெரியச் செய்தான்; (எ - று.)

பிடுங்கினன், அஞ்சிலன் - முற்றெச்சங்கள். (அசு)

வேறு.

87.—வீமன் உன்னைக்காதலித்தோர் இவனைப்போலவே யாவரென்று சொல்லித் திரௌபதியை யனுப்பிவிட்டுத் தானுஞ் சேல்லல்.

வாசமென்குழன் மாது நல்லாயுனை
யாசைகொண்டவ ரிப்படி யாவர்கா
ணேசின் மங்கைநல் லாயினி யேகெனை
மாசி லாளனு மடைப்பளி யெய்தினன்.

(இ - ள்.) 'வாசம் மெல் குழல் மாது நல்லாய்-நறுமணமுள்ள மெல்லிய கூந்தலையுடைய அழகிய பெண்ணே! உனை ஆசை கொண்டவர் - உன்னை விரும்பியவர, இப்படி ஆவர்காண் - இந்தக்கீசகன் போலவே யாவர்கண்டாய்: ஏசு இல் மங்கை நல்லாய் - குற்றமற்ற மகளைப் பருவமுள்ள பெண்ணே! இனி ஏகு - இனிச் செல்வாய்,' எனை - என்றுசொல்லி(த் திரௌபதியை) யனுப்பிவிட்டு,—மாசு இலான் உம்-மனம்மாசுநீங்கிய அந்த வீமனும், மடைப்பளி எய்தினன் - (தனக்கு உரிய இடமாகிய) சமையலிடத்தை யடைந்தான்.

இதுமுதல் இந்தச்சருக்கம் முடியுமளவும் இருபத்தொருகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் மூன்றாஞ்சீரும் மாச்சீர்களும், மற்றையவை விளச்சீருமாகிவந்த அளவடிநான்குகொண்ட கலிவிருத்தங்கள். (அள)

88.—அப்போதுதோன்றிய பலவகையோசையால் கீசகன் தம்பியார் துயிலுணர்தல்.

தோட்டுமென்மலர்ச்சோலையிணைதயு
மோட்டுவன்காமுட்டியிணைதயு

மாட்டுவண்சுதைமண்டபத்தோதையுங்
கேட்டுணர்ந்தனர்கீசகன்றம்பிமார்.

(இ - ள்.) தோடு - அகவிதழ்களையுடைய, மெல் மலர் - மெல்லிய புஷ்பங்களையுடைய, சோலையின் - சோலையிலே, ஓதையும் - (மானுடரின் சஞ்சாரத்தால் தோன்றிய) ஓசையையும, மோடு வல் கரம் மூட்டியின் ஓதையும - பருத்த வலிய கைம்மூட்டிகளால் மோதியதனாலான ஓசையும், மாடு வள் சுதை மண்டபத்து ஓதையும்-(அசோலைக்குப்) பக்கத்திலேயுள்ள வளவிய சுண்ணம்புபூசிய மண்டபத்தினின்றுதோன்றிய ஓசையும், கேட்டு - செவியிற்படவே, கீசகன் தம்பிமார் - உபகீசகர்யாவரும், உணர்ந்தனர் - தெரிந்துணர்ந்தார்கள்; (எ - று.) (அஅ)

89.—மூன்றுகவிகள் - ஒருதொடர்:
உபகீசகர் தம்மனத்திற் கருதியதைக் கூறும்.

தொய்யிலாதிசுமேதட்டிணைக்கொப்பனை
கையிலாரழகேறக்கவின்செயுங்
கையலாள்பொருட்டாகத்தனக்குறு
மையலான்மிகவாடிவருந்தினன்.

(இ - ள்.) சுமேதட்டிணைக்கு - விராடன்மனைவியான சுமேஷ்ணையென்பவளுக்கு, தொய்யில் ஆதி - தொய்யில்முதலிய, ஒப்பனை - அலங்காரங்களை, கையில் - (தன்) கையினால், ஆர் அழகு ஏற - நிரம்பிய அழகு பொருந்த, கவின் செயும் - அலங்கரிக்கவல்ல, கையலாள்பொருட்டாக - பெண்ணின்நிமித்தம், (நமது அண்ணனாகிய கீசகன்), தனக்கு உறு மையலால் - தனக்குப் பொருந்திய காமமயக்கத்தால், மிக வாடி —,வருந்தினன் - வருத்தமுற்றிருந்தான்; (எ - று.)

தொய்யில் - மகளிரின் தோள்களிலும் தனங்களிலும் சந்தனக்குழம்பால் எழுதுங் கோலம். (அக)

90. வண்டரற்றுதமலர்க்குழல்வல்லியைக்
கண்டகாவிலிக்கங்குற்பொழுதிடைச்
சண்டவேகக்களிறன்னதன்மையான்
கொண்டமாலிற்குறுகினன்போலுமால்.

(இ - ள்.) (ஆகையால், வண்டு அரற்றுத மலர் குழல் வல்லியை - வண்டுகள் நீங்காத மலர்களையணிந்த கூந்தலையுடைய கொடிபோன்ற பெண்ணாகிய அந்தவண்ணமகளை, கண்ட - பார்த்த, காவில் - சோலையிலே, இ கங்குல் பொழுதிடை - இந்தஇராத்திரியிலே, சண்டம் வேகம் களிறு அன்ன தன்மையான் - கொடிய வேகத்தையுடைய மதயானைபோன்ற தன்மையையுடையனென (நம்மண்ணனென) கீசகன், கொண்ட - (தான்) அடைந்துள்ள, மாலின் - காமமோகத்தினால், குறுகினன்போலும் - நெருங்கினன்போலும்.

போலும் என்பது - அந்தஉபகீசகர்கள் தம்மனத்தைப்பேசுகின்றரென்பதைப் புலப்படுத்தும். ஆல் - ஈற்றசை. (கூ)

91. தூவிவாசந்துளிமதுச்சோலையி
லேவலாலியற்றும்மெழிற்பாவைமெய்க்
காவலாகியகந்தருவப்பெயர்த்
தேவரால்வெஞ்சிறைவிடுதானே.

(இ - ள்.) காசம் தூவி - நறுமணத்தைச் சிதறவிட்டுக்கொண்டு, மது துளி - தேனைச் சொட்டுகின்ற, சோலையில் - அந்தச்சோலையிலே, ஏவலால்- (அரசன்தேவியின்) கட்டளைப்படியே, இயற்றும் - பணிசெய்கின்ற, எழில் - அழகிய, பாவை - பிரதிமை போன்றவளான அந்த வெண்ணமகளின், மெய் - உடலுக்கு, காவல்ஆகிய—, கந்தருவப்பெயர் தேவரால் - கந்தருவ ரென்று பேர்பூண்ட தேவவர்க்கத்தவரோடு, வெம் செரு - கொடியபோர், உளது ஆனதூஉ - நேரிட்டதோ? (எ - று.)—அதனால் தான் இவ்வாறான ஓசைகள் தோன்றியிருக்க வேண்டு மென, உணர்ந்த உபகீசகர் எண்ணினர் என்று வருவித்து முடிக்க. (கூக)

92.—அங்ஙன் கருதிய உபகீசகர் சோலையைநோக்கிச் சினத்தோடு ஓடுதல்.

அழிந்தகீசகனன்றிமற்றுண்டென
மொழிந்ததம்பியர் நூற்றொருருமூவருங்
கழிந்ததியுமிழ்கண்ணினராயுயி
ரொழிந்துபோதுமென்றுன்னினரோடினர்.

(இ - ள்.) அழிந்த - உயிரொழிந்த, கீசகன் அன்றி - கீசகனல்லாமல், மற்று - பின்னும், உண்டு என மொழிந்த - உள்ளாரென்று கூறப்பட்ட, தம்பியர் நூற்றொருருமூவர்உம் - (அந்தக்கீசகனுடைய) தம்பிமாரான நூற்றொரு மூன்றுபேர்களும்,—கழிந்த - மிக்க, தீ - நெருப்பை, (பெருஞ்சினத்தால்), உமிழ் - வெளிச்சொரிகிற, கண்ணினர் ஆய் - கண்களையுடையவராய், உயிர் ஒழிந்துபோதும் என்று - நம்முயிர் ஒழியப்பெற்றாலும் போகிறோமென்று, உன்னினர் - எண்ணினவராய், ஓடினர் - (அந்தச்சோலையைக் குறித்து) ஓடிச்சென்றார்; (எ - று.)

'கந்தருவரோடு செருவிளைந்து அதனால் நம்மண்ணனுக்கு ஒருகால் மரணம் நேரிட்டிருப்பின் நாம் சென்றாலும் நமக்கும் அந்நிலை நேரக்கூடும்: ஆயினும் ஒருகை பார்த்தேதீரவேண்டும்'என்ற கருததுடனே அந்தஉபகீசகர் சோலையை நோக்கி விரைந்துசென்றன ரென்பதாம். முதலாலுக்குஏற்ப 'நூற்றொடொருவரும்' என்று பாடமிருப்பின் நலம். (கூஉ)

93.—பன்னூறு தீபங்களோடு அந்தச்சோலையிலே சென்று உபகீசகர் தேடிப்பார்த்தல்.

நகரியெங்கும்வெருவாநள்ளிரு
ணுகருமாறுபன்னூறொளித்தீபமோ
டகருநாறுதண்காவில்நும்பக
னிகருமென்னநெருங்கினர்நேடினர்.

(இ - ள்.) நகரி எங்குஉம் - (அந்தஉபகீசகர் செய்த ஆர்ப்பாடத்தினால்) அந்தவிராடநகரில் எவ்விடத்திலுள்ளாரும், வெருவர-அச்சமடையாநிற்க,— அரும் பகல் நிகரும் என்ன - (அவ்விரவு) அருமையான பகற்பொழுதை யொத்திருக்கு மென்ற கருதும்படி, நள் இருள் நுகரும் ஆறு - செறிந்த இருளைப் போக்குமாறு, பல் நூறு ஒளி தீபமோடு - பல நூற்றுக்கணக்கான ஒளியைக்கொண்ட தீபத்தோடு, அகரு நாறு தண் காவில் - அகருவின் மணம் வீசுகின்ற குளிர்ந்த அச்சோலையில், (அந்தஉபகீசகர்கள்), நெருங்கினர் - நெருங்கிப்போய், நேடினர் - (நிகழ்ந்ததையுணருமாறு) தேடிப் பார்த்தார்கள்; (எ - று.) (கூங)

94.—உபகீசகர் மண்டபத்திடையிலே வீமனும் சிதைவுண்ட கீசகன்வடிவைக் காணுதல்.

சுடைநிலாவெளிசூழ்மண்டபத்திடைச்
சிதையுமெய்யொடுஞ்செம்பொற்சிலம்பெனக்
கதைவலான்வெங்கடுங்கொடுங்கைகளால்
வதைசெய்தம்முன்வடிவுகண்டார்களே.

(இ - ள்.) சுடை நிலா ஒளி சூழ் - சுண்ணச்சாந்தின் வெண்ணிறவொளி சூழப்பெற்ற, மண்டபத்திடை - மண்டபத்திலே, சிதையும் மெய்யொடுஉம் - (உறுப்புக்கள் தெரியாது) சிதைந்துள்ள உடம்புடனேகூடிய, கதை வலான் வெம கடுங் கொடுங் கைகளால் வதை செய் - கதாயுதத்தில்வல்லவனான வீமசேனனுடைய வெவ்விய மிகக்கொடிய கைகளாற் கொல்லப்பட்ட, தம்முன் வடிவு - தமது அண்ணனுடைய வடிவத்தை, (அந்த உபகீசகர்கள்), செம பொன் சிலம்பு என - மேருமலைபோல(த் தோன்ற), கண்டார்கள்—. ()

95.—சுதேஷ்ணைக்குக் கீசகன் மாண்ட செய்தியைக் கூறிப் புலம்பிவிட்டு, உபகீசகர் அயலறியாமல் அவனுடலைச் சுட்டெரிக்க எண்ணுதல்.

பழுதுடைப்பெரும்பாதகன்மாண்டமை
தொழுதுரைத்துச்சுதேட்டிணைதன்னெடு
மழுதாற்றியயலறியாவகை
யெழுதழற்கணிடுவதற்கெண்ணினர்.

(இ - ள்.) பழுது உடை - குற்றமுள்ள, பெரும் பாதகன்-(பரதாரத்தை விரும்புதலாகிய) பெரும்பாதகத்தைச செய்தவனுகிய கீசகன், மாண்டமை - இறந்துவிட்டதை, சுதேட்டிணைதன்னெடுஉம - சுதேஷ்ணையினிடத்து, தொழுது உரைதது - வணங்கிச சொல்லி, (அந்த உபகீசகர்கள்), அழுது ஆற்றி - புலம்பி வாய்விட்டுக்கதறி, (பிறகு), அயல் அறியா வகை - பிறர்க்குத் தெரியாதபடி, எழு தழற்கண் - பற்றியெரிகின்ற நெருப்பிலே, இடுவதற்கு - (அவ்வுடலை) இட்டுச் சுட்டெரிப்பதற்கு, எண்ணினர் - நினைத்தார்.

96.—உபகீசகர் தம்மண்ணனுடலுடன் அவனது மாணத்திற்கு ஏதுவான வண்ணமகளையும் உடனிட்டெரிக்க நிச்சயித்தல்.

எண்ணிலாமனத்தெம்முனெயென்னுடை
விண்ணுளார்சிலர்வீத்ததற்கேதுவாம்
வண்ணமாடகடன்னையும்வன்னியா
லண்ணலோடுமடுதுமென்றார்களே.

(இ - ள்.) 'எண் இலா மனத்து-(பிறவீரரை)மதித்தலில்லாத மனத்தையுடைய, எம்முனை - எமக்கு முன் பிறந்தவனான [அண்ணனான] கீசகனை, எண்உடை விண்உளார் சிலர்-மதிப்புள்ள தேவவருக்கத்தைச் சேர்ந்த சிலர், வீதததற்கு - கொல்லுதற்கு, ஏது ஆம் - காரணமாக விருந்த, வண்ணமாமகள் தன்னையும் - வண்ணமகளாகத் தொழில்புரிபவளையும், அண்ணலோடும் - பெருமைவாய்ந்த அண்ணனுடனே, வன்னியால் - நமவெரியாலேயே, அடுதும் - எரித்திடுவோம்,' என்றார்கள் - என்று (அந்த உபகீசகர்) தீர்மானித்திட்டார்; (எ - று.)

எண்ணிலாமனத் தெண்ணுடை - தொடைமுரண். வண்ணமகளையும் நமவெரியாலடுமாறு உபகீசகர் வெகுளியால் தீர்மானித்தனரென்க. எண்

லோ மனத்து என்று பிரித்து - வலி நிலாவுகின்ற மனத்தையுடைய என்று பொருள் கூறுவாருமுளர்: இப்பொருளில் எண் - ஏண் என்பதன் விகாரம். விண்ணுளா ரென்றது, கந்தருவரை. (கசு)

97.—இரண்டு கவிகள் - ஒரு தொடர்: வண்ணமகளை ஈமவெளியிலிடுமாறு உபகீசகர் வந்து பற்றுதலும் அவள் தன் மெய்காக்குங் கடவுளரைக் குறித்து அரற்றுதல்.

சொல்லுமாடவர்சொல்லினராயினுங்
கொல்லுமோகணைரூன்பெற்றகோதையை
மல்லன்மாலையினர்வந்துபற்றலு
மல்லல்கூரவரற்றினளாலவள்.

(இ - ள்.) சொல்லும்-(இவ்வாறு வண்ணமகளை ஈமவெளியிலிட்டெரிக்குமாறு தீர்மானித்துச்) சொல்லிய, ஆடவர்—, சொல்லினர் ஆயினும்—, கணல் - அக்கினி, தான் பெற்ற கோதையை - தான் பெற்ற பெண்ணை, கொல்லும்ஓ-உயிர்நீங்கச் சுட்டெரிக்குமோ? [எரியாதன்றே?] (இதுகிற்க): மல்லல் மாலையினர் - வளப்பமுள்ள மலர்மாலையை யணிந்தவரான உபகீசகர்கள், வந்து—, பற்றலும் - (அந்தவண்ணமகளைப்) பிடித்துக்கொள்ளுதலும், அவள்,— அல்லல் கூர-துன்பம்மிக, அரற்றினள் - கதறலானாள்; (எ - று.)

அந்தவண்ணமகள் அரற்றினவகை மேற்கவியிற் பெறப்படும். முதலிரண்டடிகள் - உபகீசகரெண்ணம் பலிக்கா தென்பதைப் பற்றிய கவிக்கூற்று: ஒருகால் உபகீசகர்கள் அத்தத்திரௌபதியை ஈமவெளியிலிட்டாலும், எரியினின்றுபிறந்தவளான அவளை அந்தஎரி எரிக்கா தென்றவாறு. கோதை - மயிர்முடி: உடையாளுக்கு ஆகுபெயர்: இனி, கோதை - மாலை: அதுபோல் மெல்லியாளுக்கு உவமவாகு பெயருமாம். (கஎ)

98. *வெருவருங்கருங்கங்குலில்வெங்கொலை*
நிருபரென்னைநெருப்பிடைவீழ்த்துவான்
கருதினர்கண்மெய்காக்குங்கடவுள்கா
வருதிரென்றுகண்வார்புனல்சோரவே.

(இ - ள்.) 'வெருவரும் - அஞ்சத்தக்க, கருங் கங்குலில்-காரிருளிலே, வெங கொலை நிருபர் - கொடிய கொலைப்பாதகத்தைச் செய்யக்கருதிய சில மன்னவர், என்னை—, நெருப்பிடை—, வீழ்த்துவான் - தள்ளும்பொருட்டு, கருதினர்கள் - எண்ணியுளார்கள்: மெய் காக்கும் கடவுள்காள் - என்னுடலைப் பாதுகாக்கின்ற தெய்வங்களே! வருதிர் - (என்னைப் பாதுகாக்க)வாருங்கள்,' என்று - என்றுசொல்லிக்கொண்டே,— கண் வார் புனல் சோர - கண்களினின்று மிக்க நீர் பெருக,—(எ - று.)—'அல்லல்கூரவரற்றினள்' என்று கீழிற் கவியில் முடியும். (கஅ)

99.—அதுகேட்டுப் பெரும்போர்புரிய வீமன் அங்கு விரைந்துஓடுதல்.

மடைப்பெரும்பள்ளியெய்தியமாருதி
கிடைப்பதன்றிக்கிளர்பெரும்போரெனத்
தொடைப்பெருந்பலனத்தனல்சோர்தரப்
புடைப்பவீவாடினன்போர்மதமாவனன்.

(இ - ள்.) போர் மதம் மா அனன் - போர்செய்யவல்ல மதக்களிறு போன்றவனான, பெரு மடைப்பள்ளி எய்திய மாருதி - பெரியமடைப்பள்ளி

லைச் சேர்ந்திருந்த வீமன், 'இ னிளர் பெரும் போர் கிடைப்பது அன்று - இந்த உற்சாகத்துடன்செய்யத்தக்க பெரும்போரானது (எப்போதும்) கிடைக்கக்கூடியது அன்று,' எ - என்று (போரைக் குறித்து) மகிழ்ச்சி கொண்டு, தொடை பெரும் பவணத்து - (விரைந்து செல்வதால்) தொடையி னின்று வெளிப்படுகின்ற பெருங்காற்றிலே, அனல் சோர்தர புடைப்ப - நெருப்புத்தோன்றுமாறு (ஒருதுடையோடு மற்றொருதுடை) மோத, ஓடினன்—; (எ - று.)

துடைகள் ஒன்றோடொன்று மோதிப் பெருங்காற்றை வெளிப்படுத்து வதால் அந்த அதிர்ச்சியில் நெருப்புத்தோன்றி மூளுவதாயிற் றென்க. துடைப்பரும்பவணத்துஎன்ற பாடத்துக்கு - அழித்தற்கு அரிய வீட்டினின் றும், தான்செல்லும் விசையாலே, அனல்சோர்தர ஓடினன் என்பர். துடைப்பரும் புவணத்தினிற் சோர்தர என்றும் பாடம். (கக)

100.—இரண்டுகவிகள்·வீமசேனன் மாங்கோளக்கோண்டு உபகீசகர்களைத் தூத்தித்துரத்தி யடித்து உயிர்தொலத்தனம சூறும்.

அகப்பொழிற்கண்டவம்மரம்யாவையு
மிகப்பிடுங்கினண்வேரொடும்கோட்டொடு
முகப்புடைத்தனமேனைடத்தொடங்கினர்
தகச்செயாமதிக்கீசகன்றம்பிமார்.

(இ ள்.) அகப்பொழில்-சோலையினுட்புறத்தே, கண்ட-காணப்பட்ட, அ மரம் யாவை உம்-அந்தமரங்களை யெல்லாம், வேரொடுஉம் கோட்டொடுஉம்-வேரோடும் கிளையோடும், மிக பிடுங்கினன்—: உக - (அவ்வுபகீசகர்கள்) உயிரிழந்தமாறு, புடைத்தனன் - மோதினன்: தக - தகுதியாக, செயா - (தொழில்களைச்) செய்யமாட்டாத, மதி - தூர்ப்புத்தியையுடைய, கீசகன் தம்பிமார்—,—ஓட தொடங்கினர் - ஓடஆரம்பித்தார்கள்; (எ - று.)

திரௌபதியை உயிரோடு கொளுத்தவதென்று முயன்றவ ராதலால், அவர்களை 'தகசெயாமதிக் கீசகன் தம்பிமார்' என்றார். (கஂ)

101. போனபோனதிசைதொறும்போய்த்தொடர்ந்
தானவானவரைக்கயக்கோட்டினன்
மானமும்மவராவியும்வாங்கினை
னேனையோர்களுந்தம்முளைடெய்தினர்.

(இ - ள்.) போன போன திசைதொறும்உம் - (உபகீசகர்) ஓடிப்போன திக்குக்களிலெல்லாம், தொடர்ந்து போய்-(அவர்களைத்)தொடர்ந்து சென்று, ஆன - (திரௌபதியைக் காப்பதற்காக) வந்த, வானவன் ஒக்க - கந்தருவ தேனையொப்ப (த்தோன்றி), அ கோட்டினால்-அந்தமரக்கிளையினால், மானம் உம் - (அவர்களுடைய) கருவத்தையும், அவர் ஆவிஉம் - அவர்களுடைய உயிர்களையும், வாங்கினன் - (வீமன்) பறிக்கலானான்: ஏனையோர்கள் உம் - மற்றையோரான உபகீசகர்களும், தம்முளைடெ எய்தினர் - தம்மண்ணைடெ போய்ச் சேர்ந்தார்கள் [இறந்தார்கள்]: (எ - று.)

இரண்டாமடியில், ஆனைமானவனைக்கொடுங்கோட்டினன் என்றும் பாடம். தொடர்ந்து—, ஆன - பொருந்திய, வானவன் - பெரியோனென வீம சேனன், ஒக்க - ஏற்க என்று உரைப்பாரு முளர். (கஅ)

102.—ஊரார் வருந்துதல்.

துவன்றகற்புடைத்தோகையையிட்டுமுன்
னவன்றகீசகர் நூற்றெருருமூவரு
மவன்றன்வாகுவினுலழிவுண்டபின்
கவன்றதாலக்கடிநகரெங்குமே.

(இ - ள்.) துவன்ற - நெருங்கிய, கற்பு உடை-பதிவிரதைத்தன்மையை யுடைய, தோகையை - மயில்போன்றசாயலையுடையளான திரௌபதியை, விட்டு-(தாம் ஈமவெரியிலிடுமாறு பற்றியிருந்ததை) விட்டிட்டு, முன் நுவன்ற கீசகர் நூற்றெருருமூவர்உம் - முன்னே சொன்ன உபகீசகர் நூற்றுமூன்று பேர்களும், அவன் தன் வாகுவினுல் - அந்த வீமசேனனுடைய கையினுல், அழிவுண்ட பின் - இறந்து விட்டபிறகு, அ கடிநகர் எங்குமே கவன்றது - அந்தக் காவலுள்ள நகரம்முழுதும் வருந்திற்று; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

ஏகசாலத்தில் விராடனுடைய தேவியின் தம்பியர்யாவரும் இறந்ததை குறித்து நகரத்தவர் சோகித்தனரென்பதாம். நகரத்துக்குப் பாதுகாவல் குறைந்திட்டதை குறித்துச் சோகித்தனரெனலுமாம். நூற்றெருடொருவரும் என்றுபாட மிருக்கலாம். (கஅ)

103.—இரண்டு கவிகள் - ஒருதொடர்: நகரத்தவர் கீசகவதத்தால் நடுங்கிட, வீமனும் திரௌபதியும் தத்தமிடத்தைச் சேர்தல் கூறும்.

கற்கும்யாழுடைக்கந்தருவர்க்கெதிர்
நிற்பரோவுடனேர்பொரமானவர்
நிற்குணமந்துடைக்கீசகர்யாவருந்
தற்கினுன்மடிந்தார்தகவொன்றிலார்.

(இ - ள்.) கற்கும் - பயின்ற, யாழ்உடை-யாழையுடைய, கந்தருவர்க்கு எதிர் - கந்தர்வர்க்கு முன்னே, நேர் பொர - நேர்நின்று சண்டைசெய்ய, மானவர் உடன் நிற்பர்ஓ - மனிதர் உடன் நிற்கவல்லரோ? [வல்லரல்லர்]: (ஆதலால்), நிற்கும் மைந்து உடை - ஆற்றல்படைத்த வலிமையையுடைய, கீசகர் யாவரும்—, தகவு ஒன்று இலார்-நற்குணம் சிறிதும் இல்லாதவராய், தற்கினுல் - செருக்கினுல், மடிந்தார் - இறந்திட்டார்; (எ - று.)— நிற்கும் மைந்து - செய்யும் வலிமையுமாம். (கஉ)

104. என்றுமாநகர்யாவுநடுங்கிடத்
துன்றுகங்குலிற்சோரர்தமாருயிர்
பொன்றுவித்தபொருவருமூவையுஞ்
சென்றுதத்தமசேர்விடநண்ணினூர்.

(இ - ள்.) என்று - என்றுசொல்லி, மா நகர் யாவும் - பெரியநகரத்தி லுள்ள ஜநங்களெல்லாம், நடுங்கிட - நடுக்காசிற்க,—துன்று கங்குலில் - (இருள்) நிரம்பிய இரவிலே, சோரர்தம் - வஞ்சனைக் குணமுடையரான கீச கரின், ஆர் உயிர் - அருமையான உயிரை, பொன்றுவித்த - அழியுமாறு செய்த, பொருநன்உம் - வீரனுகிய வீமனும், பூவைஉம் - நாகணவாய்ப் பறவைபோன்று கொஞ்சிப்பேசுந் தன்மையளான திரௌபதியும், சென்று- (ஆங்குநின்றும்)போய், தத்தம - தம்தமக்குரிய, சேர்வு இடம் - சேர்தற்கு உரிய இடத்தை, நண்ணினார் - சேர்ந்தார்கள்; (எ - று.)

நகர் - இடவாகுபெயர். பூவை - உவமவாகுபெயர். 'வண்ணமகளோ பேரழகுபடைத்த வடிவினள்: அவளைக் கண்ணெடுத்துப்பார்ப்பவரோ கீச கர்கதியைக் கந்தருவ தேவராலடைவது திண்ணம்: ஆதலால், இவளை இந் நகரில் தங்கஇடங்கொடுக்காமல் அப்பாற்செல்லச் செய்வதே நகுதி' என நக ரத்தவர் விராடனிடம் வேண்ட, விராடனும் வண்ணமகளை நகரைவிட்டுப் போய்விடுமாறு சுதேஷ்ணைமூலம் தெரிவிக்க, அரசகட்டளையைக் கேட்ட வண்ணமகள் ஒருதிங்கள் அங்குவசிக்க அநுமதிகொடுக்குமாறு வேண்டிக் கொள்ள, சுதேஷ்ணை உடன்பட்டனளென்னும் முதனூல். (கo)

105.—சூரியோதயமாக இரவில்நடந்த போர் எங்கும் பிரசித்தமாதல்.

கரியகங்குல்கணையிருட் போர்வையோ
டிரியவந்தவிருள்வலிதன்னினும்
புரியினன்றுபுரிந்தவப்போரும்வன்
கிரியின்மன்னுங்கிளர்விளக்கானதே.

(இ - ள்.) கரிய கங்குல் - கருநிறமாகத் தோன்றும் இரவானது, கனை இருள் போர்வையோடு இரிய - நெருங்கிய இருளாகிய போர்வையோடு நிலைகெட்டோட, வந்த - அப்போது உதித்த, இருள்வலி தன்னின்உம் - சூரியனைக்காட்டிலும், புரியின் அன்று புரிந்த அ போர் உம் - அந்த விராடநகரத்திலே அன்று செய்யப்பட்ட அந்தயுத்தமும், வல் கிரியின் மன் னும் கிளர் விளக்கு ஆனது - வலிய மலைமீதுபொருந்திய . கொழுந்துவிட் டெரிகின்ற தீபம்போல எங்கும் விளக்கமுற்றுப்பரவியது; (எ - று.)

பல நகரங்களிலும் இதேபேச்சாயிற் றென்றவாறு. சூரியன் குன்றின் மேலிட்ட விளக்குப்போன்று உலகெங்கும் பிரகாசித்தன னன்றே: அது போலவே கீசகர்களின்வதமும் எங்கும் தெரிய லாயிற்றென்க. (கoந)

106.—தன்மைத்துனன்மார் சந்தருவரா லிறந்தது கேட்டு விராடன் மெலிவுழத்தல்.

புலியினும்பெரும்போரிற்றனித்தனி
வலியராகியமைத்துனர்யாரையும்

பலியிடுங்கந்தருவரைப்பார்க்கவே
மெலிவுழந்தனன்விற்கைவிராடனே.

(இ - ள்.) பெரும் போரில் - பெரிய போர்முனைகளில், புலியின் உம் தனித்தனி வலியர் ஆகிய - புலியைக்காட்டிலும் தனித்தனி வலிமையைக் காட்டுபவராகிய, மைத்துனர் யாரையும்-(தன்)மைத்துனர் யாவரையும், பலியிடும் - உயிர்ப்பலிகொண்ட, கந்தருவரை—, பார்க்கவ—, வில் கை விராடன் - வில்லேயேந்திய கையையுடைய விராடமன்னவன், மெலிவு ழந்தனன் - மனச்சோர்வடைந்தான்; (எ - று.)

மைத்துனர் யாரையும் பலியிடுங் கந்தருவரைப் பார்த்தல் - தன்மைத்துனன்மாருயிரைக் கந்தருவர் கொள்ளைகொண்டா ரென்று உணர்தல். பார்க்கவே என்ற இடத்து, பற்றவே என்றும் பாடமுண்டு. (கூ)

107.—பெரும்பாலும் அஞ்ஞாதவாசகாலம் கழிந்து விட்டதால் பாண்டவர் இனி விரைவில் வெளிப்படுவோமென்ற மனப்பான்மையோடிருந்தார்.

காண்டகுந்தமவ்வடங்கரந்துறை
யாண்டுசென்றதினிச்சிலநாளென
மீண்டுதோன்றுதுமென்றுவிரதரா
பாண்டுமைந்தரும்பான்மையினன்னினைர்.

(இ - ள்.) விரதர் ஆம் - விரதவொழுக்கத்தை யுடையவரான, பாண்டுமைந்தர்உம் - பாண்டவர்களும், —'காண்தகும் தம வேடம்-(இன்னதென்று) கண்டறியத்தக்க நிஜரூபத்தை, கரந்து - மறைத்துக்கொண்டு, உறைவசிக்கின்ற, யாண்டு-ஒருவருஷமும், இனி சில நாள் என-இனிச் சில நாளையுள்ளன வென்னுமாறு, சென்றது - (பெரும்பாலும்) கழிந்திட்டது; மீண்டுதோன்றுதும் - (விரைவில் தாமே நிஜரூபத்துடன்) மறுபடியும் வெளிப்படுவோம்,' என்று - என்றுகருதி, பான்மையின் - (அதற்கேற்ற) மனப்பான்மையோடு, நண்ணினர் - பொருந்தியிருந்தார்; (எ - று.)

கீசகன் வதைச் சருக்கம் முற்றிற்று.

விஸ்வபுத்தூர்ர் பாரதம்

விராட பருவம்

—·o·—

நிரைமீட்சிச் சருக்கம்

1. தொழுவார்தம் வினைதீர முற்கோல மாய்வேல் சூழ்பாரெயிற்
றுழுவானை நன்னுமி மொன்றுயி னுங்கற்றெ ருருவோதினர்
வழுவாத சுரராக நராராக புள்ளாக மாவாகபுன்
புழுவாக வொன்றிற்பி றந்தாலு நரகிற்பு காக்காணுமே.

2. மூதாரழற்பாலவனமுந் தடஞ்சாரன் முதுகுன்றமுஞ்
சூதாடியழிவுற்றடைந்தோர்கள் சரிதங்கள்சொன்னேமினிப்
பாதாரவிந்தத்துமருவார்விழுக்கொண்டுபாராளும்வெங்
கோதார்மனத்தோன்விராடன்றனிரைகொண்டகோள்கூறுவாம்.

3. ஈராறுமொன் றுஞ்சுரர்க்குள்ளநாள்சென் றவினிநம்முடன்
பாராளவருமுன்னரடலவருறைநாடுபார்மின்களென்
றோராயிரங்கோடியொற்றுள்விடுத்தானவ்வொற்றுள்களும்
வாராழிசூழெல்லையுறவோடிவிரைவின்கண்வந்தார்களே.

4. காடென்றுமலையென்றுநதியென்றுகடலென்றுகடலாடைசூழ்
நாடென்றுநகரென்றுநாடாததிசையில்லைநாடோறும்யாங்
தேடென்றுதாதென்றுதெரியாதுமதுமாரிசாரிமாலையாய்
நீடென்றுவலமேவுமவனிக்குளவரில்லைநின்பாதமே.

5. முன்னெற்றையிருசங்கமுடனூதவெதிர்சென்றுமுனைவெல்லுமா
மன்னெற்றரிதுகூறமந்தாகினீமைந்தன்மகன்மைந்தனுக்
குன்னெற்றருணர்தற்குவருமோவறன்காளையுறைநாடுகார்
மின்னெற்றுமழையுண்டுவிளைவுண்டெனத்தேதும்விரகோதினேன்.

6. ஒற்றுளிலொருவன்பணிந்தென்றுமெவ்வாழ்வுமுண்டாகியே
விற்றுனைவெம்போர்விராடன்றன்வளநாடுமேம்பட்டதான்
மற்றுழ்புயக்கீசகன்றுனுமொருவண்ணமகள்காரணத்
திற்றுனெனுஞ்சொல்லுமுண்டென்றுநிருபற்கெடுத்தோதினேன்.

7. வண்டார்விராடன்றன்வளநாடுதண்டான்மலர்ந்தெதாறுக்
கொண்டாலவன்சூழலிற்சூழும்வினயங்குறிப்போரிருப்
புண்டாகினிரைமீளுமின்றுகின்மீளாதென்னுட்கோளிதென்
றெண்டாழுமிதயத்துநிருபற்குரைத்தானிரவிமைந்தனே.

8. தக்கோர்தகுஞ்சொற்கள்கேளாததுரியோதனன்சொல்லினன்
மிக்கோர்மிலேச்சஞ்செழுந்தாமவிறல்வெட்சிமிலேதாளினன்
றிக்கோதையெழுவிம்மமுரசங்களரசானதிரிகத்தர்கோ
னக்ரோணிபடையோடுபோயானடித்தானவன்சார்பிலே.

9. கரைகாணவரிதானகடலொத்தவெஞ்சேனைகுழவுந்
தரைகாவல்பெறுதோளினண்மைப்பெருங்கேளிர்தற்சூழவும்
விரைகாலுமலரோடையெனுமாதிருக்கும்விராடற்குநன்
னிரைகாவனின்றேர்பணிந்தோதினர்தெவ்வர்நிரைகொண்டதே.

10. செருமிக்கபடையோடுசதியாகமதியாதுதிரிகர்த்தர்கோ
னிருமிக்கவெவாட்டாதவெண்பூமிதனில்வந்துநிரைகொள்வதே
பருமிக்கமதயானைதேர்வாசியாளின்னபண்செய்யுமென்
றுருமிக்கமுகில்போலுரைத்தானெரக்ரோணியுளதானையான்.

11. ஒண்டேளிவானம்புதைக்கப்பல்லியசாலமொலிபட்டிடத்
திண்டேசியணியாகநிரைகொண்டவெஞ்சேனைசென்றெய்தினன்
றெனுண்டேரும்வயமேறுமவளைத்திலஞ்சிந்திநிலவூரவே
வண்டேதமலருந்தடம்பொய்கைசூழ்மச்சவளநாடனே.

12. உட்பேடியாய்வைகும்விற்காளையல்லாதவொருநால்வரு
நட்பேறுபூபாலனுடனேகினர்போர்நலங்காணவே
கொட்பேறினிரைகொண்டவெஞ்சேனையுஞ்செல்கொடுஞ்சேனையும்
பெட்பேறியமர்செய்யமுன்னிட்டகுருசேனைபின்னிட்டதே.

13. மெய்க்கொண்டபுண்ணேறுதன்சேனைநில்லாமல்வென்னிட்டபின்
கைக்கொண்டநிரையைக்கடத்திப்பொலம்பொற்கழல்காவினன்
செய்க்கொண்டகழுநீரலங்கற்கரந்தைத்திருத்தாமன்மேன்
மைக்கொண்டலெனவில்வளைத்தாறுபத்தம்புமழைசிந்தினன்.

14. மாமச்சவுடல்புன்புலான்மாறிவண்காவிமணநாறுமக்
கோமச்சவளநாடனுங்கொற்றவரிவிற்குனித்தைதந்துசெந்
தாமச்சரங்கொண்டுதேர்பாகுகொடிவாசிதனுவுந்துணித்
தாமச்சமுறமற்றவன்கோலமார்பத்துமம்பேவினன்.

15. தினைத்தே ழிதித்தோனை நிரைகொண்டு போகின்ற தனுவீரனுந்
துனைத்தேரும்வேலொன்றுமேல்கொண்டுநாலேந் துதொடையேவியே
வினைத்தேரும் வயமாவும் வெம்பாகும் விழவெய்து வின்னுணினுன்
முனைத்தேர் முகத்திற் பிணித்தா னவன்சேனை முகமாறவே.

வேறு.

16. திண்டி றற்சிலை விராடனைத் தேரொடும் பிணித்துக்
கொண்டு போதலுங் குருகுலக் கோமக முனிவன்
கண்டு தன்னிருத் தம்பியைக் கடைக்கணித் தருள
மண்டு தீயென வெழுந்தனன் மடைத்தொழில் வல்லான்.

17. உகத்தினீ றுதோலுறையோடனையாந் தாளை
நகத்திலுலுயர்நகங்களோறுக்குமாபோலத்
திகத்தபூபதிதேரினைவெலுருதேராற்
றகர்த்துவில்லொடுமகப்படுத்தினனவன்றனையும்.

18. வீரியந்தனக்கொருவனும்விராடனையொருபொற்
றேரிலேறுகென்றேறற்றியத்தேரினிற்றிகத்தன்
சோரிபாய்தடந்தோள்களோவடத்திலுற்றுவக்கி
மூரியேறெனமீண்டனன்முனிந்ததச்சேனை.

19. பொருமுகத்தினிற்பகைவனைப்புயமுறப்பிணித்து
வெருமுகத்தினில்வீடுகொள்வீமனைவிராடன்
செருமுகத்தினிலெனக்குநீசெய்தபேருதவிக்
கொருமுகத்தினுமில்லைகம்மாறெனவுரைத்தான்.

20. சேவலானனத்தயித்தியனனையவத்திகத்தர்
காவலானையக்கான்மகன்பிணித்தமைகண்டு
மாவலான்வயமாப்பதினுயிரம்வெளவக்
கோவலானவன்கொண்டகோமீளவுங்கொண்டான்.

21. துன்னலன்றனைத்தோளுறத்துவக்கிமுன்றந்த
பன்னுநூன்மடைப்பலாயனற்கண்டுபாவித்தாங்
கன்னகாலையிலருக்கனைத்தேதொடுமனைத்து
மன்னுதன்னிசைவன்சிறைப்படுத்தினன்வருணன்.

22. கங்கனென்றுதன்னருகிருந்தருளியகடவுட்
டுங்கமாமுனிசொற்படிதோள்வடதெகிழ்த்துச்
சிங்கமன்னவத்திகத்தனைச்செல்கெனவிடுத்தா
னங்கமாமதிலயோத்திமன்றேருமொன்றளித்தே.

23. போரணிப்படையொடுமவன்போனபின்றன தி
தேரணிப்பெருஞ்சேனையாரவிகுலதிலகன்
பேரணிப்படவகுத்துமற்றியாரினும்பெரியோ
னீரணிப்படைவருமெனக்கங்குலங்கிருந்தான்.

24. கெட்டவெம்படைகெட்டமைசுயோதனன்கேளா
முட்டவெண்டிசாமுகங்களும்போரிகைமுழங்கத்
தொட்டபைங்கடற்சூரியன்மூன்றுமுன்மூன்றி
வட்டமாமதில்விராணூர்வடதிசைவளைந்தான்.

25. வளையகாடெலாமன்னவன்வருதினிபரப்பி
வீளையுநன்பெருவீளைவெலாம்வெங்கனல்கொளுத்தி
யளையுமாமணியானிரைகவர்தலுமாய
ருளையவோடிவந்தூர்புகுந்துதத்தரற்குரைப்பார்.

26. குடநிறைப்பணகுவிமுலைக்கோனிரைமீட்பான்
றிடனுடைப்புயமன்னவன்றென்றிசைச்சென்றான்
வடதிசைப்புலமுழுவதுமாசுணக்கொடியோ
னடல்வயப்படையாழியிற்பரந்ததையன்றே.

27. நாட்டிலுள்ளனபலன்களுங்கவர்ந்தனர்நறுந்தண்
காட்டிலுள்ளனசுரபியின்கணங்களுங்கவர்ந்தார்
கூட்டிலுள்ளுறைகலுழனின்குஞ்சுபோலினிநீ
வீட்டிலுள்ளுறைகின்றதென்வேந்தன்மாமதலாய்.

28. என்றபோதிலப்புதல்வனைப்பரிவுடனீன்று
ணின்றமங்கையர்தங்களைநிரைநிரைநோக்கிச்
சென்றகாவலன்வருந்துணைசெங்கையிற்படைகொண்
டொன்றவேகிநம்மெயிற்புறங்காமினென்றுரைத்தாள்.

29. உரைத்தவன்னையைக்கதுமெனவுத்தரன்வணங்கி
நரைத்தவோதிநின்றிருமொழிநன்றெனநகையா
வரைத்தவாரமுமாரமுமாலையுமணிந்தென்
வரைத்தடம்புயம்வளர்த்ததுமகளிர்போர்பொரவோ.

30. கனைகடற்படையுடனிரைக்கணங்கவர்ந்தவரை
முனைபடப்பொருதிமைக்குமுன்முதுகுகண்டிடுவேன்
வினைமுகத்தினையறிந்துதேர்விசையுடன்விடவென்
னினைவொடொப்பதேர்சாரதிநேர்ந்திலனென்றான்.

31. உத்தரன்புகலுறுதிகேட்டொப்பனைக்குரியாள்
கொத்தரம்பொருகூரயிற்குமரனைக்குறுகி
வித்தரம்பெறுதேர்விடும்விசயனுக்கிவளென்
றத்தரம்பெறுபேடியைக்காட்டினளன்றே.

32. என்றபோதவன்பயந்தவட்கியம்பியதுரைப்ப
நின்றபேடியைநிரைவளைதழுவிநேரில்
வென்றுபோர்முனையரசரைவிடலெவய்தீண்டுந்
துன்றுதாரிளையெனவியந்தின்னவைசொன்னாள்.

33. நாடிவாசியினல்லனநான்கவைபூட்டித்
தேடியாயுதஞ்சிலைமுதற்றெரிந்தவைகொண்டு
கோடிகோடிபைங்கோதையர்குழீஇயினர்வாழ்த்தப்
பேடிதேர்விடச்சென்றனன்சுதேட்டிணைபிள்ளை.

34. விலங்கன்மாமதில்களும்புறவீதியுங்கடந்தாங்
கிலங்குநேமியொன்றுடையதேரென்னலாந்தேர்மேற்
றுலங்குபேரொளியருக்கனிலுருத்தெழுதோற்றது
தலங்கலுத்தரனுத்தரதிசையெவந்தடைந்தான்.

35. விண்கொளாமதிமேன்மைகொண்மீனினமென்ன
மண்கொளாவிறன்மன்னுடைவரம்பில்வான்படையை
யெண்கொளாமனத்திராகவன்றிருக்குலத்திளைஞன்
கண்கொளாவகைபுகுந்துதன்கண்ணுறக்கண்டான்.

36. கைந்நடுங்கவுங்கானடுங்கவுங்கருத்தழிந்து
மெய்ந்நடுங்கவுநாப்புலர்ந்துயிர்ப்புமேல்விஞ்சிச்
சொன்னடுங்கவுஞ்சுடர்முடிநடுங்கவுஞ்சோர்ந்தான்
மைந்நெடுங்களிற்றுரனுடைவிராடர்கோன்மைந்தன்.

37. அஞ்சலஞ்சனீபகைவரையாருயிரடுத
றுஞ்சலென்றிவையிரண்டலாற்றுணிவுவேறுண்டோ
வெஞ்சமந்தனில்வந்துபுண்படாதினிமீண்டால்
வஞ்சநெஞ்சுடைவஞ்சியரென்சொலார்மறவோய்.

38. நிலையுமுட்டியுநிலைபெறநின்றுநேர்படத்திண்
சிலைவளைத்துவெஞ்சிலீமுகஞ்சிற்சிலைதாடித்து
மலையிலக்கெனயாரையுமலக்திடுமலந்தா
லலைகடற்புவியரசரிலாரெதிர்நிற்பார்.

39. தூண்டுமாவினைசொரிமதக்களிறினைதுரங்கம்
பூண்டதேரினைபதாதிமற்றினையெனப்புகல
வீண்டுநின்றனையாவையுமியாவெனத்தெரியா
மீண்டுபோவதேயுறுதியென்றனனிகல்வீரன்.

40. வெயர்த்தமேனியைநறும்பனிநீரிலல்விளக்கி
யயர்த்துநீழுதுகிடாதொழியிமைப்பொழுதையா
வுயர்த்தபல்கொடிப்பகைஞரைத்தனித்தனியோட்டிப்
பெயர்த்துநல்குமேவனிரையுமென்றுரைத்தனள்பேடி.

41. கொடித்தடந்தனித்தேரினின்றுகைத்துமுன்குதியா
வடித்தலம்பிடாரடித்திடவோடலுமவனைத்
தொடித்தடம்புயமிரண்டையுந்தொடர்ந்துபோய்த்துவக்கிப்
பிடித்துவந்தொருநொடியினிற்றேருடன்பிணித்தான்.

42. பிணித்ததேரினைப்பெற்றமும்பிற்படக்கடாவித்
திணித்தரும்பெரும்பொதும்பரிற்சேர்த்தியசிலையுந்
துணித்துமேவலர்முடியுகுசோரிதாய்தொடையுங்
கணித்தவெல்லையிற்கொண்டுமீண்டமர்க்களங்கலந்தான்.

43. எரிப்புறத்தருத்தருபடையாவெனவினவக்
கிரிப்புறப்பெருங்கானுறைகிரீடியவென்னத்
தெரிப்புறப்புகலெவ்வயிற்சேர்ந்தனனவனென்
றரிப்புறத்தடங்கண்ணியைக்கேட்டனனவனும்.

44. கிரிடியெங்குளனென்றனைக்கேட்டநீகேண்மோ
விருடியாகின்றுதையோராசனத்திருக்கும்
புருடனிப்பதிபுகுந்தநாள்வந்துடன்புகுந்தோ
ரரிடமானதன்விதியினற்பேடியுமானான்.

45. யாண்டுசென்றிலதின்னமுமீரிருகுடிகை
வேண்டுமாலினியீண்டையவுவிசயனுந்தோன்று
மீண்டுபோகலெவிடுவிடுவிரைபரித்தடந்தேர்
தூண்டுநீயெனத்தோளிலத்துவக்கையும்விடுத்தான்.

46. அறிந்துதாள்விழுந்தெழுந்துபின்னுங்கவனருளாற்
செறிந்தமால்பெருஞ்சிறப்பையச்சிறுவனும்பெற்றுப்
பிறிந்தபற்பலபேரணிகால்வகைப்படையு
முறிந்துபோகவத்தேர்விடுதொழிலினின்மூண்டான்.

47. ஓடிணுணுமித்தேர்விரைந்தூர்பவனென்றும்
பேடிசாமுதலையுறும்பெருந்தகையென்று
நாடிணர்பலர்நந்தியாவர்த்தநாண்மாலை
சூடிணனெடுஞ்சேனையிற்றுரோணனேமுதலோர்.

48. பேடியன்றுதன்பெண்மையையாண்மையாய்ப்பிறர்கொண்
டாடவந்தவெஞ்சாபமுந்தொடிக்கையிலாக்கிக்
கோடியம்புகளோரொருதொடையினிற்கோத்து
வீடுவிப்பனீயஞ்சிடாவிடுகதேரென்றான்.

49. என்றபோதவன்றேரினையிமைப்பினிற்செலுத்தச்
சென்றுபோர்முனைச்சிலவிடுசிலீமுகங்களினேற்
கொன்றபோர்மன்னரீரிலர்குருகுலத்தையராய்
நின்றபோர்முடிமன்னருஞ்சுளித்துளைநெளித்தார்.

50. அன்றுபோலலனருச்சுனனம்பிகாபதிபாற்
றுன்றுபோர்புரிதவத்திணைற்சுடுகணைபலபெற்
றன்றுபோரினிலவுணரையமரருக்காக
வென்றுபோனகதுகர்ந்தூபொற்றருமலர்வேய்ந்தான்.

51. தன்னிலத்தினிற்குறுமுயறந்தியின்வலிதென்
றிந்நிலத்தினிற்பழமொழியறிதிநீயிறைவ
வெந்நிலத்தினுமுனக்கெளிதாயினுமிவர்நந்
நன்னிலத்தினில்வரவமர்தொடங்குதனன்றால்.

52. என்றுகூறினன்விதுரனுமேனையங்கருகு
நின்றவீடுமன்றுரோணனுநினைவிதுவென்று
ரன்றுநாகவெங்கொடியவன்கொடியநெஞ்சழன்றான்
குன்றமாயினுநீறெழுமருகுறக்குறுகின்.

53. தேருமங்கொருதேர்தனித்தேரின்மேனின்று
வீரவெஞ்சிலைவளைத்தகைவீரனும்பேடி
யாருநெஞ்சழிந்தஞ்சுவதென்கொலென்றினைசத்தான்
சூரன்மாமகனெகியசூரரிற்சூரன்.

54. கொண்டகோதிரைகோவலர்கொண்டுமுன்போகத்
தண்டுகிற்கெனத்தம்பியரனைவருந்தானுந்
திண்டிறற்பெரும்பேடியைத்தோமிசைக்கண்டு
மிண்டுவீரெனக்கூறியேசுயோதனன்மீண்டான்.

55. மானமாமுடிமன்னரைவில்க்கிவல்விரைந்து
கோனிரைக்குலங்கொண்டுபோங்கோனிரை துரந்து
போனபேடிவெம்பூசலும்பொழுதுறப்பொருது
தூநிறத்திளங்கன்றுடைத்தொறுக்களுமீட்டான்.

56. மூந்தவான்றெறுமீட்டலுமுற்கவர்பொதுவர்
வெந்தநெய்யெனவாரவமடங்கினர்மிகவு
மந்தநெய்யினிற்பாற்றுளியுகுத்தெனவார்த்தார்
வந்தமச்சர்கோமகனெதும்வந்தகோபாலர்.

57. பாலெடுத்தபொற்குடங்கர்மடியினபருவச்
சூலெடுத்தநல்வயிற்றினமழவிடைதொடர்வ
கோலெடுத்திளங்கோவலர்கூவினர்துரப்ப
வாலெடுத்தன துள்ளிமீண்டோடினவனமே.

58. கடிகைநாலவண்சென்றபின்கடைசிவந்தகன்ற
நெடியகண்ணியன்றிட்டலெஞ்சாபமுரீங்கக்
கொடியின்மீதெழுமனுமனைக்குறிக்கவக்கொடியு
முடிகொடன்றனியிரதமுமுன்வரக்கண்டான்.

59. உரியதேரினைமீதுகொண்டுத்தரன்செலுத்தக்
கரியமேனியன்செய்யதாமரைத்தடங்கண்ணன்
புரியவாங்கியசிலையினனின்றனன்பொலம்பொற்
கிரியின்மீதெழுமரகதகிரியெனக்கிளர்ந்தே.

60. படுங்குறும்பனிபுதைத்தலிற்பரிதிதன்னுருவ
மொடுங்குமாறெனவொளித்ததன்பேட்டுருவொழித்து
நெடுங்கொடுங்கணைநிருபன்வெஞ்சினையின்வேந்தர்
நடுங்குமாறுமுன்றோன்றினனரனெனநாமன்.

61. செருச்செய்வான்வருசேனைவெண்டிரையையுங்கடப்பான்
பருச்சிலம்பினின்றுகைதருபாவனைபோல
வுருச்செழுஞ்சுடரெறிப்பநின்றுலாவினனுண்மைக்
கருச்சுணன்றடந்தேர்க்கொடியாடையிலனுமன்.

62. மருமிகுந்தொடைத்தடம்புயமகபதிமதலை
பெருமிதம்படவுளத்தவிற்பிறங்குநாணெலியாற்
செருமியெங்கணுங்கரிபரிதேர்மிசைநின்றே
ருருமின்வெங்குரல்கேட்டகோளரகரோடொத்தார்.

63. குறித்தசங்கொலிசிங்கநாதத்தொலிகுனிவிற்
செறித்தநாணெலிசெவிப்படச்சிந்தனைகலங்கிப்
பொறித்தபாவையினுத்தான்பொறிமயக்குற்று
மறித்தும்வீழ்ந்தனன்மாவிடுதொழிலையுமறந்தே.

64. தாழ்ந்தவாடையினுயர்கொடித்தண்டுடைத்தேர்மேல்
வீழ்ந்தபாகனைமீளவும்விரகுறத்தேற்றிச்
சூழ்ந்ததன்பெருந்துணைவனைச்சூதிறற்றுரந்து
வாழ்ந்தமன்னன்மேலேவினுன்வரிசிலைவல்லான்.

65. மச்சநாடன்மாமதலையும்மன்னவன்மொழியா
லச்சமற்றிருந்துளவுகோலருணனிற்கொள்ள
வுச்சவானிடைப்பகலவனுர்ந்தேர்பூண்ட
பச்சைவாசியிழைத்தனசுவேதவெம்பரிமா.

66. உரவினுல்வடமேருவைக்கொடுமுடியொடித்து
விரவியென்பெருந்தாதைதன்முதையையென்றுன்
பரிவினின்னையான்வெல்வனென்றவனிபன்பதாகை
யாரவைமற்றிவன்பதாகையிலனுமன்வந்தடுத்தான்.

67. வட்டமாகவில்வளைத்ததிர்மண்டலநிலையாய்த்
தொட்டவாளியானடிமுதன்முடியுறத்துணிப்புண்
டிட்டமாமணிக்கவசமும்பிளந்ததிர்ந்துள்ளார்
பட்டொழிந்தனரொழிந்தவர்யாவர்புண்படாதார்.

68. வேகவற்றியநதியணவிதநடைப்புரவி
பாகவற்றினைத்தலையறமலந்துபாழ்படுத்தி
மாகவற்றினிற்பொய்த்தகுதாடியவஞ்ச
நாகவற்றியபுன்மொழிநிருபனைநகைத்தான்.

69. பாகும் வாசியு மமைந்தமைதார் தேர்மிசைப் பாய்ந்து
மாகு சூழவுந் தப்பிய வரிசிற மாபோ
லேகு கின்றபே ரிராசரா சனையெதிர் தகைந்து
கோகு தட்டிடு தனஞ்சய னிவையிவை கூறும்.

வேறு.

70. கார்முகங் கைத்தலத் திருப்பக் கைம்மிகு
போர்முகந் தன்னினீ புறந்தந் தேகினை
லூர்முகக் களிற்றின்மே லுலாவும் வீதியின்
வார்முகக் கனதன மாத ரென்செலார்.

71. இருபுறஞ்சாமரமிரட்டத்திங்கள்போ
லொருகுடைநிழற்றவிவ்வுலகின்னதா
மருவலர்கைதொழுவாழுகின்றநீ
பொருமுனைகாண்டலும்போதல்போதுமோ.

72. உன்பெருந்துணைவரோடுன்னையோர்கணத்
தென்பெருங்கணைகளுக்கிரைகளாக்குவேன்
வன்பெருங்கொடிமிசைமடங்கலேற்றினன்
றன்பெருவஞ்சினந்தப்புமேகொலாம்.

73. எங்களைக்கானில்விட்டிரவியேகவெண்
டிங்களைப்போனெடுந்திகிரியோச்சினீர்
சங்களைபயில்வளநாடன்றண்டிறை
லுங்களைக்களப்பலியூட்டுநாளையே.

74. இரவலரிளையவரேத்துநாவலர்
விரவியதூதுவர்விருத்தர்வேதிய
ரரிவையர்வெஞ்சமரஞ்சுவோர்பெருங்
குரவரென்றிவர்களைக்கோறல்பாவமே.

75. பற்பலவுரையிவன்பகருமேல்வையிற்
சொற்பயிலுன்மறைத்துவசன்வீடுமன்
கற்பகரிகர்கொடைக்கன்னனுதியோர்
மற்புயரிருபனைவந்துகூடினர்.

76. மின்னுடன்மின்மினிவெகுளுமாறுபோற்
றன்னுடனிகரிலாத்தடக்கைவண்மையான்
மன்னுடனிகல்வதுவார்த்தையன்றினி
யென்னுடன்மலைதிநீயென்றுகூறினன்.

77. கரக்கவுண்மதம்பொழிகாய்களிற்றைவிட்
டுரக்கொடுவரியின்மேலோடும்யாளிபோ
னிரக்குமந்நிருபனுநிற்கவந்துபோ
ரிரக்குமக்கன்னன்மேலிரதமேவினன்.

78. இரதமுமிரதமுமெதிர்ந்தபோதிரு
குரதுரகதங்களுங்குழுமியார்த்தன
வுரைதருபாகருமுடன்றுகூவினர்
விரைதனுவளைத்தனர்வீரர்தாமுமே.

79. இருவருமெதிரெதிரேவும்வாளியால்
வெருவருமிருளுறவிசும்புதூர்த்தனர்
பொருவருமமர்நெடும்போதுதாக்கியு
மொருவருமிளைத்திலரொத்தவாண்மையார்.

80. மற்றிருருதொடையினிற்சுவேதவாகனன்
முற்றிருருகணத்திடையிவுளிபாகுதே
ரற்றிருருவினனடலாண்மையங்கர்கோன்.

81. ஒருவியிட்டோடிமற்றிருரொர்தேர்மிசை
மருவியிட்டெதிருறவந்துமோதியு
முருவியிட்டனகணையொன்றுபோற்பல
வெருவியிட்டனனவன்மீளமீளவே.

82. இம்முறைவந்துவந்தெதிர்ந்துவெஞ்சமர்
மும்முறைமுனிதலுமுனிவன்மாமக
னம்முறைமுதுகிடுமருக்கன்மைந்தனைத்
தெம்முறைமையிற்சிலவார்த்தைசெப்புவான்.

83. தேருமொன்றிருருவனேதரிலாளுமிங்
கியாருமஞ்சுதிரெனவிகழ்ந்துரைத்தரீ
போருடைந்தோடுதல்போதுமோதறுங்
தாருடன்பொலிதருதாமமார்பனே.

84. சொல்லலாமிருந்துழிச்சொன்னசொற்படி
வெல்லலாமென்பதுவிதிக்குங்கூடுமோ
மல்லலாளியைப்பலவஞைந்துகொள்ளினுங்
கொல்லலாயிருக்குமோகுஞ்சரங்களால்.

85. கொழுதுமம்பினுமிகக்கொடியகூற்றினை
பழுதறுநாவினுன்பகரும்வேலையின்
முழுதுணர்முனியையுமுந்தைதன்னையுந்
தொழுதுபற்குனன்சிலதொடைகளேவினன்.

86. தாளிணை யிறைஞ்சிய தனஞ்ச யன்றிருடும்
வாளிகண் டெளிகை மகிழ்ச்சி கூரவு
மீளிமை யுடையவவ் வீரன் மீதெழுந்
தாளிசெய் தேரினைத் துரோண னுந்தினன்.

வேறு.

87. உந்துதேர் முனியை யந்த வுதிட்டிர னிளவ லேக்கிச்
சிந்தையி லன்பு கூரச் சேவடி பணிந்து போற்றி
யந்தண ராசே யுன்ற னருளினு லடவி நீங்கி
வந்தன மென்று சிற்சில் வாசக மியம்பு வானே.

88. யாதுமொன் றறியாவென்னையிவனலா திலையென்றிந்த
மேதினிமதிக்குமா றுவின்முதற்படைகள்யாவுந்
தீதறத்தந் தவுண்மைத்தெய்வமீயென்ரு ற்பஞ்ச
பாதகந்தன்னிலொன் றுன்பதயுகம்பிழைப்பதையா.

89. மன்னெடுசூழினின் றமாசுணமுயர்த்தகோவை
மின்னெடுமுருமேறென்னவெகுண்டமர்புரிவதல்லா
னின்னெடுங்கிருபமேடுநின்மகமேடுமுந்தை
தன்னெடும்புரியேன்வெம்போர்தக்கதோசரதம்பாவம்.

90. அம்முனிதன்னேடிவ்வா றருச்சுனன்புகலவல்விற்
கைம்முனிவனுஞ்செஞ்சோற்றுக்கடன்கழித்திடுதல்வேண்டுந்
தெம்முனைமதியாவீராதேவர்தம்பகையையென்ற
வெம்முனைகாணுமா றுன்வில்வளைத்திடுகவென்ரு ன்.

91. குருவுமக்குருவைத்தப்பாக்குருகுலக்கோவுந்தங்க
ளருவரைத்தோளினுணியறைதரப்பிறைவில்வாங்கிக்
கருவுயிர்த்தெழுந்தகாலமழைமுகில்கால்கொண்டென்ன
வொருவருக்கொருவர்வாளியோரொருகோடியெய்தார்.

92. அதிரதர்தம்மையெண்ணிலணிவிரன்முடக்கவொட்டா
முதிர்சிலைமுனியும்வீரமுனிவிலாமுகனும்விட்ட
கதிர்முனைப்பவனவேகக்கடுங்கொடும்பகழியாவு
மெதிரெதிர்கோத்தவல்லாற்பட்டிலவிருவர்மேலும்.

93. வண்டுதான்முரலுங்கஞ்சமாலையான்பயிற்றுவித்துப்
பண்டுதான்கண்டகூற்றிற்பதின்மடங்குயர்ந்தபண்பான்
மிண்டுதானவரைவென்றவிறலுடைவிசயன்வின்மை
கண்டுதானவன்றனேடுகற்பதற்குன்னினானே.

94. எறுதேர்முரியவேதமெழுதியதுவசம்வீழத்
தாறுபாய்புரவிதான்குஞ்சாரதிதலையுஞ்சிந்தக்
கூறுபோர்நாணியோடுகுனிசிலைதுணியப்பின்ன
ராறுகோலெருடுப்பவெள்கியாரியன்முதுகிட்டானே.

95. தந்தைதபோரழிந் துபோனசாபலங்கண் டுவெம்பி
யிந்திரன்மதலையோடுமெதிர்த்தனனிவுளித்தாமா
மூந்துறவிருவர்வில்லுமுரண்படக்குனித்தபோரி
னந்தணன்கணையான்மன்னன்வில்லிறுணற்றதன்றே.

96. மந்தரமனையதோளான்மற்றொருவரிவில்வாங்கி
யிந்தவெம்பகழிக்கெல்லாமீடுறுனிவனென்றெண்ணிச்
சந்திரமவுலிதந்தசாயகந்தொடுத்தலோடு
நொந்தினியென்செய்வோமென்றூர்புகநோக்கினனே.

97. கிருபனுமவனைக்கண்டுகெட்டனன்கேடிலாத
நிருபர்கள்பலருமோதிநேர்பொருதாவிமாய்ந்தார்
பொருபடைச்சேனையாவும்புக்குழியாவர்கண்டா
ரொருபரியொற்றையாழித்தேரவனுச்சமானான்.

98. வெண்ணிடுமளவினின்றவீடுமன்விதுரன்வண்டு
தென்னிடுமலங்கன்மாலுச்சுயோதனன்சிந்துராயன்
றுன்னிடுநிருபர்சூழச்சூழ்திசைநான்கும்வந்து
முன்னிடுதேரோன்றன்னைமுனையுறவளைந்துகொண்டார்.

99. இவர்பெருந்தேரின்மேலோரெருவனேயிலக்கதாகத்
தவருடன்குனித்தநேகசாயகந்தொடுத்தகாலைக்
கவுரிபங்காளன்றன்னைக்கண்ணுறக்கண்டகாளை
பவுரிவந்தான்றுந்தன்மேற்படாமல்வெம்பகழிகோத்தான்.

100. குடதிசைமகவான்வாளிகுணதிசைவருணன்வாளி
வடதிசைமறலிவாளிதென்றிசைமதியின்வாளி
யடலுறவிமைப்பினேவியவரவர்மார்புந்தோளும்
படருறப்படைகணீறுபடப்படப்பரப்பினனே.

101. கோகனநாகவேகக்கொடியவன்சேனையாவு
மோகனக்கணையொன்றேறவிழுடியடிபடிக்கண்வீழ்த்தான்
மாகனற்கடவுடந்தமணிப்பொலந்தடந்தேர்வெள்ளை
வாகனக்குரிசில்வின்மைவல்லபமிருந்தவாறே.

102. இத்தரையிடங்கொளாமலிறந்தனர்போலவீழ்ந்த
மத்தரைமயிர்கொய்தென்னமணிக்கொடித்தூசுந்தூசு
முத்தரைவண்டடற்பாவைக்குடுத்துதற்கென்றுகொய்தா
னத்தரைமவுலித்திங்களமுதுகப்புடைத்தவில்லான்.

103. விழுந்தவர்நெடும்போதாகமெய்யுணர்வெய்திமெல்ல
வழுந்தியபகழியோடுமரிபடுகவசத்தோடு

மெழுந்துதம்மிரதம்யானையிவுளியினேறியேறித்
தொழுந்தகுதெய்வமன்னசூரனைத்துதித்துமீண்டார்.

104. கொடிமதிற்பாகைவேந்தன்கொங்கர்கோன்புரவிக்காலால்
வடதிசையரசர்தங்கண்மாமணிமகுடம்போல
வடலுடைவிசயனெற்றையம்பினன்மீண்டுஞ்சென்று
படவரவுயர்த்தகோவைப்பண்ணினன்மகுடபங்கம்.

105. வல்லினிலழிந்துநின்முன்மன்னவைதன்னினன்று
சொல்லியகாலஞ்செல்லாமுன்னிவர்தோற்றஞ்செய்தார்
புல்லியகானினின்னம்போகநீபுகலியென்று
வெல்படைவேந்தன்சொல்லவீடுமன்மீண்டுஞ்சொல்வான்.

106. செந்நெலேகன்னல்காட்டச்சேர்ந்தயற்செறுவினின்ற
கன்னலேகழுகுகாட்டுங்கங்கைநீர்நாடகேண்மோ
வின்னலேயுழந்தோர்காலமிந்துவினியக்கந்தன்னு
ளென்னலேசென்றதென்றுனெஞ்சினிலழுக்கிலாதான்.

107. அரவினையுயர்த்தகோமானவ்வுரைகேட்டபோழ்தே
பரவையினிரவிகண்டபனிமதிபோலமாழ்கி
வரவரவதிதுமென்றுமாபெருஞ்சேனையோடு
மிரவிடையாருந்துஞ்சவெயில்வளைகரிபுக்கான்.

108. வேந்தனைமுதுகுகண்டவெந்திறல்வீரன்மீண்டு
போந்துமுன்னெடுத்தவண்ணிப்பொதும்பரின்புறத்துவந்து
வாய்ந்தவாயுதங்கள்யாவும்வைத்தெழில்வடிவமாற்றி
யாந்தகவெண்ணிப்பேடியாயினனென்பமாதோ.

109. இவ்வெயிலெறிக்கும்பைம்பொனிலங்குதேர்மீண்டுமேகக்
கைவெயிலெறிக்கும்பைம்பூட்காளைதன்றேரிலேறி
வெவ்வெயிலாறும்வண்ணம்விரைந்துபோய்விராடன்மூதூ
ரவ்வெயில்சூழ்ந்தகாவினமர்ந்தனனரசரேறே.

110. ஆறியபசுந்தண்காவினைசெவாரீ இயிருந்தவீர
னேறியகானிற்பல்யாண்டிருந்தபினேலையாண்டு
மாறியவடிவத்தோடிவ்வளநகர்வைகினேனெமென்
றூறியவழுதச்சொல்லாலுத்தரற்குரைசெய்தானே.

111. பேடிதேர்செலுத்தச்சென்றபிள்ளையும்பெரும்போர்வென்று
கோடிதேர்முதுகுகண்டுகோநிரைமீட்டானென்றென்
றோடிநீர்சொன்மினென்றுதூதரையோடவிட்டா
னீடுநீர்பரக்குங்கங்கைநாடுடைநிருபர்கோமான்.

112. இங்கிவனிவ்வா றுய்ப்பமுற்பகலேகியாங்கட்
கங்குலிற்சேனையோடெங்கண்படையின்றிவைகிச்
செங்கதிரெழுந்தபின்னர்த்தென்றிசைப்பூசல்வென்ற
வெங்கழல்விராடன்றனுமீண்டுதன்னகரிபுக்கான்.

113. தடம்பதியடைந்தகாலத்தன்மனையிருந்தபேடி
திடம்படுதடந்தேரூரத்திருமகன்சென்றசெய்கை
விடம்படுவெகுளிவேற்கட்சுதேட்டிணைவிளம்பக்கேட்டாற்
குடம்புயிரின்றிவீழ்ந்ததென்னுமாறுருகிவீழ்ந்தான்.

114. சந்தனவளறும்வாசத்தண்பனிநீரும்வீசி
வெந்திறல்வேந்தன்றன்னைமெய்ம்மெலிவிருந்துதேற்றி
மைந்தனிப்பொழுதேவென்றுவருகுவன்பொற்றேரூர்ந்தா
ளந்தமெய்ப்பேடியாகிலென்றனனந்தணாளன்.

115. அறன்மகன்வாய்மைமேதகியரசனுங்கிருந்தவெல்லை
மறனுடையுரகசேதுவன்சமரழிந்தவாறு
முறமலைந்தொருதன்றேர்கொண்டுத்தரன்வென்றவாறுந்
தொறுநிரைமீட்டவாறுந்தூதர்போய்த்தெரிதுசொன்னார்.

116. சீதளவமுதவாரிசெவிகளிற்செறிந்ததென்னத்
தூதர்வந்துரைத்தசொல்லாற்சோகமுந்துனியுமாறித்
தாதையன்றேதுசெய்தான்றனையொழிந்துள்ளசேனை
யாதிபரெவருமெய்தியண்ணலையெதிர்கொள்கென்றான்.

117. சோரர்தங்கருவைத்தங்கள்கருவெனத்தேளிலேந்தி
யார்வமுற்றுருகுநெஞ்சினிவிலார்தம்மைப்போல
வீரன்வெஞ்சமரம்வெல்லவிராடனுத்தரன்வென்றனப்
போரினையென்னுமேனிபுளகெழப்பூரித்தானே.

118. பூழிகளடக்கிச்செம்பொற்பூரணகும்பம்வைத்து
வாழையுங்கமுகுநாட்டிமணியொளித்தீபமேற்றிச்
சூழவன்பதாகைகட்டித்தோரணம்பலவுநாட்டி
யேழுயர்மாடமூதூரெங்கணுங்கோடித்தாரே.

119. மகன்வருமளவும்வெஞ்சூதாடுதும்வருகவென்றுந்
தகமிகமகிழ்ந்துவேந்தனந்தணன்றன்னோடாட
மிகமுனியடித்துவெல்லவென்றியுத்தரன்முன்மேவா
ரிகலழிந்தென்னவிப்போரழிதிதீயெந்தையென்றான்.

120. என்றவன்மொழிந்தபோதிலெண்ணில்வெஞ்சேனையோடு
வன்றிறலுரகசேதுவலியழிந்துடைந்துபோக

வென்றவன்பேடியேதன்மெய்ங்நடுங்காமற்போரி
னின்றுநின்சிறுவன்வெல்லவல்லனெனிருபரேறே.

121. பிருகந்நளையென்றேதும்பேடியைப்பேடியென்று
கருதனீயவனேமுன்னங்காண்டவமெரித்தகாளை
யொருதனித்தடம்பொற்றேரூர்ந்தும்பருக்காகவும்ப
ரரிகளையாரிதின்வென்றுனென்றனனந்தணாளன்.

122. கோடியின்கோடியானகுருக்கள்வெஞ்சேனைதன்னை
யோடியென்புதல்வன்றானேயொருதனிபொருதுவென்று
நீடியநிரையுமீட்டுமீண்டனனென்னநீயப்
பேடியைவிறல்கொண்டாடிப்பேசுதிபிரமமூர்த்தீ.

123. புன்னையானமாற்றம்புகன்றனரெனினுங்கேட்டாங்
கின்னைவநன்றுநன்றென்றிதம்படமொழிவதல்லான்
மன்னையிருந்துநாளும்வழிபடுமாந்தர்மன்னர்
சொன்னையமறுத்துமாறுசொல்வரோசுருதிவல்லாய்.

124. என்னவுமிடங்கொடாமலெதிருறவிருடிமீண்டுங்
கன்னன்விற்றுரோணன்மைந்தன்காங்கெயன்முதலினோரை
மன்னவவெல்லநின்சேய்வல்லனேவந்துசொன்னற்
பின்னைநீதெளிதியென்றுன்பீடைப்பேடிதன்னை.

125. கொடுவிலாண்மையினுலின்றென்குமரன்வென்றிடவுஞ்சற்று
நடுவிலாதவரிற்பல்காலென்கொனீநவில்வதென்னைக்
கடுவிலாடரவிற்பொங்கிக்கவற்றினுலெலிந்துநக்கான்
வடுவிலாமுனியையமன்னன்வடுப்படுமாறுமன்னே.

126. எற்றியகவறுநெற்றியெதிருறவிருந்தகங்க
னெற்றியிற்சென்றுவாசநிறைத்தகுங்குமத்தின்சேற்றுற்
பற்றியதிலகம்போலப்படுதலும்பாங்கர்நின்ற
வற்றியவோடையன்னவனப்பினுள்மருண்டுகண்டாள்.

127. பல்கியகிளையுந்தேசும்பார்த்திவன்வாழ்வுந்தாங்க
ளல்கியநகருமின்றேயழியுமென்றஞ்சியேகொ
னல்கியநேயமேகொனையனீர்மல்கமல்க
மல்கியகுருதிதன்னைமாற்றினுள்வண்ணமாதே.

128. கண்ணினீர்மல்கவண்ணக்காரிகைகலையாலந்த
வண்ணமாமுனிவன்சோரிமாற்றியகாலையையுற்
றெண்ணமுஞ்செயலும்வேறுயென்செய்தாமென்செய்தாமென்
றண்ணலுந்தன்னைநொந்தாங்கருஞ்சினம்பாவியென்றான்.

129. ஆயிடையத்தக்குன்றுக்காதபனணியலைகச்
சேயிடையெதிர்கொள்கொற்றச்சேனைமன்னவர்கள்சூழ
வீயிடைவரிவண்டார்க்கும்வியன்பெருங்காவுநீங்கிப்
போயிடைநெருங்கிவேந்தன்புதல்வனப்புரத்தைச்சேர்ந்தான்.

130. பரந்துவம்படைகண்மின்னப்பல்லியம்பணிலமார்ப்பத்
சுரந்துமும்மதமும்பாயுந்துதிக்கைவாரணங்கள்சூழப்
புரந்தரனகர்ப்புயல்வருமாறுபோல
வுரந்தருபேடிதன்றேரூர்வெவ்வீதியுற்றான்.

131. வென்றுமீள்குமரன்றன்னைவீதிகடோறுமாத
ரன்றெரிர்கொண்டுநன்னீராசனமெடுத்துவாழ்த்தக்
குன்றெறிந்தவனைக்கண்டகுன்றவில்லியைப்போன்முந்தச்
சென்றவன்பிதாவுந்தேர்மேற்சிக்கெனத்தழீஇக்கொண்டானே.

132. தழுவியவரசன்முளிற்றலையுறவீழ்ந்துவேந்தர்
குழுவிடைக்கொண்டுபோகக்கோயிலிற்புகுந்தபின்னர்ப்
பழுதறுவாய்மைவேதபண்டிதன்பாதம்போற்றிச்
செழுமலர்வதனநோக்கித்திருந்துதல்வடுவுற்கண்டான்.

133. திகழ்ந்தநின்னுதலினூறுசெய்தவர்யார்கொலென்ன
நிகழ்ந்தமைந்தைகூறெனச்சிறற்றந்தைதன்னை
யிகழ்ந்தமைந்துவலும்போதைகெல்லையின்றிவினைப்போல
வகழ்ந்தபோராடைஞாலத்தார்கொலோவமைவின்மிக்கோர்.

134. செறுப்பதுபெருமையன்றுசிறியவர்செய்ததீமை
பொறுப்பதேபெருமையென்றுபூசுரன்பாதம்போற்றி
வெறுப்பதுவிளைத்ததாதைதவீழ்ந்தபின்றானும்வீழ்ந்து
மறுப்பதுபுரியாஞானிமனத்துனியகற்றினானே.

135. ஆன்றமைந்தடங்குகேள்வியண்ணலுமவனைப்பெற்ற
தோன்றலும்பின்னர்ச்சென்றுசுதட்டிணைகோயிலெய்த
வீன்றவப்பொழுதிலேகையெண்மடங்காகவிஞ்சச்
சான்றதன்மகனைக்கண்டுமகிழ்ந்தனடவுத்தின்மிக்காள்.

136. ஓடியுத்தரன்றேரூரவொருமுனையாகத்தன்னை
நாடியுத்தரிக்கமாட்டாநரராதிபர்பதாகைத்தூசுங்
கோடியுத்தரியப்பட்டுங்குழமகன்றனக்குரல்கிப்
பேடியுத்தரைதன்னேடும்பெற்றதாய்பின்புநின்றாள்.

137. தந்தையுந்தானுமாங்குத்தனித்திருந்தடையலாரை
முந்தியவமரிற்சென்றுமுனைந்துபோர்விளைத்தவாறும்

வந்தவர்சாய்ந்தவாறுமணிநிரைமீட்டவாறுஞ்
சுந்தரகிரிகள்போலுந்தோளிணென்றேன்றச்சொல்வான்.

வேறு.

138. உருப்பசிவெஞ் சாபத்தாற் பேடி யான
வுருவமொழித் தருச்சுனன்ற னுருவங் கொண்டு
பொருப்பனைய கவித்துவசத் தேர்மேல் வண்ணப்
பொருசிலைதன் காத்தேந்திப் புகுந்த போது
செருப்புரவி யிரவியெதிர் திமிரம் போலத்
திறலரியேற் றெதிர்கரியின் றிறங்கள் போல
நெருப்பெதிர்ந்த பதங்கம்போ லழிந்தா ரையர
நிரைபோக்கி யணியாகி நின்ற வேந்தர்.

139. அருகுவிடாதுனக்குயிர்நண்பாகிநீதி
யறமுரைப்போனறத்தின்மகனுகவேண்டு
மருமலருமான்மதமுந்துறந்தகூந்தல்
வண்ணமகள்பாஞ்சாலன்மகளேபோலும்
வெருவருமற்போர்கடந்தமடைபன்றன்னை
வீமனெனவயிர்க்கின்றேறன்வேந்தேமற்றை
யிருவரினுமாவலானகுலன்றனே
யின்னிரையின்காவலானிளையகோவே.

140. ஆளையேயடுங்களிற்றுர்தம்மையாரு
மறியாமலிந்தகார்க்கணடங்கினின்றூர்
நாளையேவெளிப்படுவர்நெருநலேதந்
நாளுள்ளகழிந்தனவானயந்துகேண்மோ
வேளையேயனையவெழிற்றேரைகவாகை
வேளையேயனையவிறல்விசயனென்னுங்
காளையேயடியேனுக்கிளையகாதற்
கன்னிகைக்குவரனென்றுகருதுவாயே.

141. மகனிவைமற் றுரைத்தளவிற் றுதை கேட்டு
மனநடுங்கி நெகிழ்ச்சியுடன் மகிழ்ச்சி கூர்ந்தான்
பகலமரி லேறியமெய்ப் பராக மாறப்
பகலோனும் புனல்படிவான் பரவை சேர்ந்தான்
றகவுடைய பாண்டவரும் வண்ண மாதுந்
தனித்தெண்ணிப் பரகாய சரிதர் போலப்
புகலரிய பழையதம வடிவங் கொண்டார்
போனபக லவணுதயப் பொருப்பின் மீண்டான்.

பாரதம்.

பாரதம் என்னுஞ் சொல்லுக்கு - பாதனது வமிசத்தவரைப்பற்றிய நூலென்று பொருள். இங்குக்குறித்த பரத னென்பவன் - சந்திர வமிசத்தில் துஷ்யந்தமகாராஜனுக்குச் சகுந்தலையினிடத்தோன்றிப் பிரசித்திபெற்ற ஓர் அரசன்; (இராமன்தம்பியான பாதனும்,பாதகண்டமென்றற்குக் காரணனான சடபாதனும், பாதஜாட்டியமென்றற்குக் காரணமான பாதனு மல்லன்.) பாத வமிசத்துத்தோன்றியவர், பாரதர்; அவரானவர் - பாண்டவரும், துரியோதனாதியரும்: அவர்களது சரித்திரத்தை யுணர்த்தும் நூல். பாரதமெனப்பட்டது; இது - வடமொழித் தத்திதாந்த நாமம். (ஒரு வடசொல் சிறிதுமாறித் தன் னேடு இயைபுடைய பொருளாயாயினும், தன்பொருளாயாயினும் உணர்த்து வது, தத்திதாந்தநாமம்.) இராசதருமம் மோக்ஷதருமம் நீதி முதலிய சிறந்த இறுதிப்பொருள்களையெல்லாம் அறிவிப்பதனால் முனிவர்கள் சீர் தூக்கிப் பார்க்குமிடத்து மற்றையெல்லாநூல்களினும் மிக பாரம் [அதாவது மகிமை] உடைமைபற்றி, இந்நூலுக்குப் பாரதமென்னும் பெயர் இடப்பட்ட தென்றுங் கொள்ளலாம்; முன்னொருகாலத்தில் தேவர்யாவரும் நான்குவேதங்களையும் ஒருதட்டிலும் பாரதத்தை மற்றொருதட்டிலு மாகத் துலாக்கோலில் வைத்து நிறுக்க, வேத மனைத்தையும் வைத்த பக்கத்தினும் இந்நூலை வைத்த பக்கம் வலிதாயிருந்தனவும், நிறுக்கப்படும்போது மகத்தாகவும் பாரமென்று சொல்லப்பட்ட அர்த்தகௌரவ முடையதாகவும் இருந்ததனால் மகாபாரத மென்று பெயர் பெற்ற தெனவும் வடநூற்பாரதத்தின் அருமை மணிகபர்வங் கூறும். யாவரும் மேற்கொண்டு பூசிக்கத்தக்க மேம்பாட்டை யுடைத்தாயிருத் தல்பற்றி, இந்த இதிகாசம் 'மஹத்' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டு, மஹாபாரதம் எனவும் வழங்கும். அந்த மேம்பாடாவது - இருக்குமுதலிய நான்குவேதங்களோடு ஒப்ப ஐந்தாம்வேதமென்று சிறப்பித்துக் கூறப்படும் மகிமை; "பாரத: பஞ்சமோ வேத:", "மீடாழியுலகத்து மறைநாலொடைந் தென்று நிலைபெற்கவே, வாடாததவவாய்மைமுனிராசன் மாபாரதஞ்சொன்ன நான்" என்பன காண்க. அன்றியும், மிகச்சிறந்ததாய் உபநிஷத்தென்று சொல்லப்படுகின்ற ஸ்ரீ பகவத்கீதையைத் தன்னுள் பீஷ்மபர்வத்திலும், ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமஸ்தோத்திரத்தை ஆநுஸாஸனிகபர்வத்திலும் அடக்கிக் கொண்டிருப்பது, இந்நூலுக்கு எல்லாநூல்களினுஞ் சிறந்த மேம்பாடாம்.

இந்நூலின்பயன்.—தீவினையை அகற்றி அறம் பொருள் இன்பம் வீடு என்னும் இம்மைமறுமைப்பேறுகளையெல்லாம் அளித்தல்.

இந்நூலை முதலில் வடமொழியிற் செய்தவர், ஸ்ரீ வேதவியாசமகா முனிவர்; (இவர் - இக்ஷ்வாகுநாயகர்க்குப் பாட்டனாராவர்.) இவரால் வைக்கப் பட்ட 'பாரதம்' என்கிற முதனூலின் பெயரே "முந்நூல் கருத்த னளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும், இடுகுறியா னும் நூற்கு எய்தும் பெயரே" என்னுஞ் சூத்திரத்து விதிப்படி வழிநூலா கிய இத்தமிழ்நூலுக்கும் பெயராயிற்று.

பாரதகதை நடந்தது - துவாபரயுகத்தின்இறுதியிலும், வியாச பாரதம் எழுதப்பட்டது - கலியுகத்தின் தொடக்கத்திலும் என அறிக;(இப்பொழுது நடக்கின்ற கலிவருஷம் - ஐ0ஈக.)

பாரதத்திற்கு 'ஜயம்' என்றும் ஒரு சிறப்புப்பெயர் உண்டு; (நால்வகைப் புருஷார்த்தங்களையும் பெறுதற்குக் காரணமாகும் நூல் 'ஜயம்' எனப் பெயர் பெறுமென்பது,வடமொழி நிகண்டு. எல்லாநூல்களினும்மேம்பட்டு அவற்றை வென்ற தென்றும், பதினெட்டுப்பகுப்புள்ள தென்றும் இதற்குப்பொருள் கூறலு முண்டு.)

உபதேசபரம்பரையில்வந்த பழையசரித்திரமொன்றைப் பிரதானமாக எடுத்துப் பலகிளைக்கதைகளோடுபுனைந்து விரித்துக்கூறும் நூல் - இதிகாச மென்றும் (இதிகாசம் - பழையவரலாறு.), உலகத்தின் தோற்றம், ஒடுக்கம், முனிவர்கள் அரசர்கள் மரபு. அவர்கள் சரித்திரங்கள், மன்வந்தரம் என்னும் ஐந்துவிஷயங்களை விரவிக்கூறும் நூல் - புராண மென்றும் (புராணம்-ஐந்து இலக்கணங்களுடன் பழையவரலாறுகளை யுணர்த்தும் நூல்) வேறுபாடு உணரத்தக்கது. இதிகாசம் - ராமாயணமும், பாரதமும்: புராணம் - பிரம்மம் முதலாகப் பதினெட்டுவகைப்படும். இந்த இதிகாச புராணங்கள் - வேதத்தின் கருத்து இன்னதென்று நியாயப்பிரமாணங்களால் தெற்றிவிளக்குவன. இவற்றுள், புராணங்களினும் இதிகாசம் பிரபலமான பிரமாண மென்றும், அதுபற்றியே இதனை முன்னர்வைத்து 'இதிகாசபுராணம்' எனக் கூறுவ தென்றும் அறிக. வியாசமுனிவர் தாமே இந்நூலைக் காவ்யமென்றுங் கூறியிருத்தலால், இது காவியமுமாம்; பெருங்காப்பிய விலக்கணங்களை யெல்லாம் இந்நூலில் ஆங்காங்குக் காணலாம்.

மகாபாரதத்திற் கூறும் பொருள்:—பாண்டவதுரியோதனாதியருடைய சரித்திரங்கூறும்முகத்தால், பிறர்க்குரிய பொருளை விரும்புதல் பலவகையாலுந் தீங்குவிளைக்கும் என்பதும், குடும்பஐக்கியம் இன்றியமையாது என்பதும், 'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்' என்றபடி உடன்பிறந்தோரொற்றுமை சிறக்கும் என்பதும், பதிவிரதாதருமத்தின் மேன்மையும், தெய்வபல மேபலம் என்பதும்,நல்லவருள்ளவிடத்தே மழைவளஞ் சிறக்கும் என்பதும், வஞ்சனைசெய்பவர் அதனால் தாமேஅழிவர் என்பதும், செய்ந்நன்றி மறக்கற் பாலதன்று என்பதும், நன்றிமறந்தவர் தீமையடைவர் என்பதும், பெரியோர் சொல்லைக்கேட்டு நடத்தல்வேண்டும் என்பதும், அங்ஙனம் நடவாதவர் நன்மைபெறார் என்பதும், பொறுத்தவர் பூமியாள்வார் என்பதும், தருமம் தலை காக்கும் என்பதும், சத்தியமே ஜயம் என்பதும், சூதாடுதலும் பொய்சொல்லுதலும் எல்லாத்திங்குக்கும் ஏது என்பதும், நற்குணநற்செய்கை தவறுதவர்க்குத் தெய்வமும் எவல்செய்யும் என்பதும், தாய்சொல் தலைக்கொள்ளல் வேண்டும் என்பதும் முதலிய பலநீதிகள் செம்பொருளாகவும், கருத்துப் பொருளாகவுங் காட்டப்பட்டிருக்கின்றன.

நூலாசிரியர் வரலாறு.*

வில்லிபுத்தூராழ்வாரென்பவர், தமிழில் மகாபாரதம் பாடிய ஒரு மகாகவி. இவர் பிராமணசாதியிற் பிறந்தவர். இவர் திருவவதரித்த ஊர், நடுநாட்டிலுள்ள கனியூ ரென்பது.

இவருடைய மதம் வைஷ்ணவ மென்பது, இப்பாரதத்தின் முதலிலும் இந்நூற்சருக்கங்களின் தொடக்கத்திலும் இவர் ஸ்ரீமகாவிஷ்ணுவின் விஷயமாகவே பலவாறு கடவுள்வாழ்த்துக் கூறியுள்ளதனாலும், "எங்கள் மாதவன்" என்று நூலைத் தொடங்கியிருப்பதனாலும். வில்லிபுத்தூராழ்வா ரெனத் திருநாமமுடைமையாலும், தெளிவாகத் தெரியவருகின்றது. (சில சருக்கங்களிலே காப்புச்செய்யுள் காணப்படவில்லை; அதற்குக்காரணம் - ஆசிரியராற்பாடப்பட்ட செய்யுட்கள் பிற்காலத்தில் எடுத்தெழுதுவோரால் எழுதாதுவிடப்பட்டு இல்லையாயினவென்றுவது, ‡ தொல்காப்பியம் முதலிய சில நூல்களிற்போலச் சிலசருக்கங்களின் ஆரம்பத்தில் மாநசிகமாத்திரமாகக் கடவுள்வணக்கஞ் செய்யப்பட்டுச் செய்யுளுருவமாய் வாசிகமாகக் காபபுச் செய்யப்படவில்லை யென்றுவது கொள்க.)

இவர் ஒன்பதாம்போர்சசருக்கத்துக் காப்புச செய்யுளில் "ஓராறுபேத சமயங்களுக்கு முருவாகிநின்ற வொருவ, னீராறுநாம முரைசெய்துமண்கொ டிடுவார்கள் காணு மிமையோர்" எனத் தெளிவாகத்தேசார்த்வபுண்டரத்தைச் சிறப் பித்துக் கூறியுள்ளதனால், இவர் திருமண்காப்புசாத்தும் ஸ்ரீவைஷ்ணவரென விளங்கும். இன்னும், இவர் திருமாலினிடத்துமாத்திரமேயன்றி அப்பெரு மானடியார்களுட் சிறந்தவரான ஆழ்வார்களிடத்தும் ஈடுபாடுடையவ ரென் பதை, பதினைந்தாம்போர்சசருக்கத்துக் காப்பில் "கொந்தவிழ்த்த சோலை மன்னு நூரைகயாதி நெஞ்சிலே, வைத்தமுத்திநாதன்" என நம்மாழ்வாரை யும், பத்தாம்போர்சசருக்கத்துக் காப்பில் "கலியா னெங்கள் மங்கையாதி கண்டுகொண்ட நாமமே" எனத் திரு மங்கையாழ்வாரையுங் கூறியுள்ளதனாற் காண்க.

நடுநாடென்று சொல்லப்படுகிற திருமுனைப்பாடிநாட்டிற் கனியூரிலே பிராமணசாதியிலே வைஷ்ணவமதத்தில் வீரராகவாசாரியரென்பவருக்குத் திருக்குமாரராய்த் திருவவதரித்த இவ்வில்லிபுத்தூரார், பாரதம்பாடியகாரணம்:—இவர் இளமையிலேயேநல்லாசிரியரையடுத்துக் கல்விகற்று, இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழிலும் மிகவல்லவராய், வடமொழியிலும் மிக்கதேர்ச்சிபெற்று, ஆசு மதுரம் சித்திரம் விஸ்தாரம் என்னும் நால்வகைக்

---

* இவ்வரலாறு, இவர்குமாரராகிய வாதிகேசரி [பரதாசார்யர்] இரு பத்திரண்டு செய்யுள்களாற் செய்துள்ள சிறப்புப்பாயிரத்தைப் பிரதான ஆதாரமாகக் கொண்டு ஒருவாறு காட்டப்படுகிறது.

‡ 'தொல்காப்பியம் முதலியவற்றில் நூற்குப் புறமாகவே மங்கலம் செய்யப்பட்டது' என்பது, தருக்கசங்கிரகவுரை.

கவிகளையும் மிகளிதில் அமிழ்திணும் இனியனவாகப் பாடவல்லவராய், சேர சோழபாண்டியரென்னுந் தமிழ்நாட்டு மூவேந்தர்களாலும் மிகச்சிறப்புடன் விரும்பியழைக்கப்பட்டு ஆங்காங்குச்சென்று தமதுகல்வித்திறத்தைப் பலவகையாலுங்காட்டி அவர்களைக் களிப்பித்து; அவர்கள் அன்போடு அபிமானித்து மிகுதியாகவழங்கிய சிறந்த பலபெரும்பரிசுகளைப்பெற்று, பற்பலகவித்துறைகள்பாடித் திருமாலை இரவும்பகலும் எப்பொழுதுந் துதித்துக்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் தமதுகல்விப்பெரும்புகழைப் பரவசசெய்துவந்தார். அங்ஙனம் வருகையில், முற்கூறிய திருமுனைப்பாடிநாட்டிலே வக்கபாகையென்னும் இராசதானியில் வீற்றிருந்து செங்கோல்செலுத்தி, தலை இடைகடை யென்னும் மூவகைச சங்கத்திலே வளர்ந்துவந்த தமிழ் பின்பு பங்கத்தை யடையாதபடி நான்காவதொருசங்கம்போல அதனைப்பாதுகாத்து, அருங்கவிப்புலவர்களை அன்புடன் ஆதரித்துவந்த வள்ளலும், கல்வி அறிவு ஒழுக்கங்களாலும் செல்வம் அதிகாரம்முதலிய நலங்களாலுங் குறைவின்றி மிகச்சிறப்புற்று விளங்கியவனுமாகிய கொங்கர்குலத்துதித்தோன்றிய வரபதியாட்கொண்டா னென்கிற அரசன், இவ்விவ்விபுந்தாராதது கல்வி கேள்வித் திறமைகளையும் அடக்கம் ஒழுக்கம்அன்பு அருள் வாய்மைமுதலியநற்குணங்களையுங் கேள்வியுற்று அறிந்து 'இக்குணங்களெல்லாம் ஒருவரிடத்திலே ஒருங்கு அமைந்திருப்பது அருமை அருமை!' என்று மிகஆச்சரியமுற்று இவரை வரவழைத்து அநேக சன்மானங்கள் செய்து தனது ஆஸ்தான பண்டிதராக அமைத்துவைத்து, ஒருநாள் இவரை நோக்கி 'உமக்கும் நீர் எழுந்தருளியுள்ள இந்தனைது ஸம்ஸ்தானத்துக்கும் உலகமுள்ளளவும் அழியாப்பெருங்கீர்த்தி உண்டாகி நிலைபெறும்படி, வடமொழியில் ஸ்ரீவேதவியாச மகாமுனிவரால் விரித்துரைக்கப்பட்ட மகாபாரத சரித்திரத்தைத் தமிழ்பயில்வோரனைவரும் ஓதியுணர்ந்து உய்யுமாறு செந்தமிழில் விருத்தப்பாடல்களினால் ஒரு பெருங்காப்பியமாகப் பாடித் தந்தருளல்வேண்டும்' என்று பிரார்த்திக்க, இவர் அவ்வேண்டுகோளுக்கு இசைந்து (இதிகாசமிரண்டனுட்பெரியதாகிய) மகாபாரதத்தை மகாகாவியமாகச செஞ்சுவை பொருட்சுவைகள் மிக்கு விளங்கும்படி நல்லநடையிலே பாடியருளினர்.

இனி, இவர்பாரதம்பாடியதுபற்றி வேறுவகையாக வழங்குகின்ற வரலாறுகள், இந்நூலின் பாயிரத்தோடு மாறுபடுகின்றதனாலும், இவர்மகனர் கூறிய பாயிரதனை மறுக்கத்தக்க பிறபல ஆதாரமொன்றும் அவ்வரலாறு கட்கு இல்லை யாதலாலும், அவை யாவராலுந் தகுதியானவையென ஏற்றுக் கொள்ளத்தக்கனவல்ல.

இவர், தம்காலத்திற் கல்விசெருக்கு அடைந்திருந்த புலவர்கள்பலரையும் தமது வித்தியாசாமர்த்தியத்தால் வென்று, அவ்வெற்றிக்கு அடையாளமாக, தோற்றுப்போன புலவர்களின் காதுகளைத் தமதுகையிலே எப்பொழுதும் ஆயுதமாகவைத்துக்கொண்டுள்ள துறட்டுக்கோலால் மாட்டியிழுத்து அறுத்துவந்தன ரென்பது,

"குட்டுதறகோ பிள்ளைப்பாண்டிய னீங்கில்லை
தறும்பியளவாக் காதைத் துடைந்து தோள்வடி
யெட்டினமட் டறுப்பதற்கோ விலி யிலில்லை
யிரண்டொன்று முடிந்து தலையிறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கலி யொட்டக்கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே"

என வழங்குந் தனிப்பாடலினால் அறியப்படும். இவர்காலத்து அரசர்கள் இவரிடத்தில் மிகவும் அன்புவைத்திருந்ததனால், இவர் இங்ஙனஞ்செய்ய இடங்கொடுத்துவந்தார்கள்.

இவருடைய காலம் இப்பொழுதைக்குச் சற்றேறக்குறைய ஐந்நூறு வருஷத்துக்கு முன் என்பர்.

பாயிரத்தில் "ஞானக்கருங்கடலை முச்சங்கத் தண்டமிழ்நூல் கலங் காமல் தலைகண்டானே" என்று இவர்காலத்திலிருந்த வரபதியாட்கொண் டானென்னும் அரசனைக் கூறியிருத்தலால், இவர்காலம் கடைச்சங்கத்தார் காலத்துக்குப்பின் என்பது மாத்திரமே தெளிவாகத் தெரியவருகிறது.

இவர்க்கு வில்லிபுத்தூராரென்றும் வில்லிபுத்தூரழ்வாரென்றும் வழங்கி வருகிற பெயர் யாதுகாரணத்தால் எனின்?—வைஷ்ணவ சம்பிரதாயத்திற் சிறந்தபக்தர்களென்று சொல்லப்படுகிற ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவ ரும், பெரியாழ்வாரென்றும் பட்டர்பிரானென்றும் விஷ்ணுசித்தரென்றும் வேறுதிருப்பெயர்களை யுடையவரும், ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்ததனால் வில்லிபுத்தூராழ்வா ரென்று வழங்கப்படுபவருமாகிய பாகவதசிகாமணியி னுடைய திருநாமத்தையே தந்தைதாயர்கள் இவர்க்குப் பெயராக இட்டு வழங் கிவந்தன ரென்று உணர்க;(பரிசுத்தரிடமென்கிற காரணத்தால், கடவுள் பெய ரும் அடியார்களின் பெயரும் மனிதர்கட்கு இட்டு வழங்கப்படும்.) இவரு டைய தந்தைதாயர் பெரியாழ்வார்பக்கல் மிக்கபக்தியுடையராய் அவர்க்குவழி பாடுசெய்ய, அவ்வாழ்வாரருளால் நிம்மகன் பிறக்க; இக்குமாரனுக்கு அவ் வாழ்வார்பெயரை யிட்டன ரென்னலாம். அல்லது, அந்தப் பெரியாழ்வார் பாலியத்திலே எவரிடத்தும் யாதொரு நூலும் படியாதவராயிருந்தும் பின்பு பகவானருளாற் பெரிய திவ்வியப்பிரபந்தம் பாடவல்ல மகாபண்டிதராய்விட் டதுபோல, இவரும் தெய்வகடாக்ஷம்பெற்ற வாகவியென்கிற காரணம்பற்றி, இவர்க்கு வில்லிபுத்தூராழ்வாரென்று பெயர் வந்ததென்றுங் கொள்ளலாம். [ஆழ்வார் என்பதற்கு - எம்பெருமானுடைய திருக்கலியாண குணகணங் களாகிய பெருங்கடலில் அமிழ்ந்து நெருங்கி ஈடுபடுபவ ரென்று பொருள். இப்பெயரால் மற்றுஞ்சிலபக்தர்களும் வழங்கப்படுவதைப் பராசாழ்வான், சுத்தாழ்வான், பிரகலாதாழ்வான், கஜேந்திராழ்வான், சுதர்சனாழ்வான், கம்ப நாட்டாழ்வார் முதலிய பெயர்களிலுங் காண்க.]

விஷ்ணுவின் அமிசாவதாரமாகிய கிருஷ்ணனுடைய சரித்திரம் மகாபாரதத்தில் இடையிடையே வருகிற தென்கிற சிறப்புப்பற்றியே இவ்வாசிரியர் பாண்டவசரித்திரத்தைப் பாடுதற்கு உடன்பட்டார்; இது,

“ முன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமு மிடையிடை வழங்கு
மென்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்”

என இவர்தாமே தற்சிறப்புப்பாயிரத்திற் கூறியுள்ளதனாற் பெறப்படும். [வேதவியாசபகவான் வடமொழி மகாபாரதத்தில் இவ்வாறே கூறியிருக்கின்றார்.]

ஆயின், வைஷ்ணவராகிய இவர்-இந்நூலின் முதற்காப்பாகச் சிவகுமாரராகிய விநாயகரை ஸ்தோத்திரஞ் செய்வானேன்? என்றால்,—தம்மைச்சரணமடைந்தவர்கள் தொடங்குந் தொழில்கட்கு வருகிற விக்கினங்களைப் போக்குதலாலும் தம்மையடையாமல் அகங்காரித்தவர்கள் ஆரம்பிக்கிற செய்கைகட்குப் பல இடையூறுகளை உண்டாக்குதலாலும் ‘விக்நேச்வரர்’என்று திருநாமம் பெற்றுள்ள ஸ்ரீவிநாயகமூர்த்தி சைவர்கட்குமாத்திரமேயன்றிச்சிறுபான்மை பிறர்க்கும் ஒருசார்வழிபடுகடவுளாதலாலும், வேதவியாசர் மகாபாரதத்தை இயற்றிவருகிறபொழுது விநாயகர் அந்நூலை மகாமேருமலையிலே எழுத்தாணி கொண்டு எழுதிவந்ததும் இடையிலே அவ்வெழுதுகருவி ஒடிந்துபோன பொழுது ‘வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்’ என்ற வகையாய் யானைமுகக் கடவுளாகிய தமது தந்தங்களில் ஒன்றைப் பறித்து அதனையே கருவியாகக் கொண்டு எழுதிமுடித்தருளியதுமாகிய இந்த முக்கியமான காரணத்தைக் கொண்டு நோக்குமிடத்து விநாயகர் இந்நூலின்முதலில் வைத்தற்கு ஏற்ற இயைபுடையவ ராதலாலும், வைஷ்ணவர்கள் விநாயகரை விஷ்வக்ஸேந ரென்கிற சேனைமுதலியாரது அமிசமென்று கொண்டாடுவது மரபாதலாலும், இவரும் விநாயகரைப் பாடின ரென்க.

இவ்வில்லிபுத்தூரார் சிவத்வேஷம்பாராட்டுகிற வீரவைஷ்ணவரல்லர். அது - அருச்சுனன் தீர்த்தயாத்திரைச்சருக்கத்திலும், அருச்சுனன் தவநிலைச் சருக்கத்திலும், பதின்மூன்றும்போர்ச்சருக்கத்திலும் சைவசம்பிரதாயத்துக்கு வழுவுறுதபடி சிவபிரானைச் சிறப்பித்தும் இதரதேவர்களைத் தாழ்த்தியுங் கூறியதனால், நன்குபுலனாகின்றது.

வியாசர் புராணங்களில் ஒவ்வொருதேவரை ஒவ்வோரிடத்திற் சந்தர்ப்பத்துக்கேற்பச் சிறப்பித்துக் கூறியிருத்தல்போலவே, இவரும் தமதுநூலில் சூரியன் அக்கினிமுதலிய மற்றைத்தேவர்களையும் சமயம்வந்தவிடத்துப் பகுபாதமில்லாமற் சிறப்பித்துக்கூறியிருக்கின்றார். பதினைஞாம்போர்ச்சருக்கத்தில் “மூவர்த்தத்தம்வடிவாமுதல்வன்” எனச் சூரியபகவானைச் சிறப்பித்துக்கூறியுள்ளவாறும்,பிறவுங் காண்க. [இதற்கு - திரிமூர்த்திகளின் சொரூபமாகவுள்ள தலைவனை சூரிய னென்றுபொருள்.]

கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவராகிய பெருந்தேவனெனென்பவர், மகாபாரதத்தைத் தமிழில் வசனமும்பாடலுமாக விரவிவருகிற 'சம்பு' என்கிற நடையிலே பாடியிருக்கின்றனரென்ப; பெரும்பாலும் வெண்பாக்களால் அமைந்ததுபற்றி, அந்நூலுக்கு பாரதவெண்பா * என்று பெயர். அது, இப்பொழுதைக்கு ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு வருஷத்துக்கு முந்தியது. இவ்வில்லிபுத்தூரார் பாரதவெண்பாவின் சொல்லையும் பொருளையும் ஆங்காங்கு வெகுவாகத் தழுவி நாலாயிரத்து முந்நூற்றுச் சொச்சம் பாடல்களாற் பாரதத்தைப் பாடினர். இவர்பாடிய பாரதம் வடமொழி வியாசபாரதத்தின் வழிநூலென்னத் தட்டில்லை. "மண்ணிலாரண நிகரென வியாதனார் வகுத்த, எண்ணிலா நெடுங்காதையை யானறிந் தியம்பல்" என்று இவர் தாமே அவையடக்கத்திற் கூறியிருக்கின்றார்.

வில்லிபுத்தூரார் தமதுபாரதத்திற் பாடியது, முதற்பத்துப்பருவமே; மற்றை யெட்டுப் பருவங்கள் அவராற் பாடப்படவில்லை. அதற்குக்காரணம்:- நூல் முழுவதையும், பாடினால், பாண்டவர்கள் கிருஷ்ணபகவான் என்கிற மகாபுருஷர்களது கேட்பவர்க்குவருத்தத்தையுண்டாக்கத்தக்க மரணசரித்திரத்தைத் தம்வாயாற் சொல்லவேண்டுமே யென்று கருதி, "கனைகடற்பாரளித்து அவரு மந்நகரி லறநெறியேகருதி வாழ்ந்தார்" என மங்களகரமாகச் சரித்திரத்தைப் பாடிமுடித்தன ரெனக் கொள்வது தகுதியுடையது. (பாண்டவசரித்திரங் கூறுகிற பாரதசம்பு முதலிய சில நூல்களிலும் பின்னிட்ட கதை காணப்படவில்லை.) இனி, இந்நூலின் பின்னையபருவங்களும் பாடப்பட்டுப் பிற்காலத்திற் கிடைத்தற்கு அரியவையாயினவென்று கொள்வாரும், அவற்றைப்பாடுதற்கு முன்னமே காலஞ்சென்றனரெனக் கொள்வாரு முளர். ‡ வில்லிபுத்தூரார்பாடிய பாரதத்திலே சுருக்கமாகக் கதையைத் தொகுத்துக்

---

* பாரதவெண்பா பன்னீராயிரம் பாடல்களை யுடையதென்று தொண்டைமண்டலசதகத்திற் கூறியிருக்கின்றது: சயங்கப்புலவர்பாடியபாரதவெண்பாவின்பாடல்கள் இப்பொழுது உரையாசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள சிலபாடல்களைத்தவிர வேறுகிடைப்பதில்லை; உத்தியோகபருவந் தொடங்கித் துரோணபருவம் வரையிலும் எண்ணூறுபாடல்களுள்ளதாகிப் பாரதவெண்பா என்று வழங்கப்படும் நூலொன்றும் உள்ளது.

‡ "கலியுகவியாதன்சொல்லக்கணபதியெழுதுபாடல்
பொலிவுறுதமிழிலாருயிரமெனவிருத்தம்போற்றிச்
சலிவறவில்லிபுத்தூரிறைவனுரைத்சார்வபௌம
னெலிகெழுமறையோர்மேகாமானுயர்ந்தவருவப்பச்சொன்னான்"

என ஒருசெய்யுள் வில்லிபுத்தூரார் பாரதத்து எட்டுப்பிரதியொன்றிற் பாயிரத்துடனே காணப்பட்டது. இது பழையபாடலாக இருக்குமாயின், இதிற்கூறிய ஆருயிரம்பாடல்களிற் பத்துப்பருவங்களான நாலாயிரத்து முந்நூற்றுச் சொச்சம்போக மற்றவை இவர்பாடிய எட்டுப்பருவங்களெனக் கொள்ளலாம்.

தெரியவொண்ணுதபடி திரித்தும் மொழிபெயர்த்தும் உபயோகித்திருத்தலால், வடமொழியிலும் மிகவல்லவரென நன்குவிளங்குகின்றது.

தமிழில் எந்த நூலாசிரியரும் வடமொழிகளை இவ்வளவு எடுத்துக் கொள்ளவில்லை. வடசொற்களைத் தமிழ்க்காப்பியத்தில் நுழைக்கிற வழக்கம் இவர்காலந்தொடங்கித்தான் அதிகமாயிருத்தல்வேண்டும். சங்கத்தார்காலத்துப் பழையநூல்களில் அத்தனையாக வடமொழிகள் அகப்படா; சுத்த தமிழ்ப்பதங்களே மிகுதியாயிருக்கும்.

இவரது பாடல்களில் உவமை, உருவகம், எடுத்துக்காட்டுவமை, தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள்வைப்பு, பிரிதுமொழிதல், உயர்வுநவிற்சி முதலிய பொருளணிகள் அமைந்திருப்பது மாத்திரமே யன்றி, மடக்கு (யமகம்) பிராசம் முதலிய சொல்லணிகளும் ஆங்காங்கு அமைந்திருத்தலையும், இவரது செய்யுள் நடை பலவிடத்து முடுகுடையதாதலையும், பலவகைச சந்தங்கள் சந்தப்போலிகள் வண்ணங்கள் பொருந்தியிருத்தலையுங் காணலாம்.

"பண்பாகப்பகர்சந்தம் படிக்காசலா லொருவர்பகரொணுதே" என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள படிக்காசுப்புலவரும், திருப்புகழ்பாடிய அருணகிரிநாதரும் முதலிய சிலர்போலவே இவ்வில்லிபுத்தூராரும் சிறந்த சந்தக்கவி யென்று இவர் நூலால் தெரிகின்றது.

சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல் முதலிய நூலழகுகளெல்லாம் இவர் நூலில் நன்கு அமைந்திருத்தல், இப்பாரதத்தைப் பார்க்கப் பார்க்கச் செவ்விதிற் புலனும்.

'குன்றக்கூறல்' முதலிய குற்றங்களி லொன்றும்இந்நூலிலில்லை யென்று பொதுப்படக் கூறலாம்; அன்றியும், பலநூல்களிற் காணக்கூடிய 'சென்று தேய்ந்திறுதல்' என்னுங் குற்றம் இந்நூலிலில்லை யென்பது, இந்நூலை ஆதியோடந்தமாக நோக்குவார்க்குத் தானே தெரியும்.

யுத்தவருணனை, எல்லாநூல்களினும் இந்நூலிற் சிறத்தல் காண்க.

"முன்னோர்மொழிபொருளேயன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்றவாறு, இவருடைய நூலில் ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களின் சொற்பொருட்கருத்துக்கள் சிற்சில இடத்து எடுத்து ஆளப்பட்டிருத்தல், உய்த்துநோக்குமிடத்து விளங்கும்.

பாரதம் அந்தந்தப்பாகத்தின் விஷயத்தைக் குறிக்குஞ் சொற்களால் ஆதிபருவம், சபாபருவம், ஆரணியபருவம், விராடபருவம், உத்தியோகபருவம், பீஷ்மபருவம், துரோணபருவம், கர்ணபருவம், சல்லியபருவம், ஸௌப்திகபருவம், ஸ்திரீபருவம், சாந்திபருவம், ஆநுசாஸனிகபருவம், அசுவமேதபருவம், ஆசிரமவாசபருவம், மௌசலபருவம், மகாபிரஸ்தானபருவம், ஸ்வர்க்காரோகணபருவம் எனப் பெயர்பெற்ற பதினெட்டுப்பருவங்கள் அடங்கியது. அவற்றுள்,

தெரியவொண்ணாதபடி திரித்தும் மொழிபெயர்த்தும் உபயோகித்திருத்தலால், வடமொழியிலும் மிகவல்லவரென நன்குவிளங்குகின்றது.

தமிழில் எந்த நூலாசிரியரும் வடமொழிகளை இவ்வளவு எடுத்துக் கொள்ளவில்லை. வடசொற்களைத் தமிழ்க்காப்பியத்தில் நுழைக்கிற வழக்கம் இவர்காலந்தொடங்கிற்றான் அதிகமாயிருத்தல்வேண்டும். சங்கத்தார்காலத்துப் பழையநூல்களில் அத்தனையாக வடமொழிகள் அகப்படா; சுத்தமிழ்ப்பதங்களே மிகுதியாயிருக்கும்.

இவரது பாடல்களில் உவமை, உருவகம், எடுத்துக்காட்டுவமை, தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள்வைப்பு, பிரிதுமொழிதல், உயர்வுநவிற்சி முதலிய பொருளணிகள் அமைந்திருப்பது மாத்திரமேயன்றி, மடக்கு (யமகம்) பிராசம் முதலிய சொல்லணிகளும் ஆங்காங்கு அமைந்திருத்தலையும், இவரது செய்யுள் நடை பலவிடத்து முடுகுநடையதாதலையும், பலவகைச் சந்தங்கள் சந்தப்போலிகள் வண்ணங்கள் பொருந்தியிருத்தலையுங் காணலாம்.

"பண்பாகப்பகர்சந்தம் படிக்காசலா லொருவர்பகரொணாதே" என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள படிக்காசுப்புலவரும், திருப்புகழ்பாடிய அருணகிரிநாதரும் முதலிய சிலர்போலவே இவ்வில்லிபுத்தூராரும் சிறந்த சந்தக்கவி யென்று இவர் நூலால் தெரிகின்றது.

சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், கவின்சேர்க்கு இனிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல் முதலிய நூலழகுகளெல்லாம் இவர் நூலில் நன்கு அமைந்திருத்தல், இப்பாரதத்தைப் பார்க்கப் பார்க்கச் செவ்விதிற் புலனும்.

'குன்றக்கூறல்' முதலிய குற்றங்களி லொன்றும்இந்நூலிலில்லையென்று பொதுப்படக் கூறலாம்; அன்றியும், பலநூல்களிற் காணக்கூடிய 'சென்று தேய்ந்திறுதல்' என்னுங் குற்றம் இந்நூலிலில்லை யென்பது, இந்நூலை ஆதியோடந்தமாக நோக்குவார்க்குத் தானே தெரியும்.

யுத்தவருணனை, எல்லாநூல்களினும் இந்நூலிற் சிறத்தல் காண்க.

"முன்னோர்மொழிபொருளேயன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்றவாறு, இவருடைய நூலில் ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களின் சொற்பொருட்கருத்துக்கள் சிற்சில இடத்து எடுத்து ஆளப்பட்டிருத்தல், உய்த்துநோக்குமிடத்து விளங்கும்.

பாரதம் அத்தத்தப்பாகத்தின் விஷயத்தைக் குறிக்குஞ் சொற்களால் ஆதிபருவம், சபாபருவம், ஆரணியபருவம், விராடபருவம், உத்தியோகபருவம், பீஷ்மபருவம், துரோணபருவம், கர்ணபருவம், சல்லியபருவம், ஸௌப்திகபருவம், ஸ்திரீபருவம், சாந்திபருவம், ஆநுசாஸனிகபருவம், அசுவமேதபருவம், ஆசிரமவாசபருவம், மௌசலபருவம், மகாபிரஸ்தானபருவம், ஸ்வர்க்காரோகணபருவம் எனப் பெயர்பெற்ற பதினெட்டுப்பருவங்கள் அடங்கியது. அவற்றுள்

நான்காவது

விராட பருவம்.

விராடபர்வம் என்ற வடமொழித்தொடர் விகாரப்பட்டது. விராடனது சம்பந்தமான பருவ மென்று ஆறும்வேற்றுமைத் தொகையாகக் கொள்க. விராடராஜனது நாடாகிய மச்சதேசத்தின் இராஜதானியிலே விராட ராஜனைச்சார்ந்து பாண்டவர்கள் அஜ்ஞாதவாசஞ்செய்த வரலாற்றைக் கூறுகின்ற பாகம், இது. பர்வம் - கணு: கரும்பு மூங்கில் முதலியவற்றிற்கு ஏகதேசமாகிய [ஏகதேசம் - ஒருபகுதி] கணுப் போல நூலுக்கு ஏகதேசமாகிய உறுப்பைப் பருவமென்பது, உவமவாகுபெயர். "இணைந்தியல் காலே" [நன் - பத-உஉ.] என்ற சூத்திர வீதியால், பர்வம் - பருவம் என வகரத்திற்குமுன் உகரம் வந்தது.

இப்பருவம் - நாடுகரந்துறை சருக்கம், மற்போர்ச்சருக்கம், கீசகன் வதைச்சருக்கம், நிரைமீட்சிச்சருக்கம், வெளிப்பாட்டுச்சருக்கம் என்ற ஐந்து சருக்கங்கள் அடங்கியது. அவற்றில்,

நான்காவது

† நிரைமீட்சிச் சருக்கம்.

இத்தொடர்மொழி-நிரையினது மீட்சியைக் குறித்த சருக்கம் என விரியும்; இதில், முன்னது-ஆறும்வேற்றுமைத்தொகையும், பின்னது - இரண்டாம்வேற்றுமையுருபும்பயனும் உடன்தொக்கதொகையுமாம். நிரை - பசுக் கூட்டம். மீட்சி-மீளுதல்: தொழிற்பெயர்; மீள்-பகுதி: சி-விகுதி. சருக்கம் - லர்க்கம் என்ற வடசொல்லின் விகாரம்; முடிபு அல்லது படைப்பு என்று பொருள்; அது சங்கேதத்தால், பெரியவகுப்பி னுட்பட்ட சிறிய பாகத்தைக் குறிக்கும். எனவே, பாண்டவர்கள் தாங்கள் மச்சதேசத்து இராசதானியில் விராடராஜனை யடுத்து அஜ்ஞாதவாசஞ் செய்கின்ற துரியோதனாதியர் கவர்ந்துகொண்டுபோன விராடராஜனது பசுக்கூட்டங்களை அவர்களைவென்று திருப்பிக்கொண்டுவந்த வரலாற்றைக் கூறுங் கூறுபா டென்பது பொருள்.

இது புறத்திணைஏழனுள் வெட்சித்திணையின்பாற்படும். அஃதாவது - இருபெருவேந்தர் பொருதுவதுகருதியக்கால் ஒருவர் ஒருவர்நாட்டுவாழும் ஆவும் அந்தணரும் முதலியன தீங்குசெயத்தகாத சாதிகளாதலின், அவற்றை அங்குறின்றும் அகற்றல்வேண்டிப் போதருகவெனப் புகன்று, அங்ஙனம் போதருதற்கு அறிவில்லாத ஆவினைக் களவிலுல் தாமேகைக்கொண்டு போந்து மீளாமற் பாதுகாத்தலும், அந்நிரையை வேந்தர் சென்று பொருது மீட்டுக்கொண்டுவந்து பாதுகாத்தலுமாம். இது, ஆசிரியர் தொல்காப்பியனார் கொள்கை. வேறுசிலர்கொள்கைப்படி, நிரைகவர்தல் வெட்சித்திணையெனவும், நிரைமீட்டல் கரந்தைத்திணையெனவும்படும்.நிரைகவர்பவர்க்கு வெட்சிமலர்மாலைசூடுதலும் நிரைமீட்பவர்க்குக் கரந்தைமலர்மாலைசூடுதலும் உரியன.

---

† இந்தநிரைமீட்சிச்சருக்கத்தின்உரை-காலஞ்சென்ற ஸ்ரீ உ. வே. சட கோபராமாநுஜாசார்யஸ்வாமிகள் ஸ்ரீ உ. வே. சே. கிருஷ்ணமாசார்யஸ்வாமிகள் எழுதியவற்றைப் பெரும்பான்மையும் கொண்டது.

கதைத்தொடர்ச்சி.

[பாரதகதை, பிரசித்தமானதாதலால், இந்தச்சருக்கத்துக்கு முன் கதைத்தொடர்ச்சி சுருக்கமாகவே எழுதப்படுகின்றது.]

சந்திரகுலத்திலில புதன் புரூரவா ஆயு நகுஷன் யயாதி பூரு துஷ்யந் தன் பரதன் ஹஸ்தி குரு முதலிய பலஅரசர்கள் தோன்றியபின் அம்மரபில் உதித்து இப்பரதகண்டத்திலில அஸ்தினபுரியிற் செங்கோல்செலுத்திய சந் தனு வென்னும் அரசனுக்கு முதல்மனைவியாகிய கங்கையின் குமாரன் பீஷ்ம னென்பவனும், இரண்டாம் மனைவியாகிய சுவகையின் குமாரன் விசித்தி வீரிய னென்பவனும் இருந்தார்கள். (முன்பு சத்தியவதியென்னும் பெய ரோடு இருந்து பராசரமுனிவனுடன் சோந்து வியாசமுனிவனைப் பெற்றுப் பின்பு அப்பராசரனருளாற் கன்னிப்பருவமடைந்த கந்தவதியென்னும் மறு பெயரையுடைய இந்த யோஜனகந்தியினிடம் சந்தனுவுக்குப்பிறந்த முதற் குமாரனை சித்திராங்கதன், அப்பெயருள்ள ஒருகந்தருவனைக் கொல்லப் பட்டு இளமையில் இறந்தான்.) முன்னைய விரதத்தின்படி வீடுமன் விசித்திர வீரியனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தான். விசித்திரவீரியன் மகப் பெறுது இறந்ததன்பின் அவனுடைய பத்தினிகளுள் அம்பிகையினிடத்துத் திருதராஷ்டிரனும், அம்பாலிகையினிடத்துப் பாண்டுவும், சந்ததி விருத்தி யின் பொருட்டுத் தாய்சொற்கடவாத வியாசபகவானது திருவருளாற் பிறந் தனர். அம்பிகையாலேவியனுப்பப்பட்ட தாதிப்பெண்ணினிடத்து வியாச னருளாற் பிறந்த விதுர னென்னுங் குமாரனும் இருந்தான்.

திருதராட்டிரன் பிறவிக்குருட னதலால், பாண்டு திருதராட்டிரனுக்கு முடிசூட்டி, விதுரனை மந்திரியாக வைத்துக்கொண்டு, தானே இராசாங்க காரியம் பார்த்துவந்தான்: பாண்டுவுக்கு மனைவியுடன் சேரக்கூடாதெனறு சாபம் கோரிட்டதனல், அவனனுமதிப்படி, அவனது மூத்தமனைவியாகிய குந்தி, தனக்கு இளமையில் துருவாசமுனிவனுபதேசித்திருந்த மந்திரத்தின் மகிமையால் வந்த யமதருமராசனல் யுதிஷ்டிரனையும், வாயுதேவனல் பீம சேனனையும், தேவேந்திரனல் அருச்சுனனையும் பெற்றாள். (முன்பு கன்னிப் பருவத்துச் சூரியனைக் குந்தியினிடம் பிறந்தவன், கர்ணன்.) குந்தியின் சக் களத்தியான மாத்திரி, அவளால் அம்மந்திரம் உபதேசிக்கப்பெற்று, அசுவினீ தேவர்களால், நகுலன் சகதேவன் என்னும் இரட்டைப்பிள்ளைகளைப் பெற் றாள். திருதராட்டிரனுக்குத் துரியோதனன் துச்சாதனன் முதலிய நூற்று பிள்ளைகளும், துச்சளை யென்னும் ஒருபெண்ணும் காந்தாரியினிடம் பிறந் தார்கள். (பஞ்சபாண்டவர்களுள், தருமபுத்திரன் துரியோதனாதியர் நூற்று வரினும் மூத்தவனென்றும், வீமன் முதலிய மற்றைநால்வரும் துரியோதன னுக்கு இளையவரென்றும் அறிக.) பாண்டு சிலகாலத்திற்குப்பின் இறந்து போனன். அப்பொழுது மாத்திரி சகமரணஞ்செய்தாள்; [ஸஹகமனம்-உடன் கட்டையேறுதல்.]

பின்பு பாண்டவரும் துரியோதனாதியரும் கூடி அத்தினபுரியில் விளை யாடுகையில், வீமன் துரியோதனாதியரினும் மிகமேம்பட்டுத் தோன்றினன்,

அதனால், அவனிடம் அவர்கள் மிக்கபொருமைகொண்டார்கள். அதனாலாகிய அசசத்தால், துரியோதனன் கர்ணனைத் தனக்குத் துணையாகக்கொண்டான். பிறகு வீடுமன் இந்ததூற்றைவர்க்குங் குருபாசாரியனைக்கொண்டும், துரோண சாரியனைக்கொண்டும் படைக்கலவித்தைபயிற்றுவிக்க,- அதில் துரியோதனாதி யரினும் பாண்டவர் மிக்க தேர்ச்சி யடைந்தனர். அப்பால் வீடுமன், திருத ராட்டிரனோடும் விதுரனோடும் ஆலோசித்து, சகலகுணசம்பந்நனை தரும புத்திரனுக்கு இளவரசுமுடிசூட்டினன். அதுகண்டு அழுக்காறுமிக்க துரி யோதனனது கருத்துக்கு இணங்கிய திருதராட்டிரன் புரோசனனென்னுந் துர்மந்திரியுடன் சதியாலோசனை செய்து பாண்டவர்களை வாரணவதநகரத் துக்குச் செலுத்தி அங்கு அரக்குமாளிகையில் வசிக்கச்செய்து இரவில் தீ வைத்து எரித்துவிடுவதென்று செய்த தந்திரத்தைப் பாண்டவர் சிறியதந்தை யாகிய விதுர னேவிய சிற்பியால் அறிந்து தப்பிப் பிராமண வேடம்பூண்டு திரிந்து திரௌபதியின் சுயம்வரத்துக்குச் சென்று, அங்குக் கட்டியிருந்த யந் திரத்தை அறுத்து அருச்சுனன் திரௌபதியைக் கொண்டுவர, தாயார்சொற் படி அந்த ஒருத்தியை ஐவரும் மணஞ்செய்துகொண்டு திருதராஷ்டிரனால் அழைக்கப்பட்டு அஸ்திநபுரத்துக்கு வந்தார்கள். திருதராட்டிரன் மந்திரிகள் முதலானோரோடு ஆலோசித்துத் தருமபுத்திரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய் வித்தபின்பு, அப்பெரிய தந்தையின் கட்டளைப்படி பாண்டவர் காண்டவப் பிரத்தமென்னுங் கடுங்காட்டிற் சேர்ந்து, அங்குக் கண்ணபிரானது கருத் தின்படி தெய்வத்தச்சனை விசுவகருமன் நிருமித்த இந்திரப்பிரத்தமென் னும் நகரத்தில் இருந்து அரசாள, துரியோதனாதியர் அஸ்திநபுரியில்இருந் அரசாள்வாராயினர்.

பிறகு தருமபுத்திரன் தனது தம்பிமார்நால்வரைக்கொண்டு திக்குவிஜ யஞ்செய்து ராஜசூயயாகம் முடித்து வெகுமகிமையுடன் விளங்கினன். அதுகண்டு பொறுமைகொண்டு துரியோதனன் யுதிட்டிரனைத் தந்திரமா கத் தன்னிடம் அழைப்பித்துத் தன்மாமனை சகுனியைக்கொண்டு அவனு டன் சூதாடுவித்து அவனது செல்வம் முழுவதையும் பறித்துக்கொண்டு, அவனையும் அவனது தம்பிமாரையும் அவர்களது மனைவியான பாஞ்சாலி யையும் அடிமையாக்கி, அவளைத் தீண்டக்கூடாத காலத்தில் துச்சாதன னைக்கொண்டு சபையிற் பலாத்காரமாகக் கொணர்ந்து துகிலுரியச்செய் தான்: அப்பொழுது, ஸ்ரீ கிருஷ்ணருக்கிரகத்தால் அவள் மேல்மேல் ஆடை வளரப்பெற்று மானங்காத்துக்கொண்டாள். பின்பு அவளது கற்பின்பெரு மைக்கு அஞ்சித் திருதராட்டிரன் அவர்களை அடிமைத்தன்மையினின்று நீக்கிச் செல்வத்தையுங் கொடுத்தனுப்ப, துரியோதனாதியர் அதனைமறுத்து அவற்றையெல்லாம் கவர்ந்துகொண்டு, மறுசூதாடி அடிமைநீங்கிய அவர்க ளைப் பன்னிரண்டுவருஷம் வனவாசமும் ஒருவருஷம் அஜ்ஞாதவாசமும் [அஜ்ஞாதவாசமாவது-ஒருவரும் தம்மை இன்னரென்று அறியவொண்ணாத படி நாட்டில் மறைந்துவசித்தல்] செய்துவந்தால் அரசுபெறுமாறு நியமனஞ் செய்து அனுப்பினர்கள்.

அங்ஙனமே பாண்டவர்கள் திரௌபதியுடனே சென்று பன்னிரண்டு வருஷம் காமியவனம் முதலிய இடங்களில் வசித்து, பின்பு, தருமபுத்திரன் கங்கபட்டனென்னும் சந்நியாசியாகவும், வீமசேனன் பலாயனனென்னும் சமையற்காரனாகவும், அருச்சுனன் பரதநாட்டியம் பயிற்றுவிக்கும் பிருகந் நளையென்னும் பேடியாகவும், நகுலன் தாமக்கிரந்தியென்னும் குதிரைக் காரனாகவும், சகதேவன் தந்திரிபாலனென்னும் இடையனாகவும், திரௌபதி விரதசாரணியென்னும் வண்ணமகளாகவும் மாறுவேடம்பூண்டு விராட நகரத்தில் அஜ்ஞாதவாசஞ்செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது விராடன் மைத்துனனும் சேனைத்தலைவனுமாகிய கீசகன் பாஞ்சாலியைக் கண்டு மோகங்கொண்டு பலாத்காரஞ்செய்ய, அதனையறிந்த வீமசேனன் நடுராத்திரியில் அக்கீசகனை அவன் தம்பிமார் நூற்றுமூவருடனே வதைசெய்தான் என்பது.

இனி, இந்நிரைமீட்சிச்சருக்கத்தின் கதைச்சுருக்கம்:—அந்தப் பதின் மூன்றுவது வருடத்தி னிறுதியில், துரியோதனன், பாண்டவர்கள் விராட நகரத்தில் இருக்கலாமென ஒருவாறு ஊகித்துஉணர்ந்து, அவர்களைக்கண்டு பிடிக்கும்படி படையெடுத்துச்சென்று, அந்நாட்டை இருபுறத்தும் வளைத் துப் பசுக்கூட்டத்தைக் கவர்ந்துசெல்ல, அருச்சுனனெழிந்த நால்வரும்விரா டனுடன் சென்று தென்புறத்தில் திரிகர்த்தரையும், விராடகுமாரனை உத் தரனுக்குத் தேரூர்ந்துசென்ற பேடிவடிவமான அருச்சுனன் வடபுறத்தில் துரியோதனுதியரையும் போரில்வென்று, முன்னைய நியதிப்படி பதின் மூன்று வருடமுங் கழிந்துவிட்டதனால், அப்பொழுது பாண்டவர்களும் திரௌபதியும் நிஜரூபங்கொள்வாராயினர் என்பதாம்.

1.—கடவுள் வணக்கம்: விஷ்ணுஸ்துதி.

இது - காப்புச்செய்யுள்; இதனால், தாம் எடுத்துகொண்ட சருக்கம் இடையூறில்லாமல் இனிது முடிதற்பொருட்டு உயர்ந்தோர்வழக்கத்தின்படி யே கவி கடவுள்வாழ்த்துக் கூறுகின்றார். வழிபடுகடவுள்வணக்கமெனவும் ஏற்புடைக் கடவுள் வணக்கமெனவும், கடவுள் வணக்கம் - இரண்டு வகைப் படும்; வழிபடுகடவுள் வணக்கமாவது-தாம்தாம் குலதெய்வமாகக் கொண்டு ஆராதிக்கின்ற கடவுளை வணங்குதல். ஏற்புடைக்கடவுள் வணக்கமாவது-தாம் தாம் செய்ய எடுத்துக்கொண்ட காரியத்துக்குத் தகுதியையுடைய கடவுளை வணங்குதல். ஆகவே, ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயத்தவரான இந்நூலாசிரியர் திருமாலைக்குறித்துக் கூறிய இவ்வாழ்த்து - வழிபடுகடவுள்வணக்கமாம்.

(இ - ள்.) தொழுவார்தம் - (தன்னை) வணங்கிப் பிரார்த்தித்த தேவர் முனிவர் முதலியோரது, வினை - தீவினை, தீர-நீங்கும்படி, முன்-முற்காலத் தில், கோலம் ஆய்-வராகாவதாரமாய்ப், வேலை சூழ் பார் - கடல் சூழ்ந்த நில வுலகத்தை, எயிறு உழுவானை - கோட்டாற் குத்தியெடுத்த திருமாலினது, நல் நாமம் - நல்ல (ஆயிரத்தெட்டுத்) திருநாமங்களுள், ஒன்று ஆயின் உம் - ஒரு திருநாமத்தையாவது, கற்று - (தாம்) அறிந்து, ஓர்உரு-ஒருமுறை, ஓதி

னர் - சொன்னவர்,—வழுவாத - (தம்தம்ஊழ்வினையைத்) தவறுத, சுரர் ஆக-தேவர்களாகவாயினும், நரர் ஆக - மனிதர்களாகவாயினும், புள் ஆக - பறவைகளாகவாயினும், மா ஆக - விலங்குகளாகவாயினும், புல் புழு ஆக-(எல்லாப் பிறவிகளுள்ளும்) புல்லிய [இழிபிறப்பான] புழுக்களாகவாயினும், ஒன்றில்-யாதாயினும் ஒருபிறப்பில், பிறந்தால் உம்-தோன்றினாலும், நரகில்-நரகலோகத்தில், புகார் - சென்றுசேரமாட்டார்; (எ - று.)—ஏகாரம் - ஈற்றசை.

முன் ஒருகாலத்திற் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிப்போன இரணியாக்ஷனென்னும் அசுரராசனைத் திருமால் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளின்படி வராகரூபமாகத் திருவவதரித்துக் கொன்று பூமியைக் கோட்டாற் குத்தி யெடுத்துக்கொண்டுவந்து விரித்தருளின வரலாற்றை உட்கொண்டு, 'தொழுவார்தம்வினைதீர முற்கோலமாய் வேலுழ் பாரையிற் றுழுவான்'என்றார். வினை - இங்கே, பிரளயாபத்து நேர்தற்கு ஏற்ற தீவினை. நாமத்துக்கு நன்மை - தன்னை ஒருகால் ஓதியவர்க்கும் உயர்பதம் அளித்தல். தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் பிறப்பேழனுள் முதலெந்தனையுங் கூறி, மற்றையவற்றை உபலக்ஷணத்தாற் பெறவைத்தார்; [உபலக்ஷணமாவது - ஒருமொழி, ஒழிந்த தன் இனங்களையுங் குறிப்பது.] எலும்பில்லாத உடம்பினதாதலால், 'புன் புழு' எனப்பட்டது; "எழுவகைத் தோற்றத் தின்னுப்பிறப்பி, னென்பொழி யாக்கை" என்றார் பிறரும்.

தொழுவார், எழுவான் என்பன-இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதிகள்; வகரஇடைநிலை காலமுணர்த்தாது தன்மையுணர்த்திற் றெனினும் அமையும். தம் - சாரியை. 'தீர' என்னுஞ் செயவெனெச்சம்-காரியப் பொருள தாதலால், இங்கு எதிர்காலத்தில் வந்தது; இது, 'ஆய்' என்னும் வினைகொண்டு முடியும். கோலம், வேலா, நாமம், லை-ரார், நரர் - வடசொற்கள். பார்-பருமையையுடையது என்றுவது, பார்க்கப்படுவது என்றுவது காரணப்பொருள் கொள்ளத்தக்கது. எயிறு - இங்கே, வெண்கிரதந்தம். உழுவானே = உழுவானது; இரண்டனுருபு, ஆறனுருபின் பொருளில் வந்தது; உருபுமயக்கம்: [நன் - பெயர் - சூ0.] 'ஆக' என்ற வினையெசசம் - இடைசசொல் தன்மைப்பட்டு, விகற்பப்பொருளில் வந்தது; ஆனதுபற்றியே, "இயல்பினும் விதியினும்" என்ற பொதுவிதிப்படி 'நராகப் புள்ளாக,' 'மாவாகப்புன்' என அதன்முன் வலிமிகாது, "இடையுரிவடசொலின்" என்ற சூத்திரப்படி இயல்பாயிற்று. புன் - பண்படியின் லகரம் னகரமாயிற்று. ஒன்றுயினும், உம்மை-இழிவுசிறப்பு. கற்று,கல் - முதனிலை. ஒன்று என்பதன் விகாரமான 'ஓர்' என்பது - ஒரு என உகரம்பெறுமலும், ஓர் என முதல் நீளாமலும் நின்றது. வழுவாத என்பதனைச் சுரர் முதலிய எல்லாப் பிறவிகளோடுங் கூட்டுக. லை-ரரென்னும் வடசொல்லுக்கு - திருப்பாற்கடல் கடைந்த காலத்து அதனினின்று உண்டான சுரையை [வாருணியென்னும் மதுவை] உண்டவரென்பது பொருள். ஆக என்னுஞ் சொல் ஐந்தும், எண்ணுப்பொருளில் வந்த இடைசொற்கள். 'பிறந்தாலும்' என்ற எதிர்மறை

யும்மை, அவர்கட்குப் பிறப்பின்மையை விளக்கிநின்றது. ஈரகு - வடமொழி விகாரம். புகார்-எதிர்மறைப்பலர்பாற்படர்க்கைமுற்று. காணும் - தேற்றப் பொருளதாய்வந்த முன்னிலை யிடைச்சொல்; இனி, நீங்கள் அறியுங்கள் என உலகத்தாரை நோக்கிக் கூறியதுமாம்.

இதுமுதற் பதினைந்து கவிகள் - பெரும்பாலும் முதல் நான்குசீரும் மாங்காய்ச்சீர்களும், ஈற்றுச்சீரொன்று மாங்கனிச்சீருமாகிய நெடிலடி நான்கு கொண்ட கலிநிலைத்துறைகள். (க)

2.—கவிகூறும்: துரியோதனன் நிரைகவர்செய்தியைக்கூறுவேனெனல்.

(இ - ள்.) சூது ஆடி - (துரியோதனன் மாமனை சகுனியுடனே) சூதாடமாடி, அழிவு உற்று - (அவ்வாட்டத்தில்) தோல்வியடைந்து, (அதனால்), மூது ஆர் அழல் பாலைவனம்உம் - பழமையாக [இயற்கையாகவே] மிக்க வெப்பமுள்ள பாலைநிலங்களையுடைய காடுகளையும், தட சாரல் முதுகுன்றம் உம் - பெரிய சாரல்களையுடைய பழமையான மலைகளையும், அடைந்தோர் கள் - அடைந்து வசித்த பாண்டவர்களுடைய, சரிதங்கள் - அஞ்ஞாதவாச காலத்து நடந்த வரலாறுகள் சிலவற்றை, சொன்றேம் - (யாம் கீழ்க்) கூறினேம்; இனி - இனிமேல், பாத அரவிந்தத்து - (முனது) தாமரைமலர்போலும் பாதங்களிலே, மருவார் - பகைவர், விழ - (சரணமாக வந்து) விழுந்து தண்டனிட, கொண்டு - (அவர்களைக் கடைக்கண்ணால்) நோக்கிக்கொண்டு, பார் ஆளும் - பூமியை அரசாளுகின்ற, வெம் கோது ஆர் மனத்தோன் - கொடிய குற்றங்கள் நிரம்பிய மனத்தையுடையவனுன, துரியோதனன், விராடன் தன் - விராடராசனது, நிரை-பசுக்களை, கொண்ட-கவர்ந்துகொண்டுபோன, கோள் - வரலாற்றை, கூறுவாம் - இனிச்சொல்வோம்; (எ - று.)

கீழ்ப்பாண்டவசரிதம் கூறிய தாம் இனித்துரியோதனன் கோக்கிரகணஞ் செய்த வரலாற்றைக் கூறப்போவதைத் தெரிவிக்கின்றார்: படிப்பவர் என்று அறியும்பொருட்டுக் கீழ்நடந்தது இன்னது, இனிநடப்பது இன்னது என்று கூறுவது, ஒரு மரபு. சூரிய அக்கினிகளின் சேர்க்கையா லல்லாமல் இயல்பிலேயே வெப்ப மமைந்த தென்பார் 'மூதாரழற் பாலைவனம்' என்றும், மலைகளெல்லாம் படைப்புக்காலத்தே படைக்கப்பட்டனவாதலால் 'முதுகுன்றம்' என்றும்கூறினர். பகைவர்கள் இவனது கடைக்கண்பார்வையையே பெரும்பேறாகக் கருதிக் காலில் விழுகின்றன ரென்பதும், இவன் அவர்களது அடிவீழ்ச்சியைக் கடாக்ஷவீக்ஷணமாத்திரத்திலே உகக்கின்றானென்பதும் விளங்க, 'பாதாரவிந்தத்து மருவார்விழக் கண்டு' என்றார்; இதனால், அடங்காதவர்களை யெல்லாம் அடக்குந் திறமையுடையவ னென்பதும், வணங்காமுடி மன்ன னென்பதுந் தொனிக்கின்றன. இனி, விழக் கொண்டு - விழுவதனால் அவர்களையங்கீகரித்துளனினுமாம். கோது - கொடுங்கோன்மை, பிறராக்கம் பொறுமை, செய்ந்நன்றியறிவின்மை, முதலியன.

முதுமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டது. ஆரழல்-வினைத்தொகை; பண்புத்தொகையாய், (பொறுத்தற்கு) அரிய வெப்பமுமாம்.

பாலை - நீரும் நிழலும் இல்லாத சுரமும், சுரஞ்சார்ந்த இடமும். தட + சாரல் = தடஞ்சாரல்; அகரவீற்று உரிச்சொல், வலிவர இன மெல்லெழுத்து மிக்கு முடிந்தது: [நன் - மெய்யீறு - ஈசு.] தட - பெருமையுணர்த்தும் உரிச்சொல்; "தடவும் கயவும் களியும் பெருமை" என்பது, தொல்காப்பியம். சாரல்-மலைப்பக்கம்; மலையைச்சார்ந்துள்ளதாகிய பக்கத்துக்குத் தொழிலாகு பெயர். குன்றம், அம் - சாரியை. அழிவுற்று - இராச்சியம் முதலிய செல்வ மனைத்தையும் இழந்து. 'உற்று' என்றவினையெச்சத்தில், 'உறு'என்ற குறிலிணைப்பகுதி இடையே தன் ஒற்று இரட்டி இறந்தகாலங்காட்டியது. அடைந்தோர்-ரகரவீற்று வினையாலணையும் பெயரின் ஈற்றயல் ஆ ஓவாயிற்று; [நன்-பொது - உ.] கள் - விகுதிமேல்விகுதி. சரிதங்கள் - மற்போர், கீசகன்வதை முதலியன. சொன்மேம் - தனித்தன்மைப்பன்மை; கவிமரபுபற்றி வந்தது; 'இன்' இடைநிலை, முதல்குறைந்தது. சொன்மேம்,கூறுவாம் என்பன-'யாம்' என்னும்பெயர் தொக்குநின்றதனேடு முடியும்; தோன்ற எழுவாயுமாம். பாரதாரவிந்த மென்னும் முன்பின்னகத்தொக்குவந்த உவமத்தொகை - வடநூன் முடிபு, தீர்க்கசந்தி. அடிக்குச் செந்தாமரை மலருவமை - செம்மையும், மென்மையும், அழகுங் கருதி. மருவார் - (தன்னேடு) கூடாதவர்; எனவே, பகைவர்: எதிர் மறைப்பலர்பால் வினையாலணையும்பெயர்; எதிர்மறை ஆகாரம் புணர்ந்துகெட்டது: மருவு - பகுதி. மனம் - மநஸ்என்னும் வடசொல்லின் விகாரம். கோள்-கொள்கை; முதனிலை திரிந்த தொழிற்பெயர். வநம்,சரிதம்-வடசொற்கள். (உ)

3.—பாண்டவர்களைக் கண்டுபிடிக்கும்படி துரியோதனன் அனுப்பிய தூதர் மீண்டும் வருதல்.

(இ - ள்.) (அப்பொழுது துரியோதனன்),—'ஈர் ஆறும் ஒன்றும் சுரர்க்கு உள்ள நாள்-தேவமானத்தாற் பதின்மூன்று தினங்கள் [பதின்மூன்றுவருஷங்கள்], சென்ற - (பெரும்பாலும்) கழிந்தன; (ஆகையால்), இனி - இனிமேல், அடல் ஐவர் - வலிமையையுடைய பஞ்சபாண்டவர்கள், நம்முடன்-நம்மோடு ஒப்பாக, பார் ஆள வரும் முன்னர் - பூமியை ஆளுவதற்கு வரும் முன்னமே, உறை நாடு - (அவர்கள் உருத்தெரியாமல் மறைந்து) வசிக்கின்ற தேசத்தை, பார்மின்கள்-(இன்னதென்று தேடிக்) கண்டறியுங்கள்,' என்றுஎன்றுசொல்லி, ஓர் ஆயிரம் கோடி ஒற்று ஆள் - ஓர் ஆயிரகோடி வேவுகாரர்களை, விடுத்தான்-(தேசங்கள் தோறும்) அனுப்பினன்; அ ஒற்று ஆள்களும் - அவ்வொற்றர்களும், வார் ஆழி சூழ் எல்லை உற ஓடி-நீண்ட கடல்சூழ்ந்த நிலவுலகமுழுவதும் ஓடிச்சென்று (தேடி).(அவர்களிருக்குமிடம் அறிந்துகொள்ளாமலே), விரைவின்கண் - சீக்கிரமாக, வந்தார்கள்—; (எ - று.)

இன்னும்உள்ள சிலநாள்களுங் கழிந்தால் அஞ்ஞாதவாசமும் முடிந்து மீண்டும் பாண்டவர்கள் உலகாளவருவார்கள்; அச்சிலநாள்களுங் கழிவதற்கு முன்னமே அவர்களை இன்னவிடத்து இன்னரென்று கண்டுபிடிக்கவேண்டும்: அங்ஙனங் கண்டுபிடித்தால் முன்னையேற்பாட்டின்படி மீண்டும் அவர்

களைக் காட்டுக்கே துரத்திவிடலாமென்கிற கெடுநினைவால், இவ்வாறு கூறினான்: இதனை "அரிவையோ டின்று நீவி ரைவரு மடவி யெய்திச், சுரர்தின மீரா றங்கட் டின்னுதிர் மன்னுநாட்டி, னெருவரு மதியாவண்ண மொரு தின முறைதி ருங்கள், பெருவிறலரசும் வாழ்வும் பின்னுறைப்பெறுதி ரென்றான்," "மறைந்துறை நாளினும்மை மற்றுளோ ரீண்டுளாரென், றறிந்திடின் மீண்டு மிவ்வா றாணிய மடைதி ரென்றான்" என்று கீழச்சூதுபோர்ச்சருக்கத்திற் கூறியவாற்றால் அறிக. இத்தகைய கெடுநினைவுகள் பற்றியே, கீழ் "வெங்கோதார் மனத்தோன்" என்றது. இங்ஙனம் வஞ்சனையால் வெல்லலாமே யன்றி வீரத்தால வெல்லுதல் அரிதென்னும் நோக்கத்தால், 'அடலிலவர்' என்றான். அடல்-தேகபலம், புத்திபலம் இவற்றுடனே தெய்வபலமும். மனிதர்க்கு ஒருவருடம் தேவர்க்கு ஒருநாளாதலால், 'சுரர்க்கு உள்ளநாள்' எனப்பட்டது. முன்பு துரியோதனாதியர் தவணைகூறும்பொழுது, பதின்மூன்றுவருடமென்று சொன்னதற் கேட்பதற்குப் பயங்கரமாயிருக்குமென்று கருதி அங்ஙனங்கூறாமல் அதனைமறைத்து மேல்நோக்கில் எளிதென்று தோன்றுமாறு 'தேவமானத்தாற் பதின்மூன்றுநாள்' என்று சுருக்கமாக்கூறியமைபற்றி, இங்கும் அங்ஙனமேகூறப்பட்டது; பாண்டவர்கள் தேவாம்சமாதல்பற்றியும், அவர்கட்கு அங்ஙனம் வரையறைகூறுதல் சாலும். 'ஈராறும் ஒன்றும் சுரர்க்குள்ள நாள் சென்ற' என்றது - வனவாசஞ்செய்யவேண்டிய பன்னிரண்டாண்டுகளும், அஜ்ஞாதவாசஞ் செய்யவேண்டிய ஓராண்டிற் பலநாள்களுங் கழிந்தன வென்றபடி. வநவாச அஜ்ஞாதவாச காலங்கள் 'ஈராறும் ஒன்றும்' எனப் பகுத்துக் கூறப்பட்டன. கடத்தற்கு அருமையில் அப்பன்னிரண்டுநாளுக்கு ஈடாகும் இவ்வொருநாளேயென்பது போதருதலுங் காண்க.

ஈராறு - பண்புத்தொகை. நாள் - பால்பகா வஃறிணைப்பெயர்; இங்குப் பன்மைவினைகொண்டது. சென்ற - 'அன்'சாரியைபெறுதுவந்தழுற்று. 'தம்முடன்' என்ற தனித்தன்மைப்பன்மை, செருக்குப்பற்றி வந்தது. முன்னர், அர்-சாரியை. ஐவர்-தொகைக்குறிப்பு. பார்மின்-ஏவற்பன்மைமுற்று; கள்-விகுதிமேல் விகுதி. கோடி-நூறுலக்கம். 'ஓராயிங்கோடி' என்றது - மிகப்பலவாய எண்ணிற்கு ஒன்று காட்டியவாறு. ஒற்றுள்-தேயமெங்குஞ் சென்று கண்டு ஆங்காங்கு நிகழ்வனவெல்லாம் ஒற்றியுணர்ந்துவருகின்ற ஆள்; வினைத்தொகை: ஒற்றுகிய ஆள் எனக்கொண்டால், இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம். ஒற்று-ஒற்றன்; உயர்திணைப்பொருள்தரும் அஃறிணைச்சொல். ஆள்களும் - இறந்தது தழுவியவெச்சம், கதைத்தொடர்ச்சியை விளக்குவது. ஆழி - ஆழ்ந்திருப்பது; இ - வினைமுதற்பொருள்விகுதி. இனி, ஒன்றும்என்பதனை எண்ணுகக்கொள்ளாது பெயரெச்சமாக்கொண்டு, 'தேவர்க்குப்பொருந்திய நாட்கள் பன்னிரண்டுங் கழிந்தன; இனி, ஒருநாளைக்குள்ளே கரந்துறைபவரைக் கண்டறிமின்' என்றுமாம். விரைவின்கண், கண்-ஏழனுருபு, இன் - சாரியை. (கூ)

4.—மீண்டுவந்த தூதர் தாம் பாண்டவரைக்காணுமையைத் தெரிவித்தல்.

(இ - ள்.) (ஓடிவந்த ஒற்றர்கள் துரியோதனனைநோக்கி), 'தோடுஎன்று காது என்று தெரியாது-பூவிதழ்இதுவென்றும் பூந்தாது இதுவென்றும் பகுத் தறியவொண்ணுதபடி, மது மாரி சொரி - தேன்மழையை மிகுதியாகப் பொழிகின்ற, மாலையாய்-(நந்தியாவட்டமலர்) மாலையையுடையவனே!—காடு என்று - காடுகளும், மலை என்று-மலைகளும், நதி என்று - ஆறுகளும், கடல் என்று - கடல்களும், கடல் ஆடை சூழ் நாடு என்று-கடலாகிய சேலையிலுற் சூழப்பட்ட தேசங்களும், நகர் என்று - பட்டணங்களும் ஆகிய இவ்விடங் களில் [பூமிமுழுவதும்], யாம் நாள்தோறும் நாடாத திசை இல்லை - நாங்கள் தினந்தோறுந் தேடிப்பாராத இடம் (சிறிதும்) இல்லை [முழுவதுந் தேடிவந் தோம்]; நீடு என்று வலம் மேவும் அவனிக்குள் - நீண்ட சூரியன் சுற்றிவரு கின்ற பூமியிலே, அவர் இல்லை - அப்பாண்டவர்கள் (எங்கும்) இல்லை; நின் பாதமே - உன்திருவடிகளாணை,' (என்று கூறினர்); (எ - று.)

'சூரியனெனினி செல்லுமிடமெல்லாஞ் சுற்றித்தேடிலேம், இல்லை' என் றார். தம் வார்த்தை வாய்மையே யென்றற்கு, 'நின்பாதத்தாணை' என்றார்; இவ்வாறு சேவகர்கள் எசமானனிடத்துக்கூறுவது இயல்பு. 'ஆணை' என் பது, வருவித்து உரைக்கப்பட்டது. 'நின்னாணை' என்ற பொருளில் 'நின்திரு வடியாணை' என்றது, தமது பணிவுதோன்ற அரசனை உயர்த்திக்கூறும் உப சாரமொழி. அழிவின்றி நெடுங்காலம் இருத்தலாலும், நெடுந்தூரஞ்சென்று விளங்கும் ஆயிரங்கிரணங்களை யுடைமையாலும், உலகமுழுவதும் ஒளிர்வ தாலும், 'நீடென்று' எனப்பட்டது. நீடு அவனி யெனவும் இயைக்கலாம்.

முதலிரண்டடிகளிலுள்ள 'என்று' என்னுஞ் சொல்லெல்லாம் - எண் ணிடைச்சொல். பூமியைச சூழ்ந்துள்ள கடலைப் பூமிதேவியுடுக்கும் ஆடை யென்றல், கவிசமயம். நகர் - நகரம் அல்லது நகரீ என்பதன் விகாரம். திரா என்னும் வடமொழி, ஆவீறு ஐயாயிற்று. இல்லை - ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாகிய குறிப்புமுற்று; (வேறு, உண்டு என்பனவும் இவ்வாறே.) காது மகரந்தப்பொடி, பூந்துகள். என்று - சூரியனுக்குக் காரணப்பெயர்; (இயற் கையிலேயே) ஒளியையுடையது. நதி, அவனி-வடசொற்கள். அவனி - பாதுகாக் கப்படுவதென்று காரணப்பொருள்பெறும். (எ)

5.—பாண்டவர்வசிக்கிறநாடு இவ்விதமாயிருக்குமென்று விடைமன்கூறல்.

(இ - ள்.) முன் - முன்னே, ஒற்றை - ஊதுகொம்புகளும், இரு சங்கம்- (வலம்புரி இடம்புரி என்னும்) இருவகைச் சங்குகளும், உடன் ஊத - ஒரு சேர ஊதாநிற்க, எதிர் சென்று - (பகைவர்களை) எதிர்த்துப்போய், முனை வெல்லும் - போரிற் சயிக்கின்ற, மா மன் - பெரிய அரசனை துரியோதன னது, ஒற்றர் - வேவுகாரர்கள், இது கூற - இவ்வார்த்தையைச் சொல்ல,— மந்தாகினீ மைந்தன் - கங்கையினது புத்திரராகிய பீஷ்மர்,—மகன் மைந்த னுக்கு - (தமது) பௌத்திரனாகிய துரியோதனனுக்கு,— 'அறன் காளை உறை நாடு - தருமபுத்திரன் (மறைந்து) வசிக்கின்ற தேசம், உன் ஒற்றர்

உணர்தற்கு வரும்ஓ - உனது ஒற்றர்கள் அறியக்கூடுமோ? (அது), மின் ஒற்றும் கார் மழை உண்டு - மின்னல்கள் பொருந்திய மேகங்கள் பெய்கின்ற (மிக்க) மழை யுள்ளதாகும்; விளைவு உண்டு - (நல்ல) விளைவுள்ளதாகும்,' என-என்று, தேடும் விரகு - (பாண்டவாகளிருக்கின்ற இடத்தைத்) தேடிக் கண்டறியத்தக்க உபாயத்தை, ஓதினன் - சொன்னர்; (எ - று.)

பிரமனது சாபத்தாற் குருகிலத்திலே சந்தனுமகாராஜாவாய்ப் பிறந்த வருணனுக்கு முதல்மனைவியான கங்கையினிடத்து வசிஷ்டமுனிவர் சாபத் தால் அஷ்டவசுக்களுட் பிரபாலனென்னும்வசு- பீஷ்மனாகத்தோன்றியத னால், 'மந்தாகினீமைந்தன்' எனப்பட்டான். அதன் விவரம்:—முன்ஒருகால் தேவர்கள்யாவருங் கூடிய பிரமதேவனது சபையிற் சென்று கங்காநதியின் பெண்தெய்வம் வணங்கியபொழுது, அங்குவந்திருந்த வருணன், அவளழகை உற்றுநோக்கிக் காதல்கொண்டான்; கங்கையும், அவன்மீது காதல்கொண்டு எதிர்நோக்கினள்; அதனையறிந்த நான்முகக்கடவுள், வருணனைப் பூமியில் மானுடப்பிறப்பெடுக்கவும், கங்கையை மானுடமகளாய் அவனைச் சிலகாள் மணந்திருக்கவும் சபித்திட்டான்; அங்ஙனமே வருணன் குருகுலத்திற் சந் தனுவாய்ப் பிறந்தான்: கங்கையும் ஒரு மனித மகளாகி 'யான் எந்தெந்தத் தீச்செயல்செய்யினும் மறுக்கலாகாது' என்னும் நிபந்தனையோடு அவனை மணஞ்செய்துகொண்டாள். இது நிற்க; பிரபாசனென்னும்வசு, தன்மனைவி யின்சொல்லைக் கேட்டு, வசிட்ட முனிவனிடமுள்ள காமதேனுவைக் கொள் ளைகொள்ள எண்ணினனன்; மற்றையெழுவசுக்களும் அவனுக்கு உதவிசெய் யவே, எண்மரும் இரவிற் சென்று பசுவைக் கவர்ந்தனர்; அதனை யுணர்ந்த வசிட்டமகாமுனிவன் அஷ்டவசுக்களையும் மானுடசன்ம மெடுக்கவும், அவர் களுள் மனைவிசொற்கேட்ட பிரதானனை பிரபாசனைப் பூமியிற் பலகாள் வாழ்ந்து பெண்ணின்ப மற்றிருக்கவும் சாபங்கொடுத்தான்; எட்டுவசுக்களும் சந்தனுவுக்குக் கங்கையின்வயிற்றிற் பிறந்தனர். முதல்பிறந்த எழுகுழந்தை களையும், பிறந்த அப்பொழுதே தாய் கங்காநதியில் எடுத்தெறிந்து விட் டான்; எட்டாவதுபிள்ளை பிறந்தவுடனே தந்தை 'அக்குழந்தையைக்கொல்ல லாகாது' என்று மறுக்க, கங்கை கணவனை விட்டு நீங்கினள். அவ்வெட்டா வது மகனே இவ்வீடுமன் என அறிக. திருதராட்டிரன் பாண்டு இவர்கட் குத் தந்தையான விசித்திரவீரியனுக்குத் தமைய னாதலால், இவன் கௌரவ பாண்டவர்க்குப் பெரியபாட்டனாவன். அன்பினாலும் உறவுரிமையாலும் உள்ள ஒற்றுமை நயந் தோன்ற, தம்பியின் மகன்மைந்தனை 'மகன்மைந்தன்' என்றே கூறினர்.

தருமபுத்திரன் அறநெறி சிறிதுந் தவறாதவ னாதலால், அவன் உறையும் நாட்டில் மழையும் விளைவும் உண்டென்றார்; தருமமுடையோர் தங்குமிடத்து மழைவளஞ் செழிப்பது, இயல்பு: "நல்லாரொருவருளரே லவர்பொருட்டா, லெல்லார்க்கும் பெய்யுமழை", "மழையுந், தவமிலா ரில்வழி யில்லை", "நிலத் தியல்பு, வான முரைத்துவிடும்" என்பன காண்க. நீர்வளம் நிலவளத்துக்குக் காரணமாதலால், அம்முறையே 'மழையுண்டு விளைவுண்டு' எனப்பட்டது.

விளவு - நெல்முதலிய தானியங்கள் விளைதல். 'அறன் காவலுறைநாடு உன் ஒற்றருணர்தற்கு வருமோ' என்றதில், நீ அறஞ்சிறிது மில்லாதவனென்ற குறிப்புத் தொனிக்கும். திருமாலின் திருவடித்தீர்த்தமானது, வானத்திற் பாய்கையில் 'மந்தாகினி'என்றும், பூமியிற்பாய்கையில் 'கங்கை' என்றும்,பாதாளத்திற்பாய்கையில் 'போகவதி' என்றும் பெயர்பெறும்; "அரங்கருலகளந்த, பாதத்துநீர் விண் படி பில மூன்றிலும் பால்புரைவெண், சீதத் தரங்க மந்தாகினியாகிச் செழுங்கயிலைகையாய், மேதக்க போகவதியாகி நாளும் விழுகின்றதே" என்றது காண்க.

மூன் - இடமுன். ஒற்றை-துணைக்கருவியாகிய ஒருவாத்தியம். இருசங்கம்-இரட்டைச் சங்கங்க ளென்றுமாம்; இரண்டுபக்கத்திலும் இரண்டு சங்க மென்க. மங்கலச்சங்கு வெற்றிச்சங்கு என்ற இருவகைச்சங்குக ளென்றலும் அமையும். போரைக்குறிக்கின்ற சங்கமும் வெற்றியைக்குறிக்கின்ற சங்கமும் ஆகிய இரண்டும் விரைந்துணர்த வென்று உரைப்பாருமுளர்; பகைவரைப் போரில் விரைவாக வெல்லுதல் தோன்றும். இனி, ஒற்றை யிரு சங்கம் - வெற்றிச்சங்கு மங்கலச்சங்கு கொடைச்சங்கு என்ற மூன்று வகைச் சங்குகள் என்று உரைப்பர் ஒருசாரார். எதிர்த்து என்பது, விகுதி முதலியன கெட்டு 'எதிர்' என நின்றது; "வரிப்புனை பந்து" என்பதில் 'வரிந்து என்பது போல. மா-மஹா என்னும் வடசொல்லின் விகாரம். ராஜராஜ ரதலால், 'மாமன்' என்றார். மன்-பெருமை; மன்னனுக்குப் பண்பாகுபெயர்.அறன்-'அறம்' என்ற அஃறிணைப்பெயர் இறுதிப்போலிபெற்ற தென்பதனிலும், 'அன்' விகுதி பெற்று உயர்திணைப்பெயராகிற் றென்றல், இவ்விடத்திற்கு ஏற்கும். தருமத்தினின்று தவறியவர்க்குந் தான் நடுவுநிலைமை சிறிதுந்தவறாமல் தக்க தண்டனை செய்து தருமத்தைக்காத்தலால், யமனுக்கு 'தருமன்' என்று பெயர்; அப்பெயர்ப்பொருளையே 'அறன்' என்று குறித்தார். இனி, மந்தாகினீமைந்தன்மகன் - வீடுமனது மகனை திருதராட்டிரன், தன்மைந்தனுக்கு ஓதினன் என்று உரைத்து, திருதராட்டிரன் துரியோதனனுக்குச் சொன்னது இவ்வுபாய மென்பாருமுளர்.

மைந்தன்-மைந்தினையுடையவன்; மைந்து-வலிமை, இளமை, அழகு. மகன்-திருதராட்டிரன். உணர்தற்கு-குவ்வீற்று எதிர்காலவினையெச்சம்; து, அல் இரண்டும் - சாரியை. ஓகாரம் - எதிர்மறை. காளைபோன்றவனைக் காளையென்றது, உவமவாகுபெயர். காளை-இளவெருது; இது - கம்பீரமான தோற்றத்துக்கும், நடைக்கும், வலிமைக்கும் உவமை. கருமையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் ஈற்றயலுகரமுங் கெட்டு ஆதிநீண்டு 'கார்' என நின்றது; இந்நிறப்பெயர், அதனையுடைய மேகத்துக்குப் பண்பாகுபெயர். 'தேடும்விரகு' என்றவிடத்து, மகரவொற்று - வகரத்திற்குமுன் வந்ததலால், மகரக்குறுக்கமாம்; மாத்திரை-கால். ஸுகந்தம்,மந்தாகிநீ-வடசொற்கள். மைந்தனுக்கு ஓதினனென னெனவியையும்; நான்கனுருபு, கொடைப்பொருளின்பாற்படும். (நி)

6.—ஓர் ஒற்றன் விராடநகரத்துநிலைமையை யெடுத்துக்கூறுதல்.

(இ - ள்.) (அப்பொழுது),—ஒற்று ஆளில் ஒருவன்-(தேடிவந்த) ஒற்றர்களுள் ஒருவன்,—பணிந்து - வணங்கி,— 'வில் தானை-வில்லையுடைய சேனை

யையும், வெம் போர் - (பகைவர்க்குக்) கொடிய போரையுமுடைய, விராடன் தன் - விராடராஜனது, வளம் நாடு ஏ-வளப்பம் பொருந்திய மச்சதேச மொன்றே, என்றும்-எந்தநாளைக்காட்டிலும், எ வாழ்வும் உண்டு ஆகி - எல்லா வாழ்வுகளும் உள்ளதாய், மேம்பட்டது - (மற்றையெல்லாநாடுகளினும் இப் பொழுது) மேன்மைப்பட்டிருக்கின்றது; மல் - மற்போரில்வல்ல, தாழ்- (முழங்காலளவும்) நீண்டு தொங்குகின்ற, புயம் - கைகளையுடைய, கீசகனும்- கீசகனென்பவனும், ஒரு வண்ணம்மகள் காரணத்து - அலங்காரஞ்செய் கின்ற ஒரு (பணிப்) பெண்ணை விரும்பிய காரணத்தால், இற்றான் - இறந் தான், எனும் சொல்லும் - என்கிற பெருவார்த்தையும், உண்டு - உளது', என்று---, நிருபற்கு - துரியோதனராஜனுக்கு, எடுத்து ஓதினான் - எடுத்துச் சொன்னான்; (எ - று.)

கீசகன் - விராடன் மனைவியாகிய சுதேஷ்ணையின் உடன் பிறந்தவன். தான் - அசை. உம்மை-உயர்வுசிறப்பு; அது - வீமசேனனைப்போன்ற பெருவீர ரானன்றிப் பிறராற் கொல்லமுடியாத அக்கீசகனது பலவாயிரம் யானைபலங் கொண்டு வலிமையின் உயர்வைத் தெரிவித்து நின்றது. வண்ணமகள் - ஒப் பனைசெய்பவள். ஒருவண்ணமகள் காரணத்துக் கீசகன் இற்று னென்ற செய்தியை எடுத்துக்கூறியது, அங்கு வீமன் இருத்தல்கூடு மென்று குறிப் பித்தவாறும்.

எவ்வாழ்வும், எகரவினை-எஞ்சாமைப்பொருளை யுணர்த்திற்று. வாழ்வு கள் - ராஜாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை என்னும் அஷ்டைசுவரியங்கள். உம்மை - முற்றுப்பொருளது. பிரிநிலை எகா ரம், பிரித்துக் கூட்டப்பட்டது. வில் - வேல் வாள் முதலிய மற்றை ஆயுதங் கட்கும் உபலக்ஷணம். வளம் - நிலவளம் நீர்வளம் முதலியன. ஆல் - ஈற் றசை. தாழ்புயம் - ஆஜானுபாகு; கைகள் முழங்காலளவும் நீண்டிருத்தல், உத் தமவிலக்கணம். புயம் - புஜம்; ஜகரம்-மொழியிடையில் யகரமாயிற்று. போர்- பொரு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். இற்றான் - இறு என்னுங் குறில்லிணைப்பகுதி ஒற்றிரட்டி இறந்தகாலங் காட்டிற்று. சொல்லும், உம்மை- இறந்ததுதழுவிய எச்சம். ந்ருபன் - மனிதர்களைக் காப்பவன்; வடசொல்: ந்ரு - மனிதர். எனும் = என்னும்; தொகுத்தல். (சு)

7.—விராடராசந்து நிரைகவராவேண்டுமென்று கர்ணன் கூறுதல்.

(இ - ள்.) (அதுகேட்டு),—இரவி மைந்தன் - சூரியபுத்திரனாகிய கர் ணன்,—'வள் தார் விராடன்தன்-வளமான (செங்கழுநீர்) மாலையையுடைய விராடராசனது, வளம் நாடு - வளப்பம்பொருந்தியநாட்டை, தண்டால் - (நமது)சேனைகளைக்கொண்டு, மலைந்து - போர்செய்து தொறு - (அவனது) பசுக்கூட்டங்களை, கொண்டால் - (நாம்) கவர்ந்து ஓட்டிக்கொண்டு வந்தால், அவன் சூழலில் - அவனது நாட்டில், சூழும் வினயம் குறிப்போர் இருப்பு உண்டு ஆகில் - பொருந்திய வணக்கத்தைக் காட்டுகின்றவர்களான பாண்ட வர்கள் அங்கு இருத்தல் உள்ளதாகுமாதலால், நிரை மீளும் - (நாம் கவர்ந்த)

பசுக்கூட்டம் மீட்கப்படும்: இன்று ஆகில் - (அவர்களிருப்பு) இல்லையானால், மீளாது - (அது) மீட்கப்படாது; என் உள் கோள் இது - என் மனத்திற் பொருந்திய எண்ணம் இதுவாகும்,' என்று—, தாழும் எண் இதயத்து கிருபற்கு உரைத்தான் - இழிந்த எண்ணங்களுள்ள மனத்தையுடைய துரியோதனராசனுக்குச் சொன்னான்; (எ - று.)

மகாபலசாலியாய்ச் சேனைத்தலைவனையிருந்த கீசகனும் தம்பிமாரோடு இறந்துபோனதலால் அங்குப் பாண்டவர்களிருந்தாலொழிய நிரை மீளாதென்று, பாண்டவர்கள் அங்கு இருத்தலையும் இராமையையுங் கண்டுபிடித்தற்கு உபாயங்கூறினான்.

தார்க்கு வண்மை - மிக்க வாசனை வீசுதலும், தேன் மழைபொழிதலும். வண்டு ஆர் எனப் பிரித்து, காட்டோடு இயைத்து, (நீர்வளத்தாற்) சங்குகள் நிரம்பிய காடென்றுமாம்:வண்டு-சங்கு. சூழல் - இடம். சூழும் வினையஞ்சுறிப் போர்-ஆராய்ந்துசெய்யுந்தந்திரத்தைக்கருதியுள்ளவரெனினுமாம்; இனிசூழும் வில் நயம் குறிப்போர் எனப் பிரித்து - வளைந்த வில்லின் வித்தையில் வல்லவர் எனினும்பொருந்தும். எண்தாழும் இதயம் - ஆலோசனையில்அழுந்திக் கிடக்கின்ற மனமுமாம். கோள் - கொள்ளப்பட்டது; எண்ணம்.இரவி - ரவி; ரகத்திற்கு இகரம் மொழிமுதலாகி முன்வந்தது. (எ)

8.—தகுஷிணைகோக்கிராகணம் [நெற்குப்பக்கத்து நிரைகோடல்.]

(இ - ள்.) தக்கோர் தகும் சொற்கள் கேளாத - பெரியோர்களது தக்க நல்வார்த்தைகளைக் கேட்டு அவற்றின்படி நடத்தலில்லாத, துரியோதனன்—,சொல்லினன் - கட்டளையிட்டான்; (அதனால்), அரசு ஆன திரிகர்த்தர் கோன் - (பல அரசர்க்குத்) தலைவனான திரிகர்த்தராஜன்,—மிக்கோர் மிலேச்சும் - மேலான போர்வீரர் அணிகின்ற, செழு - செழுமையான, விறல் - வலிமையைக் குறிக்கின்ற, வெட்சி தாமம் - வெட்சிப் பூமாலையை, மிலை - தரித்த, தோளினன் - தோள்களையுடையவனுய்,—திக்கு ஓதை எழு - திக்குக்களிலெல்லாம் எதிரொலி உண்டாம்படி, முரசங்கள் விம்ம - பேரிகை வாத்தியங்கள் முழங்க, அக்ரோணி படையோடு - ஓர் அக்ஷௌஹிணி சேனையுடனே, அவன் சார்பிலே - அவ்விராடனது நாட்டினிடத்தே, (தெற்குப்பக்கத்தே), போய்—, ஆன் அடித்தான் - பசுக்கூட்டங்களைக் கவர்ந்தோட்டினனென்; (எ - று.)

தக்கோர் - தகுதியுடையவர். துர்யோதனன் - வடசொல்;(பகைவர்க்குக்) கொடிய போரையுடையவன். துரியோதனன் சொல்லினன் - துரியோதனனது கட்டளைச்சொல்லினை லென்றுமாம். மிலேச்சும், மிலேச்சு - பகுதி. தாமம் - வடசொல். வெட்சியென்னும் மரத்தின்பெயர், அதன்மலர்க்கு முதலாகுபெயராம். வெட்சி - பகைநிரைகவரச்செல்லும் வீரர் அணியும் மாலை. தோளினன் - குறிப்புமுற்றெச்சம். முரஜம் - வடசொல். கோன், ஆன்—னகரமெய் - சாரியை. இமயமலைக்கும் விந்தியமலைக்கும் நடையி லுள்ளதான ஆர்யாவர்த்தமென்னும் புண்யபூமிக்கு வடமேற்திசையிலுள்ளது திரிகர்த்த

தேய மென்பர். இத்தேசத்து அரசன் - சுசர்மா. அக்குரோணி-வடமொழிச் சிதைவு; அது-தேர் இருபத்தோராயிரத் தெண்ணூற்றெழுபது, யானை இருபத்தோராயிரத்தெண்ணூற்றெழுபது, குதிரை அறுபத்தையாயிரத்துநூற்றுப்பத்து, காலாள் லக்ஷத்தொன்பதினாயிரத்து முந்நூற்றைம்பது; ஆக - இரண்டு லக்ஷத்துப்பதினெண்ணாயிரத்தெழுநூறு கொண்டது. படை - பகை வரைப் படுப்பது; படுத்தல் - அழித்தல். (அ)

9.—பகைவர் நிரைகவர்ந்ததை நிரைகாவலர் விராடனுக்குக் கூறுதல்.

(இ - ள்.) (உடனே),—நல் நிரை காவல் நின்றோர் - நல்ல பசுக்கூட்டங்களுக்குக் காவலாகநின்ற இடையர்கள்,—கரை காண அரிது ஆன - கரையைக்காணுவதற்கு அரியதாகிய, கடல் - கடலை, ஒத்த - போன்ற, வெம் சேனை - கொடிய சேனை, கை சூழவும் - (தன்) பக்கங்களிற் சூழ்ந்து நிற்கவும், தரை காவல் பெறு - பூமியைக் காக்குந்தொழிலைப் பெற்ற, தோளின் ஆண்மை - புஜபலத்தாலாகிய வீரத்தன்மையையுடைய, பெருங் கேளிர் - சிறந்த உறவினராகளும் சினேகிதர்களும், தன் சூழவும் - தன்னைச்சூழ்ந்திருக்கவும், விரை காலும் மலர் ஓடை எனும் ஆறு-வாசனைவீசுகின்ற மலர்களையுடைய நீரோடை யென்று உவமைகூறும்படி, இருக்கும் - (தெளிவுங் குளிர்ச்சியுமுடையவனாய்) அரசுவீற்றிருக்கின்ற, விராடற்கு - விராடராஜனுக்கு,—தெவ்வர் - பகைவர்கள் [திரிகர்த்தன் முதலியோர்], நிரை கொண்டது - பசுக்களைக் கவர்ந்துசென்ற செய்தியை, பணிந்து ஓதினர்-வணங்கிச் சொன்னார்கள்; (எ - று.)

குறைகூறுங் குடிகள்பால் முகமலர்ச்சியையும் கண்ணளியையும் மாறுமையுடையவ னென்பது, 'விரைகாலுமலரோடையெனுமா றிருக்கும் விராடன்' என்பதன் கருத்து; உவமையணி. 'மலரோடை' என்ற உவமையால், அவனதுசேனையும்கேளிரும் அவனைப் பிரியாதுநின்று அவனுக்குநேரும்இன்பதுன்பங்களை அவனைடொக்கஅனுபவிக்கும்பேரன்புடையவரென்பதும் தோன்றும்; "அக்குளத்திற், கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே, ஒட்டியுலர்வா ருறவு" என்பது காண்க. 'இரட்டுறமொழிதல்' என்ற உத்தியால், 'கேளிர்' என்ற சொல்லுக்கு - உறவினரும் நண்பரு மென இருபொருள் ஒருங்கு கொள்ளப்பட்டது. சேனைக்குக் கடலுவமை - மிக்கபரப்புக்கும், ஆரவாரத்துக்கும், அச்சந் தருதற்கும், அணியணியாக வருதற்கு மென்க. கை - பக்கம்; இனி, உபசர்க்கமாகவுங் கொள்ளலாம்.

தரை - தரா என்ற வடசொல்லின் விகாரம்; (பொருள்களைத்) தரிப்ப தென்று பொருள்பெறும். ஆண்மை-ஆண்தன்மை; மை-தன்மைப்பொருள் விகுதி. கேளிர்-ஒருவர்க்கொருவர் க்ஷேமங்களைக் கேட்டு மகிழ்பவர்; கேள் - பகுதி, இர் - பலர்பால்விகுதி: கேண்மையென்ற பண்பினடியாப் பிறந்த தென்னலாம். தமது புயவலியாலும் மனவலியாலும் பகைவரைவென்று அரசாள்பவ ரென்பது விளங்க, 'தரைகாவல்பெறு தோளிறுமைப் பெருங்கேளிர்' என்றார். ஓடை - நீரோடுமிடம். தெவ்வர்-பகைமையையுடையவர்; தெவ்-பகைமை யுணர்த்தும் உரிச்சொல். ஏவா - வடசொல். (க)

10.—அதுகேட்ட விராடன் சேனையைப் போர்க்குச் சித்தப்படுத்துதல்.

(இ - ள்.) (அதுகேட்டு),—ஓர் அக்ரோணி உள தானையான் - ஓர் அக்ஷௌஹிணியென்னுந் தொகையுள்ள சேனையை யுடையவனான விராட ரீாஜன்,-(தன்சேனைத்தலைவர்களைநோக்கி), 'திரிகத்தர் கோன் - திரிகர்த்த ராசன், மதியாது - (நம்மிடத்துச் சிறிதும்) மதிப்புக்கொள்ளாமல் [மிகவும் அலக்ஷ்யமாய்], செரு மிக்க படையோடு - போர்த்தொழிலில் மிக்க (தனது) சேனையுடனே, நிருமிக்க ஒட்டாத என் பூமிதனில் - (வேறுயாவரும்) நியமிக்கவொண்ணுத (காவலையுடைய) எனது நாட்டில், சதி ஆக - வஞ்சனையாக, வந்து—, நிரை கொள்வதே - பசுக்களைக் கவர்ந்து கொண்டு போவதா! (அந்நிரையை மீட்குமாறு நீங்கள்), பரு மிக்க மதம் யானை - பருத்துள்ளவையும் மிக்க மதத்தையுடையவையு மான யானைகளும், தேர் - தேர்களும், வாசி - குதிரைகளும், ஆள் - காலாள்களும், இன்ன - என்னும் இச் சதுரங்கசேனைகளையும், பண் செய்யும் - அணிவகுத்துப் போர்க்குச் சித்தஞ் செய்யுங்கள்,' என்று—, உரும் மிக்க முகில் போல் - இடிமிகுந்த மேகம் போல, உரைத்தான் - சொன்னான்; (எ - று.)

இது முதற் பதினான்கு கவிகள்-தென்புறத்து நிரைமீட்சி கூறுகின்றார். தான் அறியாதபடி திரிகர்த்தராஜன் வந்து பசுக்களைக்கவர்ந்தமையால் சினந்து, பெருங்குரலுடன்,தன் சதுரங்கசேனைகளைப் போர்க்குச் சித்தஞ்செய்யுமாறு விராடராஜன் கூறினனென்க. நிருமிக்க வொட்டாத பூமி - (எவராலும் இங்ஙனம் பிற இடங்களில்) உண்டாக்கமுடியாத (வளங்களையுடைய) நாடுஎன்றுமாம்.

எகாரம் - விநோவகையால் அலக்ஷ்யத்தைக் குறிக்கின்றது. பருமிக்க - பருமை மிகுந்தவென்றுமாம்; வியங்கோள் வினைமுற்றாகக்கொண்டு, மதயானைகளை அலங்கரிக்க வென்றலுமாம்; பருமம் - யானைமேற்றவிசு: பருமித்தல் - தவிசிட்டு அலங்கரித்தல். பூமி, வாஜி - வடசொற்கள். செய்யும்-உம்மீற்று எவற்பண்மை முற்று. பண்செய்தல் - அலங்காரஞ் செய்தலுமாம். 'ஆள்' என்ற சொல் உயர்திணையாயினும், யானை தேர் வாசி என்ற மூன்று அஃறிணைச்சொற்களோடு சேர்த்து நிறுத்தப்பட்டதனால், மிகுதிபற்றி 'இன்ன' என்ற அஃறிணைமுடிபைக் கொண்டது; திணைவழுவமைதி: [நன் - பொது - உஎ.] இனி, 'ஆள்' என்றது-காலாட்சேனையை யுணர்த்துவதெனக்கொண்டு அதனை அஃறிணையின்பாற்படுத்துதலு மொன்று. (கo)

11.—விராடன் தன்சேனையுடனே திரிகர்த்தன்சேனையை நெருங்குதல்.

(இ - ள்.) ஞெண்டு ஊரும் வயல் தோறும் - (நீர்வளத்தால்) நண்டுகள் ஊர்ந்துசெல்லப்பெற்ற கழனிகளி லெல்லாம், வளை - சங்குகள், நித்திலம் சிந்தி-முத்துக்களைப் பெற்றதனால், நில ஊரவே - சந்திரகாந்திபோன்ற வெள்ளொளி பரவவே, (அதனால்), வண்டு ஊத-வண்டுகள் வந்து ஊதும்படி, மலரும் -அரும்புகள் மலரப்பெற்ற, தட பொய்கை - பெரிய தடாகங்கள், சூழ் - சூழ்ந்த, மச்சம் வளம் நாடன் - வளமுள்ள மச்சமென்னும் நாட்டையுடைய

வனை விராடராஜன்,—ஒள் தூளிவானம் புதைக்க - (சேனைகள் செல்வதனல் எழுப்பப்பட்ட) ஒள்ளிய [மிகுதியான] புழுதி ஆகாயத்தை மறைக்கவும், பல் இயம் சாலம் ஒலி பட்டிட - பலவகைவாத்தியங்களின் கூட்டம் ஒலிசெய்யவும், திண் தூசி அணி ஆக - வலியசேனை அணிவகுக்கப்பட்டு முறையே முன்செல்லவும், சென்று - போய், நிரை கொண்ட வெம் சேனை எய்தினன் - பசுக்களைக் கொண்டுபோன கொடிய திரிகர்த்தன்சேனையைச் சந்தித்தான்; (எ - று.)

கொட்டுவனவும் ஊதுவனவுமாகிய தோற்கருவி துளைக்கருவி ரப்புக் கருவி கஞ்சக்கருவி யென்பன வெல்லாம் அடங்க, 'பல்லியதாலம்' என்றார். தூசி - முந்துற்றுப் பொருபடை. முன்னணிச்சேனை. வயல்களிற் சங்குகளும் முத்துக்களும் வீசுகின்ற வெண்மையான காந்தியை நிலாவென்று மயங்கி ஆம்பல் முதலிய சில ர்ப்பூக்கள் மலரு மென மயக்கவணியாகக் கருத்துக்கொள்க. சங்கு முதலியவற்றினின்று முத்துப்பிறக்கு மென்பதை, "தந்தி வராக மருப் பிப்பி பூகந் தழைகதலி, கந்து சஞ்சல மீன்றலை கொக்கு னனின மின்னுர், கந்தாருந் சாலி கழை கன்ன லாவின் பல் கட்செவிகா, ரிந்து வுடும்பு கரா முத்தமீனு மிருபதுமே" என்பதனுலும் அறிக. நிலவளத்துக்குக் காரணமான ர்வளமிகுதியால் எங்கும் பலவகை மீன்கள் மலிந்திருத்தல்பற்றி, மத்ஸ்யதேச மென்று அந்நாட்டுக்குப் பெயர்வந்தது போலும்; அதற்குஏற்பவே, பின்னிரண்டடியில் ர்வளசிறப்பே கூறப்பட்டது.

எய்தினன், எய்து - முதனிலை. நண்டு என்பதன் போலியாகிய ஞண்டு என்பது - இங்கு மோனைப்பொருட்டம்நோக்கி ஞெண்டெனத் திரிந்து நின்றது. நிலாவென்னும் குறியதன்கீழ் ஆக் குறுகிற்று. பொய்க்கை - மானிடராக்காத ர்ச்சில, லாஸ். மசகம் - மத்ஸ்ய மென்னும் வடசொல்லின் சிதைவு. மலரும் பொய்கை-பெயரெச்சம், இடப்பெயர்கொண்டது. வளை - வலம்புரியாகவாயினும் இடம்புரியாகவாயினும் உள்ளே வளைவுபெற்றுள்ளதென எதுப்பெயர். புதைக்க, ஒலிபட்டிட, அணியாக - வினைச்செவ்வெண். தூளி, ஜாலம்-வடசொற்கள். (சுக)

12.—அருச்சுனனெழிந்த பாண்டவர்நால்வரும் விராடனுடன் சென்றுதலும், திரிகர்த்தன்சேனை புறங்கொடுத்தலும்.

(இ - ள்.) (அப்பொழுது),—பேடி ஆய்-(ப்ருஹந்நளையென்னும்) நபும்ஸகவடிவமாய், உள் - உள்ளே [உத்தரையினது கன்னிமாடத்தில்], வைகும் - தங்கியிருக்கிற, வில் காளை அல்லாத - விற்போரில்வல்ல அருச்சுன னெழிந்த, ஒரு நால்வரும் - (மற்றை யுதிட்டிரன் பீமன் நகுலன் சகதேவன் என்னும்) நான்குபேரும், போர் நலம் காண - யுத்தத்தின் சிறப்பைப் பார்ப்பதற்காக, நட்பு எறு பூபாலனுடன் - (தம்மிடத்துச) சினேகம் மிகுந்த விராடராசனுடனே, எகினர் - சென்றார்கள்; (பின்பு),—கொட்பு எறி - வளைத்துக் கொண்டு, நிரை கொண்ட - பசுக்களைக் கவர்ந்த, வெம் சேனையும் - கொடிய (திரிகர்த்த) சேனையும், செல் கொடுஞ் சேனையும் - (அதனை அழித்து நிரைமீட்கச்) சென்ற பயங்கரமான (விராட)சேனையும், பெட்பு எறி - (தாம்

தாம் வெற்றிபெறவேண்டுமென்னும்) விருப்பம் மிகுந்து, அமர் செய்ய - (ஒன்றோடொன்று) போர்செய்யாநிற்க;— (அப்போரில்),— முன்னிட்ட குரு சேனை - முன்னேவந்த கௌரவசேனை, பின்னிட்டது - முதுகுகாட்டி ஓடியது [தோற்றது]; (எ - று.)

குருவென்பவன், சந்திரவமிசத்துப் பேர்பெற்ற ஓர் அரசன்; இவனால் அக்குலம் குருகுலமென்றும், அந்நாடு குருக்ஷேத்திரமென்றும், அச்சந்ததியார் கௌரவரென்றும் பெயர்பெற்றவாறு காண்க. இங்கு, அவன் வமிசத்துத் தோன்றிய துரியோதனாதியரது சேனை 'குருசேனை' எனப்பட்டது. குரு லோக - வடமொழித்தொடர். பின்னிடுதல் - முதுகுகாட்டி யோடுதல். 'முன்னிட்ட குருசேனை பின்னிட்டது' என்ற தொடரில், நோடைமரண் காண்க. உள் வைகும் என இயையும். பேடி - பெண்ணுறுப்பு மிக்கு ஆணுறுப்புக் குறைந்த நபும்சகம்; ஆணுறுப்புமிக்குப் பெண்ணுறுப்புக்குறைந்த நபும்சகம், அலி யெனப்படும்: 'பேடு' என்பது, 'நபும்சகம்' என்ற வடசொற் போல இவ்விருவகைக்கும் பொதுப்பெய ரென்று அறிக. நால்வர் - தொகைக் குறிப்பு. கொட்பு - வளவு. பெட்பு - விருப்பம். கொட்புஎரி - மாறுபாடு மிக்கு எனினுமாம். நட்பு, கொட்பு, பெட்பு - தொழிற்பெயர்கள்; நள் 'கொள், பெள்-பகுதி, பு-விகுதி. பூபாலன்-பூமியைக் காப்பவன்; வடசொல். பெட்பேறுதல் - நான் முன்னே நான் முன்னேயென்று போர்விருப்பங்கொண்டு புறப்படுதல்; "போரெனிற் புகலும் புலைகழன்மறவர்" என்றார் பிற ரும். அமா = லமரம்: வடமொழி. (கஉ)

13.—திரிகர்த்தராசன் விராடராசன்மேல் அம்புமழைபொழிந்தல்.

(இ - ள்.) பொலம் பொன் கழல் காலினன் - அழகிய பொன்மயமான வீரக்கழலைத் தரித்த காலையுடையவனான, திரிகர்த்தன்,—தன் சேனை—, மெய் கொண்ட புண்ணேடு - உடம்புமுழுவதும் ஆயுதம்பட்ட விரணத்துடனே, நில்லாமல் - எதிர்நிற்கமாட்டாமல், வெண் இட்டபின் - முதுகு கொடுத் தோடியபின்பு,— கைக்கொண்ட நிரையை - (தான்) கவர்ந்துகொண்ட பசுக்கூட்டத்தை, கடத்தி - (அப்பாற்) செல்லவிட்டு,— மை கொண்டல் என - காரியமேகம்போல, வில் வளைத்து - வில்லை வளைத்து நாணேற்றி,— செய் கொண்ட கழுநீர் அலங்கல் - வயல்களிலே தோன்றிய செங்கழுநீர் மலர்களாலாகிய மாலையையும், திரு கரந்தை தாமன்மேல்-அழகிய கரந்தைப் பூமாலையையுமுடையவனான விராடன்மேல், ஆறு பத்து அம்பு - அறுபது பாணங்களை, மழை சிந்தினன் - மழைபோலப் பொழிந்தான்; (எ - று.)

அம்புதொடுத்தற்கு மழைபொழிதலும், வில்லுக்கு இந்திரதனுசும், திரிகர்த்தனுக்கு மேகமும் உவமையெனக் காண்க; உவமையணி. செங்கழுநீர்மாலை - விராடனுக்கு உரிய அடையாளப்பூமாலை. கரந்தை - ஓர்செடி; இப்பூமாலை, பகைவர்கவர்ந்துஓட்டியநிரையை மீட்பவர் தரிப்பது. பொய்யாகிய உடம்பை 'மெய்' என்பது - மங்கல வழக்கு. புண்ணேடுமூன்றனுருபு, அடைமொழிப்பொருளது. கழல் - வீரர் காலில் அணிவதோர் ஆபரணம். அலங்கல் - தொங்கியசைவது; தொழிலாகுபெயர்: அல் - கர்த்தாப்பொருள்

விகுதியெனினும் இழுக்காது. மைக்கொண்டல்-காளமேகம். கொண்டல்-கீர் கொண்டமேகம்; தொழிலாகுபெயர்; கொள்-பகுதி, தல்-விகுதி, ளகரதகரங்கள் ணகர டகரங்களானது-சந்தி விகாரம். என-உவமவுருபு. ஆறுபத்து-பண்புத் தொகை. கடத்தி, கடத்து-பகுதி; கடத்தில் சிங்கிணன் என இயையும். வடமலை 'செய்'என்பது,பன்னிநாட்டுக்கொடுந்தமிழிலிருந்து செந்தமிழில் வந்துவழங்க லானதிசைச்சொல்; 'நன்செய்', 'புன்செய்' என வழக்கிலுங் காண்க. கழனி களிற் செங்கழுநீர் மலர்கின்றதென நீர்வளச்சிறப்புக் கூறியவாறும். (கஉ)

14.—விராடன் திரிகர்த்தனைத் தேர்முதலியன அழித்தல்.

(இ - ள்.) மா மச்சம் உடல் - பெரிய மீன்களின் உடம்பு, புல் புலால் மாறி - (இயல்பிலே அமைந்த) இழிவான புலால்நாற்றம் நீங்கி, வள் காவி மணம் நாறும் - வளப்பமுள்ள நீலோற்பலமலர்களின் சேர்க்கையால் அவ் வாசனை வீசப்பெற்ற, அ கோ மச்சம் வளம் நாடனும் - அந்தச்சிறந்தவளம் மிக்க மச்சதேசத்தின் அரசனாகிய விராடனும்,—கொற்றம் வரி வில் குனித்து - வெற்றியைத் தரவல்ல கட்டமைந்த வில்லை வளைத்து, செம் தாமம் ஐந்து சரம் கொண்டு-(பகைவர் இதயத்தைத் தேய்த்தலாற்) சிவந்த ஒளியையுடைய ஐந்து அம்புகளை எய்து அவற்றால்,தேர் பாகு கொடி வாசி துணியும் துணித்து-(திரிகர்த்தராஜனுடைய) தேர் சாரதி துவசம் தேர்க்குதிரைகள் வில் வன்னெஞ்சு ஐந்தையும் துண்டுபடுத்தி,— மற்று-பின்னும், ஆம் அசுசம் உற-மிக்க பயம் உண்டாம்படி, அவன்கோலம் மார்பத்தும் - அவனது அழகிய மார்பிலும், அம்பு ஏவினன் - வேறு பாணங்களைப் பிரயோகித்தான்; (எ - று.)

திரிகர்த்தன் பொழிந்த பாணவர்ஷத்திற்கு மாறுக, விராடன் அம்பெய்து அவனது தேர்முதலியவற்றை யழித்தனன் விராடனென்க. நீலோற் பலமலர்கள் நிறைந்த வயல்களி லுலாவுகின்ற மீன்கள் அம்மலர்களின் சேர்க் கையால் தமது புலால்நாற்றம் நீங்கி, 'பூவோடுகூடி நாரும் மணம்பெற்றது' என்றாற்போல அம்மலர்களின் மணம நாறுமென்றது, பிறிதின் குணம்பெற லணி; வடநூலார் தத்குணாலங்கார மென்பர்; ஒருபொருள் தன் குணத்தை யிழந்து பிறிதொன்றன்குணத்தைப் பெற்றதாகக் கூறுதல், இதன் இலக்க ணம். கொற்றம் - (பகைவரைக்) கொன்று பெறுவது என வெற்றிக்குக் கார ணக்குறி; கொல் - பகுதி. தாமசசரம் - வரிசையாய் ஒருதொடையிலே எய்த சரங்க ளென்றுமாம்: பாகு=பாகன்: ஆகுபெயர்.தனு-நாநுஸ் வடமொழி. (கஊ)

15.—திரிகர்த்தன் விராடனைத் தேரிற் கட்டுதல்.

(இ - ள்.) நிரை கொண்டு போகின்ற - பசுக்களைக் கவர்ந்துகொண்டு போகின்ற, தனு வீரனும் - விற்போரில்வல்ல வீரனாகிய திரிகர்த்தனும்,— தனை வேறு ஒன்று தேரும் மேல்கொண்டு - விரைந்து செல்லுதலையுடைய வேறொருதேரில் ஏறிக்கொண்டு,—(விராடனது), வினை தேரும்-போர்த்தொ ழிலுக்கு உரிய இரதமும், (அத்தேரிற்பூட்டிய), வயம் மாவும் - வெற்றியை யுடைய குதிரைகளும், வெம் பாகும் - கொடிய [வல்லமையுள்ள] சாரதியும், விழ-கீழே விழுந்து அழியும்படி, நால்ஐந்து தொடை ஏவி எய்து - இருபது

அம்புகளை வில்லில்தொடுத்துப் பிரயோகித்து;—தனை தேர் அழித்தோனை-(கீழ்த்) தன்னைத் தோழியும்படி செய்தவனை அவவிராடராசனை, அவன் சேனை முகம் மாற-அவன துசேனை முகம்திரும்பும்படி [முதுகுகாட்டும்படி], வில் நாணினால் - வில்லினது நாணியினால், முனை தேர் முகத்தில் - போர்க் களத்தில் (தனது) தேரின் முன்னிடத்தில் [தேர்க்காலில்], பிணித்தான் - கட்டினனன்; (எ - று.)

'தனை' என்பதில் ஐயுருபு உருபுமயக்கமாக, தனதுதேரை அழித்தோ னெனினுமாம். தன் தேரை யழித்தோனை என உருபுபிரித்துக் கூட்டுதலு மாம். தினை-முதனிலைத் தொழிற்பெயர். நாலந்து-பண்புத்தொகை. நாலந்து தொடை - சிலதொடையென்னலுமாம். தொடை - தொடுக்கப்படுவது; ஐ - செயப்படுபொருள்விகுதி.வினைத் தேர்-சித்திரவேலைத்திற மமைந்ததேருமாம். முகம் மாற - முகம்ஒளியிழக்க வென்றலுமாம். (கரு)

16.—கங்கபட்டனது தூண்டுதலாற் பலாயனன் போர்க்கு எழுதல்.

(இ - ள்.) (இவ்வாறு திரிகர்த்தராஜன்), தின் திறல் சிலை - மிக்க வலி மையுள்ள வில்லையுடைய, விராடனை---, தேரொடும் பிணித்து - (தன்) தே ருடன் சேர்த்துக்கட்டி, கொண்டுபோதலும் - கொண்டுபோனவளவில்,— குரு குலம் கோமகன் முனிவன் - (கங்கபட்டனென்னும் பெயரோடு) முனி வேடங்கொண்டுகரந்துறைகின்ற குருகுலத்தில்தோன்றிய சிறந்த அரசனை யுதிஷ்டிரன், கண்டு - (அதனைப்) பார்த்து, தன் திரு தம்பியை - தனது சிறந்த தம்பியாகிய (பலாயனனென்னும் பெயர்பூண்ட) பீமசேனனை, கடைக்கணித்தருள - அருளோடு கடைக்கண்ணாற் பார்த்து (விராடனை விடுவிக்கவேண்டு மென்று) குறிப்பிக்க,—மடை தொழில் வல்லான் - உணவு சமைத்தற்றொழிலில் வல்லவனன அப்பலாயனன், மண்டு தீ என - மூண் டெரிகின்ற நெருப்புப்போல, எழுந்தனன் - (போர்செய்தற்குக்) கொதித் தெழுந்தான்; (எ - று.)

இதனால் பாண்டவரது நன்றியறிவுடைமையும், தமையனர்கட்டளையை எதிர்பார்த்து அதனைக்கடவாதுநிற்கும் அத்தம்பிரானது தன்மையும் நன்கு விளங்கும். தின்திறல்-ஒருபொருட்பன்மொழி. போதலும்-'உம்'ஈற்றுஇறந்த காலவினையெச்சம், பிற்பொருளோடு விரைவையுங் குறித்துநின்றது: து அல் இரண்டும் - சாரியை. கோமகன் + முனிவன் = கோமகமுனிவன்; உயர் திணைப்பெயரீறு விகாரமாயிற்று; [நன் - உயிரீறு - கூ.] கோமகமுனிவன் - ரா ஜரிஷி யென்றவாறுமாம். திரு-தெரியலக்குமியுமாம். கடைக்கணித்து-பெயர்ச் சொல்லடியாகப் பிறந்த தெரிநிலைவினையெச்சம். கடைக்கண் - கணணின் கடை; பின்முன்னாகத் தொக்க ஆறாம்வேற்றுமைத்தொகை: இலக்கணப் போலி யென்பர். 'அருள்' என்ற துணைவினை, வினைமுதலின் உயர்வை விளக் கும். மடை - உணவு; உண்ணப்படுவது என்ற பொருளில், மடு - பகுதி, ஐ - செயப்படுபொருள்விகுதி. மடுத்தல் - வாயினுள்ளட்கொள்ளுதல். மடைத்தொ ழில் - உணவுக்கு உரியதொழில்; எனவே, சமையலாயிற்று.

இது முதல் ஐம்பத்துநான்கு கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் ஈற்றுச்சீரும் மாச்சீர்களும், நடுச்சீர்மூன்றும் விளச்சீர்களு மாகிய நெடிலடிநான்கு கொண்ட கலிநிலைத்துறைகள். (கசு)

17.—பலாயனன் பொருது திரிகர்ந்தனைப் பற்றுதல்.

(இ - ள்.) (எழுந்த பலாயனன்),—ஏழாதை ஆம் ஊதை-(தனது) தந்தையாகிய வாயு, உகத்தின் ஈறு தோறு - யுகமுடிவு [கற்பாந்தகாலந்] தோறும், ஓதையோடு - பேரொலியுடனே, நகத்நிரல் - (பெரிய) மலைகளால், உயர் நகங்களை - உயர்ந்த மலைகளை, நறுக்கும் ஆ போல-கொருக்கும் விதம்போல,—திகத்த பூபதி - திரிகர்த்ததேசத்தரசனது, தேரினை—,வேறு ஒரு தேரால்—, தகர்த்து - கொருக்கி, அவன்தனையும் - அத்திரிகர்த்தனையும், வில்லொடும் - வில்லுடனே, அகப்படுதினன் - அகப்படச்செய்தான் [வில்லுங்கையுமாய்த் திரிகர்த்தனைப் பிடித்துக்கொண்டா னென்றபடி]; (எ - று.)

வீமனுக்கு வாயுவும், தேர்க்கு மலையும் உவமை. தந்தையே மைந்தனுகின்ரு னென்னும் வேதவழக்குப்பற்றியும், வீமனுக்கு வாயுவை உவமை கூறுதல் ஏற்கும்; "தந்தையரொப்பர்மக்கள்" என்ரூர் தொல்காப்பியனரும். கற்பாந்தகாலத்திற் பெருங்காற்று எழுந்து வீசி உலகங்களை யழிக்குமென்க.

யுகம், தாத என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. உகத்தினீறு - யுகாந்தம். நகம் - வடமொழிப்பெயர்; லுஞ்சரித்தலில்லாதது என்று காரணப் பொருள்பெறும். ஆ - ஆறு: விகாரம். பூபதி-பூமிக்குத்தலைவன்; வடமொழிப் பெயர். 'ஈறுதோறு', 'ஓதையோ டூதைபாந் தாதை' - பிரபஞ்ச மென்னுஞ் சொல்லணி. (கள)

18.—பலாயனன் விராடனை நீட்டு அவனது தேர்க்காலில் திரிகர்த்தனைக் கட்டுதல்.

(இ - ள்.) (இவ்வாறு அகப்படுத்தி),—வீரியந்தனக்கு ஒருவன் ஆம் விராடனை - வீரத்தன்மையில் ஒப்பில்லாதவனுகிய விராடராஜனை, ஒரு பொன் தேரில் ஏறுக என்று-பொன்மயமான வேரொருதேரிலே ஏறுவாயாக' என்று சொல்லி, ஏற்றி - (கட்டவிழ்த்தது) ஏறவிட்டு,—அ தேரினில் - அந்தத்தேரிலே, திகத்தன் - திரிகர்த்தராசனது, சோரி பாய் தட தோள்களை - இரத்தம் பெருகுகின்ற பெரிய புஜங்களை, வடத்திரளல் துவக்கி - (விராடனைக் கட்டிய) கயிற்றிரளாலேயே கட்டிவிட்டு,— மூரி ஏறு என - வலிமையுள்ள விருஷபம் போல [கம்பீரமாக], மீண்டனன் - (பலாயனன்) திரும்பி வந்தான்; (இதுசெய்யவே),—அ சேனை-அந்தத்திரிகர்த்தசேனை, முறிந்தது - அழிந்து போயிற்று; (எ - று.)

மூரி - பெருமையுமாம். வீரியந்தனக்கு - உருபுமயக்கம். பொன்தேர் - அழகிய தேருமாம். ஏறுக + என்று = ஏறுகென்று; வியங்கோளீற்று அகரம் தொகுத்தல் விகாரமடைந்தது. ஏறு-ஆண்பாற்பெயர்; இங்கே,பசுவின்ஆண்.

19.—விராடன் பலாயனனுக்கு நன்றியறிவுகூறல்.

(இ - ள்.) (இவ்வாறு), பொரு முகத்தினில் - போர்செய்கின்ற களத்திலே, பகைவனை - பகைவனுகிய திரிகர்த்தனை, புயம் உற பிணித்து-தோள்

கலை அழுந்தக் கட்டிவிட்டு, வெரு முகத்தினில் - (யாவரும்) அஞ்சத்தக்க தோற்றத்துடனே, வீடு கொள் - திரும்பிவருகின்ற, வீமனை - வீமசேனனை நோக்கி, விராடன்—, 'செரு முகத்தினில் - யுத்தகளத்தில், எனக்கு நீ செய்த—, பேர் உதவிக்கு - இந்த மகோபகாரத்திற்கு, கைம்மாறு - (யான்செய்யும்) பிரதியுபகாரம், ஒருமுகத்தினும் - ஒருவகையிலும், இல்லை—,' என உரைத்தான் - என்று சொன்னன்; (எ - று.)

காலத்திற் செய்த நன்றி ஞாலத்தினும் மிகப் பெரிய தாதலால், நான் எந்த உபகாரஞ் செய்தபோதிலும் நீ செய்த பெரிய உபகாரத்துக்கு ஈடாகா தென்றபடி. வெரு முகத்தினில் - அஞ்சத்தக்க இடத்தில் என்றலுமொன்று. வெரு - வெருவு என்பதன் விகாரம். வீடு - விடு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். வீடுகொள் - தன்னை விடுவித்த என்றுமாம்; (பகைவரைக்) கொல்லுகின்ற என்று உரைப்பாருமுளர். வீமன் - பீமன என்ற வடமொழியின் திரிபு; பகைவர்க்குப் பயங்கரனு யிருப்பவனென்பது பொருள். உதவி - தொழிற்பெயர்; இ-விகுதி. (கக)

20.—நாமகீர்த்தி தீர்கர்ந்தசேனைத்தலைகளைக் கவர்தலும், தந்திரிபாலன் நிரைமீட்டலும்.

(இ - ள்.) (அப்பொழுதும்),—அ கால் மகன்-வாயுபுத்திரனை அவ்வீம சேனன், சேவலான் என - கோழிக்கொடியையுடையவனை முருகக்கடவுள் போல, தயித்தியன் அனைய அ திகத்தர் காவலானை - அசுரனைப்போன்ற அந்தத் திரிகர்த்ததேசத்தார்க்கரசனை, பிணித்தமை - கட்டியதை, கண்டு—, மா வலான் - குதிரைசெலுத்துந்தொழிலில் வல்லவனாகிய (தாமக்கிரந்தியென்னும்பெயர்பூண்ட) நகுலன், வய மா பதினாயிரம் வௌவ - (திரிகர்த்த சேனையிலுள்ள) வலிய பதினாயிரங்குதிரைகளைக் கவர்ந்துகொள்ள,—கோவலான் - பசுக்களைப்பாதுகாக்குந்தொழிலில் வல்லவனாகிய (தந்திரிபாலனென்னும்பெயர்கொண்ட) சகதேவன், அவன் கொண்ட கோ-திரிகர்த்தன் கொண்டுபோன பசுக்களை, மீளவும் கொண்டான் - திருப்பி (ஊருக்கு) ஓட்டினன்; (எ - று.)

இதனால் பாண்டவர்நால்வர் விராடனுக்கு உதவியமை கூறியவாறு. இது, இப்படலத்துக்கு உயிர்நிலைச்செய்யுள்; நிரைமீட்டல் கூறுகின்றமையின். உரிமைபற்றி, மாவலான் மாவெளவக் கோவலான் கோக்கொண்டானென்க. பலபராக்கிரமங்களிலும் அழகியவடிவிலும் தேவாம்சமாதலிலும் எளிதிற்பகையழித்தலிலும் வீமனுக்கு முருகக்கடவுளும், அவனால் எளிதில் அழிக்கப்படுதலிலும் நல்லோர்க்குப் பகையாய்க் கொடுந்தொழில் செய்தலிலும் திரிகர்த்தனுக்கு அசுரனும் உவமையாவர்; உவமையணி. சேவல் - ஆண்பாற் பெயர்; இனி, சேவலான் - மயில்வாகனமுடையவ னென்றுமாம். ஆசிரியர் தொல்காப்பியனார் "மாயிருந்தூவி மயி லலங்கடையே" என்றாராயினும், உரைகாரர் 'செவ்வேளுர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும்படுமென்பது' என்றமை காண்க. முருகக்கடவுளால் வேல்கொண்டு பிளக்கப்பட்ட சூரபதுமனது

உடம்பின் கூறு இரண்டும் மயில்வடிவமும் கோழிவடிவமும் பெற்று அக்கட வுளருளால் அப்பிராணுக்கு வாகனமும் கொடியுமாய் அமைந்தன வென்று அறிக. தயித்தியன்-தைத்தியன்; முதற்போலி. தைத்யன் என்ற வடசொல்-(காசியபமுனிவர்மனைவிகளில் ஒருத்தியாகிய) திதியென்பவளது மகனென்று பொருள்படும்; தத்திதாந்தநாமம். காவலான் - காவல்ஆன்: காத்தற்றொழிலு டையவன்; அன்றி, கா வலான் - காத்தலில் வல்லவன். பதிஞாயிரம் - பண் புத்தொகை. இன் - சாரியை. கோ-வடசொல். கோவலான்-கோபாலனென் பதன் விகாரமாகவுமாம். வய-வலிமையுணர்த்தும் உரிசைசொல். (உ0)

21—சூரியாஸ்தமன வருணனை.

(இ - ள்.) அன்ன காலையில் - அப்பொழுது, துன்னலன்தனை - பகைவ னாகிய திரிகர்த்தனை, தோள் ஈற துவக்கி - தோள்களை அழுந்தக் கட்டி, முன் தந்த - எதிரிலே கொணர்ந்து கொடுத்த, பன்னும் - சிறப்பித்துச சொல்லப்படுகின்ற, நூல் மடை பலாயனன் - பாகசாஸ்திரத்தையுணர்ந்து அதன்முறைப்படி சமைத்தலையுடைய பலாயனனென்னும் வீமனை, கண்டு - பார்த்து,—வருணன்—, ஆங்கு பாவித்து-அவ்வாறே (தானுஞ்செய்வதாகப்) பாவனைசெய்து, அருக்கனை - சூரியனை, தேரொடும் அணைத்து - தேருடனே சேர்த்துக்கொண்டுபோய், மன்னு தன் திசை - நிலைபெற்ற தனது [மேற் குத்] திக்கில், வல் சிறை படுத்தினன்-வலிய காவலிலே அகப்படுத்தினன்.

மேற்கிற் சூரியன் இயல்பாக அஸ்தமித்து மண்டலத்தோடு மறைந்து போனதை,வீமன்போல வருணன் சூரியனைத்தேரோடு சிறைப்படுத்தியதாகக் குறித்தது-தற்குறிப்பேற்றவணி: வடநூலார் உத்ப்ரேக்ஷாலங்கார மென்பர். புகழ்விளக்குஞ் சிறந்ததொருசெயலை ஒருவர்செய்யக் கண்டவிடத்து, அங்ங னந்தாமுஞ் செய்து சிறப்புறவேண்டுமென்னுங்கருத்தும்அதற்கேற்றமுயற்சி யும் பிறர்க்கும் உண்டாகுதல், உலகவியல்பு. வீமன் திரிகர்த்தனைக்கட்டியது சூரியாஸ்தமநத்திற்குச் சிறிதுமுன் பென்பது போதரும். வருணன் மேற்குத் திக்குபாலக னுதலால், 'தன்திசை' எனப்பட்டது.

துன்னலன்-(தன்னை) சேராதவன்; எதிர்மறைவினையாலணையும் பெ யர்: பலாயனம்கண்டு - "இயல்பின் விகாரம்:" [நன்-உருபு-சூ.]காலம்-காலை யென ஈறு திரிந்தது. அர்க்கன்-வடசொல். (உக)

22.—கங்கபட்டன்சொன்னபடி விராடன் திரிகர்த்தனை விட்டிடுதல்.

(இ - ள்.) அங்கம் மா மதில் அயோத்தி மன்-உறுப்புக்களமைந்த பெரிய மதிலினையுடைய அயோத்தியாநகரத்தின் அரசனுகிய விராடன்,—கங்கன் என்று - கங்கபட்டனென்று பெயர்கொண்டு, தன் அருகு இருந்தருளிய - தன்பக்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற, கடவுள்-தெய்வத்தன்மையையுடைய, துங்கம் மா முனி - உயர்ச்சிவாய்ந்த மகாமுனிவராகிய தருமபுத்திரரது, சொல்படி - சொல்லின்படி, சிங்கம் அன்ன அதிகத்தனை - சிங்கம்போன்ற அந்தத் திரிகர்த்தராஜனை, தோள் வடம் நெகிழ்த்து - தோள்களைக்கட்டிய கயிற்றை யவிழத்து, தேரும் ஒன்று அளித்து-ஒருதேரையுங்கொடுத்தருளி, செல்க என-'(உயிரோடு) போவாயாக' என்றுசொல்லி, விடுத்தான் - விட் டிட்டான்; (எ - று.)

விராடன் சூரியகுலத்துத்தோன்றியவ ரதலால் 'அயோத்திமன்' எனப் பட்டான். பகைவர் பக்கலிலும் அறநெறிதவறாத தருமபுத்திரனது கருணையும், முனிவர் சொல்லைக் கேட்டு அதன்படியொழுகும் விராடனது நற்குணமும், இங்கு வெளியாம். திரிகர்த்தனை இங்ஙனம் விடுத்தது, தழிஞ்சியென்னும் புறப்பொருள் துறை; அது, வலியிழந்தவர்மேற் போர்க்குச் செல்லாமல் அவர்க்கு உதவி செய்து தழுவுவது.

முனி என்ற வடசொல்லுக்கு - (கடவுளை எப்பொழுதும்) தியானஞ் செய்பவன் அல்லது திரிகாலஞானமுடையவன் என்று பொருள்; துங்கம், அங்கம் - வடசொற்கள். சிங்கம் - ஸிம்ஹமென்னும் வடமொழியின் சிதைவு; (யானை முதலிய பெரிய விலங்குகளையும் வதிம்ஸிக்க வல்லதென்று காரணப் பொருள் பெறும். மிருகேந்திரனுகிய சிங்கம் - வீரனுக்கு, நடை வலிமை நோக்குத் தகுதிய காம்பீரியங்களாலும், எளிதிற் பகையழிக்குந் திறத்திலு லும், தலைமையிலுவும் உவமை. இங்கே 'சிங்கமன்னனிகந்தன்' என்றது, இகழ்ச்சி; எதிர்மறையிலுக்கம். அன்றி, தோல்வியுற்ற அவனை 'சிங்கமன் னவன்' என்றது - அவனை வென்றவனென வீமனது பலபராக்கிரமங்களின் மிக்க சிறப்புத் தானேவிளங்கக் கூறியதுமாம். அங்கம் - மதிலுறுப்புக்கள். செல்கென - வியங்கோளீறு, தொகுத்தல். உம்-இறந்தது தழுவியளச்சம். ()

23.—அன்றையிராத்திரி விராடன் அங்கேயே யிருந்தல்.

(இ - ள்.) அவன்-அத்திரிகர்த்தன். போர் அணி படையொடும்-போர்க் களத்துக்கு அலங்காரமான சேனையுடனே, போனபின்-போய்விட்டபின்பு, ரவி குல திலகன் - சூரியகுலத்துத் திலகம்போன்றவனுகிய விராடன், 'மற்று யாரினும் பெரியோன் - மற்றை யெல்லாரினும் பெரியவனுகிய துரி யோதனனது, ஈர் அணி படை - இரண்டாவது [வெருரு] சீர் பெற்ற சேனை, வரும்-இவ்வழியே வருதல் கூடும்', என - என்று எண்ணி,—தனது-தன் னுடைய, தேர் அணி பெருஞ் சேனையை தேர் முதலியவற்றையுடைய அழ கிய பெரிய சேனையை, போர் அணி பட வகுத்து - பெரிய (வியூகமாக) ஒழுங் காக வகைப்படுத்தி, கங்குல்-இராமுழுதும், அங்கு-அங்கேயே [தெற்குப்பக்கத் தில்], இருந்தான் - தங்கியிருந்தான்; (எ - று.)

தோல்வியுற்ற சேனையை இங்கே 'போரணிப்படை' என்றது-இகழ் ச்சி; வீரமின்மை விளக்கிற்று. திலகம் - நெற்றிப்பொட்டு; அது நெற்றிக்கு அழகுசெய்வதுபோல, தான்பிறந்த சூரியகுலத்துக்குச் சிறப்புண்டாக்குபவ னென்க. மற்றி யார் - குற்றிய லிகரம். ராஜராஜ ரதலால், துரியோதனன் 'யாரினும் பெரியோன்' எனப்பட்டான். மற்று-இனியென்றமாம்; அசைபு மாம். ஈரணிப்படை, ஈர்-வினைத் தொகையாய் (டகைவரைப்) பிளக்கவல்ல சேனையுமாம்; ஈர்த்தல் - அரிதல், அறுத்தல், பிளத்தல். 'போரணிப்படை' என்ற தொடர் - போர்செய்தலைத் தனக்கு அலங்காரமாகக்கொண்ட சேனை யென்றும், போர்செய்தற்பொருட்டு (முன்பு) அணிவகுத்துநின்ற சேனையெ ன்றும் பொருள்படும். தேர் மற்றைசசேநாங்கங்கட்கும் உபலக்ஷணம்.

சிறுபான்மை வடசொற்களை அங்ஙனமே பிரயோகித்தலும் இயல்பாதலால், 'ரவிகுலதிலகன்' என்றே கூறினர்; "வந்த குலத்திடைவந்தாருவென்பான்" என்று கம்பர்கூறியதும் காண்க. (பிரயோகவிவேகநூலார் 'தண்டியாசிரியரும் சிந்தாமணியாரும் வடமொழியிற் பிறந்தவண்ணமே 'யுக்தமுமயுக்தமும்' "ராகமாபுரி," "ரவிதுலதிலகன்" என முறையே கூறுதல் காண்க' என்றும், 'நாலடியாரும் தண்டியாசிரியரும் சிந்தாமணியாரும் வடமொழியிற் பிறந்தவண்ணம் முறையே "யோகமனையோர் கேட்பர்" "யுக்தமுமயுக்தமும்" "ரவிதுலதிலகன்" எனத் தற்சமமாகக்கூறினற்போல, யாமும், உருவபேதமென்னுமலை ரூபபேதமென்றும்' என்றுங் கூறியவை நோக்கத்தக்கன.) ()

24.—இதுவும், அடுத்த கவியும் - வடபுறத்துநிரை கவர்தல்.

(இ - ள்.) (பின்பு),—சுயோதனன் - துரியோதனன்,—கெட்ட வெம் படை - மிகவுங் கொடிய அத்திரிகர்த்தசேனை, கெட்டமை - அழிந்துதோல்வியுற்று வந்த செய்தியை, கேளா - கேள்வியுற்று,—எண் திசாமுகங்களும் மூட்ட - எட்டுத்திக்குக்களி னெல்லைகளிலும் ஒலிசென்றுதாக்கும்படி, பேரிகை முழங்க - போர்முரசங்கள் ஆரவாரிக்க,—தொட்ட பைங் கடல் - (சகரசக்கரவர்த்தியின் புதல்வர்) தோண்டிய பசிய கீழ்கடலிலே, சூரியன்—, தோன்று முன்-உதிப்பதற்கு முன்னே [பின்னிரவிலே], தோன்றி-புறப்பட்டு வந்து.—வட்டம் மா. மதில்-வளைவான பெரிய மதிலையுடைய, விராடன் ஊர்-விராடனது நகரத்தை, வட(க்கு)திசை-வடக்குப்பக்கத்தில், உற வளைந்தான்-(சேனையுடனே) நன்கு முற்றுகைசெய்தான்; (எ - று.)

திரிகர்த்தன் தெற்குத்திசை ஆநிரை கவர முயன்ற அன்றைத்தினமே துரியோதனன் விராடநகரத்தில் வடதிசையில் முற்றுகை செய்தானென்க. கெட்ட வெம் - ஒரு பொருட்பன் மொழி. கெட்டமை - இறந்தகாலத் தெரிநிலைவினைப்பெயர். லை-யோதநன் - வடசொல்: நல்ல [தனக்கு வெற்றியைத் தருகின்ற] யுத்தஞ்செய்தலை யுடையவன் என்று பொருள் பெறும். கேளா - உடன் பாட்டு இறந்தகால வினையெச்சம்; இதில் 'ஆ' விகுதியே இறந்தகாலங் காட்டும். தொட்ட, தொடு - பகுதி. பைங் கடல் - பசுமையின் ஈறு போய், நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டு, வருமொழித்துக்கு இனவெழுத்து மிக்கு, முதல் இகரம் ஐகாரமாயிற்று; [நன் - பதவியல்-கூ.] பசுமை, கருமை, நீலம் இவற்றில் ஒன்றற்கு ஒன்று உள்ள சிறு வேறுபாட்டைப் பொரிதெனக் கொள்ளாமல் அபேதமாக்கூறுதல் கவிசமயமாதலால், கருங்கடலை 'பைங்கடல்' என்றார்; இனி, பசுமை - குளிர்ச்சியுமாம். திரிகர்த்தமுகம், பேரிகை, லை-யன் - வடசொற்கள். வட்டம் - வ்ருத்தமென்னும் வடமொழியின் சிதைவு. வட்டம் ஆம் மதில் என்று பிரித்து உரைத்தலுமாம்.

'தொட்டகடல்' என்றதன் விவரம்:—சூரியகுலத்துச் சகரமகாராசன் அசுவமேதயாகஞ் செய்கின்றபொழுது பூமிப்பிரதக்ஷிணத்தின் பொருட்டுச் செலுத்திய குதிரையை, பொறுமைகொண்ட தேவேந்திரன் மாயையால் ஒளித்துக்கொண்டுசென்று, பாதாளலோகத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த

கபில முனிவர்பின்னே கட்டிவைக்க, அவ்வேள்விக்குதிரையை நாடிச்சென்ற சகரபுத்திரர் அறுபதினாயிரம்பேர் பூமிமுழுவதிலுந் தேடிக்காணாது பாதாளத்திற்குப் போகும்பொருட்டுப் பெருவழியாகப் பரதகண்டத்தில் வடகிழக்குப் பக்கத்தில் தோண்டிச்சென்ற பெரும்பள்ளம், பின்பு கங்கை முதலியவற்றின் நீரினால் நிறைந்து லாகரமென்னும் பெயர்பெற்றுக் கடலோடுகூடித் தானும் கடலின்பாற்பட்டது என்பதாம். (“நூறுயோசனை யகலமுமாழமு நுடங்கக், கூறுசெய்தன ரென்பரால் வடகுணதிசையின்,” “சகரர் தொட்ட லாற் சாகரமெனப் பெயர்தழைப்ப, மகரவாரிதி சிறந்தது” என்பன, கம்ப ராமாயணம்.) (உசு)

25.—(இ - ள்.) மன்னவன் - துரியோதனன்,—நாடு எலாம் வளைய - மசசுதேசம் முழுவதுஞ் சூழும்படி, வரூதினி பரப்பி - (தன்) சேனையைப்பரவச்செய்து,—வீளையும் நல் பெரு விளவு எலாம் - விளைகின்ற நல்ல பெரிய நெற்பயிர் முதலிய விளைச்சல்களையெல்லாம், வெம் கனல் கொளுத்தி-வெவ்விய நெருப்பினாற் சுட்டெரித்து,—ஆளையும் மா மணி - அசைந்தொலிக்கின்ற பெரிய மணிகளையுடைய, ஆன் நிரை - பசுக்கூட்டத்தை, கவர்தலும்-கொள்ளைகொண்டு சென்றவளவில்,—ஆயர் - (அப்பசுக்களைக் காத்துநின்ற) இடையர்கள், உளைய - வருத்தமுண்டாக, ஓடி வந்து—, ஊர் புகுந்து-விராட நகரத்தினுட்சேர்ந்து, உத்தரற்கு - உத்தரகுமாரனுக்கு, உரைப்பார் - செய்தி சொல்லுபவராளர்கள்; (எ - று.)—அதனை; அடுத்த இரண்டுகவிகளிற் கூறுகின்றார்.

துரியோதனன் தன் சேனையை விராடநகரின் வடதிசை முழுவதும் பரப்பி, விளைச்சலை சுட்டெரித்து ஆனிரையைக் கவர்ந்தானாக, அச் செய்தியை நகரிலிருந்த உத்தரகுமாரனுக்கு ஆயர்தெரிவித்தனரென்க. உத்தரன் - விராடனது இளையமகன்; (மூத்தமகன்பெயர், சுவேதன்.)‘எல்லாம்’என்னும் பெயர்-‘நாடெலாம் என்பதில்’ “மேனியெல்லாம் பசலையாயிற்று” என்பதிற் போல ஒருபொருளின்பல இடங்குறித்தும், ‘விளைவெலாம்’ என்பதிற்பொருளின் பன்மைகுறித்தும் நின்றது. விளவு - தொழிலாகுபெயர். மணி - பசுக்களுக்குஅலங்காரமாகக் கட்டுவது. வரூதினீ-வடசொல். ஆ-பசு; அதனைப் பரிபாலிப்பவர், ஆயர்; ய் - எழுத்துப்பேறு. உத்தரற்கு உரைப்பார் - நான்கனுருபு, கொடைப்பொருளது. கொளுத்தி - கொளுந்தி யென்பதன் பிறவினை; மெலி வலியாதல், பிறவினைக்குறி. கொளுந்துதல்-நெருப்புப்பற்றுதல்.

26.—இதுவும், அடுத்தகவியும்-இடையர் உத்தரனுக்குச் செய்திகூறல். மூன்று கவிகள் ஒரு தொடர்.

(இ - ள்.) திடன் உடை புயம் மன்னவன் - வலிமையுள்ள தோள்களையுடைய (நமது) அரசன் [விராடன்], குடம் நிறைப்பன குவிமுலை கோநிரை-(இடையர்கள் பால்கறக்கப் பிடிக்கின்ற) குடங்களை நிரப்புவனவாகிய குவிந்த முலைகளையுடைய பசுகளின் கூட்டங்களை, மீட்பான் - (பகைவரினின்று) மீட்டுக்கொண்டு வருதற்பொருட்டு, தென் திசை சென்றான் - தெற்குப்

பக்கத்துக்குப் போனான்; (இப்படிப்பட்ட சமயத்தில்), மாசுணம் கொடியோன் - சர்ப்பத்தின் படத்தை மழுதிய கொடியையுடையவனான துரியோதனனது, அடல் வயம் படை - வலிமையையும் வெற்றியையுமுடைய சேனை, வடதிசை புலம் முழுவதும் - (ஊர்க்கு) வடக்குப் பக்கத்திலிடம் முழுவதும், ஆழியின் - கடல்போல, பரந்தன்று - பரவிற்று; (எ - று.)—அன்மொழி-ஈற்றசை.

தென்புறத்தில் பசுநிரை மீட்கச்சென்ற சமயம் பார்த்து, வடபுறத்து ஆனிரை கவருமாறு துரியோதனன் சேனை பரவிற்றென்றனர். ஆயரென்க. ஒவ்வொருமுலையும் குடங்குடமாகப் பால் சொரியுமென, பசுக்களின் சுரப்பு மிகுதி கூறியவாறு; "சோத்தமுலைபற்றி, வாங்கக் குடநிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்" என்றார் பெரியாரும். மீட்பான் - எதிர்கால வினையெச்சம். (தன் வினையில் 'மீள்வான்' என வரும்.) 'மாசுணக்கொடியோன்' என்றது - அவன் கொடியே அவனது கொடுமையையும், எப்பொழுதும் வக்கிரகதியிற் செல்லுமியல்பையும், நன்றியறிவின்மையையும், நாவிரண்டுடைமையையுங் குறிப்பிக்கு மென்றற்குப் போலும். பாம்புபோலக் கொடியவனென்றபொருளும் தோன்ற, 'மாசுணக்கொடியோன்' என்றார். நிறைப்பன - பலவின்பால் வினையாலணையும்பெயர்; அன் - சாரியை. தெற்கு + திசை = தென்திசை, வடக்கு + திசை = வடதிசை: "திசையொடு திசையும்" என்னுஞ் சூத்திரவிதி. 'முழுது' என்பது - எஞ்சாமைப் பொருளுணர்த்துவதோர் குறிச்சொல்லாம்; அது, 'முழுவது' என விரித்தல் விகாரமாயிற்று. பரந்தன்று-வினைத்திரிசொல்; ஐ - சாரியையுமாம். (உசு)

27.—(இ - ள்.) வேந்தன் மா மதலாய் - விராடராஜனது சிறந்த குமாரனே! —(துரியோதனனது), நாட்டில் உள்ளன - (நமது) தேசத்திலுள்ளவையாகிய, பலன்களும் - (தானியம் முதலிய) விளைபயன்களையும், கவர்ந்தனர் - அபகரித்துவிட்டார்கள்; நறுந் தண் காட்டில் உள்ளன - (நாட்டையடுத்த) நல்ல [செழித்த] குளிர்ச்சியான காட்டில் உள்ளவையாகிய, சுரபியின் கணங்களும்- பசுக்களின் கூட்டங்களையும், கவர்ந்தார் - கொள்ளைகொண்டார்கள்; இனி - இங்ஙனங் கொண்டுபோனபின்பும், நீ—, கூட்டில் உள் உறை கலுழனின் குஞ்சுபோல் - (வெளிப்பட்டுத் தன்பலமையாகிய பாம்புகளை வெல்லாமற்) கூட்டினுள்ளே அடைந்துகிடக்கின்ற கருடப்பறவையின் குஞ்சு போல, வீட்டில் உள் உறைகின்றது - வீட்டிற்குள்ளேயே வாசஞ் செய்துகொண்டிருக்கின்றது, என் - என்னே? (எ - று.)

பறவைக்கரசனாகிய கருடன் பாம்புகளை அழிக்குமாறுபோல பாலகுமாரனாகிய நீயும் வெளிப்பட்டு வந்து பாம்புக்கொடியோனாகிய துரியனை அழிக்கவேண்டாமோவென்றார்; உவமையணி. மேல் 'மாசுணக்கொடியோன்' என்று பகைவனைக்குறித்து, இங்கு 'கலுழனின் குஞ்சுபோல்' என்று உத்தரனுக்கு உவமைகூறியது - உன்தந்தையைப்போலவே உன்னையுங் கண்டமாத்திரத்திலே அப்பகைவர் ஒடுங்கியொழிவரென்று குறிப்பித்து உத்தரனை உற்சாகப்படுத்துதற் பொருட்டென்க.

பலன் - போலி. கலுழன் - கருடனென்ற வடசொல்லின் விகாரம். குஞ்சு - இளமைப்பெயர்; என் - எவனென்னும் அஃறிணையிருபாற்பொது வினாவினைக் குறிப்புமுற்றின் விகாரம். மதலாய்-மதலையென்பதன் விளி; ஈறு திரிந்தது, விளியுருபு. பலன்களும், கணங்களும் என்ற உம்மைகள்-முறையே எதிரது தழுவிய எச்சமும், இறந்தது தழுவிய எச்சமுமாம்; எண்ணும்மைகளாக்கொள்ளலாகாது: வெவ்வேறுவாக்கியங்களில் வந்ததனால். லை-ராடி, கணம்-வடசொற்கள். வீட்டில் உள் - அரண்மனையில் உள்ளிடமாகிய (மகளிர் வசிக்கின்ற) அந்தப்புரத்திலே யென்றபடி. 25-ஆஞ்செய்யுளில் 'வினைவெலாம் வெங்கனல் கொளுத்தி' என வந்ததனால், 'கவர்ந்தனர்' என்றது, 'உயிர்கவர்ந்தனர்' என்றவிடத்துப் போல ஒழித்தன வென்றவாறும். உறைகின்றது - நிகழ்காலத்தொழிற்பெயர். (உஎ)

28.—சுதேஷ்ணை மகளிரை நகர்ப்புறங் காவல்செய்யச் சொல்லுதல்.

(இ - ள்.) என்ற போதில் - என்று (இடையர்) சொன்னபொழுது,—அ புதல்வனை பரிவுடன் ஈன்றாள் - அவ்வுத்தரகுமாரனை அன்போடு பெற்று வளர்த்த (விராடன்மனைவியாகிய) சுதேஷ்ணையானவள்,— நிரை நிரை நின்ற மங்கையர்தங்களை நோக்கி - வரிசைவரிசையாகத் (தனது அருகில்) நின்ற பரிசனப்பெண்களைப்பார்த்து, 'சென்ற காவலன் வரும் துணை - (நிரை மீட்டற்குத் தெற்குப்பக்கம்) போன (நமது) அரசன் திரும்பி வந்து சேருமளவும், (நீங்கள்), செம் கையில் படை கொண்டு - சிவந்த கைகளிலே ஆயுதங்களை ஏந்திக்கொண்டு, ஒன்ற-ஒருசேர, [கூட்டமாக], எகி - போய், நம் எயில் புறம் காமின் - நமது (நகரத்து) மதிலைச் சுற்றிலும்இருந்துபாதுகாவல்செய்யுங்கள்', என்று—, உரைத்தாள் - கட்டளையிட்டாள்; (எ - று.)

சுதேஷ்ணை வேறுவகையில்லாமையால் மகளிரைக் காக்குமாறு கூறினாள்: அக்காலத்துமகளிரும் வீரமுள்ளவராயிருந்தமை இதனாற் பெறப்படும். (சத்தியபாமை ஸ்ரீகிருஷ்ணனுக்குத் தேரூர்ந்தமைமுதலியன இங்குக்கருதத்தக்கன.) தந்தைக்கு மூத்தமகனிடத்தும் தாய்க்கு இளையமகனிடத்தும் அன்பு மிதிர்ந்திருப்பது இயல்பாதல் தோன்ற, 'அப்புதல்வனைப் பரிவுட னீன்றாள்' என்றார். போது - பொழுது :மரூஉ.நிரை நிரை-அடுக்கு, பன்மைகுறிப்பது. இனி,நிரை நிரை நோக்கி-முறையாகப் பார்த்து என்றலு மொன்று. கை சிவந்திருத்தல், உத்தமவிலக்கணம்; சுதேஷ்ணையின் மெய்க்காவலாகப் படைக்கலம் பிடித்தலாற் சிவந்த கை யெனினுமாம். (உஅ)

29.—இதுவும், அடுத்தகவியும் - குளகம்; உத்தரன் யான்சென்று பொருது பகைவரைவெல்வே னென்றதைத் தெரிவிக்கும்.

(இ - ள்.) உரைத்த அன்னையை-(இவ்வாறுமகளிரைநோக்கிச்) சொன்ன (தனது) தாயை, உத்தரன்—, கதுமென வணங்கி-விரைவாக நமஸ்கரித்து, 'நரைத்த ஓதி - வெளுத்திருக்கின்ற கூந்தலையுடையவளே! நின் திருமொழி நன்று - நீ இப்பொழுது சொல்லிய மேன்மையுள்ள வார்த்தை நன்றாயிருக்

கின்றது!' என - என்று சொல்லி, நகையா - பரிகாசமாகச்சிரித்து, அரைத்த ஆரமும் - அரைத்தசந்தனக் குழம்பையும், ஆரமும் - முத்துமாலைகளையும், மாலையும்-பூமாலைகளையும், அணிந்து —, என் வரை தட புயம் வளர்த்தது-என்னுடைய மலைபோன்ற [வலிய] பெரிய தோள்களைவளர்த்தது, மகளிர் போர் பொரவோ - (பகைவரோடு யான் போர் செய்யாமற்) பெண்பாலார், (சென்று) யுத்தஞ் செய்தற்காகவோ? (எ - று.)—இச்செய்யுளில் 'நகையா. என்ற எச்சம், அடுத்த செய்யுளில் 'என்றான்' என்ற முற்றைக் கொள்ளும் யான், எனது வளர்ந்த வரைத்தடந்தோள்களாற் பொரவேண்டாவோ? பொருது வெற்றி பெறவேண்டாவே? என்றான்.

கதுமென-விரைவுப்பொருளைத் தருவதோர் இடைச்சொல். ஓதிபெண் மயிர்; இங்கு அதனையுடையவளுக்குச் சினையாகுபெயர். நரைத்த ஓதி-அடையடுத்த ஆகுபெய ரென்க. 'நரைத்த ஓதி' என்ற பெயர் - இங்கு அண்மைவினி யாதலின், இயல்பாயிற்று. நகையா - உடன்பாட்டெச்சம். நன்று-இகழ்ச்சிக்குறிப்பு; நன்றன் றென்றபடி. இங்குக் கூறிய நகை, இகழ்ச்சி பொருளாக ஈரத்தெழுந்த வெகுளிநகை. ஆரம் - ஹாரமென்னும் வடமொழியின் விகாரம். ஓ - விலைவகையால் எதிர்மறை. வரையென்னுங் கணுவின்பெயர் - அதனையுடைய மூங்கிலுக்குச் சினையாகுபெயராய், அதுபின்பு அதனையுடைய மலைக்குத் தானியாகு பெயராதலால், இரு மடியாகு பெயர். தோளுக்கு மலை யுவமை - பகைவர் படைக்கலங்களால் ஊறடையாத திண்மைக்கும், பருத்தோங்கிய வடிவிற்கும்.

30.—(இ - ள்.) கனை கடல் படையுடன் - ஆரவாரஞ்செய்கின்ற கடல் போன்ற சேனையோடு (வந்து), நிரை கணம் கவர்ந்தவரை - (நமது) பசுக் கூட்டங்களைக் கொள்ளைகொண்ட துரியோதனாதியரை, முனை - போர்க்களத்தில், பட - அழியும்படி, பொருது - (யான் ஒருவனே போய்ப்) போர்செய்து, இமைக்கும் முன் - ஒருமுறை கண்ணிமைக்கும் பொழுதைக்கு முன்னமே [மிகவிரைவில்], முதுகு கண்டிடுவேன் - புறங்கொடுத் தோடச்செய்வேன்; (ஆனால்),—வினை முகத்தினை அறிந்து - போர்த்தொழிலின் தன்மையைத் தெரிந்து, (அதற்கு ஏற்ப), தேர் - தேரை, விசையுடன் விட - வேகமாக நடத்துவதற்கு, என் நினைவொடு ஒப்பது ஓர் சாரதி-என்மனத்தோடொத்த தன்மையையுடைய ஒரு பாகன், நேர்ந்திலன் - (இப்பொழுது எனக்குக்) கிடைத்தானில்லை, என்றான் - என்று சொன்னான்; (எ - று.)—என் நினைவிற்கு ஏற்ற சாரதிமாத்திரங்கிடைப்பனையின், உடனே பொருது வெல்வே னென்றபடி.

பின்னே 'கணம்' என வருதலால் 'நிரை' என்றது, பசுவென்ற மாத்திரமாய் நின்றது; படையுடன் படவென்றுங் கூட்டலாம். நேர்ந்திலன்-எதிர்மறையாண்பாலிறந்தகால முற்று; தன்மை யொருமை முற்றாய், சாரதியைப்பெற்றிலே னென்றவா மொன்று. பொருது என்ற எச்சத்தில், பொரு-பகுதி. கடற்படை - உவமைத்தொகை. (கூ0)

31.—பிருகந்நளை தோல்வெறுத்தவல்ல ளென்று விராதகாரணி கூறுதல்.

(இ - ள்.) உத்தரன் புகல் உறுதி கேட்டு - (இவ்வாறு) உத்தரகுமாரன் சொன்ன உறுதிமொழியைக் கேட்டு,—ஒப்பனைக்கு உரியாள் - (சுமேதட்டி ணைக்குப் பலவகை) அலங்காரமுஞ் செய்தற்கு உரியவளாகிய (விபத்சாபணி யென்னும் பெயர்பூண்ட) திரௌபதி,—கொதது அரம் பொரு கூர் அயில் குமரனை - நிரண்ட அரமென்கிற வாள்விசேடத்தால் அராவப்பட்ட கூரமை யுள்ள வேலாயுதக்கரத்தையுடைய உத்தரகுமாரனை, குறுகி - சமீபித்து,—'இவள்—, விசயனுக்கு - அருச்சுனனுக்கு, வித்தாரம் பெறு தேர் விடும் - பரப் பமைந்த தேரைச செலுத்துவாள்', என்று-என்று சொல்லி,—அ தரம் பெறு பேடியை - அப்படிப்பட்ட வல்லமையைப்பெற்ற பிருகந்நளையை, காட்டி னள் - காண்பித்தாள்; (எ - று.)—அன்றே - ஈற்றசை; அப்பொழுதே யெனினுமாம்.

உரியாள் கேட்டு குறுகி என்று காட்டினள் என இயையும். புகலுறுதி இரங்தகால விசேடத்தொகை. உறுதி - உறுதியை வெளியிடுகின்ற மொழிக்கு, காரியவாகுபெயர். கொத்தரம் பொரு கூரயில்—"வாளரம் துடைத்த வை வேல்" என்றார் சிந்தாமணியாரும். குமரன் - குமரன் என்பதன் விகாரம்; மன்மதனையும் குற்சிதரூப முடையவனுக்களல்ல கட்டழகுடைய னென்பது பொருள்: கு-குற்சிதம். மாரன் - மன்மதன்; முருகக்கடவுளின் பெயராகிய இது - அழகு முதலியவற்றில் அக்கடவுள்போலச சிறந்து மைந்தனுக்கு வழங் கும்; உவமையாகுபெயர்: 'சேய்'என்னுந்தமிழ்மொழிபோல. இவள்தேர்விடும்- செய்யுமென்முற்று, பெண்பாலுக்கு வந்தது; [நன் - விசே - உகூ.] வித்தரம்- விஸ்தார மென்ற வடசொல்லின் திரிபு. பெண்ணுறுப்புமிக்கிருத்தலால், 'இவள்' எனப் பெண்பாலாற் கூறினர். "பெண்மைவிட்டாணவாவுவ பேடா ன்பால், ஆண்மைவிரி லில்லதவாவுவ பேடுபாலே, இருமையு மம்மினையன் னவுமாகும்" என்ற நன்னூற்சூத்திரங காண்க. "ஏயேயிவளொருத்தி பேடி யோ" என்றார் சிந்தாமணியாரும். 'பேடி - பெண்ணியல்புமிக்கு ஆணியல்பு முடையவள்' என்பது, திருக்குறள் பரிமேலழகருரை.

விசயன் - விஜயன் என்னும் வடமொழியின் திரிபு; இதற்கு - விசேஷ மான வெற்றியை யுடையவனென்று பொருள். இராஜசூயயாகத்திற்காக வடக் கிற்சென்று பல அரசர்களை வென்றதனாலும், காண்டவதகனகாலத்துத் தேவர் களைச் சயித்ததனாலும், பாசுபதம் பெறுங்காலத்துப் பரமசிவனை யெதிர்த்து விற்கழுந்தால் முடியிலடித்ததனாலும், பின்பு இந்திராதி தேவர்க்கும் வெல்ல முடியாத நிவாதகவசர்காலகேயர்களை வதைத்ததனாலும், மற்றும் பல வெற்றிகளாலும், இவனுக்கு இப்பெயர் அமைந்தது. இனி, விஜயன்-தன்னைச் சயிப்பாரெவருமில்லாதவ னென்றும் பொருள் கொள்வர். இங்கு அருச்சுனனை 'விசயன்' என்ற பெயராற் குறித்தது - எப்பொழுதும் வெற்றியையே பெறு பவனை அவனுக்குத் தேர்செலுத்தி யுதவியவளாதலால், இவள் உடன்செல் லுதல் வெற்றியைவிளக்கு மென்று குறிப்பதற்கு. (உக)

32.—சுதேட்டிணையினிடம் வண்ணமகள் கூறியதை உத்தரான் சொல்ல, சுதேட்டிணை பேடியைநோக்கி, நீ தேரோட்ட நேர்ந்தால் உத்தரான் போரிவெல்வானெனல்.

(இ - ள்.) என்ற போது - என்று (விராடசாரணியென்ற வண்ணமகள்) சொல்லியபோது, அவன் - அந்த உத்தரகுமாரன், பயந்தவட்கு - (தன்னைப்) பெற்ற தாயினிடம், இயம்பியது உரைப்ப-(வண்ணமகள்)கூறியதைத் தெரிவிக்க,—நிரை வளை-வரிசையாக அமைந்த வளையல்களை யணிந்த அந்தச்சுதேட்டிணை,—நின்ற பேடியை-அங்கிருந்த பிருகந்நளையென்னும்பேடியைக் கிட்டி, தழுவி—, 'துன்று தாரினுய் - நெருங்கிய மாலையை யணிந்தவளே! நீ—, —நேரில் (சாரத்தியஞ்செய்ய) உடன்பட்டாயேயானால், விடலை - (என்) புதல்வன்,—போர்முனை - போர்க்களத்தில், அரசரை - மாற்றரசரை, வென்று - ஜயித்து, வெய்து ணண்டும் - விரைவில் மீண்டுவந்திடுவான்,'என-என்று, வியந்து - (அப்பேடியைக்)கொண்டாடி; இன்னவைசான்றாள் - இவ்வாறான வார்த்தைகளைக் கூறினாள்; (எ - று.)

நிரைவளை - அன்மொழித்தொகை. பயந்தவட்கு - வேற்றுமைமயக்கம். விடலை - ஆண்பாற் சிறப்புப்பெயர். விடலை ணண்டும் - செய்யுமென்முற்று ஆண்பாலுக்குவந்தது. வெய்து - வெம்மையென்ற பண்பினடியாகப்பிறந்த குறிப்பு முற்றெச்சம் வினையுரியாய் வந்தது. இன்னவையென்பது-கீழ்க்கூறிய வற்றைச் சுட்டிற்று. இது செருகுகவியென்பர் ஒருசாரார். (உ)

33.—பிருகந்நளை தேர்செலுத்த, உத்தரன் போர்க்குச் செல்லுதல்.

(இ - ள்.) பேடி - பிருகந்நளை, வாசியில் - குதிரைகளுள்ளே, நல்லன நான்கு அவை - நல்லிலக்கணமைந்தனவாகிய நான்கு குதிரைகளை, நாடி - தேடி அறிந்து, பூட்டி - நுகத்தடியிற் சேர்த்துக்கட்டி, தேர் விட - தேரைச் செலுத்த,—சுதேட்டிணை பிள்ளை-சுதேஷ்ணையினது புத்திரனாகிய உத்தரனெனவன்,—சிலை முதல் - வில் முதலியனவாகிய, ஆயுதம் அவை - ஆயுதங்களை, தேடி தெரிந்து - ஆராய்ந்து அறிந்து, கொண்டு - (நல்லனவாக) எடுத்துக் கொண்டு,—கோடி கோடி பைங் கோதையர் - பசுமையான [காரிய] கூந்தலையுடைய அநேககோடி மகளிர், குழீஇயினர் வாழ்த்த - திரண்டு வாழ்த்துக் கூற,— சென்றனன் - (போர்க்குப்) புறப்பட்டுப் போனான்; (எ-று.)

இதுமுதல் உத்தரதிசை நிரைமீட்சி கூறுகின்றார். 'தேடியாயுதஞ்சிலை முதல் தெரிந்தவைகொண்டு' என்றதையும் பேடியின்செயலாக உரைக்கலுமாம். 'நான்கவை' 'ஆயுதமவை' என்றவற்றில், 'அவை' - பகுதிப்பொருள் விகுதி. பைங்கோதை - குளிர்ச்சியான கூந்தல்: பசியமாலையாகவுமாம். 'கூந்தலுக்குப் பசுமையாவது எண்ணெயிட்டு வாரி மயிர்ச்சாந்துதடவப்பெற்று அழகுகுறையாமை' என்பர் ஒருசாரார். பிள்ளை-இளமைப்பெயர். நல்லன - பலவின்பாற்பெயர். குழீஇனர் - முற்றெச்சம்; குழுவினரென்பது, சொல் விகாரப்பட்டு அளபெடுத்தது: சொல்லிசையளபெடை. ஐ-தேஷ்ணை, வாஜி, ஆயுதம், கோடி - வடசொற்கள். கோடி கோடி-மிகப்பல என்றவாறு. (ஊ)

34.—உத்தரன் தனது நகரத்து வடபுறஞ் சேர்தல்.

(இ - ள்.) துலங்கு பேர் ஒளி அருக்கனில் - விளங்குகின்ற மிக்க ஒளியையுடைய சூரியன்போல, உருத்து எழு - மிக்கு விளங்குகின்ற, தோற்றத்து - காட்சியையும், அலங்கல்-(நிரைமீட்டற்குரிய கரந்தைப்பூ) மாலையையுமுடைய, உத்தரன்---,— இலங்கும் நேமி ஒன்று உடைய தேர் என்னல் ஆம் - விளங்குகின்ற ஒற்றைச்சக்கரத்தையுடைய (சூரியனது) இரதமென்று (ஒப்புமை)சொல்லத்தக்க,தேர்மேல்-சிறந்ததொரு தேரிலே(ஏறி),—விலங்கல் மா மதில்களும் - மலைபோலுயர்ந்த பெரிய மதில்களையும், புறம் வீதியும் - (நகரத்தின்) வெளிவீதிகளையும், கடந்து - தாண்டி, உத்தரதிசையை-(அந்நகரத்தின்)வடக்குப்பக்கத்தை, வந்து அடைந்தான்—;(எ - று.)

'உத்தரனுத்தரதிசையை வந்தடைந்தான்' என்ற இடத்திற் சொற் சமத்காரங் காண்க; உத்தரதிசையையடைதற்கு உரியவன்உத்தர னென்பது போதரும்.அருக்கனில் உத்தரன்உத்தரதிசையை யடைந்தான் என்று இயைத்து, இலங்குநேமியொன்றுடைய தேரிலேறித் துலங்குபகலொளியருக்கன் (உத்தராயணத்தில்) வடபுறஞ்செல்லுதல்போல, உத்தரன் தேர்மேல் உத்தரதிசையை யடைந்தானென்று; கருத்துக் காணலாம். சூரியனது தேர் - மிகவிரைந்து செல்லுதற்கு உவமை; "ஒற்றைத்தனி யாழித்தேரென்ன வோவுவதோர், கொற்றநெடுந்தேர்" என்றார்,பிறரும். சூரியனது தேர் லம்வத்வரூபமான ஒற்றைச்சக்கரத்தை யுடையதென்று புராணம்கூறும். விலங்கல் என்ற பெயர்க்கு - (ஊர்க்குஒருபுறமாக) விலகிநிற்பது என்று காரணப்பொருள்; அல் - கருத்தாப்பொருள்விகுதியாம்; திருக்குறளில், "வாய்ந்தமலை" என்ற இடத்தில் பரிமேலழகர் இடையதன்றி ஒருபுடையதாதலை மலைக்கு வாய்ப்பென்றமை காண்க. மதிலுக்கு - உயர்விலும் எளிதில் அழிக்கப்படாத வலிமையிலும்,அரணுய்ப் பாதுகாத்தலிலும் மலைஉவமை. வீதி, நேமி, அர்க்கன், உத்தரதிஸா - வடசொற்கள். அருக்கனில், இல் - ஐந்தனுருபு, ஒப்புப்பொருளது. ஆங்கு - அசை. (நச)

35.—உத்தரன் துரியோதனனது சேனையைக் காணுதல்.

(இ - ள்.) எண் கொளா மனத்து-(சேனையின் தன்மை இன்னதென்று) ஓர் எண்ணத்தைக் கொள்ளாத மனத்தையுடைய, இராகவன் திரு குலத்து இளைஞன் - ஸ்ரீராமபிரான் திருவவதரித்த சிறந்த சூரியகுலத்துத் தோன்றிய சிறுவனை உத்தரகுமாரன்,—கண் கொளா வகை புகுந்து - (காண்பவர்) கண்களுக்கு எட்டாதபடி [மிகவிரைந்து] சென்று,—(அங்கே),—விண் கொளா மதி - ஆகாயத்தில் தோன்றுத [பூமியில் தோன்றிய தொரு] சந்திரனையும், மேன்மை கொள் மீன் இனம் என்ன - (அச்சந்திரனைச்சூழ்ந்த) மேன்மைபெற்ற நட்சத்திரக்கூட்டங்களையும் போல, மண் கொளா விறல் மன் - பூமிமுழுவதிலும் அடங்காத வீரத்தன்மையையுடைய துரியோதன ராசனையும், உடை வரம்பு இல் வான் படையை - அவனைச் சூழ்ந்துள்ள அளவில்லாத பெரிய சேனையையும், தன் கண் உற கண்டான் - தன் கண்களுக்கெதிரில் [பிரதியட்சமாக] பார்த்தான்; (எ - று.)

தேவாசுரயுத்தம் இராமராவணயுத்தம் போன்ற யுத்தங்களைச் சித்திரத்திலே கண்டு, 'சேனை இங்ஙனமே யிருக்கும்: அதனைத் தான் மிக எளிதில் அழித்துவிடலாம்' என்று கருதிப் போர்க்குவந்தவ ஞதலால், உத்தரன் 'என்ன கொளாமனத்து இளைஞன்' எனப்பட்டான். கண் கொளாவகை கண்டா னென இயைத்து-கண்களின்பார்வைசெல்லுமளவுக்கு மேலுஞ் சேனைபரந்து கிடத்தலால், கண்களுக்கு எட்டாதபடியாற் கண்டா னென்றுமாம். 'விண் கொளா' என்னும் அடைமொழியை மீனினத்தோடுங் கூட்டுக. விண் கொளா மதி - துரியோதனனுக்கும், அவ்வாருன மீனினம்-படைத்தொகு திக்கும்-இல்பொருளுவமை.மதி-நன்குமதிக்கப்படுவ தென்று காரணப்பொ ருள் பெறும்.' மீன் - மின்னுவது; விளைமுதற்பொருள்விகுதிபுணர்ந்து கெட் டுப் பகுதி முதல்நீண்டுநின்ற காரணப்பொதுப்பெயர். என்ன-உவமவுருபு.

'மண்கொளாவிறன் மன்' என்பதற்கு - மண்ணுலகத்துள்ளாரில் எவ ரும் அடையாத வலிமையைத் தான் உடைய மன்ன னென்றும் பொருள் கொள்ளலாம்: பதினாயிரம்யானைபலங் கொண்டவ ஞதலால், 'மண்கொளா விறல்மன்' என்றார். 'மண்கொளாவிறல்' என்றது - அதிசயோக்திவகையால் துரியோதனனது வீரத்தைச் சிறப்பித்தது. இனி, 'மண்கொளா' என்ற தைப் படைக்கு அடைமொழியாக்கிப் பூமிமுழுவதிலும்-அடங்காத சேனை யெனினுமாம். நான் கடியிலும், 'கொளா' என்பது - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; 'கொள்ளா' என்றதன் தொகுத்தல்.

ராகவன் என்ற பெயர்க்கு - ரகுமகாராஜனது வம்சத்தில் அவதரித்தவ னென்பது பொருள்: வடமொழித் தத்திதாந்தநாமம். சூரியகுலத்தவனுகிய இவ்வரசன் - திக்கு விசயஞ்செய்து எல்லாத்தேயங்களையும் வென்று 'விசுவ ஜித்' என்னும் வேள்வியை இயற்றி அதில் தன்செல்வமுழுவதையும் வழங்கி விட்டு வெறுங்கையனுயிருக்கையில், கௌத்தனென்னும் பிராமணன் வந்து தன் குருவாகிய வரதந்துமகாமுனிவனுக்குத் தான் குருதக்ஷிணை கொடுத்தற் பொருட்டு மிக்கபொருள்வேண்டு மென்று யாசிக்க, அப்பொழுது குபேரனி டத்திலிருந்து வேண்டும்பொருள் தானே வரப்பெற்று அந்தக்கௌத்தனுக் குக் கொடுத்தான்: இப்படி இவன் மிக்க வீரமும் கொடையு முடையவனுய்ப் பிரசித்தி பெற்றவ ஞதலால், இவன் மரபிற்பிறந்தவ னென்று இராமபிரா னைக் குறித்தார்; இவன் பெயரால் இக்குலம் ரகுகுலமென்று வழங்கப்படு வதைக்கொண்டும், காளிதாசமகாகவி வடமொழியில் இவன் பெயரால் 'ரகு வம்சம்' என ஒருகாவியஞ் செய்திருத்தலைக் கொண்டும், இவ்வரசனது பெருமையை நன்கு உணரலாம். (கூடு)

36.—அதுகண்ட மாத்திரத்தில் உத்தரன் நடுநடுங்கி மூர்ச்சித்தல்.

(இ - ள்.) மை நெடுங் களிறு-கரிய பெரிய ஆண்யானைபோன்ற, உரன் உடை - வலிமையையுடைய, விராடர் கோன் - விராடதேசத்தார்க்கரசனது, மைந்தன்-குமாரனுகியஉத்தரன்,—(அந்தத் துரியோதனன் படையைக்கண்ட மாத்திரத்தில் அச்ச மிகுதியால்), கருத்து அழிந்து - மனங்கலங்கி, நா புலர்ந்து - நாக்கு வறண்டு, உயிர்ப்பு மேல் விஞ்சி-பெருமூச்சு மேன்மேலும் அதிக

மாகப்பெற்று, கை நடுங்கவும்-கைகள் நடுக்கமடையவும், கால் நடுங்கவும் - கால்கள் நடுக்கமடையவும், மெய் நடுங்கவும் - உடம்பு நடுக்கமடையவும், சொல் நடுங்கவும் - வார்த்தை தடுமாறவும், சுடர் முடி நடுங்கவும் - ஒளியையுடைய கிரீடம் நடுங்கவும், சோர்ந்தான்-தளர்ந்தான் [உணர்வழியலாஞன்].

இதுவரையிற் காணுத காட்சியைக் காணவே, உத்தரனுக்குப் பேரச்சமுண்டாயிற்றென்க. கைந்நடுங்குதல் முதலியன-அச்சத்தின்செயல்கள்.முடி-முடியிற் கவிக்கப்படுவது; கிரீடத்திற்குக் காரணப்பெயர். களிறு - ஆண்பாற்பெயர்; களி-மதக்களிப்பு: அதனையுடையதுகளிறுஎனக்காரணப்பெயர். (யானையின் பெண்மைப்பெயர் - பிடி.) 'கருத்தழிந்து' என்றதை மெய்ந்நடுங்குவதற்கும், 'நாப்புலர்ந்து, உயிர்ப்புமேல்விஞ்சி' என்றவற்றைச்சொல்நடுங்குவதற்கும் காரணமாக்கி யுரைப்பாருமுளர். களிறு-யானைச்சேனையையுடைய என்றலு மொன்று. உரன் - உரமென்பதன் ஈற்றுப்போலி. உரன் என்றதில், தேகபலம் மனோபலம் ஆயுதபலம் சேநாபலம் முதலிய பலவகைஇலிமைகளும் அடங்கும். (இரண்டாமடியில், யகரவொற்று இடைவந்தஆகாதுகைகாண்க. பொதுநகரத்துக்கும் சிறப்புனகரத்துக்கும் வரிவடிவில் மிக்க வேறுபாடு இருப்பினும், ஒலிவடிவில் மிக்க வேறுபாடு இல்லாமைபற்றி,மூன்றுமடியில் னகரம் எதுகையாய் நின்றது.) (நகூ)

37.—இதுவும், அடுத்தகவியும் - பிருகந்நளை உத்தரனுக்குத் தேறுதல் கூறுதலைத் தெரிவிக்கும்.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (அப்பொழுது உத்தரனைநோக்கிப் பேடி),—'மறவோய்-வலிமையை யுடையவனே! நீ—, அஞ்சல் அஞ்சல் - பயப்படாதே பயப்படாதே; பகைவரை ஆர் உயிர் அடுதல் - பகைவர்களை அரியஉயிரழியச் செய்தலும் [கொல்லுதலும்], தஞ்சல்-(தாம்) இறத்தலும், என்ற இவை இரண்டுஅலால்-என்ற இவ்விரண்டு தொழில்களுள் ஒன்றல்லாமல், வேறு துணிவுஉண்டோ-(போர்க்கு வந்தவர்கட்கு) வேறொரு உறுதி உள்ளதோ? [இல்லை]; வெம் சமம் தனில் வந்து - கொடிய போர்க்களத்திற் புகுந்து, புண் படாது - விரணப்படாமல், இனி—, மீண்டால் - திரும்பி வாளாசென்றால், வஞ்சம் நெஞ்சு உடை வஞ்சியர் - வஞ்சனையுள்ள மனத்தையுடைய வஞ்சிக்கொடிபோலுமெல்லியலாரான மாதர்கள், என்சொலார்-என்சொல்லி இகழமாட்டார்கள்?(எ-று.)

கீழ் இவன் மகளிர்முன்னிலையில் வீரவாதங்கூறிவந்ததனால், 'வஞ்சியரென்சொலார்' என்றுளென்னலாம். மகளிரும் பரிகசிப்பரெனவே, ஆண்மக்கள் பரிகசிப்பரென்பது கூறுதே அமையும். துணிவு வேறுண்டோவென்றது-மீண்டுபோவது துணிவன்றென்பதைத் தெரிவிக்கும். வெல்லும்ஆற்றல் இலையேனும் முகத்திலும்மார்பிலும் விழுப்புண்பட்டாயினும் மீண்டால் ஊறஞ்சாமைவிளங்கு மென்றற்கு, 'புண்படாது மீண்டாலென்சொலார்' எனப்பட்டது. மகளிர் திரிகரணமும் வேறுபட அறியவொண்ணுத நெஞ்சாழமுடையராதலால், அவர்க்கு 'வஞ்சநெஞ்சுடை என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது; "ஆழாழியென்ன வளவுபடா வஞ்சநெஞ்சப், பாழான மாதர்" என்றார்

பின்னேரும். 'வஞ்சியர்'என்ற சொல்-வஞ்சமுடையராதல்பற்றி அவர்க்குஇப் பெயர் அமைந்ததுபோலு மென்ற கருத்துத் தொனிக்க நிற்கும். 'மறவோய்' என்றுவிளித்தது, உத்லாறை முண்டாக்குதற் பொருட்டு. அஞ்சல்-எதிர்மறை யேவலொருமைமுற்று; வியங்கோளாகவுங் கொள்ளலாம்; தேற்றத்தில் அடுக் கிற்று. இறத்தலை 'துஞ்சல்' என்றது-மங்கல வழக்கு; மீளவும் எழுந்திராத பெருந்துக்க மென்க. என்றிவை - பெயரெச்சவீறு தொகுத்தல். சமம்-ஸமர மென்னும் வடமொழியின் விகாரம். (கூஎ)

38.—(இ - ள்.) (நீ),—நிலையும் - (போரில்) நிற்கும் நிலைமையும், முட் டியும் - கையில் ஆயுதங்களைப் பிடிக்குந் தன்மையும், நிலை பெற - உறுதியா யிருக்கும்படி, நின்று - (தைரியத்தோடு) நின்று,—திண் சிலை-வலிய வில்லை, நேர் பட - செவ்வையாக, வளைத்து-வணக்கிநாணேற்றி, சில் சில வெம் சிலீ முகம் தொடுத்து - சிலசில கொடிய அம்புகளை எய்து,—மலை இலக்கு என - மலை ஒப்பென்னும்படி [சிறிதுஞ்சலியாமல்],யாரையும்-எவரையும், மலைந்திடு-எதிர்த்துப் போர்செய்; மலைந்தால்-(இவ்வாறு) பொருதால், அலை கடல் புவி அரசரில் - அலைகின்ற கடலாற் சூழப்பட்ட பூமியிலுள்ள அரசர்களுள், எதிர் நிற்பார் - (உன்) எதிரில் நிற்க வல்லவர், ஆர்-யாவருளர்? [எவருமில்லையென் றபடி]; (எ - று.)-- எல்லாரும் புறங்கொடுத்துப் போய் விடுவ ரென்பதாம்.

இதனால், அருச்சுனன் சிறிது தேறிய உத்தரனுக்குத் தைரியத்தை யூட்ட முயல்கின்றான். நிலை - போரில் வில்வளைத்து அம்பினை எய்வார்க்கு உரிய நிலை: அது - பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம் என நான்கு வகைப்படும்: அவற்றுள், ஒருகால் நிலை நின்று ஒருகாலை முடக்கல்-பைசாசநிலை; இருகாலும் பக்கல்வளைய மண்டலித்தல் - மண்டலநிலை; வலக் கால் மண்டலித்து இடக்கால் முந்துறல் - ஆலீடநிலை; வலக்கால் முந்துற்று இடக்கால் மண்டலித்தல்-பிரத்தியாலீடநிலை. முட்டி-கைப்பிடி: முஷ்டியென் னும் வடமொழியின் திரிபு. நேர்படத் தொடுத்து என்று இயைத்து - பகை வர்க்கு எதிராக அம்புதொடுத்து என்றலும் அமையும். 'மலையிலக்கென' என் றதற்கு - மலையே (எமது அம்புக்கு ஏற்ற) குறியாவது என்று எண்ணி யென வும் உரைக்கலாம்; இக்கருத்து, செருக்கிலுலாவது. சிலீமுகம் - கூர்மையை முகத்திலுடைய தென்று அம்புக்குக் காரணப் பெயர்; வடசொல். உம்மை - முற்று; உயர்வுசிறப்புமாம். அலைகடல் - வினைத்தொகை; அலைகளையுடைய கடலென்னும் பொருளில், அலைக்கடலென வலிமிகும். இலக்கு - லக்ஷ்யம்; வடசொல். (கூஅ)

39.—பிருகந்நளைதேற்றலும் உத்தரன் தேறி ஏடிவிடு படலம்.

(இ - ள்.) 'தூண்டும் மா இலை - செலுத்தப்படுகின்ற குதிரைகள் இலை: சொரி மதம் களிறு இலை - பொழிகின்ற மதசலத்தையுடையயானை கள் இலை: துரங்கம் பூண்ட தேர் இலை - குதிரைகள்பூட்டிய தேர்கள் இலை: பதாதி இலை - காலாட்சேனைகள் இலை', என --என்று, புகல - (பேடி சதுரங்கசேனையைக்காட்டி எடுத்துச்) சொல்ல,—இகல் வீரன்-வலிய

வீரத்தன்மையையுடையவனென உத்தரன், 'ஈண்டு நின்றனை யாவையும் - இங்குப்பொருந்தியவை யெல்லாவற்றையும், யா என - எவை [இன்னவை] யென்று, தெரியா - தெரிந்துகொள்ளாமல், மீண்டு போவதே - திரும்பிச் சென்றுவிடுவதே, உறுதி - துணிவான காரியம்,' என்றனன் - என்று சொன்னான்; (எ - று.)

இவன் படையின் தன்மை கண்டதியா னென்று, பேடி, குதிரை முதலியன இவையிவை யெனச் சொல்லிக்காட்டினள்: காட்டவும் அச்சமிகுதியால் அச்சொல்லச்செவியிலேற்காமல், உத்தரன் இங்குநின்றுல் உயிர்தப்புவது அரிது என்று கருதி மீண்டுபோவதே யுறுதியென்றான். உத்தரனே 'இகல் வீரன்' என்றது, இகழ்ச்சி.

துரங்கம் - விரைவாய்ச் செல்வது என்று பொருள்படும் வடசொல். 'பதாதி' என்ற வடசொல்லுக்கு-கால்களினாலே நடந்து செல்பவ னென்பது பொருள். மற்று-அசை; இங்கு 'பதாதி' என்றது-காலாள்களின் கூட்டத்தை யுணர்த்தி அஃறிணையின்பாற் பட்டதனால், 'பதாதி யிவை' எனப்பட்டது. தெரியா என்ற வினையெச்சம் போவதுஎன்பதனோடு இயையும்; என்றனன் என்பதனோடு இயைத்து உரைப்பினுமாம். யாவையுமியா-தன்னொழி மெய்ம் முன் யகரம் வர இகரந்தோன்றிற்று; [நன் - மெய் - ாட.] யா - அஃறிணைப் பன்மை விளைப்பெயர்; இதில், பலவின்பால்விகுதி புணர்ந்துகெட்ட தெனப்படும். (கூக)

40.—பிருகந்நளை உத்தரனுக்குச் சைத்தியோபசாரஞ்செய்து, 'யான் போருது பகைவெல்வேன்' எனல்.

(இ - ள்.) (பின்பு), பேடி—,- வெயர்த்த மேனியை-(அச்சத்தினால்) வேர்வையடைந்த (உத்தரனது) உடம்பை, நறும் பனி நீரினால் விளக்கி - வாசனை வீசுகின்ற பனிநீரைத் தெளித்து துடைத்து (அயர்ச்சியைப் போக்கித்) தேற்றி, (அவனை நோக்கி), 'ஐயா - தலைவனே! நீ—, இமை பொழுது - ஒருகணைகாலம், அயர்த்து முதுகு இடாது ஒழி - தளர்ந்து முதுகு கொடுத்து ஓடாம லிரு; (நான்), உயர்த்த பல் கொடி பகைஞரை - உயர எடுத்த பலவகைத் துவசங்களையுடைய பகைவர்களை, தனி தனி ஓட்டி-தனித் தனியாக ஓடும்படிசெய்து, நிரையும் - பசுக்களையும், பெயர்த்து நல்குவேன் - (அவர்களிடத்தினின்று) மீட்டுக்கொடுப்பேன்,' என்று உரைத்தனள்-என்று சொன்னாள்; (எ - று.)

உத்தரனுக்குச் சைத்தியோபசாரஞ்செய்து தேற்றி, பேடிவடிவான அருச்சுனன் தான் பகைவென்று ஆநிரைகளை மீட்டுத்தருவே னெனக் கூறினனென்க. பீஷ்மர்க்குப் பனைக்கொடியும், துரோணர்க்கு வேதக்கொடியும், அசுவத்தாமனுக்கு அன்னக்கொடியும், காணனுக்குக் கச்சைக்கொடியும், துரியோதனனுக்குப் பாம்புக்கொடியும் முதலாக அனைத்தும் அடங்க, 'பல் கொடி' என்றாள். வெயர்த்தல் - புழுங்குதல்; இது - இங்கே, அச்சத்தின் பெயர்ப்பாடு. டனிநீர் - ஒருவகை வாசனை நீர். ஐயா - ஐயனென்பதன் விளி.

'தனித்தனி ஓட்டி' என்றது - இருவர் ஒருவழிச் செல்லாதவாறு பிதறடித்: தென்றபடி. இமைப்பொழுது - கண்ணிமைத்தற்கு வேண்டும்பொழுதென்க இமை - முதனிலைத்தொழிற்பெயர். (சா)

41.—உத்தரன் குதித்தோட, பிருகந்நளை அவனைப்பிடித்துவந்து தேர்க்காலிற்கட்டுதல்.

(இ - ள்.) (அதுகேட்டும் உத்தரன் அச்சந்தெளியாமல்), கொடி தட தனி தேரினின்று - துவசத்தையுடைய பெரிய ஒன்றுகிய [ஒப்பற்ற] தேரினின்று, உகைத்து - எழும்பி, முன் குதியா-முன்னே குதித்து, அடி தலம் பிடர் அடித்திட ஓடலும் - பாதங்கள் பின்புறத்திலே அடிக்கும்படி (அதிவேகமாக) ஓடிப்போன வளவில்,--(அருச்சுனன்), ஒரு தொடியினில் - ஒரு கணப்பொழுதிலே, அவனை - அவ்வுத்தரனை, தொடர்ந்து போய்-பின்தொடர்ந்து ஓடிச்சென்று, தொடி தட புயம் இரண்டையும் - தொடியென்னும் வளையணிந்த (அவனது) பெரிய தோள்களிரண்டையும், துவக்கி - கட்டி, பிடித்து வந்து-பிடித்துக்கொண்டுவந்து, தேருடன் பிணித்தான்-தேரோடுகட்டினனென்.

"தேர்வீடும் விசயனுக்கிவள்" (31) என்றும், "உடைத்தனள்பேடி" (40) என்றும் பேடிவடிவிற்கு ஏற்பப் பெண்பாலாற் கூறிவந்தவர், இனி ஆண்மைகாட்டத்தொடங்கியதனால், ஆண்பாலாற் கூறலாயினர். உகைத்தல்-அழுத்தியெழுதல். 'அடித்தலம் பிடரடித்திட' என்றது - அவன் முன்னே ஓட்டத்தின் வேகமிகுதி கூறியவாறு; தன்னைநவிற்சியணி. தொடியை இக்காலத்தார் தோடாவென்பர். கொடி - இப்பல்பாகக் கைவிரல்களை ஒருமுறை மொடித்துக்கொள்ளும்பொழுது. (சக)

42.—பிருகந்நளை தேர்மேலேறுதி, முன்பு தான் வைத்த வில்லையும் அம்பையும் எடுத்து வருதல்.

(இ - ள்) (அருச்சுனன்), பிணித்த தேரினை - (அவ்வாறு உத்தரனை) பிணித்துக் கட்டிய இடத்தை, பெற்றமும் பின்பட - (வேகத்திற் சிறந்த) காற்றும் பின்னிடும்படி [காற்றினினும் விரைவாக], கடாவி - செலுத்திச் சென்று,—அரும் பெரும் பொதும்பரில் - பிறர் அறிதற்கு அரிய பெரிய மரப்பொந்தில், நிணித்து சேர்த்திய - (முன்பு) கட்டிமறைத்து வைத்துள்ள, சிலையும் - (தனது) வில்லையும், மேலவர் முடி துணித்து-பகைவர்களது தலைகளை அறுத்து, உகு சோரி தோய்-(அவற்றினின்று) பெருகுகின்ற இரத்தந் தோயப்பெற்ற, தொடையும் - அம்புகளையும், கணித்தலில்லையின் கொண்டு-நினைத்தமாத்திரத்தில் எடுத்துக்கொண்டு, மீண்டு - திரும்பிவந்து, அமர் களம் கலந்தான் - யுத்தஞ்செய்யுமிடத்தைச் சேர்ந்தான்; (எ - று.)

'பொதும்பரிற் சேர்த்திய சிலையும் தொடையும்' என்றது - கீழ்ப் பாண்டவர்கள் அஜ்ஞாதவாசஞ் செய்யச் செல்லும்பொழுது விராடநகர்ப்புறத்து நன்காட்டிற் காளிகோயிலுக்கெதிரிற் பெரியதொரு வன்னிமரத்தின் பொந்திலே தம்தம் ஆயுதங்களையும் கவசங்களையும் பிறவற்றையும் ஒளித்துவைத்து வேறெவரும் அறியாதபடி மந்திரமோதிக் காப்பிட்டுவந்தமையிலென்க

பொதும்பர் - பொதும்பு என்னும் மென்றொடர்க் குற்றிய லுகரத்திற்கு அர் - போலி. மேவலர்-விரும்பிச் சேராதவர்; எதிர்மறைவினையாலணையும்பெயர். சொரிவது - சோரி. இரத்தம், வினைமுதற்பொருள்விகுதி புணர்ந்து கெட்டபெயர். தொடுக்கப்படுவது, தொடை யெனக் காரணக்குறி; ஐ - செயப்படுபொருள்விகுதி. கணித்த எல்லை-கணப்பொழுதுமாம். 'கணித்தவெல்லையின்' என்பதற்கு-(முன்பு அஞ்ஞாதவாசத்துக்குக்) குறித்தகாலத்தின் முடிவி லென்றுரைப்பாரு முளர். நிணி தரும் என்றுஎடுத்து - வலியமைந்த எனவுரைப்பர், ஒருசாரார். (சுஉ)

13.—இதனுள், அருந்தவப்புடைபெற்ற நாரதனும் பிருகந்நளையும் சபையைத் தெளிவிக்கும்.

இரண்டாமடியில் 'கிரீடிய' என்றும், மூன்றாமடியில் 'தெரிப்பு றப்புக லெயினையிற்' என்றும் படிக்க.

(இ - ள்.) 'எரி புறம் தரு தரு படை - நெருப்பைத் தன்னிடத்தே யுடைய வன்னிமரந் தந்த ஆயுதங்கள், யா - எவருடையவை?' என வினவி-என்று (உத்தரன்) கேட்க;—'கிரி - மலைகளிலும், புறம் - அவற்றின் புறத்திலுள்ள, பெருங் கான்-பெரிய காடுகளிலும், உறை - வாசஞ்செய்த, கிரீடிய-அருச்சுனனுடையவை', என்ன-என்று (உருக்கரந்த அருச்சுனன்) சொல்ல,—'அவன் எ வயின் சேர்ந்தனன் - அவ்வருச்சுனன் எந்த இடத்திற் சென்று சேர்ந்தான்? தெரிப்பு உற புகல் - தெரியும்படி சொல்,' என்று—, அவனும்-அவ்வுத்தரனும், அரி புறம் தட கண்ணினியை (சிவந்த) மேகைகளைத் தம்மிடத்தேயுடைய பெரிய கண்களையுடையளான பேடியை, கேட்டனன் - வினவினனன்; (எ - று.)

வேறுவடிவுள்ள அருச்சுனன் பாடக்கலங்களோ யெடுக்கவே, உத்தரன் அவரை வினவி; அவ்வருச்சுனன் மறுமொழிகளில் மீண்டுந்தோன்றிய ஐயத்தை உத்தரன் விருவினனென்க. வன்னிமரத்தைக் கடைந்தால் நெருப்புத் தோன்றுமாதலால், அது 'எரிப்புறுதருவ' எனப்பட்டது; எரியைப் புறப்படவிடுந் தரு வென்றுபொருள்கொள்ளலாம்; இனி, புறம் - (மகரத்துக்குப்) புறத்தில் [புறங்காட்டிலேயுள்ள], எரி தரு-வன்னிமரம், தரு - கொடுத்த என்று பதவுரை கூறலுமாம்; 'எரி' என்ற சொல் - தனது பரியாயநாமமாகிய வன்னியென்ற சொல்லைக் குறிப்பிட, அது-தன்பொருள்களிலொன்றான ஒருவகை மரத்தை யுணர்த்திநிற்றல்; இது, லக்ஷணையணி; தரு - வடசொல். தரு படை-விளைத்தொகை; கான் - காகந மென்னும் வடசொல்லின் சிதைவு. கிரீடிய - பலவின்பாற் குறிப்பு முற்று. புகல் - ஏவலொருமை முற்று. பெண்தன்மை மிக்கிருத்தலால். 'அரிப்புறத்தடாகண்ணி' என்றார். கண்ணி யென்ற பெயரில், இ - பெண்பால்விகுதி. 'அவனும்' என்பதற்கு - பிருகந்நளையாகிய அவ்வருச்சுனனும் என்று உரைத்து, அதனை மேல் சரு - ஆஞ் செய்யுளில்வரும் 'என விடுத்தான்' என்பதற்கு எழுவாயாக்குதலு மொன்று.

கிரீடி-கிரீட முடையவன்; வடசொல்: அது ஈறு இகாமாய்க் கிரீடியென நின்றது. பாசுபதாஸ்திரம் பெற்றபின்பு நிவாதகவசகாலகேயவதத்திற்காகத்

தேவேந்திரன் அருச்சுனனைத் தன்னுலகத்துக்கு அழைத்துக்கொண்டு போன பொழுது அங்குத்தன் ஆசனத்தில் அருத்தாசனமாகொடுத்து அதில்வீற்றிருக்க வைத்து, முன்புபிரமன் தனக்குத்தந்தருளிய இரத்தினகிரீடத்தைச் சூட்டிட, அம்முடியணியை உரியதாகப் பெற்றனதலால், அருசுனனுக்குக் கிரீடி யென்றுபெயர். (சுரு)

41.—இதுவும், அந்த சலிபுரி - நருகாய்.

(இ - ள்.) (அருச்சுனன் உத்தரனை நோக்கி),—'கிரீடி எங்கு உளன் என்று எனை கேட்ட - அருச்சுனன் எங்கே யிருக்கின்றனென்று என்னை வினவிய, ஈ—, கேண்மோ - கேட்பாயாக: இருடி ஆகி - முனிவடிவமாய், நின் தாதை ஓர் ஆசனது இருக்கும் - உன்தந்தையான விராடராசன் வீற்றிருக்கின்ற ஆசனத்தில் அவனுடன்எழுந்தருளியிருக்கின்ற, புருடன்-சிறந்த புருஷனென கங்கபட்டனென்பவன், இ பதி புகுந்த நாள் - இந்த ஊர்க்கு வந்து சேர்ந்த நாளில், (அக்கிரீடி). உடன் வந்து புகுந்து-கூடவந்துசேர்ந்து, அரிடம் ஆன தன் ஓர் விதியினால் - தீமையாகிய தனது ஊழ்வினையொன்றினால், பேடியும் ஆனென் - பேடியுருவமாகவு மாயினன்; (எ - று.)

பிருகந்நளை அருச்சுனனுடைய செய்திபைக் கூறலாயினனென்க. கேணமோ, மோ-முன்னிலையசை. கிரீடி, இருடி, ஆதனம், புருடன், அரிடம், விதி என்பன - முறையே கிரீடீ, ருஷி, ஆஸனம், புருஷன், அரிஷ்டம், விதி என்னும் வடமொழிகளின் விகாரம். வித்யாவது - இருவினைப் பயன்செய்த உயிரைச் சென்றடைதற்கு எதுவாகிய நியதி. எனை = என்னை: தொகுத்தல்விகாரம். 'பேடியும்' என்ற உம்மை-இறந்தது தழுவிய எச்சத்தோடு இழிவுசிறப்பு. 'இப்பதி' என்றது, மச்சநாட்டிற்கு ராசதானியான விராடநகரத்தை.

'நீ அரிடமான தன்வினையினால்' என்றது-வனவாசகாலத்தில் அருச்சுனன் தான் பரமசிவனிடத்துப் பாசுபதம்பெற்றபின்பு ஆங்கு வந்து அழைத்துப்போன தந்தை யாகிய இந்திரனுடனே தேவலோகஞ் சென்ற பொழுது அங்குத் தன்னைக்காமித்துத் தன்பக்கல் இரவில் வந்துசேர்ந்த ஊர்வசியென்னுந் தெய்வமகளைத் தாயென்று கொண்டு தாள்களில் விழுந்து வணங்கிய வளவில், அவள் மிகவும் மனம்வருந்திக் கோபித்து 'பேடியாவாய்' என்று சாபங்கொடுத்து, பின்னர், அதனை அறிந்த இந்திராதிதேவர்களின் வேண்டுகோளினால் தான் வேண்டும்நாளில் அப்பேடிவடிவம் ஓராண்டு வரும்படி வரமாக மாற்றினமையைக் கருதி. (சுக)

15.—பிருகந்நளை உத்தரனைத் தேற்றிக் காண்டவிழ்த்துவிடுதல்.

(இ - ள்.) யாண்டு சென்றிலது - (அஜ்ஞாதவாசத்துக்குரியமித்த) ஒரு வருஷகாலம் (இன்னும் முடியக்) கழிந்ததில்லை; இன்னமும்—, ஈர இரு கடிகை வேண்டும் - நான்குநாழிகைப்பொழுது கழியவேண்டும்; இனி - (அந் நான்கு நாழிகைக்குப்) பின்பு, ஈண்டை-இவ்விடத்தில், அ விசயனும் - அந்த அருச்சுனனும், தோன்றும் - வெளிப்பட்டுத் தோன்றுவான்; ஈ—, மீண்டு போகலை - திரும்பி ஓடிப்போவதை, விடு விடு-விட்டுவிடு; விரை பரி தட தேர்-வேகமாயோடுகின்ற குதிரைகளைப் பூட்டிய தேரை, தூண்டு-செலுத்து, என -

என்று சொல்லி, தோளில் அ துவக்கையும் - தோள்களைத் தேரோடு அணைத் துக் கட்டிய அக்கட்டையும், விடுத்தான் - அவிழ்த்துவிட்டான்; (எ - று.)—ஆல் - அசை.

பிருகந்நளை அருச்சுனன் செய்தியைக்கூறி உத்தரனைச சமாதானப்படுத்தி அவனைக்கட்டியிருந்த கட்டவிழ்த்துத் தேரைச் செலுத்துமாறுகூறினளென்க. கடிஞை - கடிகா: வடமொழியின்திரிபு; அறுபது விநாடி: இருபத்துநான்கு நிமிஷநேரம். ஈண்டை - இடப்பொருளுணர்ந்த 'ஈண்டு' என்னும் சுட்டு ரீண்ட மென்றொடர்க்குற்றியலுகரவீற்று இடைசசொல், ஐகாரச்சாரியை பெற்றது. விடு விடு - அடுக்கு, தாணிவுப்பொருளது. போகலை இரண்டனுருபேற்ற தொழிற்பெயர்: இனி, போகலை விடுவிடுஎன்பதில்போகலை என்பதை-எவ்வெலாருமை யெதிர்மறை முற்றுகவும், விடு விடு என்பதை-விரைவுப்பொருள்குறிக்கும் இடைசசொல்லாகவும் கொண்டு, 'திரும்பிப் போகாதே விடு விடென்று ஓடு எனினுமாம். இனி, விடுவிடு-[மிகவும் விரைவாகத்] தேரை ஓட்டு' என்றலுமாம். துவக்கு - முதனிலைதொழிற்பெயர். 'இன்னம்' என்பது - ஓர் இடைசசொல். 'வேண்டும்' என்பது - ஒருவகைவியாகோள் விணை முற்று; உம் - விகுதி. பரி - (தேரையும் வீரனையும்) பரிப்பது என்பதுபற்றி வந்த காரணக்குறி; (பரித்தல் - மேற்கொண்டுதரித்தல்.) (எஅ)

41.---உத்தரன் தேரூர்தல்கொள்ளாது தேர்மேலுதைதல்.

(இ - ள்.) அ சிறுவனும் - அந்த உத்தரகுமாரனும், அறிந்து-(அப்பேடியாகிய அருசசுனன் சொன்னவற்றை யெல்லாம்) தெரிந்துகொண்டு, ஆயகு - அப்பொழுது, தாள் விழுந்து - (அவனுடைய) பாதங்களில் வீழ்ந்து வணங்கி, எழுந்து - எழுந்திருந்து; பின் - பின்பு. அவன் அருளால்-அவ்வருச்சுனனது கட்டளையால், செறிந்த மால் பெரும் சிறப்பை - (அருள்) பொருந்திய திருமாலின்[ஸ்ரீகிருஷ்ணனின்]மிக்க சிறப்பை[அருசசுனனுக்குசசாரத்தியஞ்செய்யுந் தொழிலை], பெற்று - (தான்) அடைந்து,—பிறிந்த - வகுக்கப்பட்ட, பல்பல போ அணி - பலபல பெரிய வரிசைகளையுடைய, நால் வகை படையும் - (ரத கஜ துரக பதாதி என்னும்)நான்குவகைப்பட்ட(துரியோதனாதியர் சேனைகளும், முறிந்து போக-அழிந்தோடும்படி, அ தேர் விடு தொழிலினில்-அந்தத் தேரை யோட்டுஞ் செய்கையில், மூண்டான் - முயன்றான்; (எ - று.)

உத்தரன் அருசசுனனுக்குச் சாரதியாதலென்ன வேண்டியவிடத்து 'மால் பெருஞ்சிறப்பையசசிறுவனும் பெற்று' என்றது - பிறிதினவிற்சியணியாம்; சொல்லவேண்டியதை இனிமைபடச சுற்றுவழியாகச சொல்லுதல், இதனிலக்கணம். தேவாதி தேவனெகிய தனதுபெருமையெல்லாம் அழிய மாறிப் பார்த்தனுக்குச் சாரத்தியஞ் செய்து அடியவர்க் கெளியனையிருக்குந் தன்மையை வெளியிடுதலால், 'செறிந்த மால் பெருஞ்சிறப்பு' என்றார். அன்றியும், சிறந்த வீரருக்குப் பெரும்போரிற் சாரதியாயிருத்தலும் ஒரு சிறப்பாகும்: மேற்பதினேழாம் போர்ச் சருக்கத்தில் "புகழ்த்தூண்டு, வேந்தரா யமர்க்களத் திலதிசயித்த வீரானவர்க்கிதுதான் மேம்பாடன்றே, மாந்தராயெக்கலையும் வல்லார்க்கன்றி வாசி நெடுந்தேரூர வருமோ?" என வருவது காண்க. மால் பெரு - மிகப்பெரிய என ஒருபொருட்பன்மொழி யென்பாரு

முளர். 'சிறுவனும்' என்ற உம்மை - இறந்ததுதழுவிய எச்சத்தோடு இழிவு சிறப்பு. அகரச்சுட்டு, அஞ்சியோடியதைக் குறிக்கும். 'அறிந்து' என்பதற்கு- (இப்பேடி அருச்சுனனே யென்று) உணர்ந்து என்று உரைப்பர் ஒருசாரார். அருள் - அருளோடு இடுங் கட்டளைக்கு இலக்கணை; காரணவாகுபெயர். பற்பல பேரணி பிரிந்த என்று மொழிமாற்றி - பலபல பேரணிகளாகப் பிரிந்த வென்றலு மொன்று; பிரி, முரி என்பனபோலப் பிறி, முறி என்னும் வினைகளும் உள்ளனவாம்; அன்றி, எதுகைநோக்கி ரகரந் திரிந்து நின்றன வெனினும் ஒக்கும். (அசு)

47.—துரோணனுதியர் பேடியைக்குறித்துச் சங்கித்தல்.

(இ - ள்.) நாள் நந்தியாவர்த்தம் மாலை சூடினன் - அன்றைக்கு மலர்ந்த [புதிய] நந்தியாவட்டப்பூமாலையைச் சூடிக்கொண்டிருக்கின்றவனை துரியோதனனது, நெடுஞ் சேனையில் - பெரிய சேனையிலே, துரோணனே முதலோர் பலர்-துரோணசாரியன் முதலிய (அறிவிற்சிறந்த) பல வீரர்கள், 'ஓடினனும் - (முன்னே தேரேறிப்போர்செய்யவந்து) அஞ்சியோடிய குமாரனும், இ தேர் விரைந்து ஊர்பவன் - (பேடியின்செயலால் தேரை) இந்தத்தேரை விரைவாய்ச் செலுத்துஞ் சாரதியானன்', என்றும்—,'பேடி—, நாம் முதல்ஐயுறும்பெருந் தகை - நாம் முதலிற் சந்தேகிக்கத்தக்க பெருமைக்குணங்களையுடையஅருசுனனும்,' என்றும்—, நாடினர் - ஆலோசிப்பவரானார்கள்;(எ-று)

ஓடினவன் பேடியுருவில்தேற்றப்பட்டுத் தேரூருமபாகனைப்பேடி இப்போது ரதிகளை ஆய்விட்டதலால், இப்பேடி அருசுனனாக இருக்கவேண்டுமென்ற ஓராலோசனை துரோணசாரியர் முதலியோர்க்குண்டாயிற்றென்பதாம். ஓடினனும், உம்மை - இழிவுசிறப்பு. ஐயுறு - ஐயமுறு என்பதன் விகாரம்; காமுறு, எழுறு என்பனபோல. ஐயம் - பலதலையாய அறிவு. பெருந் தகை - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை: தகை - தகுதி, சற்குணம். நந்தியாவர்த்தம் - ஒரு பூஞ்செடி; இதனை, இக்காலத்து நஞ்சாவட்டை யென்பர்: இம்மாலை, துரியோதனனுக்கு உரிய அடையாளப் பூமாலையாம்.

துரோணன் - பரத்வாஜமுனிவனது குமாரன்; கிருபாசாரியனுடன் பிறந்தவளான கிருபியின் கணவன்; அசுவத்தாமனது தந்தை; ஐகலசாஸ்திரங்களையும் தன் பிதாவினிடம் கற்று, படைத்தொழிலைப் பரசுராமனிடத்து ஏழுநாளிற் பயின்றவன்: துரியோதனுதியர் நூற்றுவர்க்கும் பாண்டவரைவர்க்கும் அஸ்திரசாஸ்திரங்களைக் கற்பித்த ஆசிரியன்: வைதிகவிரதாநுட்டானஞ் செய்துகொண்டிருக்கையில் தேவர்களாலேவியனுப்பப்பட்ட மேனகையின் கட்டழகைக் கண்டு காதல்கொண்ட பரத்வாஜமுனிவனது விருப்பத்தால் ஒரு துரோணகும்பத்திற் பிறந்தமைபற்றி, இவனுக்குத் துரோணனென்று பெயர். த்ரோணகும்பம் - பதக்களவுகொண்ட பாத்திரம்; துரோணம் - பதக்கு, இரண்டுகுறுணி. இனி, துரோணம் என்று வில்லுக்குப் பெயரிருத்தலால், துரோணனென்பது - வில்வன்மைபற்றிவந்த பெயருமாம். இவன்,

அங்கிவேசமுனிவன் பக்கலிலும் படைகள் தேர்ந்தான். ஏ - உயர்வு சிறப்பு. சூடிஞன் - பெயர். (சஎ)

48.—பிருகந்நளை கையில்வில்லேந்தி உத்தரனை அஞ்சாது தேர் ஏறுந்தச் சொல்லுதல்.

(இ - ள்.) அன்று - அப்பொழுது, பேடி - பேடிவடிவமமைந்த அருச்சுனன், பிறர் - அயலார் [பகைவர்], தன் பெண்மையை - தனது மிக்கிருக்கும் பெண்தன்மையை, ஆண்மையாய் கொண்டாட - ஆண்தன்மையாக மெச்சும்படி, அந்த வெம் சாபமும் - அந்தக் கொடிய வில்லையும், தொடி கையில் ஆக்கி - வளையலணிந்த தன் கையில் எந்திக்கொண்டு,—(உத்தரனை நோக்கி), 'கோடி அம்புகள் - அநேகம் பாணங்களை, ஓர் ஒரு தொடையினில் - தொடுக்கும் முறை யொவ்வொன்றிலும், கோத்து - தொடுத்து, வீடுவிப்பன் - (பகைவர்களைக்) கொன்று (பசுக்களை) மீட்பேன்; நீ —, அஞ்சிடா - அச்சங் கொள்ளாமல், தேர் விடுக - தேரைச்செலுத்துவாயாக,' என்றான் - என்று தைரியங் கூறினான்; (எ - று.)

வன்னிமரத்தினின்று எடுத்துவந்தமை கீழ்க்கூறியதனால், 'அந்த வெஞ் சாபம்' என்றார். சாபம் - வடசொல். வில்லேந்துதல் ஆடவரியல் பாதலால் 'பெண்மையை ஆண்மையாய்ப் பிறர் கொண்டாடச் சாபங்கையிலாக்கி' எனப் பட்டது. காண்டவதகனகாலத்தில் அருச்சுனனுக்கு அக்கினிபகவான்கொடுத்த வில், 'காண்டீவம்' என்னும் பெயரினது. தன்பேடித்தன்மையைப்பிறர் ஆண்மையாய்க்கொண்டாடும்படி முன்னே ஊர்வசியாற் கொடுக்கப்பட்டு வந்தடைந்த கொடிய சாபத்தையும் தொடியணிந்தகைம்மாத்திரத்தில் [கைவசத்தில்] ஆக்கி யென்ற பொருளும் தோன்றும்; மாபம் - வெகுண்டு கூறிய மொழி. சாபம் - இவ்விருபொருளுடையதாதலை, "சாபமே சபித்தல் வில்லாம்" என்னும் நிகண்டினாலும் அறிக. 'வீடுவிப்பன்' என்பதற்கு - இரட்டுறமொழிதலென்ற உத்தியால், உயிர்விடுவிப்பேனென்றும், கிரைவிடுவிப்பேனென்றும் இருபொருள் ஒருங்கு கொள்ளப்பட்டது. வீடுவிப்பன் - 'அன்' விகுதிபெற்ற தன்மையொருமை முற்று; விடுவிப்பனென்பது முதல் நீண்டு வந்தது: வீடுவிப்பல் என அல்லீறாகவும் பிரிக்கலாம். அந்த - அசுரச்சுட்டின் மரூஉ. (சஅ)

49.—பிருகந்நளை அம்பெய்து பலஅரசரை அழித்தல்.

(இ - ள்.) என்ற போது - என்று (அருச்சுனன்) சொன்னபொழுதில், அவன் - உத்தரன், தேரினை - தேரை, இமைப்பினில் - ஒரு மாத்திரைப் பொழுதினுள்ளே, செலுத்த - (மிகவிரைவாக) ஓட்ட, போர் முனை - போர்க்களத்தில், சென்று - போய், சிலை விடு - (அருச்சுனன்) வில்லிற்கோத்து எய்த, சிலீமுகங்களினால் - அம்புகளினால், கொன்ற - கொல்லப்பட்ட, போர் மன்னர் - போரிற்சிறந்த அரசர்கள், ஈறு இலர் - எல்லையில்லாதவர்கள் [மிகப் பலர்]; (அதுநோக்கி),—குருகுலத்தவர் ஆய் நின்ற - குருகுலத்தில் தோன்

தியவர்களாய்ப் (போர் முகத்தில்) நின்ற, போர் முடி மன்னரும் - போர்த் தொழில் வல்ல கிரீடாதிபதிகளான (பீஷ்மன் விதுரன் துரியோதனன் முத லிய) அரசர்களும், சுளித்து - கோபித்து. உளம் நெளித்தார் - மனம் பதைத்தார்கள்; (எ - று.)

மன்னரும், உம் - உயர்வுசிறப்பு. மன்னர் உளம் நெளித்தார் - உயர் திணையோடு சார்ந்த அஃறிணைச்சினைப்பெயர். அவ்வுயர்திணை முடிபையே பெற்ற திணைவழுவமைதி; [நன் - பொது - உசு.] இமைப்பினிற் கொன்ற என்று இயைத்தலுமாம். இமைப்பு - இமைப்பொழுதுக்குத் தொழிலாகு பெயர். சுளித்து - முகஞ்சுளித்து எனினுமாம். கொன்ற=கொல்லப்பட்ட; செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை. (சசு)

50.—இதுவும் அடுத்த கவியும் - விதுரன் துரியோதனனை நோக்கிக் கூறுதலைத் தெரிவிக்கும்.

இதுமுதல் மூன்று கவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) அருச்சுனன்—, அம்பிகாபதிபால் - பார்வதிகொழுநனை பரமசிவனிடத்தில், துன்று போர் புரி - நெருங்கிய போரைச் செய்து, தவத் திறல் - (அவனைநோக்கிசசெய்த) தவத்தால், சுடு பல கணை பெற்று - (பகைவரை) அழிக்கவல்ல பல ஆயுதங்களைப் பெற்று. அன்று - அப்பொழு தே, அமரருக்கு ஆக - (இந்திரன் முதலிய) தேவர்களின் பொருட்டாக, அவு ணரை - (அவர்களால் வெல்லக்கூடாத நிவாதகவசர் காலகேயர் என்னும்) அசுரர்களை, போரினில் வென்று - போர்செய்து ஜயித்து, போனகம் நுகர் ந்து - (இந்திரனுடனே ஒருகஇருந்து தேவர்கள்தந்த) உணவை யுண்டு, பொன் தரு மலர் வெய்ந்தான் - பொன்மயமான கற்பகவிருக்ஷங்களின் மலர்களை (அத்தேவர்களால்) சூட்டப்பெற்றான்; (ஆதலால்), அன்று போல் அலன் - (இப்பொழுது) முன்னிருந்தவன்போ லல்லன்; (எ - று.)

இசசெய்யுளிலுல் பெயரடிவடிவுடன் தனித்து நின்று பொருளது அருச்சு னனுக இருக்குமென்றும், ஒன்றியாக விருந்தும்வெல்லக்கூடியவை னென்பத ற்கு வேண்டியகாரணம்இன்னதென்றும் துரியோதனனுக்கு விதுரன்எடுத் துக்காட்டினனெனன்க. விதுரன் கூறுவன துரியோதனனை நோக்கியாகு மென் பதுமேலச் செய்யுளில் 'இறைவ' என வந்த விளியால் வெளியாம். துரோ ணன் முதலியோர்பேடியை அருசசுனன்தாமே என்று ஐயுற்றமையை நாற் பத்தேழாஞ் செய்யுளிற் காணலாம். இனி, இசசெய்யுளை விதுரனது உட் கோளைத் தெரிவிப்பதென்று கொள்ளுதலும். ஒன்று: கவிக்கூற்றென்று கொள்வாரும் உளர்.

பாண்டவர்கள் வனவாசஞ்சென்றபொழுது அவர்களில் அருச்சுனன் வியாசபகவானது கட்டளையின்படி அம்முனிவனிடம் மந்திரோபதேசம் பெற்றுக் கைலாசகிரிக்குச் சென்று தவம்புரிகையில் அவனையழிக்குமாறு துரியோதனனுல் ஏவப்பட்ட மூகாசுரன் பன்றிவடிவங்கொண்டு அருச்சு னன்மீது பாய்ந்து அவனைக் கொல்வதாகவந்தவளவில், சிவபெருமான் வேட

வடிவங்கொண்டு அங்குவந்து அப்பன்றியின்மீது ஓர் அம்பை எய்ய, அது பிளக்குமுன்னே அருச்சுனன் அம்பொன்றையெய்து வராகத்தை விழுத்த, அதுகாரணமாக அவ்விருவர்க்கும் உண்டான போரில், பரமசிவன் எதிரியின் வில்நாணியை அறுக்க, அருசசுனன் அவ்விற்கழுந்தாற் கடவுளின் முடியில் அடித்தனன். பிறகு சிவபெருமான் தனது நிஜரூபத்துடனே அருச்சுனனுக்குத் தரிசனந்தந்து வில் பாசுபதாஸ்திரம் அம்பறுத்தூணி முதலியவற்றைக் கொடுத்தருளினதன். பின்பு அருச்சுனன் அங்குவந்து தன்னை அழைத்துச்சென்ற தந்தையான இந்திரனுடனே தேவலோகஞ்சேர்ந்து, அங்குத் தேவர்கள் வேண்டியபடி, அவர்கட்குப் பகைவராய்ப் பலநாளாகப் பெருந் துன்பமியற்றிவந்த கடலிடையிலுள்ள தோயமாபுரத்தில் வசிபபவர்களான நிவாதகவசரென்னும் அசுரர் மூன்றுகோடிபேரையும், அந்தரத்திலுள்ள இரணியபுரத்தில் வசிப்பவர்களான காலகேயரென்னும் அசுரர் அறுபதினாயிரவரையும் ஆங்காங்குச் சென்று போர்செய்து அழித்திட்டனன் என்பது, இங்கு அறியவேண்டிய வரலாறு. ஆரணியபருவத்து நிவாதகவசர்காலகேயர் வதைசசருக்கத்தில் "செவ்வியதாதைதானுஞ் சேணதித்தூரீராட்டி, விவ்விரவாதவாசத்தாமமும் விழைந்து சூட்டி," "ஏடவிழலங்கலாரேராசனத்திருததி யென்றுந், தேடுதற்கரியதூயவழுது செம்பொற்கலத்திற், கூடவுண்டமராக்கெல்லாங்குரிசிலாஞ் சிறப்புசசெய்தான்" என்றவையுங் காண்க.

அன்றுபோல் அலன் - சூதாடிச் செல்வமிழந்து சென்ற அந்நாளிலிருந்ததுபோலல்ல னென்றபடி. 'புரி' - புரிந்து; விகுதி முதலியன கெட்டுப் பகுதி மாத்திரமாய் நின்ற இறந்தகால வினையெசசம்; "வரிப்புனை பந்து" என்ற இடத்து 'வரி' என்றது போல. இனி, போர்புரி தவம் - போர்செய்து இயற்றிய தவமெனினுமாம்; அருச்சுனன் தவத்திலிருக்கும்போதே சிவவேடமேடு போர்செய்தன னதுலால். 'ஆக' என்றது - நான்காம்வேற்றுமைசசொல்லுருபு. அம்பிகாபதி - வடமொழித்தொடர். தவம் - தபஸ் என்னும் வடமொழியின் விகாரம்: தவமாவது - மனம் பொறிகளின்வழியே போகாமல் நிற்றற்பொருட்டு விரதங்களால் உணவுசுருக்கலும் கோடைக்காலத்தில் வெயில்நிலை நிற்றலும் மாரிக்காலத்தும் பனிக்காலத்தும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தன் உயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்புதல். இனி, தவத்தினால் அம்பிகாபதியால் துன்றுபோர்புரி சுடுகணைபல பெற்று என்றும் இயைக்கலாம்; துன்றுபோர்புரிசுடுகணை-மிக்கபோரைசசெய்தற்கு உரிய கொடியவாயுதங்க ளென்க; கணை-இங்கே, ஆயுதமென்னும்மாத்திரமாய் நின்றது; அவை-பாசுபதம், வில், அம்பறுத்தூணி முதலியன. அஸ்திரசஸ்திரங்களைப் பெற்றபொழுதேபயன்கொள்ளுதல் அருமையாதலால், 'அன்று' என்றார்.

அருச்சுனன் = அர்ஜுநன்: இவ்வடசொல்லுக்கு - வெண்ணிறமுடையவனென்பது, பொருள். இது முதலில் இந்நிறமுடைய கார்த்தவீரியமகாராசனுக்குப் பெயராயிருந்து, பின்பு அவனைப்போன்ற சௌரிய தைரியங்களையுடைய பார்த்தனுக்கு இட்டு வழங்கப்பட்டது. இது, உவமவாகுபெயரின்

பாற்படும்: பார்த்தன் கருநிறமுடையவனுதலால், அவனுக்கு அருச்சுன னென்றபெயர் நிறம் பற்றிவந்ததென்றல் பொருந்தாது: மேல் 59 - ஆங் கவியையும் நோக்குக. போனகம் - போஜநம். பொன் தரு, ஐந்து-லந்தாநம், மந்தாரம், பாரிஜாதம், கல்பகம், அரிசந்தநம் என்பன. (நிஎ)

51.—(இ - ள்.) இறைவ - அரசனே!—'தன் நிலத்தினில் - தானிருக்கு மிடத்திலுள்ள, குறு முயல் - சிறிய முயற்குட்டி, தந்தியின் வலிது-(தன்னி டம் விட்டுப் பெயர்ந்துவந்த பெரிய) யானையைக்காட்டிலும் வலிமையையுடை யது,'என்று-,இ நிலத்தினில்-இவ்வுலகத்துச்சொல்லப்படுகின்ற, பழமொழி-பழமொழியை, நீ—, அறிதி - அறிவாய்; (ஆகையால்), எ நிலத்திணும்-(தன் நிலம் அயல்நிலம் என்னும்) எந்த இடங்களிலும், உனக்கு—, எளிது ஆயி னும் - (போர்செய்வது) எளிதாயிருந்தாலும், இவர் நம் நல் நிலத்தினில் வர - இவர்கள் நமது நல்ல இடத்தில் வந்தபின்பு, அமர் தொடங்குதல் - (நாம்) போரைத் தொடங்குதல், நன்று - நல்லது; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

'தன்னிலமானுல் முயலும் யானையைவெல்லும்' என்றல், உலகவழக்கு. இது, இவர் வலியிலராயினும் நீ மிக்கவலியுடையையாயினும் இவர் நிலத்தி லிருந்து நீ போர்செய்தால் தோல்வியடைவாயென்னும் பொருள் தோன்றக் கூறியது; ஒருகாட்டில் வசித்திருந்த பலமுயல்களி லொன்று வேற்றுவனத்தி லிருந்துவந்த சதுரதந்தனென்ற அரசயானையை ஒருதந்திரஞ்செய்து கூட்டத் தோடு துரத்திவிட்ட தென்ற வரலாற்றைப் பஞ்சதந்திரத்திற் காணலாம்; "நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி, னீங்கி னதனைப் பிற"என்பர், இடனறிதலில் திருவள்ளுவரும். பழமொழி - பழமையாகிய மொழி யென விரியும்; பண்புத்தொகை. உலகநடையை ஒட்டி உயர்ந்தோரால் உண்டாக் கப்பட்டு வழங்குகின்ற கட்டுரைவாக்கியம். 'இனிமேல், அருசசுனனியலை வெல்லமுடியாதோ?' என்று துரியோதனனுக்குத்தோன்றக்கூடிய எண்ணத் திற்குச்சமாதானங்கூறுகின்றுனென்க. இப்போதுபொருதவர்ஒருகால் பாண்ட வராகஇருப்பின் பிறகுஎப்படியும் அவர்கள் நம்நிலத்தில்வந்து பொருவராத லால், அப்போதுஅவர்களை வென்றுவிடலாமென்பான் 'இவர் நம்நிலத்தினில் வர அமர்தொடங்குதல் நன்று' என்றான். துரியோதனனுக்கு ஊக்கம் குறை யாதிருத்தற்பொருட்டும், அவனுக்குக் கோபமுண்டாகாமலிருப்பதைக் கருதி யும், 'எந்நிலத்தினு முனக்கு எளிது' என்றார்.

தந்தி-வடசொல்: தந்தங்களையுடையது. இறைவன்-தலைமையுணர்த்தும் 'இறைமை' என்ற-பண்பினடியாப்பிறந்தபெயர். நிலத்தினும், உம்மை-முற்று. ஆயினும், உம்-உயர்வுசிறப்பு. குறுமுயல் - பண்புத்தொகை. (நிக)

52.—அதனை வீடுமனும் துரோணனும் அங்கீகரிக்க,
துரியோதனன் கோபித்தல்.

(இ - ள்.) என்று—, விதுரனும்—, கூறினன் - சொன்னான்; ஏனை - மற்றும், அங்கு - அவ்விடத்தில், அருகு நின்ற - சமீபத்திலிருந்த, வீடுமன்

துரோணனும் - பீஷ்மனும் துரோணாசாரியனும், இது நினைவு என்றார் - இது (இச்சமயத்துக்குஏற்ற) எண்ணமே யென்று சொன்னார்கள்; (அதுகேட்டு), அன்று - அப்பொழுது, நாகம் வெம் கொடியவன் - கொடிய பாம்புக் கொடியை யுடையவனென துரியோதனன், கொடிய நெஞ்சு அழன்றான் - கொடுந்தன்மையையுடைய மனம் கொதித்தான்! (அப்பொழுது) அருகுஉற- (அத்துரியோதனனது) சமீபத்தில், குறுகின்-நெருங்கினால், குன்றம் ஆயினும்-மலையேயானாலும், நீறு எழும் - பொடியாய்விடுமன்றே; (எ - று.)

"எளியவரும் தம் நிலத்து வலியராவராதலால் விராடனைச் சேர்ந்தோர் வலியநம்மைத் தந்நிலத்து வென்றனரென்று கூறியதை வீடுமன் முதலோர் உடன்பட்டனராக, துரியோதனன் மனம்பொறாமல் அருகே சாரின் குன்றும் நீறும்படி அவ்வளவு சினங்கொண்டன னென்றவாறு. தனது எண்ணத்திற்கு மாறுகப் பகைவர் சிறப்பை எடுத்துக்கூறியமை குறித்து, துரியோதனன் கோபித்து நெஞ்சழன்றான். அன்றியும், அஞ்ஞாதவாச காலத்திற்குள் பாண்டவரைக் கண்டுபிடித்து மீண்டும் காட்டிற்கே துரத்திவிடவேணுமென்று தான் கொண்டிருந்த எண்ணம் நிறைவேறாமையும் கோபத்திற்குக் காரணம். ஏற்றடி-துரியோதனன் சினமிகுதியைவிளக்கும் கவிக்கூற்று. இனி,-'குன்றமாயினும்' என்னும் நான்காம் அடி முதல் மேலைப்பாட்டின் முடிவளவும் ஒரு தொடராக்கி, இதனையும் கர்ணன் பேச்சாகக்கொண்டு-சபீபத்தில் நாம்தெரு நிறப் போரசெய்தால், நமக்கு நிலக்காவது மலையேயானாலும்அதுவும் பொடியாய் விடுமெனக் கூறினனெனக். கொள்வாரு முளர். 'நினைவிதுவென்றார்' என்பதற்கு-(எங்களுடைய) எண்ணமும் இதுவே யென்றனரென்றும் பொருள் கொள்ளலாம். குன்றமாயினும், உம்மை - உயர்வுசிறப்பு; அது, மலையினது பெருமைவலிமை அசைக்கலாகாத நிலைமைகளை விளக்கிநின்றது. போர் செய்து நெருக்கிநெல்லத்துணைவல்லோரும் அழிவ ரென்றபடி.

விதுரன்-விசித்திரவீரியனது மனைவியாரிலொருத்தியான அம்பிகையிலே லேவியனுப்பப்பட்ட தாதிப்பெண்ணினிடத்து வியாலமுனிவராருளாற் பிறந்தவன்; திருதராட்டிரனுக்கும் பாண்டுவுக்கும் தம்பிமுறை யாகின்றவனுதலால், துரியோதனுதியர்க்கும் பாண்டவர்க்கும் சிற்றப்பன்: வில்போர்த்திறத்தில் மற்றையாவரினும் வல்லவன்; தத்துவஞானமமைந்தவன். இவனே யமதருமராஜனது அமிச மென்றும், பரமபாகவதர்களிலொருவ னென்றும் நூல்கள் கூறும். வீடுமன் - பீஷ்மன் என்ற வடசொல்லின் சிதைவு; பயங்கரனெனவெனன்பது பொருள்; அச்சந்தருகின்ற விரதமுடையவனென்பது கருத்து; இவன், தன்தந்தைக்கு சியோஜநகந்தியை இரண்டாவது மணஞ் செய்வித்ததற்கு அவளை வளர்த்த தந்தையான செம்படவன் இசைதற்பொருட்டு, தான் விவாகஞ்செய்து கொள்வதில்லை யென்றும், சூத்தமகனுதலாற் பட்டத்திற்கு உரிய தனது இராச்சியத்தையும் மற்றையெல்லாச் செல்வங்களையும் தனக்குச சிறியதாயாக வருமவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்கே கொடுப்பதாகவும், இங்ஙனம் ஒழித்தற்கு அரிய மண்ணுசை பெண்ணுசை பொன்னுசை யென்னும் மூவகையாசைகளையும் இளமையிலேயே யொழித்துக் கேட்போர்

அஞ்சும்படியான சபதத்தைச் செய்ததனால், இவனுக்கு இப்பெயர். தேவர்கள் முன்னிலையில் இந்தவிரதத்தை ஏற்படுத்திக்கொண்டதனால், தேவவிரத னென்றும் இவனுக்குப் பெயருண்டு.

நாகம் என்ற வடசொல் - நகத்தில் வாழ்வது என்று பொருள்படும்; நகம்-இடம்விட்டுப்பெயராதது: மலையும், மரமும்.கொடியவன் நெஞ்சு அழன்றன் - திண்ணவழுவமைதி. 'கொடியவன் கொடிய'என்ற இடத்து -மடுக்கு என்னுஞ் சொல்லணி காண்க. (நிஉ)

53.—கர்ணன் அலக்ஷியமாகக் கூறுதல்.

(இ - ள்.) அங்கு - அவ்விடத்தில் [எதிர்ப்பக்கத்தில்], தேரும்—, ஒரு தேர் - ஒற்றைத்தேராகும்; தனி தேரின்மேல் நின்று - அந்த ஒரு தேரின் மேற் பொருந்தி, வீர(ர்) வெம் சிலை வளைத்த கை-வீரர்களுக்குரிய கொடிய வில்லை வளைத்துப்பிடித்த கையையுடைய,வீரனும் - வீரனொருவனும், பேடி - ஆண்மையில்லாத பேடியாம்; (இங்ஙனமாகவும்), யாரும் - பேர்பெற்ற நீங்களெல்லாரும், நெஞ்சு அழிந்து - மனந்தளர்ந்து, அஞ்சுவது - பயப்படுவது, என் - என்னகாரணத்தால்?' என்று—, சூரன் மா மகன் ஆகிய - சூரியனது சிறந்த குமாரனாகிய, சூரில் சூரன் - வீரர்களிற்சிறந்த வீரனாகிய கர்ணன், இசைத்தான் - சொன்னான்; (எ - று.)

'சூரன்' என்கிற சொல் இரண்டும் - முறையே லகரன் ழகரன் என்ற வடமொழிகளின் திரிபு. "ஒன்று தேரிலுலொருவன் கூற்றமே, யென்று கூறினு மொருவனென்செயு, மின்று கோடுநா மெழுகென் றேகினர்" என்ற சீவகசிந்தாமணி, இங்கு ஒப்புநோக்கத்தக்கது. ஆடவர்க்குரிய விற்றொழிலை மேற்கொண்டதனால், 'வீரனும் பேடி' என ஆண்பாலாகக் கூறினான். கர்ணன் அகம்பாவமுடையனதலால், 'விதுரன் ஒருகால் எதிர்த்தவன் அருச்சுனனையிருக்கலாமோ?' என்ற கருத்துடன் கூறியதை யவமதித்து. அவ் விதுரன் முதலாவோர் அஞ்சுவதை இழித்தற்பொருட்டு, பேடியை 'வீரன்' என்றான். வீரனும் பேடி என்றதனால், அருச்சுனனே என்று ஐயுறுதற்கும் இடனில்லையென்பதையும் காட்டியவாறு. கொல் - அசைநிலை. 'யாரும்' என்றது – இங்கு முன்னிலைப்படர்க்கை. எந்தியவனது வீரத்தை வில்லின் மேலேற்றி 'வீரச்சிலை' என்றதாகவுங் கொள்ளலாம்; 'சினவாள்' என்றாற் போல. (நிஊ)

54.—துரியோதனனது கட்டளை.

(இ - ள்.) (அதுகேட்டு), சுயோதனன் - துரியோதனன்,—,தானும்- 'கொண்ட கோ நிரை - கவர்ந்துகொண்டுவந்த பசுக்கூட்டங்களை, கோவலர் - (நமது) இடையர்கள், கொண்டு - ஓட்டிக்கொணடு, முன் போக - முன்னே போகாநிற்க, தண்டு - (நம்) சேனையானது, நிற்க - (அவ்விடையர்க்குத்) துணை நிற்பதாக,' என - என்று கட்டளையிட்டு, தம்பியர் அனைவரும் - தம்பிமார்களெல்லாரும், திண் திறல் பெரும் பேடியை - மிக்க வலிமையையுடைய பெரிய பேடியை, தேர்மிசை கண்டு - தேரின்மேற் பார்த்து, மின்னவீர்-

நெருக்கிப்போர்செய்வீர், என கூறி - என்று சொல்லி,—, மீண்டான் - போர்க்களத்துக்குத் திரும்பினான்; (எ - று.)

'தானும்' என்றது, கர்ணனைப்போலவே இந்தத் துரியோதனனும் மனநிலைகொண்டு கூறினனென்பதைப் புலப்படுத்தும். ஆகவே, உம் - இறந்தது தழுவிய எச்சம். 'போக' என்னும் செயவெனச்சம் - உடனிகழ்ச்சிப் பொருளதாய்த் தனக்குரிய நிகழ்காலத்தில் வந்து, 'ரிற்க' என்னும் வினை கொண்டது. அனைவரும் = அனைவீரும்: முன்னிலையிற்படர்க்கைவந்த இடவழுவமைதி. ரிற்கென - வியங்கோளீற்று அகரம்தொகுத்தல். (நிசா)

55.—அருச்சுனன் வடபுலத்து நிரைமீட்டல்.

(இ - ள்.) (பின்பு),—போன பேடி - (போர்க்குச்) சென்ற பேடியாகிய அருச்சுனன், —மானம் மா முடி மன்னரை - மானமுள்ளவர்களும் பெரிய கிரீடந்தரித்தவர்களுமான பகையரசர்களை, விலக்கி - விலகச்செய்து,—வல் விரைந்து - மிகவும் வேகமாய், குலம் கோ நிரை கொண்டு போம் - சிறந்த பசுக்கூட்டங்களைக் கவர்ந்து போகின்ற, கோ நிரை - ராஜபரிவாரத்தை, துரந்து - துரத்திக்கொண்டுபோய்,—வெம் பூசலும் - கொடிய போரையும், பொழுது உற - உரியகாலம் பொருந்த, பொருது - செய்து,—தூ நிறத்து - பரிசுத்தமான தன்மையுள்ள, இளங் கன்று உடை தொறுக்களும்-சிறுகன்று களையுடைய பசுக்கூட்டங்களையும், மீட்டான் - திருப்பிக்கொண்டுவந்தான்.

கீழ் உ0-ஆஞ் செய்யுள்போலவே, இச்செய்யுளும் - உத்தரகிரைமீட்சி கூறினமையின், இசசருக்கத்துக்கு உயிர்நிலைச் செய்யுளாம்.

போரில் மிண்டிய வீடுமன் துரோணன் முதலியவர்களையெல்லாம் விலகச் செய்து பசுநிரையைக் காத்திருந்த அரசவர்க்கத்தையும் விரைவில் வென்று பசுக்கூட்டத்தைத் திருப்பிக்கொண்டுவந்தனன், அருச்சுனனுகிய பிருகந்நளை யென்க. பொழுதுறற - சொற்பகாலத்திலென்றபடி: இனி, பொழுது உற - அஜ்ஞாதவாசவருஷங் கழித்தற்குக் குறைவாய்நின்ற நான்கு நாழிகைப் பொழுது கழியுமளவுமென்றும், பொழுதுவிடியுமளவுமென்றும் உரைப் பாருமுளர். 'மான மா முடி மன்னர்' என்றது - "மயிர்நீப்பின் வாழாக் கவரிமாவன்னர், உயிர்நீப்பர் மானம் வரின்" என்றபடி தம்தலையைக் கொடுத்தா யினும் மானத்தைக் காக்கவல்ல வீர ரென்றவாறுமாம். மானமாவது - எப் பொழுதும் தம் நிலையினின்று தாழாமையும், ஊழ்வினையால் தாழ்வு வந்த விடத்து உயிர் வாழாமையுமாம். மாநம் - வடசொல். இனி,மானம் - செருக்கும், தமது அரசனிடத்து அபிமானமும், பெருமையும், வலிமையுமாம். வல்விரைந்து - ஒரு பொருட்பன்மொழி. வல் - விரைவுப்பொருளுணர்த்தும் இடைச்சொல். கோ - பசு என்ற பொருளில்வடமொழியும், அரச ரென்ற பொருளில் தமிழ்மொழியுமாம். குலம் - சிறப்பென்னும் பொருள தாதலை 'குலபர்வதம்' என்ற இடத்துங் காண்க.

'தூநிறத்து' என்றது - இளங்கன்றுடைத்தொறுக்களுக்கு அடைமொழி. பசுக்கள் ஆதியில் திருப்பாற்கடலினின்று தோன்றியமை, யாகம் முதலியவை

திகச்சடங்குகளுக்கு வேண்டிய பால் முதலியவற்றைப் பசுக்கள் உதவுதல், பசுக்களின் உறுப்புக்களில் தேவர்களதுகலைகளும் முனிவர்களுடைய அம்சங்களும் புண்ணியதீர்த்தங்களின் பகுதிகளும் அமைந்திருத்தல், பசுக்கள் தரும் பஞ்சகவ்வியங்கள் அனைவர்க்கும் பரிசுத்திகரமாதல், பசுக்களைப் பரிசித்தல் பிரதக்ஷிணம்புரிதல் பாதுகாத்தல் பிறர்க்குக்கொடுத்தல் செய்பவர்க்குத் தீவினைதீர்ந்து நல்வினையுண்டாதல் முதலிய சிறப்புக்கள்பற்றி, பசுக்கூட்டத்துக்கு 'தூநிறத்து' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது: தூ - தூய்மை யென்னும் பண்புப்பெயரின் விகாரம். குலம் - கூட்டம் என்று கொண்டு, ஒன்றன்கூட்டம் பலவினீட்டம் என்ற இருவகையைக் கருதி 'கோநிரைக்குலம்' என்றன ரென்றலு மொன்று; ஒவ்வொருவகையிலும் பல பசுக்களென்றவாறும். 'கோநிரை' என்ற தொடர் வெவ்வேறு பொருளில் வந்தது - சொற்பின்வருநிலையணி. 'வல்விரைந்து' என்றதை 'கொண்டு போம்' என்பதனேடும், 'துரந்து' என்பதனேடுங் கூட்டலாம். (நுஙி)

56.—துரியோதனனைச்சார்ந்த இடையாது ஒடுக்கமும், உத்தரனைச்சார்ந்த இடையாது மகிழ்ச்சியும்.

(இ - ள்.) முந்த - முன்னே, ஆன் தொறு - பசுக்கூட்டத்தை, மீட்டலும் - (பேடி) மீட்டுக்கொண்டுவந்த அளவில்,— (அதனால்),—முன் கவர் பொதுவர் - முன்பு (பசுக்களைக்) கவர்ந்துகொண்டுபோன (துரியோதனனேடுவந்த) இடையர்கள்,—வெந்த நெய் என - நன்றுய்க்காய்ந்த நெய் (ஒசையடங்குதல்) போல, மிகவும் ஆரவம் அடங்கினர் - முற்றும் ஆரவாரமடங்கினர்கள்; வந்த மச்சர் கோ மகனேடும் வந்த கோபாலர் - (நிரைமீட்க) வந்த உத்தரகுமாரனேடு வந்த இடையர்கள்,—அந்த நெய்யினில்-அவ்வாறு நன்றுகக் காய்ந்த கொதிக்கின்ற நெய்யில், பால் துளி உகுத்து என - பாலின்துளியைத் தெளித்தால் (மிக்கஒசை எழுமாறு) போல, (மிகவும்) ஆர்த்தார்-(மகிழ்ச்சியால்) மிகவும் ஆரவாரித்தார்கள்; (எ - று.)

வான் தொறு என எடுத்து - சிறந்த [மிக்க] பசுக்கூட்டமெனினுமாம். பொதுவர் - நாடும் நாடுசார்ந்த இடமுமாகிய மருதநிலத்துக்கும் மலையும் மலைசார்ந்தஇடமுமாகிய குறிஞ்சி நிலத்துக்கும் நடுவிடமான காடும் காடு. சார்ந்த இடமுமாகிய முல்லைநிலத்தில் உள்ளவர்; 'இடையர்' என்பதற்குங் காரணம்இதுவே. (பொதுவனென்பதன் பெண்பன்மை, பொதுவியர்.) ஆரவம் - வடசொல்; இங்கே, கொண்டாட்டத்தாலுண்டாகும் பேரொலி. 'மிகவும்' என்றது-மந்திமதீபமாய், முன்நின்ற 'அடங்கினர்' என்றதனேடும், பின்நிற்கும் 'ஆர்த்தார்' என்பதனேடுங் கூட்டப்பட்டது. 'உகுத்தென' என்பதை - உகுத்தாலென வென விணையெச்ச விகாரமாகவாயினும், உகுத்ததென வெனத் தொழிற்பெயர்விகாரமாக வாயினுங் கொள்க. மச்சர்கோ மகன் - மச்சநாட்டிலுள்ளார்க்கு அரசனுகிய விராடனது குமாரன். கோபாலர் - பசுக்களைக் காப்பவர்; வடசொல்.

வெந்தநெய் - காய்ச்சுகையில் வெண்ணெயின் நீர்ப்பசையற்ற நெய்; கொதிப்புத்தணியாத நெய். தொழில்பற்றி வந்த உவமையணி. பால்துளி

யுகுத்தல், நீர்ப்பசையற்றதையும் அழுமையையும் உணர்த்தற்கென்க. வெந்த நெய்யென ஆரவமடங்கின ரெனவும், அந்நெய்யினிற் பாற்றுளியுகுத்தென ஆர்த்தா ரெனவுங் கூறியன - இடத்துக்கும் சாதிக்கும் ஏற்ற உவமைகள்; இங்ஙனங் கூறுவது, மகாகவிகளது இயல்பு: சிந்தாமணியிலும் கோவிந்தையாரிலம் பகத்தில் "ஆய்த்தியர்நலக் காசெல்தூணனன்," "ஆயர் மத்தெறி தயிரிஞையினர்," "மத்தம் புல்லிய கயிற்றின் மற்றவ, ரத்தலைவிடி னித்தலைவிடார்," "வெண்ணெய்போன்றாதினியண் மேம்பால்போல் தீஞ்சொல்ல, ளுண்ணவுருக்கிய வானெய்போன் மேனியள்," "ஊழிதோறுவுந்தோழும் போன்றுடன் மூக்க" என ஆங்காங்குக் கூறியிருத்தல் காண்க. (நகு)

57.—பசுக்கள் மீண்டுதொடி வருதல்.

(இ - ள்.) பால் எடுத்த பொன் குடம் நிகர் மடியின - பாலை நிரம்பக் கொண்ட பொன்மயமான குடத்தைப் போன்ற மடியையுடையவைகளும், பருவம் சூல் எடுத்த நல் வயிற்றின - பருவமுதிர்ந்த கருப்பத்தைக்கொண்ட அழகிய வயிற்றையுடையவைகளும், மழ விடை தொடர்வு-இளமையுள்ள எருதுகளாற் காதலோடு பின்தொடரப்படுவனவும்ஆகியபசுக்கள்,—இளங் கோவலர் - (உத்தாகுமாரனோடு) வந்த இளைய இடையர்கள் [இடைப்பிள்ளைகள்], கோல் எடுத்து - (கையிற்) கோலை ஓச்சி, கூவினர் தூரப்ப - கூவி ஓட்ட, வால் எடுததனை - வாலைத் தூக்கிக்கொண்டவைகளாய், துள்ளி—, மீண்டு-திரும்பி, வனம்-(தாம் வழக்கமாகமேயும் விராடனதுகாப்புறத்துக்) காட்டிற்கு, ஓடின—; (எ - று.)

'பாலெடுத்தபொற்குட நிகர்மடியின'-கறக்கும் பசுக்கள். 'பருவச்சூலெடுத்தநல்வயிற்றின'-சினைமுதிர்ந்த பசுக்கள். 'மழவிடைதொடர்வு'-சினைகொள்ளற்பாலன வாகிய பசுக்கள். பருவசூல் - பூர்ணகர்ப்பம். பருவம் = பர்வம் : வடசொல். வாலெடுத்துத் துள்ளிக் குதித்தோடுதல் - கொண்டாட்டமிகுதி பற்றி; இது - பசுக்களின் இயல்பு. இச்செய்யுள் - பசுக்களின் சாதித் தன்மையை வருணித்ததனால், தன்மைநவிற்சியணி.

மழ - இளமையுணர்த்தும் உரிச்சொல். மடியின, வயிற்றின, தொடர்வ- பலவின்பாற்பெயர்கள். வனம் = முல்லைநிலம். (நஎ)

58.—சாபம்நீங்க, அருச்சுனன் தனது தேரினையும் அநுமந்துவசத்தையும் பெறுதல்.

(இ - ள்.) (அருச்சுனன்),—கடிகை நால் அவண் சென்ற பின் - (அஜ்ஞாதவாசவருஷத்தின் கடைசி) நான்குநாழிகைப்பொழுதும் அவ்வண்ணம் கழிந்தபின்பு,—கடை சிவந்து அகன்ற நெடிய கண்ணி - கடைப்பக்கஞ் செந்நிறமாய்ப் பரந்து நீண்ட கண்களையுடையளான ஊர்வசி, அன்று - அந்நாளில் [முன்புதான் தேவலோகத்துச சென்றிருந்தபொழுது], இட்ட - (தனக்குக்) கொடுத்த, வெம் சாபமும்-கொடிய (பேடிவடிவும் பெறற்காரணமான) சாபமும், நீங்க-நீங்கியவளவில்,—கொடியின்மீதுஎழும்-(தனது) துவசத்தின்மேல் எழுந்தருள்கிற, அனுமனை - அநுமானை, குறிக்க - தியானிக்க,—(அதனால்

அப்பொழுதே), அ கொடியும் - அவ்வநுமத்துவசமும், முடி கொள் தன் தனி இரதமும்-சிகரத்தைக்கொண்ட தனது ஒப்பில்லாத தேரும், முன்வர - (தனது) எதிரில் வர, கண்டான் - பார்த்தான்; (எ - று.)

அக்கினிதேவனளித்த தேரையும் அநுமக் கொடியையும் அருசுனன் எதிரில் வரப்பெற்ற னென்றபடி. குறித்தல்-மனத்தில்நினைத்தல். அவண் = அவ்வண்ணம்: ராஜபரிவாரங்களைத் துறத்திப் பொருது நிரைமீட்டதிலென்ற படி. கடைசிவத்தல்-நல்லிலக்கணமாகிய சிலசிவத்தஇரேகைகளைக் கடையிட த்தேதபெறுதல்.குரங்குக்கொடியும், நான்கு வெள்ளாக்குதிரைகள் பூட்டிய தே ரும்,காண்டீவமென்னும் வில்லும்,அகூயதூணீரமும்-காண்டவதகனகாலத்து அக்கினிதேவனால் அருசுனனுக்கு அளிக்கப்பட்டவை. பின்பு வீமசேனன் புஷ்பயாத்திரையாக அளகாபுரிக்குச சென்றபொழுது இடைவழியிற் கதலிவ னத்திலே தவஞ்செய்துகொண்டிருந்தவனும் வாயுகுமாரனுதலால் தனக்குத் தமையனுமான அநுமானைக்கண்டு வணங்கி வேண்டிப் போர்க்களத்தில் அருச் சுனனது தோத்துவசத்தில் வந்து நின்று மகிழ்ந்து கூத்தாடுமபடி வரம்பெற் றதனால், 'கொடியின்மீதெழு மனுமன்' என்றார். அநுமன் - ஹநுமாந் எனற வடசொல்லின் விகாரம்; (குழந்தைப்பருவத்திலே இளஞ்சூரியனைக் கனிந்த பழமென்று கருதிப் பிடிக்கப் பாய்ந்தபொழுது அதனையதிர்ந்து சினந்து இந் திரனால் வசிராயுதங்கொண்டு அடிக்கப்பட்டுச சிதைந்த) கன்னமுடையதை லால், இப்பெயர் வாய்த்தது; கன்னத்தில் விசேசகமுடையவ னென்க:ஹநு-கன்னம், மாந் - வடமொழிப்பெயர்விகுதி. கேசரியென்னும் வானரராஜனது மனைவியான அஞ்சநாதேவியினிடத்தில் வாயுபகவானது அநுக்கிரகத்தால் தோன்றியவ னிவன்; இவனிடத்து ருத்திராமிசமும் உண்டு. (நஅ)

59.—உத்தரன் ஸாரதியும் அருசுனன் ரதியுமாய்ப் போர்கிந நிற்றல்.

(இ - ள்.) கரிய மேனியன் - கறுத்த உடம்பின்நிறத்தையுடையவனும், செய்ய தாமரை தட கண்ணன்-செந்தாமரைமலர்போன்ற பெரிய கண்க ளையுடையவனுமாகிய அருசுனன்,—உரிய தேரினை மீதுகொண்டு-தனக்குரிய தேரின்மேல் எதிர்கொண்டு,—உத்தரன் செலுத்த - (அத்தேரை) உத்தரன் நடத்தாநிற்க,—பொலம் பொன் கிரியின்மீது எழும் - அழகிய பொன்மய மானதொரு மலையின்மேல் விளங்குகின்ற, மரகதம் கிரி என - பசுமையிரத் தின மயமானதொரு மலைபோல, கிளர்ந்து - விளங்கி,—புரிய வாங்கிய சிலை யினன - நன்முகவளைத்து நாணேற்றிய வில்லையுடையவனும், நின்றனன் - (கம்பீரமாக) நின்றான்; (எ - று.)

பசுநிரையை மீட்டபின்பும், பகைவர் பொரவர, அருச்சுனன் அவரு டன் போர்புரிவதற்குச சலியாது சித்தமும் அம்புதொடுத் தெய்யும் நிலை மையில் நின்று னென்க. பொன்மயமான தேர்க்குப் பொன்மலையும், அதன் மேலுள்ள கருநிறமுடைய அருசுனனுக்கு மரகதமலையும் - உவமை. மலர்ச் சியும் குளிர்சியும்சிவப்பும் கண்டோரை மகிழவித்தலும் அழகும்பற்றி, கண்

களுக்குச் செந்தாமரைமலர் உவமை. புரிய - போர்புரிய வென்றுமாம். மரகதம் - மரதகம்; எழுத்து நிலைமாறுதல், இலக்கணப்போலி. இரண்டாமடியில் 'கரிய' 'செய்ய' என மாறுபட்ட சொற்கள் வந்தது - தொடைமுரண். மரகதகிரி-வடமொழித்தொடர், ஆதலின், வலி இயல்பு. (நகூ)

60.—அருச்சுனன் பேடிவடிவொழிந்து நிஜரூபத்தோடு வெளிப்படுதல்.

(இ - ள்.) நரன் எனும் நாமன் - நரனென்ற பெயரையுடையவனென அருச்சுனன்,—படும் குறும் பனி புதைத்தலின்-(விரைவில்) அழியும்படியான அற்பமாகிய பனி மூடுதலினாலே, பரிதிதன் உருவம் - சூரியனது மண்டலம், ஒடுங்கும் ஆறு என - மறையும்விதம்போல, ஒளித்த - (தான்) உருமறைந்திருப்பதற்குக் காரணமான, தன் பேடு உரு - தனது நபும்லகரூபத்தை, ஒழித்து - நீக்கி,—நெடுங் கொடுங் கணை நிருபன்-நீண்ட கொடிய அம்புகளையுடைய துரியோதனராசனது, வெம் சேனையின்-கொடிய சேனையிலுள்ள, வேந்தர்-அரசர்கள், நடுங்கும் ஆறு - அஞ்சி நடுங்கும்படி, முன் தோன்றினன் - (அவ்வரசர்களுக்கு) எதிரில் வந்து நின்றான்; (எ - று.)

அஜ்ஞாதவாசத்திற் கழிக்கவேண்டிய காலம் கழிந்துவிட்டதனால், அருசுனன் நிஜரூபத்தோடு அவ்வரசர்கள்முன்னிலையில் வந்து நின்றனனென்க. முன் - இடமுன். புதைத்தலின், இன் - ஐந்தனுருபு, ஏது. படும் - (தனக்குரியபருவத்தில்) உண்டாகின்ற என்றலுமாம். சூரியமண்டலம் - அருச்சுனனுக்கும், குறும்பனி - பேட்டுருவிற்கும் உவமை. கணைக்குக்கொடுமை - கூரியதாய்ப் பகைவர்களைக் கொல்லுந் திறம். நிருபன் - வடசொல்: மனிதரைக் காப்பவனென்று பொருள்படும். 'பேடு' என்ற சொல் - ஆணவாய்ப் பெண்ணிழந்த அலியும் பெண்ணவாயாணிழந்த பேடியுமாகிய நபும்லகவகையிரண்டுக்கும் பொதுவாமென்று உணர்க. பேடு + உரு = பேட்டுரு: நெடிற்றொடர், வேற்றுமையில் டகரவொற்று இரட்டியது; [நன் - உயிர் - நகூ.] முன்னிரண்டடியில் உவமையணி காண்க.

முன்னொருகாலத்திலே குருசிஷ்யக்கிரமத்தை உலகத்தில் அனவரதமும் விளக்குதற்பொருட்டு நரனென்ற சிஷ்யனும் நாராயணனென்ற குருவுமாகப் பதரிகாச்சிரமத்தில் தோன்றிச் சீடனுக்குக் குரு தத்துவப்பொருள்களை உபதேசிப்பதாக வீற்றிருக்கின்ற திருமாலின் இருமூர்த்திகள்தாமே இங்கு முறையே அருச்சுனனும் கண்ணனுமாக அவதரித்ததனால், அருச்சுனனுக்கு நரனென்று ஒருபெயராயிற்று. இங்கும் இனி அருச்சுனனைச் சிஷ்யனாக்கிக் கண்ணன் குருவாய்நின்று கீதையுபதேசித்துத் தத்துவம் விளக்கியருள்வதும் காண்க. (சுஐ)

61.—அருச்சுனனது துவசத்தில் அனுமன் கூத்தாடுதல்.

(இ - ள்.) அனுமன் - அநுமான்,—அருச்சுனன் தட தேர்கொடி ஆடையில் - அருச்சுனனுடைய பெரிய தேரினது கொடிச்சீலையில், உண்மைக்குநின்று - பிரதியக்ஷமாகப் பொருந்தி,—(முன்பு மகேந்திரமலையின்மேலேறி இலங்கைக்குச் செல்லக் கடலைத் தாண்டியமைபோலவே), செரு செய்வான்

வரு சேனை வெள் திரையையும் - போர்செய்தற்கு எதிர்த்துவருகின்ற பகை வர்சேனையாகிய வெண்ணிறமான அலைகளையுடைய கடலையும், கடப்பான் - தாண்டுதற்பொருட்டு, பரு சிலம்பின் நின்று - பருத்ததொரு மலைமேல் நின் றும், உகைதரு - உதைந்து எழுகின்ற, பாவனைபோல - தோற்றம்போல,— உரு செழுஞ் சுடர் எறிப்ப - (தனது) உருவம் திக்கமுளியை வீசும்படி, உலா வினன் - உலாவி விளங்கினன்; (எ - று.)

கடலுவமையால் சேனையின்பரப்பும், மலையுவமையால் தோள் பெரு மைவலிமைகளும் விளங்கின. தபதரிப்பேற்றவனை. உலாவினன் - அக்கொடிச்சீலை காற்றில் அசைகின்றபோது அதிலுள்ள வாநரவடிவும் அசைய, அவ்வடிவத்தில் ஆவேசித்துநின்ற அநுமான் கூத்தாடினனென்க. உண்மைக்கு உலாவினன் என்று இயைத்து-முன்பு வீமனுக்குத் தான் வரம் கொடுத்த வாய்மை தவறுதபடி உலாவின னென்றலு மொன்று.

வெண்டிரை - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொ கை; வெண்குடை, வெண்சாமரை, வெண்புரவி முதலியன சேனையில் நெருங்கியிருத்தல் பற்றி, 'சேனை வெண்டிரை' என்றனரென்னலாம். திரை வது திரை யெனக் காரணக்குறி; திரைதல் - சுருங்கிமடிதல். உம்மை - இராமாயணகதையைச சுட்டுவதால், இறந்ததுதழுவிய எசசப்பொருளது; அக்கதைவருமாறு:—சீதையைத் தேடுதற்பொருட்டு இராமபிரானால் தென் திசைகுறித்து அனுப்பப்பட்ட அங்கதன்முதலிய வாநரவீரர்கள் அசிதா பிராட்டி தென்கடலிடையேயுள்ள இலங்கைத்தீவி லிருக்கின்றனை யென்று சம்பாதி சொல்லால் அறிந்தபின்னர் நூறுயோசனைநூறமுள்ள அக்கடலைக் கடக்கும் ஆற்றலிலராய் வருந்துகையில், ஜாம்பவானால் தூண்டப்பட்ட அநு மான் மகேந்திரகிரியின்மேலேறிப் பெருவடிவங்கொண்டு தாவி அக்கடலை எளிதிற்கடந்து இலங்கைசேர்ந்தன னென்பதாம். (சுக)

63.—அநுசுனனது வின்னுரெணலியாற் பகைவர் அஞ்சுதல்.

(இ - ள்.) மரு மிகும் தொடை - நறுமணமிக்க (போர்க்குரிய தும் பைப்பூ) மாலையைத் தரித்த, தட புயம் - பெரிய தோள்களையுடைய, மக பதி மதலை - தேவேந்திரகுமாரனாகிய அருசுனன், பெருமிதம் பட-(தனது) வீரத்தன்மை தோன்றும்படி, வளைத்த - வணக்கிய, வில்-வில்லிலே ஏற்றிய, பிறங்கும் நாண் - விளங்குகின்ற நாணியைக் கைவிரலால்தெறித்ததனு லுண்டான, ஒலியால் - ஓசையால்,—எங்கணும் - எல்லாவிடத்தும் [அவனை சுசுற்றிலும்], செருமி - நெருக்கி, கரி பரி தேர் மிசை நின்றோர் - யானை குதிரை இரதங்களின்மேல் ஏறிநின்றவர்களான வீரர்கள்,—உருமின் வெம் குரல் கேட்ட - இடியினது கொடிய ஓசையைச் செவியுற்ற, கோள் உரக ரோடு - வலிமையையுடைய நாகசாதியாரோடு, ஒத்தார்-ஒத்தவராஞர்கள்.

இடியொலி கேட்டமாத்திரத்தில் நாகர் அஞ்சி அழிவது போல, அருச்சுனனது வின்னுரெணலியைக் கேட்டவளவிற் பகைவர் அஞ்சின ரென்ற படி; இடியோசைக்கு அஞ்சிப் பாம்புகள் ஒடுங்குதல் இயல்பு: "விரிகிற நாகம்

விடருள தேனு, முருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்" என்றநாலடியாரையுங் காண்க. மக பதி - வடமொழிப்பெயர். யாகங்களுக்குத் தலைவன்; நூறு அசுவமேதயாகஞ் செய்து தேவேந்திரபதவி பெறுதலால், இப்பெயர் வந்த தென்க. பெரு மிதம் - எல்லோரோடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல்; எனவே, வீரமாயிற்று. கரீ - வடசொல்; அது ஈயீறு இகரமாயிற்று; அதன் உறுப்புப்பொருள், கரமுடையது: கரம் - துதிக்கை. உரகம் - மார்பினால்வாவது; வடசொல்: உரம் - மார்பு. கோள் - உயிரைக் கொள்ளுந் தன்மையாகவுமாம். 'உரகரோடொத்தார்' என்றவிடத்து, மூன்றனுருபு - ஒப்புப்பொருளில்வந்தது. ("வெட்சிநிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம், வட்கார்மேற்செல்வது வஞ்சியாம்—உட்கா, தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்தல் நொச்சி, யதுவளைத்த லாகு முழிஞை - யதிரப், பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர். செருவென்றது வாகையாம்" என்றதனால், வீரர்கள் இன்னரின்னசமயத்தில் இன்னின்னமலர்மாலை யணியக்கடவ ரென்பதை யறிக.) இங்கு 'மருமிகுந் தொடை' என்றது - தேவலோகத்துக் கற்பகவிருக்ஷங்களின் நிவ்விய புஷ்பங்களா லாகிய மாலையுமாம். (சுஉ)

63.—பலவகையோலிகேட்டுஅந்தி உத்தரான் பாதுதொழிலையும் மறந்து மூர்ச்சித்தல்.

(இ - ள்.) குளிர்த்த சங்கு ஒலி - (அருச்சுனன்) ஊதித்தொனிசெய்த (தேவதத்தமென்னுஞ்) சங்கத்தின் நாதமும், சிங்கநாதத்து ஒலி - (அவன்) விம்மிதநாதஞ்செய்த ஓசையும், குனி வில் செறித்த நாண் ஒலி - (அவன்) வளைத்த வில்லில் உறுதியாகப்பூட்டிய நாணியின் ஓசையும், செவி பட - (தன்) காதுகளிற் பட்ட [கேட்ட] மாத்திரத்தில், உத்தரன்—, சிந்தனை கலங்கி - மனம்கலங்கி, பொறி மயக்கு உற்று - அறிவுமயக்கமடைந்து, மாவிடு தொழிலையும் மறந்து - குதிரையோட்டுஞ் செயலையும் மறந்துவிட்டு, பொறித்த பாவையின் - சித்திரத்திலெழுதிய பிரதிமைபோல(ச் செயலற்று), மறித்தும் - மறுபடியும், வீழ்ந்தனன் - (தேரில்) விழுந்தான் [மூர்சசித்தான்].

'மறித்தும்' என்றது, கீழ் மூப்பத்தாறுங்கவியில் 'சோர்ந்தான்' என வந்ததை நோக்கி. உம்மை-இறந்தது தழுவிய எச்சப்பொருளது; முன்புபகைவர் சேனையைக்கண்டு மூர்ச்சித்தமைபோல, இபபொழுது அருச்சுனன்செய்த நாதங்களைக் கேட்டு மூர்சசித்தனனென்க. 'தொழிலையும்' எனற உம்மையும்-முன் போர்த்தொழில மறந்ததல்லாமல் இப்பொழுது தேர்த்தொழிலையும் மறந்தா னென்னும் கருத்தைத் தருதலால், இறந்தது தழுவிய எச்சப்பொருளதே; அதனைவே இழிவுசிறப்புமாம். சங்கு = ஸங்கம்: வடசொல். இங்குச் சங்கு கூறியதனால், கீழ் அருசசுனன் வன்னிமரத்தினின்றும் வில்லையும் அம்பையும் எடுத்து வந்த பொழுது தேவதத்தமென்னும் தனதுசங்கையும் உடனெடுத்து வந்தன னென்க; அன்றி. அருமானேத் தியானித்த மாத்திரத்திலே தன்முன் வந்து சேரப்பெற்ற திவ்வியரதத்துடனே இதுவும் வந்துசேர்ந்ததுமாம். சிந்தனை-வடசொற்றிரிபு. மனமும் புத்தியும் அந்தக்கரணங்களில் வெவ்வேறு ரூதலால், 'சிந்தனை கலங்கி' என்றும், 'பொறிமயக்குற்று' என்றும் தனித்தனி

கூறினர். பொறிமயக்குற்று - பஞ்சேந்திரியங்களும் தம்தம்உணர்ச்சி ஒழிந்து என்றுமாம். ஹிம்ஹநாதம் - வடமொழித்தொடர்; வீராவேசத்தாற் சிங்கத்தின் கர்ச்சனைபோல ஆரவாரிப்பது. பாவை - செயலற்றிருக்கையால், உத்தரனுக்குத் தொழிலுவமை. (கூஏ)

64.—மீண்டும் அருச்சுனன் உத்தரனைத்தேற்றித் துரியோதனன்மீது சேர்செலுத்தச் சொல்லுதல்.

(இ - ள்.) தாழ்ந்த ஆடையின் - தொங்கிய சீலையையுடைய, உயர் கொடி தண்டு உடை - உயர்ந்த [மேலான] துவசதண்டத்தையுடைய, தேர் மேல் - தேரில், வீழ்ந்த - மூர்ச்சித்துவிழுந்த, பாகனை - சாரதியான உத்தர குமாரனை, வரி சிலை வல்லான் - கட்டமைந்த வில்லின்தொழிலில் வல்லவனாகிய அருச்சுனன், மீளவும் - மறுபடியும், விரகு உற - பக்குவமாக, தேற்றி-மயக்கந்தெளியச்செய்து,—சூழ்ந்த - (தான்) வஞ்சனையான ஆலோசனைசெய்து வரவழைத்த, தன் பெருந் துணைவனை - தனது பெரிய தமையனாகிய தருமபுத்திரனை, சூதினால் துரந்து - சூதாட்டத்தினால் (ஜயித்து இராச்சியத்தினின்று) துரத்திவிட்டு, வாழ்ந்த - (அவனது) செல்வவாழ்க்கையைத் தான் அடைந்த, மன்னன்மேல் - துரியோதனராசன்மேலே, ஏவினன் - (தேரைச் செலுத்தும்படி உத்தரனை) ஏவினன்; (எ - று.)

இனி, தாழ்ந்த ஆடையின்தேற்றி என்று எடுத்து-தனது தாழ்ந்த ஆடையினாலே (விசிறிப்) பாகனைத் தேற்றி என்றுமாம். "நாழ்ந்தவாடையினுயர் கொடித்தண்டு"—தாழ்வு, உயர்வு - தொடைமுரண். கொடித்தண்டு - கொடி கட்டுகின்ற மரக்கொம்பு. 'மீளவும்' என்றது - கீழ் நாற்பதாங் கவியில் "வெயர்த்த மேனியை நறும்பனி நீரினால் விளக்கி" என்றதனை நோக்கிற்று. விரகு உற - அறிவுண்டாக என்றுங் கொள்ளலாம். விரகு - உபாயங் களினால், உற தேற்றி - நன்றாகத் தெளிவித்து என்றலுமாம். சூழ்ந்த-தம்பியர் நால்வராற் சூழப்பட்ட என்றும், கொடியவிதியினாற் சூழப்பட்ட என்றுங் கொள்ளலாம். பெருந்துணைவன் - ஜ்யேஷ்டப்ராதா. 'சூதினால் துரந்து வாழ்ந்த மன்னன்' என்பது, போரினால் வென்று வாழ வலிமையில்லாதவனைக் குறிப்பித்தற்கு. (கூசு)

65.—அவ்வனமே உத்தரதமாரன் தன்து தேர்செலுத்துதல்.

(இ - ள்.) (அவ்வாறே), மசகநாடன் மா மதலை - மச்சதேசத்தரசனாகிய விராடனது சிறந்த குமாரனை உத்தரனும், அமன்னவன் மொழியால்-அந்த அருச்சுனனது வார்த்தையால், அச்சம் அற்று இருந்து - பயமில்லாதவனாகி [தேறி] (எழுந்து தேரின் முன்னிலையில்) இருந்து, அருணனின் - (சூரியசாரதியாகிய) அருணன்போல, உளவு கோல் கொள்ள - குதிரை தூண்டுங்கோலைக் (கையிற்)கொண்டு சாரத்தியஞ் செய்ய, சுவேதம் வெம்பரி மா - வெண்ணிறமான வேகமுள்ள (அருச்சுனன் தேரிற் பூட்டிய) நான்கு குதிரைகளும்,—உச்சம் வானிடை - உயர்ந்த ஆகாயமார்க்கத்தில், பகலவன் ஊர்ந்த - சூரியன் ஏறிச்செல்லுகின்ற, தேர் - தேரில், பூண்ட - பூட்டப்பட்டுள்ள, பசலைவாசியின் - பசுமை நிறமுடைய குதிரைபோல, ஓடின.

அருச்சுனனைப் பகையிருளாழிக்கும் ஆதித்த னென்பார், அவனது தேர்க்குச் சூரியன்தேரையும், குதிரைகட்குச் சூரியன் குதிரையையும், பாகனுக்குச் சூரியசாரதியையும் உவமைகூறினர்; இத்தன்மையை முன்னும்பின்னும் காணலாம். உவமையாவது. 'பரிசைவாசியிதனிடை சுவேதவெம்பரிமா' முதலியவிடை. ராஜகுலத்தவனாதலால், அருச்சுனனை 'மன்னவன்' என்றது,—பரிவேதம் - வடசொல். உளவுகோல் - குதிரைகளை யடித்தோட்டுஞ் சவுக்கு. பகலவன் - தனது சேர்க்கையாற் பகலைச்செய்பவன்; ஒளியையுடையவ னென்றுமாம். இந்தவான்கு வெள்ளைக்குதிரைகள், காண்டவதகனகாலத்து அக்கினிதேவனால் அருச்சுனனுக்கு அளிக்கப்பட்டனவை; இவற்றை யுடைமையால், அருச்சுனனுக்குச் சுவேதவாகன னென்று ஒரு பெயர். குதிரைக்கு வெம்மை - மிக்க விரைவு. பரி மா - பரியாகிய மா [விலங்கு] என இருபெயரொட்டுப் பணைத்தோகை. (கூரு)

66.—தாரோபாத்தானது தேர்க்கொடியை அருச்சுனனது தேர்க்கொடி யென்று தொடுத்தல்.

(இ - ள்.) 'என் பெருந் தாதை - எனது பெருமைபொருந்திய தந்தை யான வாயுபகவான், விரவி - பகைமைகொண்டு, உரவிஞல் - (தன்) வலிமை யால், வடமேருவை - வடக்கிலுள்ள மகாமேருமலையை, கொடுமுடி ஒடித்து-மூன்றுசிகரங்களை முறித்துத தள்ளி, நின் தாதையை - உனது தந்தையான ஆதிசேடனை, வென்றான்-(முன்பு) ஜயித்தான்; (அவ்வாறே), யான்-நானும், நின்னை - உன்னை, பரிவின் - துன்பப்படும்படி, வெல்வன் - ஜயிப்பேன்,' என்று - என்றுகருதி, அவனிபன் பதாகை அரவை - துரியோதனராசனது கொடியிலுள்ள பாம்பை, இவன் பதாகையில் அணுமன்-அருச்சுனனதுகொடி யுள்ள அநுமான், வந்து அடுத்தான் - வந்து நெருங்கினன்; (எ - று.)

அருச்சுனன்தேர்கொடியிலுள்ள அனுமன் துரியோதனன், தேர்க்கொடியிலெழுதப்பட்டுள்ள பாம்பைநோக்கி 'என்தந்தை உன்தலைவனை முன்னமே வென்றுள்ளான்: அவ்வாறே இப்பொழுது யான் உன்னைவெல்வேன்' என்று கறுக்கொண்டு வீரவாதங்கூறிப் போர்க்குநெருங்குகின்றவாறு போல நெருங்கின னென்றார்; நம்தந்தைபோலவனி. அருச்சுனன்தேர் துரியோதனனதுதேரை வந்துநெருங்கும்பொழுது அவ்வனுமக்கொடி இவனரவக்கொடியை நெருங்கிற்றென்க. பாம்பைப்பிடித்து விடாதபடி உறுதியாகக்கொண்டு வருத்தி யுழுத்தல், குரங்கினியல்பு. உரவுஎனினும், உரமெனினும் ஒக்கும். மேரு-பொன்மலை; இது, பூலோகத்தின் பகுப்புக்களாகிய ஏழுத்வீபங்களுள் நடுவிலுள்ளதான ஜம்பூத்வீபத்தின் நடுவிலே யிருக்கின்றது. மேரு எவ்விடத்திலுள்ளதென்றால், நமக்கு வடதிசையிலுள்ள தென வேண்டுதலின், அதனை வடமேருவென விளங்கக்கூறினர்; 'வடவேங்கடம்" என்றாற்போல. மேருவைக் கொடுமுடி யொடித்து - இரண்டுசெயப்படுபொருள்கள் வந்த வினை; உருபு மயக்கமாய்-மேருவினது கொடுமுடியை யென்றுமாம். 'நின்தாதையை' என்றது, சர்ப்பங்களுக்கெல்லாம் ஆதிசேடன்தலைவனதல்பற்றி. பரிவு இல்நின்ன என்று எடுத்து - (நல்லோர்பக்கல்) அன்பில்லாத உன்னை யென்றலுமாம்;

'பரிவு' என்ற ஒருசொல்தானே துன்பத்தையும் அன்பையும் உணர்த்துதலை "பரிவென்ப துன்ப மின்பம் பகருமன்பிற்கு மப்பேர்" என்ற சூடாமணி நிகண்டினாலும் அறிக.

மேருவைக் கொடிமுடியொடித்த கதை:—முன்னொருகாலத்தில் வாயு தேவனுக்கும் ஆதிசேஷனுக்கும் தமக்குள் யார் பலசாலி யென்று விவாதமுண்டாக, அதனைப் பரீக்ஷித்தறிதற்பொருட்டு வாயுதேவன் மேருமலையின் சிகரத்தைப் பெயர்த்துத்தள்ளுவதென்றும் ஆதிசேஷன் அதுபெயராவொட்டாமற் காத்துக்கொள்வ தென்றும் கோட்பாடுண்டாகி, அங்ஙனமே இருவரும் தேவர் முதலியோரது முன்னிலையில் தம்தம் வலிமையைக் காட்டத்தொடங்கிய பொழுது, ஆதிசேஷன் தனது பெரிய உடம்பினால் மேருவை வளைத்து தனது ஆயிரந்தலைகளாலும் மேருமலையின் ஆயிரஞ்சிகரங்களையும் கவிந்து கொண்டு பெயராவொட்டாமல் வெகுநேரங் காக்க, பின்பு வாயுதேவன் தன் வலிமையால் அம்மலைச சிகரங்களில் மூன்றைப் பெயர்த்துக்கொண்டுபோய்த் தென்திசையில் தள்ளிவிட்டன னென்பதாம். (சுசு)

67.—அருச்சுனன் பொருது பலவீரை யழித்தல்.

(இ - ள்.) (அப்பொழுது அருச்சுனன்), எதிர் - (பகைவர்க்கு) எதிரில், மண்டலம் நிலை ஆய் - (விற்றொழுத்து அம்பினையெய்வார்க்கு உரிய) மண்டல மென்னும் நிலையில் நின்று, வட்டம் ஆக - வட்டவடிவாக, வில் வளைத்து - வில்லை வணக்கி, தொட்ட - பிரயோகித்த, வாளியான-அம்புகளினால், அடி முதல் முடி உற - கால்முதல் தலைவரையிலும், துணிப்புண்டு-அறுக்கப்பட்டவர்களாகியும்,—இட்ட மா மணி கவசமும் - (உடம்பின்மேற் பாதுகாப்பாக) அணிந்த பெரிய ரத்தினங்களிழைத்துச செய்யப்பட்ட கவசமும், பிளந்து - பிளக்கப்பட்டவர்களாகியும்,—எதிர்ந்து உள்ளார் - எதிரிட்டுள்ள பகை வீரர்கள், பட்டு ஒழிந்தனர் - இறந்துபோனார்கள்; ஒழிந்தவர் - (அவ்வாறு) இறவாமல் நின்றவர்களுள், புண் படாதார் யாவர் - விரணமடையாதவர் எவர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

அருசுனனெய்த அம்புகளினால், பகைவீரர்களிற் பெரும்பாலார் உடலுறுப்புக்கள் துணிபடக் கவசம்பிளவுபட இறந்தொழிந்தனர்; இறவாமல் எஞ்சிநின்ற வீரர்களிற் புண்படாதவ ரெவருமில்லை யென்பதாம்.

இரண்டுகால்களையும் மண்டலாகாரமாக வைத்துக்கொண்டு நிற்கின்ற நிலை, மண்டலநிலை யெனப்படும்; "இருதால் மண்டலித் திடுதல் மண்டல நிலை" என்பது பிங்கலந்தை. 'பிளந்து' என்ற செயவெனெச்சம், காரணப் பொருளது, கவசம் பிளந்தபின் உடம்பில் அம்புருவுதல் எளிதாதலால், பட்டொழிதலுக்குக் கவசம்பிளத்தல் காரணமாம். (சுஎ)

68.—அருச்சுனன் துரியோதனனது தேர்க்குதிரைகளையும் பாகனையும் அழித்து அவனைப் பரிகசித்தல்.

(இ - ள்.) (அருச்சுனன்),—வேகம் வற்றிய நதி அன - நீர்ப்பெருக்கின் வேகம் குறைந்த ஆறு (தணிந்து ஓடுவது) போன்ற [மந்தமான

வேகமுள்ள],நடை விதம்-கதியின் தன்மையையுடைய, புரவி - குதிரைகளும், பாகு - சாரதியும், அவற்றினை - ஆகிய அனைவகளை, தலை அற - தலை துணி படும்படி, மலைந்து - போர்செய்து, பாழ் படுத்தி - அழியச்செய்து,—மா கவற் றினில் - பெரிய சூதாடுகருவியால், பொய்த்த சூது ஆடிய - பொய்க்கு இட மான சூதாட்டத்தை (த் தன்மாமனைக்கொண்டு) ஆடி (த் தருமபுத்திரனை) வென்ற, வஞ்சம் - வஞ்சனையையுடையவனும், நா கவற்றிய புல் மொழி - நாவினால் (அப்பாண்டவர்கட்கு) மனவருத்தமுண்டாம்படி கூறிய இழி சொற்களையுடையவனுமான, நிருபனை - அத்துரியோதனராசனை நோக்கி, நகைத்தான் - சிரித்தான்; (எ - று.)

அருச்சுனன் செய்யும் போர்த்திறத்துக்கு அஞ்சித் துரியோதனன் குதி ரைகள் வலிகுறைந்து நடைதளர்ந்ததனால், அவற்றுக்கு வற்றிய நதி உவமை கூறப்பட்டது.இனி,வேக - (வெயில்) காய்தலால் எளிதுமாம்.பெரும்போர் செய்து அடையவேண்டிய வெற்றியை எளிதில் அடையசெய்தலால், 'மா கவறு' எனப்பட்டது; இகழ்ச்சியுமாம். புன்மொழி - திரௌபதியைக் கொணர்ந்து துகிலுரியச சொன்னது முதலியன; "தண்ணிய தருமன்செய்த பாவமோ சகுனிசெய்த, புண்ணியனெறியோ வந்தப்பொதுமகள் யாகசாலை, நண்ணிய தவமே மற்றை நால்வருந்தகைமைகூர, வெண்ணியமதியோ வெண் ணினினிங்ஙனம்விளைந்ததென்றான்" எனஇங்ஙனம் பலசூதுபோர்சருக்கத்தில் ஆங்காங்குக்காண்க. இங்கு, நகை - இகழ்ச்சிகாரணமாகப் பிறந்தது. இச் செய்யுளில் அடிதோறும் முதலெழுத்துமாத்திரம் வேறுபட்டுநிற்க, அடுத்த சில எழுத்துக்கள் ஒன்றினின்று பொருள் வேறுபட்டது, திரிபு என்னுஞ் சொல்லணி. (சூ அ)

69.—தப்பியோடத்தொடங்கிய துரியோதனனை அருச்சுனன் மறித்துச் சில கூறத்தொடங்குதல்.

(இ - ள்.) மாகு சூழவும்- வலையானது (தன்னை ச) சூழ்ந்துகொள்ளவும், தப்பிய - (அதினின்று) தப்பியோடிய, வரி நிறம் மா போல் - (உடம்பிற்) கோடுகளையும் (பலவகை) நிறங்களையுமுடைய புலிபோல, (எந்தப்பக்கத் திலுந் தன்னைப்போகவொட்டாமல் அருச்சுனன் வளைந்துகொள்ளவும்), பாகும் வாசியும் அமைந்தது ஓர் தேர்மிசை பாய்ந்து எகுகின்ற - சாரதியும் குதிரைகளும் நன்றாய்ப்பொருந்தப்பெற்றதாகிய வேறொரு தேரின்மேற் குதித்தேறித் தப்பியோடுகின்ற, பேர் இராச ராசனை - பெரிய அரசர்கட்கு அரசனாகிய துரியோதனனை, எதிர் தகைந்து - (அங்ஙனந் தப்பிச் செல்ல வொட்டாமல்) எதிரே தடுத்து, கோகு தட்டிடு - தோள்களைக் கொட்டி யார வாரஞ்செய்கின்ற, தனஞ்சயன் - அருசுனன், இவை இவை - இந்த இந்த வார்த்தைகளை, கூறும் - சொல்வான்; (எ-று.)—அவற்றை, அடுத்த ஐந்து கவிகளிற் காண்க.

உவமையாணி. தன் காடு புறங்காடு என்னும்வேற்றுமையின்றி எங்கும் ஒரு நிகராகக் கொடுமைசெய்து திரியும் புலியை உவமை கூறியதனால், துரி

யோதனன் வேற்றரசர்க்குப்போலவே தனது தாயாதிகளான பாண்டவர்க்குந் தீங்குபுரியு மியல்பின னென்பது தோன்றும். சூழவும், உம்மை - உயர்வு சிறப்பு. மாகு - வலையிற் கட்டியமணி: அது ஆகுபெயரால் வலையைக் காட்டுமென்பர். தருஞ்ஜயன் - வடசொல்; தருமபுத்திரன் இராஜசூயயாகஞ் செய்ய முயன்றபொழுதில், அருச்சுனன் வடக்கிற்சென்று பல அரசர்களைச் சயித்து அவர்கள் செல்வத்தைத் திறைகொணர்ந்ததனால், அவனுக்கு 'தருஞ்சயன்' என்று ஒரு பெயராயிற்று; இனி, இப்பெயர்க்கு - வெற்றியைச் செல்வமாகவுடையவ னென்றும் பொருள் கொள்ளலாம்: இப்பெயர், அவனது பலபராக்கிரமங்களை விளக்கும். 'ராஜராஜன்' என்பது, துரியோதனனுக்கு ஒருபெயர்; வடசொல். இங்கே 'பேரிராசராசன்' என்றது, இகழ்ச்சி. தோள் தட்டுதல் - வீரக்குறிப்பு. இவையிவை—அடுக்கு, பன்மைப்பொருளது. வரி கிறமா—புலிக்கு 'சித்ரகாயம்' என்று ஒருபெயர் வடமொழியில் வழங்குவது காண்க. (கூக)

70.—இதுழநல் ஐந்துகவிகள் - அருச்சுனன் துரியோதனனை இகழ்வன.

(இ - ள்.) கார்முகம் - வில், கைத்தலத்து - (உன்) கையிலே, இருப்பது-ணிபடாதிருக்கவும், நீ—, கை மிகு போர் முகந்தன்னில் - கைகலத்தற்கு [பொருதற்கு] இடமான யுத்தகளத்தில், புறம் தந்து எகிலால் - முதுகு காட்டியோடிலால்,—ஊர் முகம் - ஊர்கோலமாக, களிற்றின்மேல் - யானை மேலேறி, உலாவும் - (நீ) பவனிவருகின்ற, வீதியின் - தெருக்களிலே, வார் முகம் கன தனம் மாதர் - கசகைமேலேதரித்த பருத்த கொங்கைகளையுடைய மகளிர், என் சொலார் - என்ன சொல்லமாட்டார்கள்? (எ - று.)

நீ ஊர்க்குச்சென்று யானைமேல் வீதிகளிற் பவனிபோகும்பொழுது கோலங்காண வருகின்ற மகளிர் உன் வீரமின்மையைப் பற்றி மிகவும் நிந்தனை சொல்வரே! என்க. உனது ஆண்மை மகளிரும்இகழும்படி யானதே யென்று இகழ்ந்தபடி. ஆகவே, புறந்தந்தேகாமல் நின்று போர்செய்வாயாக என்பது, குறிப்பெச்சம். ஆயுதமின்றிப் போர்செய்தல் அரியதாதலாற் கைவில்லும் அற்று ஓடிலால் அவ்வளவாக் குற்றமில்லை யென்பான், 'கார்முகங் கைத்தலத் திருப்பப் புறந்தந்தேகிலால்' என்றான். ஊர்முகம் உலாவுதல் - ஊர்வலமாகச் செல்லுதல். இனி, ஊர்முகம் வீதியின் - ஊரிலுள்ள வீதியிலென்றும், ஊர்முகம் களிறு-எனிசசெலுத்தப்படுந் தன்மையையுடைய களிறு என்றும் ஆம். இசசெய்யுளை, கீழ்ப்போந்த ஏ-ஆஞ் செய்யுளின்பின் னிரண்டடிகளோடு ஒப்பிடுக. போரிற் புறங்காட்டுதல், தோல்விக்குறி. கார்முகம் - வடசொல்; (போர்த்) தொழிலிற் சிறந்த தென்று காரணப் பொருள்பெறும். தனம் - ஸ்தநமென்னும் வடமொழியின் விகாரம். "மாதர் காதல்" என்ற தொல்காப்பியத்தின்படி காதலையுணர்த்தும் 'மாதர்' என்ற உரிச்சொல் - பண்பாகுபெயராய், விரும்பப்படுகின்ற அழகையுடைய மகளிரைக் குறித்தது.

இதுமுதற் பதினேழு கவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள். (எ0)

71.—(இ - ள்.) இரு புறம் - இரண்டு பக்கங்களிலும், சாமரம் இரட்ட-சாமரங்கள் வீசவும், திங்கள் போல் - பூரணசந்திரன்போல், ஒரு குடை-ஒப்பற்ற வெண்கொற்றக்குடை, நிழற்ற - நிழலிலச் செய்யவும், இ உலகம் - இந்த நிலவுலகமுழுவதும், நின்னது ஆ - உன் வசத்ததாக, மருவலர் கை தொழ - பகைவர்கள் கைகூப்பிவணங்கும்படி, வாழுகின்ற - அரசாண்டு வீற்றிருக்கின்ற, நீ—; பொரு முனை காண்டலும் - போர்செய்யுமிடத்தைப் பார்த்தமாத்திரத்திலே, போதல் - புறங்கொடுத்து ஓடுதல், போதுமோ - தகுமோ? (எ - று.)

'பொருமுனை காண்டலும் போதல் போதுமோ' என்றது - சிறிதுநேரம் போர்செய்தாயினும் போகலாகாதோ? போர்க்களத்தைக் கண்டமாத்திரத்தில் இவ்வாறுமீண்டுபோவது, அரசர்க்கரசும் பகைவர்களையெல்லாம் வெல்லும் வல்லமையுடையவனுமாகிய உனக்குப் பேரவமானந் தருவதொன்றன்றே என்றபடி. சாமரம் - சமர மென்னும் மானினது வாலின் வெண்மயிரினாற் செய்யப்பட்டதோர் இராசசின்னம்; வடமொழித்தத்திதாந்தநாமம். இரட்ட, நிழற்ற - வினைச்செஎவெஎண். குடைக்குத் திங்கள் - வெண்மையாலும், வட்டவடிவாலும், தண்ணெளி பரப்புதலாலும் உவமை. ஒரு குடை - ஏகசத்ரம். (எக)

72.—(இ - ள்.) உன் பெருந் துணைவரோடு உன்னை - உன்னுடைய பெரிய தம்பிமார்களையும் உன்னையும், ஓர் கணத்து - ஒருகூணைகாலத்திற்குள், என் பெருங் கணைகளுக்கு - எனது பெரிய அம்புகளுக்கு, இரைகள் ஆக்குவேன் - உணவாகச செய்துவிடுவேன்; (அங்ஙனஞ் செய்வேனையின்), வல் பெருங் கொடிமிசை மடங்கல் ஏற்றினன் தன் - வலிய பெரிய கொடியில் ஆண்சிங்கத்தினது வடிவத்தை யேற்றியவனை வீமசேனனது, பெரு வஞ்சினம் - பெரிய சபதம், தப்புமே கொல் ஆம் - தவறிப்போகுமே! (எ-று.) —'ஆதலால், அதுசெய்திலேன்' என்றது, குறிப்பெச்சம்.

உங்களை இப்பொழுது யான்கொல்லாமல் விடுதற்குக் காரணம், வீமன் சபதந் தப்பினவனுவனே யென்கின்ற எண்ணமொன்றே யன்றி வேறன்று என்றான். 'பெருந் துணைவர்' என்றது - தொண்ணூற்றொன்பதின்மரென எண்ணிற் பெரிய தம்பிய ரென்றற்கு.

துரியோதனன் சகுனியைக்கொண்டு தருமபுத்திரனைச் சூதில்வென்று பாண்டவரை அடிமைப்படுத்தியபின்பு திரௌபதியைத் துச்சாதனனைக் கொண்டு மயிர்பிடித்திழுத்துச் சபையிற் கொணர்ந்து துகிலுரிந்தும் என் மடியின்மே லுட்கா ரென்று சொல்லியும் பங்கப்படுத்தியபொழுது, அதுகண்டு பொறாது வீமசேனன் 'துரியோதனுதியர் தூற்றுவரையும் நானே கொல்வேன் என்று பிரதிஜ்ஞை செய்துள்ளான்பெருங் கணைகள் - பாசுபதம் முதலி

யன. 'உன்னைஎன் கணைகளுக்கு இரைகளாக்குவேன்'என்றது-அம்புகளைஎய்து உன்னைஅழித்துவிடுவே னென்றபடி; உண்ணுதலுஉண்பதுபோலசசொல்லப் பட்டமரபுவழுவமைதி: "உண்டற்குரிய வல்லாப்பொருளை, உண்டனபோலக் கூறலு மரபே" என்பது, தொல்காப்பியம்; [நன் - பொது - நிஅ.] கொல் வேனென்பதை வேறொருவகையாற் சொன்னதலால், இது - பிறிதினவிற்சி யணி; பரியாயமெனவும்படும்: "கருதியதுகிளவா தப்பொருள்தோன்றல், பிறிதொன்று கிளப்பதுபரியாயம்மே" என்ற தண்டியலங்காரத்தால், இதன் இலக்கண முணர்க. வீமன் தனதுதிறத்துக்கு ஏற்பச் சிங்கக்கொடி யை யுடையானென்க. மடங்கல், - (பிடரிமயிர்) மடங்குதலை யுடையதுஎன ஆண்சிங்கத்துக்குக் காரணக்குறி. (எஉ)

73.—(இ - ள்.) (நீங்கள்),---எங்களை கானில்விட்டு - எங்களைக்காட்டிற் குப் போகும்படி அனுப்பிவிட்டு, இரவி எக வெள் திங்களை போல் - சூரியன் மறைந்துபோக (அந்தச்சமயத்திலே) வெண்ணிறமான சந்திரன் ஒளிவீசி விளங்குவதுபோல, நெடுந் திகரி ஓசனீர் - பெரிய ஆஜ்ஞாசக்கரத்தை (உலகமுழுவதும்) செலுத்தி வாழ்ந்து விளங்கினீர்கள்; உங்களை - (இவ்வாறு துரோகிகளாகிய) உங்களை, நாளையே-நாளைக்கே [வெகுவிரைவிலே யென்ற படி], சங்கு அளை பயில் வளம் நாடன் - சங்குகள் சேற்றில்ஊர்கின்ற நீர வளப்பத்தையுடைய குருநாட்டுக்கு உரியவனாகிய வீமன், தண்டினால்-(தனது சத்துருகாதினியென்னுங) கதாயுதத்தால், களம் பலி ஊட்டும் - போர்க் களத்திற்கொன்று பலியிடுவான்; (எ - று.)

இன்றைக்கு யான் உயிரோடுவிட நீங்கள் உயர்ந்து ஓடிப்போனலும் நாளைக்கு வீமன்கதைக்குத் தப்பிப்போகமுடியா தென்பதாம். 'நாளை' என் றது, விரைவி லென்றமாத்திரமாய் நின்றது. நாங்கள் இந்திரப்பிரத்தத் தில் வசித்திருந்தவரையிலும் நீங்கள் பெருஞ்சிறப்படைந்திலீ ரென்பான், 'எங்களைக்கானில்விட்டு இரவியேகவெண்டிங்கள்போல்நெடுந்திகிரியோச்சி னீர்' என்றான்; சூரியன்முன்னே சந்திரனொளி விளங்காதவாறுபோல வெளிப் பட்டுவந்த எங்கள் முன்னே இனி உங்களரசு செல்லா தென்பதும் இதில் விள ங்கும். உவமையணி. ஆஜ்ஞையைச சக்கரமென்றும் குடையென்றும் கோலெ ன்றும் கூறுதல், மரபு. சங்குகள் தங்குதல், நீர்வள மிகுதியால். அளை-குழை சேறு; வளையுமாம். இங்கு, வீமனை 'வளநாடன்' என்றது - பகைவரை வெல் பவர்க்கு அவர் நாடு உரியதாகின்ற இயல்புபற்றி. களப்பலியூட்டும் - துணித் துப் போர்க்களத் தெய்வத்துக்கும் பேய்களுக்கும் உணவாக இடுவன். (எக)

74.—(இ-ள்.) இரவலர்-யாசகர்களும், இளையவர்-இளம் பிள்ளைகளும், ஏத்தும் நாவலர்-(அரசரைப்) புகழ்கின்ற ஸ்துதிபாடகர்களும், விரவிய தூது வர் - (வேற்றரசரிடமிருந்து) தம்மிடத்துவந்த தூதர்களும், விருத்தர் - முதி யவர்களும், வேதியர் - பிராமணர்களும், அரிவையர் - மகளிரும், வெம் சமர் அஞ்சுவோர் - கொடிய போரில் அஞ்சியோடுபவர்களும், பெருங் குரவர் - பெரிய ஐங்குரவர்களும், என்ற இவர்களை—, கோறல்-கொல்லுதல், பாவம்-

தீவினையாம்; (எ - று.)—இதனால், கொல்லத் தகாதவர் இன்னர் என்பதை அருச்சுனன் கூறுகின்றான்.

'போரில் முன்னிற்கமாட்டாமல் அஞ்சியோடுகின்றவர்களைக் கொல்லுதல் பாவமாதல்பற்றியும், உன்னை நான் கொல்லேன்' என்றவாறும்; இது, குறிப்பெச்சம்: தருமயுத்தஞ்செய்வேனேயன்றி அதருமயுத்தஞ்செய்யேனென்றான். இசைசெய்யுளில். பொதுப்பொருள்மாத்திரமேகூறி அதனைச் சிறப்புப் பொருள் பெறவைத்தது - பிற்றைநிலைமுனி; இவ்வணி, ஒட்டணியெனவும் பெயர்பெறும். யாசகர்தம்வயிறுபிழைத்ததற்காக இரத்தலன்றி யாதொரு தீங்குஞ் செய்யாமையாலும், இளையவர் எதிர்த்தற்குஏற்ற அறிவும் ஆற்றலும் இலராதலாலும், நாவலர் துதிமொழிகூறுபவராதலாலும், தூதர்தமது தலைவர்பணியைச செய்பவராதலாலும், விருதர் எதிர்த்தற்கு ஏற்ற திறலிலரும் நன்குமதித்து உபசரிக்கத்தக்க பெருமையுடையரு மாதலாலும், சமரஞ்சு வோர்மேற் படைசெலுத்துவது அதருமயுத்த மாதலாலும், ஐம்பெருங்குரவர் "அரச னுவாத்தியான் தாய் தந்தை தம்முன், நிகரில் குரவ ரிவரிவரைத், தேவரைப்போலத் தொழுதெழுக வென்பதே, யாவருங கண்டதெறி" என்ற படி தெய்வமாகக் கொண்டாடத தக்கவராதலாலும், இவர்களைக் கொல்லுதல் கொடியபாதகமாகு மென்க. "மூத்தவரிளையோர் வேதமுனிவர் பிணியின் மிக்கோர், தோத்திரமொழிவோர் மாதர்தூத ரென்றிவரைக் கொல்லிற், பார்த்திவர் தமக்கு வேறு பாவ மற்றிதனினில்லை, பூதலதரிதோடையாய்என்றும் நரகினும்புகுவ ரென்றான்" என்று மேற் கிருட்டிணன தூதுசருக்கத்து வருவதும், "மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையுமெறியான், ஆறன்மையின் முதியாரையு மெறியா னயிலுழுவன்" என்ற சிந்தாமணியும் இங்கு நோக்கத்தக்கன.

இளவலர் - இரத்தலில் வல்லவர்; அன்றி, இளவல் அர்-இரக்குந்தொழிலுடையவர். அறிவினாலும் பருவத்தாலும் ஒழுக்கத்தாலும் முதியவர்களாகிய ஞானவருத்தர் வயோவருத்தர் சீலவருத்தர் என்னும் மூவகைப்பெரியோரும் அடங்குவதற்கு, பொதுப்பட 'விருத்தர்' என்றான். வருத்தர், ஸமரம், குரவர், பாபம் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்ற ஐவரும் - ஐம்பெருங்குரவ ரெனப்படுவர். என்றிவர் - பெயரெச்சவீறு தொகுத்தல். கோறல் - தொழிற் பெயர்; கொல் - பகுதி. (எசு)

75.—துரோணரி முதலியோர அருச்சுனனை வினாதல்.

(இ - ள்.) பல்பலஉரை - (இவ்வாறு) பலபலவார்த்தைகளை, இவண் பகரும் எல்லையில்-இவ்வருச்சுனன் (துரியோதனனைநோக்கிச்) சொல்லி இகழ்கின்றபொழுதில்,—சொல் பயில் நால் மறை தூவசன் - (பலர்) சொல்லுதல் பொருந்திய நால்வகைப்பட்ட வேதத்தை யெழுதிய கொடியையுடையவனை துரோணாசாரியனும், வீடுமன் - பீஷ்மனும், கற்பகம் நிகர் கொடை கன்னன் - கல்பகவிருக்ஷம்போன்ற தானத்தையுடைய கர்ணனும், ஆதியோர் -

முதலானவர்கள், மல் புயம் நிருபனை - வலிமையுள்ள தோள்களையுடைய அரசனை அருச்சுனனை, வந்து கூடினர் - திரண்டுவந்து வளைந்தார்கள்; (எ-று.)

பல + பல = பற்பல: [நன் - உயிர் - உ०.] சொல் பயில்-கல்வியைப் பிறர்க்குப்போதிப்பதில் தேர்ச்சியுள்ள என்றலு மொன்று; இனி, சொல் பயில் மறை - (சிலவருணத்தார்க்கும் மகளிர்க்கும் ஓதலாகாதென்று) மறுக்கப்படுவது; அன்றி, மறைந்த [இரகசியமான] பொருள்களையுடைய தெனினுமாம். நான்மறை - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன; தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், சாமம் என்பாரு முளர்.

மறைத்துவசன் - வேதக்கொடியுடையான். துரோணன் ஆநியில் வீடுமனிடம் வந்துசேர்ந்தபொழுது வீடுமன் துரோணனைக் கௌரவபாண்டவர்க்குப் பிரதானவில்லாசிரியனுக்கி அவனுக்கு ராசபட்டத்தையும் அரசர்க்குரிய குடை கொடி சாமரம் தேர் கிரீடம் முதலிய அங்கங்களையும் அளித்தனனாதலின், இவற்குத் துவசம் உரியதாயிற்று.

கற்பகம்-கல்பக மென்ற வடசொல்லின்விகாரம்; (வேண்டுவோர் வேண்டுவனவற்றைக்) கல்பிப்ப தென்று பொருள்படும்: கல்பித்தல் - உண்டாகசசெய்தல். இது, பிறர் தன்னிடம்வந்து நினைத்தவற்றையெல்லாம் அவர் சொல்லியிரவாதமுன்னே கைம்மாறு கருதாது கொடுக்கு மியல்பினது; இதனை உவமைகூறியது, கர்ணனது தானசிறப்பை விளக்கும். கன்னன் - கர்ணன் என்ற வடசொல்லின் விகாரம்; இப்பெயர்-கர்ணகுண்டலங்களோடு பிறந்தமைபற்றியது: காதின்வழியே பிறந்ததனால் வந்தபெய ரென்றுங் கூறுவர்; கர்ணம் - காது. ஆதி - வடசொல். மல் - ஆயுதமெடாது உடல்வலிமை கொண்டு தாக்கிசசெய்யும் மற்போர்த்தொழிலுமாம். (எ௫)

76.—கர்ணன் அருச்சுனனைப் போர்க்கு அழைத்தல்.

(இ - ள்.) (அவர்களில்), தன்னுடன் நிகர் இலா - தனக்கு ஒப்புமை பெறாத, தட கை வண்மையான் - பெரிய இரண்டுகைகளாலுங் கொடுக்குங் கொடையையுடையவனை கர்ணன்,—மின்னுடன் மின்மினி வெகுளும் ஆறு போல் - மின்னலுடனே மின்மினிப்பூசசி கோபித்துப்பகைத்து (ஒளியாமல்) எதிர்த்தால் அதுபோல,—(அருச்சுனனை நோக்கி), 'நீ—, மன்னுடன் இகல்வது - தரியோதனராஜனுடனே எதிர்த்துப் பேசுவது, வார்த்தை அன்று - காரியமன்று: இனி—, என்னுடன் மலைதி - என்னோடு போர்செய்வாய்', என்று கூறினன் - என்று வீரவாதஞ்சொல்லிப் போர்க்கு அழைத்தான்; (எ - று.)

மின்னுடன் மின்மினி வெகுளுதலாவது - உன்னிலும் நான் மிக்க வொளியுடையே னென்று மாறுபடுதல்; இது, இல்பொருளுவமை. மின்னல் - அருச்சுனனுக்கும், மின்மினி - கர்ணனுக்கும் கவி கூறியுவமம். இதனால், வீரத்தில் அருசசுனனது மிக்கவுயர்வும், கர்ணனது மிக்கதாழ்வும் விளங்கும். இனி, 'மின்னுடன் மின்மினி வெகுளுமாறுபோல்' என்பதனை,

துரியோதனனேடு அருச்சுனன் எதிர்த்ததற்குக் கர்ணன்கூறிய உவமையாகக் கொண்டு உரைத்தலும் அமையும். மின்மினி - இருளில் மின்னுவதொரு பறக்கும் புழு; இடைவிட்டு ஒளிசெய்வதென்று பொருள்படுங் காரணக்குறி.

77.—அருச்சுனன் கர்ணனை நோக்கித் தேர்செலுத்துதல்.

(இ - ள்.) கரம் - (தன்) துதிக்கையினின்றும், கவுள் - கன்னத்தினின்றும், மதம் பொழி-மதநீரைச் சொரிகின்ற, காய் களிற்றை-கோபிக்குமியல்புள்ளதொரு யானையின்மேற் பாய்வதை, விட்டு - ஒழித்து, உரம் கொடு வரியின்மேல் ஓடும் - வலிமையையுடையதொரு புலியின்மேல் ஓடிப்பாய்கின்ற, யாளி போல் - யாளியென்னும் மிருகம் போல,—(அருச்சுனன்),—நிரக்கும் அரிருபனும் நிற்க - பொருந்திய அந்தத் துரியோதனராஜனும் நின்று கொண்டிருக்க (அவனைவிட்டு), வந்து போர் இரக்கும் அ கன்னன்மேல் இரதம் எவிரூன் - எதிரில்வந்து யுத்தத்தைவேண்டுகின்ற அந்தக்கர்ணனைக் குறித்துத் (தனது) தேரைச் செலுத்தினான்; (எ - று.)

ஒருயாளி யானையை எளிதில் அழிக்கவல்லதாயிருந்தும் அதனை அலக்ஷியத்தால் விட்டு ஒருபுலியின்மேற் பாய்ந்தாற்போல, அருச்சுனன் துரியோதனனை எளிதிற் கொல்லவல்லனையிருந்தும் அதுசெய்யாது இகழ்ந்துவிட்டுக் கர்ணனைநோக்கிப் போர்க்குச்சென்றனனென்பதாம்: உவமையானி. யானை-துரியோதனனுக்கும், புலி-கர்ணனுக்கும், யாளி - அருச்சுனனுக்கும் உவமை. விற்போரில் துரியோதனனிலும் கர்ணன் சிறந்தவனென்பது இவ்வுவமையில் தொனிக்குமெனக் கொள்வர் ஒருசாராசார். யாளி - துதிக்கையையுடையதும் யானையைக்கொல்லுவதும் சிங்கம்போல்வது மாகிய தொருமிருக விசேஷம்; இது, யாளியானை யெனவும் படும்: இச்சொல் சிங்கமென்ற பொருளில் வழங்குதலு முண்டு.

போரிரத்தல் – 'நீ என்னுடன் போர்செய்யவா' என்று அழைத்தல். யாவர்க்கும் கேட்டவற்றையெல்லாங் கொடுக்கின்ற மகாதாதாவாகிய கர்ணன் அருசுனனிடம்வந்து போரையிரந்தன னென ஒருவகைசமத்காரமையக்கவிகூறினர்.கொடுவரி-ஒருசொல்: வரிவரியான உடற்கோடுகளையுடையதென்ற காரணப்பொருள்பற்றிப் புலியைக் குறிக்கும்; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. கொடுமை-வரிவு 'அருச்சுனன் கர்ணன்மேல் இரதம்எவினான்' என்றது, 'அரசன் கோயில்கட்டினான்' என்பது போல ஏவுதற்கருத்தாவின் வினை; உத்தரனுக்குக் கட்டளையிட்டு அவனைக் கொண்டு செலுத்தின னென்க. (எ)

78.—கர்ணன் அருச்சுனன் என்ற இருவரும் கைகலத்தல்.

(இ - ள்.) இரதமும் இரதமும் எதிர்த்த போது - அருச்சுனனது தேரும் கர்ணனதுதேரும் ஒன்றையொன்று எதிரிற்சமீபித்து நெருங்கியபொழுது,— இரு குரம் துரகதங்களும்-இரண்டுதேரிலும் பூட்டிய (வலிய)குளம்பு களையுடைய குதிரைகளும், குமுறி ஆர்த்தன - கனைத்து 'ஆரவாரித்தன;

உரைதரு பாகரும் - சிறப்பித்துச்சொல்லப்படுகின்ற இரண்டுதேர்ச்சாரதிகளும், உடன்று கூவினர் - பெருங்கோபங்கொண்டு ஆரவாரித்தார்கள்; வீரர் தாமும் - இரண்டுவீரர்களும் [கர்ணனும் அருச்சுனனும்], விரை தனு வளைத்தனர் - விரைவாக வில்லைவளைத்தார்கள்; (எ - று.)

இரு துரகதம் - இரண்டுபக்கத்துக் குதிரைகள். ஒர துரகதம் - (ஒற்றைக்) குளம்புகளினால் விரைந்துசெல்வ தென்னலாம். விரை-விரைந்து: வினையெச்சவிகாரம்;(போர்செய்தலில்)விரைவுகொண்ட,வில்-தனுசுனைறல், வினைத்தொகையாம். முதலடியிலுள்ள உம்மையிரண்டும் - எண்ணுப்பொருளன. மற்றை மூன்று உம்மைகளில், முதலது - எதிரதுதழுவிய எச்சமும், மற்றையிரண்டும் - இறந்ததுதழுவிய எச்சமுமாம். (எஅ)

79.—இருவரும் பெரும்போழுது சமமாகப்போருதல்.

(இ - ள்.) ஒதத ஆணைமையார்-சரிசமமான ஆண்மையையுடையரான, இருவரும் - (கர்ணன் அர்சுனன் என்ற இந்த) இரண்டுபேரும், எதிர் எதிர் எவும் - எதிர்க்கெதிரே [தம்மில் ஒருவரைக்குறித்து ஒருவர்] செலுத்திய, வாளியால் - அம்புகளினால்,— வெருவரும் இருள் உற - அஞ்சத்தக்க இருள் உண்டாக,விசும்பு தூர்த்தனர-ஆகாயததை மறைத்தனர்;(இவ்வாறு),பொருவு அரு அமர் - ஒபபில்லாத யுத்தத்தை, நெடும் போது தாக்கியும் - வெகுநேரம் உக்கிரமாகச்செய்தும், ஒருவரும் இளைத்திலர் - (இவ்விருவரில்) ஒருவராயினும் சிறிதும் வலிகுறைந்தனரில்லை; (எ - று.)

நிரைநிரையாகததொடுத்த மிகப்பலவாகிய அம்புகள் அடர்ந்து சூரியனை மறைத்தலால் இருள் உண்டாயிற் றென்க. (எக)

80.—கர்ணன் தேர்முதலியன அழிந்து நடேதல்.

(இ - ள்.) (நிகழ்வனம் பொருகையில்),—சுவேத வாகனன்-வெண்ணிறமான குதிரைகளையுடையவருகிய அருசுனன், மற்று - பின்பு, ஒரு தொடையினில் - ஒரு பிரயோகத்தில், முற்று ஒரு கணைத்திடை-ஒரு கூணைகாலம் முடிவதற்குள்ளே, மூன்று கோல் விட - மூன்று அம்புகளை ஒருசேரத்தொடுக்க, (அவற்றால்),—இற்று ஒரு கணைத்திடை - இதனன்மைத்தான அந்த கூணைமொன்றிலே, அடல் ஆண்மை அங்கர் கோன் - வலிமையையும் வீரத்தன்மையையுமுடைய அங்கதேசத்தார்க்கரசனை கர்ணன், இவுளி பாகு தேர் அற்று - குதிரைகளும் சாரதியும் தேரும் அழிந்து, ஒருவினன்-(போரினின்று) நீங்கிச்சென்றனன்; (எ - று.)

அங்கர்கோன் இவுளிபாகுதேர் அற்று ஒருவினன் - சினைவினை, முதல் வினைகொண்டது. வெண்ணிறக் குதிரைகள் அக்கினியீந்தவையென்று முன்னரே கூறப்பட்டன. மற்று - இடைச்சொல். ஒரு தொடை - தொடுக்குந்தரமொன்று. முற்று ஒருகணம் - வினைத்தொகை. கணம் - ஒருகாலநுட்பம். இற்று - இகரச்சுட்டடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்பு வினையாலணையும் பெயர்; று - விகுதி. அற்று, அறு - பகுதி. அடல் ஆண்மை - பல பராக்கிரமங்கள். சிவபிரானது நெற்றிக்கண்ணினின் நெருப்புக்கு இரையாகிவெந்த மன்

மதனது அங்கம் [சரீரம்] விழுந்த இடம், அக்காரணத்தால், அங்கதேச மென்று பெயர்பெற்றது. (அ0)

81.—கர்ணன் மீண்டும்போரிற்கு வந்து பொருது தோற்றோடுதல்.

(இ - ள்.) அவன் - அந்தக்கர்ணன்,--ஒருவியபிட்டு ஓடி - (போர்) நீங்கி ஓடிப்போய், மற்று ஓர் ஓர் தேர்மிசை-வேறு ஒவ்வொரு தேரின்மேல், மருவியபிட்டு - சேர்ந்து [எறி], எரிர் உற வந்து மோதியும் - (அருச்சுனனுக்கு) எதிராக வந்து போர்செய்தும், ஒன்று போல் பல கணை உருவியிட்டன - ஓர் அம்புபோலவே (அருச்சுனனது) பல அம்புகளும் (ஒருதொடையாகத் தனது உடம்பில்) தைத்துப் புதைந்தோடினவாக, மீள மீள - மறுபடியும் மறுபடியும், வெருவியிட்டனன் - அஞ்சிப்போயினான்; (எ - று.)

கர்ணன் போரினின்று நீங்கியோடி வேறொரு தேரின்மேலேறி மீண்டு அருசுனனெதிரில்வந்து பொருவதும், அருச்சுனனம்புகள்பல தனது உடலில் தைக்கப்பெற்றவுடனே அஞ்சித்தோற்றோடுவதுமாகப் பலமுறை நிகழ்ந்த தென்க. 'மீள மீள' என்ற அடுக்கு, பன்மைப்பொருளது. நான்கடியிலும் இது - துணைவினை; பின்னிரண்டடிகளில் துணிவுப்பொருளுணர்த்துவ தென்னலாம். 'மோதியும்' என்ற உம்மை - உயர்வுசிறப்பு. (அக)

82.—பலமுறை தோற்றோடிய கர்ணனை நோக்கி அசுவத்தாமன் சில பரிகாசச்சொற்களைக் கூறித் தொடங்குதல்.

(இ - ள்.) (கர்ணன்), இ முறை - இவ்வாறு, வெம் சமர் - கொடிய போரில், வந்து வந்து—, எதிர்ந்து - எதிர்த்து, மும் முறை முனிதலும் - மூன்றுதரம் தோற்றுப்போனவளவில்.—முனிவன் மா மகன் - துரோணசாரியனது சிறந்த குமாரனாகிய அசுவத்தாமன், அ முறை முதுகு இடும் அருக்கன் மைந்தனை - அவ்வாறு முதுகுகாட்டித் தோற்றோடுகின்ற சூரிய குமாரனாகிய அக்கர்ணனை (நோக்கி), தெவ முறைமையின் சில வார்த்தை செப்புவான் - பகைத்தன்மையையுடைய சிலவார்த்தைகளைச் சொல்பவனானான்; (எ - று.)—அவற்றை, அடுத்த இரண்டுகவிகளிற் கூறுகின்றார்.

'வந்து வந்து' என்ற அடுக்கு, பன்மைப்பொருளது. பரமசிவனருளால் தோன்றியவனாதலாலும், "பிதுஸ் பாதகுணம் புத்ர" என்கிறநியாயமாய்த் தந்தையான துரோணனினும் பலமடங்கு கல்வி கேள்வி அஸ்திர சாஸ்திர சாஸ்திரப் பயிற்சி முதலியவற்றிற் சிறந்தவனாதலாலும், 'மாமகன்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டான். துரோணன் மனைவியாகிய கிருபியின் வடிவழகைக் கேள்வியுற்றும் ஒருகால் கண்டும் மிகக்காமுற்ற சிவபிரானது அருளினாற் குதிரையினிடமாகப் பிறந்தவன் இவன்; துரோணனாலும், கிருபியினாலும் வளர்க்கப்பட்டவன்; எழு சிரஞ்சீவிகளில் ஒருவன். முதுகு இடுதல் - புறங்கொடுத்தல். தெவ்-|-முறைமை = தெம்முறைமை: மகரம்வர தெவ்வின் வகரம் மகரமாத்திரித்தது; "தெவ்வென் மொழியே தொழிற்பெயரற்றே, மவ்வரின் வஃகான் மஃகுமாகும்" என்பது, நன்னூல்விதி. இத்தொடரை

ஆரும் வேற்றுமைத்தொகை யென்றுவது பண்புத்தொகை யென்றுவது கொள்க. முறைமையிற் சில - 'இன்' சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. செப்புவான், செப்பு - தெலுங்கினின்று வந்து வழங்கிய திசைசசொல். தெம்முறைமையிற் சிலவார்த்தை - மாறுபாடுகொண்ட சிலவார்த்தைக ளென்றபடி. (அ2)

83.—இதுவும், அந்தகவியும் - அகவற்தாமனது இகழ்ச்சிவார்த்தை.

(இ - ள்.) நறுந் தாருடன் பொலிதரு-வாசனைவீசுகின்ற பூமாலையுடனே விளங்குகின்ற, தாமம் மார்பனே - இரத்தினவாரத்தைத் தரித்த மார்பையுடையவனே! 'தேரும் ஒன்று - (எதிர்ப்பக்கத்தில்) தேரும் ஒன்றுதான்: தேரில் ஆளும் - அத்தேரிலேறிப் போர்க்குவந்தவனும், ஒருவனே - ஒருத்தன் தான்; (இங்ஙனமிருக்கவும்), இங்கு யாரும் அஞ்சுதிர் - இங்கு எல்லாரும் அசசமடைகின்றீர்களே!' என - என்று, இகழ்ந்து உரைத்த - (எங்களை யெல்லாம்) அவமதித்துப்பேசின, நீ --, போர் உடைந்து ஓடுதல் - (அந்த ஒருவனேடுசெய்யும்) யுத்தத்தில் தோற்று முன்னிற்கமாட்டாமல் ஓடிப்போவது, போதுமோ - தகுமோ? (எ - று.)

மற்றையாவரையும் இகழ்ந்துபேசிவந்த நீயே இவ்வாறு ஓடினால் யாவரும் உன்னை இகழாரோ? என்றபடி. 'யார்' என்ற சொல் - இருதிணையைம் பால் மூவிடத்துக்கும் பொதுவாக வழங்குதலால், 'யாருமஞ்சுதிர்' என்ற முடிபை இடவழுவமைதியென்னது வழாநிலையாகவே கொள்ளலாம். இகழ்ந்துரைத்தது - கீழ் நாட-ஆஞ் செய்யுளிற் காண்க. 'நறுந்தார்' எனவே, பூமாலையாயிற்று; இங்கு, வெட்சிப்பூமாலையெனவுமாம். 'தாமமார்பன்' என்ற தொடர்க்கு - விளக்கமுள்ள மார்பையுடையவ னென்றும் பொருள் கொள்ளலாம். நினது மார்பு போரில் எதிர்த்து நிற்றற்கன்றி அலங்காரத்திற்கே அமைந்ததுபோலு மென்ற கருத்து, தொனிக்குமாறு 'நறுந்தாருடன் பொலிதரு தாமமார்பனே' என்று விளித்தார். (அ1)

84.—(இ-ள்.) இருந்தூழி-இருந்தஇடத்திலே (இருந்துகொண்டு), சொல்லல் ஆம் - (எவ்வளவு செய்தற்கரியகாரியத்தையும் செய்துமுடிப்பேனென்று எளிதில் வாயாற்) சொல்லுதல் (யாவர்க்கும்) எளியதாம்; சொன்ன சொல்படி - (தான்) சொல்லிய அச்சொல்லின்படியே, வெல்லல் ஆம் என்பது - (பகைவரைப் போரில்) ஜயித்துவிடலா மென்பது, விதிக்கும் - தெய்வத்துக்கும், கூடுமோ - நிச்சயமாகக் கைகூடுவதொருகாரியமோ? [அன்று]; (அன்றியும்), மல்லல் ஆனிரை - வலிமைமிகுதியுள்ள பசுக்கூட்டத்தை, பல வளைத்துகொள்ளினும் - பலயானைகள் ஒன்றுகூடிச்சூழ்ந்துகொண்டாலும், குஞ்சரங்களால் - அந்த யானைகளால், கொல்லல் ஆய் இருக்குமோ-கொல்லும்படியாயிருக்குமோ? [இராதே]; (எ - று.)

அரியவற்றை எண்ணிச் சொல்லுதல் வலிமையில்லாதவர்க்கும் இயலுதலால் 'சொல்லலாம்' என்றும், அவற்றை அவ்வாறு செய்தல் வலிமையுள்ளவர்க்கும் இயலாதுபோதலால் 'விதிக்கும் கூடுமோ' என்றுங் கூறப்பட்டன;

"சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாஞ், சொல்லியவண்ணஞ் செயல்" என்றார் திருவள்ளுவரும். 'விதிக்குங் கூடுமோ' என்றதனால், தினைக்குக் கூடாமை பெரியதொன்றன்று என்றபடி. 'பலயானைகள் கூடினாலும் ஒரு சிங்கத்தைக் கொல்லமுடியுமோ?' என்ற உபமானவாக்கியம், 'சாதாரணவீரர் பலர் திரண்டு எதிர்த்தாலும் மகாவீரனை அருச்சுனனொருவனே வெல்ல முடியாது' என்ற உபமேயக்கருத்தைத் தோற்றுவித்ததனால், பின்னிரண் டடி - பிறிதுமொழிதலென்னும் அலங்காரம். இருந்துழி - தொகுத்தல். விதி - வடசொல்; பிரமனுமாம். மல்லல் - மிருகங்களுக்கெல்லாம் அரசா யிருக்குந் தலைமையுமாம். சிங்கத்தை யானைகள் வளைத்தல், இல்பொரு ளுவமை. ஆளி - யாளி: மரூஉ. குஞ்சர மென்ற வடசொல்லுக்கு - காட் டுப்புதர்களிற் சஞ்சரிப்பதென்பது காரணப்பொருள். (அ சு)

85.—துரோணன்மேலும் வீஷ்மன்மேலும் அருச்சுனன் அம்புசெலுத்துநலம்.

(இ - ள்.) பழுது அறு நாவினன் - குற்றமற்ற நாவையுடையவனென அசுவத்தாமன், கொழுதும் அம்பினும் மிக கொடிய கூற்று இவை - (உடம் பில்) தைத்து ஊடுருவுகின்ற அம்புகளைக்காட்டிலும் மிகவுங்கொடுமையுடை யனவாகிய இப்படிப்பட்ட வார்த்தைகளை, பகரும் வேலையில் - (கர்ணனை நோக்கிச்) சொல்லி யிகழ்கின்ற அப்பொழுதில்;—பற்குனன் - அருச்சுனன்;— முழுது உணர் முனியையும் - எல்லாவற்றையும் அறிந்த துரோணாசாரியனை யும், முந்தைதன்னையும் - பாட்டனான பீஷ்மனையும், தொழுது - வணங்கா நின்று, சில தொடைகள் எய்தான் - சில அம்புகளைப் பிரயோகித்தான்.

'அசுவத்தாமன் அம்பினும் மிகக்கொடியனவான இவ்வார்த்தைகளைச் சொல்லிக் கர்ணனையிகழும்போது, அருச்சுனன் துரோணனையும் பீஷ்மனை யும் வணங்கிச் சில அம்புகளையேவினான்' என ஒருவகை முரண் தோன்று மாறு சமத்காரமாகக் கூறிய நயம் கருதற்பாலது. எய்த அம்பும் கூறிய இழி மொழியும் பிறர் நெஞ்சில் தைத்து அவரை வருத்துதல்தொழிலால் தம்மில் ஒன்றேடொன்று ஒக்குமாயினும், பின்னர் ஆறிப்போம்படியான புண்ணை யுண்டாக்குகின்ற வில்லம்பைக்காட்டிலும் எக்காலும் ஆறுத வடுவையுண்டாக் குகின்ற சொல்லம்பு மிகவுங்கொடிய தாகுதலால், 'கொழுதுமம்பினு மிகக் கொடிய கூற்று' எனப்பட்டது; நினைக்கும்போதெல்லாம் வருத்ததைத் தருஞ் சொல்லென்க. கொழுதுதல் - துளைத்தல். பழுது - பொய், புறஞ் சொல், கடுஞ்சொல், பயனில்சொல் என வாக்கில் நிகழும் பாவநான்கு மென்றுங் கொள்ளலாம்; இவை சொற்குற்ற மெனப்படும். இனி, (அருள் கொண்டு கூறினுலும் வெகுண்டு கூறினுலும் அந்தந்தப் பயன்களைத் தந்தே விடுகின்ற நிறைமொழிகளையுடைமையாற்) பழுதுபடுதல் [தவறிப்போதல்] இல்லாத நாவுடையா னென்றுமாம்.

'முழுதுணர்' என்னும் அடைமொழியை முந்தைக்குங் கூட்டலாம்; அவரும் திரிகாலஞானியாதலால். பழமையுணர்த்துகின்ற 'முந்தை' என்ற பண்புப்பெயர், இங்குப் பாட்டனுக்கு ஆகுபெயராம். முன் தந்தையென்

பது முந்தையென மருவிய தென்பர் ஒருசாரார்; தந்தைக்கு முற்பட்டவ னென்பது கருத்து: பீஷ்மன் அருச்சுனனுக்குப் பெரியபாட்டனுவன். பற்குணன் - பல்குந னென்ற வடசொல்லின் விகாரம்: பங்குனிமாதத்தில் உத்தரபல்குனி [உத்தரம்] என்னும் நக்ஷத்திரத்திற் பிறந்ததனால், பல்குன னென்று அருச்சுனனுக்குப் பெயர்: இப்பெயர் தமிழிற்சிறுபான்மை பங்குன னெனத் திரிந்தும் வழங்கும். தொழுது தொடையேவுதல் - இரண்டுபாதங் களிலும் இரண்டு அம்புகளைச் செலுத்துவது. 'தொழாநின்று' என்னும் நிகழ் காலவினையெச்சம், இங்கு 'தொழுது' எனத் திரிந்து நின்றது; அம்புக ளேவி அதனால் தன்வணக்கத்தை யுணர்த்தின னென்பது கருத்து. இருவ ரும் பெருமுதுகுரவ ராதலால், அவர்களைத் தொழுது தொடையேவினன்.

86.—துரோணன் அருச்சுனனை யெதிர்ந்தது.

(இ - ள்.) (அப்பொழுது), "துரோணன்—,—தாள் இணை இறைஞ் சிய - (தனது) உபயபாதங்களை வணங்குதற்பொருட்டு, தனஞ்சயன் தொ டும் - (தனது இரண்டுபாதங்களின்மேலும்) அருச்சுனன் தொடுத்த, வாளி-அம்புகளிரண்டையும், கண்டு - (தான்) பார்த்தலால், உளம் மிக மகிழ்ச்சி கூரவும் - (தன்) மனம் மிகுதியாய் மகிழ்ச்சியடையவும்,—மீளிமை உடைய அ வீரன்மீது - வெல்லுந்திறமையையுடைய அந்தமகாவீரனுகிய அருச்சு னன்மேல், எழும் தூளி செய் தேரினை உந்தினன் - மேற்கிளம்பும் புழுதி களை யுண்டாக்குகின்ற (தனது) இரதத்தைச் செலுத்தினன்; (எ - று.)

கண்டு உளமகிழ்தல் - தனது அத்தரங்கசிஷ்யனை அருச்சுனனது திற மையையும் பணிவையும் நோக்கி யென்க. இங்ஙனம் மனமகிழவும் அவனு டன் பொருதற்குத் தேர்செலுத்தியது, துரியோதனனுக்காகச் சோற்றுக்கடன் கழிக்கவேண்டுதலால்; மேல் கூ0 - ஆஞ் செய்யுளைக் காண்க.

இறைஞ்சிய - செய்யியவென்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம். இறைஞ்சு-பகுதி: 'இய' என்றவிகுதியே காலங்காட்டும். இசைசொல்லிற்குமுன் வருமொழிமுதல்வலி இயல்பானது, "செய்யியவென்னும் வினையெச்சம்... .. முன் இயல்பே" என்றதனால். வாள் - கூர்மை; அதனையுடையது வாளியென அம்பிற்குக் காரணக்குறி யென்பர்; இ - பெயர்விகுதி. மீளி - வீரன்: அவனு டைய தன்மை - மீளிமை. (அசு)

87.—அருச்சுனன் துரோணனைத் தேய்த்துப் பிலசூறாவளிபோந்தது.

(இ - ள்.) தேர் உந்து முனியை - (அவ்வாறு தன்மேல்) இரதத்தைச் செலுத்திவந்த துரோணாசாரியனை, அந்த உதிட்டிரன் இளவல் - தருமபுத் திரனது தம்பியாகிய அந்த அருச்சுனன்: நோக்கி - பார்த்து, சிந்தையில் அன்பு கூர - மனத்திற் குருபக்தி மிகாநிற்க, சே அடி பணிந்து - (அவ்வா சிரியனது) சிவந்த பாதங்களைக்குனித்து வணங்கி, போற்றி - துதித்து, 'அந் தணர் அரசே - பிராமணச்சிரேஷ்டனே! (நாங்கள்), உன்தன் அருளினால்- உனது அநுக்கிரகத்தால், அடவி நீங்கி வந்தனம் - காட்டில்வாசஞ்செய்ய வேண்டியகாலங்களைக்கழித்து மீண்டுவந்தோம்,' என்று - என்றுசொல்லி,

சில் சில வாசகம் இயம்புவான் - (மற்றுஞ்) சிலசிலவார்த்தைகளைச் சொல்ப வனுனன்; (எ - று.)—அவற்றை, அடுத்த இரண்டுகவிகளிற் கூறுகின்றார்.

உதிட்டிரன் - யுதிஷ்டிரன் என்ற வடசொல்லின் விகாரம்; போரிற் சலியாது உறுதியாய் நிற்பவ னென்பது பொருள். இளவல் - இளையவன்: அருச்சுனனை 'உதிட்டிரனிளவல்' என்றது, தருமசிந்தையையுடையவ னென்றற்கு; போரிற் பின்வாங்காதவ னென்பதும் இதில் தோன்றும்.

'அந்தணர்' என்பது - அம் தண் அர் எனப்பிரிந்து, அழகிய தண்மை யை [குளிர்ச்சியான அருளை] யுடையவ ரென்று பொருள்படும்; இது, காரணங்கருதியபொழுது அருளையுடைய பலரையுங் குறிக்கத்தக்கதாயினும், இது குறியளவாய்ப் பிராமணர்க்கே வழங்குதலால், காரணவிடுகுறிப்பெயராம்: இதனை, வடநூலார் யோகரூட மென்பர். இது முனிவரையுணர்த்துதலை "அந்தண ரென்போ ரறவோர் மற் றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண் டொழுகலான்" என்று திருவள்ளுவர் கூறியதனாலு முணர்க. இனி, அந் தணரென்பதை அந்த அணவு அர் என்றுபிரித்து - வேதாந்தத்தையேபொரு ளென்று மேற்கொண்டுபார்ப்பவரென்று காரணப்பொருள் கூறுதலுமொன்று; (பார்ப்பா ரென்னும் பெயர்க்குங் காரண மிதுவே.)வாசகம்-தற்சமவடசொல்.

இதுமுதல் ஐம்பத்தொருகவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ் சீரும் விளச்சீர்களும், மற்றைநான்குஞ் மாச்சீர்களு மாகிய கழிநெடிலடி நான் குகொண்ட அறுச்சீராசிரிய விருத்தங்கள். (அ)

88.—இதுவும், அந்தச்சொல்லுரும் - ருதுபர்ணனாகிய அச்சுனனது பணிமொழி.

(இ - ள்.) 'ஐயா - சுவாமி! யாது ஒன்றும் அறியா என்னை - யாதொரு கல்வியையும் அறிந்திராத என்னை, இவன் அலாது இலை என்று இந்த மேதினி மதிக்கும் ஆறு - 'இவ்வருச்சுனனேயல்லாமல் (இவ்வுலகத்து வில் லின்திறம் முதலியவற்றில் வேறெவரும் வல்லவர்) இல்லை' என்று இந்தநில வுலகத்திலுள்ளவரெல்லாரும் நன்குமதித்துக்கொண்டாடும்படி, வில் முதல் படைகள் யாவும் - வில் முதலிய ஆயுதங்களின் தொழில்களெல்லாவற்றை யும், நீது அற தந்த - சிறிதுந்தீங்கில்லாமல் (எனக்கு) உபதேசித்தருளிய, உண்மை தெய்வம் - சத்தியமான தெய்வமாகின்றாய், நீ—,'என்றால்—, உன் பத யுகம் பிழைப்பது - உனது உபயபாதங்களுக்குப் பிழைசெய்வது, பஞ்ச பாதகம் தன்னில் ஒன்று-ஐந்துமகாபாபங்களில் ஒன்றாகுமன்றே! (எ - று.)

ஒன்றுந்தெரியாதிருந்த எனக்கு 'இவ்வருச்சுனனல்லாது இவ்வுலகில் வில்முதலியபடைக்கலங்களின் திறங்களில்லை' என்று இவ்வுலகத்தார் மதிக் கும்படி அப்படைக்கலக் கல்விகளைப் பழுதறக்கற்பித்துக்கொடுத்த நீ யென் றால் உனக்குமாறாக நடப்பது ஐம்பெரும்பாதகங்களிலொன்றாகிய குருத் துரோக மன்றே வென்றன னென்பதாம். பஞ்சமகாபாதகங்கள் - கொலை, பொய், களவு, கட்குடித்தல், குருத்துரோகம் என்பன; சிறிதுவேறுபடக் கூறுதலு முண்டு.

'யாதுமொன்று' என்பது, 'யாதொன்றும்' என உம்மை பிரித்துக் கூட்டப் பட்டது. இலை - தொகுத்தல். இவனலாதிலையென்று இந்த ஞமதினி மதிக்கு மாறு—"கலையினதகலமும் காட்சிக்கின்பமும், சிலையினதகலமும் வீணைச் செல்வமும், மலையினினகலியமார்பனல்ல திவ், வுலகினிலிலையென வொரு வனையினுண்" என்பவைமுதலியன காண்க. தனது பணிவும் குருபக்தியும் தோன்ற, 'உனக்குப்பிழைப்பது' என்றுது 'உன்பதயுகம்பிழைப்பது' என்றனன். பூர்வத்தில் திருமாலாற் கொல்லப்பட்ட மதுகைடபரென்னும் அசுரர் களது மேதஸ்வினுல் [உடற்கொழுப்பினுல்] நனைந்தமைபற்றி, பூமிக்கு 'மேதினி' என்று பெயர் அவ்வடசொல், மேதினியென விகாரப்பட்டது: அது - இங்கு இடவாகுபெயராய், அதிலுள்ளாரைக் குறித்தது. (அ அ)

89.— (இ - ள்.) மன்னெடு சூழ் நின்ற - (பல) அரசர்களாற் சூழப்பட்டு நிற்கின்ற, மாசுணம் உயர்த்த கோலை - பாம்புக்கொடியை உயரநாட்டியுள்ள துரியோதனராசனை, மின்னெடும் உரும் ஏறு என்ன வெகுண்டு - மின்ன லுடனே தோன்றுகின்ற பேரிடிபோலக் கோபித்து, அமர் புரிவது அல்லால்- (அவனுடன்) போர்செய்தலல்லாமல், —மின்னெடும் - உன்னுடனும், கிருப னெடும் - கிருபாசாரியனுடனும், நின் மகனெடும் - உனது குமாரனுகிய அசு வத்தாமனுடனும், முன்னைதன்னெடும் - பாட்டனுகிய பீஷ்மனுடனும், வெம் போர் புரியேன் - கொடிய யுத்தத்தைச செய்யமாட்டேன்; தக்கதோ -(உங்க ளுடன் யான் போர்செய்வது) தகுதியுடையதாகுமோ? [ஆகாது]: சரதம் பா வம் - (அது) நிச்சயமாகப் பாவமேயாகும்; (எ - று.)

துரோணனும் கிருபனும் ஆசிரியர்களாதலாலும், அசுவத்தாமா ஆசாரிய புத்திரனுதலாலும், பீஷ்மன் பிதாமகனுதலாலும், இவர்களோடு போர்புரி யேனென்றன். குருவைப்போலவே குருபுத்திரனையும் நன்குமதிக்கவேண்டு மென்பது நூற்கொள்கையாத லுணர்க. மன்னெடுவென்ற இடத்திலுள்ள 'நெடு' என்றமூன்றனுருபு கருத்தாப்பொருளில் வந்தது 'மாசுணம்' என்ற பெ ரும்பாம்பின்பெயர், அதன்வடிவையெழுதிய துவசத்துக்கு இங்கு ஆகுபெய ராம். உருமேறு - பெரியதையும் சிறந்ததையும் 'ஏறு' என்றல், மரபு.

கிருபன் - கௌதமமுனிவனது பௌத்திரன்; சரத்வாந் என்ற முனிவ னது குமாரன்; துரோணன் மனைவியான கிருபியின் உடன்பிறந்தவன்; ஆதலால், துரோணனுக்கு மைத்துனன்; துரோணன் ஆசிரியனுதற்குமுன்பு பாண்டவதுரியோதனுதியர்க்கு வில்வித்தைகற்பித்துவந்தன னிவனென உணர்க. எழுசிரஞ்சீவிகளிலொருவ னிவன். நாணற்காட்டிற் பிறந்திருந்த இவனையும் இவன் தங்கையையும் அங்கு வேட்டையாடவந்த சந்தநுமகாரா ஜன் பார்த்துக் கிருபையினு லெடுத்து வளர்த்தனுல், இவர்கட்கு முறையே கிருபனென்றும் கிருபியென்றும் பெயர்க ளாயின. பிறகு ஒருகால் அந்தச் சரத்வானென்ற முனிவன் அத்தினபுரிக்கு வந்து தன் மகனை இக்கிரு பனுக்கு வில்வித்தை முழுவதையும் கற்பித்துக்கொடுத்துச் சென்றன னதா லால், கிருபன் சிறந்த வில்லாசிரியனுய் அங்கு விளங்கினன். கௌதமகுலத்

தார் ஆதியில் கூத்திரிய சம்பந்தமுடையராயினமைபற்றி கூத்திரியத்தன்மை யோடுகூடிய பிராமணர்களாயிருந்தார்க ளாதலின், வில்முதலிய படைக்கலங் கட்கு உரியராயினர். "இடையிரு வகையோ ரல்லது நாடிற், படைவகை பெறுஅ ரென்மனர் புலவர்" என்ற தொல்காப்பியத்து மரபியற் சூத்திரத்து 'நாடின்' என்பதனால், சிறுபான்மை அந்தணரும் படைக்குரிய ரென் பது கொண்டவாறு காண்க; அச்சூத்திரவுரையில் 'அவர் இயமதக்கியாரும் துரோணனும் கிருபனும் முதலாயிரு வரெனக் கொள்க' என்றமை யுணர்க.

90.—துரோணன் 'போர்செய்யவேண்டும்' என்றல்.

(இ - ள்.) இ ஆறு - இவ்விதமாக, அருச்சுனன்—, அ முனிதன்னை புகல - அந்தத் துரோணாசாரியனுடனே சொல்ல.—வல் வில் கை முனிவ னும் - வலிய வில்லை யேந்திய கையையுடைய அத்துரோணனும்,—(அருச் சுனனைநோக்கி), 'தெய்ய முனை மதியா வீரா - பகைவர்க்குரிய போரைச் சிறிதும் லக்ஷ்யஞ்செய்யாத மகாவீரனே! யெம் சோறு கடன் கழித்திடுதல் வேண்டும் - (துரியோதனனுக்கு நாங்கள்) செவ்விய சோற்றுக்கடனைக் கழித் திடவேண்டும்; (ஆதலால்), தேவாதும் பகையை (வென்ற வெம் முனை கா ணும் ஆறு - (இந்திரன் முதலிய) தேவர்கட்குப் பகைவர்களாகிய நிவாதகவச காலகேய ரென்னும் அசுரர்களைச் சயித்த (உனது) உக்கிரமான யுத்தசாமர் த்தியத்தை (நாங்கள்) பார்க்கும்படி, உன்வில் வளைத்திடுக - உனதுவில் வலைத்து (எங்களுடன்) போர்செய்வாயாக.' என்றான் - என்று கட்டளையிட் டான்; (எ - று.)

'செஞ்சோற்றுக் கடன்கழித்திடுதல்வேண்டும்' என்றது, துரியோதனன் எங்களுக்குச் செல்வமையாய் அளித்துவருகின்ற சோற்றுக்குப் பிரதியுபகா ரமாக அவனுக்கு உதவியாய் உங்களுக்குமாறுக நாங்கள் போர்செய்யவேண்டு வது கடமை யென்றபடி. பகை - பகைவர்க்குப் பண்பாகுபெயர். 'வேண்டும்' என்பது, ஒருவகை வியங்கோள்; இது, இன்னிலையிதன்னும் பொருளது.

91.—துரோணனும் அருச்சுனனும் சம்மித் போதல்.

(இ - ள்.) (பின்பு),—குருவும் - துரோணாசாரியனும், அ குருவை தப் பா - அந்த ஆசிரியனதுவார்த்தையைத் தவறுக, குரு குலம் கோவும் - குரு வென்னுஞ் சந்திரகுலத்தரசனது வமிசத்துத் தோன்றிய சிறந்த அரசனாகிய அருச்சுனனும்,—வில் பிறை வாங்கி - (தம்தமது) வில்லைப் பிறைச்சந்திர னைப்போல வளைத்து,—தங்கள் அரு வரை தோளில் நாணி அறைதர - தம் தமது அழித்தற்கரிய மலைகள்போலுந் தோள்களிலே வில்லின்நாண் படும்படி [தோளளவும்நாணியையிழுத்து],—கரு உயிர்த்து எழுந்த காலம் மழைமுகில் கால்கொண்டு என்ன - தன்னுட் கொண்ட நீரைப் பெய்துகொண்டு வானத் திலெழுந்த காலகாலத்து நீர்கொண்ட (இரண்டு) காளமேகங்கள் மழைக்கால் களைக் கொண்டாற்போல, வாளி ஓர் ஒரு கோடி ஒருவருக்கு ஒருவர் எய்தார் - ஒவ்வொரு கோடி அம்புகளைத் தம்மில் ஒருவரைக்குறித்து ஒருவர் தொடுத் தார்கள்; (எ - று.)

துரோணனும் அருச்சுனனும் வில்லவ்வளைத்து காணியையெழுத்து மழை பெய்தாற்போலக் கோடிகோடியம்புகளை ஒருவரைக்குறித்து ஒருவர் பிரயோகித்தன ரென்பதாம். உவமையாணி. 'போர்புரியேன்' என்றுசொன்ன அருச்சுனன் பிறகு துரோணன் 'வில்லை வளைத்திடுக' என்றவளவிலே அவ்வாசிரியனது கட்டளைக்கு இணங்கிப் போர்தொடங்கியதை பற்றி, 'குருவைத்தப்பாக் குருதலக்கோ' என்றார். குரு என்னும் வடசொல்லுக்கு - (அஜ்ஞானமாகிய) இருளைப் போக்குபவ னென்பது காரணப்பொருள்; கு - இருள், ரு - போக்குபவன். குருவைத்தப்பாக் குருகுலகோ' என்றதிலுள்ள 'குரு' என்ற ஒரு சொல்லே வெவ்வேறு பொருளில்வந்தது, தொடர்பிலவந்திலை யணியாம். (கக)

92.—இருவரும் சிறிதுபொழுது சமமாகப்பொருதல்.

(இ - ள்.) அதிரதர்தம்மை எண்ணில் - அதிரதர்களை (அறிவுடையார்) என்னுமிடத்து, அணி விரல் முடக்க ஒட்டா - (தன்னை என்னி மடக்கிய கடைவிரலுக்குப் பின் தன்விரலிடைக்க வெளிறுருவாரையெண்ணிப்) பலித்திரவிரலுமடக்கக்கூடாத [ஒபபற்ற என்றபடி], முதிர் சிலை முனியும் - மிகப் பயின்ற வில்வித்தையையுடைய துரோணாசாரியனும். வீரம் முனிவு இலா முகனும் - வீரத்தன்மையினாலுண்டாகின்ற கோபக்குறி யில்லாத முகத்தை யுடையவனான அருச்சுனனும், விட்ட - (தம்மில் ஒருவரைக்குறித்து ஒருவர்) தொடுத்த, கதிர் முனை-கூரிய நுனியையும், பவனம் வேகம் - காற்றுப்போல விரைந்து செல்கின்ற வேகத்தையுமுடைய, கடுவ கொடும் பகழி யாவும் - மிகக்கொடிய அம்புக ளெல்லாம், எதிர் எதிர் கோத்த அல்லால் - (தம்மில் ஒன்றற்கு ஒன்று) நேருக்கு நேராய்மோதி இடையில் தடைப்பட்டன வல்லாமல், இருவர்மேலும் பட்டில - (இலக்காக எய்யப்பட்ட) இரண்டு வீரர்களில் ஒருவருடம்பிலும் பட்டுத் தைத்தனவில்லை; (எ - று.)

துரோணனும் அருச்சுனனும் எதிர்த்துத் தமது பலவகைத் திறமைகளையுங்காட்டி ஒருவர்மீது ஒருவர் எய்த அம்புகளெல்லாம் அவரவர்மாறாக எய்த எதிரம்புகளினால் தடுக்கப்பட்டு இடையில் ஒன்றோடொன்று முட்டிக் கீழ் விழுந்திட்டனவேயன்றி ஒன்றேனும் இவர்களுடம்பிற்படவில்லை யென்பதாம். "ஓரிரண்டுதனுவும் வாளியோரொர்கோடி யுதையவே, காரிரண்டிடை திர்ந்து தம்மின் மலைவுறுங்கணைக்கெனப், போரிரண்டுவீரருக்கு மொத்துநின்ற பொழுதிலே" என்பது. இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் எனத் தேர்வீரர் நால்வகைப்படுவர். அதிரதர் - முழுத்தேராசர்; அவராவார் - ஒருதேரில் எதிர் நின்று தம்தேர் குதிரைசாரதிகட்கு அழிவுவராமற் காத்துப் பலவாயிரந் தேர்வீரரோடு எதிர்த்து வேறு துணையில்லாமலே போர்செய்து வெல்லும் வல்லமையுடையார். அவரிற் சிறிது தாழ்ந்தவர், மகாரதர்; இவர். பதினாராயிரந் தேர்வீரரோடு பொருபவர். சமரதர் - ஒருதேர் வீரனோடு நாமும் ஒருவராயெதிர்க்கவல்லவர் அர்த்தரதர் - அவ்வாறு எதிர்க்குமளவில் தம்தேர் முதலியவற்றை இழந்து போம் படியானவர். கடைவிரல், பலித்திரவிரல், நடுவிரல், சுட்டுவிரல், பெரு

விரல் என்று முறையே கூறப்படுகிற கைவிரலைந்தனுட் கடைவிரலை முதலாக வைத்து மடக்கி ஒன்று முதலாக எண்ணித் தொகையிடுதல், மரபு. உலகத்திலுள்ள சிறந்த அதிரதவீரர்களை யெண்ணித் தொகையிடக்கருதித் துரோணாசாரியனெருவனென்று முதலிற் கடைவிரலொன்றை மடக்கியெண்ணிய பின்பு இவனேரிடைப்பாலவர்க்கு என்னுறுதற்கு எற்ற சிறந்த அதிரத வீரர் வேறெருவரில்லாமையால் இரண்டாவது நின்ற பவித்திரவிரலை மடக்கி யெண்ணக்கூடாது தப்பற்ற சிறப்புள்ள தருர்வேடுப்பயிற்சி மிகுதியையுடைய துரோணனென்பது. 'அதிரதர் தம்மையெண்ணி லணிவிரல் முடக்கவொட்டாமுதிர் சிலைமுனி' என்றதன் கருத்து. கீழ் நிராசுகூயச்சருக்கத்தில், "மன்மிசைநால் விரனிற்கு மணி மகுடத் தணியா குது" என்றதும். மேற் பதினேழாம்போர்ச் சருக்கத்தில் "பற்குறாயணிவிரல் முடகத விரோயிலாத மந்திரபூபன்" என்பதும் இங்கு நோக்கத்தக்கன. அணியப்படுவதென்னும காரணத்தால் எல்லா ஆபரணங்களையுங் குறிக்கின்ற 'அணி' என்ற காரணப்பொதுப்பெயர், இங்கு சிறப்பாய்ப் பவித்திரமென்ற அணிகலத்தைக் குறிக்கிறது.

இங்கு 'சிலை' என்றது வில் முதலிய ஆயுதங்களிற் பயிலும் வகைகளையும் பகைவெல்லுதற்குரிய மந்திராதிப் பிரயோகங்களையும் அறிவிக்கின்ற தருர்வேதத்தைக் குறிக்கிறது: இலக்கணை. அருச்சுனன் தனது ஆசிரியனாகிய துரோணன்மீது நன்மனத்துப் பகைமையில்லாதிருக்கையில் அத்தருவின் கட்டளைப்படியே விளையாட்டாகப் போர்செய்கின்றமை நோன்ற, 'வீரமுனிவிலா முகன்' என்றார். மனக்குறிப்பறிதற்குக் கருவி முகமாதலால், 'வீராவேசமில்லாதமுகமுடையவன்' என்றது. 'முனியும் வீரமுனிவிலா முகனும்' என்ற விடத்து, சொல்நிலையால், முனிபவனும் முனிதலில்லாத முகத்தையுடையவனுமென ஒருபொருள் தோன்றுதலால், தொடையழகை காண்க. இங்கு 'முகன்' என்றது - முகமென்ற அஃறிணைப்பெயரின் மேற்பிறந்த உயர்திணையாண்பாற்பெயர். (கூஉ)

93.—போர்த்திறத்தில் அருச்சுனன் சிறந்தல்.

(இ - ள்.) வண்டு முரலும கஞ்சம்மாலையான் - வண்டுகள் (மொய்த்து) ரீங்காரஞ்செய்கின்ற தாமரைமலர் மாலையையுடையவனென துரோணன்,—மிண்டு தானவரை வென்ற விறல் உடை விசயன் வின்மை-நெருங்கிய (நிவாத கவசர் முதலிய) அசுரர்களைச் சயித்த வீரத்தன்மையையுடைய அருச்சுனனது விற்றொழில் வல்லமை, தான் பண்டு பயிற்றுவித்து கண்ட கூற்றின் பதின் மடங்கு உயர்ந்த பண்பால் - தான் முன்பு (அவனுக்கு ஆசிரியனையிருந்து) கற்பித்துக் கொடுத்துப் பரீக்ஷித்துப் பார்த்திருந்தவளவினும் பத்துப்பங்கு அதிகமாக மிக்கிருந்தகன்மையினால், கண்டு - அதுகண்டு, தான் அவன் தோளை கற்பதற்கு உன்னினனன் - தான் அவ்வருச்சுனனிடத்து (வில்வித்தை) கற்றுக் கொள்ளுமாறு கருதினன்; (எ - று.)

துரோணன், முன்பு தான் அருச்சுனனுக்குக் கற்பித்து வைத்திருந்ததைக்காட்டிலும் பலமடங்கு அதிகமாக அவன் இப்பொழுது போர்செய்கின்ற திறத்தைப் பார்த்து, தான் அந்த அருச்சுனனிடத்தில் வில்வித்தை கற்றுக்

கொள்ளவேண்டு மென்று கருதினன் என்க. துரோணனிடம் வில்வித்தை கற்றுத் தேர்ந்த அருச்சுனன் பிறகு அக்கினிபகவானிடத்துக் காண்டீவ வில்லும் அக்ஷயதூணீரமும் பெற்றும், பின்னர் வானவாசுகாலத்துப் பரமசிவனிடத்துப் பாசுபதாஸ்திரமும் வில் அம்பறாத்தூணி முதலியனவும் பெற்றும். அப்பால் இந்திரலோகமழைக்கப்பட்டுத் தேவலோகத்துக்குச்சென்றபொழுது இந்திரனிடத்துப் பல அஸ்திரசஸ்திரங்களைப் பெற்றும் சிறந்தன னென வுணர்க.

தாமரை மலர்மாலை அந்தணர்க்கு உரிய தாதலை, 'பொய் கலந்த கண்டெரியற்பட்டர்பிரான்" என்று பெரியார் கூறியதனாலும் காண்க. இனி. கஞ்சமாலை-தாமரைமணிமாலையுமாம். கஞ்சம் என்ற வடசொல்-நீரில் தோன்றுவ தென்று காரணப்பொருள்பெறும்; (சம் - நீர்:) தாமரைக்குக் காரணவிடுகுறிப்பெயர்; அதன் மலர்க்கு அல்லது மணிக்கு முதலாகுபெயர். பாரதவர் என்றவடசொல் லுக்கு - (காசியபமுனிவரது மனைவியரில்) தநு என்பவளது சந்ததியா ரென் பது அவயவப்பொருள்; தத்திதாந்தநாமம். 'அவன்தேருது' என்றவிடத்து மூன்றனுருபு ஏழனுருபின்பொருள்பட்டதனால், உருபுமயக்கம். (கூ)

94.—துரோணனைத் தோல்வியடைதல்.

(இ - ள்.) பின்னர் - பின்பு.—(அருசுனன்)—என்று தேர் முரிய - (துரோணன்) எதியுள்ள தேர் முறிந்து போம்படியும். தேவதம் எழுதிய துவசம் வீழ - வேதத்தையெழுதிய கொடி தாழ்ந்துவிழும்படியும், தாறு பாய் புரவி நான்கும் - தாற்றுக்கோல்பாயப்பெற்ற [இருப்பு முட்கோலாற் குத்தியோட்டப்படுகின்ற] நான்கு குதிரைகளும், சாரதி தலையும் - தேர்ப்பாகனது தலையும், சிந்த - துணிபட்டு விழும்படியும், கூறு போர் ஆணி யோடு - சிறப்பித்துச்சொல்லப்படுகின்றபோர்த்தொழிலுக்குச் சிறந்த வில்லின் நாணியுடன், குனி சிலை துணிய - வளைந்த வில்லும் ஒடிபடும்படியும், ஆறு கோல் தொடுப்ப-ஆறு அம்புகளை எய்தவளவில்,—ஆரியன்-துரோணாசாரியன், வெள்கி-வெட்கமுற்று, முதுகிட்டான் - புறங்கொடுத்தான்; (எ - று.)

அருசுனன் ஆறு அம்புகளைத் தொடுத்துத் துரோணனது தேரும் வேதக்கொடியும் குதிரைகளும் சாரதியும் வில்நாணும் வில்லுமென்ற இவற்றை அழித்தமாத்திரத்தில். துரோணன் முன்திற்கமாட்டாமல் தான் தனது சீடனிடத்தே தோல்வியுறுதலாலாகும் நாணத்துடனே புறங்கொடுத்துப்போயின னென்பதாம். குருவாகிய துரோணனை வெல்லுதல் வேண்டுமென்னும் கருத்தும் முயற்சியும் அருசுனனுக்குத் தில்லைதிருக்கூத்தரும் அக்குருவின்கட்டளையாகவாது அருச்சுனன் காட்டிய போர்த்திறம் அத்துரோணனுக்குத் தோல்வியாய் முடிந்தமைபற்றி, 'ஆரியன் முதுகிட்டான்' என்று அவன் செய்தியாகக் கூறினர். தாறு - இருப்புமுள்ளாலுனியபிற்கொண்டகோல்: ஏதிகொண்டு குத்திஓட்டுதல், அதிவிரைவாகச் செலுத்தற் கென்க. (கூ)

95.—அசுவத்தாமன் எதிர்ந்து அருச்சுனனது வில்நாணியை அறுத்தல்.

(இ - ள்.) இவுளித்தாமா - அசுவத்தாமன்,—தந்தை போர் அழிந்து போன சாபலம் கண்டு - (தனது) தந்தையான துரோணன் போரில் தோ

ற்று முதுகிட்டுப் போன நிலையில்லாமையை [நடுக்கத்தை] ப் பார்த்து, வெம்பி - மனம்வெதும்பி, இந்திரன் மகலையோடும் எதிர்த்தனன் - தேவேந்திரனது குமாரனாகிய அருச்சுனனுடனே எதிர்த்துப் போர்தொடங்கினன்; இருவர் வில்லும் - இவர்களிரண்டுபேரது விற்களும், முரண் பட - மாறுபாடுண்டாக, குனித்த - வளைந்துசெய்த, போரின் - யுத்தத்தில், முந்துற - முதலிலே, அந்தணன் தனையால் - பிராமணஜாதியனான அசுவத்தாமனால் அம்பினால், மன்னன் வில்லின் நாண் அற்றது - சுரந்திரிபஜாதியனான அருச்சுனனது வில்லின்நாணியானது அறுபட்டது; (எ - று.)

சாபலம் - சபலத்தன்மை; வடமொழித் தத்திதாந்தநாமம். வெம்புதல் - கொதித்தல்; கோபக்குறி. அசுவம், இவுளி என்பன குதிரையாகிய ஒரு பொருளைக் குறிப்பன வாதலால், அசுவத்தாமாவை 'இவுளித்தாமா' என்றார்; இவ்வாறே பரித்தாமா, புரவித்தாமா, துரகததாமா என்றுங் கூறுவர். அஸ்வத்தாமன் என்ற வடமொழிப்பெயர்க்கு - குதிரையைப் பிறப்பிடமாகவுடையவனென்பது பொருள்; தாமம்-இடம்: குதிரையின் வயிற்றினின்று பிறந்தவன் இவன். வீரரது மாறுபாட்டை அவர் வில்லின்மேலேற்றி, 'இருவர்வில்லு முரண்படக்குனித்தபோர்' எனப்பட்டது; இனி, 'இருவருரும் முரண்படவில் குனித்த போரின்' என்று எடுத்து. இரண்டுபேரும் ஒருவர்க்கொருவர் மாறுகத் தம் தமதுவில்லெவளைத்துச்செய்த போரிலென்று உரைத்தலுமாம். இந்த் ன் என்ற வடசொல்லுக்கு - பரைடசுவரியமுடைய ன் னென்பது அவயவப் பொருள். முரண் பட - வலிமை பொருந்த, எனினுமாம். அன்றே-ஈற்றசை.

96.—அருச்சுனனொடுந பாசுபதாஸ்திரத்தால் அசுவத்தாமன் தோற்றல்.

(இ - ள்.) (உடனே),—மந்தரம் அனைய தோளான் - மந்தரமலைபோன்ற தோள்களையுடையவனான அருச்சுனன்,—மற்று ஒரு வரி வில் வாங்கி - வேறொரு கட்டமைந்த வில்லை (எடுத்து) வளைத்து, 'இவன் - இந்த அசுவத்தாமன், இந்த ரெம் பகழிக்கு எல்லாம் - இத்தன்மையனவான [சாதாரணமான] கொடிய அம்புகளுக்கெல்லாம், ஈடு அரன்-வலிமையுடையான்,' என்று எண்ணி-என்று ஆலோசித்து,—சந்திரமவுலி தந்த சாயகம் தொடுத்தலோடும் - பிறைச் சந்திரனைத்தரித்த முடியையுடையவனான பரமசிவன் (முன்பு) கொடுத்தருளிய அம்பை [பாசுபதாஸ்திரத்தை] வில்லிற் கோத்தவளவில்,—(அசுவத்தாமன்), நொந்து - வருந்தி, இனி என் செய்வோம் என்று - 'இனிமேல் நாம் யாதுசெய்யக்கடவோம்!' என்று எண்ணி [மேலே ஒன்றுஞ்செய்யமாட்டாமல்], ஊர் புக நோக்கினன் - (தப்பி உயிருடனே தனது) ஊர்க்கு மீண்டு போக வழிதேடலானனன்; (எ - று.)

பாசுபதாஸ்திரம் எதிரற்ற தென்ற சிறப்பு இங்குப்புலனும். குலகிரிகளுளொன்றான மந்தரம் பாற்கடலைக்கலக்கியமை போல அருச்சுனன்தோள் பகைவர் சேனைக்கடலைக் கலக்கவல்ல தென்பார், 'மந்தரமனைய தோளான்' என்றார். சந்த்ரமௌலி - வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; வடநூன்முடிபு. மவுலி - முதற்போலி. சாயகம் - வட

சொல். ஊர்புக நோக்கினன் - அத்திரைபுரியிற்சென்று புகுந்து கொள்ளக் கருதிப் புறங்கொடுத்தோடுவாரையின னென்றபடி.

'சந்திரமவுலி' என்பதி லடங்கிய வரலாறு:--சந்திரன் தக்கமுனிவனது புத்திரிகளாகிய அசுவினிமுதலிய இருபத்தேழுநக்ஷத்திரங்களையும்மணஞ் செய்துகொண்டு அவர்களுள் உரோகிணியென்பவளிடத்து மிகவும் காதல் கூர்ந்து அவளுடனே எப்பொழுதும் கூடிவாழ்ந்திருக்க, மற்றைமகளிரின் வருத்தத்தை நோக்கி முனிவன் அவனை 'க்ஷயமடைவாயாக' என்று சபிக்க, அச்சாபத்தாற் சந்திரன் பதினைந்துகலைகளுங் குறைந்து மற்றைக் கலையொன்றையும் இழப்பதற்கு முன்னம் சிவபிரானைச் சரணமடைய, அப்பெருமான் அருள்கூர்ந்து அவ்வொற்றைக்கலையைத் தன்தலையிலணிந்து மீண்டுங்கலைகள் வளர்ந்துவரும்படி அநுக்கிரகித்தன னென்பதாம். திருப்பாற்கடல் கடைகையில் அதினின்றுஉண்டான பலபொருள்களுடனே விஷமும் சந்திரனும் தோன்ற, திருமால் அவற்றில் விஷத்தைச் சிவபிரானுக்குக் கொடுத்து உண்ணச்சொல்லி அதனால் அப்பிரானுக்கு வெப்பமுண்டாகாமல் தணிந்திருத்தற் பொருட்டு உடனே சந்திரனையுங் கொடுக்க, அதனை அப்பெருமான் சிரமேற் கொண்டனனென்றும் கூறப்படும். (கூசு)

97.---திருபனும்முதலியோர் தோற்றலும், சூரியன் உச்சமனை தலும்.

(இ - ள்.) திருபனும் - திருபாக்ஷனும், அவனை கண்டு கெட்டனன் - அங்ஙனஞ்சிறந்து போர்செய்கின்ற அருச்சுனனைப்பார்த்தாதலால் நிலை கெட்டு முதுகிட்டான்; கேடு இலாத திருபர்கள் பலரும் - வலியழிதலில்லாத பல அரசர்களும், மோதி நேர் பொருது - நெருங்கிஎதிரில் நின்று (அருச்சுனனோடு) போர்செய்து, ஆவி மாய்ந்தார்-உயிரழிந்தார்கள் [இறந்துபோனார்கள்]; (அப்பொழுது), பொரு படை சேனை யாவும் புக்க உழி - போர்செய்யும் ஆயுதங்களை யேந்திய சேனைகளெல்லாம் (போரிற்புறங்கொடுத்து) ஓடியொளித்த இடத்தை, யாவர் கண்டார் - யார் அறிவர்? [எவரும் அறியா ரென்றபடி]; (அரசமயத்தில்), ஒரு பரி ஒற்றை ஆழி தேரவன் - ஒரு குதிரையையும் ஒரு சக்கரத்தையுமுடைய தேரையுடையவனான சூரியன், உச்சம் ஆனன் - உச்சிவானத்தையடைந்தான் [மத்தியானகாலமாயிற்று]; (எ-று.)

'அவனைக் கண்டு கெட்டனன்' என்பதற்கு - அங்ஙனம் முதுகிட்டுப் போன மகாவீரனான அசுவத்தாமனைப் பார்த்துத் தான் போர்செய்யாமலே புறங்கொடுத்தனனென்று பொருள்கொள்ளுதலுமாம். ஓடிப்போனவர் தவிர மற்றை யோடாதவரனைவரும் உயிரிழந்தன ரென்க. சேனைகளெல்லாம் யாவருங்காணுதலிடத்துப்புக்கு ஒளித்துக்கொண்டன வென்பார 'புக்குழியாவர் கண்டார்' என்றார். கேடிலாத - போரிற் புறங்கொடுத்தலில்லாத என்றுமாம். 'கெட்டனன் கேடிலாத' என்றவிடத்துத் தொனிபொருளை காண்க. 'ஓதி' என்று எடுத்து, வீரவாதங்கூறி யென்றலு மொன்று. பலரும் ஆவிமாய்ந்தார்---ஆவி என்ற அஃறிணைச்சொல். 'பலர்' என்னும் உயர்திணையோடு சார்த்தப்பட்டதனால், அவ்வெழுவாயின் பயனிலையாகிய 'மாய்ந்தார்' என்னும் உயர்திணைவினையைக் கொண்டு முடிந்தது; தினைவழுவமைதி; மாய்தல்-அழி

தல்: என்றும் அழிவின்றி நித்தியமாகிய உயிர்க்கு மாய்தலென்றது, உடம்பினின்று நீங்குதலேயாம்.

சூரியனது தோக்குதிரை 'எழு [=ஏப்த']' எனப் பெயர்பெற்ற தொன்றே யென்பாரும், ஒரு குதிரையுண்டு அதற்கு எழுபெயர்களென்பாரும், எழு குதிரைகளுண்டென்பாரும், எழு குதிரைகளுண்டு அவற்றிலொன்று 'எழு [=ஏப்த]' எனப் பெயர்பெற்ற தென்பாரும் உளராதலின், அவர்களுள் முதலிற் கூறிய இருவர் மதம்பற்றி 'ஒருபரி' எனப்பட்டது. இனி, ஒப்பற்ற குதிரை யென்றலு மொன்று. ஒற்றை - ஒன்று என்றமென்றொடர்க் குற்றிய லுகரம் வன்றொடராய் யுகாரச்சாரியை பெற்றது. ஆழி - வட்டம்; அவ்வடிவினதாகிய தேருருளைக்குப் பண்பாகுபெயர். உசசமாதல் - உயர்வானத்துவருதல். உசசம்-வடசொல். (கஎ)

98.—வீமன் முதலியோர் அருச்சுனனை வளைதல்.

(இ - ள்.) வென் இடும் அளவில் - (இவ்வாறு பலரும்) புறமிகாடுத் தோடுகின்ற அப்பொழுதில். நின்ற - தூரத்தில்நின்ற, வீடுமன் - பீஷ்மனும் விதுரன் - விதுரனும். வண்டு தென் ஓடும் அலங்கல் மாலை சுயோதனன் - வண்டுகள் இசைபாடுதற்கிடமான தொங்கியசைகின்ற (நந்தியாவட்டமலர்) மாலையையுடைய துரியோதனனும், சித்ர ரதன் - சித்ரதேசத்தரசனை யுடைத்தாதலும், (ஆகிய நால்வரும்). தன்னிடு சிருபா சூழ - (தம்மைச) சார்ந்துள்ள அரசர்கள் பலர் சூழ்ந்துவர; சூழ் திசை நான்கும் வந்து - அருச்சுனனை சுற்றிலும் நான்கு திக்குகளிலும் வந்து,—முன்னிடுந்தேரான் முன்னே-முன்னேவந்தெதிர்க்கின்ற தேரையுடையவனை அருச்சுனனை, முனை உற வளைந்துகொண்டார்-போரிற் பொருந்தும்படி சூழ்ந்துகொண்டார்கள்;(எ-று.)

துரோணன் முதலியோர் தோற்றோடுவதுகண்ட வீடுமன் முதலிய நால்வரும் பல அரசர்கள்சூழ அருச்சுனனை வளைந்துகொண்டனரென்பதாம். வென் - முதுகு. நின்ற - புறமிகாடாது நின்ற எனினுமாம். தென் இடுதல் - 'தென்ன தென்ன' என்று ஆளத்திவைத்து இசைபாடுதல்; விதுரனென்ற வடமொழிதிரிதலெதாடர், விகாரப்பட்டது: இவன் - விருத்தக்ஷத்திரனென்பவனது புத்திரன்; துரியோதனையரது தங்கையான துச்சளையின் கணவன்; சித்ரசேதரசரைதலைமைத்தவ னெனவும்படுவன்: பாண்டவர் வனவாசத்தைசெய்கையில் அருகுசரென்று அவர்களில்லாதசமயம்பார்த்துத் திரௌபதியை வலிதிற்பற்றிச செல்பவனுகி அப்பொழுது தொடர்ந்துவந்த வீமார்சுனர்களாற் பரிபவஞ்செய்யப்பட்டவனிவன். முன்னிடுதல்-விரைந்து வருதலும், சிறப்புறுதலுமாம். முனை - போர்க்களத்தில், உற - நன்றாக [சிறிதும்விடாமல்], வளைந்துகொண்டன ரென்றலு மொன்று. (கஅ)

99.—அனைவரையும் அருச்சுனன் தடுத்தல்.

(இ - ள்.) இவர் - (வந்துவளைந்துகொண்ட) இவ்வரசர்களெல்லாரும், உடன் - ஒருசேர, தவர் குனித்து - (தம்தமது) வில்லை வளைத்து, பெருந் தேரின் மேலோன் ஒருவனை இலக்கு அது ஆக :- பெரியதேரின்மேலுள்ளவ

னை அருச்சுனனெருவனேயே (கமது அம்புகளுக்குக்) குறியாகக்கொண்டு, அநேக சாயகம் தொடுத்த காலை - பல அம்புகளை மேன்மேலெய்தவளவில்,—கவுரிபங்காளன்தன்னை கண்உற கண்ட காளை - பார்வதியை (த்தனது) இடப்பக்கத்திற்கொண்டருளியவனை பரமசிவனைக் கண்களுக்கெதிரில் [பிரதியக்ஷமாகத்] தரிசித்த இளவீரனை அருச்சுனன், பவுரி வந்தான்சுழன்றுகொண்டே. ஒன்றும் தன்மேல் படாமல் வெம் பகழி தொடுத்தான் - (அவர்களெய்த அம்புகளில்) ஒன்றும் தனதுடம்பிற்படாதபடி செய்த அம்புகளை எதிரேதொடுத்துத் தடுக்கான்; (எ - று.)

வீடுமன் முதலியபலர் அருச்சுனனெருவனை ஒருங்குசூழ்ந்து அவன்மேற் பற்பல அம்புதொடுத்துப் பொருதபோது அருச்சுனன் தான் சுழன்றுகொண்டே எதிரம்புதொடுத்து அவர்களனைவருடைய அம்புகளையுந் தடுத்தனனென்பதாம். பவுரி - தன்னிலை நான் சுற்றுதல்; இது, கூத்துவிகற்பங்களி லொன்றுமாம். தான் ஒருவனையிருந்துகொண்டே இங்ஙனம் பலருடன் ஒருங்குபோர்செய்யும்படியான பெருந்திறம் அருசுனனுக்குச சிவபிரானருள் பெற்றதனால் அமைந்ததென்பது தோன்ற, இங்கு 'கவுரிபங்காளன்றன்னைக் கண்ணுறக்கண்ட காளை' என்றார். 'ஒன்றுந்தன்மேற்படாமல் வெம்பகழிதொடுத்தான்' என்றதனால், தானெய்த அம்புகளெல்லாம் அவர்கள்மேற்படும்படி தொடுத்தனனென்பதுந் தோன்றுமாறு அறிக; இது, அருதகாபத்தி: அவ்விவாரம், அருத்தாபத்தியில் விளங்கும். 'இவர்' என்பதை வினைத்தொகையை வினைச் சொல்லாகக்கொண்டு, எறிதற்குரியவென்று உரைப்பர் ஒருசாரார்.

இலக்கு - லக்ஷ்யமென்ற வடசொல்லின் சிதைவு; 'அது' என்றது, பகுதிப்பொருள் விகுதி. அநேகலாயகம் - வடமொழித்தொடர். ந + ஏகம் = அநேகம்:வடமொழிப்புணர்ச்சி. கவுரி-கௌரீ என்ற வடசொல்லின் விகாரம்: அப்பெயர்-மஞ்சள் நிறமுடையவளென்று பொருள்படும்; இயல்பிற் கருநிறமுடையளாயிருந்த அம்பிகை பின்புஒருசமயத்தில் தன்னைப் பரமசிவன் 'காளி!' என்றுவிளித்தமைகுறித்து வருத்தமெய்தி அப்பெருமானைப் பிரார்த்தித்துக் கருநிறத்தைதமாற்றிப் பொன்னிறம் பெற்றுக் கவுரியென்னும் பெயரையுடையளாயினளென்ற வரலாறு, புராணப்பிரசித்தம்.

'கவுரிபங்காளன்' என்றது - வலப்பாகம் சிவரூபமும் இடப்பாகம் பார்வதிரூபமான அர்த்தநாரீசுவரமூர்த்தியை யுணர்த்தும்; தனது வடிவத்தில் ஒருபங்கை அம்பிகைக்குத் கொடுத்துத் தான் ஒருபங்காயுள்ளவனென்க. இதன் விவரம்:—முன்னெருகாலத்துக் கைலாசகிரியிலே சிவபிரானும் உமாதேவியும் ஒரே ஆசனத்தில் நெருக்கமாக வீற்றிருந்தபொழுது, பிருங்கியென்னும் மகாமுனி பரமசிவனைமாத்திரம் பிரதக்ஷிணஞ்செய்ய விரும்பி ஒரு வண்டுவடிவமெடுத்து அவ்வாசனத்தை இடையிலே துளைத்துக்கொண்டு அதன் வழியாய் நுழைந்துசென்று அம்பிகையைவிட்டுச் சிவபிரானை மாத்திரமே பிரதக்ஷிணஞ்செய்ய, அதுகண்ட பார்வதிதேவி தன்பதியை நோக்கி 'முனிவன் என்னைப் பிரதக்ஷிணஞ்செய்யாமைக்கு எது என்ன?' என்று வினவ, உருத்திரமூர்த்தி 'இம்மைமறுமைகளில் இவ்விட சித்திபெற விரும்பு

வர் உன்னையும், முத்திபெறவிரும்புபவர் என்னையும் வழிபடுவர்; இது நூற் றுணிபு' என்றுகொல்ல, அதுகேட்ட தேவி 'இறைவனுருவத்தைத்பிரிந்து தனியேயிருத்தலிலைலென்றே எனக்கு இவ்விழிவு சேர்ந்தது' என்று இரங்கி, தான் சிவபிரானைவிட்டுப்பிரியாதிருக்குமாறு கருதி, புண்ணியகோத்திரமான கேதாரத்திற் சென்று தவம்புரிந்து வரம்பெற்று அப்பிரானது வடிவத்திலே வாமபாகத்தைத் தனக்கு இடமாகஅடைந்து அவ்வடிவிலேயே தான் ஒற்று மைப்பட்டுநின்றனளென்பதாம். (கக)

100.— அருச்சுனன் நான்குதிசையிலும் அஸ்திரங்களைப் பிரயோகித்தல்.

(இ - ள்.) குட திசை - மேற்குத்திக்கில், மகவான் வாளி - இந்திரனைத் தெய்வமாகவுடைய அம்பும் [ஜ்ரும்பாஸ்திரமும்], குண திசை - கிழக்குத்திக் கில், வருணன் வாளி - வருணனைதெய்வமாகவுடைய அம்பும் [வாருணாஸ்திர மும்], வட திசை - வடக்குத்திக்கில், மறலி வாளி - யமனைத்தெய்வமாகவு டைய அம்பும் [யாமாஸ்திரமும்], தென் திசை - தெற்குத்திக்கில், மதியின் வாளி - குபேரனைத்தெய்வமாகவுடைய அம்பும் [குபேராஸ்திரமும்], (ஆக இவ் வாறு), அடல் உற - மாறுபட, நிலைப்பின் வெவி-ஒருவரோடிப்பொழுதிற் பிர யோகித்து, அவர் அவர் மார்பும் பிராணம் படர் உற - அந்தந்தவீரரது மார்பும் நேர்கள்களும் நேரவுடையும்படியாகவும், படைகள் நீறு படபட - (அவரவ ரது) ஆயுதங்களெல்லாம் பொடிப்பொடியாய் அழிந்துபோம்படியாகவும், பரப்பினன் - பரவச்செய்தான்; (எ - று.)

மகவான்வாளி - இந்திரனுடைய அஸ்திரம்; பிறவும் இங்ஙனமே கொ ள்க. இந்திரன்முதலிய நால்வரும் முறையே கிழக்குமுதலிய நான்குதிசை களுக்கும் காவலராவர். அந்தந்தத்திக்குப்பாலகரம்பை அவரவர் நோற்செ ல்லக்கூடிய எதிர்தலிசையில் தொடுத்தனனென்பது விளங்க, 'அடலுற வெவி' எனப்பட்டது. குட்ட + திசை = குடதிசை: நிலைமாறியீற்றுயிர்மெய்யும் கவ்விவாற்றும் நீங்கின; குணதிசையும் வடதிசையும் இவ்வாறே. தெற்கு + திசை = தென்திசை: நிலைமாறியீற்றுயிர் மெய்நீங்க றகரம்னகரமாத்திரித் தது; "திசையொடு திசையும்" என்னுஞ் சூத்திர விதி. தூறு அசுவமேதயா கங்களைச் செய்தவன் இந்திரபதவிபெறுவதுதல் பற்றி, 'மகவான்' என்று இந்திரனுக்கு ஒருபெயர்; வடசொல்: மகம் - யாகம். மறல் - கொடுமை, கொலை; அதனைச் செய்பவன் மறலி எனயமனுக்குக் காரணக்குறி; இ - பெயர் விகுதி. லோமன், இந்து என்ற வடமொழிகள், சந்திரனுக்கேயன்றிக் குபேரனுக்கும் பரியாயநாமமாக வழங்குதல்பற்றி, குபேரனை 'மதி' என்றார்; என் றது, லகரதிலகரவொற்றுமை யென்க. (மதி = லோமன், இந்துலோமன் = இந்து, குபேரன். லோமனென்பது குபேரனுக்கு வழங்குதலைப் பலவிடத்துங் காணலாம். (கஂஂ)

101.— அருச்சுனன் மோகநாஸ்திரத்தைத்தொடுத்துப் பகைவர்சேனையை மயங்கிவிழச் செய்தல்.

(இ - ள்.) (பின்னும் அருச்சுனன்), மோகனம் கணை ஒன்று எவி - மயக் கத்தையுண்டாக்கும் அஸ்திரமாகிய மோகனாஸ்திரமொன்றைப் பிரயோகி

த்து,— கோ கனம் - கண்களேயே காதுகளாகவுடைய, நாகம் - பாம்பை யெழுதிய, கேகம் கொடியவன்-(படபடவென்று) விரைந்தடிக்கின்றகொடிச் சீலையை யுடையவனென துரியோதனனது, சேனை யாவும்-சேனைக ளெல்லா வற்றையும், முடி அடி படிக்கண் வீழ்த்தான் - தலைகளும் கால்களும் தாறுமா றாகத் தரையில் மயங்கிவிழும்படி செய்தான்; மா கனல் கடவுள் தந்த-சிறந்த அக்கினிதேவன் (காண்டவதகனகாலத்துக்) கொடுத்தருளிய, கட மணி பொலம் தேர் - பெரிய அழகிய பொன் மயமான தேரையும், வெள்ளை வாக னம் - (நான்கு) வெள்ளைக்குதிரைகளையுமுடைய, குரிசியி - பெருமையிற் சிறந்தவனென அருச்சுனனது, வின்மை வல்லபம் - வில்லெழில்வல்லமை, இருந்த ஆறே - இருந்தவிதம் அதிசயிக்கத் தக்கது! (எ - று.)

துரியோதனன் சேனைகளையெல்லாம் தானொருவனுகவே பொருந்தி ஒற்றைக்கணையால் மோகிக்கசெய்த அருச்சுனனது விற்றிறமையை ஈற்றடி யாற் கவிபாராட்டிக் கூறுகின்றனர். கனம் - கர்ணமென்பதன் விகாரம். கோகர்ணநாகம்-வடமொழித்தொடர். கண்களேயே காதுகளாகவுமுடையதாய், வடமொழியில் 'சக்ஷுஷ்கர்ண:' என்றும், தென்மொழியில் 'கட்செவி' என் றும்பெயர்பெறுதலால், 'கோகனநாகம்' எனப்பட்டது. மணிப்பொலந் தேர் - அடிக்கும் மணிகள்கட்டிய அழகிய தேரென்றுமாம்; பெரிய இரத்தினங்கள் பதித்த பொற்றேரென்றும் உரைப்பர். வாகனம் என்பதற்கு - சுமப்பது என்று பொருள்; குதிரைக்குக் காரணக்குறி. ஈற்றேகாரம், வியப்புத்தோன்ற நின்றது. (கஅக)

102.—அருச்சுனன் பகைவர்களுடைய ஆடைகளைப் பறித்தல்.

(இ - ள்.) இ தரை இடம் கொளாமல் - இப்போர்க்களத்தினிடம் முழு வதிலும் அடங்காமல், இறந்தனர்போல வீழ்ந்த - மரணமடைந்தவர்போல விழுந்துகிடக்கின்ற, மத்தரை - மயக்கமடைந்த அவவீரர்களையெல்லாம், மயிர் கொய்து என்ன - மொட்டையடித்தாற்போல, மணி கொடி தூசும் - (அவர் களுடைய) அழகிய துவசங்களிற் கட்டிய சீலைகளையும், தூசும்-(அவாகள்தரித் துள்ள) ஆடைகளையும், உத்தரை வண்டல் பாவைக்கு உடுத்துதற்கு என்று கொய்தான் - உத்தரையைவைத்துக்கொண்டு விளையாடுகின்ற பிரதிமைகளுக்கு (அலங்காரமாக)த் தரிப்பதற்கென் றெண்ணிப் பறித்தான்: (யாவனெனில்),— அத்தரை - சிவபெருமானை, மவுலி - சிரசில், திங்கள் அமுது உக புடைத்த - (அங்கு வசிக்கின்ற) பிறைச்சந்திரனிடத்தினின்று அமிருதம் சிந்தும்படி அடி த்த, வில்லான் - வில்லின்தண்டத்தையுடையவனென அருச்சுனன்; (எ - று.)

உத்தரை - விராடன்மகள்; உத்தரன்தங்கை. உத்தரனும் பிருகந்நளையும் போர்க்குப் புறப்பட்டபோது, இவள் தனது விளையாட்டுப்பிரதிமைகள யலங் கரித்தற்குப் பலவகைப் பட்டாடைகள் கொணர்ந்துதரும்படி வேண்டினளாத லால், உத்தரைவண்டற்பாவைக்கு உடுத்துதற்கென்று தூசுகளைக் கவர்ந்தான். 'அம்ருதகிரணன்' என்று ஒருபெயர்பெறும்படி சந்திரனது கிரணங்களெல் லாம் அமிருதமயமானவை யாதலால், 'திங்களமுது' எனப்பட்டது. பொலிவு இழத்தலை விளக்குதற்கு, 'மயிர்கொய்தென்ன' என்று உவமைகூறினர்; மயிர்

கொய்த, அவமானப்படுத்துதற் குறிப்புமாம்: தூசுபறித்தலும் அப்படியே. 'இத்தரையிடங்கொளாமல்' என்றதனால் பகைவர்களின் மிகுதி கூறியவாறும்.

மத்தர், உத்தரா - வடசொற்கள். மத்தர் - மதங்கொண்டவருமாம். வண்டல் - மகளிர்விளையாட்டு. அத்தர் - தலைவர்; உயர்வுப்பன்மை. 'அர்த்தர்' என்பது அத்தரென விகாரப்பட்ட தென்றுகொண்டால், அர்த்தநாரீசுவராமூர்த்தியாகிய சிவபெருமா னென்று ஆகும்; அர்த்தம் - பாதி. அமுது - அம்ருத மென்ற வடசொல்லின் விகாரம்; மரணத்தைத் தவிர்ப்பது [சாவாமருந்து] என்று பொருள். புடைத்த வில்லான் - வில்லாற் புடைத்தவன். (கஂ2)

103.—மயங்கி விழுந்தவர்கள் நெடும்பொழுது கழித்துத் தெளிந்தெழுந்து அருச்சுனனது வீரத்தைமெச்சி இரதம் முதலியவற்றிலேறிக்கொண்டு ஊர்க்குத் திரும்புதல்.

(இ - ள்.) விழுந்தவர் - (அவ்வாறு மோகநாஸ்திரத்தால் மயங்கி)விழுந்து கிடந்த பகைவரானவரும், நெடும் போது ஆக - வெகுநேரங்கழிந்த பின்பு, மெய் உணர்வு எய்தி - உண்மையான அறிவு உண்டாகப்பெற்று [மயக்கந் தெளிந்து], அழுந்திய பகழியோடும் - (உடம்பில்) தைத்துக்கிடக்கின்றஅம்புகளுடனும், அரிபடு கவசத்தோடும் - பலதுளைகளையடைந்த கவசத்துடனும், மெல்ல எழுந்து - மெதுவாக எழுந்து, தம் இரதம் யானை இவுளியின் ஏறி ஏறி - தம்தமது தேர் யானை குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு, தொழும் தகு தெய்வம் அன்ன சூரனை-(யாவரும்) வணங்கத்தக்க கடவுளைப்போன்ற மகாவீரனாகிய அருச்சுனனை, துதித்து - மெச்சிக்கொண்டே, மீண்டார் - திரும்பி(த் தமது ஊர்க்குச) சென்றார்கள்; (எ - று.)

பிறர்செய்தற்கரிய செயல்களைத் தான் எளிதிற் செய்துமுடிக்குந் திறத்திற் கடவுள்போன்றவ னென்பார், 'தொழுந்தகுதெய்வமன்ன சூரன்' என்றார். அவனை இவர்கள் துதித்தது, தம்மை உயிரோடுவிட்ட உபகாரத்தை நோக்கி யென்க. மெய் உணர்வுஎய்தி-உடம்பில் உணர்வுவந்துகூடப்பெற்று என்றுமாம். 'பகழியோடும்', 'கவசத்தோடும்' என்ற இடங்களில், 'ஓடு'என்ற மூன்றனுருபு - அடைமொழிப்பொருளது. அரிபடுதல் - துளைக்கப்படுதல். 'ஏறி ஏறி' என்ற அடுக்கு, - பன்மைப்பொருளது. (கஂ3)

104.—அருச்சுனன் துரியோதனனை மதுடபங்கஞ்செய்தல்.

(இ - ள்.) கொடி மதில் பாகை வேந்தன் - துவசங்கள்நாட்டிய மதில்கள் சூழ்ந்த வக்கபாகையென்னும் நகரத்து அரசனும், கொங்கர் கோன் - கொங்குநாட்டிலுள்ளார்க்குத் தலைவனு மாகிய வரபதியாட்கொண்டானென்பவன், புரவி காலால் - (தனது) குதிரைகளின் கால்களால், வட திசை அரசர் தங்கள் மா மணி மகுடம் போல - வடக்குத்திக்கிலுள்ள அரசர்களது சிறந்த இரத்தினங்கள்பதிக்கப்பெற்ற கிரீடங்களை (ப் பங்கஞ்) செய்வது போல,—அடல் உடை விசயன் - வலிமையையுடைய அருச்சுனன், மீண்டும் சென்று - மறுபடியுந் தொடர்ந்துசென்று, ஒற்றை அம்பினால் - (தனது) அம்பொன்றினால், படம் அரவு உயர்த்த கோவை மகுடபங்கம் பண்ணினான் -

படமெடுக்குமியல்புள்ள பாம்பின் வடிவமெழுதிய கொடியை உயர நாட்டிய துரியோதனராஜனது கிரீடத்தைக் கீழேவிழும்படி தள்ளி (அவனை) அவமானப்படுத்தினான்; (எ - று.)

தலைதுணித்தால் வீமன் சபதந்தவறு மென்பதுபற்றி, துரியோதனனை மகுடபங்கம் பண்ணினவளவோடு விட்டிட்டனன். அருச்சுனன் துரியோதனனது கிரீடத்தை ஓரம்பினாற் கீழேதள்ளி அவனை அவமானப் படுத்தியதற்கு, வரபதியாட்கொண்டான் போரில் தான் எதிர்செல்லுகின்ற குதிரையின் தூக்கிய முன்னங்கால்களை வடதிசையிலுள்ள அரசர்களது முடியிற்சூடிய கிரீடத்தின்மீதுவைத்து அதனை இடறச்செய்து அவர்களை அவமானப்படுத்துதலை உவமைகூறினர். இந்நூலாசிரியர் வரபதியாட்கொண்டானை இந்நூலின் இடையிடையே புகழ்ந்துபேசுதற்குக் காரணம், நூலாசிரியர் வரலாற்றில் விளக்கப்பட்டது. ஒருபெயரின் ஒரு பகுதியைக்கொண்டு அப்பெயர் முழுவதையுங் குறித்தல் [நாமைகதேசே நாமக்ரஹணம்] என்ற நியாயத்தால், 'வக்கபாகை' என்ற ஊர்ப்பெயர் 'பாகை' எனப்பட்டது; சத்தியபாமையை 'பாமை' என்றல் போல: வரபதியாட்கொண்டான் சோழபாண்டிய மன்னவர்கட்கு உதவியாகச் சென்று அவர்கட்குப் பகைவர்களாய் வடக்குத்திக்கிலிருந்த அரசர்களையெல்லாம் வென்று அசசோழபாண்டியர்கட்கு அரசைநிலைநிறுத்தினனென்ற விவரமறிக. அரவு - அரவக்கொடிக்கு ஆகுபெயர். மகுடபங்கம்-வடமொழித் தொடர். (கஅச)

105.—'அஞ்ஞாதவாசகாலம் நிறைவேறுமுன் வெளிப்பட்டமையால்
இவரை மீண்டும் வனவாசஞ் செல்லச்சொல்லுக' என்று
துரியோதனன் கூற, வீடுமன் மறுமொழிகூறலுறல்.

(இ - ள்.) (அப்பொழுது),—வெல் படை வேந்தன்-(பகைவரை) வெல்லுதற்குரிய ஆயுதங்களையுடைய துரியோதனராஜன்,—(வீடுமனைநோக்கி), -'இவர் - இப்பாண்டவர்கள், வல்லினில் அழிந்து - சூதாட்டத்தில் தோற்று, அன்று - அக்காலத்தில், நின் முன் - உனது முன்னிலையிலே, மன் அவை தன்னின் - இராஜசபையில், சொல்லிய - வரையறுத்துச்சொல்லியுடன்பட்ட, காலம் - அஜ்ஞாதவாசஞ் செய்யவேண்டிய ஒருவருஷகாலம், செல்லாமுன் - முடியக்கழிவதற்கு முன்னமே, தோற்றம் செய்தார் - வெளிப்பட்டுத்தோன்றிவிட்டார்கள்; (ஆதலால், முன்னையநியமத்தின்படி), இன்னம் - மறுபடியும், புல்லிய கானின் போக - இழிவான காட்டிற்குச் செல்லும்படி, நீ புகறி - நீ (அப்பாண்டவர்களை நோக்கிச) சொல்வாயாக', என்று சொல்ல—, வீடுமன் - பீஷ்மன், மீண்டும் சொல்வான் - (அதற்குப்) பிரதியுத்தாஞ்சொல்பவனுனான்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

வல் - சூதாடுகருவி; அதுகொண்டு ஆடும் ஆட்டத்துக்கு இங்கு ஆகுபெயர். அவை - ஸபா என்ற வடசொல்லின் சிதைவு. கார்முகங் கைத்தலத்திருப்பப் போர்முகத்துப் புறந்தந்து போனவனை இங்கு 'வெல்படைவேந்தன்' என்றது, இகழ்ச்சிக் குறிப்பாகிய எதிர்மறையிலக்கணை: இனி, வெல் என்ற வினைத்தொகையைச் செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினை

யென்றுகொண்டு, (அருச்சுனனுல்) வெல்லப்பட்ட சேனையையுடைய துரி யோதனராசனென்று உரைத்தலு மொன்று. (கo9)

106.—அஜ்ஞாதவாசம் பூர்ணமாய்விட்ட தென்று வீடுமன் விடையளித்தல்.

(இ - ள்.) 'செந்நெலே கன்னல் காட்ட - செந்நெற்பயிர்கள் தாம் கரும் புகள்போல வளர்ந்து தோன்றுதிற்க, அயல் செறுவில் சேர்ந்து நின்ற கன் னலே கழுகு காட்டும் - பக்கத்துநிலங்களிற் பொருந்தியிருக்கின்ற கரும்பு கள் தாம் பாகுகுமரங்கள்போல வளர்ந்து காணப்படுகின்ற, கங்கைநீர் நாட - கங்காநதியின் நீர் பாயப்பெற்ற குருநாட்டுக்குத் தலைவனே! கேண்மோ - (நான் சொல்வதை நீ நன்கு) கேட்பாயாக: இன்னலே உழந்தோர் காலம் - (இளமை தொடங்கித்) துன்பங்களையே யனுபவித்துவருந்தியவர்களான பாண்டவர்கள் (மறைந்து வசிக்கவேண்டிய) ஒருவருஷகாலமானது, இந்து வின் இயக்கந்தன்னுல் - சந்திரனது லஞ்சாரத்தால் [சாந்திரமானபக்ஷரீதி யாய்,] நென்னலே சென்றது - நேற்றேயே கழிந்துவிட்டது' என்றுன் - என்று (துரியோதனனைநோக்கிச்) சொல்லினன்: (யாவனெனில்),—நெஞ்சி னில் அழுக்கு இலாதான் - மனத்திற் களங்கஞ் சிறிதுமில்லாதவனான பீஷ்மன்; (எ - று.)

இவ்வாறு கூறியது, திருவேங்கடமலைக்கு வடக்கிலுள்ளார்க்குச் சௌர மான பக்ஷத்தினும் சாந்திரமானபக்ஷம் சிறந்ததாதலின்; சந்திரகுலத்தரசர் சாந்திரமான பக்ஷரீதியை அநுசரித்ததற்குரிய தென்பதுபற்றியுமாம். சாந்திர மான வருஷமாவது - அமாவாசைக்கமாவாசை ஒருமாச மெனக்கொண்டு கணக்கிட்டுச்சந்திரனுடைய சம்பந்தத்தால்ஏற்படுத்தும் வருஷம்.(சூரியன்ஒரு ராசியிலிருந்து மற்றோரிராசிகுப்போகுங் காலத்தை ஒருமாசமெனக்கொண்டு மூந்நூற்றறுபத்தைந்து நாள் கணக்கிட்டு ஏற்படுத்தும் வருஷம் சௌரமான வருஷ மென்றும். மூந்நூற்றறுபது நாள் கணக்கிட்டு ஏற்படுத்தும் வருஷம் லாவகவருஷமென்றுஞ் சொல்லப்படும்.) பட்சபாதமில்லாமல் உண்மை கூறி யமைபற்றி,'நெஞ்சினில் அழுக்கிலாதான்' என்றார்;மனத்துக்குக் குற்றம்-தியசிந் தனை. பாண்டவர்களை 'இன்னலேயுழந்தோர்' என்று குறித்ததனுல், அவர் கள் பக்கல் வீடுமனுக்கு உள்ள இரக்கம் வெளியாம்.

செந்நெற்பயிர்கள் கரும்புகள்போலவும் கரும்புகள் பாக்குமரங்கள் போலவும் வளரும் நீர்நாடு என, அதிசயோக்திவகையால் நீர்வளசுசெழுமை யும் நிலவளச்செழுமையுங் கூறியவாறும்; "கரும்பல்ல நெல்லென்னக் கழு கல்ல கரும்பென்ன" எனப் பிறர்கூறுமாறுங் காண்க. 'செந்நெலே', 'கன் னலே' என்ற ஏகாரங்கள் - தேற்றத்தொடு இழிவுசிறப்பு. செந்நெல் - நீர் வளத்து விளைவதொரு நெற்சாதி. கழுகு - க்ரமுக மென்ற வடசொல்லின் சிதைவு. கேண்மோ, மோ - முன்னிலையசை. இன்னலே, ஏ - பிரிநிலை. இந்து - வடசொல்; இயக்கம் - தொழிற்பெயர். நென்னல் - நெருநல் என்பதன் மரூஉ. ஏகாரம் - தேற்றம். கன்னல்காட்டுதல் - கரும்பினுரு வைத்தான் கொண்டு காட்டுதல்; கழுகுகாட்டுத லென்பதும் இவ்வாறே:

இங்கு 'காட்ட', 'காட்டும்' என்றவை - உவமவாசகமாய் நின்றன. சேர்ந்து - (நெல்வயலை) அடுத்து என்றுமாம். (கo சு)

107.—துரியோதனன் தனது ஊர்க்குச்செல்லுதல்.

(இ - ள்.) அரவினை உயர்த்த கோமான் - பாம்புக்கொடியை உயரநாட்டிய துரியோதனராசன், அ உரை கேட்ட போழ்தே - அந்தவீடுமன்வார்த்தையைக் கேட்டவளவிலே, பரவையின் இரவிகண்ட பனிமதிபோல மாழகி- (கீழ்) கடலினின்று உதித்த சூரியனைக் கண்ட குளிர்ந்தசந்திரன்போல ஒளிமழுங்கி [மனந்தளர்ந்து], வர வர அறிதும் என்று - 'போகப்போகப் பார்த்துக்கொள்வோம்' என்று எண்ணி, மா பெருஞ் சேனையோடும் - மிகப் பெரிய சேனையுடனே, இரவிடை யாரும் துஞ்ச - நடுராத்திரியில் யாவருந் தூங்குகையில், எயில் வளர் நகரி புக்கான் - மதில்கள் சூழ்ந்த(தனது) அம்பிதாபுரியிற் போய்ச்சேர்ந்தான்; (எ - று.)

தாம் தோற்றுமீள்வதை ஊரவர் கண்டால் இகழ்வரே யென்னும் நாணத்தினால், அவர்கள் விழித்திருக்கின்ற சமயத்திற் செல்லவிரும்பாமல், அவர்களனைவருந் தூங்குகின்ற நள்ளிரவிற் போய்ச் சேர்ந்தனனென்க. இரவிடை - இடையிரவு: நிராப்பொழுதினின்நடுவில்; பாதிராத்திரியி லென்க. 'எயில்வளர் நகரி' என்றார், மிக்க பாதுகாவலை யுடைய தென்றற்கு. 'மாபெருஞ்சேனை' என்றது, சேனை உருவத்திற் பெரிதாயிருந்தும் வலிமையிற் சிறப்புறுதுசிறுமைப்பட்ட தென்ற நிகழ்ச்சி குறித்ததற்குப் போலும். வரவர என்ற அடுக்கு— காலக்கிரமத்தினென்றபடி. (கo எ)

108.—அருச்சுனன் ஆயுதங்களை வைத்திட்டு பேடிவேடங்கொள்ளுதல்.

(இ - ள்.) வேந்தனை முதுகுகண்ட - துரியோதனராசனைப் புறங்கொடுத்தோடச்செய்த, வெம் திறல் வீரன் - கொடிய வல்லமையையுடைய வீரனாகிய அருச்சுனன், முன் போந்து எடுத்த வன்னி புறத்து மீண்டு வந்து - முன்பு சென்று தான் ஆயுதங்களையெடுத்துக்கொண்ட வன்னிமரத்தினருகில் மறுபடியும்வந்து, வாய்ந்த ஆயுதங்கள் யாவும் பொதும்பரின் வைத்து - தனக்கு ஏற்றவையாயமைந்த (வில்முதலிய) ஆயுதங்களையெல்லாம் (கட்டி) அம்மரப்பொந்திலே மறைத்துவைத்துவிட்டு, எயில் வடிவம் மாற்றி - அழகிய தனதுமெய்யுருவத்தை யொழித்து, ஆம் நகவு எண்ணி பேடி ஆயினன்- இனிமேல் ஆகவேண்டியகாரியத்தை ஆலோசித்து முன்போலப் பேடிவேடங்கொண்டான்; (எ - று.)—மாமேதா - ஈற்றசை.

'ஆந்தகவெண்ணெய்' என்றது, பின்னர்த் தருமன் முதலியோருடனே தானும் ஒருவகுவெளிப்படவேண்டு மென்றுகருதி யென்றவாறு; ஆந்தக வெண்ணெய்தல் - இப்போலை உதாதரன்வென்றதாகத் தோன்றுவிக்குங்கருத்துமாம். என்ப - அசை; இனி, என்ப - என்றுசொல்வார் என்று பலர்பால் முற்றாகக் கொண்டால், இதற்கு எழுவாய் முதனூலாசிரியராதல் வேண்டும். ()

109.—அருச்சுனனும் உத்தரனும் விராடனகர்க்குமீளுதல்.

(இ - ள்.) அரசர் ஏறு - அரசர்கட்கு ஆண்சிங்கம்போன்றவனாகிய அருச்சுனன்,—வெயில் எறிக்கும் - சூரியனொளிபோன்றவொளியை வீசுகின்ற,

பைம் பொன் - பசும்பொன்னிழலாகிய, இலங்கு - விளங்குகின்ற, இ தேர் - இந்த [அக்கினிபகவான்கொடுத்த] இரதம், மீண்டும் ஏக - திரும்பிச் சென்றுவிட,—(தான்),—கை வெயில் எறிக்கும் - பக்கங்களில் ஒளியை வீசுகின்ற, பைம் பூண் - பசுமையான ஆபரணங்களை யணிந்த, காளைதன் - உத்தரகுமாரனது, தேரில்—, எறி - எறிக்கொண்டு, விரைந்து போய் - வேகமாகச்சென்று, வெவ் வெயில் ஆறும் வண்ணம் - கொடிய வெய்யிலின் வெப்பத்தாலுண்டான தாபம்தணியும்படி, விராடன் முதூர் அ எயில் சூழ்ந்த காவின் அமர்ந்தனன் - விராடராஜனுடைய பழைமையான நகரத்தி னது அழகியமதிலின் புறத்திற் சூழ்ந்துள்ள சோலையிற் சேர்ந்து தங்கினன்.

போர் முடிந்தவுடனே அருச்சுனனது தேர் அவனது கருத்தின்படி மீண்டு சென்றவிட, பேடிவேடங்கொண்ட அருச்சுனன் உத்தரனது தேரி லேறி முன்போலத் தேர்செலுத்திக்கொண்டு வெயிற்பொழுதில் அதிவேக மாக விராடநகரத்தை நோக்கிச் செல்லுகையில், வெயில் வெப்பத்தாலாகிய இளைப்புத் தணியுமாறு அநகர்பபுறசோலையிற் சிறிது பொழுது உத்தரனும் தானுமாகத் தங்கினனென்பதாம். அக்கினிபகவான் கொடுத்த நான்குவெ ள்ளைக்குதிரைகள் பூண்ட குங்குமக்கொடித்தேர் முன்பு அருச்சுனன் கருதிய மாத்திரத்தில் வந்து சேர்ந்தமை கீழ் - நிகழ்-ஆஞ் செய்யுளிற் கூறப்பட்டதனால், போர்முடிந்தபின்பு அத்தெய்வததேர் முன்பு தான்இருந்த விடத் திற்கு மீண்டுசெல்வதை இங்குக் கூறுகின்றார். பசும்பொன்னிலாகிய ஆப ரணங்களென்பார், 'பைம்பூண்' என்றார்.

பூண் என்பது - பூணப்படுவதாகிய காரணம்பற்றி வழங்கும் பெயராய், ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாய்நிற்றலால், காரணப்பொதுப்பெயர். 'மூதூர்' எனவே, ஊர்பழையதாயினும் இப்படிப்பட்ட போரையறிந்திராத தென்பது கருத்து. கா - பாதுகாக்கப்படுவதென்று பொருள்படுங் கார ணக்குறி. (கூ0க)

110.-- அருச்சுனன் உத்தரனுக்குத் தனது வரலாறு கூறுதல்.

(இ - ள்.) ஆறிய - வெப்பமில்லாத, பசு - பசுமையான, தண் - குளிர் ந்த, காவின் - (அந்தச்) சோலையில், அரைசு ஓரீஇ இருந்த - இளைப்பாறிக் கொண்டிருந்த, வீரன் - வீரனாகிய அருசுனன்,—உத்தரற்கு - உத்தரனை நோக்கி,---'(நாங்கள்), எறிய கானில் பல் யாண்டு இருந்தபின் - சிறந்த காடு களில் அநேகவருஷகாலம் [பன்னிரண்டுவருஷம்] வசித்திருந்தபின்பு, ஏனை ஆண்டு - மற்ற ஒருவருஷகாலம், மாறிய வடிவத்தோடு-உண்மை யுருவத்தை யொழித்து வேறுபட்ட உருவத்துடனே, இவளம் நகர் வைகினேம் - வளப்ப முள்ள இந்நகரத்தில் (அஜ்ஞாத) வாசஞ் செய்தோம்,' என்று --, அமுதம் ஊறிய சொல்லால் உரைசெய்தான-அமிருதம்போன்ற இனிமைமிக்க வார்த் தைகளினூற் கூறினன்; (எ - று.)

எறிய கான் - காமியவனம், துவைதவனம் முதலியன. இதற்கு - மரங்களுயர்ந்த காடென்று உரைப்பாருமுளர். 'ஊறிய அமுதச் சொல்' என் பதற்கு - (பாற்கடல்) சுரந்த அமிருதம்போன்ற சொல் என்றும் உரைப்பர்:

மகிழ்ச்சியை விளைத்தலால், 'ஊறிய அமுதச் சொல்' எனப்பட்டது. இலேயாகிய சினையினது பண்பாகிய பசுமையை முதலாகிய சோலேயின்மேலேற்றி; 'பசுங்கா' எனப்பட்டது. (கக0)

111.—'உத்தரன் வெற்றிபெற்று மீள்கின்றனன்' என்று விராடனுக்குச் சொல்லும்படி அருச்சுனன் தூதனையனுப்புதல்.

(இ - ள்.) நீடு நீர் பரக்கும் - மிகுதியான நீர் பரவியோடப்பெற்ற, கங்கை - கங்காநதி பாய்கின்ற, நாடு - குருநாட்டை, உடை - உடைய, நிருபர் கோமான் - அரசர்க்கரசனாகிய அருச்சுனன்,- பேடி தேர் செலுத்த-ஆண்மையில்லாத பேடி தேரையோட்ட, சென்ற - (போர்செய்வதற்குத் தனியே) புறப்பட்டுப்போன, பிள்ளையும் - இளங்குமாரனை உத்தரனும், கொடும் போர் வென்று - பெரிய போரில் வெற்றிகொண்டு, கோடி தேர் முதுகு கண்டு - மிகப்பலதேர்வீரர்களை முதுகுகாட்டியோடசெய்து, கோ நிரை மீட்டான் - (பகைவர் கவர்ந்துசென்ற) பசுக்கூட்டத்தைத் திருப்பிக்கொண்டுவந்தான்', என்று என்று—, நீர் - நீங்கள், ஓடி சொன்மின் - ஓடிச்சென்று சொல்லுங்கள், என்று - என்றுசொல்லி, தூதரை ஓட விட்டான் - (சில) தூதர்களை (விராடனிடம்) விரைந்து செல்லும்படி அனுப்பினன்; (எ - று.)

தாங்கள் விராடராஜனால் ஆதரிக்கப்பட்டமையால், அவ்வுபகாரத்துக்குப் பிரதியுபகாரமாக, இப்போரை உத்தரனே வென்றனனென்று அவனது தந்தையார் முதலியோர் கருதி மகிழும்படி செய்விக்கவெண்ணி அருச்சுனன் இங்ஙனஞ் செய்திசொல்லுமாறு விராடனைக்குறித்துத் தூதரையேவினனென்க.மன்னவன் கவலையையொழிக்க,தூதரை யோடவிட்டனன்.பேடிதேர்செலுத்த,'பிள்ளை','பெரும்போர்,'கோடிதேர் முதுகுகண்டு'என்பன-உத்தரனது போர்த்திறத்தை நன்குவிளக்குங் கருத்தின. தேர் - தேர்வீரர்க்கு ஆகுபெயர். மகிழ்ச்சிபற்றிய ஆடுக்காகப் பலமுறை சொல்லுமாறு கூறினனென்பது தோன்ற, 'என்று என்று' எனப்பட்டது; ஊர்முழுவதிலும் அரசனிடத்துஞ் சொல்லும்படி யென்ற கருத்தில் வந்ததுமாம். முன்னைய நியமத்தின்படி வருவாலை அஞ்ஞாதவாலங்களை இடையூறின்றிக் கழித்தாயினமைபற்றியும், குருநாட்டையாளுகின்ற துரியோதனனை வென்றிட்டமைபற்றியும், இங்கு அருச்சுனனை 'கங்கை நாடுடை நிருபர் கோமான்' என்றார். (கக4)

112.—அன்றைக்காலையிலேயே விராடராஜன் தன்நகரத்துவந்து சேர்தல்.

(இ - ள்.) இங்கு - இவ்விடத்தில் [நகர்ப்புறச்சோலையில்], இவன் - இவ்வருசுனன், இ ஆறு உய்ப்ப - இவ்விதமாக(ச் சொல்லித்) தூதரையனுப்ப,—(அதற்குள்),—முன் பகல் - (அதற்கு) முந்தின நாளின் பகலில், தென் திசை - (தனது நகர்க்குத்) தென்புறத்தில், எகி-புறப்பட்டுச்சென்று, பூசல் - (அங்குநடந்த) போரில், வென்ற - (திரிகர்த்தராசனை) வென்று நிரை மீட்ட, வெம் கழல் விராடனும் தானும் - (பகைவர்க்கு) அச்சந்தருகின்ற வீரக்கழலையுடைய விராடராஜனும், ஆங்கண் - அவ்விடத்திலே, கங்குலில் -

அன்றை யிராத்திரிமுழுவதும், சேனையோடும் - (தனது) சேனையுடனே, கண்படை இன்றி வைகி - தூங்குதலில்லாமல் தங்கியிருந்து, (மறுநாள்), செம் கதிர் எழுந்த பின்னர் - சிவந்தகிரணங்களையுடைய சூரியன் உதித்த பின்பு, மீண்டு - திரும்பி, தன் நகரி புக்கான் - தனது நகரத்துக்கு வந்து சேர்ந்தான்; (எ - று.)

'உய்ப்ப' என்ற செயவெனெச்சத்தை, மேல் ககரு - ஆங் கவியிலுள்ள 'துதும்போய்த் தொழுதுசொன்னர்' என்பதனோடு கூட்டுக. இடையிலுள்ளது, அச்சமயத்திற்குள் நிகழ்ந்திருந்த செய்தியைக் கூறியது; கீழ் உரு - ஆஞ் செய்யுளில் 'படைவருமெனக் கங்குலகிருந்தான்' என்றதனோடு தொடர்ச்சிப் பட நிகழ்ந்தசெய்திகூறுகிறார்: அதனால், கங்குலிற் கண்படையில்லாதிருந்த தன் காரணம் விளங்கும். அக்கண் என்பதன் மெலித்தலான அங்கண் எண்பது நீட்டலவிகாரம்பெற்று 'ஆங்கண்' என்றாயிற்று. கண்படை - கண்மூடியுறங்குதல். செங்கதிர் - பணைபுத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; அடையடுத்த சினையாகுபெயரெனினும் அமையும். ()

11:.---மகன்போர்க்குரிசேனை யெய்தி கேட்டு விராடன் வருந்துதல்.

(இ - ள்.) (விராடராஜன்), --தட படி அடைந்த காலை - (அவ்வாறு தனது) பெரிய நகரை யடைந்தபொழுதில்,---தன் மகன் இருந்த பேடி - தனது மாளிகைக்குவந்து சேர்ந்திருந்த பிருந்நளையென்னும் பேடி, திடம் படு தட தேர் ஊர - வலிமைபொருந்திய பெரிய தேரை யோட்ட, திரு மகன் - (தனது) சிறந்தகுமாரனாகிய உத்தரன், சென்ற - (வடக்குப் பக்கத்திற் போர்க்கு) சென்ற, செய்கை - செய்தியை, விடம் படு வெகுளி வேல் கண் சுமேதட்டிணை விளம்ப - நஞ்சுதோற்றிய கோபமுள்ள வேலாயுதம் போன்ற கண்களையுடைய சுமேதவ்டிணையாகிய தனதுமனைவி சொல்ல, கேட்டு- (தான்) மயங்கியுற்று, ஆங்கு-அப்பொழுதே [கேட்ட அவ்விடத்தில்], உடம்பு உயிர் இன்றி வீழ்ந்ததை என்னும் ஆறு - உடம்பு உயிர்நீங்கி விழுந்ததென் னும்படி, உருகி வீழ்ந்தான் - (போர்த்திறமில்லாத தனது இளங்குமரன் என்றைவனே ரென்னும் வருத்தத்தால்) மனமுகைந்து மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்; (எ - று.)

திரு மகன் - செல்வப்பிள்ளை. மைதீட்டிய கண்ணுக்கு உவமையாதற் பொருட்டு, விடம்படுவேல் கூறினர். எந்தியவாது கோபத்தை வேலின் மேல் ஏற்றி 'வெகுளிவேல்' எனப்பட்டது; 'சினவாள்' என்றாற்போல. (ககஉ)

11.1.---விராடனைக் கங்கபட்டன் தேற்றி, 'பேடி தேரோட்டிவந்தா னென்றா இப்போதே வருவான்' என்றல்.

(இ - ள்.) (அப்பொழுது),- --அந்தணன் - கங்கபட்டனென்கிற சந் நியாசியாகிய தருமபுத்திரன்,—இருந்து - (பக்கத்தில்) இருந்து,—சந்தனம் அளறும் - சந்தனக்குழம்பையும், வாசம் தண் பனி நீரும் - நறுமணமுள்ள குளிர்ச்சியான பனிநீரையும், வீசி - (அவ்விராடராஜன்மீது) தெளித்து, வெம் திறல் வேந்தன் தன்னை - (பகைவர்க்கு) அச்சந்தருகிற வல்லமையையுடைய

அவ்வரசனை, மெய் மெலிவு - உடல் மெலிவை [மூர்ச்சித்து விழுந்ததை], தேற்றி - தெளியச்செய்து. 'அந்த மெய் பேடி - உண்மையான அந்தப் பேடி [பிருகந்நளை], பொன் தேர் ஊர்ந்தாள் ஆகில் - அழகிய தேரை யோட்டிக்கொண்டு சென்றனளேயாயின், மைந்தன் - (உத்தர) குமாரன், இப்பொழுதே வென்று வருகுவன் - வெகுவிரைவில்(பகைவரைச) சயித்து (நிரை மீட்டு) வருவன்,' என்றனன் - என்று தேறுதல் கூறினன்; (எ - று.)

மெய்ப் பேடி - உண்மையன்புடைய பேடி யெனினுமாம்; இத்தொடரில். மெய்யினல் [வடிவுமாத்திரத்தால்] பேடி [வலிமையாற் பேடியன்று] என்ற பொருள் உள்ளுறையாய்த் தோன்றுதல் காண்க: இனி, பொய்ப்பேடித்தன்மையை வெளிப்படாது மறைத்தற்கு 'மெய்ப்பேடி' என்றுரைமாம். அழகிய குளிர்ச்சியை அருளை ஆள்பவனென்ற சொல்லாற் கூறப்பட்டனை அந்தணனென்று கூறியதில், இயல்பாகவே தாபசாந்திசெய்தற் கேற்றவனென்னுங் கருத்துத்தோன்றுதலால் காரணக்காரியவணி. (கசை)

115.—தூதர் சென்று விராடனிடஞ் சொல்லுதல்.

(இ - ள்.) அறன்மகன் வாய்மை - தருமபுத்திரனது வாய்மையினல், அரசன் - விராடராசன், தேறி - (சிறிது) தெளிவடைந்து, ஆங்கு இருந்த எல்லை - அவ்விடத்திலிருந்த சமயத்தில், —தூதர் - (அருச்சுனனனுப்பிய) தூதுவர், போய் - (அவ்விராடனிடஞ்) சென்று, —தொழுது - (அவனரசனை) வணங்கி, —மறன் உடை உருகேது வல் சமர் அழித்த ஆறும்-வலிமையுள்ள பாம்புக்கொடியையுடையவனுன துரியோதனன் வலியபோரில் தோற்றுப் போன செய்தியையும், —உத்தரன் —, ஒரு தன் தேர் கொண்டு - தனது ஒருதேரைக்கொண்டே, உற மலைந்து-நன்றுகப் போர்செய்து, வென்ற ஆறும் - (பகைவரைச்) சயித்த செய்தியையும், தொறு நிரை மீட்ட ஆறும் - (பகைவர்கவர்ந்த) பசுக்கூட்டங்களை மீட்டுக்கொண்டு வந்த செய்தியையும், சொன்னர் - சொன்னார்கள்; (எ - று.)

வாய்மை தேற்றி-சொல்லை நம்பி யெனினுமாம். இருந்த எல்லை, சொன்னர் என இயையும். மறன்-மாற்றுப்போலி. உருகேது - பாம்பின்வடிவைக் கொடியிலுடையவன் என வேற்றுமைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; வடநூன் முடிபு. எளிதில் வெல்லப்பட்டமைதோன்ற, 'அழிந்தவாறு' என அவன் செய்கையாகக் கூறினர். (கஎ)

116.—அரசன் மகிழ்ந்து அனைவரையும் எதிர்கொள்ளச் சொல்லுதல்.

(இ - ள்.) சீதளம் அமுதம் வாரி - குளிர்ச்சியான அமிருதவெள்ளம், செவிகளில் சென்றிந்தது என்ன - காதுகளிற்சேர்ந்தது போல, தூதர் வந்து உரைத்த சொல்லால் - அத்தூதர்கள் வந்து சொல்லிய அச்சொற்களினல், தாதை - (உத்தரனது) தந்தையாகிய விராடன், சோகமும் துனியும் மாறி - துன்பமும் கவலையும் நீங்கப்பெற்றவனுய் [மிகமகிழ்ந்து], அன்று - அப்பொழுது, எது செய்தான் - என்னகாரியஞ்செய்தான்,(என்றல்),—'தனை ஒழிந்து

உள்ள சேனை ஆதிபர் எவரும் - தன்னையொருவனைத்தவிர உள்ள சேனைத் தலைவர்க ளெல்லாரும், எய்தி - சென்று, அண்ணலை எதிர்கொள்ள - பெருமையிற் சிறந்தவனுகிய உத்தரனை எதிர்கொண்டு அழைத்துவருவாராக,' என்றான் - என்று கட்டளையிட்டான்; (எ - று.)

தேவாமிருதம் நாவுக்கு இனிமைதருவது போல இத்தூதர் சொற்கள் அரசனது செவிக்கு இனிமைதருவது பற்றியும், அமிருதம் மரணத்தைத் தவிர்ப்பதுபோல இத்தூதர்சொற்கள் அரசனது பெருஞ்சோகத்தை மாற்றுவது பற்றியும், 'சீதளவமுதவாரி செவிகளிற் செறிந்ததென்னத் தூதர்வந் துரைதந்த சொல்லால்' எனப்பட்டது. வியப்புத் தோன்ற, 'தாதை அன்று எது செய்தான், தனையொழிந்துள்ள சேனையாதிபரெவரு மெய்தி யண்ணலை யெதிர்கொள்கென்றான்' என்று வினவும் விடையுமாகக் கூறினர். சேனைத் தலைவர் எதிர்கொள்ள வேண்டு மென்பது கூறவே, சேனைகளும் அடங்கும். இனி, சேனைகளும் ஆதிபரும் எனினுமாம். துனி - சோகத்தின்பின் சிறிது பொழுது நிகழ்வது; அச்சமுமாம்: துனியும் ஆதி என்று எடுத்து உரைக்கவும் இடமுண்டு. அதிபர் - ஆதிபர் என விகாரம்; வடசொல். எதிர் கொள்ளுதல், மரியாதை. (ககசு)

117.—விராடராசன்கொண்ட மிக்கமகிழ்ச்சியைக்கவி இழித்துரைத்தல்.

(இ - ள்.) சோரர்தம் கருவை - (தம் மனைவியர்பக்கல்) கள்ளப்புருஷ ராகிய அயலார்க்குப் பிறந்த குழந்தையை, தங்கள் கரு என - தங்கட்குப் பிறந்த குழந்தை யென்று எண்ணி, தோளில் எந்தி - (அக்குழந்தையைத் தங்கள்) தோள்களில் தூக்கிவைத்துக்கொண்டு, ஆர்வம் உற்று உருகும் நெஞ்சின் - (அக்குழந்தையினிடத்து) அன்புகொண்டு இளகுகின்ற மனத்தையுடைய, அறிவு இலார்தம்மை போல - அறிவில்லாத (சில) ஆடவரைப்போல,— வீரன் வெம் சமரம் வெல்ல - மகாவீரனை அருச்சுனன் கொடிய போரில் வெற்றிகொண்டவனையிருக்க. விராடன்—, அ போரினை - அந்த யுத்தத்தை, உத்தரன் வென்றான் என்ன - (தன்மகனை) உத்தரன் ஜயித்தானென்று உட்கொண்டு, மேனி புளகு எழ பூரித்தான் - (மிக்கமகிழ்ச்சியால்) உடம்பு புளகமுண்டாகப் பருத்து நின்றான்; (எ - று.)

சோரர் - கள்ளர்; இங்கே, பிறரறியாதபடி வந்து அயலார்க்குரியமாத ரைத் தமக்குரியராக்கிக்கொள்பவர்: வடசொல். கரு-கர்ப்ப மென்ற வடசொல் லின் சிதைவு: கருப்பத்தினின்று வெளிப்பட்ட குழந்தையைக் காட்டிற்று. தம்மனைவி பிறர்க்குப்பெற்ற பிள்ளையைத் தம்பிள்ளையென்று கொஞ்சிக் குலாவிக் கொண்டாடும் பேதையர்போல, விராடன் அருச்சுனனது போர்வெற் றியைத் தன்மகனதுபோர் வெற்றியென்று மாறுபடக்கருதி உண்மையறியாது மிகமகிழ்ந்தன னென்பதாம். உவமையணி. உண்மையுணருமிடத்து இவ் வகைத் தகுதியில்லாத மகிழ்ச்சிக்கு இடமில்லை யென்பதுபட, 'அறிவிலார்' என்றார்; அறிவிலார் - உண்மையுணராத பேதையர். ஆர்வமாவது - மனைவி யிடத்தும் தாய் தந்தை புத்திரர் முதலிய சுற்றத்தாரிடத்தும் மனமகிழ்ச்சி நிகழ்த்திப் பிணிப்பித்து நிற்கும் நேயம். புளகு - வடமொழி விகாரம்.

புளகெழுதல் - மயிர்சிலிர்த்தல். மேனிபுளகித்தலும், மேனி பூரித்தலும் - மகிழ்ச்சியிலுலாகும் மெய்ப்பாடுகள். விராடன் மேனி பூரித்தான் - தினை வழுவமைதி. (ககள)

118.—விராடநகரத்தார் தமது நகரத்தை யலங்கரித்தல்.

(இ - ள்.) (அந்நகரத்திலுள்ளார் யாவரும்),—பூழிகள் அடக்கி - (நிரம்பத் தண்ணீர்தெளித்து வீதிகளிற்) புழுதிகளை (மேற்கிளம்பாதபடி) அடக்கியும், செம் பொன் பூரண கும்பம் வைத்து - சிவந்த பொன்மயமான நீர்நிறை குடங்களை (வாயில் தின்னைகளில்) வைத்தும், வாழையும் கமுகும் நாட்டி - வாழைமரங்களையும் பாக்குமரங்களையும் (பந்தற்கால் முதலியவற்றிற்கட்டி) நிறுத்தியும், மணி ஒளி தீபம் ஏற்றி - இரத்தினமயமான ஒளியையுடைய விளக்குகளை ஏற்றிவைத்தும். சூழ வல் பதாகை கட்டி - சுற்றிலும் [நகரமெங்கும்] வலிய துவசங்களைக் கட்டியும், தோரணம் பலவும் நாட்டி - பலவகைத் தோரணங்களையும் தாபித்தும், ஏழ உயர் மாடம் முது ஊர் எங்கணும் கோடித்தார் - உயர்ந்த எழுநிலைகளை [உபரிகைகளை] யுடைய மாளிகைகளாக்கொண்ட பழமையான அந்நகர முழுவதும் அலங்கரித்தார்கள்; (எ - று.)

அரசன் கட்டளைப்படி நகரத்தவரனைவரும் இவ்வனைய நகரையலங்கரித்தனரென்க. தேர் முதலியனவரும்பொழுது புழுதிகிளம்பி மறைத்திடாமைப் பொருட்டு, தண்ணீர்தெளித்துப் புழுதிகளை யடக்குவர். பூரணகும்பமும், விளக்கும், கொடியும் - அஷ்டமங்கலங்களிற் சேர்ந்தவை. பதாகை - பெருங் கொடி. ஏழ - எழுநிலைகளுக்கு எண்ணலளவையாகுபெயர். (ககஅ)

119.—விராடனும் கங்கபட்டனும் சூதாடுகையில், தோல்வியுற்ற விராடன் ஒன்றுகூறல்.

(இ - ள்.) ஆங்கு - அப்பொழுது, வேந்தன் - விராடராசன், அகம் மிக மகிழ்ந்து - மனம் மிகவுவந்தளித்து, (கங்கபட்டனைநோக்கி), 'மகன் வரும் அளவும் - (எனது) புதல்வன் [உத்தரகுமாரன்] வரும்வரையிலும், வெம் சூது ஆடுதும் - (மேன்மேல்) விருப்பத்தைத்தருகின்ற சூதாட்டத்தை (நாமிருவரும்) ஆடுவோம்: வருக-வருவாயாக,' என்று - என்று சொல்லி (வலிய அழைத்து), அந்தணன் தன்னோடு ஆட - சந்தியாசியாகிய அக்கங்கபட்டனுடனே சூதாடுதற்கு, முனி - கங்கபட்டன், அடுத்து - அடுத்துத்து, மிக வெல்ல - மிகுதியாக [பலஆட்டம்] ஜயிக்க,—(அப்பொழுது விராடன் ஓராட்டந்தொடங்கிக் கங்கபட்டனைநோக்கி), 'எந்தை - எமது ஐயனே! வென்றி உத்தரன் முன் - ஜயசாலியாகிய உத்தரனுக்கு எதிரில், மேவார் இகல் அழிந்து என்ன - பகைவர்களான துரியோதனாதியர் வலிமை கெட்டமைபோல, இ போர் - இனி ஆடும் இந்த ஆட்டத்தில், நீ—, அழிகி - (என்முன்) தோற்பாய் [நான் உன்னை வெல்வேன்]', என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

வெம் சூது - ஆடுவோர்க்கு மிக்கவிருப்பதனைத்தருகின்ற சூதாட்டம்; "இழத்தொறுங் காதலிக்குஞ் சூது" என்றார் திருவள்ளுவனாரும். 'வெம்மை'

என்ற சொல் விருப்பத்தையும் உணர்த்தும். கொடிய சூதென்று பொருள் கொள்ளுதல், இயல்புச் சிறவாது. சூது-த்யூதமென்ற வடசொல்லின் சிதைவு. மகனது வெற்றியைப்பற்றித் தான்கொண்ட அளவிறந்த மனமகிழ்ச்சியால், அதனை இனித் தான் பெரும் வெற்றிக்கு உவமைகூறினன்.

படைகளைக்கொண்டு செய்யும் போரில் வெற்றி தோல்விகளால் இராச்சியத்தைப் பெறுதலும் இழத்தலும் நிகழ்தல்போல, காய்களைக்கொண்டு செய்யுஞ் சூதாட்டத்திலும் ஜயாபஜயங்கள் காரணமாகப் பொருள்களைப் பெறுதலும் இழத்தலும் நேர்வதுபற்றி, சூது 'போர்' எனப்பட்டது; உருவகம். அன்றியும், சூதாட்டத்தில் ஒருவர் தமது காயைக்கொண்டு எதிரியின் காயைக் கொல், அடி, வெட்டு என்று கூறிக் களவதனாலும், சூதாட்டம் போரெனத் தகும். முனிவனை 'எந்தை' என்று விளித்தது, சிறப்புப்பற்றி வந்த மரபு வழுவமைதி; எமது சுவாமி யென்றவாறும். (கக)

120, 121.—போர் வெற்றி பெடியிளைடையதே யென்று கூறிக் கங்கபட்டன் பெடியைப்புகழ்ந்து பேசுதலைத் தொடர்வித்தல்.

இவ்விரண்டு செய்யுள்களும் - குளகம்; ஒரு சொல் கொண்டு முடிக்கப்படுகின்றன.

(இ - ள்.) (120) என்று அவன் மொழிந்த போதில்-என்று அவ்விராட ராசன் சொன்னவளவில்,—(121) அந்தணனென் - சாந்தியாசியாகிய கங்கபட்டன்,—(விராடனைநோக்கி),—(120) 'நிருபர் வேற - அசாதியங்களுமே! வல் திறல் உரகசேது - மிக்கவலிமையையுடைய பாம்புக்கொடியனை தரியோதனன், எண் இல் வெம் சேனையோடு - கணக்கில்லாத கொடியசேனைகளுடனே, வலி அழிந்து உடைந்து போக - வலிமைகெட்டுத் தோற்றோடிப்போய் விடும்படி, வென்றவன் - (தாளெருவை முருக்க) சயித்தவன், பெடியே - (உத்தரனுக்குத தேர்செலுத்திக்கொண்டுசென்ற) பெடிதான்; (அவனையன்றி), நின் சிறுவன் - உனது இளங்குமாரன், தன் மெய் நடுங்காமல் - (அச்சத்தால்) தனது உடம்பு நடுக்கமடையாமல், போரில் - யுத்தத்தில், நின்று - எதிர் நின்று, வெல்ல வல்லனோ - (தரியோதனனையை) சயிக்க வல்லமையுடையனோ? [அல்லனென்றபடி]; (அன்றியும்),---(121) பிருகந்நளை என்று ஓதும் பெடியை - பிருகந்நளையென்று (பெயர்) சொல்லப்படுகின்ற பேடிவடிவாயுள்ளவனை, நீ—, பேடி என்று கருதல் - (சாதாரணமான) பேடியென்று இழிவாக எண்ணுதல்; (பின்னை யென்னவென்றால்),—அவனை - அவன் தான், முன்னம் - முன்பு, காண்டவம் எரித்த காளை - காண்டவவனத்தை (அக்கினிக்கு உணவாகக் கொடுத்து) எரிப்பித்த வீரனென அருச்சுனனது, ஒரு தனி தட பொன் தேர் - ஒப்பற்ற தனித்த [வேறுதுணையில்லாத] பெரிய பொன்மயமான தேரை, ஊர்ந்து - செலுத்திச்சென்று, உம்பருக்கு ஆக - (இந்திரன் முதலிய) தேவர்கட்கு உதவியாக, உம்பர் அரிகளை - அத்தேவர்கட்குப் பகைவர்களாகிய அசுரர்களை, அரிதின் - அருமையாக, வென்றனன் - சயித்திட்டான்,' என்றனன் - என்று சொன்னான்; (எ - று.)

(120) பகைவரது வலிமையும் பரப்பும் தோன்ற 'எண்ணில் வெஞ் சேனையோடு வன்றிறலுரகசேது' என்றும், உத்தரனது வலிமையின்மை

தோன்ற 'சிறுவன்'என்றுங் கூறினன். ஆகவே,மெய்ந்நடுங்குதலும் எதிர்நில் லாமையும் இயல்பாயின.'மெய்ந்நடுங்காமல்போரில்நின்றுவெல்ல வல்லனே' என்றது - எதிர் நிற்கவும் வல்லனல்லன் வெல்லவும் வல்லனல்லன் என்ற படி. உருவத்தாற் பேடியே யன்றி ஆற்றலாற் பேடியன் றென்பது விளங்க, 'வென்றவன் பேடி' என ஆண்பாலாற் கூறினன்.'வென்றவன் பேடி' என்ற முடிபை, சொல்நிலைநோக்கிய முடிபன்றிப் பொருள்நிலைநோக்கிய முடிபென் னலாம். தருமபுத்திரன் உண்மையை உள்ளபடி உணர்த்தவேண்டு மென்று இவ்வாறு கூறினனென். தமது அன்பர் காரணமின்றிச் சினங்கொண்டால் அதனைத் தக்கவாறு கூறியொழித்தல் ஆன்றோர் கடமை; அரசர்சினங்கிய விடத்து அமைசசர் செயற்பாலதும் அது.

(121) அருச்சுனன் பேடிவடிவங்கொண்டு விராடனிடம் வந்தபோது "ஏய வெஞ்சிலைக்கையருச்சுனன் கோயிலிருப்பதோர் பேடி நான்" என்று சொன்னதைக்கவுற்கபட்டன்நேரிற் கேட்டும், விராதசாரணியென்னும்வண்ண மகளாகிய திரௌபதி அப்பேடியைக்குறித்து உத்தரனிடம் "விதாதம்பெறு தோர் விடும விசயனுக் கிவள்" என்று சொன்னதைக் கேள்வியுற்று முள்ளா னதலால், அவற்றிற்கேற்ப 'அவனே முன்னங் காண்டவமெரித்த காளை யொருதனித்தடம் பொற்றேரூர்ந்து' என்றனன். சத்தியவிரதனும் அந்தண னெனுமாகிய தருமபுத்திரனது இவ்வாசாத்தை - 'அவனே முன்னம் காண்டவ மெரித்தகாளை: (மற்றும்), ஒப்பற்ற தனித்த பொன்மயமான பெரிய (இந்தி ரனது)தேரி லேறிச்சென்று தேவர்கட்காகத் தேவசத்துருக்களாகிய (நிவாத கவச காலகேய ரென்னும்) அசுரர்களை அருமையாக வென்றவன்' என்ற உண்மைப்பொருளையு முடையதாதலும், 'பேடியைப் பேடியென்று கருதல்' என்றதிலும் - பேடியுருவங்கொண்டவனை இயல்பான பேடியென்று எண ணுதே [அவன் அருசுனனுவன்] என்ற பொருள் தோன்றுதலும் காண்க. கருதல் - எதிர்மறை யொருமை யேவல். ஒருதனி - தன்னந்தனி யென்ற வாறாம். 'உம்பர்' என்ற மேலிடத்தின்பெயர் - அங்கு உள்ள தேவர்க்கு இடவாகுபெயராம்.

காண்டவமெரித்த வரலாறு:—இந்திரப்பிரத்த நகரத்தைச் சார்ந்ததொரு பூஞ்சோலையிற் கிருஷ்ணனும் அருசுனனும் உல்லாசமாக வசித்திருக்கை யில் ஒருநாள் அக்கினிபகவான் அந்தணவடிவங்கொண்டு வந்து 'எனக்கு மிகப்பசிக்கின்றது; உணவிடுக' என்று வேண்ட, அவ்விருவரும் 'நீ வேண் டியபடி உணவிடுவோம்' என்று வாக்குதத்தஞ்செய்ய, உடனே தீக்கடவுள் நிஜரூபங்கொண்டு 'இந்திரனது காவற்காடாய் யாவர்க்கும் அழிக்கவொண் ணாதபடி நிலவுலகத்திலிருக்கின்ற காண்டவவனத்தை அதிலுள்ள சராசரங் களுடனே எனக்கு விருந்திடவேண்டும்' என்ன, கிருஷ்ண அருசுனர்கள் அங்கே புக்கு ஒதுங்கியிருக்கின்ற அசுரர் முதலிய துஷ்டர்களை யழித்தருள வேண்டுமென்னும் நோகத்தால் 'நீ இதனைப் புசி' என்று இசைந்து அளிக்க, உடனே நெருப்புப் பற்றி யெரித்ததென்பதாம். அங்ஙனம் எரிக்கையில், இந்திரன் சினந்து பெய்வித்த பெருமழையைச் சரக்கூடுகட்டித் தடுத்தும்,

கோபித்துத் தேவர்கூட்டத்துடன் வந்து பொருத இந்திரனைப் புறங்கொடுத் தோடச்செய்தும், அவ்வனத்தினின்று தப்பியோடத்தொடங்கிய பிராணி களை அம்பெய்து தழலில் விழுத்தியும் பலவாறு உதவி புரிந்ததனால், அருச் சுனன் 'காண்டவமெரித்த காளை' எனப்பட்டான். (கஉக)

122.—வீராடன் அதனை மறுத்துப்பேசுதல்.

(நி-ள்.) (அதுகேட்ட வீராடன் கடுகபட்டனைநோக்கி),—பிரமமூர்த்தி - தவவடிவமுடையவனே! என் புதல்வன் தானே - எனதுபுதல்வனே, ஒரு தனி - தன்னந்தனியே [ஒரு துணையுமில்லாமல்], ஓடி - விரைந்து சென்று, பொருது - போர்செய்து, கோடியின் கோடி ஆன குருக்கள் வெம் சேனை தன்னை-பலகோடிக்கணக்கான குருகுலத்தவரதுகோடியசேனையை, வென்று- சயித்து, ஈடிய நிரையும் மீட்டு - மிகுதியான பசுக்கூட்டங்களையும் திருப்பிக் கொண்டு, மீண்டனன் - திரும்பிவந்தான், என்ன - என்று (யான்) சொல் லவும், நீ—, அ பேடியை - அந்தப் பேடியாகிய பிருகந்நளையை, விறல் கொண்டாடி பேசுதி - பெருமைபாராட்டிப் புகழ்ந்துபேசுகின்றாய்; (எ - று.)

ப்ரஹ்மமூர்த்தி - வடசொல்; ஈறுதிரிந்தது, விளியுருபு. பிரமம் - ஞான மும், வேதமுமாம்; ஞானமே ஒருவடிவங் கொண்டாற்போன்றவ னென்க: அந்தணரை 'வேதமூர்த்தி' என்றல், வழக்கு. விவேகியாகிய நீ இங்ஙனங் கூறுதல் தகுமோ? என்பதாம். கோடியின் கோடி - கோடியாகிய கோடி யெனப் பணபுத்தொகை; கோடியென்னுமெண்ணிற்பெருக்கிய கோடி யென்னுமெண என்பது கருத்து. அது, பதுமமெனவும், கோடாகோடி யெனவும், மகாகோடியெனவும்படும். தான் - தேற்றம்; ஏ - பிரிநிலை. ஒரு தனி - ஒருபொருட்பன்மொழி. (கஉஉ)

123.—இதுவும் அது.

(நி - ள்.) சுருதிவல்லாய் - வேதம்வல்லவனே! புல் நவை ஆன மாற் றம் புகன்றனர் எனினும் - மிகவும்பிழையான வார்த்தைகளை (அரசர்)சொல் வினராயினும், கேட்டு - (அவற்றைச் செவிகொடுத்துக்) கேட்டு, ஆங்கு - அப் பொழுது, இன்னவை நன்று நன்று என்று - 'இவவார்த்தைகள் மிகநன்று யுள்ளன' என்று, இதம் பட - (அவ்வரசாக்குப்) பிரியமாக, மொழிவது அல் லால் - (அரசனையடுத்துவாழ்பவர்) ஒட்டிப்பேசுவதல்லாமல், மன் அவை நாளும் இருந்து வழிபடும் மாந்தர் - ராஜசபையிலே நாள்தோறும் இருந்து (அரசாக்குக்) கீழ்ப்படிந்துநடக்கின்ற மனிதர்கள், மன்னர் சொன்னவை மறு த்து மாறு சொல்வரோ - (இவ்வாறு) அரசர்சொன்னவற்றைத் தடுத்து எதிர் பேசுவார்களோ? [பேசார் என்றபடி]; (எ - று.)

எல்லாந்தெரிந்த உனக்கு அரசனைச்சார்ந்து நடக்கும் முறைமைதெரி யாதோவென்றற்கு, கீழ் 'பிரமமூர்த்தி' என்றும், இங்கு 'சுருதிவல்லாய்' என் றும் கூறினேன். இங்கு, வழிபடுதல் - அரசரது குறிப்பின் வழியிற் சேர்ந்து ஒழுகுதல். என்குறிப்பின் வழிநடப்பதற்குரிய நீ யான் சொன்னவற்றை வெட்டிப்பேசுதல் தகுதியன்றென்பதாம். புல், நவை - ஒருபொருட் பன்

மொழி. 'புகன்றனரெனினும்' என்ற உம்மை -அங்ஙனம் அவர்புகலா ரென் பது படநின்றது. நன்றன்றென்றுசொல்வதாயினும் பின்பு சமயம்பார்த்துத் தக்கபடிசொல்லுவேண்டுமேயன்றி அப்பொழுதே மருத்துசசொல்ல லாகாதென் பான் ஆங்கு என்றான். இன்னவை நன்று - பன்மையில் ஒருமை வந்த வழுவமைதி: பன்மை யொருமைமயக்கம்.'நன்று நன்று' என்ற அடுக்கு, உவகை பற்றியது.'காளும்' என்பதில், உம்மை-தொறுப்பொருளது.மாந்தர்-பன்மைப் பெயர். ஸ்ருதி என்ற வடசொல்லுக்கு-(எழுதாக்கிளவியாய்க்குருசிஷ்யக்கிர மத்திலே கர்ணபரம்பரையாற்) கேட்கப்பட்டு வருவதென்றுபொருள்.

'இகழினிகழ்ந்தாங் கிறைமகனென்று, புகழினு மொக்கப் புகழுப— இகன் மன்னன், சீர்வழிப்பட்டதே மன்பதை மற்றென்செய்யும், நீர்வழிப் பட்ட புணை" என்ற நீதிநெறிவிளக்கம், இங்கு நோக்கத்தக்கது. (கஉங)

124.—மீண்டும் கங்கபட்டன் மறுத்துப்பேசுதல்.

(இ - ள்.) என்னவும்-என்று (விராடன் சினந்து) சொல்லவும்,—இருடி-முனிவனாகிய கங்கபட்டன்,—இடம் கொடாமல் - (அவன்கொள்கைக்குச) சிறிதும் இணங்காமல் [தாழாமல்]—எதிர் உற-(அவன்வார்த்தைக்கு) மாறாக, மீண்டும் - மறுபடியும்,—'மன்னவ - அரசனே! கன்னன் - கர்ணனும், வில் துரோணன் - வில்லாசிரியனாகிய துரோணனும், மைந்தன் - அவன் மகனை அசுவத்தாமனும், காங்கெயன்-கங்காதேவியின் குமாரனை பீஷ்மனும், முதலி னோரை - முதலிய வீரர்களை, நின் சேய் - உனது மகன் [உத்தரன்], வெல்ல வல்லனே - சயிக்கமாட்டுவனே? வந்து சொன்னால் - (அக்குமரனே) வந்து கூறினால், பின்னை - பின்பு, நீ—, பீடு உடை பேடி தன்னை - பெருமையை யுடைய அப்பேடியை, தெளிதி-(போர்வென்றவனென்று) ஐயமறத்தெரிந்து கொள்வாய்', என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

பீடுடைப் பேடிதன்னைத் தெளிதி - பேடியின் பெருமையை யறிவா யென்றபடி. ருவதி, காங்கேயன் என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. காங் கேயன் - கங்கையின் புத்திரன்:தத்திதாந்தநாமம். 'காங்கெயன் முதலினோர்' என்று பெரியோனை பீஷ்மனைத் தலைமையாக வெடுத்துக்கூறிக் குருகுலத் துவரனைவரையுங் குறித்தனன். (கஉச)

125.—விராடன் மிகக் கோபித்துக் கங்கபட்டனைக் கவறுகொண்டு அடித்தல்.

(இ - ள்.) மன்னன் - (அதுகேட்ட) விராடராசன்,—(கங்கபட்டனை நோக்கி), 'இன்று - இன்றைத்தினத்தில், என் குமரன் - எனது மகன், கொடு வில் ஆண்மையினால் - கொடிய விற்போர்த்தொழிலில் தனக்கு உள்ள திறமையினால், வென்றிடவும் - (பகைவரைச்) சயித்திருக்கவும், நீ—, சற்றும் நடு இலாதவரின் - சிறிதும் நடுவுநிலைமை யில்லாதவர்போல [பக்ஷபாதமுடை யவர்போல], பல் கால் - பலமுறை, நவில்வது - (அதனை - இல்லையென்று மறுத்து என்மகனையிகழ்ந்து பேடியைப்புகழ்ந்து) பேசுவது, என் கொல் - என்னே?' என்ன - என்று சொல்லி, கடு இல் ஆடு அரவின் பொங்கி - விஷ த்திற்குஇருப்பிடமான படமெடுத்தாடுகின்றதொரு பாம்புபோலச சினி, வடு

இலா முனியை-குற்றமில்லாத அம்முனிவனை, வடு படும் ஆறு-தழும்பு படும் படி, கவற்றினால் எறிந்து - சூதாடுகருவியினால் வீசியடித்து, நக்கான் - சிரித் தான்; (எ - று.)—மன் ஓ - ஈற்றசை.

விராடன் சீறுதற்கு, நஞ்சுள்ளபாம்பு படமெடுத்துச்சீறினாற்போலு மென உவமை கூறியவாறும். நடுவு நிலைமையாவது - பகைவர் அய லார் நண்பர் என்னும் மூன்று வகையாரிடத்தும் அறத்தின்வழுவாமல் ஒப்பநிற்கின்ற பக்கபாதமில்லாத நிலை ம. இத்தகைமையில்லாதவரியல்பு, ஒரு தலையாப்பேசுதல். கடுவில் ஆடு அரவின்-விடத்தினாற் படமெடுத்தாடும் பாம்புபோல வென்றுமாம். கடு இல் - விடமில்லாத என்று உரைப்பாரு முளர். சிரித்தது, வெகுளியினால். 'வடுவிலாமுனியை வடுப்படுமாறுஎறிந்து' என்றவிடத்து, விரோதாலங்காரம் காண்க: வடு - குற்றமும், தழும்பும். கொடுமை - வினைவுமாம். (கஉரு)

126.—நங்கபட்டனது வெற்றியிலாத்தம் பொறாமை விருதகாரணி பாரித்தல்.

(இ - ள்.) எற்றிய கவறு - (விராடன்) வீசியெறிந்த அச்சூதாடுகருவியா னது, சென்று - போய், எதிர் உற இருந்த கங்கன் வெற்றியில் - எதிரில்வீற் றிருந்த கங்கபட்டனது வெற்றியில், வாசம் நிறைத்த குங்குமத்தின் சேற் றால் பற்றிய திலகம் போல - வாசனையை மிகுதியாக வீசுகின்ற குங்குமப்பூ வின் குழம்பினால் இட்ட திலகம்போல (இரத்தம் பொசியும்படி), வெற்றி படு தலும் - தாக்கிப் பட்டவளவில்,—பாங்கர் நின்ற - பக்கத்தில்நின்ற, வற்றிய ஓடை அன்ன வனப்பினுள் - நீர்வறண்ட ஓடைபோன்ற [அலங்காரமில் லாத] அழகுள்ள வண்ணமகளாகிய நிலாதேவி, மருண்டு கண்டாள்-(அதனை) வெருண்டு பார்த்தாள்; (எ - று.)

மருண்டுகாணுதல், முனி வடிவமாயுள்ள தன்கணவனை அரசன் புண் படுத்தியதனாலாகிய கவலையால். ஆபரணமணிதல் முதலியவற்றா லுண்டா குஞ் செயற்கையழகில்லாமையும், தன்கணவர் உருக்கரந்து அடிமைபுண்டி ருத்தலா லாகிய வருத்தத்தாற் பொலிவிழந்திருத்தலும், அரசியுருவத்தை யொழித்துப் பணிசெய்பவள்வடிவத்தைக்கொண்டிருத்தலும்பற்றி, 'வற்றிய வோடையன்ன' என்றும், இயற்கையழகுடைமைபற்றி 'வனப்பினுள்' என் றும் கூறினர். வெற்றி என்ற சொல் இரண்டனுள், முன்னது-இறந்தகால வினையெச்சம்; வெற்று-பகுதி: பின்னது - பெயர்ச்சொல். பாங்கர் = பாங்கு; மென்றொடர்க்குற்றியலுகரத்துக்கு அர் - போலி. குங்குமம், திலகம் - வட சொற்கள். திலகம் - வெற்றிப் பொட்டு. மருண்டு கண்டாள் - கண்டு மருண் டாள் என்று விகுதிபிரித்துக் கூட்டலுமாம்.மருண்டு கண்டதற்குக் காரணம், மேலே விளங்கும். ஓடை-நீரோடுவதெனக் காரணக்குறி. (கஉசு)

127.—அவள் அவ்விராத்தினைத் துடைத்தல்.

(இ - ள்.) 'பார்த்திவன் - (விராட)ராஜனது, பல்கிய கிளையும் - மிகுதி யான பந்துவர்க்கமும், தேசும் - ஒளியும், வாழ்வும் - வாழ்க்கையும், தாங்கள்

அல்கிய நகரும் - தாங்கள் (அஞ்ஞாதவாசமாகத்) தங்கியிருந்த அவ்விராட நகரமும், இன்றே அழியும் - (இக்கங்கபட்டனது இரத்தம் கீழே சிந்திஞல்) இன்றைக்கே அழிந்துபோய்விடும்,' என்று - என்றுஎண்ணி அதனல், அஞ்சியே கொல் - அச்சங்கொண்டதனலேயோ?(அன்றி), நல்கிய நேயமே கொல்- (தன்கணவனுகிய அத்தருமபுத்திரனிடத்துத்தான்) வைத்துள்ள அன்பினலேயோ? வண்ணம் மாது -வண்ணமகளாகிய திரௌபதி, நயனம் நீர் மல்க மல்க - (தன்) கண்களினின்றுநீர் மிகுதியாய்ப்பெருகப்பெருக,மல்கிய குருதி தன்னை மாற்றினுள் - (கங்கபட்டனதுநெற்றியினின்று) மிகுதியாய் வெளிப் பட்ட இரத்தத்தை (க் கீழேசிந்தவொட்டாமல்) துடைத்துப் போக்கினுள்.

நிரபராதியும் சாந்தமூர்த்தியும் நற்குண நற்செயல்களிற் சிறந்தவனும் முனிவடிவமாயுள்ளவனு மான தருமபுத்திரனை விராடன் சினந்து ஊறுபடுத் தியதனல் அவனது நெற்றியினின்று பெருகும் இரத்தம் கீழே சிந்துமாயின் அத்தீவினைப்பயனல் விராடனும் அவனதுநாடும் சுற்றத்தோடு அழிதல் கூடு மென்பதையும், தனதுழுத்ததமையனுன தருமபுத்திரனை எவரேனும் புண் படுத்திக்குருதிசிந்துவித்தால் அவரை வேரோடழித்துவிடுவதென்று அருச்சு னன் விரதங்கொண்டுள்ளவ ஞதலால் அவனல் விராடனுக்குப் பேரழிவு நேர் தல் கூடுமென்பதையும் எண்ணித் திரௌபதி அஞ்சியதனலும், தன்பிராண நாயகனுகிய அத்தருமபுத்திரனிடத்து அவள் தான்கொண்டுள்ள அன்பினு லும், அருகிலிருந்து கண்ணுற்ற பணிப்பெண்ணுகிய அவள் கண்ணுங் கண் ணீருமாய் விரைந்தோடிவந்து தருமனது நெற்றியினிரத்தத்தைக் கீழே சிந் தாதபடி தனது ஆடையினல் துடைத்தன ளென்ற கருத்தை இங்ஙனம் விகற்பவகையாற் கூறினுர். (அருச்சுனன் இவ்வகை விரதமுடையனுதல்பற்றி அவனுக்கு ஜிஷ்ணுவென்று ஒருபெயர் வழங்கிய தென்பதை, "மட்டிலாவலி பெற்றுள்ளவானவர் முதலோரேனு, மிட்டமற்று திட்டிரப்பேரிறைவனேயவ மானித்தால், தொட்டவான் கணையாற்சென்னி துண்ணிப்பதென்றிருக்குஞ் சொல்லாற், சிட்டுணுவென்று நாமஞ்செய்தனர் தெளிந்தமேலார்" என்ற நல்லாப்பிள்ளை பாரதத்தாலும் அறிக: மேல் வெளிப்பாட்டுச் சருக்கத்தில் "தன்னை நிகர்கிற்பவரிலாததனுவல்லோன், என்னை திருநெற்றியி லிருத்த வடு வென்றுன், மின்னையும்வெறுத்தொளிரு மேதகுநிறத்தாள், பின்னையவ னுக்கு நிகழ்பெற்றியுரைசெய்தாள்," "உரைத்தபொழுதிப்பொழுதிவ்வூரெரி கொளுத்தித், தரைத்தலைவனைத் தலைதடிந்திடுவலென்னு, விரைத்தடவரைப் புயன்வெகுண்டுவிலெடுத்தான், இரைத்துவரு கான்மகனு மெரிவிழிசிவந் தான்," "அனலுமுதுகானகமகன்று நெடுநாள்நம், நினைவுவழுவாமலிவணீழ லிலிருந்தோஞ், சினமிகுதலிற்றவறுசெய்தன னெனப்போய், முனிதல் பழுதாகுமென முன்னவன்மொழிந்தான்" என வருஞ் செய்யுள்களிற் கூறும் விஷயமும் நோக்கத்தக்கது.)

கிளை-மரத்தைக் கிளைபோல ஒருவனைத் தழுவிநிற்கும் உறவினத்துக்கு உவமவாகுபெயர். தேசு - தேஜஸ் என்ற வடசொல்லின் சிதைவு. அரசனுக்கு ஒளி—"உறங்குமாயினு மன்னவன் றன்னொளி, கறங்குதண்டிரைவையகங்

ர்க்குமால்" என்றபடி உறங்காகிற்கவும் தான் உலகங்காக்கின்ற அவனது தெய்வத்தன்மையும், தான் உயிர் வாழுங்காலத்து மிக்குத்தோன்றுதலுடைமையும், புகழுமாம். பார்த்திவன் என்ற வடசொல், பிருதிவியை யாளுபவனென்று பொருள்படும்; பிருதிவி - பூமி. நயநம் - வடசொல். மல்க மல்க - அடுக்கு, இடைவிடாமை குறிப்பது. வண்ணம் மாது - (விராடன்மனைவியாகிய சுதேட்டிணைக்கு) அலங்காரஞ்செய்யும் பெண். (கஉஎ)

128.—விராடன் கழிவிரக்கங்கொள்ளுதல்.

(இ - ள்.) அந்த வண்ணம் - அவ்வாறு, வண்ணம் காரிகை - வண்ணமகள், கண்ணின் நீர் மல்க - (தன்) கண்களினின்று நீர்பெருக, கலையால் - (தனது) ஆடையினால், மா முனிவன் சோரி - சிறந்தஅந்தக்கங்கமுனிவனுடைய இரத்தத்தை, மாற்றிய காலை - துடைத்த பொழுது, அண்ணலும் - பெருமையிற்சிறந்தவனான விராடராஜனும், ஐயுற்று - சந்தேகமடைந்து, எண்ணமும் செயலும் வேறு ஆய் - நினைப்பும் தொழிலும் வேறுபட்டு, 'என் செய்தோம் என் செய்தோம் - (ஆலோசனையில்லாமல்) என்ன தவறுனகாரியஞ் செய்துவிட்டோம்! என்ன தவறுனகாரியஞ்செய்துவிட்டோம்!!' என்று-என்று பலதாம் எண்ணி, தன்னை நொந்து - தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு, ஆங்கு-அப்பொழுது, அருஞ் சினம் பாவம் என்றான் - 'அடக்குதற்கு அரிய கோபம் கெட்டது' என்று பசசாத்தாபப்பட்டான்; (எ - று.)

கலை - சேலை; இங்கு, முன் தானை. முனிவனது நெற்றியிற் பொசியும் இரத்தத்தை வண்ணமகள் துகிலால் துடைத்த தென்ன வென்று விராடன் சங்கைகொண்டனன். 'எண்ணமுஞ் செயலும் வேறாய்' என்றது, இவ்வளவு காலமாய்க் கங்கபட்டனிடத்து வைத்திருந்த அன்போடுகூடிய மதிப்பாகிய நினைப்பும் இப்பொழுது கவற்றினுலெனிந்தகடுந்தொழிலும் ஒன்றோடொன்று ஒற்றுமையுடைய தன்றாகி யென்றபடி. 'என்செய்தோம்' என்ற அடுக்கு - இரக்கம்பற்றியது. பாவம் - பாபமென்ற வடசொல்லின் விகாரம். பாவி யென்றும்பாடமுண்டு: 'அருஞ்சினம் பாவி' என்றதை "அழுக்காறென வொருபாவி" என்றாற்போலக் கொள்க. பண்பிற்குப பண்பி யில்லையாயினும் தன்னையுடையவனை இம்மைமறுமை யிரண்டிலுங் கெடுக்கின்ற கொடுமை பற்றி, சினத்தை 'பாவி' என்றனரென்க; கொடியவனை 'பாவி' என்னும் வழக்கு இருத்தலால். (கஉஅ)

129.—மாலைப்பொழுதில் உத்தரன் நகர்க்கு மீளுதல்.

(இ - ள்.) அ இடை - அப்பொழுது, ஆதபன் - சூரியன், அத்தம் குன்றுக்கு அணியன் ஆக - அஸ்தமநகிரிக்குச் சமீபத்திற் சென்றவழுக [சாயங்கால மாகுஞ் சமயத்தில்],—வேந்தன் புதல்வன் - விராடராசனுடைய குமாரன் [உத்தரன்],—சேய் இடை எதிர் கொள் கொற்றம் சேனை மன்னவர்கள் சூழ - வெகுதூரம்வந்து தன்னை யெதிர்கொண்டு அழைத்துச்செல்லுகின்ற வெற்றியையுடைய சேனைத்தலைவர்கள் (தன்னைச்) சூழ்ந்துவர,—வீயிடை வரி வண்டு ஆர்க்கும் - மலர்களில் உடற்கோடுகளையுடைய வண்டுகள் மொய்த்து ஆரவாரிக்கப்பெற்ற, வியல் பெருங் காவு - அகன்ற பெரிய சோலையி

னின்று, நீங்கி போய் - புறப்பட்டுச் சென்று, இடை நெருங்கி - நடுவிடத்தைக் கடந்து நெருங்கி, அ புரத்தை சேர்ந்தான் - அந்தப்பட்டணத்தையடைந்தான்; (எ - று.)

அ + இடை = ஆயிடை: செய்யுளிற் சுட்டுநீண்டவிடத்து உயிர்வர யகரந் தோன்றிற்று. அஸ்தம், ஆதபன் - வடசொற்கள். அத்தக்குன்று, மேற்றிசையில் மேல்கடலிலச் சாரவுள்ள தெனப்படும். அத்தக்குன்று - இருபெய ரொட்டுப் பண்புத்தொகை. ஆதபன் - எங்கும் நன்ரூய்த் தபிப்பவன். தென் புறத்துப் பகை வென்று நிரைமீட்டுவந்தசேனை யென்பது பற்றி, 'கொற்றச் சேனை' என்ரூர். வரி - இசைப்பாட்டுமாம். வியல் - உரிச்சொல்; வியல் + பெரு = வியன்பெரு; சிறுபான்மை லகரம் வலிவர னகரமாயிற்று: "குறில் செறியா ல ள" என்னுஞ் சூத்திரத்து 'பிற' என்ற மிகையைக் காண்க. அப்புரம் - விராடபுரம். (கஉக)

130.—உத்தரன் வீதியில் உலாப்போதல்.

(இ - ள்.) (அங்ஙனஞ்சேர்ந்த உத்தரன்),—வெம் படைகள் - கொடிய ஆயுதங்கள், பரந்து மின்ன - பரவிப் பிரகாசிக்கவும், பல் இயம் - பலவகைவாத்தியங்களும், பணிலம் - வெற்றிச சங்கத்தோடு, ஆர்ப்ப-ஆரவாரிக்கவும்,—சுரந்து மும் மதமும் பாயும் - ஊற்றெடுத்து [இடைவிடாமல்] மூன்றுவகை மதங்களும் பெருகப்பெற்ற, துதிக்கை வாரணங்கள் - துதிக்கையையுடைய யானைகள், சூழ - (தன்னைச்) சூழ்ந்துவரவும்,—புரந்தரன் நகரில் - தேவேந்திரனது பட்டணத்தில், காளம் புயல் வரும் ஆறு போல - கறுத்தமேகம் வருவதுபோல, உரம் தரு பேடி தன் தேர் ஊர - தனக்கு வெற்றியைக்கொடுத்த பேடியாகிய பிருகந்நளை தனது தேரைச் செலுத்த, வீதி உற்ரூன் - அந்நகரத்து வீதிகளின் வழியே சென்ரூன்; (எ - று.)

செல்வ வளசசிறப்புப்பற்றி, விராடபுரத்துக்குத் தேவேந்திரனது அமராவதிநகரம் உவமை. இனிமையையும் மகிழ்ச்சியையும் விளைத்தலில், உத்தரன் வருதல் நீர் கொண்டகாளமேகம் வருதல் போலு மென்க. காளமேகத்தை உவமைகூறியதற்கு ஏற்ப, படைகளாகிய மின்னலும் வாத்தியமுழக்கமாகிய இடியும் யானைமதமாகிய மழையும் கூறின ரென்னலாம். உம்மை - முற்றுப்பொருளது. பரந்துமின்னுதல் - நெடுந்தூரமளவும் பிரகாசித்தல். அருச்சுனன் தான் வென்ற ஆண்மையை உத்தரனதாக அனைவரும் கருதும்படி தூது போக்கியமைபற்றி, 'உரந்தருபேடி' என்ரூர். காளப்புயல் என்பதை உவமையாகுபெயராக்கொண்டு, காளமேகம்போன்ற திருமாலினவதாரமாகிய உபேந்திரமூர்த்திப் பகைவென்றுவந்தாற்போல என்று பொருளுரைத்தலுமொன்று; விராடனதுமகளாகிய உத்தரன் வெற்றியோடு விராடபுரத்து வீதியில் வருதற்கு, இந்திரனது தம்பியாகிய உபேந்திரன் பகைவென்று இந்திரநகரத்துவீதியில் வருதல்ஒப்புமையென்க. புரந்தரன் - பகைவரது நகரங்களை அல்லது உடம்புகளை அழிப்பவன்; வடசொல்: புரம் - ஊரும், உடலும். (கஉ○)

131.—விராடன் எதிர்கொண்டு உத்தரனைத் தழுவுதல்.

(இ - ள்.) வென்று மீள் குமரன் தன்னை - பகைவென்று மீண்டுவருகின்ற இளமகனுகிய உத்தரனை, வீதிகள் தோறும் (அவன் செல்லுகின்ற விராடபுரத்து) வீதிகளிலெல்லாம், மாதர்- (அந்நகரத்து மாளிகைகளிலுள்ள) மகளிர்கள், அன்று - அப்பொழுது, எதிர்கொண்டு - எதிர்கொண்டு சென்று, நல் நீராசனம் எடுத்து வாழ்த்த - நல்ல மங்களவாலத்தி யெடுத்துச் சுழற்றி வாழ்த்தாநிற்க,—அவன் பிதாவும் - அவனது தந்தையாகிய விராடனும்,—குன்று எறிந்தவனை-கிரௌஞ்சகிரியை (வேல்கொண்டு) பிளந்திட்ட (தனது இளையகுமாரனை) சுப்பிரமணியனை, கண்ட - பார்த்த, குன்றம் வில்லியை போல் - மகாமேருகிரியை வில்லாகக்கொண்டவனுகிய சிவபிரானைப்போல, முந்த தேர்மேல் சென்று - விரைவாகத் தேரின்மீது (ஏறி எதிர்கொண்டு) சென்று, சிக்கென தழீஇக்கொண்டான் - (அவ்வுத்தரனை) இறுகத்தழுவிக் கொண்டான்; (எ - று.)

உத்தரனது தந்தையாகிய விராடனுக்கு முருகக்கடவுளின் தந்தையாகிய சிவபிரானும், வெற்றிபெற்று மீண்ட இளையகுமாரனை உத்தரனுக்கு அங்ஙனமாகிய முருகக்கடவுளும் ஒப்புமை யெனக்காண்க. எதிர்கொண்டு, நீராசனமெடுத்து வாழ்த்த, தழீஇக்கொண்டான் என்பவற்றிற்கெல்லாம் 'குமரன் தன்னை' என்றது - செயப்படுபொருள். நீராஜநம்-வடசொல்; இது, திருவந்தி தோஷங்கழிதற்பொருட்டுச் சுழற்றுவது: சுண்ணும்புகலந்த மஞ்சள் நீரை ஒரு தட்டிற்கொண்டு அதன் நடுவிற் கர்ப்பூரமேற்றிவைத்து அதனை யெடுத்து மங்களகரமான மாதர்கள் விசேஷகாலங்களில் ஒருவாக்குச சுழற்றுதல் மரபு. வில்லி என்றதில், இ - ஆண்பாற் பெயர்விகுதி. குன்று என்ற பொதுப் பெயர், சந்தர்ப்பத்தினுல் கிரௌஞ்சமும் மேருவுமாகிய சிறப்புப்பொருளைக் குறித்தது.

தன்னெறிந்த குமரன்:—சூரபதுமன் முதலிய கொடிய அசுரர்களை அழித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்த தேவர்களது வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபிரானுல் உண்டாக்கப்பட்ட இளையகுமாரனை முருகக்கடவுள் அவ்வசுரர்களையழித்தற்பொருட்டுப் படையெடுத்துத் தேவர்களுடனே சூரபதுமனது மகேந்திர நகரத்தை நோக்கிச செல்லும் வழியிடையே வானுறவோங்கிய கிரௌஞ்சகிரியைக் கண்டு தேவர்கள் திகைத்திடுதலும், நாரதமுனிவன் கூறியதனுல் அம்மலையில் ஒருசார் மாயமாபுரியிலே சூரபதுமனதுதம்பியான தாரகன் பல அசுரசேனையுடனே யிருத்தலையறிந்து, முருகக்கடவுள் தனக்குத் தம்பிமுறையாகின்ற வீரவாகுவைச் சேனையோடு போர்க்கு அனுப்ப, தாரகாசுரனும் சேனையுடன்வந்து போர்செய்கையில், அசுரர்கள் அழிந்திட, யானைமுகமுள்ள அத்தாரகாசுரன் கடும்போர்புரிந்து சுப்பிரமணிய பரிவாரமான பூதகணங்களை யழித்து முடிவில் முன் நிற்கமாட்டாமல் அம்மலையில் ஒரு குகையிலே ஒளித்தனனுக, தொடர்ந்துசென்ற வீரவாகு முதலியோர் பலர் அக்குகையினுள்ளே அம்மலையின் மாயையால் மயங்கிக்கிடக்க, தாரகன் போர்க்களம்புகுந்து பூதகணங்களை வருத்தித் துரத்த, இச்செய்திகளை நாரத

முனிவன் சொல்லக்கேட்டு முருகவேள் சேனையுடன்சென்று போர்செய்து அவ்வசுரனது துதிக்கையையுந் தந்தங்களையுந் துணித்து அவனதுசேனைகளையழிக்கையில், அவன் அக்கிரௌஞ்சமலையுடன் கூடிப் பலமாயைகள்புரிய, ஆறுமுகமூர்த்தி வேலாயுதத்தையெறிந்து அம்மலையையும் அவ்வசுரனையும் அழித்து, மயங்கிக்கிடந்த தனது வீரர்களையெல்லாம் தனது திவ்விய சக்தியால் எழுப்பி யழைத்துக்கொண்டு அப்பாற்சென்றன னென்பதாம். அன்றியும், சிவபிரான் பரசுராமனுக்கும் சுப்பிரமணியனுக்கும் ஒருங்கு படைக்கலவித்தை பயிற்றுவித்தபின்பு அவர்கள் திறத்தைப் பரீக்ஷிக்கையில், பரசுராமன் அம்பெய்து கிரௌஞ்சகிரியைத் துளைக்க, குமாரமூர்த்தி தனது வேற்படையை அக்கிரியின்மீது எறிந்து அதனைப்பிளந்து தனது வேலின் திறத்தைக் காட்டின னென்ற வரலாறும் உண்டு.

சிவபிரான் மகாமேருமலையை வில்லாகக்கொண்டது, திரிபுரசங்கார காலத்தில்; அவ்வரலாறு வருமாறு:—தாரகாசுரனது புத்திரர்களாகிய வித்யுன்மாலி தாரகாட்சன் கமலாட்சன் என்னும் மூவரும் மிக்கதவஞ்செய்து மயனென்பவனால் சுவர்க்க மர்த்திய பாதாள மென்ற மூன்றிடங்களிலும் முறையே பசும்பொன் வெண்பொன் கரும்பொன்களால் அரண்வகுக்கப்பட்டு ஆகாய மார்க்கத்திற் சஞ்சரிக்குந்தன்மையுடைய மூன்றுபட்டணங்களைப் பெற்று, மற்றும் பல அசுரர்களோடு அந்தகரங்களுடனே தாம்நினைத்த விடங்களிற் பறந்துசென்று பல இடங்களையும் பாழாக்கிவருகையில், அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால், சிவபெருமான், பூமியைத் தேராகவும், சந்திரசூரியரைத் தோச்சக்கரங்களாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச்சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகமைந்த அக்கினியை முனையாகவுடைய அம்பாகவும், மற்றைத்தேவர்களைப் பிறபோர்க்கருவிகளாகவும் அமைத்துக் கொண்டு யுத்தசன்னத்தனாய்ச் சென்று போர்செய்ய யத்தனித்துப் புன்சிரிப்புச்செய்து திருமாலாகிய அம்பையெய்து அவ்வசுரனவரையும் பட்டணங்களோடு எரித்தருளின னென்பதாம். 'குன்றவில்லி' என்ற பெயரினால், கல்லை வில்லாகவளைத்து அதுகொண்டு தொழில் செய்ய வல்லவ னெனச் சிவபிரானது மிக்கதிறமை விளங்கும். (கஉக)

132.—அரண்மனையிற் புகுந்த உத்தரன் கங்கபட்டனது பெயரில் வடுவைக்கூறுதல்.

(இ - ள்.) (உத்தரகுமாரன்),—தழுவிய அரசன் தாளில் - (தன்னை) அணைத்துக்கொண்ட விராடராசனது பாதங்களில், தலை உற - தனது தலை படும்படி, வீழ்ந்து - விழுந்து (ஸாஷ்டாங்கமாக) வணங்கி,—வேந்தர் குழு இடை கொண்டு போக - அரசர் கூட்டம் (சுற்றிலுஞ்சூழ்ந்து (இடையிலே (தன்னை) அழைத்துக்கொண்டுபோக, கோயிலில் புகுந்த பின்னர் - அரண்மனையிற் சேர்ந்தபின்பு,—பழுது அறு வாய்மை - குற்றமற்ற உண்மைமொழி

களையுடைய, வேத பண்டிதன் - வேதம்வல்லவனுகிய கங்கபட்டனது; பாதம் - சீர்பாதங்களை, போற்றி-வணங்கி,—செழு மலர் வதனம் நோக்கி - செழுமையான செந்தாமரைமலர்போன்ற (அவ்னது) திருமுகத்தைப் பார்த்து, திரு நுதல் வடுவும் கண்டான் - (அம்முகத்திலே) அழகிய நெற்றியில் ஊறுபட்டிருத்தலையும் பார்த்தான்; (எ - று.)

கோயில்—கோ + இல்: அரசனது மாளிகை; அல்லது, தலைமையான மாளிகை: 'கோவில்' என வகரவுடம்படுமெய்பெற்று வரற்பாலது 'கோயில்' என யகரம் பெற்றது, இலக்கணப்போலி. தருமபுத்திரன் சத்தியவிரதனுதலால், அவனுக்கு 'பழுதறுவாய்மை' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. அந்தணவழிவந்தகொண்டவனுதலால், தருமன் 'வேதபண்டிதன்' எனப்பட்டான். "பூவிற்குத் தாமரையே" என்றபடி எல்லாமலர்களினும் தாமரை மலர் மிகச்சிறத்தல்பற்றி, 'செழுமலர்' எனப்பட்டது. ஊறுபட்டிருக்கையிலும் முகச்சுளிப்புறுத பொறையுடைமை, 'செழுமலர்வதனம்' என்றதனுல் விளங்கும். வீழ்ந்து புகுந்து பின்னர் என இயையும். வடுவும் என்ற உம்மை-இறந்தது தழுவிய எச்சம். (கஉ.)

133.—நிகழ்ந்த செய்தியை யறிந்து உத்தரன் உளம்வருந்துதல்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) (அதுகண்ட உத்தரன்), 'நிகழ்ந்த நின் நுதலின் - விளங்குகின்ற உனது நெற்றியிலே, ஊறு செய்தவர்-வடுப்படுத்தியவர், யார்கொல் - யாரோ?' என்ன - என்று (அக்கங்கபட்டனை) வினவியவளவில்,—நிகழ்ந்தமை - நடந்தசெய்தியை, தந்தை - தந்தையான விராடன், கூற - சொல்ல,—(கேட்டறிந்த உத்தரன்), நெஞ்சினுல் - (தன்) மனத்தினுல், தந்தை தன்னை - தன்பிதாவான அவ்விராடனை, இகழ்ந்தமை - வெறுத்ததை, நுவலும் போதைக்கு - சொல்லுமளவுக்கு, எல்லை இன்று - ஒருவரையறையில்லை; (அங்ஙனம் மிகவெறுத்தபின்பு உத்தரன்), 'இவன் போல - இம்முனிவனைப்போல, அமைவின் மிக்கோர் - பெறுமையிற் சிறந்தவர், அகழ்ந்த நீர் ஆடை ஞாலத்து-(சகரசக்கரவர்த்திகுமாரர்களால்) தோண்டப்பட்ட கடலை ஆடையாகவுடைய [கடல்சூழ்ந்த] இந்நிலவுலகத்தில், ஆர் கொலோ-வேறு யாருளரோ? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

உறுவது ஊறு எனக் காரணக்குறி. போதைக்கு, ஐ - சாரியை. நீர் - கடலுக்கு, இலக்கணை. அமைவாவது - காரணம்பற்றியாவது, பேதைமையாலாவது ஒருவன் தமக்குக் குற்றஞ்செய்தவிடத்துத் தாமும் அவனுக்கு அதனைச்செய்யாது பொறுத்தல். மிகுதியாக இகழ்ந்தது - அம்முனிவனைத் தருமபுத்திரனென்று தானறிந்ததனுலும், "வென்றவன் பேடியே" என்று அவன் கூறியது உண்மையேயாக அதுபற்றி விராடன் அவனைச்சினந்து கவறுகொண்டெறிந்தது பெருந்தீங்காதலாலு மென்க. ஐம்பெருங்குரவரிலொருவனுகிய தந்தையைச் சொற்செயல்களால் வெறுத்தல் கூடாமையாலும், மனம் பொறுமையாலும், நெஞ்சினு லிகழ்ந்தான். பூமியைச்சூழ்ந்த கடலை, பூமியாகியபெண் உடுக்கும் ஆடை யென்றல், மரபு. (கஉஉ)

134.—உத்தரன் நந்தையும் தானுமாய்த் தருமனை வணங்கிச் சினந்தீர்ந்தல்.

(இ - ள்.) 'சிறியவர் செய்த தீமை - சிறியோர்செய்ததீங்கை, செறுப்பது - வெறுத்துக் கோபிப்பது, பெருமை அன்று - பெருந்தன்மையன்று; பொறுப்பதே - (அதனைப்)பொறுத்துக்கொள்வதே, பெருமை - பெருந்தன்மையாம்,' என்று - என்றுசொல்லி, வெறுப்பது விளைத்ததாதை வீழ்ந்தபின் தானும் வீழ்ந்து பூசுரன் பாதம் போற்றி - வெறுக்கத்தக்க [தீய] காரியத்தைச் செய்த தந்தையான விராடன் (கங்கபட்டனது பாதங்களில்) விழுந்து நமஸ்காரித்தபின்பு (மைந்தனுகிய) தானும் அந்தணனுகிய அக்கங்கபட்டனது பாதங்களில் வீழ்ந்து வணங்கி,—மறுப்பது புரியா ஞானி - (சரணமடைந்தவரது வேண்டுகோளைத்) தடுத்தல் செய்யாத தத்துவஞானமுடையவனை அம்முனிவனது, மனம் துனி-மனத்திலடங்கிய சிறுகோபத்தையும், அகற்றினன் - போக்கினன்; (எ - று.)

"சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம், பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்றார் பிறரும். சிறியவர் - அறிவாலும் ஒழுக்கத்தாலும் பிராயத்தாலும் சிறியவர். பூசுரன் என்ற வடசொல்லுக்கு - (பிரமதேஜசினால்) பூமியில் தேவன்போலவிளங்குபவ னென்பது பொருள். பிறர்வேண்டுகோளுக்கு இசையாமல் மறுதலிக்குங் குணம் இயல்பிலேயே யில்லாதவ னென்பார், 'மறுப்பது புரியாஞானி' என்றார்; இத்தொடர்க்கு - எவராலும் தடுக்கவொண்ணுத கல்வியறிவுடையவனென்ற பொருளும் அமையும். சிறியவர்செய்ததீமை - இடைநிலைத்தீவகம். (கஉச)

135.—உத்தாகுமாரனைக்கண்டு சுதேட்டிணை மகிழ்தல்.

(இ - ள்.) ஆன்று அமைந்து அடங்கு கேள்வி - மிக நிறைந்து அடங்கியிருக்கின்ற நூற்கேள்வியையுடைய, அண்ணலும் - பெருந்தன்மையிற் சிறந்தவனுன உத்தரனும், அவனை பெற்ற தோன்றலும் - அக்குமாரனைப்பெற்ற தந்தையான விராடராசனும், பின்னர் - பின்பு, சுதேட்டிணை கோயில் - சுதேஷ்ணைவாழுகின்ற அந்தப்புரத்துக்கு, சென்று எய்த - போய்ச்சேர,—தவத்தின் மிக்காள் - தவத்திலும் மிக்கவளாகிய அவள், சான்ற தன் மகனை கண்டு - வெற்றியாற்சிறந்த தனது குமாரனைப் பார்த்து, ஈன்ற அ பொழுதின் ஓகை எண் மடங்கு ஆக விஞ்ச - தான் அப்பிள்ளையைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியினும் (இப்பொழுதை) மகிழ்ச்சி எட்டுப்பங்கு அதிகமாகப் பெருகாநிற்க, மகிழ்ந்தனள் - சந்தோஷமடைந்தாள்; (எ - று.)

ஈன்ற பொழுதை மகிழ்ச்சி—"வயாவும் வருத்தமும் ஈன்றக் காலையும், கவா அன் மகற்கண்டு தாய் மறந்தாஅங்கு" என்பதனைற் காண்க. புதல்வனை மடியிற்கண்ட பொதுவுவகையினும் சால்புடையனுகக்கண்ட சிறப்புவகை பெரிதாதலால், 'ஈன்றவப்பொழுதி னேகை யெண்மடங்காக விஞ்ச' என்றார்; "ஈன்றபொழுதிற் பெரிதுவக்குத் தன்மகனைச், சான்றோனெனக் கேட்டதாய்" என்றார் திருவள்ளுவரும். ஓகை - உவகையென்பதன் மரூஉ. எண்

மடங்கு என்றது - பலமடங்கு என்றபடி. ஆகவே, தாயுவகைக்கு அள வின் றென்றவாறும். இங்குத் தாய்க்குத் தவம்-இவ்வாறு நல்லறிவும் நல்லொ ழுக்கமுமுடைய குமாரனைப் பெறுதற்கு ஏற்ற நல்வினை. அடங்கு கேள்வி - அடக்கமுடையனாயிருத்தற்குக் காரணமான நூற்கேள்வி யெனினுமாம். ()

136.—பிருகந்நளை செய்தி.

(இ - ள்.) பேடி - பேடியாகிய பிருகந்நளை,—உத்தரன் - உத்தரகுமா ரன், ஓடி - (முதலிற் பகைவர்சேனையைக்கண்டு) அஞ்சியோடி, தேர் ஊர - (பின்பு தன்வார்த்தையால் தெளிந்து) தேரையோட்ட, (தான்சென்றுபொ ருது), தன்னை நாடி - தன்னைக்கண்டமாத்திரத்திலே, ஒரு முனை ஆக - ஒரே துணிவாக, உத்தரிக்கமாட்டா - முன்நிற்கமாட்டாமற் போன, நரஅதிபர் - (துரியோதனன்முதலிய) அரசர்களது, பதாகை நாசும் - கொடிச்சீலைகளையும், கோடி உத்தரியம் பட்டும் - அவர்கள்மேலேதரித்திருந்த அனேகம் பட்டா டைகளையும், குழமகன் தனக்கு - (உத்தரையைவைத்துக்கொண்டு விளையாடு கின்ற) பிரதிமைக்காக, நல்கி - (அலங்கரித்தற்பொருட்டுக்) கொடுத்து, உத் தரை தன்னோடும் - உத்தரையுடனே, பெற்ற தாய் பின்பு நின்றாள் - அவளை யின்ற தாயாகிய சுதேட்டிணையின் பின்புறத்தில் ஒதுங்கிநின்றாள்; (எ-று.)

இச்செய்யுளில் திரிபு என்னுஞ் சொல்லணி காண்க. கீழ் கoஉ - ஆஞ் செய்யுளில் "மணிக்கொடித் தூசுந் தூசும், உத்தரைவண்டற்பாவைக் குடுத் ததற்கென்று கொய்தான்" என்று கூறியவர், அவற்றை அப்பிருகந்நளை யாகிய அருச்சுனன் உத்தரைக்குக் கொடுத்த செய்தியைஇங்குக் கூறினர். குழமகன் - மரப்பாவை; இளமகன்போன்ற வடிவமமைந்ததென்று கார ணப்பொருள் காணலாம். உத்தரன் சேரூர, ஓடி - (தான்) விரைந்து சென்று என்றுமாம். 'ஒருமுனையாக தன்னைநாடி - ஒரேதுணிவாகத் தன்னைக்குறித்துப் போர்க்குவந்து, உத்தரிக்கமாட்டா - (பின்பு) முன்னிற்க மாட்டாமற்போன என்றலும் அமையும். கோடி - புதுமையுமாம். நர அதிபர்- மனிதர்க்குத்தலைவர்: தீர்க்கசந்திபெற்ற வடமொழித்தொடர். உத்தரீயம் - மேலாடை; வடசொல். உத்தரியப்பட்டு. உத்தரீயமாகிய பட்டு, என இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. நாணத்தால் மகளிர்பின்னே யொதுங்கிநிற் றல், பேடியரியல்பு. (கஉஉ)

137.—நிகழ்ந்தசெய்திகளை உத்தரன் எகாந்தத்தில் தந்தைக்குக் கூறத்தொடங்குதல்.

(இ - ள்.) சுந்தர கிரிகள் போலும் தோளினன் - அழகிய மலைகள்போ ன்ற தோள்களையுடையவனை உத்தரன்,—ஆங்கு - அப்பொழுது, தந்தை யும் தானும் தனித்து இருந்து - விராடனுந் தானுமாகத் தனியிடத்தேயிரு க்கையில், அடையலாரை - பகைவர்களை, முந்திய அமரில் சென்று - முற் பட்ட யுத்தகளத்திற் போய், முனைந்து - எதிர்த்து, போர் விளைத்த ஆறும் - யுத்தஞ்செய்த விதத்தையும், வந்தவர் சாய்ந்த ஆறும் - எதிர்த்துவந்த அரசர் கள் தோற்றுப்போன விதத்தையும், மணி நிரை மீட்ட ஆறும் - அழகிய பசுக்

கூட்டத்தை மீட்டுவந்தவிதத்தையும், தோன்றசொல்வான் - விளங்கச்சொல் பவனனென்; (எ - று.) —இதன் விவரத்தை, அடுத்த கவியிலுங் காண்க.

தனித்திருந்து சொல்வான் என இயையும். தமது அரண்மனையிற் பாண்டவர் இரகசியமாக அஜ்ஞாதவாசஞ்செய்திருந்தமையையும், அவர்களில் அருச்சுனனே இப்போர்வென்றன னென்பதையும் கூறுகின்ற தைலின், தனித்திருந்து கூறுபவ னெனன். மணி நிரை - மணிகள்கட்டிய பசுக்களுமாம். லை-ங் தரகிரி - வடமொழிததொடர். 'சாய்ந்த ஆறு' என்றதில், மோகநாஸ்திரத்தாற் கீழேவிழுந்து கிடந்ததும் அடங்கும். கீழ் கக-ஆஞ் செய்யுளில் "முடியடி படிக்கண் வீழ்த்தான்' என்றமை காண்க. இருந்து = இருக்க: எச்சத்திரிபு. ()

138.—முன்றுகவிகள்- ருதோடர்: உத்தரன் விராடனிடத்துக் கூறியதைத் தெரிவிக்கும்.

(இ - ள்.) ஐய - தந்தையே! (பிருகந்நளை), உருப்பசி வெம் சாபத்தால் பேடி ஆன உருவம் ஒழித்து - (முன்பு) ஊர்வசியிட்ட கொடியசாபத்தாற் பேடியாய்க்கிடந்த செயற்கைவடிவத்தைப் போக்கி, அருச்சுனன் தன் உருவம் கொண்டு - அருச்சுனனுகிய தனது இயற்கைவடிவத்தை யடைந்து, பொருப்பு அனைய கவி துவசம் தேர்மேல் - மலைபோன்றதும் குரங்குக்கொடியுடையதுமான (தனக்குஉரிய) தேரின்மே லேறி, வண்ணம் பொரு சிலை தன் கரத்து ஏந்தி - அழகிய போர்க்கு உரிய தனது காண்டீவவில்லைத் தன்கையிலெடுத்துக்கொண்டு, புகுந்த போது - (போர்க்களத்திற்) பிரவேசித்தபொழுது, அணி ஆகி நின்ற வேந்தர் - படைவகுத்து வந்து நின்ற பகையரசர்கள், செரு புரவி இரவி எதிர் திமிரம் போல - போர்செய்யவல்ல குதிரை பூண்ட (தேரையுடைய) சூரியனை யெதிரிற்கண்ட இருள் போலவும், திறல் அரி ஏறு எதிர் கரியின் திறங்கள் போல - வலிமையுடைய ஆண்சிங்கத்தை யெதிரிற்கண்ட யானைக்கூட்டங்கள் போலவும், நெருப்பு எதிர்ந்த பதங்கம் போல் - விளக்கையெதிர்த்த விட்டிற்பறவைகள்போலவும், நிரை போக்கி அழிந்தார்-(அவ்வருச்சுனனைக் கண்டமாத்திரத்தில்) தாம் கவர்ந்த நிரையைப் போகவிட்டுத் தோற்றோடிப்போனார்கள்; (எ - று.)

இப்பாடலால் அருச்சுனனே பிருகந்நளையென்ற பேடியாயிருந்தமையையும், அவனைக் கண்டதும் பகைவர் நிரையை விட்டுவிட்டுத் தோற்றோடினமையையுங் கூறுகின்றன். அருச்சுனனைக்கண்டதும் அழிந்த பகையரசர்க்குச் சூரியனைக்கண்ட இருளையும், அரியேற்றைக்கண்ட கரியையும் விளக்கைக் கண்ட விட்டிலையும் உவமைகூறினன்; உவமையணி. உருப்பசி - ஊர்வசீ என்ற வடசொல்லின் சிதைவு; அப்பெயர் - தொடையினின்று பிறந்தவளென்று பொருள்படும்: ஊரு-தொடை. நாராயணமுனிவரது தொடையினின்று பிறந்தவ ளாதலால், இவள் இப்பெயர் பெற்றனள். குருசிஷ்யக்கிரமத்தை உலகத்தார்க்கு உணர்த்துதற்பொருட்டு விஷ்ணுவின் அம்சமாய்க் குருவும் சிஷ்யனுமாகத் திருவவதரித்த நாராயணன் நரன் என்ற முனிவர்கள் பதரிகாச்சிரமத்தில் தவஞ்செய்துகொண்டிருக்கையில் இந்திரனேவலால் அப்ஸரஸ்

ஸ்திரீகள்பலர் அங்குவந்து தங்களுடைய மேனிமினுக்கினாலும் ஆடல் பாட லாதி வினோதங்களாலும் அவர்களுடைய தவத்துக்கு இடையூறுசெய்யத் தொடங்க, அதனாற் சிறிதுங்கலங்காத அவர்களுள் நாராயணமுனிவர் அம்மக னிரை அவமானப்படுத்தக்கருதித் தமது தொடையினின்று ஒருகட்டழகியைச் சங்கற்பத்தா லுண்டாக்க, அவளது ஒப்புயர்வற்ற திவ்விய சௌந்தரியத்தை நோக்கி அத்தேவமாதர்கள் மிகவெள்கி அவளையே தங்கட்குத் தலைவியாகக் கொண்டு அவளுடன் தமது உலகத்துக்குச்சென்றன ரென்பது வரலாறு; அவளே ஊர்வசி. கபி, ரவி, ஹரி என்ற வடசொற்கள் விகாரப்பட்டன. ஹரி - (யானைமுதலியவற்றை) ஹரிப்பது; ஹரித்தல் - அழித்தல். போக்கி அழிந்தார் - அழிந்துபோக்கினர் என விகுதிபிரித்துக் கூட்டுக.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவு முள்ள நான்குகவிகள் - பெரும் பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடிநான்கு கொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (கஉஅ)

139.—(இ - ள்.) வேந்தே-அரசனே! உனக்கு உயிர் நண்பு ஆகி-உனக்கு உயிர்போன்ற சிநேகிதனாய், அருகு விடாது - (உன்) சமீபத்தை விடாமல் [எப்பொழுதும் உனது அருகில் இருந்துகொண்டு], நீதி அறம் உரைப்போன்- நியாயங்களையும் தருமங்களையும் (அப்பொழுதைக்கப்பொழுது) எடுத்துச் சொல்லி வருகின்றவனென கருதப்பட்டன், அறத்தின் மகன் ஆகவேண்டும் - தருமபுத்திரனாக இருத்தல்வேண்டும்; மரு மலரும் - நறுமணமுள்ள மலர்களை யும், மான்மதமும்-கஸ்தூரிப்புழுகையும், துறந்த-இழந்திருக்கின்ற, கூந்தல் - கூந்தலையுடைய, வண்ணம் மகள் - அலங்காரஞ்செய்யும் பணிப்பெண்ணாகிய விரதசாரணி, பாஞ்சாலன் மகளே போலும் - பாஞ்சாலதேசத்தரசனை துரு பதனுடைய மகளாகிய திரௌபதிபோலும்; வெருவரும் மல் போர் கடந்த - அஞ்சத்தக்கமல்லயுத்தத்தில் (எல்லாமல்லரையும் வென்றுவந்தாரெரு மல்ல னைச்) சயித்த, மடையன்தன்னை - சமையற்காரனாகிய பலாயனனை, வீமன் என அயிர்க்கின்றேன்-வீமசேனனென்று உத்தேசிக்கின்றேன்; மா வலான் - குதிரைத்தொழிலில் வல்லவனென தாமக்கிரந்தி, மற்றை இருவரினும்-மற்றைப் பாண்டவர்களிரண்டுபேரினும், நகுலன் தானே - நகுலனாகவேண்டும்; இன் னிரையின் காவலான் - அழகிய பசுக்கூட்டங்களைக் காத்தல்வல்லவனென தந்திரிபாலன், இளைய கோவே - (ஐவருள்) இளையவனாகிய சகாதேவனே யாகவேண்டும்; (எ - று.)

இதனால், மற்றைப்பாண்டவரும் திரௌபதியும் இன்னரின்ன ரென்று உத்தரன் தெரிவிக்கின்றான். நண்பு-நண்பனுக்குப் பண்பாகுபெயர். அறம்- தருமக்கடவுளாகிய யமன். 'அறமுரைப்போ னறத்தின்மகன்' என்றதில், தந்தையின் தகுதிக்கு ஏற்றபடி மைந்தனும் அறநெறிதேர்ந்தவ னென்றது விளங்கும். மான்மதம் - கஸ்தூரியென்னும் மானினது கொழுப்ப: வடமொழி யில் ம்ருகமத மெனப்படும். திரௌபதி தன்னைத் துரியோதனன் துச்சாதன

னைக்கொண்டு தலைமயிர் பிடித்திழுத்துச் சபையிற்கொணர்ந்து துகிலுரிந்தும் தன் மடிமேலுட்காரென்று சொல்லியும் பங்கப்படுத்தியபொழுது 'துரியோதனுதியர் நூற்றுவரையுங் கொன்று வெற்றி முரசறைந்தாலன்றி யான்விரித்த கூந்தலை யெடுத்து முடித்து அலங்கரிப்பதில்லை' என்று சபதஞ்செய்து அங்ஙனமே தலைவிரிகோலமாயிருத்தலால், 'மருமலரு மான்மதமுந் துறந்த கூந்தல் வண்ணமகள் பாஞ்சாலன் மகளேபோலும்' என்றான்; ஆகவேண்டும், போலும், அயிர்க்கின்றேன் என்றவை - ஊகித்தற்பொருளன. 'என அயிர்க்கின்றேன்' என்றதைப் பின்னிரண்டுவாக்கியங்கட்குங் கூட்டுக.

பாண்டவர் அஜ்ஞாதவாசஞ்செய்கையில், ஆயிரம்மல்லர்சூழப் பெருமல்ல னொருவன் விராடராஜசபைக்குவந்து மற்போரில் தன்னெதிரொப்பவரெவருமில்லையென்று செருக்கிப் பேச, அப்பொழுது அவ்வரண்மனையிலுள்ள மல்லரனைவரும் அரசன்கட்டளைப்படி அம்மகாமல்லனுடன் பொருது தோற்றனராக, பிறகு கங்கபட்டன்சொன்னபடி விராடன் வீமனுகிய பலாயனனையேவ, அவன் மற்போர்பொருது அம்மல்லர்தலைவனை எளிதில் வென்றனனென்ற வரலாறு, கீழ் மற்போர்ச்சருக்கத்தில் விளக்கப்பட்டது. மற்போர் -உறுப்புக்களால் தாக்கி உடல் வலிமைகொண்டு செய்யும் போர். (கஉக)

140.—(இ - ள்.) ஆளையே அடும் களிற்றூர் - பாகனைவனைக் கொல்லுந்தன்மையுள்ள யானைச்சேனையையுடையவரான பாண்டவர்கள், கம்மை—, யாரும் அறியாமல் - எவரும் அறியாதபடி, இந் நகர்க்கண் - இந்த நகரத்தில், அடங்கினின்றூர் - (இதுவரையில்) மறைந்திருந்தார்கள்; நாளையே வெளிப்படுவர் - நாளைக்கே வெளிப்படுவார்கள்: நெருநலே - நேற்றே, தம் நாள் உள்ள கழிந்தன - தாம் கழிக்கவேண்டியனவாயிருந்த அஜ்ஞாதவாச தினங்கள் கழிந்துவிட்டன; நயந்து கேண்மோ - (யான் இப்பொழுது சொல்வதை) விரும்பிக் கேட்பாயாக: வேளையே அனைய - மன்மதனையேபோன்ற, எழில் - அழகையும், தோகை வாகை வேளையே அனைய - மயில்வாகனத்தையும் வெற்றிமாலையையுமுடைய முருகக்கடவுளையே போன்ற, விறல் - வெற்றியையுமுடைய, விசயன் என்னும் - அருச்சுனனுகிய, காளையே - வீரனே, அடியேனுக்கு இளைய - எனக்குத்தங்கையாகிய, காதல் கன்னிகைக்கு - அன்புமிக்க உத்தரைக்கு, வரன் - ஏற்ற கணவன், என்று—, கருதுவாய் - எண்ணுவாயாக; (எ - று.)

இதனால், பாண்டவர்களைவரும் அஜ்ஞாதவாசத்தை இங்குக் கழித்தனரென்பதனையும், உத்தரையை அருச்சுனனுக்கு மணம்புரிவிக்கவேண்டுமென்றதையும் கூறுகின்றூன். மதயானை தனக்கு ஆவனசெய்து தன்னையடக்கியாளும் பாகன்மீது முன்பு தன்னை அவன் கடிந்தமைபற்றிக் கறுக்கொண்டு அவனைக் கொல்லுமியல்பின தாதலால், 'ஆளையே யடுங் களிறு' எனப்பட்டது. நால்வகைச்சேனையுள்ளும் "படைதனக்கி யானைவனப்பாகும்" என்றபடி சிறப்பதாகிய யானையைத் தலைமைபற்றி யெடுத்துக் கூறியது, மற்ற மூன்றுக்கும் உபலக்ஷணம். இனி, களிற்றூர் - யானைபோன்றவை

ரெனினுமாம்; கோபத்தை மறைத்தற்குரியகாலத்தே மறைத்து வெளிப்படுத்தற் குரியகாலத்தே வெளிப்படுத்துந் தன்மைக்கும், வலிமைக்கும், நடைக்கும், காம்பீரியத்துக்கும் உவமை. ஆளையே, வேளையே என்றவற்றில், ஏகாரம் - உயர்வுசிறப்பு. நாளையே, நெருநலே, காளையே என்றவற்றில், ஏகாரம் - தேற்றம். 'வாகை' என்ற மரத்தின்பெயர் - அதன் மலர்களாலாகிய மாலைக்கு இருமடியாகுபெயராம். வாகைப்பூமாலை, போரில் வென்றவர் சூடுவது. மூன்றுமடியில் 'வேளையே' என்ற சொல் வெவ்வேறுபொருளில் அடுத்துவந்தது; மடக்கு என்னுஞ் சொல்லணியாம். (கசo)

141.—இவைகேட்டு விராடன் மகிழ்தல் முதலியன.

(இ - ள்.) இவை - இவ்வார்த்தைகளை, மகன் - தன் புதல்வனை உத்தரன், உரைத்த அளவில் - சொல்லியவளவிலே, தாதை கேட்டு - அந்த உத்தரனது தந்தையாகிய விராடராசன்கேட்டு, மனம் எடுங்கி—, நெகிழ்ச்சியுடன்-மனத்தளர்ச்சியுடனே, மகிழ்சி கூர்ந்தான் - சந்தோஷம் மிகப்பெற்றான்: பகல் அமரில் - பகற்பொழுதைய போரிலே, எதிய மெய் பராகம் - தன்னுடம்பிற் படிந்த புழுதி, மாற - போகும்படி, பகலோனும்-சூரியனும், புனல் படிவான் - நீராடுதற்கு, பரவை சேர்ந்தான் - (மேற்றிசைக்) கடலை யடைந்தான் [அஸ்தமித்தான்]; (அவ்விராத்திரியில்), தகவு உடைய பாண்டவரும் - பெருமையையுடைய பாண்டுபுத்திரரைந்துபேரும், வண்ணம் மாதரும் - வண்ணமகளாகிய திரௌபதியும், தனித்து எண்ணி - தனியாக இருந்து இரகசியமாக ஆலோசித்து, பர காயசரிதர் போல - பரகாயப் பிரவேசஞ் செய்தவர்கள்போல, புகல் அரிய பழைய நம வழிவம் கொண்டார் - வருணித்துச் சொல்லுதற்கு அருமையாகவுள்ள பழமையான தங்களது நிசரூபத்தை யடைந்தார்கள்; போன பகலவன்-அஸ்தமித்த சூரியன், உதயம் பொருப்பில் மீண்டான்-திரும்பி உதயகிரியில் வந்தான் [உதித்தான்];(எ-று.)மற்று-அசை.

மிகச் சிறந்தவர்களாகிய பாண்டவர்களையும் திரௌபதியையும் தன் கீழ் அடங்கிய பரிவாரங்களாகக் கொண்டிருந்ததையும். தருமபுத்திரனைக் கவறு கொண்டு அடித்ததையும் கருதி விராடன் மனநடுங்கினன். உரைத்தளவு - தொகுத்தல். நெகிழ்ச்சியும் - மனநடுக்கத்தாலானது. மகிழ்ச்சி - பாண்டவர் தன்னிடத்து வாழுமாறு தான் பாங்கியருஞ்செய்திருந்ததைக் கருதியதனாலாகியது. மாலைப்பொழுதில் விளங்குகின்ற சூரியனது இயற்கைச் சிவப்பைப் பகற்பொழுதிற் போர்களத்தினின்று எழுந்த புழுதி படிந்ததனாலாகியதாகவும், இயல்பில் அஸ்தமிப்பதை அப்புழுதி நீங்க மேல்கடலிற் குளிப்பதற்குச்சென்றதாகவும் வருணித்தவாறும்; தற்குறிப்பேற்றவணி. பராகம், பரகாயசரிதர் - வடசொற்கள். பரகாயசரிதர் - தமது உடம்பை விட்டு வேறோருடம்பிற் புகுந்திருந்து மீண்டும் தமது உடம்பில் வருபவர்; இது, ஒருவகை யோகசித்தி: கூடு விட்டுக் கூடுபாய்தலெனப்படும். (கசக)

நிரைமீட்சிச் சருக்கம் முற்றிற்று.

ஐந்தாவது

வெளிப்பாட்டுச்சருக்கம்.

(பாண்டவர் அஜ்ஞாதவாசத்தினின்று) வெளிப்பட்டதைக்கூறுஞ்சருக்க மென்பது பொருள். வெளிப்பாடு-வெளிப்படுதல்: முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

பாண்டவர் திரௌபதியுடன் வெளிப்பட்டதும், அவர் தன்னிடத்திலிருந்ததை யுணர்ந்த விராடன் சிந்தனைசெய்து உத்தரனுடன் அப் பாண்டவரைப்பணிந்து பணிவுரைகூறியதும், உத்தரன் தன்தங்கை உத்தரையை அருச்சுனனுக்கு உரியாளென்ன அருச்சுனன் உத்தரையை மருமகளாகக் கொள்ளுவதாகக் கூறியதும், பாண்டவர் தமர்கண்பார்க்குத் தம் வெளிப்பாட்டைத் தூதர்முகமாகத் தெரிவித்ததும், க்ருஷ்ணன் முதலியோர் வந்ததும், க்ருஷ்ணன் சிவேதன்வரலாற்றைச் சொல்ல அந்தச்சிவேதன் தன்தை யானவிராடனடிபணிந்து அத்தன்தையின்மனமுவப்ப விருந்ததும், பாஞ்சாலர் முதலியோர் சேனையுடன் வந்ததும், அன்னர் மனநோவுதீரத் தாம்விராடநகரத்தை இனிதிருந்தமையைத் தருமன் தெரிவித்ததும், வந்தமன்னரிடம் தருமன் துரியோதனனுடைய செய்தியெல்லாம் நயமாகச்சொல்லிக்கொண்டிருந்த போது சல்லியன்வந்து தான் துரியோதனன் வஞ்சகத்துக்குட்பட்டுச் சென்சோற்றுக்கடனுக்காக அவனுக்கே துணையாவது சொல்லிச் சென்றதும், அபிமந்யுவுக்கும் உத்தரைக்கும் விவாகம்நடந்ததும், தாம் முன்னர் வன்னிமரத்துப் படைக்கலங்கள் சேமித்துவைத்திருந்தவற்றைப் பாண்டவர் மீண்டுகொண்டதும், பின்னர் உபலாவியநகரிற் புகுந்து போருக்கு ஆராய்தலுறுதலும் இதிற் கூறப்படுகின்றன.

1.—கடவுள்வணக்கம்.

எக்கடலு மெக்கிரியு மெவ்வுலகு முலகிற்
றக்கபல யோனிகள்ச ராசரம னைத்து
மிக்கவிதி யால்விதிசெய் விதியினைவி திக்குஞ்
செக்கமல நாபிமுகில் சேவடிது திப்பாம்.

(இ - ள்.) எ கடல்உம் - எல்லாக் கடல்களையும், எ கிரிஉம் - எல்லா மலைகளையும், எ உலகுஉம்-எல்லாவுலகங்களையும், உலகில் தக்க பல யோனிகள் சராசரம் அனைத்துஉம் - உலகிலே வாழ்கின்ற பலபிறவிகளைச்சேர்ந்த இயங்குதிணை நிலைத்திணை என்ற பொருள்கள்யாவற்றையும், மிக்க விதியால்-மேம்பட்ட வலிமைகொண்ட(அவ்வவ்வுயிர்களின்)விதியின்படி, விதி செய் - சிருஷ்டித்தொழிலைச் செய்கின்ற, விதியினை - பிரமதேவனையும், விதிக்கும் - சிருஷ்டிக்கவல்ல, செக் கமலம் நாபி-செந்தாமரை யுந்தியையுடைய, முகில் - மேகம்போன்ற திருநிறத்தவனான திருமாலின், சே அடி - செவ்வியதிருவடிகளை, துதிப்பாம்—; (எ - று.)

படைத்தற்கடவுளுக்கும் படைத்தற்கடவுளான பரம்பொருளின் சேவடியைத் துதிப்போ மென்றவாறு. அனுபவித்தே தீரவேண்டியிருத்தலால், 'மிக்கவிதி' என்றது: இனி, மிக்கவிதியால்-சிறக்கவேதவிதிப்படி யென்றலும் உண்டு. செக்கமலம் = செங்கமலம்: வலித்தல்.

முதற்பகினைந்துகவிகள்-ஈற்றுச்சீரொன்று மாசசீரும், மற்றைமூன்றும் காய்ச்சீர்களுமாகிவந்த அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள். (க)

2.—இரண்டுகவிகள்-மறுநாட்காலையில் தருமன் திரௌபதியும் தம்பிமாரும் அருகுசூழ்தர, நிஜவடிவத்தோடிருத்தல் கூறும்.

அருக்கனடிகைதாழுதனந்தரமருக்க
னுருக்கருகலையருணவுருவழுகெறிப்பத்
திருக்கிளர்நலம்பெறுசெழுந்தெரிவையோடும்
குருக்குலம்விளங்கவருகோமகனிருந்தான்.

(இ-ள்.) அனந்தரம் - (சூரியனுதித்தபிறகு, குருக்குலம் விளங்க வரு கோமகன் - (தன்னால்) குருகுலம் விளங்குதலையுடையுமாறுதோன்றிய ராஜகுமாரனுகிய தருமன்,—அருக்கன் அடி கைதாழுது - சூரியனுடைய திருப்பாதங்களை வணங்கி, அருக்கன் உருகருக அருணம் உரு அழகு எறிப்ப-சூரியனுடைய செந்நிறவடிவும் (தன்வடிவுக்குமுன்னே) கருநிறமுடையதாகத்தோன்றும்படி செந்நிறவடிவம் அழகுவீசாநிற்க, திரு கிளர் நலம் பெறு செழுந் தெரிவையோடும் - அழகுவிளங்குகின்ற நற்குணம் பூண்ட வளவிய பெண்ணுகிய திரௌபதியுடனே, இருந்தான்—; (எ - று.)

காலைச்சந்தியனுவந்தித்ததை, 'அருக்கனடிகைதாழுது' என்றனரென்னலாம். "பகலோனுதயப்பொருப்பின் மீனடான்" என்று கீழ்வந்திருக்க, 'அனந்தரம்' என இவகு வந்ததனால், சூரியனுதித்தபிறகு என்க. (உ)

3. காற்றின்மகனுங்கடவுளாதிதிருமகனு
மாற்றமுதிராயுண்மறைவானவர்மகாரு
மேற்றமுறையாலடியினிறைஞ்சியினையோடுங்
கூற்றமுறுமாறருகுசூழ்தரவிருந்தார்.

(இ - ள்.) காற்றின் மகனும் - வாயுபுத்திரனான வீமசேனனும், கடவுள் ஆதி திருமகனும் - தேவர்கட்குதலான இந்திரனுடைய குமாரனான அருச்சுனனும், மாற்றம் முதிர் - புகழ்ச்சியுரை மிக்க, ஆயுள் மறை - வைத்தியசாஸ்திரத்திலே வல்ல, வானவர் - அசுவினிதேவர்களின், மகாரும் - மக்களான நகுலசகதேவர்களும், ஏற்ற முறையால்-(தாம்தாம்) இருக்கவேண்டிய முறைப்படியே, அடி இறைஞ்சி - (அந்ததருமனுடைய) பாதங்களை வணங்கிக்கொண்டு, இனையோடும் - தோற்றம் உறுமை ஆறு - கீர்த்தியுடனே விளங்குதல் பொருந்தும்படி, அருகு - (அந்ததருமனுடைய) சமீபத்திலே, சூழ்தர - சுற்றிலும், இருந்தார்—: (எ - று.) (ஊ)

4.—அருகுனன் 'உன்நெற்றியிற்காணும் வடுஎன்?' என்ற தருமனை வினவ, திரௌபதி நிகழ்ந்ததை யுரைத்தல்.

தன்னிகர்க்கிற்பவரிலாதகனுலல்லோ
னென்னதிருநெற்றியிலிருந்தவடுவென்றான்
மின்னையும்வெறுத்தொளிருமேகருநிறத்தாள்
பின்னையவனுக்குநிகழ்பெற்றியுரைசெய்தாள்.

(இ - ள்.) தன்னை நிகர்கிற்பவர் இலாத தனு வல்லோன் - தன்னை யொப்பவரைப்பெறுதவாறு வில்வித்தையில் தேர்ச்சிபெற்றவனென அருச்சுனன், (தருமனைநோக்கி), நிரு நெற்றியில் இருந்த வடு என்னை என்றான் - '(உனது) அழகியநெற்றியிலே காணப்படும் தழும்பு எவ்வாறு வந்தது?' என்று வினவினான்; மன்னனும் வெறுத்து ஒளிரும் மேதகு நிறத்தாள் - மின்னலையும் (தனக்கு ஒப்பாகாதுஎன்று) வெறுத்துத்தள்ளி [மின்னலிலும் விளக்கம் பொருந்தி] விளங்குகின்ற மேம்பட்ட நிறத்தையுடையவளான நிரௌபதி, பின்னை - பின்பு, அவனுக்கு - அந்த அருச்சுனனிடம், நிகழ் பெற்றி - நடந்த நிகழ்ச்சியை, உரைசெய்தாள் சொன்னாள்; (எ - று.)

விராடனும் கங்கபட்டனென்ற தருமனுஞ் சூதாடுகையில் இருவாக்கும் நடந்த பிரசில் விராடன் வெகுண்டு கவறுகொண்டு மோதியது முதலியன நிகழ்ந்ததைக் கீழ் நிரைமீட்சிசருக்கத்தில் 120 - ஆம் பாடல்முதல் காணலாம். (சு)

5.—அருச்சுனனும் வீமனும் விராடன்மீது வெதுளி கோள்ளுதல்.

உரைத்தபொழுதிப்பொழுதிவ்வூரெரிகொளுத்தித்
தரைத்தலைவனைத்தலைதடிந்திடுவலென்னு
விரைத்தடவரைப்புயன்வெகுண்டுவிலெடுத்தா
னிரைத்துவருகான்மகனுமெரிவிழிசிவந்தான்.

(இ-ள்.) உரைத்த பொழுது-(நடந்த நிகழ்ச்சியைத் நிரௌபதி) சொன்ன போது, தட வரை புயன் - பெரிய மலைபோலுந்தோள்களை யுடையவனென அருச்சுனன், விரை - விரைவுகொண்டு, வெகுண்டு - சினந்து, 'இ பொழுது - இப்போதே, இ ஊரை - இந்தவூரை, எரி கொளுத்தி - நெருப்பிலெ லெரித்திட்டு, தரை தலைவனை - மச்சதேசாதிபதியாகிய விராடனை, தலை தடிந்திடுவல் - தலைதுணித்துவிடுவேன்,' என்னு - என்றுசொல்லி, (அவ்வாறே செய்யுமாறு), வில் - விற்படையை, எடுத்தான் - கையிலெடுத்துக் கொண்டான்; இரைத்து வரு - ஒலிசெய்துகொண்டு வீசுந்தன்மையுள்ள, கால் - வாயுதேவனுடைய, மகன்உம் - புத்திரனென வீமசேனனும், எரி விழி - நெருப்புப்பொறிபறக்கப்பெற்ற கண்கள், சிவந்தான் - சிவக்கப்பெற்றான்.

கான்மகன் விழி சிவந்தான் - சினவினை முதலாடுஞ் செறிந்தது. [நன்-பொது. 52.] விரை=விரைத்து: வினைப்பகுதி யெச்சப்பொருள் தந்தது: "வரிப்புனைபந்து" என்ற இடத்தைப்போல. (இ)

6.—இரண்டுகவிகள்-ஒருதொடர்: தருமன் சினந்த வீமாரீச்சுவரின் வெருவியை நியாயவுரையால் தணித்தலைக் கூறும்.

ஒன்றுதவிசெய்பிறனுடைவவுதவிமறவாமற்
பின்றையவர்செய்பிழைபொறுத்திடுவர்பெரியோர்
நன்றிபலவாகவொருநனைவடுரிவ்சேரணங்
கன்றிடுவதன்றிமுதுகாயவர்நினையாரே.

(இ - ள்.) ஒன்று உதவி செய்யின்உம் - (ஒருத்தர்) ஒருதவி செய்தாரே யாயினும், அ உதவி - அந்தஉபகாரத்தை, மறவாமல்-மறந்திடாமல், பின்றை-பிறகு, அவர்-அந்தஉபகாரஞ்செய்தவர், செய்-செய்த, பிழை-பலகுற்றத்தை, பெரியோர்—, பொறுத்திடுவர்—: முது கயவர் - பழமையான கீழ்மக்கள், நன்றி - (ஒருவர்செய்த) உபகாரம், பல ஆக - மிகப்பலவாயிருக்க, (அந்த உபகாரஞ் செய்தவர்), ஒரு நலை புரிவர் ஏன்உம் - ஒருகுற்றஞ் செய்வாரே யாஞலும், (அன்ஞர்செய்த மிகப்பல நன்மைகளையும் மறந்து அவர்செய்த ஒருதீமைக்காக), கன்றிடுவது அன்றி - (அவர்மீது)கோபிப்பதே யன்றி, நினையார் - (அவர்செய்த நன்மையை) எண்ணிச் சாந்தமாக இருக்கமாட் டார்; (எ - று.)

நீங்கள் கயவர்தன்மையை மேற்கொள்ளாமல் பெரியோர் தன்மையை மேற்கொண்டு விராடன்செய்த பல நன்மைகளையெண்ணி என்நெற்றியில் வடுச்செய்த இந்தஒருதீமையை மறக்கவேணு மென்றபடி: இந்தச்செய்யுளில் பொதுவாகக் கூறி 'நீங்கள் சினம்மாறுதலே செய்யத்தக்கது' என்ற சிறப் புப்பொருளைப் பெறவைத்தது - **பிறிதுமொழிதலணியின்பாற் படும்.** விரா டன்செய்தநன்மை, மேற்செய்யுளிற் பெறப்படும். (சு)

7. அனலுமுதுகானகமகன்றுநெடுநாணங்
நினைவுவழுவாமலிவனீழலிருந்தேஞ்
சினமிகுதலிற்றவறுசெய்தனனெனப்போய்
முனிதல்பழுதாகுமெனமுன்னவன்மொழிந்தான்.

(இ - ள்.) அனலும் - பற்றியெரியுந்தன்மையுள்ள, முது கானகம் - பழமையாகிய காட்டை, அகன்று - விட்டுநீங்கி, நெடு நாள் - (ஒருவருஷத் திற்குச்செல்லவேண்டிய) பல நாள்கள், நம் நினைவு வழுவாமல்-நம் எண்ணம் மாறுபடாமல் [நம்விருப்பின்படி], இவன் நீழலில் இருந்தோம்-இந்தவிராட ராசனுடைய குடைநிழலில் தங்கியிருந்தோம்; (அப்படிப் பலநன்மைகளை யடைந்த நாம்), சினம் மிகுதலில் தவறு செய்தனன் என போய் முனிதல் - கோபம்முதிர்ந்ததனால் (என் நெற்றியில் வடுவையுண்டாக்குதலாகிய) ஒரு தவற்றைச் செய்தான் என்று (அவன்மீது) போய்க் கோபச்செயலைக் காட்டு தல், பழுது ஆகும் - தவறும், என-என்று, முன்னவன் - மூத்தவனாகிய தரு மன், மொழிந்தான் - சொன்னான்; (எ - று.)

சினமிகுதலின் முனிதல் எனக் கூட்டி யுரைப்பினுமாம். அனலின் முதிர்கானகம் என்றும் பாடம். (எ)

8.—பாண்டவரின் வெளிப்பாட்டை யறிந்த விராடன் தன்மைந்தனோடும் தேறிப்போருளோடும் பாண்டவர்பாதங்களில்வீழ்தல்.

குந்திமயின்வந்துதமருருகுலம்விளக்கு
மைந்தராகுமன்றுதனகண்கடையிருக்கச்
சிந்தனையொடுந்தெறைகொள்செல்வநிதியோடு
மைந்தனெடுமெய்தியவர்மலரடியின்வீழ்ந்தான்.

(இ - ள்.) குந்தி வயின் வந்து - குந்திதேவியினுடைய வயிற்றிலே பிறந்து, தம குருகுலம் விளக்கும் - தங்களுடைய குருகுலத்தை விளக்குபவரான, ஐந்து அரசுஉம் - பாண்டவராசாக்கள் ஐந்துபேரும், அன்று - அப்போது, தன் அகன் கடை இருக்க - தன்னுடைய பரந்த இடத்திலே யிராகிற்க,—சிந்தனையொடுஉம்-கவலையுடனே, நிறை கொள் செல்வம் சிதியோடுஉம் - (தான்) நிசையிற்பெற்ற பொருட்செல்வத்தோடும், மைந்தனெடுஉம் - (தன்) புத்திரனை உத்தரனென்பவனேடும், எய்தி - (பாண்டவரிருக்குமிடத்திற்குப்) போய், அவர் மலர் அடியின் வீழ்ந்தான் - அந்தப்பாண்டவரின் தாமரைபோன்ற பாதங்களில் வீழ்ந்து கும்பிட்டான்; (எ - று.)

சிந்தனை - இந்தப்பாண்டவர் வேற்றருவோடு நம்மிடத்துவசிக்கையில் அவர்களைப் பணியாளராகக்கொண்டு நடத்திலேமே என்பது கருதிய தலைலாகியது: மேல் 13 - ஆங் கவியில் "மனனிடரகற்றி" என வருதல் நோக்குக. சிந்தனையென்றசொல் கவலையென்னும் பொருளில் வருதலை "சிந்தனை முகத்திற்றேக்கி" என்ற இடத்துங் காண்க. (அ)

9.—தருமன் விராடனைத் தழுவிப் புகழ்தல்.

விராடனைநறுங்குவளைமாலையன்மார்பிற்
றராபதியெழுந்தெதிர்தழீஇயினனிருத்திப்
பராவருபெரும்புகழ்படைத்தவருணப்போ
லராவின்முடிமேலுலகிலார்கொலுளரென்றான்.

(இ - ள்.) தராபதி-பூமிக்கெல்லாந்தலைவனாகிய தருமன்,—எதிர்எழுந்து-எதிராக(த்தன்னிருக்கையினின்றும்)எழுந்திருந்து, விராடனை—, நறுங் குவளை மாலை யன் மார்பில்-நறிய குவளைமலர்கொண்டுதொடுத்த மாலையையணிந்த (தன்) பரந்த மார்பிலே, தழீஇயினன் - தழுவினவனுய், இருத்தி - உட்காரவைத்து, (அவனைநோக்கி),—'உனை போல் - உன்னைப்போல், பராவரு பெரும் புகழ் படைத்தவர்-கொண்டாடத்தக்க மிக்க கீர்த்தியை யடைந்தவர், அராவின் முடிமேல் உலகில் - ஆதிசேஷனுடைய சிரசிலே தங்கியிருக்கின்ற இந்தஉலகத்தில், ஆர்கொல் உளர்-யாவரிருக்கின்றனர்?' என்றான்—; (எ-று.)

விராடன் தன்பாதங்களில் வீழவே, அதற்குஎதிராகத் தருமன் எழுந்து அவ்விராடனை மார்புறத் தழுவினன். (க)

10.—தன்னிடத்து வாழ்ந்தபோது நேர்ந்திருக்குங் குறையைப் பொறுக்குமாறு விராடன் பாண்டவரை வேண்டுதல்.

அறைமுரசுயர்த்தவனையவனுநனியையா
பொறையுடையவர்க்கலதுபுகழ்புனைதலுண்டோ
வினையமுதகநற்குணமிலாதவரிடத்திற்
குறைதிருவுளத்தினிடைகொண்டருளலென்றான்.

(இ - ள்.) அறை - (குணில்கொண்டு) அடிக்கப்படுகின்ற, முரசு - முரசு கூத்தியத்தை, உயர்த்தவனை - உயரவெடுத்த கொடியிலே கொண்டவனுகிய

தருமபுத்திரனைநோக்கி, அவன்உம்-அந்த விராடராசனும், 'ஐயா—!பொறை-பொறுமையை, நனி உடையவர்க்கு அலது - மிகுதியாகக் கொண்டிருப்பவருக்கு அல்லாமல், (மற்றையோர்க்கு), புகழ் புரைதல் - புகழை யளிவதென்பது, உண்டு ஓ - உண்டாகுமோ? இறை - சிறிதும், அழுதம் நல் குணம் இலாதவரிடத்தில்-அழுதம்போன்ற நல்லகுணமில்லாதவரிடத்திலேசேர்ந்த, குறை-குறையை, திருஉளத்தினிடை-(உனது)திருமனத்திலே, கொண்டருளல் - கொண்டருளவேண்டா,' என்றான் - என்று வேண்டிக்கொண்டான்.

"ஒறுத்தார்க்கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந்துணையும் புகழ்" என்றார், நாயனாரும். என்னிடத்துக்குறையைப் பொறுக்கவேண்டும் என்று நேரேகூறுதற்குக் கூசி, விராடன், தன்னைப் படாகையாகவைத்துப் பேசுகின்றான்: இக்கருத்துப்பற்றியதே இது என்பது, மேற்கவியில தருமன்கூறுவதால் விளங்கும். மூன்றுமடியில், அறிவு முதனற்குணமடாதவரிடத்தில் என்றும் பாடம். (கo)

11.—தருமன் விராடநகரத்தில் இனிதுறைந்தமை கூறல்.

இந்நகரிலெய்தியபினெத்துயருமெய்தா
தெந்நகரியென்னெடுநாளினிதிருந்தேஞ்
செந்நெல்வயலூடுமுதுசேலுகளுநாடா
நின்னிலுமுயர்ந்ததமர்நீயறியவுண்டோ.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) செந்நெல் வயலூடு - செந்நெல்விளையும் வயலில், (நீர்வளத்தால்), முது சேல் உகளும்-பழமையான சேல்மீன்கள் தாவித் திரியப்பெற்ற, நாடா-மகசநாட்டை யுடையோனே! இ நகரில் - இந்த நகரத்திலே, எய்தியபின்-வந்துசேர்ந்தபின்பு, எ துயர்உம் எய்தாது - எவ்வகைத்துன்பத்தையும் அடையாமல், எம் நகரி என்ன-எம்முடைய இந்திரப்பிரத்தநகரியிலே யுறைவதுபோல, நெடுநாள்-பலநாள்[ஒருவருஷகாலம்], இனிது இருந்தேம்-இனிதாக வசித்துவந்தோம்: நின்னில்உம் உயர்ந்த தமர் - உன்னைக்காட்டிலும் மேம்பட்ட சுற்றத்தார், நீ அறிய—, உண்டுஓ - உளரோ? (எ - று.)

நல்லோர்க்கு எந்தப்பொருளிலேனும் ஐயம்தோன்றியவிடத்து அவர் நெஞ்சேசான்று ஆகு மென்ப வாதலால், 'நீயறியவுண்டோ' என்கின்றான். சென்னல்வயலூடு என்றும் பாடம். (கக)

12.—உன்னுடைய சேனைமுதலியவற்றின் துணையிருப்பின் பகைவேல்வே னென்று தருமன் கூறுதல்.

நின்புதல்வருந்திறல்வருதினியுநீயு
மென்புயமெனச்சமரிலென்னருகுநின்றால்
வன்பிறைநெடுவஞ்சனைசெய்மன்னர்படையாவுந்
தென்புலமடைந்திடமலைப்பலிதுதிண்ணம்.

(இ - ன்.) நின் புதல்வர்உம் - உன்னுடையபுத்திரரும், திறல் வருதினியும் - வலிமையையுடைய சேனையும், நீயும்—, என் புயம் என - என்

தோள்போல், சமரில் - (இனி சேரப்போகின்ற) போரிலே, என் அருகு நின் றால் - என்சமீபத்திலே யிருந்தால், வன்பிழைடு - வலிமையோடு, வஞ் சனை செய் - வஞ்சனையைச்செய்கின்ற, மன்னர் படை யாஉம் - (தரியோ தனராசனைச்சேர்ந்த) மன்னவரின் சேனைகள்யாவும், தென் புலம் அடைந் திட - யமலோகத்தைச் சேரும்படி, மலைப்பல் - போர்செய்வேன்: இது—, நிண்ணம் - நிச்சயம்; (எ - று.)

புதல்வர்என்றபன்மை - விராடனுடைய முதற்பத்தினியாகிய சுரதை யென்பவளிடத்துத்தோன்றிய சுவேதன் சங்கன் என்பவரோடு, இரண் டாமமனைவியாகிய சுதேஷ்ணையென்பாளிடத்துத் தோன்றிய உத்தரனை யுங குறித்தற்காக. (கஉ)

13.—விராடன் அவ்வுரைகேட்டு மகிழ, உத்தரன் கூறலுறுதல்.

எனமுரசுயர்த்தவனியம்புதலுமகிழா
மனனிடரகற்றினனம்மச்சவளநாடன்
றனயனுநமக்குறுதிதக்கதெனவெண்ணு
வினிமையொடறத்தின்மகனுக்கிவையிசைப்பான்.

(இ - ள்.) என - என்று, முரசு உயர்த்தவன் - முரசக்கொடியை உயர வெடுத்தவனாகிய தருமன், இயம்புதலும் - சொன்னவுடனே, அ மசசம் வளம் நாடன் - அந்த மசசநாட்டிற்கு உரியவனான விராடன், மகிழா - மன மகிழ்ச்சியடைந்து, மனன் இடர் அகற்றினன் - மனத்துயரத்தைப் போக்கி னன்: தனயன்உம் - (அவனுடைய) குமாரனான உத்தரனும், 'தக்கது - (இந் தப்பாண்டவர்க்குத்) தகுதியாகஇருப்பது [உதவுவது], நமக்கு உறுதி - நமக்கு நன்மைதருவதாகும்,' என எண்ணு - என்றுநினைத்து, இனிமையொடு - மன மகிழ்ச்சியொடு, அறத்தின் மகனுக்கு - தருமபுத்திரனுக்கு, இவை இசைப் பான் - இவ்வார்த்தைகளைக் கூறலானான்: (எ - று.)—உத்தரன் உரைப்ப வற்றை மேற்கவியிற் காண்க. (கரு)

14.—உத்தரன் கூறியன.

எத்தரையுநீழல்செய்தனிக்கவிகையெந்தா
யித்தரையுநின்னதுநின்னேவலினர்யாமும்
பத்தரையொடீரரைகொள்பல்படையுநினவே
யுத்தரையும்வில்லிசயனுக்குரியளென்றான்.

(இ - ள்.) (தருமபுத்திரனை நோக்கி உத்தரன்),—'எ தரையும் - பூமி யெங்கும, நீழல் செய் - நிழலைச்செய்கின்ற, தனி கவிகை - ஒப்பற்ற வெண் கொற்றக்குடையையுடைய, எந்தாய் - எமது தந்தைபோன்றவனே! இ தரை உம் - இந்தமசசதேசமும், நின்னது-உன்னுடையதே: யாம்உம் - நாங்களும், நின் ஏவலினர் - உன் கட்டளையின்படி நடப்பவரேயாவோம்: பத்தரை யொடு ஈர் அரை கொள் பல் படைஉம் - அறுவகைப்படையும், நினவ - உன்னுடையனவே: உத்தரைஉம் - (என்னுடன் பிறந்தவளான) உத்தரை

யென்பாளும், வில் விசயனுக்கு - விற்போரில்வல்ல அருச்சுனனுக்கு, உரியள் - உரியவளாவள்,' என்றான் - என்று கூறினன்; (எ - று.)

அறுவகைப் படைகளாவன - நாட்டுப்படை காட்டுப்படை பகைப் படை துணைப்படை கூலிப்படை மூலப்படையென்பன. தரை - தரா என்ற வடசொல்லின் திரிபு: பூமியென்று பொருளுள்ள இச்சொல், அதன்வகதேச மாகியநாடுஎன்ற பொருளில் வந்தது: "மாயோன்மேய காடுறை யுலகமும்" என்றஇடத்து உலகம் என்றதுபோல. (கச)

15. —அருச்சுனன் 'உத்தரை என்மகனுக்கு மனையியாதற்கு உரியள்' என்றல்.

வில்விசயனுத்தரன்விளம்புதலும்வீரங்
கல்விசெய்கலைத்திறன்வனப்புடையகாளா
யில்விசயமெய்க்குணனின்மிக்கவிளையாளென்
றெல்விசயமுற்றசுதனுக்குரியளென்றான்.

(இ-ள்.) உத்தரன் விளம்புதலும்-உத்தரகுமாரன் (இவ்வாறு)கூறவே,— வில் விசயன்—, (உத்தரகுமாரனைநோக்கி),—'வீரம்-வீரமும், கல்வி - படிப் பும், செய் கலை - செய்யப்படுகின்ற அறுபத்துநான்கு கலைத்தொழிலும், திறன் - வல்லமையும், வனப்பு-அழகும், உடைய—, காளாய் - இளைஞருது போன்றவனே! இல் விசயம் மெய் குணனில் மிக்க இளைபாள் - இல்லறத் திற்குரிய மேம்பட்ட உண்மையான நற்குணங்களாற் சிறந்த இளைபவ ளான உத்தரை, என் - என்னுடைய, தொல் விசயம் உற்ற - பழமையாக வெற்றியையே பெறுதல்பொருந்திய, சுதனுக்கு - புத்திரனாகிய அபிமனன் பவனுக்கு, உரியள் - மனைவியாதற்குஉரியாள்,' என்றான் - என்று கூறி னான்: (எ - று.)—எல்விசயமுற்றசுதன் என்றும் பாடம். (கஅ)

வேறு.

16. —பாண்டவர் எல்லாத்திசையிலுமுள்ள சுற்றத்தாரிடத்தும் தம் செய்தியைத் தூதர்மூலமாகச் சொல்லியனுப்புதல்.

விசயன் மொருகுத்து நயமாக விராட னெஞ்சக்
கிசையும் படிசொற் றவரோடு மிருந்த பின்னர்
வசையின்றி வாழுந் தமராகிய மன்னர்க் கெல்லாத்
திசையுந் தமது செயறூதரிற் செப்பி விட்டார்.

(இ - ள்.) விசயன் - அருச்சுனன், தொகுத்து - சுருக்கமாக, நயம் ஆக - இனிதாக, விராடன் நெஞ்சுக்கு இசையும்படி - விராடன்மனத்துக் குப் பொருந்தும்படி, சொற்று - (உத்தரையை அபிமனுக்கு மனைவியாக்குதல் முதலியவற்றைக் குறித்துச்) சொல்லி, அவரோடுஉம் இருந்த பின்னர் - அத்தவிராடன்முதலியவரோடும் சேர இருந்தபிறகு,— (அப்பாண்டவர்),— வசை இன்றி - குற்றமில்லாமல், வாழும் - வாழ்பவராகி, தமர் ஆகிய-தமது சுற்றத்தாராகிய, மன்னர்க்கு-அரசர்பொருட்டு, எல்லாம் திசைஉம்-எல்லாத் திக்குக்களிலும், தமது செயல்-(வெளிப்பட்ட) தமதுவரலாற்றை, தூதரின் - தூதர்மூலமாக, செப்பி விட்டார் - சொல்லியனுப்பினர்கள்; (எ - று.)

இதழ்முதற் பதினைந்தவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சொன்று காய்ச்சீரும், மற்றையவை மாச்சீர்களுமாகிவந்த வெடிலடிநான்குகொண்ட கலிநிலைத்துறைகள். (எசு)

17.—பாண்டவரிடம் வெளிப்படாட்டையறிந்து கிருஷ்ணன் தன்தங்கையாகிய பாண்டவருடன் இடத்துக்கு வருதல்.

வெளிநின்றமாற்றம் வெளியானபின்வெண்டயிர்த்தண்
டுளிநின்றமேனித்துளவோன்றன்றுணைவரோடு
மளிநின்றமாலைபுனைதங்கையபிமேனைநாற்
கெளிநின்றவேற்கைச்சிலைவெதன்னெறுமம்வந்துசேர்ந்தான்.

(இ - ள்.) வெளி நின்ற மாற்றம் - (பாண்டவர்) வெளிப்பட்டுவிட்டன என்ற சொல், வெளி ஆன பின் - வெளிப்பட்டபின்பு, வெள் தயிர் தண் துளி நின்ற மேனி - வெள்ளியதயிரின் தண்ணிய துளி தங்கப்பெற்ற திரு மேனியைக் கொண்டிருந்தவனாகிய, துளவோன் - திருத்துழாய்மாலைசூடுந் திரு மாலின் அவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ணன், தன் துணைவரோடும் - தன்னுடன் பிறந்தவரான பலராம சாத்தகியகியருடனும், அளி நின்ற மாலை புனை தங்கை (யோடும்) - வண்டுகள் தங்கின்ற மாலையையணிந்த தங்கையான சுபத்திரை யோடும், அபிமனோடும் - (அவளருந்தவப்புதல்வனான) அபிமனுடனும், நெளி நின்ற வேல் கை சிலை வெதன்னெறுமும் - நெளிவாகநின்ற [கூர்மையுள்ளதாய் விளங்குகின்ற] வேற்படைபோந்திய கையையுடைய சிலைதனுடனும், வந்து சேர்ந்தான்—; (எ - று.)

ஸ்ரீகிருஷ்ணன் குழந்தைப்பருவத்தில் கந்தகோபனில்லில் வளர்ந்த போது வெண்டயிர்த்தண்டுளி மேனியுடன் தோன்றின னென்க. மூன்று மடியில், அளிநின்ற வெஞ்சிற் குருமைத்தரளுவரோடும் என்றும் பாடம். (கஎ)

18.—தருமபுத்திரர் முதலியோரைக் கண்டு மகிழ்ந்து ஸ்ரீகிருஷ்ணர் அவரோடும் எண்ணிப் பல பேசுதல்.

கண்டான்மகிழ்ந்தானறன்மைந்தனைக்கைதழீஇயுங்
கொண்டானவன்றனிளையோர்கைகுவித்துவீழ்ந்தா
ரெண்டானவர்தடிதைந்திதண்ணிப்புவனமழு
முண்டாலுலைத்தாலுலைத்தக்கவுரைகளெல்லாம்.

(இ - ள்.) (வந்து சேர்ந்த ஸ்ரீகிருஷ்ணன்),—அறன் மைந்தனை கண்டான் மகிழ்ந்தான் - (வனவாச அஜ்ஞாதவாசங்களாச்செய்து கழித்து வெளிப்பட்ட) தருமபுத்திரனைக் கண்டு மகிழ்ந்தான்: கை தழீஇயும் கொண்டான் - (தன்) கைகளால் தழுவியும் அணைத்தான்: அவன்தன் இளையோர் - அத்தத்தருமனுடைய தம்பிமார், கை குவித்து வீழ்ந்தார் - (ஸ்ரீகிருஷ்ணனைக்) கைகூப்பி வணங்கித்தாழ்ந்தார்கள்: அவரோடு - அத்தப்பாண்டவ

ரோடு,—புவனம் ஏழ்உம் உண்டான் - ஏழுலோகங்களையும் உண்டவனென திருமாலினவதாரமான ஸ்ரீகிருஷ்ணன்,—என் நினைசந்து எண்ணி - ஆலோசனைகளை மனமொத்திருந்து ஆலோசித்த, உரைச்தக்க உரைகள் எல்லாம் உரைத்தான் - சொல்லத்தக்க வார்த்தைகளையெல்லாஞ் சொன்னான்; (எ - று.) —என்டானவதேழுடையத்தென்று பிரதிபேதம். தான் - அசை. (எஅ)

19.—சிவேதன்செயிகையையெல்லாம் கொல்லி ஸ்ரீகிருஷ்ணன் விராடன்கவலையைப் போக்கியது.

சிவன்றன்னைநோக்கிச்சிவேதன்றவஞ்செய்தவாறு
மவன்றன்னைருளாற்பலவாயுதம்பெற்றவாறு
மிவன்றன்பகைசெற்றதுவ்யாவுமியம்பியுள்ளங்
கவன்றன்புறுமன்விராடன்றன்கவற்சிதீர்த்தான்.

(இ - ள்.) சிவன்தன்னை நோக்கி - சிவபெருமானைக் குறித்து, சிவேதன் தவம் செய்த ஆறுஉம் - சிவேதன் தவஞ்செய்த விதத்தையும், அவன்தன் அருளால் - அச்தச் சிவபெருமானுடைய திருவருளினால், பல ஆயுதம் பெற்ற ஆறுஉம் - (இச்தச்சிவேதன்) பலபடைக்கலங்களைப் பெற்றவகையையும், இவன் தன் பகை செற்றதுஉம் இச்தச்சிவேதன் தன்பகையை யழித்தகை யும், யாஉம் - எல்லாவற்றையும், இயம்பி - (விராடனிடம்) சொல்லி, (அச்த நாளாகச் சிவேதனது பிரிவினால்), உள்ளம் கவன்று - மனம்வருந்தி. அன்பு உறு - மனக்கசிவு கொள்ளாம லிருச்த, மன் விராடன் தன் - விராட மன்னனுடைய, கவற்சி - துன்பத்தை, தீர்த்தான்—; (எ - று)

சிவேதன் முன்னொருகாலத்தில் தேவலோகத்திற் போயிருச்தபொழுது வசுக்கள் அவனை மயிலென்னும் பறவையாகும்படி சபித்து அவன்பேரழகிய அம்பொன்றை அவன்மே லெறிய, அதுபட்டவுடனே அவன் மயிலாகித் தந்தையாகிய விராடனிடம் வந்துசேர, அதனையறியாத அவன் கோபித்துத் துரத்திவிட, மைந்தன் பறந்துசென்று தவஞ்செய்து சிவபிரானருளாற் சாப விடைபெற்று வில்முதலிய ஆயுதங்களும் கவசங்களும் பெற்றன னென்பர். இவன்தன் பகைசெற்ற விவரம் தெரியவில்லை; ஒருசாரார் ஸ்ரீகிருஷ்ணன் இச்தச்சிவேதனைக்கொண்டு தன்பகையை யொழித்துக்கொண்டானென்று பொருள்கூறுவர்; அதற்குரிய சரித்திரமும் தெரியவில்லை. அன்பறுமல் என்று பிரதிபேதம். (கக)

20.—தன் தந்தையின்தாளிற் சிவேதன் வீழ்ந்துபணிதல்.

தெம்மைந்தரென்னுங்களபங்களைச்சிங்கசாப
வெம்மைந்தின்வேறற்கமைந்தாரெனுருவீரனை
தன்மைந்தனைக்கண்டுருகுந்திறற்றந்தைதாளி
லெம்மைந்தனும்வீழ்ந்துடன்னைகினனர்வாடிக்கே.

(இ - ள்.) தெம் மைத்தர் என்னும் களபங்களை-பகைவீரராகிய யானைக் கன்றுகளை, சிங்கசாபம் வெம் மைந்தின் - சிங்கக்குட்டியின் வலிமைபோன்ற வெவ்விய வலிமையினால், வேறற்கு - வெல்லுதற்கு, அமைந்தான் - பொருந்தினவனாகி, ஒரு வீரன் ஆன - ஒப்பற்ற வீரனான, தன் மைந்தனை - தன் புதல்வனை, கண்டு—, உருகும் - உருகுகின்ற, நிறல் - வலிமையையுடைய, தந்தை - தமப்பனாகிய விராடனுடைய, தாளில் - பாதங்களில், அமைந்தன் உம் - அந்தப்புத்திரனாகிய சிவேதனும், வீழ்ந்து - பணிந்து, ஆர்வம் மிக்கு - அன்புமிகுந்து, உடன்வைகினன் - தந்தையுடனேசேர்ந்து தங்கினான்: (எ - று.)

மைந்து - வீரம், இளமை: அதனையுடையவன் - மைந்தன்: எனவே, வீரன், புதல்வன்என்ற பொருளைக் காட்டும். களபம் - யானைக்கன்று: வரிம்ஹ ஶாவ:-சிங்கக்குட்டி: வடசொற்கள். "வெம்மைந்தின் வேறற்கமைந்தோரொ ருவீரானை, தம்மைந்தனைக்கண்டுருகுந் தந்தையர்கடாளி, லம்மைந்தரும் வீழ்ந்துடன் வைகினரார்வமிக்கே" என்று ஒருபாடம் பதினேழாஞ்செய்யு ளின் பாடபேதத்திற்கு ஏற்பக் காண்கின்றது. (20)

21.—பாஞ்சாலர்முதலியோர் அங்குச் சேனையோடும் வருதல்.

பாஞ்சாலர்போசகுலமன்னவர்பாண்டிமேவந்தார்
வாஞ்சாமனத்தின்வயமத்திரர்மாகதேயர்
பூஞ்சாபவெற்றிக்கொடிக்கோளர்பொன்னிநாடர்
காஞ்சால்புடனப்பதிவந்தனர்தானையோடும்.

(இ - ள்.) பாஞ்சாலர் - பாஞ்சாலர்களும், போசகுலமன்னவர் - போச குலராஜாக்களும், பாண்டிமேவந்தார் - பாண்டியமன்னவரும், வாஞ்சா மனத் தின் வய மத்திரர் - விருப்பங்கொண்ட மனத்தினையுடைய வலிய மத்திர தேசத்தாரும், மாகதேயர் - மகததேசத்தவரும், பூஞ் சாபம் வெற்றி கொடி கோளர் - அழகிய வில்லை(த் தமது) வெற்றிக்கு அடையாளமாகக் கொடி யிலேகொண்ட சேரதேசத்து மன்னவரும், பொன்னிநாடர் - சோழநாட்டு மன்னவரும், தாம் - (ஆகிய) இவர், தானையோடும் - சேனையுடனே, சால் புடன் - நிறைகுணத்தோடு, அ பதி வந்தனர்-(பாண்டவரிருந்த) அவ்விராட நகரத்து வந்து சேர்ந்தார்கள்; (எ-று.)

சால்பு - மனவமைதியுமாம். பொன்னைக் கொழித்துக்கொண்டு வரு தலால், காவேரிக்குப் பொன்னியென்று ஒருபெயர். காவேரியால் மிக்க வளம்பெற்றது சோழநாடே யாதலால் அது 'பொன்னிநாடு'எனப்படும். (21)

22.—காட்டில் நெடுநாள் வசிக்கலாயிற்றே என்று பாண்டவரைக்கண்டு வருந்திக் கூறும் நிருபரிக்குத் தருமன் கூறலுறுதல்.

வந்தோரைபோடுமிருபாதம்வணங்கிவைகுங்
கன்றோடடர்கைக்கடுங்கோபக்களிற்றுவேந்த
ரன்றோவெடுநாளகன்கானிலடைந்திலென்று
நொந்தோரையாற்றிநுவல்வானருதிகொள்வேலான்.

(இ - ள்.) வந்து—, ஒகையோடுஉம் - சந்தோஷத்துடனே, இரு பாதம் வணங்கி - (தருமபுத்திரனுடைய) இரண்டு தாள்களிலே கும்பிட்டு, வைகும் - தங்கிய, கந்தோடு அடர் கை கடுங் கோபம் களிறு வேந்தர் - கட்டுத்தறியை யடர்க்கின்ற துதிக்கையையும் கொடியகோபத்தையுமுடைய களிற்றுப் படையையுடைய அரசராகி, 'நெடு நாள் அகல் கானில் அடைந்திர் - வெகு நாள் அகன்ற காட்டிலே தங்கிவசித்திரிரே: அந்தோ - ஐயோ,' என்று—, சொந்தோரை - மனம்வருந்தினவரை, ஆற்றி - சமாதானப்படுத்தி, அறுதி கொள் வேலான் - அந்தக்கூர்மையான வேற்படையையுடைய தருமபுத்திரன், நுவல்வான் - (பின்வருமாறு) சொல்பவனானான்; (எ - று.) — தருமன் சொல்வதை மேலிற்கவியிற் காண்க. அடைந்திர் = அடைந்தீர். (உஉ)

23.—'விராடநகரில் ஓராண்டும் வசித்ததனால் காட்டில் திரிந்த வருத்தமெல்லாம் நீங்கிற்று' என்று தருமன் கூறுதல்.

தேனிற்குளித்தசிறையம்புயச்சேக்கையன்னம்
வானிற்பறந்துபுலர்த்தும்புனன்மச்சகாடன்
வேனிற்கிலேவெள்விராடன்புரமேயவன்றே
கானிற்றிரிந்தபரிதாபங்கழிந்ததென்றான்.

(இ - ள்.) (தருமன்), 'அம்புயம் சேக்கை - தாமரைமலையைப் படுக்கை யாகக்கொண்ட, அன்னம்—, தேனில்—, குளித்த - நனைந்த, சிறை - (தம்) இறகுகளை, வானில் பறந்து - (ஆகாயத்திலே) பறந்துபோய், புலர்த்தும் - உலர்த்துமாறு வளம்படைத்த, புனல் - நீரைக்கொண்ட, மச்சகாடன் - மச்ச நாட்டிற்கு உரியவனுகிய, வேனில் சிலை வேள் - வேனிற்காலத்தில் வில்லை யேந்திக்கொண்டு திரிபவனுன மன்மதனையொத்த, விராடன் - விராடராச னுடைய, புரம் - பட்டணத்தை, மேய - வசிக்குமாறு பொருந்திய, அன்றை - அன்றைத்தினமே, கானில் திரிந்த - காட்டிலே (பன்னிரண்டியாண்டுகள்) திரிந்ததனுலான, பரிதாபம் - துன்பம், கழிந்தது - நீங்கிற்று,' என்றான்—;(எ - று.)

24.—தருமன் அரசரிகளைநோக்கித் துரியோதனன் துராலோசனையால் தான் அழிந்தமை கூறி, நீவிரோ களைக ணைனல்.

பண்ணுக்குருகிப்பறையாலகப்பட்டமான்போன்
மண்ணுக்கிறைவன்மொழிதேறிமகன்செய்வஞ்ச
வெண்ணுக்கழிந்தேனினிச்செய்வதென்யாருநீவிர்
கண்ணுக்கிமைபோலிருந்தீர்களைகண்களாக.

(இ - ள்.) பண்ணுக்கு - (இனிய) சங்கீதத்தைக் கேட்டலால், உருகி - மனமுருகி, (உடனே), பறையால் - பறைகொண்டடித்தலால், அகம் பட்ட - (இருந்த) இடத்தில்தானே பிறந்திட்ட, மான்போல் (அசுணமென்னும்) மிரு கத்தைப்போல, மண்ணுக்கு இறைவன் - பூமிக்குத் தலைவனுகிய திருதராட் டிரனுடைய, மொழி - வார்த்தையை, தேறி - நம்பி, மகன் - அவனுடைய குமார

ஞன துரியோதனன், செய் - செய்த, வஞ்சம் என்னுக்கு - வஞ்சனையான ஆலோசனைக்கு, அழிந்தேன் - தோற்றுவிட்டேன்; இனிச் செய்வது என்—? நீவிர்யாரும்-(நண்பரசரான) நீவகள்எல்லீரும், கண்ணுக்கு இமை போல் களைகண்கள் ஆக இருந்தீர்-கண்களை இமைகள்காத்து இருப்பதுபோல் (எங்க ளைக்காக்கும்) களைகண்களாக இருந்தீர்கள்; (எ - று.)

களைகண் - துன்பக்தைப் போக்கும்இடம்: எனவே, ஆதரவாயிருப்பது. "கண்களைக்காக்கின்ற விமையிற் காத்தனர்" என்ற அடி, இச்செய்யுளின் ஈற்றிலே காணத்தக்கது. இசைபறிவிலங்காகிய அசுணமென்னுங் குறிஞ்சி நிலப்பிராணியைப் பிடிக்கக்கருதிய அந்நிலத்துமாக்கள் செழுமையுள்ள மலைச் சாரலிலே நிலாவிளங்கும் மாலைப்பொழுதிலே வெய்ங்குழல் முதலியவற்றால் இனியஇசையைப் பாட அச்சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தமடையவிரும்பி அந்தப்பிராணிகள் அருகில்வந்து அவ்வின்னிசையைச் செவியிலேற்றுப் பரவசப்பட்டிருக்கிற சமயத்தில் அக்கொலையாளர் பறைகொட்ட, அக்கொடிய ஓசையைக் கேட்டவுடன் அப்பிராணிகள் இறந்துபடும் என்பர்: அசுண மென்ற இதை மிருகமென்று ஒருசாராரும் பறவையென்று ஒருசாராரும் கூறுகின்றனர். பண்ணுக்குரல்கிளன்று பிரதிபேதம். (உசு)

25.—தருமன் துரியோதனனது துராலோசனைச்செயல்களையெல்லாம் கூறுகையில், சல்லியன், துரியோதனன் தன்னை யேமாற்றித் தன்பக்கத்திற் சேர்த்துக்கொண்டதைத் தெரிவித்துச் சொல்லல்.

அரசர்க்கடைவேயவையின்கணைவயினைத்து
முரசக்கொடியோனையடாகமொழிந்தபோது
விரைதுற்றுதார்ச்சல்லியன்முன்புவிளைந்தவெல்லாம்
பரசுற்றகன்றுன்பிழைகொன்றபகடுபோல்வான்.

(இ - ள்.) அவைபின்கண்-சபையிலே, அரசர்க்கு (விசாரிக்கவந்த பாஞ் சாலர்முதலிய) ராஜாக்களுக்கு, அடைவே-முறைமையாக, அவைஅனைத்து உம் - (துரியோதனனுடைய) அந்தத்துராலோசனைச் செயல்களையெல்லாம், முரசம் கொடியோன் - முரசவாத்தியத்தைச் கொடியின்கணுடையவரான தருமபுத்திரன், நயம் ஆக-இனிமையாக, மொழிந்த போது-சொன்ன காலத் திலே,—விரை துற்று தார் சல்லியன் - நறுமணம் நெருங்கிய மாலையை யணிந்த சல்லிய னென்பான், பிழை கொன்ற - (தன்) குற்றத்தினால் தீங் கிழைத்த, பகடு போல்வான் - ஆண்யானைபோல்பவனாகி, முன்பு விளைந்த எல்லாம் - முன்னே நடந்தெல்லாவற்றையும், பரசுற்று - சொல்லிவிட்டு, அகன்றான் - அப்பாற்சென்றான்; (எ - று.)

தான் முன்னமே யாராய்ந்திருக்க வேண்டியதாகவும் அங்ஙன் செய்யா மையால், சல்லியனை, 'பிழைகொன்ற பகடுபோல்வான்' என்றது: இனி, பிழைகொன்ற - அரசக்கொடியோனால் முன்பு நிகழ்ந்ததைத் தெரிவித்தலால் தன் குற்றத்தைப் போக்கிக்கொண்ட, பகடுபோல்பவனென சல்லியன் என்று உரைத்தலும் உண்டு. (உஞ)

26.—சல்லியன் துரியோதனனுக்கே உதவிபுரிபவனுதல்.

கரடக்கடவெங்களியானைகவனமான்றேர்
துரகப்பதாதிப்படைதம்மொடுஞ்சூழ்ச்சியாக
விரகிற்புகுந்துநெறியின்கண்விருந்துசெய்த
வுரகக்கொடியோற்கரும்போரிலுதவிசெய்வான்.

(இ - ள்.) கரடம்-கரடத்திலே, கடம்-மதநீரையுடைய, வெம்-வெம்மை யான, களி யானை - மதக்களிப்புள்ள யானையும், கவனம் மான் தேர் - விரைந்துசெல்லும் விலங்காகிய குதிரைபூட்டிய தேரும், துரகம் - குதிரை யும், பதாதி-காலாளுமாகிய, படைதம்மொடும்-நால்வகைச் சேனைகட்கும், சூழ்ச்சியாக - (முன்னமே செய்த) ஆலோசனையின்படி, விரகின் - தந்திரமாக, புகுந்து - வந்து, நெறியின்கண் - (தருமனைக்குறித்துத் தான்செல்லும) வழி யிடையே, விருந்து செய்த—, உரகம் கொடியோற்கு - பாம்புக்கொடியை யுடையவனான துரியோதனனுக்கு, அரும் போரில் - மகாயுத்தத்தில், (சல்லியராசன்), உதவிசெய்வான் - துணைபுரிபவனானான்; (எ - று.)

கரடம் - யானைக்கவுளினின்றும் மதநீர்பாயுந்துளை: யானையின் கவுளில் மதநீர்பெருகுஞ்சுவடுமாம். சேனைகளுடன் தருமனைநோக்கிச் சல்லியராசன் வரானிற்கையில் இடைவழியே மிகவும் இளைப்பையடைந்த வேளையில் இன் னூர் உதவிபுரிபவனென்று தெரியாது விருந்துசெய்துவிட்டுப் பின்னர்த் துரி யோதனன் செய்தவிருந்து என்று தெரிவித்ததனால், 'விரகிற்புகுந்து நெறி யின்கண விருந்துசெய்த உரகக்கொடியோன்'என்றார். படைதம்மொடும் என் பதை உருபுமயக்கமாகக்கொள்ளாமல் 'படைதம்மொடும் புகுந்து' எனக் கூட்டி யுரைத்தலும் ஒன்று. (உசு)

27.—சல்லியன் துரியோதனனுக்குத உதவியாளைதப்படற்றிய கவிக்கூற்று.

நஞ்சோடுசாலுமமரின்கணமர்களென்று
நெஞ்சோடினைந்ததுணையென்றுநினைத்தல்செய்யார்
செஞ்சோறுசாலவலிதென்றுமண்செப்பும்வார்த்தை
வெஞ்சோரிவேலானிலையிட்டனன்மீண்டுமீண்டும்.

(இ - ள்.) (வீரர்),— 'நஞ்சோடு சாலும்-விஷத்தோடு ஒப்பிடதக்க [உக்கிரக்கொண்டு கொல்லுந்தன்மையுள்ள], அமரின்கண் - போரிலே, நமர் கள் என்றும் - (இவர்) நம்மைச்சேர்ந்தவ ரென்றும், நெஞ்சோடு இனையத் துணை என்று உம் - மனத்தோடுஒத்த நண்பர்என்றும், நினைத்தல் - எண்ணு வதை, செய்யார்-: (அவ்வீரர்கட்கு), செம் சோறு - செவ்வியசோறு [தக்க காலத்திலளிக்கும் உணவே], சால வலிது - மிக்கவலிமையை யுடையது', என்று—, மண் - இவ்வுலகத்தவர், செப்பும் - சொல்லுகின்ற, வார்த்தை - வார்த்தையை, வெம் சோரி வேலான்-கொடிய இரத்தம் படியப்பெற்ற வேற்படையை யுடையவனாகிய சல்லியன், மீண்டும் - மறுபடியும், மீண்டு உம் - இப்போதும், நிலையிட்டனன் - நிலைப்படுத்தினன்; (எ - று.)

மாமனும் தக்கதுணைவனுமாக இருக்கும், சல்லியன், பாண்டவர்க்குப் போர்த்துணையாகாது வழியிடையே இளைப்புக்காலத்திற் சோறிட்ட காரணத்தால் துரியோதனனுக்கே போர்த்துணைவனுவதால், 'வீரர்க்கு நமர் துணையென்பதுவேண்டா: செஞ்சோறேவலிது' என்று உலகத்தார் சொல்லும்வார்த்தையை இப்போது மீண்டும்நிலையிட்டவனுவன். (உ-எ)

28.—விராடராசன் உத்தரனை அபிமனுக்கு மணஞ்செயிவித்தல்.

ஓமஞ்செய்தீயிற்பொரிசிந்தலினுற்றவாசத்
தூமங்கமழப்பலவாசத்தெரடையல்சூட்டிக்
காமன்றிருமைத்துணற்கண்பொடைக்கன்னிதன்னை
மாமன்றலங்கேபுரிவித்தனன்மச்சர்கோமான்.

(இ - ள்.) ஓமம் செய்-ஓமஞ்செய்யப்படுகின்ற, தீயின் - அக்கினியிலே, பொரி சிந்தலின்-பொரியைச சிந்துவதனால் [லாஜஹோமஞ் செய்வதனால்], உற்ற - பொருந்திய, வாசம் - வாசனைகொண்ட, தூமம் - புகை, கமழ - எங்கும்நறுமணம்வீசாநிற்க,— காமன் திருமைத்துணற்கு - காமனுடைய அவதாரமான பிரதியும்நனுக்கு மைத்துணனான அபிமன்யுவுக்கு, அகன்னிதன்னை - அந்தஉத்தரையென்ற கன்னிகையை, வாசம் பல தொடையல் சூட்டி - நறுமணமுள்ள பலமலர்மாலைகளையணிவித்து, அன்பொடு - அன்புடனே, மா மன்றல் - சிறந்தகலியாணத்தை, அங்கே-அவ்விடத்தில், மச்சர் கோமான் - விராடன், புரிவித்தனன்—; (எ - று.)

ஸ்ரீகிருஷ்ணனுக்கு உடன்பிறந்தவளாகிய சுபத்திரைக்கு மைத்துனனான அபிமன்யு அந்தக்கிருஷ்ணன்மகனான ப்ரத்யும்நனுக்கு அத்தைமைத்தனுவனுதலால், அவனை, 'காமன்திருமைத்துணன்' என்றார். தூமம்புடைசூழ்புவிவேந்தர் தொடையல்சூழ என்றும் பாடம். (உ-அ)

29.—பாண்டவர் காளிகீத்தப் பலிகொடுத்து முன்வன்னிமரத்துவைத்த படைக்கலங்களை மீட்டுங்கொள்ளுதல்.

முன்னிச்சமருக்கொருப்பட்டமுடிமகீபர்
கன்னிக்குவேண்டுங்கடனனபலிகணல்கி
வன்னிப்பொதும்பர்வயின்வைத்தவயங்குசோதி
மின்னிற்றிகழ்வெம்படையானவையுமீண்டுகொண்டார்.

(இ - ள்.) முன்னி - ஆலோசித்து, சமருக்கு ஒருப்பட்ட - (எந்தவகையிலும் சந்திக்கு இணங்காவிட்டால்) போர்செய்யுமாறு சம்மதித்த, முடி - கிரீடங்களையணிந்த, மகீபர்-அரசர் [பாண்டவர்],— கன்னிக்கு-காளிகாதேவிக்கு, வேண்டும்-இன்றியமையாத, கடன் ஆன-முறைமையான, பலிகள்-உயிர்ப்பலிகளை, கல்கி - கொடுத்து,—வன்னி பொதும்பர்வயின் - வன்னிமரத்தின் பொந்திலே, வைத்த - (அஜ்ஞாதவாசஞ்செய்வதற்கு முன்னே) வைக்கப்பட்ட, வயங்கு சோதி மின்னின் - விளங்குகின்ற ஒளியையுடைய மின்ன

லேப்போல, திகழ் - விளங்குகின்ற, வெம் படை யாவையும் - (தம்முடையவான) கொடிய ஆயுதங்களெல்லாம், மீண்டு - மீறுபடியும், கொண்டார் - எடுத்துக்கொண்டார்கள்; (எ - று.)

காடுகாண்துறைசருக்கத்து 9, 10 - பாடல்களால், காளிகோயிலெயடுத்த வண்ணிமரத்தின்பொதும்பரில் பாண்டவர் தம்படைக்கலங்களைச சேமித்து வைத்தமை விளங்கும். (2-கு)

30.—அபிமந்யுவின் விவாகம் முடிந்தபின் கிருஷ்ணனும் பாண்டவரும் மற்றையாவரும் உபலாவியத்திற்புதந்து போர்த்தயாரிப்பு ஆராய்தல்.

சேயோன் விழுவுவிழை வொடுசிறந்தபின்னர்
மாயோனுமற்றக்குருமைந்தருமன்னர்யாரும்
போயோதைவீரியபலாவிபுகுந்துதங்க
ளாசோதனைத்துக்குறுநீர்மைகளாய்வுற்றார்.

(இ - ள்.) சேயோன் - (அபிமந்யுவென்ற) குமாரனுடைய, விழவு - கலியாணம், விழைவொடு - (யாவரும்) விரும்புமவண்ணம், சிறந்த பின்னர் - சிறக்கநடந்தபிறகு,— மாயோன்உம் - ஸ்ரீகிருஷ்ணனும், அ குருமைந்தரும் - அந்தக் குருகுலகுமாரரான பாண்டவர்களும், மன்னர்யார்உம் - (பின்னும் தமராகவும் நண்பராகவுமுள்ள) அரசர்யாவரும், போய் (அவ்விராடநகரத்தை)விட்டுச்சென்று, ஓதை வீதி - பலவகை யோசைகளையுடைய வீதியைக் கொண்ட, உபலாவி புகுந்து - உபப்லாவியத்திற்புகுந்து, தங்கள் ஆசோதனைத்துக்கு - தாம்செய்யக்கருதிய பெரும்போர்க்கு, உறும் - வேண்டிய, நீர்மைகள் - தன்மைகளைக்குறித்து, ஆயல் உற்றார் - ஆராய்தற்குப் பொருந்தினர்கள்.

சேயோன் - முருகக்கடவுள்: இச்சொல் - குமாரன்என்பதுபோல, மைத்தனென்ற பொருளைக் காட்டிற்று. உபலாவி - உபப்லாவ்யம் என்றவடசொல்லின்திரிபு: இது, விராடநகரத்துக்கு மிக அருகிலுள்ளதாகும். மற்று - அசை. மாயாக்குருமைந்தரும்என்றும், போயோதைவீரியமாடும் என்றும் பிரதிபேதம் ()

வெளிப்பாட்டுச் சருக்கம் முற்றிற்று.

விராடபருவம் முற்றுப்பெற்றது.

அபிதான சூசிகை யகராதி.

அசுவத்தாமன் - துரோணன் குமாரன், சிரை 82, 89, 95

அருச்சுனன் - கிருஷ்ணன் தங்கை புதல்வன், வெளி-17: காமன்றிரு மைத்துனன், 28

அருச்சுனன் - சுரபதிமகன், நாடு-3: உருப்பசிசாபத்தாற் பேடிவடிவந் தரித்தான், ஆண்மைக்கு இமையவரெவரினும் பெரியோன், 17: அம்பிகாபதிபாற் றவத்தால் பல சுதகணபெற்றவன்: அமரரை அவுணருக்காக வென்றவன்: பொற்றருவலர்வேய்ந்தவன், சிரை-50: கொடியின் மீது அனுமனெழுப்பெற்றவன்: 58: சுவேதப்பரிமா இவலுக்கு, 65,80,101: துரோணனே யாசிரியனாகப் பெற்றவன், 88: குருவைத் தப்பாக் குருகுலகேகா, 91: கவுரிபங்காளனைக் கண்ணுறக்கண்டவன், 99: கனற்கடவுடந்தேரோன், 101: திங்களழுதுகமவுலியிற் சிவனைப் புடைத்த வில்லான், 102: விசயனென்ற பெயர் மிக்கசெயத்தை யுடையவனென்றும் தன்னை வெல்பவரை யில்லாதவனென்றும் பொருள்படும்: இது, அருச்சுனன் பெயர்களில் ஒன்று, நாடு 22, சிரை-45: கிரீடியென்று, ஒருபெயர், சிரை - 43: நரநாமன், 60: இவன் வேறுநாமங்கள்-தனஞ்சயன், பற்குனன், சிரை - 85: தன்னை நிகர்கிற்பவரில்லாத் தனுவல்லோன், வெளிப்-4

உத்தரன்-விராடன் குமரன், சிரை-25: சுதேட்டிணை பிள்ளை, 33: இராகவன் றிருக்குலத்திலொருன், 35

உத்தரை-விராடன் புத்திரி, நாடு-20, சிரை 102

உதிட்டிரன்=யுதிஷ்டிரன்: இது, தருமன் பெயர்: நாடு - 12, சிரை-87: மற்றைவிவரங்களைத் தருமனைப் பார்க்க.

உபலாவி-உபப்லாவ்யம்; விராடன் பாண்டவர்பொருட்டுக் கொடுத்த தம் அவனூருக்கு அருகே இருப்பதுமான நகரம், வெளிப்-30

கிருஷ்ணன், வெளிப்-17

கங்கன்-அஜ்ஞாதவாசகாலத்தில் தாபதவடிவுகொண்டபோது தருமன் புனைந்துகொண்ட பெயர், நாடு-11, சிரை-129

கரிணன்-இரவிமைந்தன், சிரை-7, 82: சூரன்மாமகன்: சூரனிற்சூரன்-53: கற்பகநிகர் கொடையான், 75: அங்கர்கோன்-80

காளி - விராடநகரத்திலுறைபவள், எழுவகைத்தாயரிலொருத்தி, சாமள வடிவினள், சங்கு தண்டு கையிற்றரிப்பாள், யாமளமறையாலியாவராலும் பணியப்படுபவள், முத்தலை வடிவேலுடையாள்: நாடு 9, 10

கிருபன், சிரை-86,97

கீசகர் - நூற்றிருவருநால்வர்: சுதேட்டிணை துணைவர், கீசக-1: 102

கீசகன்-விராடன் சேனைத்தலைவன், உபகீசகர் நூற்றுமூவர்க்கு அண்ணன், மிக்க அழகியான், கீசக-1: சுதேட்டிணைதம்பி, 2: அறம்பாவுமென்றெண்ணலான், 11: குருட்டியல் மதியினன், 60: மண்ணுடைக் காவலன் மைத்துனன், 72: சண்டவேகக்களிறன்ன தன்மையான், 90: பழுதுடைப்பெரும்பாதகன், 95.

சகுனி-சூதாடிப் பாண்டவர் காட்டிற் செல்லக் காரணமானவன், நாடு - 32: சுபலன் புதல்வன், கீசக-50

சயத்திரதன்-சிந்துராசன், சிரை-98

சல்லியன், வெளிப்-25, 27

சாதேவன்=சகதேவன்: நகுலன் தம்பி, நாடு - 27: ஆயுண்மறைவானவர் மகன், வெளிப்-3

சிவேதன், வெளிப்-17, 19: விராடன் புதல்வன், 20

சுதேட்டிணை-சுதேஷ்ணை: விராடன் மனைவி, நாடு-35: கீசகர் இவள் துணைவர், கீசக-1: நரைத்தவோதியள், சிரை-29

சுயோதனன்-அரவவெங் கொடியோன், நாடு-2: மந்தாகினீமைந்தன் மகன்மைந்தன், சிரை-5: தக்கோர்

தகுஞ்சொற்கேளாதவன், 8: மண் கொளாவிறல்மன், 35: நந்தியாவ ட்ட நாண்மலர்மாலை சூடினோன், 47. இவனுக்கு இராசராசனென்ற ஒருபெயர், 69: கங்கைகரைநாடன், 106

தந்திரிபாலன் - அஜ்ஞாதவாசஞ்செய்ய விராடனிடம் பசுமேய்ப்பவர் தலைவனுய்ச சகதேவன் அமர்ந்த போது பூண்ட பெயர், நாடு - 27

தருமன் - அறக்கடவுளளித்த தோன்றல், நாடு - 3: அருளுக்கிருப்பிடமான சிந்தையான், 5: பாண்டவர் தலைவன்: தராதலமுழுதுமுடைய சோமகன், 8: யுதிட்டிரன் என்பது இவனியற்பெயர், வேள்வி கேள்வியில் மிக்கான், 12: காலமுந் தேசமு முணர்வான், கீசக - 51: பொறையுள்ளான், 134

தாமக்கிரந்தி - நகுலன் அஜ்ஞாதவாசகாலத்தில் குதிரைகட்கு அதிபதியாய் விராடனிடம் அமர்ந்த போது பூண்ட பெயர், நாடு - 26

தீரோபதி - துருபதனளித்தவள், நாடு - 2: வண்ணியிற்பிறந்த மாமயில், 7: மகவாரழலினூடுயிர்த்தவள், 29: ஐவர்தேவி, விரதசாரிணி யென்று பெயர் பூண்டு விராடநகரில் அரண்மனையந்தப்புரத்து வண்ணமகளாயிருந்தாள், கீசக - 2: அழிவில்கற்பினுள், 21

துருபதன் - திரௌபதியின் தந்தை, நாடு - 2: பாஞ்சாலன், நிரை - 139

துரோணன், நிரை - 47: மறைத்தவசன், 75: முழுதுணர்முனி - 85: அருச்சுனனுதியரைப் பயிற்றிய ஆசிரியன், 88: 93: அதிரதரில் நிகரற்றவன், 92

நகுலன், நாடு - 21: விசயற்கினிய யோன், 22: மாவலான், நிரை - 20: ஆயுண்மறைவானவர் மகன், வெளிப் - 3

நாராயணி - திரௌபதியின் முன்னையபிறவிப்பெயர், கீசக 64

பலாயனன் - வீமன் விராடராசனிடஞ் சமையற்காரனுயமர்கையிற் பூண்ட பெயர், நாடு - 15, மற்-8

பாண்டவர் ஐவர்: அறிவும்ஒடுங்கிய புலன்களுமுடையோர். நாடு - 2: மதிமரபோர், 37:குருவமிசத்தவர், 38: குந்தியின்புதல்வர், கீசக-47

பிருகந்நளை, நிரை-121: 138: அஜ்ஞாதவாசகாலத்திலே அருச்சுனன் பேடிவடிவுகொண்டு உத்தரையைப்பயிற்றவிக்கையிற் கொண்ட பெயர், நாடு-19

மச்சநாடு - விராடர்கோனுடையது, நாடு-4: பல்குலமாக்கள் வாழ்வுகூர்

விதுரன், நிரை - 52, 98 [வது, 7

விரதசாரிணி - அஜ்ஞாதவாசஞ்செய்கையில் விராடன் மனைவியிடம் திரௌபதி வண்ணமகளாயிருந்த போது பூண்ட பெயர் நாடு - 32, கீசக - 2

விராடன்-மச்சநாட்டரசன், நாடு-4: வீரரில்வீரன், மற் - 8: வீரியன், நிரை-18: சூரியவமிசத்தான், கீசக-45: அக்குரோணிதானையுளான், நிரை-10: இவனுக்கு அடையாளப்பூமாலை செங்கழுநீர், 13: திரிகர்த்தராசனுல் தேரிற்பிணிகப்பட்டவன், 15: அயோத்திமன், 22

விடுமன்-மத்தாகினீமைத்தன், நிரை-5,52:பாண்டவர்க்குமுந்தை-85,98, 105:செஞ்சினிலழுக்கிலாதான் 106

வீமன்-பவனகுமரன், நாடு-18, மற்-12: தண்டுபுயவலியிற் சிறந்தோன், நாடு-14: சமையலிலும் மற்போரிலும் வல்லவன், 15: உம்பராரமுதமுண்டவுரவினன், மற்-9: கதையுடைக்காளை, 10: இடும்பனைக்கொன்றவன், 12: திகத்தபூபனினின்று விராடனை விடுவித்தான், நிரை-19: துரியோதனனைக் கொல்வதாகச்சபதஞ்செய்துள்ளான், 72, 73. அனேகமாயிரம்யானையின் மிடலுடையான், கீசக-84: கதைவலான், 96

விராடபருவத்தின்

அருஞ்சொற்பதவகராதி முதலியன.

அச்குரோணி, சிரை-8
அசனி-இடி, மற்-5
அசுவத்தாமன் கர்ணனை யேசுதல், சிரை-83, 84
அசைவு-வருத்தம், சிரை-110
அடல்-வலிமை, நாடு-1
அடவி-காடு, சிரை-87
அடித்தல்-கவர்தல், சிரை-8
அடிததலம் பிடரடித்திட வோடல், சிரை-41
அடுதொழில் - இரட்டுற மொழிதல், கீசக-63
அடை-இலை, கீசக-24
அணங்கு-தெய்வப்பெண், கீசக-65
அணிவிரல் பவித்திரவிரல், சிரை-92
அதகம், மற்-10
அதகர்-சுவாமி, சிரை-102
அதிரதர், சிரை-92
அந்தப்புரம், கீசக-2
அமபரத்தவா, கீசக-2
அம்புயசரிறடி, கீசக-8
அமளி-படுக்கை, கீசக-24
அரங்கு-நடனசாலை, நாடு-17
அரம்-ஓர்படைக்கலம், சிரை-31
அரமங்கை, கீசக-4
அரலம்-பாம்பு, நாடு-2
அரா-பாம்பு, கீசக-4
அரிடம்=அரிஷ்டம், சிரை-44
அரிபடுகவசம்-தொளைக்கப்பட்ட கவசய, சிரை-103
அருக்கன், கீசக-21 [ளி-2
அருகலுருக்கருகும் அருணவுரு,வெ
அருச்சுணன் குருவைப் புகழ்ந்த உரை, சிரை-88
அருசுனன் தேரின்மீது இருத்தல் × கிரியின்மீதுமரதகக்கிரிகிளர்தல், சிரை-59
அருணன் - சூரியன் தேர்ப்பாகன், சிரை-65
அருந்ததி-விருப்பம், கீசக-51
அருந்தங, கற்பிற்கு எடுத்துக் காட்டாகச் சிறந்தவள்: கீசக-15

அருந்தி-உண்டு, நாடு-2
அல்-இரவு, மற்-1
அலங்கல்-மாலை, சிரை-34
அவண், நாடு 4
அழலனைய கற்பு, கீசக 53
அளை-சேறு, சிரை 73
அளைதல்-துளைதல், கீசக-16
அறல்-நீர், நாடு-1
அறன்காளையுறைநாட்டுச்சு அடையாளம், சிரை-5
அறுசுவை, நாடு-15
அறுவகைப்படை, வெளிப்-14
அன்புசூர்தல்-காதல்மிகுதல், கீசக-42
ஆகுலம்-துன்பம், கீசக-15, 47
ஆதபன்-சூரியன், கீசக-20
ஆதரம்-காதல், காமவிடாய், கீசக-8, 13
ஆநிதநியர் பன்னிருவர், கீசக 45
ஆயு-வயசு, நாடு-23
ஆர்வம்-ஆசை, காதல், கீசக-42, 66
ஆரம்-சந்தனம்,முத்தமாலை, சிரை-29
இங்கிதம்-கவனம், கீசக 64
இடியேறுறுநாகம் × கேகயச் சாயலாள் கிளந்தவாசகங் கேட்ட சுதேட்டிணை, கீசக-11
இந்தனம்-விறகு, கீசக-35
இந்துறுதல், நாடு-34
இமிர்தல்-ஒலித்தல், நாடு-24
இயல்-சாகித்தியம், நாடு-19
இரதம்-இனிமை, கீசக-10
இரவிசண்டமதி × வீடுமன் சொற் கேட்ட துரியோதனன், சிரை-107
இரவியெதிர் திமிரம் × அருச்சுனன் முன் பகைவர், சிரை-138
இரவியேகத திங்கள் அரசுசெய்தல் × பாண்டவர் காணேகத் துரியோதனாதியர் அரசுபுரிதல்: சிரை-73
இருகை சென்னிமேலிருத்தல் தன்னிடத்து ஒதுங்கிவாழலா மென்பது குறிப்பிக்கும், நாடு-16

இருள்வலி, கீசக-105
இலக்கு, நிரை-99
இவுளி-குதிரை, நிரை-80
இன்னல்-துன்பம், கீசக-44
இணைவு-வருத்தம், கீசக-40
ஈடு-வலிமை, நிரை-96
ஈமவல்லெரி, கீசக-24
ஈன்றபொழுதின் சான்றேரெனைக் கேட்ட தாய் பெரிதுவக்கும், நிரை-135
உகைத்து-எழும்பி, நிரை-41
உகைதருதல்-மேலெழுதல், நிரை-61
உச்சமாதல், நிரை-97
உடன்று-சினந்து, நிரை-78
உண்டி-உணவு, நாடு-14
உண்மை-பிரதியட்சம், நிரை-61
உணங்குதல்-வாடுதல், கீசக-65
உத்தரம்-விடை, கீசக - 6: வடக்கு, நிரை-34
உத்தரித்தல்-எதிர்நிற்றல், நிரை-136
உதிதோய்கைமுனி, மற்-1
உதயம்-சூரியனுதியர் உதிக்கும்மலை, மற்-10
உதவியொன்றுசெய்யினும் பல்பிழை பொறுப்பர் பெரியோர், வெளிப்-6
உயிர்த்தல்-வெளிப்படுதல், நாடு-29
உயிரினையெடுப்பதென்று, கீசக-69
உரககேது, நிரை-119
உரகர்-நாகர், நிரை-62
உரம்-மார்பு, வலிமை, மற்-6
உரவு, நிரை-66
உரு-இடி, நிரை-10
உருப்பசி, நாடு-17
உரும்-இடி, மற்-10
உளவுகோல்-குதிரையைத் தூண்டுங் கோல், நிரை-65
உன்னயம்-அசுவசாஸ்திரங்களி லொன்று, நாடு-21 (13-ஆம்போர்ச்சருக்கத்து 105-ஆங் கவியிலுங்காண்க.)
ஊதை-காற்று, மற்-12, நிரை-17
ஊரு-தொடை, மற்-12
எட்டுத்தந்தி, மற்-2
எண்ணியகருமம் யாவரும் எய்தார், கீசக-83
எரி-அக்கினி, நாடு-36 [43
எரிப்புறத்தரு வெண்ணிமரம், நிரை-

எல்லை, கீசக-62
எலுவை-தோழி, நாடு-33
எழில்-அழகு, கீசக-4
எழுவகைத்தாயர், நாடு 9
எற்றி-மோதி, மற்-11
என்று-சூரியன், கீசக-23
ஏசு-குற்றம், நாடு-33
எழுயர்மாடமூதூர், நிரை-118
ஏழெழுபிறப்பு, நாடு 13
ஐந்துவகைக்கறி, நாடு-15
ஐம்பெருஞ்சுற்றம், நாடு 16 [52
ஐயனல் அங்கீகாரக்குறிப்பு, கீசக-
ஒப்பனை-அலங்காரம், நிரை-31
ஒருகுத்தோருருமு, கீசக-75
ஒருவுதல்-நீங்குதல், நிரை-80
ஒளிநிறங்களின் வேறுபாடு, நாடு-23
ஒற்றுள், நிரை-3
ஒற்றைபிருசங்கம், நிரை 5
ஒங்கல்-மலை, மற்-10
ஓதை-ஓசை, நிரை-17
ஓவியம், கீசக-6
கிருஷ்ணனதுபாதபங்கயமலர் கமழுமிடம், நாடு-1
கச்சை=கக்ஷ்யா: அரையாடைமீது கட்டுவது: (கச்சுஎன்றதன் இரண்டாம் வேற்றுமையுமாம்.) மற்-9
கஞ்சமாலை அந்தணர்க்கு உரியது, நிரை-93
கடி-நறுமணம், நாடு-7
கடுமை-விரைவு, கீசக-34
கண்படை - துயில், நிரை-112
கணித்தல்-நினைத்தல், நிரை-42
கதலி-வாழை, கீசக-24 [20
கதுமென-விரைவுக்குறிப்பு, நிரை -
கந்தம்-மணம், நாடு-23
கந்தருவர், நாடு, 34
கந்தருவர்காப்பது, கீசக-58
கம்பி-கடிவாளம், நாடு-21
கயவர்தன்மை, வெளிப் 6
கரடம், வெளிப்-26
கரந்தை - நிரைமீட்பார் சூடுவது, நிரை-13
கரம்-கை, மற்-12
காராம்-முதலை, நாடு 8
கல்கெழுகுறும்பு - பாலை: (குறும்பு - காடு), நாடு-7

கலகன், கீசக-23
கலன்-ஆபரணம், நாடு-20
கலுழன்முன்பட்ட பாம்பு × வீமன்மு
ன் அகப்பட்ட கீசகன், கீசக-52
கலை-சாஸ்திரம், நாடு-20 [நிரை-68
கவர்ற்றுதல் - கவலைபடக் கூறுதல்,
கவறு, நிரை 68
கவிகை-குடை, நாடு-18
கவின்-அழகு, கீசக-3
களப்பலி, நிரை-73
கற்பகக்கா, கீசக-2
கறங்கு-காற்றுழி, கீசக-73
கன்னம் காது, கீசக 44
கன்னல்-கரும்பு, கீசக-1
கன்னி-விந்தைமகள், வெளிப்-29
கனதனம், கீசக-40
கனிட்டன்-தம்பி, கீசக 35
கனிவு-மனக்கசிவு, நாடு-6
கா-சோலை, நாடு-8
காங்கேயன், நிரை-124 [55
காந்தக்கல் மதிகண்டு உருகும், கீசக-
காந்துதல்-பற்றியெரிதல், கீசக-25
காயம்-இலக்கு (feat), மற்-12
கார்முகம்-வில், நிரை-70
கால்-வாயுதேவன், வெளிப்-5
காவியங்கண், கீசக-13
காளிந்தி-யமுனை, நாடு 1
காளியன்-க்ருஷ்ணனை லடக்கப்பட்ட
ஒரு நாகம், நாடு 1
கிங்கரன்-பணியாளன், கீசக-32
கிஞ்சுகம்-பலாசமலர்: ஆகுபெயரால்,
வாய் என்ற பொருளது, கீசக-69
கிரியின்மன்னும் விளக்கு, கீசக 105
கிள்ளை, கீசக 69
கிளத்தல்-சொல்லுதல், கீசக-11
கீசகன்மீதுவீசிய சாந்து முதலியன
× கனன்மிசைக் காட்டும் நெய்:
கீசக-25
குதிரைக்கதி: நாடு-23
குரம்-குளம்பு, 78
குரு சேனை - குருவமிசத்தவனை
தரியோதனனதுசேனை, நிரை-12
குழமகன், நிரை-136
குழை-காது, காதணி, தளிர், நாடு-26
குளிரி - குளிர்ச்சி; கல்லாரம், பீலிக்
குஞ்சம் என்பாருமுளர், கீசக-24
குறித்தல்-ஊதுதல், நிரை-63
குன்றவில்லி, நிரை-131
குன்றெறிந்தவன், நிரை-131
கூற்றினர், கீசக-82
கேகயம்-மயில், கீசக-11
கேரளர் சாபக்கொடியுடையார், வெ
ளிப்-21
கோக்கின்மேற் குரல்கூவும் பொழி
ல், கீசக-59
கொகுகர்கோன், நிரை-104
கொட்பு - சுழற்சி, மாறுபாடுமாம்;
நிரை-12
கொடுவரி-புலி, நிரை 77
கொத்து-திரட்சி, நிரை 31
கொல்லத்தகாதவர், நிரை-74
கொழுதுதல் - தைத்தூடுருவுதல்,
நிரை 85
கொற்றம்-வெற்றி, நாடு-22
கோகனநாகம்-கட்செவியாண பாம்பு,
நிரை-101
கோகு-புயம், நிரை-69
கோடரம்-பொத்து, நாடு-10 [118
கோடித்தல்-அலங்கரித்தல், நிரை-
கோடு-கிளை, கீசக-100
கோதையர்-மகளிர், நிரை-33
கோல்-அம்பு, 80
கோலம்-வராகம், நிரை 1: அழகு,
நிரை-14
கோவலான்-பசுக்களைக் காப்பவன்,
நிரை-20
கோள்-வரலாறு, நிரை-2: எண்ணம்,
நிரை-7
கோறல்-கொல்லுதல், நிரை-74
சகுனை-ஸகுனியா: கணக்கு, நாடு-1
சண்டமாருதம், மற் 2
சதி-வஞ்சனை, நிரை-10
சந்தம்-அழகு, மற்-5
சந்திரமௌலிதந்தசாயகம்-பாசுபதம்,
நிரை-96
சமரம்-போர், மற்-5
சமீரணன்-வாயுதேவன், கீசக-61
சரதம்-நிச்சயம், நிரை-89: ஸ்ரஸ
மென்பதன் விகாரமென்று கொ
ண்டு, விளையாட்டு எனினுமாம்,
கீசக-10
சராசனம்-வில், நாடு 1

சரித்திரம், கீசக 57
சாபலம் - நிலைத்தில்லாத் தன்மை, நிரை-95
சாமளம்-கருநிறம், நாடு-9
சாய்த்து-வணக்கி, நாடு-18
சாயல்-தோற்றம், கீசக-10: நிறம், கீசக-21
சாரி, மற்-6
சிக்கென-அழுத்தமாக, 131
சிங்கசாபம்-சிங்கக்குட்டி, வெளிப்-20
சிந்தனை-கவலை, வெளிப்-8
சிறை-மனம், கீசக-3
சிலம்பு-மலை, மற்-11
சிலீமுகம்-அம்பு, நிரை-38
சிலை-வில், நாடு-17
சிவப்பு-வெகுளி, செந்நிறம், கீசக-46
சினம் பாவம், நிரை-128
சீர-நிலைமை, கீசக-51
சூதன், வெளி-15
சுதை, கீசக-94
சுரதம்—ஸுரதம், புணர்ச்சி: கீசக-10
சுரபதி-இந்திரன், நாடு-3
சுரபி-பசு, நிரை-27
சுரர்-தேவர், நிரை-1
சுரர்நான் ஓரியாண்டு, நிரை-3
சுருதி-வேதம், நாடு 2
சுரேசர், கீசக-7
சுவாலைசெய்தல், கீசக-86
சுவேதம்-வெண்மை, நிரை-80
சுளித்தல்-வெகுளல், நிரை-49
சூரியன் தேரங்கமோ ரேழுடையான், கரங்களாயிரமுடையான், கீசக-22: உருவையொண்முடைத் தேரவ்ண், கீசக 32: பச்சைவாசியினன், நிரை-65: மேருவை வலம்வருகின்றான், கீசக-46
சூரியாத்தமனம், நிரை-21
சூல்-கரு, நிரை-57
சூழல்-நாடு, நிரை-7
சூறை, கீசக-77
சூறைமாருதம்-சுழல்காற்று, கீசக-32
செஞ்சோறு, வெளிப்-27
செஞ்சோற்றுக்கடன், நிரை-90
செம்மல்-தலைவன், நாடு-28, கீசக-74
செரு-போர், நிரை-10
செருக்கு-வளம், நாடு-38
செருமுதல்-நெருங்குதல், நிரை 62
செல்வம்-பணம், போவோம், நாடு-6
செவ்வி-அழகு, கீசக 63
செறுதல், மற்-12
சேயோளி, நாடு-18
சேயோன்-குமாரன், வெளிப்-30 [24
சைத்தியோபசாரப் படுக்கை, கீசக-
சொல்-பாலை, மற்-1
சொற்படிவெல்வது விதிக்கும் கூடாது, நிரை 84
சோகம்-துயரம், கீசக-11
சோரர்கருவைத் தங்கருவென்றெண்ணும் அறிவிலார் × அருச்சுனன் வெற்றியை உத்தரன் வெற்றியாகக் கருதும் விராடன், நிரை-117
சோரன் - வஞ்சக்குணமுடையவன், கீசக-7, 104
சோரி-இரத்தம், நிரை-42
ஞெண்டு, நிரை-11
தகவு-திறமை, நாடு-20: சிறப்பு, 31: நற்குணம், கீசக-7
தகை-பெருமை, நாடு 28
தகைமை-பாராட்டு, நாடு-13
தடம்-நீர்நிலை, நாடு-8
தண்டு-கதாயுதம், நாடு-14: சேனை, நிரை-54
தத்தி-தாவி, மற் 6
தந்தி-யானை, நிரை-51
தபோதனத்தவர், நாடு 6
தம்முன்-அண்ணன், நாடு-15
தரம்-மேன்மை, நிரை-31
தருக்கு-மனமேம்பாடு, நாடு-21
தருக்குதல் - செருக்குக்கொள்ளுதல், கீசக-21
தலைமகன்-சிறந்தகுணமுள்ள மகன், மேலோன், கீசக-55
தவர்-வில், நிரை-100
தவளமாடம், கீசக-64
தற்கு-செருக்கு, கீசக-103
தனு-வில், நாடு-14
தாக்கிய-வருத்திய, கீசக-26
தாது-பூந்துகள், நிரை-4 [11
தாபதவடிவு-சந்நியாசிவேஷம், நாடு-
தாமம்-ஒளி, பூமாலை, கீசக-25: ஒழுகு, நிரை-14
தாமரைவனாயம், கீசக-24

தாரணி-பூமி, கீசக-4
தாழ்தல்-இழிதல், நிரை-7: தொங்குதல், நிரை-64
தாறு-குதிரைமுதலியவற்றைச் செல்லுமாறு முடுக்குங் கோல், நிரை-94
திகிரி-சக்கரம், நிரை-73
திண்டிறல், நாடு-14
திருத்தணை, மற்-3
தினகரன், நாடு-6
தீரம்-தைரியம், கீசக-80
துடைப்பரும்பவணம், கீசக-99 [35
துண்ணெனல்-அச்சக்குறிப்பு, நாடு-
துணைவர்-தம்பிமார், நாடு-3
துணைவி-உடன்பிறந்தாள், கீசக-1
துறைவு நெருக்கம், மற்-10
துரங்கம்-குதிரை, நாடு-25
துரிசு-குற்றம், கீசக-50
துரியோதனனைவிட்டுக் கண்ணன்மேற் செல்லும் அருச்சுனன் × களிற்றைவிட்டு அரிமேலோடும் யாளி, நிரை-77
துரோணன் விசயனேடு கற்பதற்குன்னிலுன், நிரை 93
துன்னலன்-பகைவன், நிரை-21
தூசி சேனை, நிரை-11
தூதுளங்கனிவாய், கீசக-8
தெரிவை, கீசக 3
தெருமரல்-மனச்சுழற்சி, கீசக-47
தெவ்வர்-பகைவர், நிரை-9
தென்புலம், வெளிப்-12
தென்னிடுதல், நிரை-98
தேவி-அரசி, கீசக-38
தொடை-தொடுப்பு, நிரை-48
தொடையல்-மாலை, கீசக-23
தொய்யில், கீசக-89
தொறு-நிரை, நிரை-7
தோடு-பூவிதழ், நிரை-4 [46
தோன்றல் புதல்வன், நாடு-3, கீசக-
நகம்-மலை, நிரை-17 [நாடு-19
நடனம் நாதமுழுமியலும் மேதகுவது, நடு, நிரை-115
நயனநீர், கீசக-11
நரர்-மனிதர், நிரை-1
நலம்-அழகியகோலம், நாடு-36
நவ்வியர், கீசக-63
நவிறருதல்-சொல்லுதல், நாடு-19
நன்மை-சுகிருதம், நாடு-13
நாசகாலம்வரும்போ தாண்மையும் ஞானமுங்கெடும், கீசக-14
நாதம்-சங்கீதம், நாடு-19
நித்திலம்-முத்து, நிரை-11
நிதி-செல்வம், நாடு-4
நிரக்கும்-பொருந்திய, நிரை-77
நிருத்தம், நாடு-17
நிருமித்தல்-நியமித்தல், நிரை-10
நிரை-பசுக்கூட்டம், நிரை-2
நீராசனமெடுத்தல், நிரை-131
நூபுரம்-ஓர்காலணி, கீசக-2
நேன்னல்-நேற்று, நிரை-106
நேமியொன்றுடையதேர் சூரியனது, நிரை-34 (நேமி சக்கரம், நாடு 1)
நேயமோடு-அன்போடு, கீசக-52
நேர்படுதல்-எதிராகநிற்றல், கீசக-52
நோதகுமலினள் சாதாரணமான மானிடவள், நாடு 30
நோக்குதல்-தென்படுதல், கீசக-26
பங்கயம்-தாமரை, நாடு-1
பச்சைவாசி, நிரை-65 [57
பசுக்களின் தன்மை நவிற்சி, நிரை-
பஞ்சபாதகம், நிரை-88
படர்-துன்பம், கீசக-34
படி-பூமி, கீசக-13
பண்செய்தல் - அலங்கரித்துச் சித்தமாக்குதல், நிரை-10
பண்ணுக்குருகிப்பறையாலகப்பட்ட மான், வெளிப்-24
பண்ணை-வயல், நாடு-7
பணி-சாபம், நாடு-17
பணை-பருமன், மற் 13
பத்தரையொடுரைகொள்பல்படை, வெளிப்-14
பதங்கம்-விட்டில், நிரை-138
பதயுகம்-தாளிணை, மற் 10
பதாலகத்தாசு, நிரை-136
பதுமம், நாடு-30
பதி-ஊர், நாடு-5 [நாடு-6
பயிற்றுதல் - பலமுறைசொல்லுதல், பரகாய சரிதர், நிரை-141
பரவை-கடல், நிரை-107
பராகம்-தூசி, நிரை-141
பராரை, மற்-9 [வெளிப்-23
பரிதாபம் - வருத்தம், கீசக - 54,

பரிதி-சூரியன், நாடு-11
பரிவு-அன்பு, நாடு 2: நிரை-28: தன் பம், கீசக-14
பல்லியசாலம் - காச்சிபக் கூட்டம், நிரை-11
பலம்-பழம், நாடு-2
பலவகையொலியால் பொறிமயக்கு றீதல், நிரை 63
பலவகையோசைகேட்டல், கீசக-88
பலியிடுதல் - உயிரைக்கொள்ளுதல், கீசக-106
பவணன்-காற்று, நாடு-14
பவுரி, நிரை-99
பனி புலைத்தலிற் பரிதி தண்ணுருவ மொடுங்குதல் × சாபத்தால்வந்த பேட்டுருவால் அருச்சுணன் தண் ணுரு ஒழிந்திருத்தல், நிரை-60
பாக்கியம், கீசக-26
பாலை-வக்கபாலை நிரை-104
பாவகி-தோழி, நாடு-20
பாங்கு - இனிமை, நாடு-28: பக்கம், நாடு 5
பாசகாரிகள், கீசக 14
பாசடை, நாடு 2
பாணி-கை, மற்-10
பாதமில்வண்ணிறற்பாகன், கீசக-20
பாதவம் மரம், நாடு-9
பாந்தள்-பாம்பு, கீசக-52
பார்க்க-எண்ணை, கீசக-106
பாரியது-சிறப்புற்றது, (பருமை என் ற பண்பினின்று தோன்றியசொல் இது.) கீசக-36
பாவனை-நடிப்பு, நிரை-61
பிணங்கலணைந்ததன்ன பேரொழிற் பெற்றியான், கீசக 65
பிரமமூர்த்தி, நிரை-122
பிறர்தாரமானவர்முகத்தை வணையி லாதவர் மானினும் பாரார், கீசக-7
புசர்-புள்ளி, கீசக 2
புரசை-கழுத்திடுகயிறு, கீசக-50
புரந்தரன், நிரை-130
புரவி-குதிரை, நாடு 16: புரவிபேதம், நாடு-26
புரிசை-மதில், நாடு 8
புளகு, நிரை-117
புறந்தருதல், நிரை-70
புறவு-கொல்லை, நாடு-7
பூசல்-போர், நிரை-112
பூபதி-அரசன், நாடு-27
பூபாலன்-அரசன், நிரை-12
பூரணகும்பம், நிரை-118
பூரியர்-கீழ்மக்கள், கீசக-42
பூழி-புழுதி, கீசக-40
பெட்பேறுதல் - போர்விருப்பத்தால் நான் முன்னேயென்று புறப்படு தல், (பெட்பு-விருப்பம்,) நிரை-12
பெற்றம்-காற்று, நிரை-42
பேடி, நாடு-17
பேதுறுமை-கலங்கிய, கீசக-9
பொங்கர்-சோலை, கீசக-64
பொதும்பர்-மரப்பொந்து, நிரை-42
பொருந்தார்-பகைவர், கீசக-49
பொருநன்-வீரன், கீசக-104
பொறுப்பதேபெருமை, செறுப்பது பெருமையன்று, நிரை-134
பொறை ஆடவர்க்குப்பூண், கீசக 49
பொறை யுடையவர்க்கலது புகழ் புனைதலுண்டோ, வெளிப்-10
"பொறையெனப்படுவது" (கீசக 49) என்ற பாடலின் கருத்துக்கொண் ட ஸ்லோகம் ஸ்ரீமஹாபாலவதத்து ருமாறு:—அக்ஷதா ஹ்ரீமஷணா பும்ஸாம் - ஸ்ரீமோலஜ்ஜேஜவயோஷி தாம் | பராக்ரமஸ்பரிஹாஸேவ - வை யாத்யம்ஸ்ரதேஷ்விவ ‖ 2-44 ‖
பொன்றுதல் - அழிதல், கீசக-39
போதகம்-யானைக்கன்று, நாடு-16
போதல்போதும், நிரை-71
போனகம்-உணவு, நிரை-50
மகபதி, நிரை-62
மகவான்வாளி, நிரை-100
மகளிர்க்கு நாணம்பூண்: என்றாலும் அமளியில் நாண நிகழ்வுறு நிகழ்ச் சிப் பெரும் பூண், கீசக-49
மகுடபங்கம், நிரை-104
மங்குல்-மேகம், கீசக-68
மடல்-இதழ், கீசக-4
மடையர்-சமையல்செய்வோர், மற் 8
மடையன், நாடு-14
மண்டலநீலை, நிரை-67
மண்டலம்-பூமண்டலம், வட்டமாகச் செல்லுங்கதி, நாடு 14, 24

மத்தகம்-யானையின் சென்னியிற் குடம்போன்றிருக்கும்உறுப்பு, கீசக-50
மத்தர், நிரை-102
மத்திகை-மார்பிகா, குதிரைச்சம்மட்டி, நாடு-21
மதலை-புதல்வன், நாடு-17
மதனவேதம், கீசக-14
மதி-சந்திரன், நாடு - 25: குபேரன், நிரை-100
மதிசூழ்ந்த மீனினம் × தானியோதனனைச் சூழ்ந்த படை, நிரை-35
மந்தாகினீமைந்தன், நிரை-6
மந்துரை=மந்துரா: குதிரைச்சாலை, நாடு-23
மயற்கை-காமமோகம், கீசக-3
மயிர்கொய்தல், நிரை-102
மரபு-குலம், கீசக-22
மராமரம், கீசக-86
மருங்கு-இடை, மற்-12:
மருச்சகன்-அக்கினி, கீசக-51
மருத்து-காற்று, கீசக-51
மல்-ஆயுதமின்றி உடல்வலிமைகொண்டு செய்யும் போர், மற்-1
மலநெஞ்சுடைடப் பூசகர் பூசைகொளாத கடவுள், கீசக-71
மலரோடை × விராட மன்னன், நிரை-9
மற்போர், மற்-11
மறலிவாளி, நிரை-100
மறுகிடை-கலங்க, கீசக-40 [10
மறை-வேதம், நாடு-1: மந்திரம், நாடு-
மன்பதை-மனிதவர்க்கம், கீசக-43
மன்றல்-நறுமணம், கீசக-12: மணம், புணர்ச்சி, கீசக-23
மன்னர் எதிலர்தமரென இரண்டு பாரார், கீசக-41
மன்னர் நீத்தொழில் புரிஞரைத்தெண்டியாவிடின் நீதியுஞ் செல்வமும் நிலைபெறு, கீசக-41
மன்னவையிருந்து வழிபடுவோர் செய்ய வேண்டுவன, நிரை-123
மனத்தனி, நிரை-134
மா-பெரிய, நிரை-5: மிருகம்,நிரை-1
மாகுதப்பிய அரி × தப்பியோடுஞ் சுயோதனன்,(மாகு-வலை,)நிரை 69
மாதர் இந்திரற்கும் எளிமையி னொருப்படார், கீசக-58
மாதிரம்-திக்கு, நாடு-4
மாரசாயகம், கீசக-7
மால்பெறுஞ் சிறப்பு - அருச்சுனனுக்குப் பாகனுதல், நிரை-46
மாவிடுதொழில், நிரை-63
மிடறு-கழுத்து, மற்-12
மிண்டுவீர்-செருக்குவீர், நிரை-54
மிலேச்சுதல்-அணிதல், நிரை-8
மின்னுடன் மின்மினிவெகுளுதல் × கர்ணன் அருச்சுனனோடு இகலுதல், நிரை-76
மீளிமை, நிரை-86
முகம்-தோற்றம், நிரை-19
முகம்புகுதல், கீசக-70
முடி-சிகரம், நிரை-58
முடுகி, மற்-6
முத்தவாணகை, கீசக-8
முத்துப்பிறக்குமிடம் பலவற்றுள் சங்குஒன்று, நிரை-11
முந்தை-பாட்டன், நிரை-85
மும்மதம், நிரை-130
முயல் தன்னிலத்தில் தந்தியின் வலிது - "நெடும்புனலுள் வெல்லு முதலை" நிரை-51
முரல்கின்றிடு = நிகழ்காலஇடைநிலைக்குப் பின் துணைவினைவந்த இது அபூர்வமான பிரயோகம்:முரன்றிடு என்று சாதாரணமாகவரும்: கீசக-4
முருக்கு-பலாசமலர், கீசக-21
முழுப்பூண், கீசக-49
முளரி-தாமரை, கீசக-21 [21
முன்றில்-வீட்டின்முன்னிடம், நாடு-
முன்னி-தியானித்து, நாடு-15 [136
முனை-போர்,நிரை-5:துணிவு,நிரை-
மேருவை வாயுதேவன் கொடுமுடியொடித்து வென்றது, நிரை-66
மேவலர்-பகைவர், நிரை-42 [13
மைக்கொண்டல்-கார்மேகம், நிரை -
மையல்-காமமோகம், கீசக-5
மோகனக்கணை, நிரை-101
மோகினிக்குயில் -மோகினிப்பெண், கீசக-4 [நாடு-9
யாமளமறை-அதர்வணவேதப்பகுதி,

யாழுடைக்கந்தருவர், கீசக-103
யோனிகள்-பிறவிகள், வெளிப்-1
ரவிகுலதிலகன், சிலை-23
வஞ்சியர் - மகளிர், சிலை-37
வஞ்சினம், சிலை-72
வட்டம்-மண்டலம், மற்-4
வடம்-கயிறு, சிலை-18
வண்டடற்பாவை-விளையாடும் பிரதிமை, சிலை-102
வண்ணமகள், நாடு-29
வண்ணமாது கங்கனைத்றிக்குருதி தன்னை மாற்றுதல், சிலை-127
வதனம்-முகம், நாடு-17
வரம்-மேன்மை, கீசக-10
வரி-இரேகை, கீசக-5
வரிசை-சிறப்பு, நாடு-25
வரிசிறமா-புலி, சிலை-69
வருதினி-சேனை, கீசக-1
வல்-சூது, சிலை-105
வல்லி, கீசக-21
வழக்கு செல்லுகை; வழங்குவன்ற மூதனிலதிரிந்த தொழிற்பெயர், கீசக-3
வழங்குதல்-கொடுத்தல், நாடு-25
வழிபடுதெய்வம், கீசக-70
வளை-சங்கு, சிலை-11
வற்றியகோடையன்னவனப்பினுள், சிலை-126
வன்பு-வலிமை, மற்-11
வன்னி-அக்கினி, நாடு-7: ஒருமரம்,9
வனப்பு-அழகு, நாடு-33
வாசவன்-இந்திரன், நாடு-33: மேம்பட்டவன், மற்-1
வாசி-குதிரை, நாடு-23
வாஞ்சா-விருப்பம், வெளிப்-21
வாணுதல், நாடு-30
வாய்மை-உண்மைச்சொல், நாடு-13
வார்-நீர், சிலை-3: கச்சு, சிலை-70
வான்-மேன்மை, நாடு-22
விடந்திகழ்விழியினுள், கீசக-29
விடலை-இளங்குமரன், சிலை-32
விடவி-மரம், கீசக-34
விடைதத்தனன், கீசக-79
வித்தகன்=விதக்தன்: வல்லவன், நாடு-20
வித்தரம்=விஸ்தாரம்,பரப்பு, சிலை-31
விதி, வெளிப்-1
விதியை யாவர் விலக்கவல்லார்கள், கீசக-46
விம்பம்-வட்டம், மற்-9
விரகதாபங்கொண்டாரின் படுக்கைத் தன்மை, கீசக-24
விரகு-உபாயம், தந்திரம், நாடு-27
விரதம்-வ்ரதம், விரஸம்,ஒழிவு, நாடு-32
விரதர், கீசக-107
விரவுதல்-சேர்தல், நாடு-8
விராடமன்னன் × மலரோடை, சிலை-9
விரை-வாசனை, சிலை-9
விழவு-விவாகம், 30
விளக்கி-தேற்றி, சிலை-40
விளவு-விளைச்சல்,பயன்:நாடு-4, 13
வினயம்-வணக்கம், சிலை-7
வீ-மலர், சிலை-129
வீட்டிலுறை உத்தரகுமரன் × கூட்டிலுறை கலுழன்குஞ்சு, சிலை-27
வீமன் திரிகர்த்தன்தேரினை வேறொருதேரால் தகர்த்தல் × வாயுதேவன் நகத்தினை நகத்தினால் நருக்குதல், சிலை-17
வீரியம்-வலிமை, கீசக-36
வெட்சித்தாமம் சிலைகவரச்செல்வாரணிவது, சிலை-8
வெண்டிரை × சேனை, சிலை-61
வெந்தநெய்அரவமடங்க அதில் பால் துளிபெய்ய ஆரவாரித்தல் × ஆன்களை அடித்துக்கொண்டு போனவர் அடங்க, மீட்டவர் ஆரவாரித்தல், சிலை-56
வெரீஇயினள்-அஞ்சினள், நாடு-35
வெரு-அச்சம், சிலை-19
வெளிநின்றமாற்றம், வெளிப்-17
வேகவற்றியாநதி × மந்தாகடைப்புரவி: சிலை-68
வேணலம், கீசக-76
வேத்தவை-வேந்துஅவை:ராஜசபை, நாடு 26
வேதியர், நாடு-4
வேலை-கடல், நாடு-20
வேள்-மன்மதன், நாடு-21

பிழைத்திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
சு	11	முழுவது	முழுதும்
எ	17	காளிக்	காளி
கக	21	குறித்து	
,,	22	ச் சொல்லிக்கொண்டு	
,,	24	என்று-	என்றுகுறித்து-
கஅ	30	வங்ழகி-	வழங்கி-
உசு	22	(இ - ள்.)	(இ - ள்.) (இவ்வண்ணம்)
ஙரு	12	முடுதுதல்.	நெருங்குதல்.
ஙக	22	ஆததத்து	ஆதரத்து
சo	9	சுட்டி	சுட்டி-
ஙo	13	திளெபதி	திளெளபதி
ஙஎ	2	அழுது'	அழுது,
எக	27	போன்று	படி
அசு	18	அவள்,—	அவள்—,
121	7	திசையிற்	திறையிற்
127	12	ஶ ஸ்வஃ	ஶாஸ்வஃ
132	15	விழைவெஒடு	விழைவோடு

மற்றுங் காணப்படினும் திருத்திக்கொள்க.

இதனடியிற் குறித்துள்ள புத்தகங்கள் வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர், 17 - தெளிசிங்கப்பெருமாள்கோயில்தெரு, திருவல்லிக்கேணி என்ற விலாசத்திற் கிடைக்கும்:—

			ரூ.	அ.	பை
கம்பராமாயணம்:—					
பாலகாண்டம்	உரையுடன்	...	5	0	0
அயோத்தியாகாண்டம்	,,	...	5	0	0
ஆரணியகாண்டம்	,,	...	4	0	0
கிட்கிந்தாகாண்டம்	,,	...	4	8	0
சுந்தரகாண்டம்	,,	...	5	0	0
யுத்தகாண்டம், 2-வால்யும்	,,	...	10	0	0
பத்துப்பாட்டு:—					
திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி யுரையுடன்		...	0	4	0
பொருநராற்றுப்படை	ஷை	...	0	4	0
பெரும்பாணற்றுப்படை	ஷை	...	0	8	0
முல்லைப்பாட்டு	ஷை	...	0	3	0
நெடுநல்வாடை	ஷை	...	0	6	0
பட்டினப்பாலை	ஷை	...	0	6	0
நாலடியார் உரையுடன்		...	2	0	0
சிலப்பதிகாரம்:—					
அடைக்கலக்காதை உரையுடன்		...	0	2	0
கடலாடுகாதை	ஷை	...	0	4	0
நான்னூற்காண்டிகையுரை		...	1	8	0
திருக்குறள் அறத்துப்பால் பரிமேலழகருரையுடனும் அதற்குக் குறிப்புரையுடனும்		...	1	8	0
ஷை பொருட்பாலும் காமத்துப்பாலும்	ஷை ஷை	...	3	8	0
திருக்குறள் மூன்றுபால்களும் உயர்ந்த கட்டணத்துடன்	ஷை. ஷை	...	5	0	0
விலிபாரதம்:—					
ஆதிபருவம்உரையுடன்		...	2	0	0
சபாபருவம் உரையுடன்		...	3	0	0
ஆரணியபருவம் உரையுடன்		...	2	0	0
விராடபருவம் உரையுடன்		...	1	8	0
உத்தியோகபருவம் உரையுடன்		...	2	8	0
வீட்டும துரோண கர்ண பருவங்கள் உரையுடன்		...	3	8	0
சல்லியசௌப்திக பருவங்கள் உரையுடன்		...	1	8	0
சடகோபரந்தாதி உரையுடன்		...	0	12	0
திருப்பாவை உரையுடன்		...	0	6	0
சரசுவதியந்தாதி உரையுடன்		...	0	4	0
திருவேங்கடக்கலம்பகம் உரையுடன்		...	0	10	0
அழகர்கலம்பகம் உரையுடன்		...	0	10	0
அஷ்டப்ரபந்தம் விரிவுரையுடன்		...	4	0	0
மதுரைக்கலம்பகம் உரையுடன்		...	0	10	0
முதுமொழிக்காஞ்சி உரையுடன்		...	0	4	0
நாலாயிரதிவ்யப்ரபந்தம்		...	3	8	0
	வசனம்.				
இந்தியபுராதனகதை		...	0	6	0
உதயணன் சரிதை		...	0	12	0
சந்திராபீட சரிதம்		...	0	5	0